# ஸ்ரீகலா SRIKALA




ஸ்ரீகலா SRIKALA
நி(ழல்)ஜம்
உயிர் கொ(ல்)ள்
பாகம் 1
SK 9
NI(zhal)JAM UYIR KO(l)L
ஸ்ரீகலா



தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER



தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS



Download

## Contents


நிழல் : 1

நிழல் : 2

நிழல் : 3

நிழல் : 4

நிழல் : 5

நிழல் : 6

நிழல் : 7

நிழல் : 8

நிழல் : 9

நிழல் : 10

நிழல் : 11

நிழல் : 12

நிழல் : 13

நிழல் : 14

நிழல் : 15

நிழல் : 16

நிழல் : 17

நிழல் : 18

நிழல் : 19

நிழல் : 20

நிழல் : 21

நிழல் : 22

நிழல் : 23


# நிழல் : 1

PDF தமிழ் .com
WWW.PDFTAMIL.COM

'தூங்கா நகரம்' என்றழைக்கப்படும் மதுரை மாநகரம் அந்த நள்ளிரவு நேரத்திலும் தூங்காது பரபரப்பாகக் காட்சியளித்தது... சாலையோர சிற்றுண்டி கடைகளில் அந்த நேரத்தில் கூடச் சுட சுட குஷ்பூ இட்லி சுட்டு கொடுத்து கொண்டிருந்தனர்... மற்றொரு புறம் புரோட்டா, சால்னா படு அமர்க்களமாக வியாபாரம் ஆகி கொண்டிருந்தது... புறவழிச்சாலையில் இருந்த ஒரு சிற்றுண்டி கடையில் நின்று கொண்டு தேநீர் அருந்தி கொண்டிருந்த சிம்மவிஷ்ணுவின் விழிகள் நாலாப்புறமும் சுற்றி கழுகு பார்வை பார்த்துக் கொண்டிருந்தது...
அந்நேரம் அவனது அலைப்பேசி அலறியது... எடுத்து பேசியவனின் விழிகள் கோபத்தில் சிவந்து போயிற்று... அதை அணைத்துச் சட்டைப்பையில் போட்டவன் தனது அடியாட்களிடம்,

"தேனி போற ரோட்டில் போயிக்கிட்டு இருக்காங்களாம்... இன்னைக்கு அவங்களை விடக் கூடாது..." என்று கர்ஜித்துக் கொண்டே தனது காரிலேறினான்...

அவனது அடியாட்கள் பின்னால் இருந்த வேறு வண்டியில் ஏறி அவனது காரை பின்தொடர்ந்தனர்... அடுத்த அரைமணி நேரத்தில் அவன் சொன்ன ஆட்களைக் கண்டுபிடித்து அவர்களது ஜீப்பின் முன் தனது காரை கொண்டு போய் நிறுத்தினான் சிம்மவிஷ்ணு... அந்த ஜீப்பின் பின்னால் அவனது அடியாட்களின் வண்டி அணை போட்டார் போன்று தடுத்து நின்றது...

ஆறடி உயரத்தில் மாநிறமாய், மதுரை மண்ணுக்கே உரிய முறுக்கு மீசையுமாகக் கருப்புப் பேண்ட், முழங்கை வரை மடக்கி விடப்பட்ட வெள்ளை முழுக்கை சட்டை, வலதுகையில் தங்கத்தினாலான அகலமான பிரேஸ்லெட், இடது கையில் தங்க நிறத்தில் வைரங்கள் பதித்த விலையுயர்ந்த கைக்கடிகாரம், கைக்கு இரண்டாக நான்கு மோதிரங்கள் அணிந்து ஆணழகனாய், கம்பீரமாக அவன் இருந்தான்...

PDF தமிழ் .com

அவனது தோற்றத்தை கண்டதும் அந்த ஜீப்பிற்குள் இருந்தவர்களுக்குக் குளிரெடுத்தது... இருந்தாலும் அசட்டுத் தைரியம் கொடுத்த துணிச்சலில் ஜீப்பில் இருந்து கீழிறங்கினர்...

"ஒழுங்கு மரியாதையா அந்தப் பொண்ணை விடுங்கடா..." என்று சிம்மவிஷ்ணு அவர்களைக் கண்டு கர்ஜித்தான்...

"விட முடியாதுன்னா என்ன பண்ணுவ...?" எதிரில் இருந்தவன் எகிறினான்...

"டேய், சின்னய்யாவை எதிர்த்து பேசுவியா..." அவனது அடியாட்கள் அவர்களுக்குப் பின்னால் நின்று கொண்டு கோபத்தில் கொதித்தார்கள்...

"அவ அப்பன் வாங்கிய கடனை கொடுக்கலை... அதான் பொண்ணைத் தூக்கிட்டோம்... கடனை கொடுத்துட்டுப் பொண்ணை வந்து கூட்டிட்டுப் போகச் சொல்லு..." என்று எதிரில் இருந்தவன் கூற...

"கந்துவட்டி வாங்கிறதே தப்பு... இதில் ராங்கா வேற பேசுவியா நாயே...?" என்று சிம்மவிஷ்ணு கர்ஜித்தபடி யாரும் எதிர்பார்க்காத நேரத்தில் எதிரில் இருந்தவனைக் காலால் எட்டி உதைத்தான்...

சிம்மவிஷ்ணு உதைத்ததில் அவன் தள்ளி போய் விழுந்தான்... அடுத்தப் பத்து நிமிடங்களில் அவன் அனைவரையும் பந்தாடிவிட்டு அந்தப் பெண்ணை மீட்டு விட்டான்... பதினாறு வயது அந்தச் சின்னப் பெண் பயத்துடன் ஜீப்பில் இருந்து இறங்கினாள்...

"சின்னய்யா ரொம்ப நன்றி..." என்று இரு கைகளையும் கூப்பி அவள் நன்றி தெரிவிக்க...

"நன்றி எல்லாம் வேணாம்... இனியாவது வெளியில் போகும் போது பார்த்து போ..." என்றவன் தனது காரில் அவளை ஏற்றி அனுப்பி விட்டு அவன் தனது சகாக்களின் வண்டியில் ஏறியமர்ந்தான்... நேரே அவனது வீடு நோக்கி வண்டி சென்றது...

மதுரை நகரை விட்டு தள்ளி புறநகர் பகுதியில் ஏக்கர் கணக்கில் நிலத்தை வளைத்து போட்டு அதில் அந்தச் சொகுசு மாளிகை கட்டப்பட்டு இருந்தது... ஒரு காலத்தில் மதுரையை ஆண்ட ராஜ பரம்பரையைச் சேர்ந்தவர்கள் அவர்கள்... இப்போது ராஜ தர்பார் வழக்கத்தில் இல்லை என்றாலும் அந்த வம்சத்திற்குரிய பெருமை, மரியாதை இன்னமும் அப்படியே இருந்தது... சுந்தரபாண்டியன், மீனாட்சி தம்பதியினரின் ஒரே புதல்வன் தான் இந்தச் சிம்மவிஷ்ணு...

ஒற்றைப் பையன் என்பதால் அவனுக்குச் செல்லம் அதிகம்... எந்தக் கெட்ட பழக்கமும் இல்லாத நல்லவன்... ஆனால் எதையும் சாதிக்கும் பிடிவாத குணம் அவனிடம் பிறப்பில் இருந்து உண்டு... அவன் மனதில் ஒன்றை நினைத்து விட்டால் அவனே நினைத்தால் கூட அதை மாற்றிக் கொள்ள மாட்டான்... அந்தளவிற்குப் பிடிவாதம் உண்டு...

வயது முப்பதாகிறது... இதுவரை எந்தவொரு பெண்ணின் கடைக்கண் பார்வைக்கும் மயங்கியது இல்லை... கல்லூரியிலும் சரி, இப்போது வியாபார விசயமாக நாடு நாடாகச் சுற்றும் போதும் சரி ஏனோ எந்தப் பெண்ணிடமும் அவனது மனம் மயங்கவில்லை... கல்லையும், மண்ணையும் பார்ப்பது போல் அவன் பெண்களைக் கடந்து சென்றுவிடுவான்... அவனது அன்னை அவனுக்காகப் பெண் பார்த்துச் சலித்துப் போனார்...

"இனி நீயாக இவள் தான் என் மனைவின்னு ஒரு பெண்ணைக் காட்டும் போது தான் உனக்குக் கல்யாணம்..." என்று அவர் முடிவாகக் கூறிவிட்டார்...

"ஹா, ஹா... இந்த ஜென்மத்தில் அப்படியொரு வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கப் போவதே இல்லைம்மா... ஏன்னா எனக்கு எந்தப் பெண்ணின் மீதும் நம்பிக்கை கிடையாது..." என்று சிரித்தபடி கூறிவிட்டு அவன் நகர்ந்து விடுவான்...

“அப்படின்னா நான் பெண் இல்லையாங்க...” என்று மீனாட்சி கணவரை வருத்தத்துடன் பார்ப்பார்...

PDF தமிழ் .com

"விடு மீனா... அவனுக்குன்னு பிறந்தவள் அவன் கண்ணில் படும் போது அவனது மனம் மாறும்..." என்று சுந்தரபாண்டியன் மனைவியைத் தேற்றுவார்...

சிம்மவிஷ்ணுவின் வீட்டின் வாயிலில் கார் சர்ரென்று வந்து நின்றது... அந்தப் பெண்ணின் பெற்றோர் பரிதவிப்புடன் நின்றிருந்தனர்... அவர்களது பெண்ணைக் கண்ணில் கண்டதும் தான் அவர்களுக்கு அத்தனை நிம்மதியாக இருந்தது...

"நீங்க நல்லாயிருக்கணும் சின்னய்யா..." என்று அவனுக்கு நன்றி கூறி விட்டு அவர்கள் மூவரும் கிளம்பி சென்றனர்...

எல்லோரும் சென்றதும் சிம்மவிஷ்ணு வீட்டினுள் நுழைந்தான்... பின்னாடியே அவனது பெற்றோர் வந்தனர்...

"சாப்பிட்டியா விஷ்ணு...?"

"ம், ஆச்சும்மா..." என்றவன் சோபாவில் அமர்ந்த அன்னையின் மடியில் தலை வைத்து கண்மூடி படுத்துக் கொண்டான்...

மீனாட்சி இதமாக அவனது நெற்றியை பிடித்து விட்டார்... அவனது மனவுளைச்சலுக்கு அவர் பிடித்து விட்டது அத்தனை இதமாக இருந்தது... எதையோ நினைத்தவனின் கண்களில் கண்ணீர் எட்டிப்பார்த்தது... அடுத்தக் கணம் அவன் அன்னையின் கையினை அழுந்த பற்றிக் கொண்டான்...

"ம்மா..." அவனது குரலில் இருந்த பரிதவிப்பை அந்த அன்னை உணர்ந்து கொண்டார்...

"என்ன விஷ்ணு...?" என்று இதமாகக் கேட்டவரை கண் திறந்து பார்த்தவன்,

"ஐ லவ் யூ ம்மா..." என்று கூறி அவரது கையில் முத்தமிட....

"போடா போக்கிரி... ஒரு இளம்பெண்ணிடம் சொல்ல வேண்டிய வார்த்தையை இந்தக் கிழவி கிட்ட

சொல்லிக்கிட்டு இருக்க..." மீனாட்சி மகனை பார்த்து சிரித்தார்...

"நான் என்னோட இந்த அம்மாவை மட்டும் தான் நேசிப்பேன்... வேறு யாரையும் இல்லை..." என்று அழுத்தமாய்க் கூறியவன் அவரது கன்னத்தைப் பிடித்துக் கொஞ்சினான்... பின் எழுந்தமர்ந்து கொண்டு,

"ம்மா, வெளியில் போயிட்டு வந்திர்றேன்..." என்க...

"இந்த நேரத்திலா...? காலையில் போப்பா..." என்று சுந்தரபாண்டியன் கூற... மீனாட்சியும் அதையே ஆமோதித்தார்...

"இல்லை... இப்போ நான் கண்டிப்பா போய்த் தான் ஆகணும்..." என்று கூறியவன் அந்தக் கணமே தனது காரை எடுத்துக் கொண்டு கிளம்பிவிட்டான்...

அவன் ஓட்டுநரை தவிர்த்து விட்டு தானே காரை ஓட்டி கொண்டு சென்றான்... மதுரையில் இருந்து திண்டுக்கல் செல்லும் சாலையில் அவனது கார் சீறிப் பாய்ந்தது... இன்னும் சில நிமிடங்களில் அவன் தனது சொர்க்கபுரியை அடைந்து விடுவான்... அது சொர்க்கமா? என்று அவனுக்குத் தெரியவில்லை... ஆனால் அந்த இடம் அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது... சொர்க்கத்தில் கூடக் கிடைக்காத மகிழ்ச்சியை... அப்போது அது சொர்க்கபுரி தானே...!!!

*******************

"இங்கே பாரு பாப்பா... சின்னய்யா உன்னைப் பார்க்க வந்துக்கிட்டு இருக்காரு... ஒழுங்கு மரியாதையா சீவி சிங்காரிச்சிக்கிட்டு அவர் சொல்றதை கேளு... இல்லைன்னா சேதாரம் உனக்குத் தான்..."

மருதாணி அந்தச் சின்னப் பெண்ணிடம் முதலில் கெஞ்சி கூறியவள் அவள் சொல்பேச்சு கேட்காததால் இப்போது மிரட்டி கொண்டிருந்தாள்...

PDF தமிழ் .com

"எனக்கு எதுவும் வேண்டாம்... என்னை இங்கிருந்து போக விடு... அது போதும்..." அழுதழுது இமைகளும், கண்களும் வீங்கி போய் அவள் பார்ப்பதற்கே பரிதாபமாக இருந்தாள்...

அவளது பெயர் நிஷிலா... பதினெட்டு வயதாகிறது... அதுவும் போன மாதம் தான் பதினெட்டு வயது பிறந்திருக்கிறது... அன்றிலிருந்து இந்த ஒரு மாத காலமாக இந்த ராட்சனிடம் சிறைப்பட்டு அவள் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறாள்... ஏன், எதற்கு என்று தெரியாத தண்டனை மிகப் பெரிய கொடுமை அல்லவா... அதுவும் சிறு பெண்ணான அவள் அவனுக்குச் செய்த கொடுமை தான் என்ன...? அவளுக்கே அது தெரியவில்லை...

அவனுக்கும் அவளுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை... அவனை முன்னே பின்னே பார்த்ததாய் அவளுக்கு நினைவு இல்லை... அப்படி இடையில் அவனைச் சந்தித்ததாய் அவளுக்கு ஞாபகமும் இல்லை... பின்னே ஏன் அவன் இப்படித் தன்னை அடைத்து வைத்து துன்புறுத்துகிறான்...? விடை தான் அவளுக்குக் கிட்டவில்லை... சும்மாவே அவள் பயந்த சுபாவம் கொண்ட பெண்... இப்போது அவன் அவளது சிறகுகளைத் துடிக்கத் துடிக்க வெட்டி இன்னமும் பயந்த சுபாவமுடைய பெண்ணாக மாற்றியிருந்தான்...

அவனது காலடி ஓசை, அவன் சிகரெட் லைட்டர் ஏற்றும் ஒலி, அவன் அருந்தும் மது கிண்ணத்தின் ஓசை, அந்த இரண்டு மணமும் கலந்த அவனது வாசம், அவனது அருகாமை, அவனது 'பேபி, தென்' என்றழைப்பு எல்லாம் அவளுக்கு அத்துப்படி... அதே போல் தான் அவனது அணைப்பு, இதழொற்றல்கள், கைகளின் தொடுகை, அத்துமீறல்கள் எல்லாமே... இப்போதும் அவனது அத்துமீறல்களை நினைத்து அவளது உடல் மழையில் நனைந்த புறாவாய் வெடவெடவென்று நடுங்கியது...

அந்நேரம் காரின் ஹார்ன் ஒலி கேட்கவும் மருதாணி அவளிடம், "தேவையில்லாம சின்னய்யாவை எதிர்த்து பேசி உடம்பை புண்ணாக்கிக்காதே பாப்பா... சின்னய்யா

சொல்றபடி கேட்டு ஒழுங்கா நடந்துக்கோ..." என்று அவசரமாய்க் கூறியபடி வாயிலை நோக்கி ஓடினாள்...

நிஷிலா கட்டிலில் இருந்த புடவையையும், மல்லிகைப்பூவையும் வெறுப்புடன் பார்த்தாள்... மருதாணி சொல்வது போல் அவளுக்கு வேறுவழியும் இல்லை... அதனால் அமைதியாகப் புடவையை எடுத்து உடுத்தி கொண்டு, தலையில் பூவை வைத்து கொண்டாள்... எத்தனை அலங்காரம் செய்த போதும் முகத்தில் புன்னகை இல்லாததால் அவள் சோபையிழந்து காணப்பட்டாள்...

அப்போது அறை கதவு படாரென்று திறக்கப்பட்டது... அந்தச் சத்தத்தில் அவள் உடல் தூக்கிவாரி போட திரும்பி பார்த்தாள்... அங்கு ஆஜானுபாகுவாய் நின்று கொண்டிருந்த சிம்மவிஷ்ணுவை கண்டு அவளது உடல் பயத்தில் இன்னமும் வெடவெடத்தது...

கதவை தாழ் போட்டு விட்டு திரும்பிய சிம்மவிஷ்ணுவின் விழிகள் அவளது அலங்காரத்தைத் தலை முதல் கால் வரை ஒருவித வெறியுடன் பார்த்தது... அந்தப் பார்வையில் கிஞ்சித்தும் காதலில்லை, ரசனையில்லை... மாறாகக் காமம் மட்டுமே மிஞ்சியிருந்தது...

"பாம்பு கூட அழகு தான் இல்லையா...?" என்று கேட்டவனின் விழிகள் இரண்டும் அவளை வேட்டையாடும் வெறியுடன் மின்னியது...

அவனது வார்த்தையில் அவள் பயந்து போய்ச் சுவரோடு ஒட்டி கொண்டாள்... அவளது பயத்தை ரசித்தபடி அங்கிருந்த மேசை மீதிருந்த சிகரெட்டை எடுத்து பற்ற வைத்தவன்,

"தென்..." என்றபடி புருவத்தை உயர்த்த... அதில் அவள் இன்னமும் நடுநடுங்கி போனாள்...

அவன் அழுத்தமான காலடிகளுடன் அவளை நோக்கி நகர்ந்தான்... அவள் சுவற்றின் மீது கையை அழுந்த வைத்துக் கொண்டு அவனை விழி விரிய பயத்துடன்

PDF தமிழ் .com

பார்த்தாள்... அவளது உடலோடு உடல் உரச நின்றவன் அவளது முகத்தில் சிகரெட் புகையை ஊதினான்... அதில் அவள் விழிகளை மூடியபடி, முகத்தைச் சுருக்கி கொண்டு திரும்பி கொண்டாள்...

அவன் ஆராய்ச்சியாய் அவளைப் பார்த்தான்... எலுமிச்சை நிறத்தில், ஒடிசலான தேகத்துடன் பேரழகியாய் இருந்தவள் அவனுள் காதலை விதைக்கவில்லை... மாறாகக் காமத்தை விதைத்தது தான் அந்தோ பரிதாபம்...

"என் முகம் என்ன பார்க்க சகிக்க முடியாதபடி அவ்வளவு மோசமாவா இருக்கு...?" அவனது அழுத்தமான குரலில்,

'போச்சு, இன்னைக்கு முழுசும் அவனது முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் தண்டனையைக் கொடுக்கப் போகிறான்...' என்று எண்ணியவள் அச்சத்தில் தனது விழிகளைப் படக்கென்று திறந்து அவனைத் திரும்பி பார்த்தாள்...

"தட்ஸ்குட் பேபி..." என்று அவளது கன்னம் தட்டி சிரித்தான் அவன்...

"இப்போ தான் என்னோட பாசை உனக்குப் புரிய ஆரம்பிச்சிருக்கு..." என்றபடி அவளை விட்டு விலகியவன் கட்டிலில் சென்று அமர்ந்து கொண்டு அங்கிருந்த மது பானத்தை ஊற்றி அருந்த துவங்கினான்...

அவனுக்குச் சிகரெட், மது பானம், பெண் பழக்கம் இது எதுவுமே கிடையாது... ஆனால் இந்த ஒரு மாத காலமாக எல்லாம் பழகிவிட்டிருந்தது... அவன் குடிப்பதை அவள் விழிகளில் அச்சத்துடன் பார்த்து கொண்டிருந்தாள் அவள்...

"என்ன பார்வை எல்லாம் பலமாயிருக்கு...?"

"என்னை ஏன் இப்படி அடைச்சு வச்சு சித்ரவதை பண்றீங்க...?"

அதற்கு அவன் பதில் சொல்லவில்லை...

"எங்கப்பா, அம்மா என்னைத் தேடுவாங்க..." என்றாள் அழும் குரலில்...

"இந்நேரம் அவங்க உன்னைத் தலை முழுகியிருப்பாங்க..." என்றான் அவன் எகத்தாளமாய்...

"என் அத்தான் என்னைத் தேடுவார்..."

அதைக் கேட்டதும் அவனுக்கு ஆத்திரம் வந்தது... கையிலிருந்த மது கிண்ணத்தைத் தரையில் ஓங்கி அடித்தான்...

"தேடுவானா...? நல்லா தேடட்டும்... என்னோட ஆசை தீர்ந்த பிறகு உன்னை உன் அத்தானை வச்சுக்கச் சொல்லு..." என்று கூறியபடி அவன் கோணல் சிரிப்பு சிரிக்க...

"ச்சீ..." என்று அவள் அருவருப்பில் முகத்தைச் சுளித்தாள்...

அவள் அருகில் வந்தவன் அவளது முகத்தை அழுந்த பற்றியபடி, "என்னடி அவ்வளவு அருவருப்பு வேண்டி கிடக்கு...?"

"நீங்க இடையில் வரலைன்னா இந்நேரம் எங்க கல்யாணம் நடந்திருக்கும்... இப்போ நான் அவரோட மனைவியாகி இருந்திருப்பேன்..." ஒருவழியாகத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அவள் கூறிவிட்டாள்...

"ஹா ஹா... அதனால் தானே திட்டம் போட்டு உன்னைக் கடத்தினேன்..."

வில்லன் சிரிப்பு சிரித்தவனை அவள் புரியாது பார்த்தாள்...

"நீங்க என்னைக் காதலிக்கிறீங்களா...?" இத்தனை நாட்களாக அவனிடம் கேட்க நினைத்த கேள்வியை இன்று அவள் வாய்விட்டு கேட்டு விட்டாள்...

அவளது விழிகளைக் கூர்ந்து பார்த்தவன், "நான் காதலிக்கும் அளவுக்கு உன்னிடத்தில் அப்படி என்னடி இருக்கு...?" என்று அவன் திமிராய் கேட்டான்...

PDF தமிழ் .com

"அப்போ எதுக்கு என்னை அடைச்சு வச்சியிருக்கீங்க...?"

"எஸ், இப்போ சொன்ன பார்த்தியா... வச்சியிருக்கேன்னு... அதுக்குத் தான்... எனக்கு வேண்டியது உன் உடல் தான்... மனசு இல்லை..." என்றவனது பார்வை விரசமாய் அவளது மேனியில் மொய்த்தது...

"பெண் பாவம் பொல்லாதது... நீங்க ரொம்பப் பெரிய பாவம் பண்றீங்க..." என்றவளுக்குக் கண்ணீர் முட்டி கொண்டு வந்தது...

"நான் பாவம், புண்ணியம் பார்க்கிறவன் தான்... ஆனா உன் விசயத்தில் அதை நான் பார்ப்பது இல்லை... உன் விசயத்தில் எனக்கு வேண்டியது எல்லாம் ஒண்ணே ஒண்ணு தான்... கணக்கை நேர் பண்ண வேண்டியது மட்டுமே..." என்றவன் அவளைத் தனது கைகளில் தூக்கி கொண்டு வந்து கட்டிலில் கிடத்தினான்...

"நிஷிலான்னா என்ன அர்த்தம் தெரியுமா...? இரவுகளின் ராணின்னு அர்த்தம்... உன் அப்பன் உனக்குப் பொருத்தமா தான் பெயர் வச்சியிருக்கான்... ஆனா ஒண்ணு..." என்றவனைப் பயத்தில் விழி விரிய அவள் பார்க்க...

"என் இரவுகளின் அடிமை நீ..." என்று அவன் பயங்கரமாய் வில்லன் சிரிப்பு சிரித்தபடி அவளது முகம் நோக்கி குனிந்தான்...

அதன் பிறகு அவளது எதிர்ப்பை எல்லாம் தனது கைகளால் அடக்கியபடி அவளைத் தனது ஆளுகையின் கீழ் கொண்டு வந்தவன் அவளை அனுபவித்து விட்டே அவளை விட்டு விலகினான்...

"இப்போ புரிஞ்சியிருக்குமே என்னிடத்தில் உன்னோட நிலை என்னன்னு...?" என்றபடி அவன் அவள் மீது புடவையைத் தூக்கி போட்டான்...

அவள் விழிகளில் விழிநீர் பெருக புடவையை அணைத்துக் கொண்டு எழுந்தமர்ந்தாள்... அவளது முகத்துக்கு அருகே குனிந்தவன்,

"..........." என்றான் கிண்டலாய்...

வார்த்தை கிண்டலாய் வந்த போதும் அவனது முகம் அதிபயங்கரமாய் மாறிப் போனது... அந்தக் கணம் அவனது மனதிலிருந்த வன்மத்தை யாராலும் அறிந்து கொள்ள முடியாது...

அவனது அந்த வார்த்தையில் அவள் உடல் எல்லாம் கூசி போனாள்...

"இப்படித் தினமும் என்னைச் சித்திரவதை செஞ்சு கொல்றதுக்கு ஒரேடியா கொன்னுருங்க..." என்று அவள் தேம்ப...

"ஹ, அது எப்படி...? உன் உயிர் எனக்குத் தேவையாயிருந்தா அன்னைக்கே எடுத்திருக்க மாட்டேன்... எனக்குத் தேவை வேறு ஒன்று... அதனால் நானும் உன் உயிரை எடுக்க மாட்டேன்... நீயும் உன் உயிரை விட அனுமதிக்க மாட்டேன்... ஏற்கெனவே நீ போட்ட திட்டமெல்லாம் நமத்துப் போனது உனக்கே தெரியும்..." என்று அவன் அலட்சியமாகக் கூறினான்...

அவள் அவனிடம் பேச இயலாதவளாய் அழுதபடி கட்டிலில் இருந்து எழ போனாள்...

"எங்கேடி போகிற...?" என்று கூறியபடி அவளை இழுத்து தன் மீது போட்டு கொண்டவன் தனது அடுத்த வேட்டையைத் தொடங்கினான்...

அவனது மனம் வலிக்கும் போது எல்லாம் அவன் அந்தச் சின்னப் பெண்ணை வலிக்கச் செய்தான்... அது தெரியாது அந்தச் சின்னஞ்சிறு புறா தனக்குள் மறுகி கரைந்தது...

ஒரு சின்னப் பெண்ணைக் காப்பாற்றிய அதே சிம்மவிஷ்ணு தான் இப்போது மற்றொரு சின்னப் பெண்ணின் வாழ்க்கையை அழித்துக் கொண்டிருக்கிறான்...

முரண்பாட்டிற்கு மறுபெயர் தான் சிம்மவிஷ்ணுவோ...!!!

PDF தமிழ் .com

அதிகாலையில் எழுந்து தனது வீட்டிற்குக் கிளம்பி கொண்டிருந்தான் சிம்மவிஷ்ணு... அவனை வெறித்துப் பார்த்தபடி நிஷிலா அமர்ந்திருந்தாள்... அவன் அவளைச் சிறிதும் கண்டு கொள்ளவில்லை... அவனது தேவை முடிந்தும் அவன் கிளம்பிவிட்டான்... அந்தக் கணம் அவன் கூறிய வார்த்தைகள் தான் அவளது ஞாபகத்தில் வந்தது... வறண்டிருந்த அவளது கண்கள் மீண்டும் கண்ணீரால் குளமாய் நிரம்பத் துவங்கியது...

எவ்வளவு நேரம் கண்ணீர் அவளது கண்களில் தேங்கி நிற்கும்... அணையிலிருந்து பெருகும் வெள்ளம் போல் விழிநீர் அவளது கன்னங்களில் நிற்காது வழிந்தோடியது...

"எனக்கு அழுதா பிடிக்காது..." என்று அவன் சிறுகுழந்தையை அதட்டுவது போல் அவளைக் கோபமாய் அதட்டினான்...

அவளுக்கு முதுகு காட்டி கொண்டு சட்டையைப் போட்டு கொண்டிருந்தவன் அவள் அழுவதை எப்படிக் கண்டுபிடித்தான்...? அவள் திகைப்புடன் விழி விரித்து அவனைப் பார்த்தாள்...

'முட்டாள், அழுகை சத்தம் அவனுக்குக் கேட்காதா...?' என்று அவள் தன்னைத் தானே திட்டி கொண்டாள்...

அவள் முட்டாள் தான்... இல்லையென்றால் இந்த ராட்சசனிடம் இருந்து தப்பிக்கும் வழி தெரியாது இப்படித் தவித்து விழிப்பாளா...?

அவனோ அவளைத் திரும்பியும் பாராது அறையை விட்டு வெளியேறிவிட்டான்... அவள் கதவையே வெறித்துப் பார்த்து கொண்டிருந்தாள்... அடுத்த நொடி மருதாணி அறையினுள் நுழைந்தாள்...

"பாப்பா, இன்னைக்குச் சின்னய்யாவுக்குப் பிறந்தநாள்... அவருக்கு ஒரு வாழ்த்து சொல்லியிருக்கலாம்ல..." என்று மனத்தாங்கலுடன் அவள் கேட்க...

"இவனுக்கு எல்லாம் பிறந்தநாள் ஒரு கேடா...? பொறுக்கி பிறந்ததே தண்டம்... இதில் பிறந்தநாள் வாழ்த்து வேறு நான் அவனுக்குச் சொல்லணுமா...? எனக்கு மட்டும் ஒரு சான்ஸ் கிடைச்சா இன்னைக்கு அவனோட பிறந்தநாளை இறந்தநாளா மாத்தியிருப்பேன்..." என்றவள் கோபத்துடன் அங்கிருந்த பூச்சாடியை எடுத்து தூக்கி எறிந்தாள்...

மருதாணி சுதாரித்துக் கொண்டு விலகிவிட, அப்போது மீண்டும் அறையினுள் நுழைந்த சிம்மவிஷ்ணுவின் நெற்றியை அது சரியாகப் பதம் பார்த்தது... பூச்சாடியின் கண்ணாடி துண்டு அவனது நெற்றியை கீறியதில் இரத்தம் சொட்டியது...

"சின்னய்யா..." என்றபடி மருதாணி பதறியபடி அவனை நோக்கி வந்தாள்...

'நீ போ...' என்று அவன் அவளைச் சைகையில் வெளியில் அனுப்பினான்...

அதற்கு மேல் அங்கிருக்க முடியாதவளாய் மருதாணி நிஷிலாவை பரிதாபமாய்ப் பார்த்துக் கொண்டு சென்றாள்... நிஷிலாவோ அவனது வருகையைக் கண்டு மனம் அதிர்ந்தாலும் வெளியில் அழுத்தமாய் அவனை நிமிர்ந்து பார்க்காது அமர்ந்திருந்தாள்... அவள் பயந்த சுபாவம் கொண்ட பெண் தான் என்றாலும் அதே சமயம் அவள் கோபமும், பிடிவாதமும் கொண்ட பெண்ணும் கூட...

"என்னோட பிறந்தநாளுக்கு நீங்க கொடுத்த பரிசுக்கு ரொம்ப நன்றிங்க மேடம்..." என்று கிண்டலாய் கூறியவனைக் கண்டு அவள் திடுக்கிடலோடு ஏறிட்டு பார்த்தாள்...

அவன் சிரித்தபடி அவளருகே அமர்ந்தவன் அவளது புடவை முந்தானையை எடுத்து தனது இரத்தத்தினைத் துடைத்துக் கொண்டான்...

"இந்த நாளை, இந்த இரத்தத்தை நான் மறக்க மாட்டேன்... இந்தக் காயம் தான் நான் செய்யப் போகிற வேலைக்கு

தமிழ் நாவல்

உத்வேகமா இருக்கப் போகுது... இந்த வலி தான் என்னை மேலும் மேலும் வெறியேத்த போகுது..." என்றவனைப் பயத்துடன் பார்த்தபடி அவள் பின்னால் நகர்ந்தாள்...

"உன்னோட இந்த அன்பு பரிசுக்கு நான் பதிலுக்கு ஏதாவதுப் பரிசு தர வேண்டாமா...?" என்று சற்று யோசித்தவன் சிறிதும் தாமதிக்காது தனது கழுத்தில் இருந்த அவனது பெயர் பொறித்த தங்க சங்கிலியை கழட்டி அவளது கழுத்தில் அணிவித்தான்...

"இதை நீ எப்போதும் போட்டிருக்கணும்... இதை நீ போட்டிருப்பதைப் பார்க்கும் போது எல்லாம் எனக்கு என்னோட வலி ஞாபகத்துக்கு வரணும்... அது நினைவுக்கு வரும் போது எல்லாம்..." என்று கூறியவனின் விழிகள் சொல்லொண்ணா வலியை பிரதிபலித்தது... தனது மனவேதனையில் உழன்று கொண்டிருந்தவள் அவனது வலியை கவனிக்க மறந்தாள்...

அவளது புடவை முந்தானையை அவளது முகத்தில் வீசியெறிந்து விட்டு தான் மறந்து வைத்துவிட்டு போன அலைப்பேசியை எடுத்துக் கொண்டு அவன் சென்றுவிட்டான்... அவனது இரத்தம் தோய்ந்த தனது புடவை முந்தானையைப் பார்க்க பார்க்க அவளுக்கு அழுகை அழுகையாய் வந்தது... அவள் தனது உதடுகளைக் கடித்து அழுகையை அடக்கி கொண்டாள்... வாழ்நாள் முழுவதும் அழுவது தான் அவள் பிறவி எடுத்ததன் நோக்கமோ என்னவோ...?

அந்தக் கணம் அவளது மனம் பெற்றோரின் அன்பான அரவணைப்பிற்காக ஏங்கியது... அவளது பெற்றோருக்கு அவள் வெகுவருடங்கள் கழித்துப் பிறந்த ஒரே ஒரு செல்ல மகள்... அதனால் செல்லமும் அதிகம்... திகட்ட திகட்ட அன்பை அனுபவித்தவள் இந்த ஒரு மாத காலமாக இந்த முரடனிடம் வந்து மாட்டி கொண்டு கெட்டு சீரழிகிறாள்...

"அம்மா, அப்பா..." என்று வாய்விட்டு அரற்றியவள் முழங்காலில் முகம் புதைத்துக் கொண்டு அடக்கமாட்டாது கதறியழுதாள்...

சிம்மவிஷ்ணு அன்று தனது பிறந்தநாள் கொண்டாட்டங்களை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு சென்னையை நோக்கி பயணம் செய்து கொண்டிருந்தான்... அவனது மனம் சிம்மம் போல் ஆத்திரத்தில் உறுமி கொண்டிருந்தது...

தனது எதிரிகளுக்கு எதிராக அவன் எடுத்து வைக்கப் போகும் முதல் வெற்றி இது... ஆனால் அதற்குரிய மகிழ்ச்சி சிறிதும் அவனிடத்தில் இல்லை... மாறாக அவனது முகம் வேதனையில் ஆழ்ந்திருந்தது... இமை மூடி இருக்கையில் சாய்ந்தவன் விழிகளுக்குள் அந்தக் காட்சி படம் போல் ஓடியது... அதன் தாக்கத்தினைத் தாங்க முடியாது அவனது விழியோரம் இருதுளி நீர் கசிந்தது...!!!

"உந்தன் கண்ணீர் எந்தன் வெம்மை தீர்க்குமோ?
உந்தன் உயிர் எந்தன் வேதனை நீக்குமோ?
இல்லையடி பெண்ணே! உன்னுயிரில்
என்னுயிர் ஜனித்திடும் வேளை,
என் வெம்மை, வேதனை தீரும்..."

கொல்லும்...!!!

தமிழ் நாவல்

## நிழல் : 2

சென்னை மாநகரத்தை விட்டு தள்ளி நகரத்தின் இரைச்சல் இல்லாது கடற்கரையோரமாய் அலைகளின் ஓசை மட்டுமே தாலாட்டு பாடுவது போலிருந்த அந்த அமைதியான இடத்தில் அந்தப் பங்களா இருந்தது.... அதன் தோற்றமே அவ்வீட்டாரின் செழுமையைச் சொல்லாமல் சொல்லியது... ஜமீன் குடும்பமான அவர்களது வீடு அவர்களது ஊரில் அரண்மனை போலிருக்கிறது... இப்போது தொழில் சென்னையில் என்பதால் இங்குத் தங்கிவிட்டார்கள்...

அந்த வீட்டின் முதல் மாடியிலிருந்த ஒரு அறையினுள் பவித்ரன் அலுவலகத்திற்குக் கிளம்பி கொண்டிருந்தான்... கருப்பு நிற சட்டை, சாம்பல் வண்ணத்தில் பேண்ட், டை அணிந்தவன் அங்கிருந்த வாசனை திரவியத்தை எடுத்து அலட்சியமாகத் தன் மீது தெளித்துக் கொண்டு குனிந்து அதை மேசை மீது வைக்கும் போது அலைபாய்ந்த அவனது அடர் சிகை சிலும்பி கொண்டு நின்றது...

பின்பு சோபாவில் இருந்த தனது சாம்பல் வண்ண கோட்டை கையில் எடுத்துக் கொண்டு விறுவிறுவென வேகமாய் நடந்து அறையை விட்டு வெளியில் வந்தான்... நல்ல சிவந்த நிறத்துடன், உடற்பயிற்சி செய்து முறுக்கேறிய உடலமைப்பை கொண்டு, கூர்மையான விழிகளுடன் இருந்தவனின் முக இறுக்கம் அவனைக் கடினமானவன் என்று எல்லோருக்கும் பறைச்சாற்றியது...

மாடிப்படியில் இருந்து வேகமாய் இறங்கியவன் நேரே உணவு மேசையை நோக்கி நடந்தான்... அங்குச் சமைக்கப்பட்ட உணவுகள் அப்படியே இருப்பதைக் கண்டவன் மனதில் வருத்தம் எழுந்தது... கீழேயிருந்த தனது பெரிய மாமா அறைக்குள் நுழைந்தான்... அங்கு அவனது மாமா செல்வரத்தினம் மற்றும் அவரது மனைவி அருந்ததி இருவரும் கவலையுடன் அமர்ந்திருப்பதைக் கண்டு அவனுக்கும் வருத்தமாக இருந்தது...

"மாமா..." மருமகனது குரலில் செல்வரத்தினம் அவனைத் திரும்பி பார்த்தார்...

சிங்கம் போலிருந்த மாமா இந்த ஒரு மாத காலத்தில் இப்படியாகி விட்டாரே? என்று அவனுக்கு வருத்தமாக இருந்தது... அத்தையும் அப்படித் தான் இருந்தார்...

"மாமா, அத்தை சாப்பிட வாங்க..."

"நிஷா சாப்பிட்டாளோ என்னவோ...?" என்று இருவரும் ஒருமித்த குரலில் கேட்டனர்...

அதைக் கேட்டு அவன் வேதனையுடன் விழிகளை மூடி திறந்தான்... 'நிஷிலா' அவனது மாமன் மகள்... அவனது அழகு தேவதை... சிறுவயதில் இருந்து அவள் அவனுக்குத் தான் என்று சொல்லி சொல்லி வளர்த்ததாலோ என்னமோ, அவனுக்கு அவள் மீது உரிமை கலந்த பாசம் எப்போதும் உண்டு... இந்த ஒரு மாத காலமாக அவளை இழந்து வாடும் இவர்களை விட அவன் தான் அதிகம் தவிக்கின்றான்... வெளியில் யாரிடமும் இதைப் பற்றிச் சொல்ல முடியாது தனக்குள் அவன் தவிப்பது அவனுக்கு மட்டும் தான் தெரியும்...

இவர்களைப் போல் அவனும் தனக்குள் தவித்துக் கொண்டு அமர்ந்திருந்தால் தொழிலை யார் கட்டி காப்பது...? அதனால் தான் அவன் சற்று நிமிர்ந்து நிற்கிறான்... அவனும் அவளை எல்லா இடங்களிலும் தேடி கொண்டிருக்கிறான்... ஆனால் அவனால் அவளைக் கண்டுபிடிக்க முடியவில்லை...

'நிஷிம்மா, நீ எங்கேடா இருக்க...?' என்று அவன் வேதனையுடன் மனதிற்குள் கேட்டுக் கொண்டான்...

"நிஷி வீட்டுக்கு வரும் போது நீங்க உயிருடன் இருக்க வேண்டுமா...? வேண்டாமா...?" அவனது அதட்டலில் அவர்கள் இருவரும் திடுக்கிடலோடு அவனை ஏறிட்டனர்...

"இப்படி நீங்க சாப்பிடாம இருந்தால் எல்லாம் சரியாகிருமா...? நிச்சயம் நம்ம நிஷி ஒரு நாள்

கிடைப்பாள்... கவலைப்படாதீங்க..." என்று அவன் அவர்களைச் சமாதானப்படுத்தினான்...

"கிடைச்சிருவாளா தீரா..." இருவரும் நம்பிக்கை ஒளி விழிகளில் வீச அவனை ஏக்கத்துடன் பார்த்தனர்...

"நிச்சயம்..." என்று கண்மூடி திறந்து ஆமோதித்தவன் அவர்களை உணவு உண்ண அழைத்துச் சென்றான்...

அவர்களை அழைத்து வந்து உணவு மேசையில் அமர வைத்தவன் தனது சின்ன மாமா மற்றும் தனது பெற்றோரை நாடி சென்றான்... அப்போது அவனது பெற்றோர் இருவரும் கம்பீரம் குறையாது அங்கு வந்தனர்... இந்த வயதிலும் காதல் ஜோடிகள் போல் ஒற்றுமையாய், மகிழ்வாய் இருக்கும் பெற்றோரை பார்க்கும் போது அவனுக்குமே அத்தனை சந்தோசமாக இருக்கும்...

"தீரா, என்ன உன் சின்ன மாமனை தேடி போறியா...?" என்று அவனது தந்தை பத்ரிநாத் கேட்டார்...

"எஸ் டாட்..." என்று சின்னப் புன்னகையை உதிர்த்தவன்,

"மாம், இன்னைக்கு மினிஸ்டரை பார்க்க போகணும்... ஞாபகமிருக்கா...?"

"எஸ் மை சன்..." என்று புன்னகைத்த இளவரசி,

"சீக்கிரம் அண்ணாவை கூட்டிட்டு வா... நாம் சாப்பிட்டு கிளம்பணும்..." என்று மகனை அவசரப்படுத்தி அவனைப் போகச் சொன்னவர் கணவரிடமும்,

"நீங்க இன்னைக்கு ஸ்டார் ஹோட்டல் கட்டுமான வேலைகள் நடக்கும் இடத்துக்குப் போங்க... அப்புறம்..." என்று படபடத்த மனைவியைத் தடுத்த பத்ரிநாத்,

"வசி, எல்லாம் நான் பார்த்துக்கிறேன்... நீ டென்சனாகாதே..." என்று கூற... கணவனது குளிர்ச்சியான பார்வையில் மனம் குளிர்ந்தவர்,

"தேங்க்யூ டியர்..." என்க...

"என்னிடம் தேங்க்ஸ் சொல்லணுமா வசி...?" என்று வசீகரமாகச் சிரித்த கணவனின் புன்னகையில் அவரது மனம் காதலாய் மலர்ந்தது...

"வாங்க..." என்றபடி இருவரும் உணவு மேசையை நோக்கி நடந்தனர்...

அங்கு உண்ணாது அமர்ந்திருந்த அண்ணன், அண்ணியைக் கண்டு தட்டில் உணவு பரிமாறிய இளவரசி,

"சாப்பிடுங்க..." என்று அதட்டினார்...

அந்நேரம் அவரது இரண்டாவது அண்ணன் மணிபாரதி அங்கு வந்தார்... அவரது மனைவி பிரவசத்தின் போது இறந்து போனார்... குழந்தையும் இறந்தே பிறந்தது... அதன் பிறகு அவரும் வேறு திருமணம் செய்யவில்லை... அதனால் நிஷிலா தான் அவருக்கும் செல்ல மகள்... இந்த வீட்டின் செல்ல மகாராணி அவள்... அவளைக் காணாது அவரும் மிகவும் கஷ்டப்படுகிறார்...

குடும்பத்தினரை உண்ண வைத்து விட்டு தாயும், மகனும் சேர்ந்து காரிலேறி கிளம்பினர்...

"தீரா, நிஷாவை பத்தி எதுவும் தகவல் கிடைத்ததா...?"

"இல்லை மாம்..." என்று கூறிக் கொண்டே அவன் காரை செலுத்தினான்...

"ஒரு சின்ன க்ளூ கூடவா கிடைக்கலை..."

"ப்ச், இல்லை மாம்... ப்ளான் பண்ணி பண்ணின மாதிரி தெரியுது... ஆனா யார் பண்ணினாங்கன்னு தான் தெரியலை..."

"தீரா, நிஷாவுக்குக் காதல் எதுவும்...?" இளவரசிக்குக் கலக்கமாக இருந்தது...

"மாம்..." சற்று அதட்டலுடன் அவனது குரல் ஓங்கி ஒலித்தது...

தமிழ் நாவல்

"நிஷி மனசில் அப்படியொரு எண்ணம் எல்லாம் இல்லை... அவளுக்கும், எனக்கும் நீங்க கல்யாணம் பண்ண முடிவு பண்ணினீங்க... அப்படியிருந்தும் அவள் என்னைக் கூடக் காதலிக்கலை... என்னை அத்தை மகனா சொந்தமாகத் தான் பார்த்தாள்... அவள் சின்னக் குழந்தைம்மா... அவள் ஜாதகத்தில் தோசம் அது இதுன்னு நீங்க சொன்னதால் தான் நான் கூட இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டேன்... இல்லைன்னா எங்க கல்யாணம் இன்னும் ஐஞ்சு வருசம் கழிச்சு தான் நடந்திருக்கும்... அவள் நினைத்தபடி டாக்டரானதுக்கு அப்புறம் தான்..." என்றவன் மனக்கண்ணில் 'பவன் அத்தான்' என்று எல்லாவற்றிற்கும் தன்னை அழைக்கும் மாமனின் செல்ல மகள் வலம் வந்தாள்...

"அப்புறம் எப்படி இப்படி ஒரு அசம்பாவிதம் நடந்தது...?"

"அதான் எனக்கும் தெரியலை மாம்... நமக்குத் தொழிலில் எதிரிகள் அதிகம்... யார் இதைப் பண்ணினாங்கன்னு கெஸ் பண்ண முடியலை..." என்று நெற்றியை நீவி விட்டு கொண்டவனுக்கு அடுத்து என்ன செய்வது என்று சத்தியமாகப் புரியவில்லை... அவனது எதிரி அவனை விடப் பலமடங்கு அதிகம் பலமுடையவன் என்று அப்போது அவனுக்குத் தெரியவில்லை...

**********************

அதே நேரம் சென்னையில் இருந்த நட்சத்திர விடுதியின் அறையில் சிம்மவிஷ்ணு தனது வழக்கமான உடையான கருப்பு நிற பேண்ட், வெள்ளை சட்டை அணிந்து கொண்டு கம்பீரமாகக் கிளம்பி கொண்டிருந்தான்... இன்று தான் அவன் தனது எதிரியை நேரில் சந்திக்கச் செல்கிறான்... அதை நினைத்ததும் அவனது விழிகளில் பழிவாங்கும் வெறிப் பளபளத்தது... அந்த வெறியுடன் அவன் கிளம்பி சென்றான்...

தொழில் அமைச்சர் வீட்டின் முன்பு காரை நிறுத்திவிட்டு கீழே இறங்கினர் பவித்ரனும், அவனது அன்னையும்... அப்போது சிம்மவிஷ்ணுவும் தனது காரிலிருந்து

இறங்கினான்... அவனது விழிகள் இருவரையும் துளைத்து எடுத்தது... ஆனால் மற்ற இருவரும் ஆச்சிரியத்துடன், ஆராய்ச்சியாய் அவனைப் பார்த்தனர்... சிம்மவிஷ்ணுவை நாளிதழ்களில் அவர்கள் பார்த்திருக்கின்றனர்
ஒருவளர்ந்த தொழிலதிபராய் அவனை அவர்களு தெரியும்... அவர்களது பார்வையை உணர்ந்த சிம்மவிஷ்ணு தனது பார்வையை மாற்றிக் கொண்டான்... அறிமுகம் இல்லாத ஒரு பார்வையை அவர்களை நோக்கி சினான்...

மூவரும் அமைச்சரின் வீட்டிற்குச் சென்றனர்... வந்தவர்களை அமைச்சரே வரவேற்று வரவேற்பறையில் அமர வைத்தவர் நேரே விசயத்திற்கு வந்தார்...

"இந்தா விஷ்ணு, நீ நம்ம உறவுக்கார பய... அதே மாதிரி இவுங்களும் எந்தம்பிக்கு வேண்டப்பட்டவங்க... இப்போ யாருக்கு நான் இந்த ஒப்பந்தத்தைக் கொடுக்கிறதுன்னு எனக்கு ஒரே யோசனையா இருக்கு..." என்று அவர் தலையைச் சொறிந்தார்...

"அப்போ அவங்களுக்கே இந்த ஒப்பந்தத்தைக் கொடுத்துருங்க சித்தப்பா..." என்றான் தன்மையாகச் சிம்மவிஷ்ணு... அவனது மனமோ 'பதுங்குவது பாய்வதற்குத் தான்டா' என்று வன்மமாய் நினைத்தது...

"அது எப்படிப்பா...? உன்னைப் பகைச்சிட்டு நான் மதுரையில் ஜெயிக்க முடியுமா...? நம்ம சாதி, சனம் ஓட்டு எனக்கு முக்கியம்ய்யா..." என்று சிம்மவிஷ்ணுவிடம் றியவர் பவித்ரனிடம்,

"அடுத்த ஒப்பந்தம் உங்களுக்குக் கிடைக்கிற மாதிரி ஏற்பாடு பண்றேன்..." என்று கூற இளவரசி முகம் கறுத்துப் போய்விட்டது... பவித்ரனோ அந்த இடத்தில் முகத்தில் சிறு மாறுதல் காட்டாதிருக்கப் பெரும்பாடு பட்டான்...

"ஓகே சார் இதில் என்னயிருக்கு...?" என்று சமாளித்தபடி அவன் எழுந்தான்... இளவரசியும் மகனுடன் சேர்ந்து எழுந்தார்...

தமிழ் நாவல்

அவர்களைத் தொடர்ந்து சிம்மவிஷ்ணுவும் விடைப்பெற்று அங்கிருந்து கிளம்பினான்... அவன் வந்த வேலை தான் முடிந்து விட்டதே... வெளியில் வந்தவன் பவித்ரனை பார்த்து சீண்டும் குரலில்,

"வெற்றி பெற்றவர்களை வாழ்த்தும் நல்ல பழக்கம் எல்லாம் கிடையாதோ...?" என்றான் கேலியாய்...

அதில் பவித்ரனின் விழிகள் யோசனையாய் இடுங்கியது... இருந்தாலும் சம்பிரதாயமாகச் சிரித்தபடி அவன் புறம் கையை நீட்டியவன்,

"வாழ்த்துக்கள்..." என்றான்...

"நன்றி..." என்று புன்சிரிப்புடன் அந்த வாழ்த்தை ஏற்றுக் கொண்ட சிம்மவிஷ்ணு இளவரசியைப் பார்த்து,

"என்னை உங்களுக்கு அடையாளம் தெரிகிறதா...?" என்று கேட்டான்... அவனது குரலில் அடக்கப்பட்ட சீற்றம் இருந்ததோ...?

"எஸ், தெரியும்... லாஸ்ட் இயர் பெஸ்ட் பிசினஸ்மேன் அவார்டு வாங்கிய மிஸ்டர். சிம்மவிஷ்ணு தானே..." என்றார் அவர் சற்று அலட்சியமான குரலில்... மகனை போன்று அவரால் உணர்வுகளை அடக்க முடியவில்லை...

"இன்னும் நீங்க மாறவே இல்லை..." 'அதே அலட்சியம் இப்போதும்' என்று முன்பாதியை அவரிடம் கூறியவன் பின்பாதியை தனக்குள் கூறிக் கொண்டான்...

"என்ன சொல்ற நீ...?" இளவரசி அவனை முறைத்தார்...

"இல்லை, போன வருசம் உங்களை அவார்ட் ஃபங்கசனில் பார்த்த போது இருந்த மாதிரியே அப்படியே இருக்கீங்களே... அதைச் சொன்னேன்..." என்று கூசாது பொய் கூறினான் அவன்... இளவரசி அவனை ஆராய்ச்சி பார்வை பார்த்த போதும் அவரது உதடுகள் புன்னகையை வெளிப்படுத்த தவறவில்லை...

"அடுத்த வெற்றி உங்களுக்குத் தான்..." என்று அவர்களிடம் கூறியவன் 'இனி தொடர் வெற்றி எனக்கு மட்டுமே' என்று ஆவேசமாய் மனதிற்குள் கூறிக் கொண்டான்...

இவர்களை ஓட ஓட விரட்டுவது தானே அவனது ஒரே நோக்கம்...

"மாம், லேட்டாகுது... வாங்க..." பவித்ரன் கிளம்புவதற்காக அவசரப்படுத்தினான்...

"இதோ வர்றேன்..." என்ற இளவரசி சிம்மவிஷ்ணுவிடம் விடைபெறாது மகனுடன் நடந்தார்...

"என்ன அவசரம் தீரா...?"

"நிஷி பத்தின தகவல் வந்திருக்கு... கொல்கத்தா பக்கம் இருக்கிறதா சொல்றாங்க... நான் போய்ப் பார்த்துட்டு வர்றேன்... நீங்க இங்கே பிசினசை பார்த்துக்கோங்க..." என்று பேசியபடி பவித்ரன் வேகமாய் நடந்தான்...

"சரிப்பா நீ கிளம்பு... நான் இங்கே பார்த்துக்கிறேன்..." என்று ஆறுதலாய்க் கூறினார் இளவரசியும்...

'நீ உலகத்து மூலை, முடுக்கில் எல்லாம் போய்த் தேடினாலும் உன் மாமன் மகள் கிடைக்க மாட்டாள்... அவள் என்னிடம் அல்லவா இருக்கிறாள்... நிஷியாம், நிஷி...' என்று ஆத்திரத்துடன் கூறியவனின் முகம் சிவந்து போனது...

அதே நேரம் நிஷிலாவும் அவனைத் தான் நினைத்து கொண்டிருந்தாள்... 'பேரை பாரு... சிம்மவிஷ்ணுவாம்...? அவன் காட்டான் மாதிரி இருப்பதால் தான் இந்தப் பெயரை வைச்சியிருக்காங்க போலிருக்கு' என்று மனதில் கோபமாய் முணுமுணுத்து கொண்டாள்...

அவன் அணிவித்த சங்கிலி அருகில் இருந்த மேசை மீது வீற்றிருந்தது... சிறிது நேரம் அதையே வெறித்துப் பார்த்து கொண்டிருந்தவள் மனதில் வெறுப்பு எழ சட்டென்று எழுந்து ஜன்னல் பக்கம் வந்தாள்... பச்சை பசேலென்று

புல்வெளியுடன் இருந்த இந்த வீடு எந்த ஊரில் இருக்கிறது என்று கூட அவளுக்குத் தெரியாது... ஒரு மாதமாக இந்த வீட்டினுள் அவள் சிறையிருக்கிறாள்... வீட்டினுள் அனைத்து வசதியும் இருக்கிறது... தொலைப்பேசி, அலைப்பேசி, இணைய வசதி கிடையாது... தொலைக்காட்சி மட்டும் உண்டு...

வீட்டினுள் அவள் சுதந்திரமாகத் தான் இருக்கிறாள்... அப்படித் தான் அவள் நினைத்தாள்... ஆனால் அவள் தற்கொலை முயற்சி செய்யும் போது எல்லாம் எங்கிருந்தாவது ஆட்கள் வந்து அவளைக் காப்பாற்றி விடுகின்றனர்... அறை கதவை பூட்டி கொண்டு கூட முயற்சித்துப் பார்த்தாள்... அடுத்த நொடி மருதாணி சாவி போட்டு கதவை திறந்து கொண்டு அவள் முன் ஆஜராகி விடுவாள்... அவள் மனம் வெறுத்து போனாள்... அவன் அறையினுள் கேமிரா எதுவும் மாட்டி வைத்திருக்கிறானோ என்று வேறு அவள் பயந்து போனாள்... அப்படி என்றால் அவன் தன்னுடன் கூடும் கூடலையும் காணொளி எடுத்து வைத்திருப்பானோ என்று சந்தேகப்பட்டு அதை அவனிடம் வாய்விட்டு கேட்டு அடுத்தக் கணம் கன்னத்தில் அறையும் வாங்கிக் கொண்டாள்...

"இன்னொரு தடவை இந்த வார்த்தைகளைச் சொல்லு... சொல்ல வாய் இருக்காது... கிழிச்சிருவேன் கிழிச்சு... என்னைப் பார்த்தா உனக்கு எப்படிடி தெரியுது...? அந்த மாதிரி கீழ்த்தரமான காரியம் பண்றவன் மாதிரியா...?" என்று கர்ஜித்தவனைக் கண்டு அவளுக்குச் சர்வாங்கமும் நடுநடுங்கி போனது...

"இப்போ பண்றதுக்கு மட்டும் பெயர் என்னவாம்...?" என்று கண்களில் கண்ணீர் நிறைய அவனைக் காண இயலாது தலையைக் கீழே குனிந்து கொண்டு அவள் கேட்டாள்...

அவள் அருகே வந்து அவளது முகத்தை நிமிர்த்தியவன், "உன்னை நான் மட்டும் தான் கேவலப்படுத்துவேன்... வேறு யாரையும் கேவலப்படுத்த நான் விட மாட்டேன்... ஏன்னா

நானே ஆயிரம் பேருக்கு சமம்..." என்று அவன் கூறியதன் அர்த்தம் புரிந்து அவளது தேகம் கூசி போனது...

"இதுக்கு எல்லாம் நல்லா அனுபவிக்கப் போறீங்க..." என்றவளின் அருகே இன்னமும் நெருங்கி வந்தவன்,

"அனுபவித்துக் கொண்டு தானே இருக்கிறேன்..." என்றபடி அவன் அவளது முகம் நோக்கி குனிந்த போது அவள் அருவருப்பு தாங்க முடியாது திரும்பி நின்று கொண்டு ஜன்னல் கம்பிகளில் முகம் பதித்தாள்...

சில்லென்ற கம்பி அவளை நிகழ்காலத்திற்கு வரவழைத்தது... அவளது வெறுப்பு, அருவருப்பு எதையும் உணராதவனாய் அவன் தன்னுடைய காரியத்தைச் சாதித்துக் கொண்டு அவளை விட்டு விலகிய போது அவள் மனதளவில் செத்து தான் போனாள்... தினம் இந்த அவஸ்தையா? என்று மனம் மறுகி போனாள்... பகல், இரவு என்று அவன் வரும் பொழுது கூட அவளுக்குத் தெரியாது... எப்போது வேண்டுமானாலும் அவன் இங்கு வந்து நிற்பான்...

இப்போதும் எப்போது வந்து நிற்க போகிறானோ என்று அவள் மனதிற்குள் பயந்தபடி இருந்தாள்... இருந்தாலும் இன்று ஏனோ மனதின் ஓரத்தில் சற்று நிம்மதி எழுந்தது... அந்த நிம்மதியை அவன் கெடுக்கப் போவது தெரியாது அவள் நிம்மதியாக இருந்தாள்... உடல் சோர்வாக இருக்கப் படுக்கையில் படுத்துக் கண்களை மூடி கொண்டாள்... மூடிய விழிகளுக்குள் அவளது அத்தான் பவித்ரன் வலம் வந்தான்...

'நிஷிம்மா... ரொம்ப உடம்புக்கு முடியலைன்னா டாக்டர் கிட்ட போவோமா...?' என்று அவளது நெற்றியை வருடியபடி அன்புடன் கேட்கும் அத்தானின் பாசத்தில் அவளது விழிகள் கலங்கியது...

"பவன் அத்தான்..." என்று முனங்கியவளை பின்னால் இருந்து அணைத்தது இரு முரட்டுக் கரங்கள்...

"நான் பவனில்லை... நான் சிம்மன்..." என்று கூறியபடி அவளது கழுத்தில் முகத்தைப் புதைத்தவனின் ஸ்பரிசத்தை உணர்ந்தவளின் விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது...

'வந்து விட்டான் ராட்சசன்...' என்று நடுங்கியது அவளது உள்ளம்...

அவனது கனம் தாங்காது விழிகளைத் திறந்தவள் தன்னுள் புதைந்தவனின் எண்ணம் கண்டு திடுக்கிட்டு, "வேண்டாம்..." என்று முணுமுணுத்தாள் பரிதாபமாய்...

ஏனென்று கூடக் கேட்காது தனது வேலையைத் தொடர்ந்தவனின் கைகளைப் பிடித்துத் தடுத்தவள் அவனிடம் எப்படி விசயத்தைக் கூறுவது? என்று தெரியாது விழித்தாள்... பெண்ணவளை அவன் பெண்டாண்ட போதும் அவன் அவளுக்கு முன்பின் அறிமுகம் இல்லாத மனிதனே... அதனால் அதைச் சொல்ல தெரியாது அவனைப் பாவமாய்ப் பார்த்தாள்... அவளது பார்வையைப் புரிந்தார் போன்று அவனது புருவங்கள் உயர்ந்தது...

"என்ன...?"

"இன்னும் மூன்று நாட்களுக்கு இது வேண்டாம்..." என்றாள் அவள் பயந்து கொண்டே...

அவளது பேச்சின் அர்த்தம் புரிந்த அடுத்த நொடி அவனது வலதுகை அவளது தாடையை இறுக பற்றியது...

"என்னடி சொல்ற...?" அவனது பெயருக்கு ஏற்றார் போன்று அவன் நரசிம்ம அவதாரம் எடுத்திருந்தான்...

என்னவென்று சொல்வாள்...? அவள் திகைத்தபடி அவனைப் பார்த்திருந்தாள்...

"எப்படிடி...?" என்று அவளைக் கேட்டவன்,

"நீ பெண் தானா...?" என்று கேட்டான் சந்தேகமாய்...

'ஒரு பெண்ணை உடல் வலிமை காட்டி வெற்றி பெறும் நீ எல்லாம் ஒரு நல்ல ஆண் தானா...?' என்று அவளது நாவு கேட்க துடித்தது... ஆனால் அவனது கோபத்திற்குப் பயந்து வாயை மூடி கொண்டாள்...

"எப்படி என் கணிப்பு எல்லாம் உன் விசயத்தில் மட்டும் தப்பாகவே போகுது...?" என்று கேட்டவனின் கண்களில் எதிர்பார்ப்பு பொய்த்து போன உணர்வு எழுந்தது...

"ஒரு வாரம் கழிச்சு வருவேன்... செக்கப்புக்கு ரெடியாயிரு..." என்றபடி தன்னை விட்டு விலகியவனைக் கண்டு அவளது முகம் மகிழ்ச்சியில் மலர்ந்தது...

அதைக் கண்டு கொண்டவனின் முகத்தில் சிறு புன்னகை வந்தமர்ந்தது... அந்தப் புன்னகையுடன் அவளது கன்னத்தைத் தட்டியவன்,

"என்னோடு நீ இருக்கிற வரைக்கும் யாரும் உன்னைக் கடத்த முடியாது... உன் அத்தானால் கூட..." என்றான் சன்ன சிரிப்புடன்...

"கடத்தியது நீங்க... என் பவன் அத்தான் இல்லை... அவர் ஹீரோ... நீங்க வில்லன்..." என்று வெடுக்கென்று கூறியவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்...

அவளது முகத்தைத் தன்புறமாய்த் திருப்பி அதன் அருகே குனிந்தவன், "இது ஒத்துக் கொள்ள வேண்டிய விசயம்... அவன் ஹீரோ தான்... ஏன்னா அவன் என்னை விட அவ்வளவு அழகு... ஆனா நான்..." என்று அவளது விழிகளுக்குள் ஊடுருவி பார்த்தவன்,

"ஆன்டி ஹீரோ... அப்போ நான் இப்படித் தான் இருப்பேன்..." என்று கூறியவன் வாய்விட்டுச் சிரித்தான்...

அவளோ முகம் சுருங்கி போய் அழுவதற்குத் தயாரானாள்...

"நீ எப்படி அழுது கரைந்தாலும் இந்த ஜென்மத்தில் இது தான் உன் வாழ்க்கை... அவ்வளவு சீக்கிரத்தில் நான் உன் வாழ்க்கையை விட்டு போக மாட்டேன்டி... நான் உன் கூட

இல்லைன்னாலும் உன்னை அணு அணுவாய் சாகடிப்பேன்டி... வாழவும் முடியாம, சாகவும் முடியாம நீ அவஸ்தை படணும்... அது தான் எனக்கு வேண்டும்..."

முதன்முறையாய் அவன் தன் மனதில் இருப்பதை அவளிடம் கூறியிருக்கிறான்... ஆனால் அதன் அர்த்தம் தான் என்ன? என்று புரியாது தவித்தாள் அந்தப் பேதை பெண்... அவன் தன்னை வதைக்காது விட மாட்டான் என்பது மட்டும் அவளுக்குத் தெள்ள தெளிவாகப் புரிந்தது...

"நீங்க என் கூட இல்லாதிருந்தால் போதும்..." என்று இரு கரம் கூப்பிக் கரைந்தவளை கண்டு அவனுக்கு இரக்கம் வரவில்லை...

"அட, நான் என்னமோ வாழ்நாள் முழுசும் உன் கூட வாழ இஷ்டப்படுவது போல் சொல்ற... எனக்குமே விருப்பம் இல்லாது தான் உன் கூட இந்த வாழ்க்கையை வாழ்கிறேன்... உன்னை எனக்குப் பிடிக்கலை... பிடிக்கலை, பிடிக்கலை..." என்று ஆவேசத்துடன் கூறியவனைக் கண்டு பயந்து போன அவளது கைகள் பிடிமானம் தேடி படுக்கையில் அலைபாய்ந்தது...

"அன்னைக்கு மாதிரி அடிக்க எதையாவது தேடுறியா...?" என்று சிரித்தவனின் நெற்றியை அவளது விழிகள் அவளையும் அறியாது பார்த்து வைத்தது...

இடது புருவத்தின் மீது நீளமாய்க் கீறல் விழுந்திருந்தது... இப்போது தான் அது லேசாக ஆறிக் கொண்டிருக்கிறது போலும்... அகிம்சைவாதியான அவளையும் அவன் அவனைப் போன்றே தீவிரவாதியாக மாற்றிக் கொண்டிருக்கின்றான்...

"ஒண்ணும் கைக்குச் சிக்காது... எல்லாத்தையும் எடுக்கச் சொல்லிட்டேன்... இன்னொரு தடவை உன் கிட்ட விழுப்புண் வாங்கிட்டு அப்புறம் என் அம்மா கேட்கும் கேள்விகளுக்கு என்னால் பதில் சொல்லி சமாளிக்க முடியாது..."

"உங்களுக்கு அம்மா இருக்காங்களா...?" அப்பாவியாய் கேட்டவளை கண்டு,

"இது என்ன லூசுத்தனமான கேள்வி...? அம்மா, அப்பா இல்லாம யாரும் பொறக்கிறது இல்லை..." என்று அவன் சிடுசிடுத்தான்...

"நீங்க தான் ராட்சசன் ஆச்சே... வானத்தில் இருந்து குதிச்சிங்களோன்னு நினைச்சேன்..." என்று அவள் வேகமாய் வாயை விட்டு விட்டு பின்பு தனது தவறு புரிந்து உதட்டை கடித்துக் கொண்டாள்...

"குட், இந்த நாவடக்கம் வருங்காலங்களில் இருந்தால் நல்லது..."

"உங்க அம்மா ஒரு பெண் தானே... அது போல் பெண்ணான என்னை இப்படிச் சித்ரவதை செய்றது நியாயமா...? இந்த விசயம் அவங்க கேள்விப்பட்டா உங்களைத் தப்பா நினைக்க மாட்டாங்களா...?"

"கேள்விப்படவும் மாட்டாங்க... அப்படியே கேள்விப்பட்டாலும் நான் இதைச் செய்யலைன்னு சாதிச்சிருவேன்..." என்று கூறி வில்லன் சிரிப்பு சிரித்தவனை அவள் உறுத்து விழித்துக் கொண்டிருந்தாள்...

"இப்படித் தப்புத் தப்பா சின்னப் புள்ளை மாதிரி யோசிக்காம இரு... நான் உன்னைக் கடத்தியது, உன் கூட வாழ்றதுக்கு எந்தச் சாட்சியும் கிடையாது..."

"ஏன் இல்லை...? மருதாணி இல்லையா...?"

"அவளுக்கு என்னை எதிர்க்கும் தைரியம் இருக்கா...?" என்று ஒற்றைப் புருவத்தைத் தூக்கி அவன் பார்த்த விதத்தில் அவளுக்கே குளிரெடுக்கும் போது மருதாணி பற்றிச் சொல்லவே தேவையில்லை...

தலைகுனிந்து அமர்ந்தவளை கண்டு அவன் திருப்தி புன்னகை புரிந்தான்...

"ஆனா உன் வீட்டுக்கு சொல்லுவேன்... நான் தான் உன்னைக் கடத்தினேன்... நான் தான் உன் கூட வாழ்ந்தேன்னு..."

அவள் திகைப்புடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள்... அவளைப் பார்த்தபடி அவன் அவளை நோக்கி குனிந்தான்... அவள் பயத்தில் விழிகளை மூடி கொண்டிருக்க... அவனோ அவளைத் தாண்டி தனது கையை நீட்டி மேசை மீதிருந்த சங்கிலியை எடுத்து அவளது கழுத்தில் போட்டுவிட்டபடி,

"இதைக் கழட்ட கூடாதுன்னு நான் சொன்னேன்னா இல்லையா...?" என்று அவளைச் சிறுகுழந்தை போல் அதட்டினான்... அவனது அதட்டலில் மலங்க மலங்க விழித்தவளை கண்டு கொள்ளாது,

"இப்போ உனக்கு எதுவும் புரியாது... போகப் போகப் புரியும் இந்தச் சிம்மவிஷ்ணுவை பத்தி..." என்றவன் அதற்கு மேல் அங்கு நிற்காது கிளம்பி சென்றுவிட்டான்...

**************************

மதுரையில் இருக்கும் அரிசி ஆலைகள், வயல்வெளிகளைப் பார்க்க கிளம்பி கொண்டிருந்தான் சிம்மவிஷ்ணு... அவன் கார் நிறுவனம், கணினி நிறுவனம் என்று நிறையத் தொழில் வைத்திருந்தாலும் அவனது முக்கியத் தொழில், அவனுக்குப் பிடித்தமான தொழில் விவசாயம் தான்... அதனால் அவனுக்கு இதில் தனி ஈடுபாடு உண்டு...

"விஷ்ணு, சித்தப்பா வீட்டுக்கு கிளம்பு..."

"அங்கே எதுக்கு...?"

அவனுக்கு ஏனோ அவனது சித்தப்பா மற்றும் அவரது மகனை பிடிக்காது... சொத்திற்காகக் கொலையும் செய்பவர்கள் என்பது அவனது அனுமானம்... அண்ணனின் செல்வாக்கு தனக்கு இல்லை என்று தம்பியிடம் ஒருவித பொறாமை இருந்து கொண்டே இருக்கும்... அதனால் அவர்களிடம் அவன் சற்று தள்ளியே இருப்பான்... ஆனால்

அவனது பெற்றோர் பாசத்திற்குக் கட்டுப்பட்டவர்கள்... அவர்களை அவன் ஒன்றும் சொல்ல முடியாது அமைதி காத்துவிட்டான்...

"இன்று மலர்விழிக்கு வளைகாப்பு..."

மலர்விழி அவனது தம்பியின் மனைவி... சின்னவனான அவனுக்குத் திருமணம் முடிந்து குழந்தையும் வந்துவிட்டது என்று அவருக்குத் தனது மகன் மீது மனத்தாங்கல் இருக்கத்தான் செய்கிறது...

"அதுக்கு நான் எதுக்கும்மா...?" என்று அவன் மறுக்க...

"உன்னையும் சேர்த்துத் தான்டா கூப்பிட்டு இருக்காங்க..." என்றவர் அவன் மறுக்கும் முன்,

"பட்டு வேஷ்டி, சட்டை எடுத்து வச்சியிருக்கேன்... மாத்திட்டு வா..."

"ம்மா, எனக்கு எதுக்குப் பட்டு வேட்டி, சட்டை எல்லாம்..."

"ஷ், மேலே ஒரு வார்த்தை பேச கூடாது... அம்மா சொன்னா கேட்டுக்கணும்..."

"நிச்சயம்மா..." என்று புன்னகையுடன் அவன் ஆங்கிலேய பாணியில் உடலை வளைத்து வணங்கியவன் பின்பு அறையை நோக்கி சென்றான்...

மீனாட்சி அம்மாவின் முகத்தில் இரகசிய புன்னகை தோன்றியது... அதற்கான காரணம் அங்கே போய்ப் பார்த்த போது தான் தெரிந்தது... ஐந்தரை அடி உயரத்தில் அழகு பெட்டகமாய் அது தேவதையாய் ஜொலித்தது...

"அத்தை..." என்று அவரை அன்போடு அணைத்து வரவேற்றாள் ஹர்ஷவர்த்தினி... அவள் மலர்விழியின் தங்கை... படிப்பு முடித்துவிட்டு பரம்பரை தொழிலை பார்த்து கொண்டிருக்கிறாள்...

"அத்தையைக் கண்டுக்கிறது இருக்கட்டும்... அத்தை மகனை எப்போ கண்டுக்கிறதா இருக்க...?" என்று அவர்

அவளை வம்பிழுக்க...

"ம்மா, இது என்ன பேச்சு...?" மகன் அன்னையைக் கடிந்தான்...

உடலால் வாழும் நிஷிலாவே அவனைப் பெரிதும் கவரவில்லை... இவள் என்ன சுண்டைக்காய்... அவன் அவளை ஒரு பொருட்டாகக் கூட மதிக்கவில்லை... அலைப்பேசியைப் பார்த்துக் கொண்டிருந்தான்...

"நான் மட்டும் கண்டுக்கிட்டா போதுமா...? அத்தை மகனும் கண்டுக்கணும்ல்ல..." என்று இழுத்தவளை அவன் முறைத்துப் பார்த்தான்... அவளோ காதலோடு அவனைப் பார்த்தாள்...

'போடி' என்பது போல் அவளை அற்பமாய்ப் பார்த்தபடி அவன் வெளியில் சென்றுவிட்டான்... அவன் பின்னேயே வந்தவள் அவன் நின்றது தெரியாது அவன் மீது மோதி நின்றாள்...

"ஏய்..." என்று அவன் அவளைக் கீழே விழாது தாங்கி பிடித்து நிற்க வைத்தான்...

"தேங்க்ஸ் அத்தான்..." என்றபடி அவள் அவன் எதிர்பார்க்காத நேரத்தில் அவனது கன்னத்தில் முத்தமிட்டுவிட்டு உள்ளே ஓடி சென்றுவிட்டாள்...

அவனோ கன்னத்தைத் தேய்த்தபடி அவளைக் கோபமாய் முறைத்து பார்த்துக் கொண்டிருந்தான்...

*******************

சரியாக ஒரு வாரம் கழித்துச் சிம்மவிஷ்ணு நிஷிலாவை பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றிருந்தான்... மதுரையைத் தாண்டி ஒதுக்குபுறமாய் எங்கோ காட்டிற்குள் இருந்தது அந்த மருத்துவமனை... இரவு நேரத்தில் அவளால் அந்த இடத்தைச் சரியாக அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை... முகப்பில் இருந்த பெயர் பலகையைப் பார்த்து ஊரை படித்துத்

தெரிந்து கொண்டாள்... ஆனால் அது எங்கிருக்கிறது என்று அவளுக்குத் தெரியாதே... அப்படியிருந்தும் அவள் கூடவே இருந்து அடைக்காத்தவனைக் கண்டு அவளுக்கு வெறுப்பாக இருந்தது... மருத்துவர் அழைத்ததும் உள்ளே சென்றனர் இருவரும்... அவளது பெயரை அவர் கேட்டதும் அவன் முந்தி கொண்டு,

"நிலா..." என்றான்... அவளோ அவனை எரிச்சலுடன் பார்த்தாள்... பின்பு வயது பற்றிக் கேட்டவர் திகைத்து போய் இருவரையும் பார்த்தார்...

"பதினெட்டு வயது தானே ஆகிறது... அதுக்குள் எதுக்கு அவசரம்...? குழந்தை வருவதற்கு இருபத்தியொரு வயதாகட்டும்..." என்றவரை இடைமறித்தவன்,

"வீட்டில் ரொம்பப் பிரஷர் கொடுக்கிறாங்க..." என்றான் அவசரமாய்...

'இவனே பேசுவதற்கு இவன் எதுக்கு என்னை அழைத்துக் கொண்டு வரணும்...?' என்று அவள் மனதிற்குள் முனங்கினாள்...

"உங்க வயசு என்ன மிஸ்டர்...?" என்று இழுத்தவரிடம்,

அவன் பெயரை சொல்லாது, "முப்பது..." என்றான்...

"ஓ காட்... ட்வெல் இயர்ஸ் டிபெரென்ஸ்..." என்று திகைத்தவர்,

"ஏன்ம்மா, இது உனக்குக் கட்டாயக் கல்யாணமா...?" என்று அவனைச் சந்தேகத்துடன் பார்த்தபடி அவளிடம் கேட்டார்...

பின்னே தேவதை போன்று அம்சமாய் இருக்கும் பெண்ணிற்கும், அதற்குச் சிறிதும் சம்பந்தமில்லாது காட்டான் மாதிரி இருக்கும் ஒருத்தனுக்கும் திருமணம் நடந்திருக்கிறது என்றால் அது கட்டாயத் திருமணமாகத் தானே இருக்க வேண்டும் என்று அவரே ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்...

'இதற்கும் நீயே பதில் சொல்...' என்பது போல் அவள் உதடுகளை இறுக மூடி கொண்டு அவனை அழுத்தமாய்ப் பார்த்து வைத்தாள்...

அவளது பார்வையை உணர்ந்தவனின் முகம் அவமானத்தில் கறுத்து போனது...!!!

"காலத்தின் கட்டாயமா...? இல்லை
காமத்தின் கட்டாயமா...?
அவள் வேண்டும் அவனுக்கு...
சரியோ, தவறோ அவள் மட்டுமே அவனுக்கு...
இந்த ஜென்மம் மட்டுமல்லாது
ஏழேழு ஜென்மத்திற்கும் அவளே...
நேசமாய் அல்ல, நாசமாக்குவதற்கு...
கனிந்த உறவு காதலாய் மாறும்...
கனியாத உறவு காமமாய் மாறி போனதன்
அவலம் தான் என்னவோ...!!!"

கொல்லும்...!!!

## நிழல் : 3

"எதுக்கு உங்களுக்கு இப்படியொரு சந்தேகம் டாக்டர்...?" என்று அமர்த்தலான குரலில் கேட்ட சிம்மவிஷ்ணுவிடம் அந்த மருத்துவர் என்னவென்று பதில் கூறுவார்...?

'நீ காட்டான் மாதிரியிருக்க... இவள் பூ மாதிரியிருக்கிறாள்...' என்றா...?

"அது வந்து வயசு வித்தியாசம் அதிகமாயிருக்கவும்..." என்று இழுத்தவரிடம்,

"இது நம்ம ஊர் வட்டாரத்தில் வழக்கமான ஒன்று தானே... இதுக்கு நீங்க ஏன் இவ்வளவு அதிர்ச்சியாகணும்...?" நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து அமர்ந்து கொண்டு வலதுகையால் தாடையைத் தடவியபடி அவன் அவரை ஒரு பார்வை பார்த்து வைத்தான்...

மருத்துவரான அவருக்கே அவனது பார்வை அச்சத்தினை ஏற்படுத்தியது... 'பாவம் இந்தச் சின்னப் பெண்' என்று அவர் மனதில் நினைத்துக் கொண்டார்...

"அப்படியில்லை சார்..." என்றவரை கையமர்த்தித் தடுத்தவன்,

"நீங்க இவளை செக்கப் பண்றீங்களா...? இல்லை நான் வேற ஹாஸ்பிட்டலுக்குக் கூட்டிட்டு போகவா...?" என்றபடி அவன் நாற்காலியில் இருந்து எழ போனான்...

"வேண்டாம், வேண்டாம்... நானே பார்க்கிறேன்..." எப்போதோ வரும் நோயாளியை விட்டுவிட அவருக்கு விருப்பம் இல்லை...

"நீ போய் ரூமில் வெய்ட் பண்ணும்மா... நான் வருகிறேன்..." என்று மருத்துவர் கூற...

நிஷிலா மலர்ந்த முகத்துடன் அந்த அறையை ஒட்டியிருந்த மற்றொரு அறைக்குள் செவிலிப்பெண்ணுடன் சென்றாள்...

அவளது மலர்ந்த முகத்தைக் கண்டு சிம்மவிஷ்ணுவின் உதடுகளில் விசம புன்னகை நெளிந்தது...

அவள் சென்றதும் மருத்துவரை பார்த்து, "இது உங்க சொந்த ஹாஸ்பிட்டலா...? இந்த ஹாஸ்பிட்டல் கட்டி எத்தனை வருசமாச்சு...?" என்று கேட்டான் அந்த அறையை நோட்டமிட்டபடி...

"என்னோடது தான்... இப்போ இரண்டு வருசமாச்சு..."

"சொந்த பணமா...? இல்லை கடனா...?" என்றவனை அவர் ஒரு மாதிரியாய் பார்த்தார்...

"சும்மா தெரிஞ்சிக்கத் தான் கேட்டேன்..."

"பேங்க் கடன் தான்..." என்றவரை கண்டு அடுத்த நொடி தனது காசோலையை எடுத்து அதில் மளமளவென்று ஏதோ எழுதி இறுதியில் கையெழுத்து போட்டு அவரிடம் கொடுத்தான்...

அதை வாங்கிப் பார்த்த மருத்துவருக்கு மயக்கம் வராத குறை தான்... ஏனெனில் அந்தக் காசோலையில் அவர் வங்கியில் வாங்கிய கடன் தொகையை விட அதிகத் தொகையை அவன் எழுதியிருந்தான்...

"சார், ரொம்பத் தேங்க்ஸ் சார்..."

"இது அட்வான்ஸ் தான்... எனக்குக் குழந்தை வரட்டும்... இன்னும் அதிகமாய்த் தருகிறேன்..." என்று அவன் கூறிய போது அவர் வாயெல்லாம் பல்லாகி போனார்... அவரது சந்தோசமான மனநிலையை அவன் ஊகித்தவனாய் விசயத்தை மெல்ல ஆரம்பித்தான்...

"நீங்க சொன்ன மாதிரி இது கட்டாயக் கல்யாணம் தான்... இவள் என் மாமன் மகள்... இவளை வேறு ஒருவருக்குத் திருமணம் செய்யப் பார்த்தார்கள்... உறவுமுறையை விட்டு கொடுக்க முடியாது கடத்தி வந்து திருமணம் செய்து கொண்டேன்... நிலாவை எனக்கு ரொம்பப் பிடிக்கும்... அவளைக் கைவிட என்னால் முடியாது... ஆனால் அவள்

என்னைக் கண்டு பயம் கொள்கிறாள்... சின்னப் பெண் என்பதால் வாழ்க்கையைப் பற்றி ரொம்பப் பயப்படுகிறாள்... நீங்க தான் அவளுக்கு எடுத்து சொல்லணும்..." அவருக்கு ஏற்றார் போன்று அவன் நைச்சியமாய்ப் பேசினான்...

"டோன்ட் வொர்ரி... எல்லாம் நான் பேசிக்கிறேன்..." என்று அவர் புன்னகைக்க...

"இப்போ அவளைச் செக்கப் பண்ண போகலாமே..." என்று அறையை நோக்கி கை காட்டியவனைக் கண்டு,

"இதோ சார்..." என்றவர் உடனே எழுந்து பக்கத்து அறைக்குச் சென்றார்...

'உன் வேலை எதுவும் என் கிட்ட நடக்காதடி...' அவன் மனதிற்குள் நிஷிலாவிடம் வன்மமாய்க் கூறிக் கொண்டான்...

அவன் நினைத்தது போல் தான் உள்ளே காட்சிகள் அரங்கேறிக் கொண்டிருந்தது...

"டாக்டர், இவன்... இவன் என்னை ரொம்ப டார்ச்சர் பண்றான்..." என்று அவள் அவரது கையைப் பிடித்துக் கொண்டு அழுதாள்...

அவள் சிறு பெண் என்பதால் தாம்பத்திய வாழ்க்கையைக் கண்டு பயப்படுகிறாள் என்று அவராக நினைத்துக் கொண்டார்...

"ரொம்ப ஹார்ஷா பிஹேவ் பண்றாரா...? இல்லை வேறு எதுவும் கொடுமைகள் பண்றாரா...?" என்று கேட்டபடி அவர் அவளைப் பரிசோதிக்க ஆரம்பித்தார்...

அவரது கேள்வியில் அவளது கண்ணீர் அப்படியே நின்றுவிட்டது... இதற்கு அவள் என்னவென்று பதில் கூறுவாள்... இது உடல் வலியல்ல, மனவலி என்று அவள் எப்படிக் கூறுவாள்...? அவள் தான் அவனது தொடுகையில் திமிறுவாளே தவிர... இதுவரை அவன் அவளிடம்

வன்முறையைக் கையாளவில்லையே... இந்த மாதிரியான ஊமை வன்கொடுமையைப் பெண்ணவள் என்னவென்று சொல்வாள்...? அவளது மனதின் வலியை அவளது கண்கள் பிரதிபலித்தது... அதை அந்த மருத்துவரால் உணர முடியவில்லை...

அவள் பேசும் முன் அவர் தனது அறிவுரையை ஆரம்பித்து விட்டார்...

"இவ்வளவு ஒரு நல்ல கணவன் யாருக்கும் கிடைக்க மாட்டாங்க... வெறும் செக்கப்புக்கே பணத்தை இப்படி வாரியிறைக்கிறார்... இதில் உனக்குக் குழந்தை வந்தால் கேட்கவே வேண்டாம்... எங்களுக்கே இப்படிச் செய்கிறவர் உனக்குச் செய்ய மாட்டாரா...?" என்று அவர் கேட்க...

அவரையும் அவன் பணம் கொடுத்து விலைக்கு வாங்கி விட்டதை உணர்ந்து அவள் நொந்து போனாள்...

"இல்லை, அவன் என்னைக் கடத்திட்டு வந்து..." அவள் மேலே கூறும் முன்...

"கல்யாணமாகி விட்டது... சின்னப் பொண்ணு மாதிரி பேச கூடாது நிலா..." என்று அவர் அவளைக் கடிய... அவள் தனது விதியை நினைத்து மனம் கலங்கி போனாள்...

சிம்மவிஷ்ணுவின் பணம் நன்றாக வேலை செய்தது... மருத்துவர் உடனே பரிசோதனை முடிவை தெரிவித்து விட்டார்....

"உங்க வொய்ப்க்கு எந்தக் குறையும் இல்லை... சீக்கிரமே நல்ல விசயத்தை எதிர்பார்க்கலாம்..." என்று சிரித்தபடி மருத்துவர் கூறிய போது நிஷிலாவின் மனதில் பெரும் பூகம்பம் வெடித்தது...

அவன் அவளிடம் குழந்தை கேட்ட போது அதிராத மனம், அவன் பரிசோதனைக்காக அழைத்து வந்த போது அதிராத மனம் இப்போது பெரிதாக அதிர்ந்தது... அவள் வாழும் அவலநிலைக்குக் குழந்தை ஒன்று தான் கேடு... மனதிற்குள் அருவருப்பும், வெறுப்புமுமாய் நினைத்தவள்

தன்னையும் அறியாது கோபத்தில் நாற்காலியின் கைப்பிடியை இறுக பிடித்தாள்... அப்போது தான் அவள் அந்த வேறுபாட்டை உணர்ந்தாள்... அவளது வலதுகை நாற்காலி மீது கை வைத்திருந்த சிம்மவிஷ்ணுவின் இடதுகையை இறுக்கி பிடித்திருந்தது... அடுத்தக் கணம் அவள் தீச்சுட்டார் போன்று தனது கையை எடுத்து கொண்டாள்...

அதைக் கண்டு அவனது உதடுகளில் இகழ்ச்சியான புன்னகை தோன்றி மறைந்தது... பின்பு அவன் மிகவும் சந்தோசமாக மருத்துவரை பார்த்து,

"ரொம்ப ரொம்பத் தேங்க்ஸ் டாக்டர்..." என்றான்... அவனது சந்தோசத்தைப் பார்த்து வியந்த மருத்துவர்,

"பாரும்மா, இப்படிச் சந்தோசப்படுகிறவரை பார்த்தா நீ சந்தேகப்படுற...?"

அதில் அவனது புருவங்கள் கோபமாய் உயர்ந்தது... அதைக் கண்டு அவளது மேனி நடுங்கியது... அவன் கோபத்துடன் நாற்காலியில் இருந்து எழுந்தான்... உடன் அவளும் பயத்தில் எழுந்து நின்றாள்...

"சார், நீங்க வெளியில் வெயிட் பண்ணுங்க..." என்று அவனை வெளியில் போகச் சொன்னவரை அவன் உறுத்து விழிக்க...

"அட்வைஸ் பண்ண தான் சார்... இது லேடீஸ் மேட்டர்..." என்றதும் அவன் அவர்களை ஒரு பார்வை பார்த்துவிட்டு வெளியில் சென்றான்...

"இங்கே பாரும்மா, ஆண்கள் ஒவ்வொருத்தர் ஒவ்வொரு மாதிரி... சிலருக்கு அன்பா நடக்கத் தெரியும், சிலருக்கு முரட்டுத்தனமாக நடக்கத் தெரியும்... அவர்களது அன்பை கூட முரட்டுத்தனமாகத் தான் காட்டுவார்கள்... இது இயற்கை... இதுக்காக நீ அழ கூடாது... என்ன புரிஞ்சதா நிலா...?"

அவன் விலைக்கு வாங்கிய மருத்துவரிடம் என்ன கூறுவது என்று தெரியாது அவள் மேசை மீதிருந்த 'ஸ்டெதஸ்கோப்'பை வெறித்துப் பார்த்து கொண்டிருந்தாள்... அவளது லட்சியம் பணத்தின் பின்னே அலட்சியமாய்... அவளுக்கு மனம் வலித்தது...

"போம்மா... இனியாவது புத்தியோடு பிழைச்சுக்கோ..." படித்த அறிவீலி கூறிய அறிவுரையை மனம் மரத்த நிலையில் காதில் வாங்கிக் கொண்டவள் இயந்திர பொம்மை போல் அந்த அறையை விட்டு வெளியில் வந்தாள்...

நிஷிலாவை பார்த்ததும் நாற்காலியில் அமர்ந்திருந்த சிம்மவிஷ்ணு எழுந்து நின்று அவளது கையைப் பிடித்தபடி, "வா, போகலாம்..." என்று கூற...

"நான் எங்கேயும் ஓடி விட மாட்டேன்..." என்று அவள் சிறு எரிச்சலுடன் அவனது கையை உதற முயன்றாள்... எங்கே அவன் தான் அவளது கையை இறுக்கமாய்ப் பிடித்திருந்தானே...

"இது நம்பும்படி இல்லையே..." என்று அவளைச் சந்தேகப் பார்வை பார்த்தவன் கைப்பிடியாய் அவளை அழைத்துக் கொண்டு நடந்தான்... பலியாடு போல் அவளும் அவனுடன் கொடுமையே என்று தன் விதியை நொந்தபடி நடந்தாள்...

காரை ஓட்டி கொண்டு வந்த சிம்மவிஷ்ணுவை அவள் திரும்பி பார்க்காது வெளியில் தெரிந்த இருளை வெறித்துக் கொண்டு வந்தாள்...

"என்னைப் பத்தி டாக்டர் கிட்ட நீ ஏதோ சொன்ன மாதிரியிருக்கே...?" என்று அவனே ஆரம்பித்து வைத்தான்...

அதற்கு அவள் மௌனம் காத்தாள்...

"நான் கெட்டவன், முரட்டுத்தனமா நடந்துக்கிறேன் அப்படி இப்படின்னு..."

"இது ஒண்ணும் பொய் இல்லையே... உண்மை தானே..." என்றாள் அவள் வெடுக்கென்று...

"முரட்டுத்தனம் என்றால் என்னவென்று இன்று நான் உனக்குக் காட்டுகிறேன்... அப்போது புரியும் எது உண்மை? எது பொய்? என்று..." அவன் அழுத்தி கூறிய விதத்தில் அவளது முதுகுத்தண்டுவடம் சில்லிட்டது...

இப்போது இருக்கும் நிலையே அவளுக்கு மிகவும் கொடுமையாக இருக்கிறது... இதில் வேறு அதிகக் கொடுமைகளா...? அவள் அச்சத்துடன் அவனைப் பார்த்தாள்... அவனோ அவளைக் கவனிக்காது சாலையில் கவனம் பதித்திருந்தான்...

"என்னை என் வீட்டில் கொண்டு விட்டிருங்க..." என்று அழுது கொண்டே கூறியவளை கண்டு அவன் திரும்பி பார்த்தான்...

"நிச்சயம் ஒரு நாள் நானே உன்னைக் கொண்டு போய் உன் வீட்டில் விட்டு விட்டு வருவேன்... கவலைப்படாதே... உன்னைக் காலம் முழுவதும் வைத்து வாழ வேண்டும் என்கிற எந்த அவசியமும் எனக்கு இல்லை... இப்போது நீ எனக்குத் தேவையில்லாத ஒரு சுமை தான்... மனசுக்கு பிடிக்காத சுமையைத் தூக்கி சுமக்கவும் எரிச்சலாகத் தான் இருக்கிறது..." என்றான் அவன் கோபமும், எரிச்சலுமாய்...

தன்னை ராணியாய் வைத்து தாங்கும் வீட்டினர் எல்லோரும் அவளது ஞாபகத்தில் வந்தனர்... வேண்டாத இவனிடத்தில் அவள் மாட்டி கொண்டு சின்னாபின்னமாகி கொண்டிருக்கிறாள்...

"உங்களுக்கும் என்னைப் பிடிக்கலை... எனக்கும் உங்களைப் பிடிக்கலை... பிறகு எதுக்கு இப்படியொரு வாழ்க்கை...?" கலங்கிய குரலில் கேட்டவளின் குரல் அவனைச் சிறிதும் அசைக்கவில்லை...

"செய்த பாவத்திற்குத் தண்டனை கொடுக்க வேண்டாமா...?" என்று அவன் கர்ஜித்தான்...

அதில் அவள் அச்சத்துடன் கதவோரமாய் ஒடுங்கியவள், "நான் உங்களுக்கு எந்தப் பாவமும் பண்ணலையே...?" என்று அவள் பரிதாபமாய்க் கேட்டதும் அவன் காரிலிருந்த விளக்கை போட்டு அவளது முகத்தைக் கூர்ந்து பார்த்தவன்,

"நீன்னு நானும் சொல்லவே இல்லையே..." என்றான் அழுத்தம் திருத்தமாய்...

"பிறகு ஏன் என்னை இப்படி...?" என்று மேலே சொல்ல முடியாது அவள் முகத்தை மூடி கொண்டு அழ ஆரம்பித்தாள்... அவளது அழுகையை வெறித்துப் பார்த்தவன் பின்பு விளக்கை அணைத்து விட்டுச் சாலையில் கவனத்தைப் பதித்தான்...

"எனது நோக்கம் நீ இல்லை... உன் வீட்டினர்... உன்னை வலிக்கச் செய்வதன் மூலம் உன் வீட்டினரை வலிக்கச் செய்ய வேண்டும்... ஏன்னா நீ தானே அவங்களோட செல்ல மகாராணி... அதனால் தான்..." என்று கேலியாய் அவன் சிரித்தான்...

"எங்க வீட்டினர் உங்களை என்ன செய்தாங்க...?" அவளது வீட்டினரை பற்றி அவன் கூறியதும் அவளுக்குக் கோபம் பொத்து கொண்டு வந்தது...

"பாருடா, உன் வீட்டினரை சொன்னதும் பிள்ளைப்பூச்சி உனக்குக் கூடத் தைரியம் வருது..."

"நல்லவர்கள் மீது வீண் பழி போடும் போது யாராக இருந்தாலும் கோபம் வர தான் செய்யும்... அதிலும் ராவணன் நீங்க இதைச் சொல்வது கொஞ்சமும் சரியில்லை..."

"நான் ராவணனா...?" என்று வாய்விட்டு சிரித்தவன்,

"அப்போ உன் பவன் அத்தான் ராமனா...?"

"ஆமாம், அவர் ராமன் தான்... என்னைத் தவிர வேறு யாரையும் நேசிக்க மாட்டார்..." என்றாள் அவள் பெருமையாக...

அதைக் கேட்டு அவன் சகிக்க முடியாதவனாய், "நானும் ராமன் தான்டி... உன்னைத் தவிர வேறு எவளையும் தொட்டதில்லை... இனியும் தொட போவதில்லை... உன்னைக் கூட நான் பார்வையால் கூடச் சீண்டியிருக்க மாட்டேன் தான்... ஆனால் என்ன செய்வது விதி பலனை அனுபவித்துத் தானே ஆகவேண்டும்... இதற்கு நீயும், நானும் விதிவிலக்கல்ல..."

அவனது வார்த்தைகளைப் புறம் தள்ளியவள், "என் வீட்டினர் உங்களை அப்படி என்ன செய்தார்கள்...?" என்று விடாப்பிடியாய் அவள் கேட்டாள்...

"உன்னைப் பயந்த சுபாவம் கொண்ட பெண் என்று நினைத்தேன்... ஆனால் தைரியமாகக் கேள்வி எல்லாம் கேட்கிறாய்..." என்று வியந்தவன்,

"அவர்கள் என்னைக் கொலை செய்தார்கள் போதுமா...?" என்று அவன் ஆத்திரத்துடன் கத்தினான்...

"அப்போ, நீங்க... நீங்க... பேயா...?" அவளது தொண்டை பயத்தில் உலர்ந்து போனது...

"எதைச் சொன்னாலும் நம்பி விடுவாயா...?" என்று இடது கையால் அவளது கன்னத்தைத் தட்டி சிரித்தான் அவன்...

அவளோ அருவருப்புடன் தனது கன்னத்தைத் துடைத்து கொண்டாள்... அதைக் கண்டு அவனது உதடுகள் இகழ்ச்சியாய் வளைந்தது...

"உன் வீட்டினர் எனக்குச் செய்தது துரோகம்... அந்தத் துரோகத்தை இந்த ஜென்மம் மட்டுமல்ல இனிவரும் ஜென்மங்களிலும் நான் மறக்க மாட்டேன்... எந்தக் காரணத்துக்காக எனக்கு இந்தத் துரோகத்தைச் செய்தார்களோ அந்தத் துரோகத்தை அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப் போகிறேன்... அப்போது அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்று நான் பார்க்கிறேன்...? முள்ளை முள்ளால் தான் எடுக்க வேண்டும்... அது போல்

தான் துரோகத்தைத் துரோகத்தால் தான் எடுக்க வேண்டும்..."

அவன் கோபமாய் உறுமியதில் அவள் வாயை மூடி கொண்டு அமைதியாக அமர்ந்துவிட்டாள்... எந்த இடத்தில் தனது வீட்டினர் தவறு செய்தனர் என்று அவளுக்குத் தெரியவில்லை... அவளுக்குத் தெரிந்து அவளது வீட்டினர் நல்லவர்களே... அத்தை மட்டும் கொஞ்சம் கடுமையாக இருப்பது போல் தெரிந்தாலும் அவரும் நல்லவரே... தொழிலில் இருப்பதால் அவர் சற்று கடுமையுடன் நடந்து கொள்கிறார் அவ்வளவே... விடை தெரியாது அவளுக்குத் தலையைப் பிய்த்துக் கொள்ளலாம் போலிருந்தது...

வீட்டிற்கு வந்து அறைக்குள் நுழையும் வரை அவள் அதே யோசனையில் தான் ஆழ்ந்திருந்தாள்... அறைக்குள் நுழைந்ததும் தன்னைக் கைகளால் சிறையெடுத்த சிம்மவிஷ்ணுவின் அணைப்பில் அவளது நினைவலைகள் அறுந்து விழுந்தது... உடனே அவள் அவனது அணைப்பில் இருந்து திமிற துவங்கினாள்... அவனோ அவளை விலக விடவில்லை...

"இங்கே பாருங்க, நாம வாழ்கிற வாழ்க்கைக்கு நமக்கு ஒரு குழந்தை அவசியம் தானா...? அது நமக்கு இடையில் மாட்டி கொண்டு சீரழியவா...?"

அவள் இரண்டாவது கூறிய வார்த்தைகளைப் புறம்தள்ளியவன் முதலில் கூறிய வார்த்தைகளை மட்டுமே கவனத்தில் கொண்டு,

"உனக்குத் தேவையோ இல்லையோ எனக்குக் குழந்தை அவசியம் தேவை..." என்றபடி அவளைத் தன்முன் திருப்பியவன் அவளைத் தலை முதல் கால் வரை அளவிடுவது போல் பார்த்து வைத்தான்...

அந்தக் கணம் அவனது மனக்கண்ணில் அவனது தம்பி மனைவி மலர்விழியின் வளைகாப்பு அலங்கார கோலம் வலம் வந்தது... அந்த இடத்தில் நிஷிலாவை நிறுத்தி வைத்து பார்த்தவன் மனம் மகிழ்ந்து தான் போனது...

அவனது மகிழ்ச்சியை 'மகிழ்ச்சி' என்கிற ஒற்றை வார்த்தைக்குள் அடக்கிவிட முடியாது... அவனது மகிழ்ச்சியின் எல்லையே வேறு... அவனது குழந்தை அந்த வீட்டின் பெண்ணவள் வயிற்றில்... அது ஒன்று தான் அவனுக்கு வேண்டியதாய் இருந்தது...

அந்த நேரம் அவன் அந்தப் பெண்ணவளின் மனம், வயது என்று எதையும் பொருட்படுத்தவில்லை... அது எதையும் அலசி ஆராயும் பக்குவ நிலையை அவன் கடந்திருந்தான்... அவனது வேதனையின் முன் அவனால் மற்றவர்களின் அதுவும் குறிப்பாக அந்த வீட்டு பெண்ணின் மனதின் வேதனையைப் புரிந்து கொள்ள முடியவில்லை... முக்கியமாகப் புரிந்து கொள்ளவும் அவன் விரும்பவில்லை... அவனுக்கு அது தேவையுமில்லை...

"உன்னோட வயிற்றில் இந்தச் சிம்மனுடைய வாரிசு நிச்சயம் தேவை..." என்றவன் அவளது புடவையை விலக்கி விட்டு அவளது வெற்று வயிற்றில் தனது கையை வைத்தான்...

சில்லென்று இருந்த அவளது மேனி அவனது வெம்மையான உள்ளங்கையைக் குளிர வைத்தது போல் அவனது மனதினையும் குளிர வைத்ததோ...! அடுத்த நொடி அவன் அவளைத் தனது கைகளில் அள்ளி கொண்டு படுக்கையை நோக்கி சென்றான்... இன்று தான் அவன் முதல் தடவையாக மது அருந்தாது பெண்ணவளை நாடினான்...

முதன்முறையாக அவளும் அவனை எதிர்க்காது உணர்வில்லாது ஒரு பார்வை பார்த்தாள்... அவள் என்ன திமிறிய போதும் அவன் அவளை விட்டு விடப் போவதில்லை... அதனால் அவள் தன்னை உணர்வில்லாத ஜட பொருளாய் மாற்றிக் கொண்டாள்... உணர்வு இருந்தால் தானே வலி எடுக்கும்... வலி எடுத்தால் தானே கண்ணீர் வரும்... கண்ணீர் வந்தால் தானே துக்கம் பொங்கும்...

'வேண்டாம், இது எதுவும் வேண்டாம்... இவனே எனக்கு வேண்டாதவன்... இவன் செய்யும் எந்தச் செயலும்

என்னைப் பாதிக்கப் போவதில்லை...' என்று அவள் தன் மனதினை இரும்பாய் இறுக்கி கொண்டாள்...

'அவனது குழந்தை உன் வயிற்றில் உதித்தால்...?' அவளது மனசாட்சி கேள்வி கேட்டது... அதில் அவளது உடலும், மனமும் சேர்ந்து அதிரத்தான் செய்தது... எல்லாம் நொடி நேரம் தான்...

'அது அவனது வாரிசு... அவன் தானே கேட்டான்... பெத்து அவனது கையில் கொடுத்துவிட்டு நான் எனது வீட்டுக்கு போய்விடுவேன்...'

'அப்போ அது உன் குழந்தை இல்லையா...? நீ அதனுடைய தாய்...'

'இல்லவே இல்லை... அது என் குழந்தை இல்லை... இந்த ராட்சசனுடையது... அதுவும் அவனைப் போல் ராட்சசனாகத் தான் இருக்கும்... அது எனக்கு வேண்டாம்... அருவருப்பில் தோன்றியது அருவருப்பானதே...' என்று அவள் தீர்மானமாய் முடிவெடுத்து விட்டாள்...

பெண்ணின் இயல்பான கூச்ச உணர்வுகளோடு தன்னை எதிர்கொண்டவளை கண்டு அவன் ஆச்சிரியம் அடைந்தான்... ஒருநாளும் அவள் தன் உணர்வுகளை இப்படி வெளிப்படுத்தியது கிடையாது... அது தான் அவனது ஆச்சிரியத்திற்குக் காரணம்... இறுதியாக அவளது மணிவயிற்றில் முத்தமிட்டு விலகியவன்,

"இந்தத் தடவையாவது சீக்கிரம் குழந்தை வர வேண்டும்..." என்றான் சந்தோசத்துடன்...

"என்னோட வேண்டுதலும் அது தான்..." என்றவளை வியப்புடன் பார்த்தவன்,

"இது என்ன புதுக்கதை...? இதை நான் நம்பணுமா...?" என்று வில்லன் பார்வை பார்த்தவனைக் கண்டு,

"எனது விடுதலைக்கான நாளை நான் எண்ணி கொண்டிருக்கிறேன்... அதற்காக..." என்றாள் அவள்

அசராது...

அவள் சொன்னதற்கு அவனது பதில் மர்ம புன்னகை மட்டுமே...

"உயிரை தான் விட முடியவில்லை... இந்த விடுதலையாவது கிடைத்தால் நான் ரொம்பச் சந்தோசப்படுவேன்..."

"ஓ, உன் பவன் அத்தானை பார்க்கிறதுக்கு அத்தனை ஆர்வமா பேபி..."

"ஆமாம்..." என்றாள் அவளும் வேகமாக...

"அவனைப் பார்த்து... தென்...?" என்று கேட்டபடி அவன் சிகரெட் லைட்டரால் சிகரெட்டை பற்ற வைத்தான்...

அவனது குரலிலா இல்லை லைட்டரின் சத்தத்திலா ஏதோ ஒன்றில் அவள் அச்சம் இழையோடிய விழிகளோடு அவனைப் பார்த்தாள்...

"ம், மேலே சொல்... பார்த்து...?" என்று அவன் நக்கலாய் கேட்டான்... அதற்கு அமைதி காத்தவளின் முகத்தருகே தனது முகத்தைக் கொண்டு சென்றவன் அவளது விழிகளை உற்று நோக்கியபடி,

"அவனைக் கல்யாணம் பண்ணிக்கப் போறியா...?" அவ்வளவு இகழ்ச்சியாய் வந்து விழுந்தது அவனது வார்த்தைகள்...

"ஏன் பண்ணினால் தான் என்ன...? இதையே நினைத்துக் கொண்டு என் வாழ்க்கையை நான் ஏன் பாழாக்கிக்க வேண்டும்...? என் அத்தானும் ஒரு போதும் அதை விரும்ப மாட்டார்..." அவள் வெடுக்கென்று கூறியதை கேட்டு அவன் வாய்விட்டுச் சிரித்தான்...

"பேபி, பேபி... இன்னும் நீ சின்னப்புள்ளையாவே யோசிக்கிறியே..." என்று அவளது கன்னம் தட்டிவிட்டு விலகியவன் கட்டிலில் நன்றாகச் சாய்ந்து அமர்ந்து கொண்டு அவளையே பார்த்தான்...

அவனது பார்வைக்கான அர்த்தம் அவளுக்குப் புரியவில்லை... புரியவும் வேண்டாம்... 'இந்த வில்லனை புரிந்து கொண்டு எனக்கு என்னவாகப் போகிறதாம்...?' என்று மனதிற்குள் முனங்கியவள் படுக்கையில் திரும்பி படுத்து விழிகளை மூடி கொண்டாள்...

ஐந்து நிமிடம் கழித்து அவளைப் பின்புறமாய் இருந்து அணைத்தவன், "நீ சொன்ன முரட்டுத்தனம் என்றால் என்னவென்று நான் காட்டவா...?" என்று அவளது காதருகில் கேட்க...

அவள் அச்சத்துடன் அவனைத் திரும்பி பார்த்தாள்... அவளது அச்சம் அவனுக்குச் சிரிப்பை வரவழைத்ததோ...! அவன் சிரித்தபடி அவளைத் தன்புறம் திருப்பி அணைத்து கொண்டவன்,

"பேபி, பேபி..." என்று கூறியவன் மீண்டும் அவளிடம் தனது தேடலை தொடர்ந்தான்... ஆனால் அவன் கூறியபடி வன்மையாக அல்ல... எப்போதும் போல் மென்மையாக...!

பாவையவள் எப்போதும் போல் மனதிற்குள் அச்சத்துடன் இறுகி போனாள்...!!!

அன்றிரவு முழுவதும் அவளுடன் இருந்த சிம்மவிஷ்ணு காலையில் தான் வீட்டிற்குக் கிளம்பி சென்றான்... சென்றதும் அவனது அன்னை மீனாட்சி அவனைப் பிடித்துக் கொண்டார்...

"இந்தப் பத்து நாளா நீ வீட்டில் தங்குறதே இல்லை விஷ்ணு..."

"ம்மா, என் வேலையைப் பத்தி தான் உங்களுக்குத் தெரியுமே..." என்றான் அவன் அவரது கன்னத்தைப் பிடித்துக் கொஞ்சியபடி...

"இருக்கிற தொழில் போதாதுன்னு இப்போ எதுக்கு ஃப்ளைட்டுக்கு டயர் தயாரிக்கிற கம்பெனி ஆரம்பிக்கப் போகிற...? இது எதுவும் வேண்டாம் விஷ்ணு... சீக்கிரம் கல்யாணம் பண்ணி மனைவி, குழந்தைன்னு ஒரு

நிம்மதியான வாழ்க்கையை வாழ பாரு..." அன்போடு எடுத்து கூறிய அன்னையின் விழிகளைச் சந்திக்க முடியாது வேறு பக்கம் பார்த்தவன்,

"நிம்மதி...? அதுக்கும் எனக்கும் ரொம்பத் தூரம்மா..." என்றான் அவன் விரக்தியுடன்...

செல்வாக்கு மிகுந்த குடும்பத்தின் இளவரசன் அவன்... அவனுக்கு நிம்மதியில்லை என்றால்...?

"விஷ்ணு..." என்று அவனது அன்னை கவலையுடன் அவனை அழைத்தபடி அவனது முகத்தைத் தன்பக்கம் திருப்பினார்... தாயின் கவலை அவனை வருத்தியதோ என்னவோ முகத்தில் வரவழைத்த புன்னகையுடன் அவரைப் பார்த்தவன்,

"இது புலி வால் பிடித்தது போல்ம்மா... அதனால் நிம்மதி என்பது மிகவும் குறைவு தான்... தொழிலில் இறங்கிவிட்டால் என்றால் வெற்றி மட்டுமே எனது இலக்கு... மற்றது எதுவும் என் கவனத்தைச் சிதறடிக்காது... இந்த வெற்றியை தக்க வைக்க நான் ஓடித்தான் ஆகவேண்டும்..."

"என்னவோப்பா... அத்தோடு உன் வாழ்க்கையை நீ பார்த்துக் கொண்டால் நல்லாயிருக்கும்..." என்றவரை நோக்கி,

"ம்மா, நான் உங்க கிட்ட ஒண்ணு கேட்பேன்... உண்மையான பதில் வேண்டும்..."

"கேளு விஷ்ணு..."

"நம்ம அந்தஸ்துக்குக் குறைவான ஒரு பொண்ணை அதாவது ஏழையாக இருந்தால் கூட நான் காதலித்துக் கல்யாணம் பண்ணிக்கிட்டால் நீங்க அதை ஏத்துப்பீங்களா...? இல்லை வெறுப்பீங்களா...?"

"இது என்ன கேள்வி விஷ்ணு...? அவள் யாராக இருந்தால் என்ன...? உனக்குப் பிடிச்சிருந்தால் மட்டும் போதும்... அவள் தான் இந்த வீட்டு மருமகள்..." என்றவர்,

"என் மருமகள் எங்கே இருக்கிறாள்...?" என்று ஆர்வத்துடன் மகனிடம் கேட்டார்...

"ஹா ஹா... ம்மா, இனிமேல் தான் அவள் பிறப்பெடுத்து வர வேண்டும்... ஒருவேளை அப்படிப்பட்ட சாதாரணமான பெண்ணை எனக்குப் பிடித்திருந்தால்...? அதான் உங்க கிட்ட சந்தேகம் கேட்டேன்..."

"உனக்கு அந்தச் சந்தேகமே வேண்டாம்... நீ அவளைக் கல்யாணம் பண்ணி கூட்டிட்டு வந்தால் போதும்... ஆரத்தி கரைத்து வரவேற்க நான் தயார்..."

"இது தான் என்னோட அன்பு அம்மா..." என்று கூறியபடி அவன் அவரை அணைத்துக் கொண்டு அவரது கன்னத்தில் முத்தமிட்டான்...

"விஷ்ணு, சீக்கிரம் கிளம்பி வாப்பா... உன் பிறந்தநாளுக்காக நூறு பேருக்கு இலவச கல்யாணம் பண்றதா இருந்தோமே... அது இன்னைக்குத் தான்..."

அவனுக்குமே இப்போது தான் அது ஞாபகத்தில் வந்தது...

"இதோம்மா, பத்து நிமிசத்தில்..." என்று அவன் தனது அறையை நோக்கி சென்றான்...

சொன்னது போல் பத்து நிமிடங்களில் பட்டு வேட்டி, சட்டையில் மணமகன் போல் தயாராகி வந்தவனின் அழகினை கண்டு அந்தத் தாயுள்ளம் பெருமை கொண்டது...

மூவரும் அவர்களது திருமண மண்டபத்திற்குக் கிளம்பி சென்றனர்... அங்கு இவர்களுக்கு முன்னதாக மணமக்கள் எல்லோரும் காத்திருந்தனர்... ஒவ்வொரு ஜோடிக்கும் சிம்மவிஷ்ணு தனது கைகளால் தாலி எடுத்துக் கொடுத்தான்... அங்கிருந்தவர்களில் கொஞ்சம் பேர் ஏதோ ஒரு விதத்தில் முதல் மணவாழ்க்கை பாதிக்கப்பட்டவர்களே... அப்படிப்பட்டவர்களுக்கு அவன் முன்னுரிமை கொடுத்திருந்தான்... அதுவும் முக்கியமாக

ஆண்களுக்கு... பெண்கள் ஒரு சிலர் மட்டுமே அப்படிப் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தனர்...

திருமணங்கள் முடிந்ததும் சிம்மவிஷ்ணு பெற்றோரை தனிக் காரில் வீட்டிற்கு அனுப்பிவிட்டு அவன் தனது காரிலேறி கிளம்பி சென்றான்... மதுரையில் இருந்து திருநெல்வேலி செல்லும் புறவழிச்சாலையில் அவனது கார் பறந்தது... காரை விட அவனது மனம் அவன் செல்ல நினைத்த இடத்திற்கு வேகமாய்ப் பறந்து சென்றது... அதைப் பற்றி நினைத்ததும் அவனது மனதில் சொல்லொண்ணா வேதனை வந்து சூழ்ந்து கொண்டது...

அன்று மாலை சிம்மவிஷ்ணு நாகர்கோவிலுக்கு அருகில் இருந்த அந்த ஊருக்கு வந்து சேர்ந்துவிட்டான்... சாலையோரமாய்க் காரை நிறுத்திவிட்டு முக்கியச் சாலையில் இருந்து பிரிந்து சென்ற ஒற்றையடி பாதையில் இறங்கி அவன் விறுவிறுவென நடக்கத் துவங்கினான்... அவன் கட்டியிருந்த பட்டு வேட்டி அவனது வேக நடைக்கு இடைஞ்சலாக இருக்க அதை அவன் மடித்துக் கட்டி கொண்டு வேகமாய் நடந்தான்... சிறிது தூரம் சென்றதும் ஒரு மண்மேடு தெரிந்தது... அதைக் காண காண அவனது உள்ளத்தில் உயிர் போகும் வலி தோன்றியது...

அதன் அருகே வேகமாய் வந்தவன் அடுத்த நொடி கதறியபடி அந்த மண்மேட்டின் மீது சரிந்து விழுந்தான்... தனது அந்தஸ்து, மதிப்பு, மரியாதை, பணம், படிப்பு, பதவி எல்லாவற்றையும் மறந்து அவன் சிறுபிள்ளை போன்று கண்ணீர் வடித்தான்... அவனது மனவலிக்கு இப்போதைக்குக் கண்ணீர் மட்டுமே துணை...

அந்நேரம் வானம் கறுத்து மழைத்துளிகளைச் சாரலாய் அள்ளி தெளித்தது... அதில் சிம்மவிஷ்ணு உணர்வு பெற்று அண்ணாந்து வானத்தைப் பார்த்தான்... சடசடவென்று மழைத்துளிகள் கனமாய் அவனது முகத்தின் மீது அடுத்தடுத்து விழுந்து அவனை முழுவதுமாய் நனைத்தது... அதில் அவனது கண்களின் கண்ணீர் கரைந்து காணாமல் போனது...

மழைமேகம் அவனது துயர் கண்டு ஆறுதல் அளித்ததோ...!
இல்லை அவனது வேதனை கண்டு கண்ணீர் வடித்ததோ...!

"சரி எது? தவறு எது? சிந்திப்பவன் மனிதன்...
ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் மிருகம் ஒன்று உண்டு...
அவனுள் உறங்கும் மிருகம் விழித்து நாளானது...
தவறுகள் சரியாகி போனது துரோகத்தில்...
தவறும் துரோகமும் நேர்கொள்ளும் போது,
பெண்ணவள் கற்புநெறி எங்ஙனம் நேர் கொள்ளப்படும்...
அவனது உயிரில், அவனது தண்டனையில்,
அவனது தனிமையில், அவனது பிராயச்சித்தத்தில்,
எதில் அவளது விழிநீர் துடைக்கப்படும்...???"

கொல்லும்...!!!

## நிழல் : 4

சிம்மவிஷ்ணு அப்படியே அந்த மண்மேட்டின் மீது சரிந்து அமர்ந்தான்... வானம் இரண்டாகப் பிளந்தது போல் மழை அருவியாகப் பொழிந்த போதும் அவன் சிறிதும் அந்த இடத்தை விட்டு அகலவில்லை... அவனது மனவலி எதையும் உணர செய்யவில்லை... நேர்கொண்ட வெறித்த பார்வையுடன் அவன் அமர்ந்திருந்தான்... அவனது விழிகளில் இருந்து வழிந்த கண்ணீரும் நிற்கவில்லை...

'எனக்கு மட்டும் ஏன் இத்தகைய துரோகம் இழைக்கப்பட்டது...? நான் என்ன தவறு செய்தேன்...? மிகவும் வலிக்கிறதே...' என்று அடிப்பட்ட சிறுவனாய் அவன் மனதிற்குள் ஓவென்று கதறினான்...

எல்லோரையும் தனது பார்வையால் மிரட்டும் தொழிலதிபர் சிம்மவிஷ்ணு இல்லை இவன்... தனக்கு இழைத்த துரோகத்தால் அச்சத்தில் மிரண்டு விழிக்கும் அப்பாவி சிறுவன் சிம்மவிஷ்ணு இவன்...

உறவுகள் பொய்த்து போகக்கூடுமோ...? அன்பு பொய்த்து போகக்கூடுமோ...? பந்தம், பாசம் என்பது எல்லாம் பொய் தானா...? வெறும் வெளிவேசம் தானா...? அவனது மனம் ஆவேசமாய்க் குமுறியது...

"நான் என்ன தீண்டத்தகாதவனா...? மனிதனாய் பிறப்பெடுத்ததைத் தவிர நான் என்ன பாவம் செய்தேன்...? கடவுளே, கேவலம் இந்த மனிதனாய் என்னை ஏன் பிறப்பெடுக்கச் செய்தாய்...? அதற்கு நான் மிருகமாய்ப் பிறந்து நல்ல குணங்களுடன் வாழ்ந்திருப்பேனே... சுயநல பிண்டமான இந்த மனிதர்களுக்கு இடையில் என்னை ஏன் பிறப்பெடுக்கச் செய்தாய்...?" ஆங்காரமும், ஆத்திரமும் ஒருசேர அவன் பெருங்குரல் எடுத்துக் கத்தியது மழையின் பெருத்த ஓசையில் அப்படியே அடங்கிப் போனது...

எவ்வளவு நேரம் அப்படியே அமர்ந்திருந்தானோ அவனுக்குத் தெரியாது... திடுமென அவனது தலையில்

சுளீரென்று ஒரு வலி தோன்றி அவனை உயிரோடு துடிக்கச் செய்தது...

"ம்மா..." என்று அவன் தலையைப் பிடித்துக் கொண்டு அப்படியே முடங்கிப் போனான்... கொஞ்ச நாட்களாக அவனுக்கு இந்தத் தலைவலி இருந்து கொண்டே இருக்கிறது...

சிறிது நேரத்தில் தலைவலி நின்றதும் அவன் அங்கிருந்து எழுந்தான்... மீண்டும் அந்த மண்மேட்டினை திரும்பி பார்த்தவன் பின்பு விறுவிறுவென அங்கிருந்து கிளம்பி வந்துவிட்டான்... இவ்வளவு தான் அந்த ஊருக்கும் அவனுக்குமான சம்பந்தம்...

மீண்டும் அவன் மதுரை வந்து சேரும் போது பின்னிரவு ஆகியிருந்தது... அந்த நேரத்திலும் அவனுக்காக உறங்காது காத்திருந்தனர் அவனது பெற்றோர்... அவன் வந்து நின்ற கோலத்தைக் கண்டு அவர்கள் பதறி போய் அவனருகே ஓடி வந்தனர்...

"விஷ்ணு, என்னாச்சுப்பா...? டிரெஸ் எல்லாம் ஒரே சேறாயிருக்கு..." என்று இருவரும் ஒருமித்த குரலில் கேட்டனர்...

குனிந்து தனது உடையைப் பார்த்தவன், "ஒரு சின்ன ஆக்சிடெண்ட்..." என்றான் சமாளிப்பாய்...

"உனக்கு ஒண்ணும் ஆகலையே..." பதட்டத்துடன் கேட்டவர்களைக் கண்டு புன்னகைத்தபடி,

"ஒண்ணுமாகலை..." என்றவன்,

"நீங்க போய்ப் படுங்க... ஏதுவாக இருந்தாலும் காலையில் பேசிக்கலாம்..." என்று கூறியபடி அவன் தனது அறையை நோக்கி நடந்தான்...

அதற்கு மேல் அவர்களும் அவனிடம் எதுவும் கேட்க விரும்பவில்லை... தங்களது அறைக்குச் சென்றனர்...

குளித்து முடித்துவிட்டு வந்து கட்டிலில் படுத்த சிம்மவிஷ்ணுவுக்கு உறக்கம் தான் அவ்வளவு எளிதில் வருவதாக இல்லை... முணுமுணுவென்று வலித்த மனதின் வலியை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை... அந்த நேரத்தில் நிஷிலாவை தேடி செல்லலாமா என்று கூட அவன் நினைத்தான்... ஆனால் இந்த நேரத்தில் வெளியில் கிளம்பி சென்றால் பெற்றோருக்குப் பதில் கூற வேண்டி வரும் என்று அவன் அமைதி காத்தான்...

அதை விட அவனுக்கு இருக்கும் மனவேதனையில் அவளை அதிகம் காயப்படுத்திவிட வாய்ப்பு இருப்பதாலும் அவன் அமைதி காத்தான்... அந்தக் கணம் அவனுக்கு ஒன்று மட்டும் புரிந்தது... அவனது மனதில் பற்றியெரியும் வெம்மையைப் பெண்ணவளால் மட்டுமே குளிர வைக்க முடியும் என்று... அதனால் தானோ அவன் அவளை அதிகம் நாடுகின்றானோ...!

"நீ இந்தச் சிம்மவிஷ்ணு குழந்தையை மட்டும் பெத்து கொடுத்திரு... அது போதும் எனக்கு... அதுக்குப் பிறகு உனக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை..." நிஷிலா தன்முன் இருப்பது போல் அவன் வாய்விட்டு சொல்லி கொண்டான்...

அவனுக்கும் அவளுக்குமான உறவு அவளது மணிவயிற்றில் உயிராய் மலர்ந்து அவன் எதிரில் வளர்ந்து நிற்கும் போது அவன் என் செய்வானோ...!!!

அதே நேரம் நிஷிலாவும் அவன் எந்நேரம் வருவானோ என்று பயந்து பயந்து விழித்திருந்தாள்... அதிகாலை வரை அவன் வராததைக் கண்டு அவள் நிம்மதியுடன் மெல்ல கண்ணயர்ந்தாள்...

******************

அதிகாலை நேரம் வீட்டினுள் நுழைந்த பவித்ரனை கண்டு வீட்டினர் அனைவரும் ஒருவித எதிர்பார்ப்புடன் அவனைச் சூழ்ந்து கொண்டனர்... அவனோ எல்லோரையும் பார்த்து

ஏமாற்றத்துடன் தலையை மறுப்பாய் அசைத்தான்... அதைக் கண்டு எல்லோரின் முகமும் நம்பிக்கை ஒளியை இழந்தது...

"அது நம்ம நிஷா இல்லையா தீரா...?"

"இல்லை மாம்..." என்று கூறியபடி அவர் அருகில் அமர்ந்தவன் சோபாவில் நன்றாகச் சாய்ந்து சோர்வுடன் விழிகளை மூடி கொண்டான்...

அன்று நிஷிலாவை தேடி கொல்கத்தா சென்று பார்த்தது போல் இன்று பெங்களூர் சென்று பார்த்துவிட்டு அவன் தோல்வியுடன் திரும்பியிருக்கிறான்... அங்கே அவன் கண்ட காட்சி அவனைப் பெரிதும் நிலைக்குலைய செய்துவிட்டது... நிஷிலாவை விடச் சிறுபெண் ஒருத்தி சட்டவிரோதமான கும்பலிடம் மாட்டி கொண்டு கண்ணீர் விட்டு கொண்டிருந்தாள்... அந்தப் பெண் நிஷிலா இல்லை தான்... அவனுக்கு அவள் யாரோ ஒருத்தி தான்... ஆனாலும் அந்தச் சின்னப் பெண்ணவளை அநாதரவாய் அப்படியே விட்டு விட்டு வர அவனுக்கு மனம் வரவில்லை...

காவல்துறை உதவியை நாடி அவளை மீட்டெடுத்து ஒரு ஆசிரமத்தில் சேர்த்து விட்டே அவன் அங்கிருந்து கிளம்பி வந்தான்...

இப்போதும் அந்தப் பெண் கூறிய வார்த்தைகள் அவனது காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது... அந்தச் சிறுமியை ஒரு வாடிக்கையாளர் போல் தான் அவனால் அணுக முடிந்தது... தான் தங்கியிருந்த நட்சத்திர விடுதிக்கு அவளை வரவழைத்து தான் அவன் அவளைப் பார்க்க முடிந்தது... அதற்கு அவனது பணபுலம் பெரிதும் உதவியது...

தன்னைத் தேடி வந்த அந்தப் பதினாறு வயது சிறுமியை கண்டு அவன் அதிர்ச்சியில் எழுந்து நின்றுவிட்டான்... அதை விட அவள் அவனிடம் பேசிய வார்த்தைகள் இரும்பாய் இளகாது இருக்கும் அவனது கல்மனதினையும் இளக்கி கரைத்து விட்டது...

"அண்ணா, என்னை என்ன வேணும்ன்னாலும் பண்ணிக்கோங்க... ஆனா வலிக்க மட்டும் செஞ்சிராதீங்க... ஏற்கெனவே உடம்பெல்லாம் சிகரெட் சூடு போட்ட புண்கள் இருக்கு... அது எல்லாம் ரொம்ப வலிக்குது அண்ணா..." என்று கண்ணீர் மல்க இருகை கூப்பியபடி இறைஞ்சி கேட்டவளை கண்டு அவனது விழிகள் இரண்டும் கலங்காது இருந்தால் தான் ஆச்சிரியம்...

அவள் அவனை அழைத்தது 'அண்ணா' என்று... ஆனால் இன்று சகோதர பாசத்தைக் குறிக்கும் இந்த வார்த்தைக்கு அர்த்தம் தான் இருக்கிறதா என்ன...? இல்லை என்றே அவனுக்குத் தோன்றியது... 'அப்பா', 'அண்ணா', 'தாத்தா', 'மாமா', 'சித்தப்பா', பெரியப்பா', 'மகன்', 'காதலன்', 'நண்பன்', 'பேரன்' என்று ஆண் உறவை குறிக்கும் அத்தனை வார்த்தைகளும் வெறும் வார்த்தைகளாகவே உயிரற்றுப் போய்விட்டது... அந்த வார்த்தைகள் கூட ஆணாதிக்க வார்த்தைகளாகப் பெண்களை வன்கொடுமை செய்யும் வார்த்தைகளாக மாறிப் போனது தான் கலியுகத்தில் நாம் கண்ட சாதனை... அவனுக்கு மிகவும் வேதனையாக இருந்தது...

"என்னை உன் அண்ணனாக நினைப்பதாக இருந்தால் என்னைக் கண்டு பயப்படாதே..." என்று அவன் ஆறுதல் கூற... அதற்கும் அந்தப் பெண் பயந்து போய்ச் சுவரோடு ஒன்றி கொண்டாள்...

"என்னைக் காப்பாத்துறதா சொல்லி, சொல்லி இப்படி என்னைச் சீரழித்த அண்ணாக்கள் தான் அதிகம்..." என்று கண்ணீர் வடித்த சின்னவளை கண்டு அவனது இதயம் இரண்டாக வெடித்தது போல் வலித்தது...

அடுத்த நொடி அவன் தனது நண்பர்கள் மூலம் காவல்துறை அதிகாரியை தொடர்பு கொண்டு அந்தச் சின்னவளை காப்பாற்றி விட்டான்... அவனால் முடிந்தது ஒரு சிறிய பெண்ணைக் காப்பாற்றியது மட்டுமே... இவளை போன்று எத்தனை பேரோ இந்த வையகத்தில்...!

அந்தக் கணம் தான் அவனுக்கு அந்த நினைவு தோன்றி அவனது உயிர் வரை சென்று வலித்தது... அவனது நிஷிலாவும் அதில் ஒருத்தியாக இருந்தால்...? தான் ஒரு ஆண் என்பதை மறந்தவனாய் அவனது தேகம் நடுநடுங்கி போனது...

"தீரா..." பெரிய மாமாவின் அழைப்பிற்கு விழி திறந்தவன்,

"நான் இருக்கும் வரை நீங்க கவலைப்படத் தேவையில்லை மாமா... எப்படியும் நம் நிஷியை நான் கண்டுபிடித்து விடுவேன்..." என்று அவர்களிடம் ஆறுதலாய் பேசி அவர்களை அறைக்கு அனுப்பி வைத்து விட்டு அவன் தனது பெற்றோருடன் அவர்களது அறைக்கு வந்தான்...

அங்கிருந்த சோபாவில் அமர்ந்த அன்னையின் மடியில் முகம் புதைத்து படுத்தவனின் முதுகு அழுகையில் குலுங்கியது... மகனது அழுகை கண்டு இளவரசி பதறிப் போனார்...

"தீரா, என்னதிது...? சின்னப் பிள்ளை மாதிரி...? எழுந்திரு..." அவர் சத்தம் போட்டு அவனை எழுந்து அமர செய்தார்...

"தீரா... என்ன பிரச்சினை...?" பத்ரிநாத் மகனிடம் கேட்டார்...

பெங்களூரில் நடந்ததை எல்லாம் ஒன்று விடாது கூறியவன், "பெண் பிள்ளைகள் காணாமல் போனால் அந்தப் பெற்றோருடைய மனசு எப்படிப் பாடுபடும்ன்னு இப்போ புரியுது டாட்... ஏன் பெண்ணைப் பெத்தவங்க எல்லாம் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கிட்டு இருக்காங்கன்னு இப்ப தான் தெரியுது... நம் நிஷியை நினைத்து எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு..." என்று கூறியவனின் விழிகள் கலங்கி போனது துயரத்தில்...

பெண்ணைப் பெற்றவர்களால் மட்டுமே இந்த வேதனையை உணர்ந்து கொள்ள முடியும்...

"அப்படி எல்லாம் ஒண்ணுமாகி இருக்காது தீரா..." இளவரசி மகனுக்கு ஆறுதல் கூறினார்...

"அப்படி ஏதாவது ஒண்ணு நடந்திருந்தாலும் என்னால் நிஷியை கைவிட முடியாது மாம்..." என்றான் அவன் தீர்மானமாக...

"நிச்சயம் தீரா... எது நடந்திருந்தாலும் நிஷி தான் என்னுடைய மருமகள்... இப்போ உனக்குச் சந்தோசம் தானே..."

"இல்லை மாம்... நிஷியை கண்ணில் பார்க்கும் வரை எனக்குச் சந்தோசம், நிம்மதி இல்லை..." என்றவன் தனது அறைக்குச் சென்றான்...

"பத்ரி..." மகனது வேதனை கண்டு இளவரசி விழி கலங்க கணவர் தோள் சாய்ந்தார்...

"வசி, நான் இருக்கும் வரை நீ எதற்கும் கவலைப்படக் கூடாது..." என்று அவர் மனைவிக்கு ஆறுதல் அளித்தார்...

தனது அறைக்கு வந்த பவித்ரன் அப்படியே கட்டிலில் விழுந்தான்... அவனது மனம் எல்லாம் ரணமாய்த் தன்னவளின் நினைவுகள்... மருத்துவப் படிப்பிற்காக 'நீட்' தேர்வு எழுதி நல்ல மதிப்பெண் பெற்றுப் பிடித்த கல்லூரியில் மருத்துவம் படிக்க இடம் கிடைத்த சந்தோசத்தில் இருந்த நிஷிலா இப்படித் திடுமெனக் காணாமல் போவாள் என்று அவன் கனவிலும் நினைத்து பார்க்கவில்லை... எப்படி நிகழ்ந்தது இந்த அசம்பாவிதம்...? அவனுக்கு அது தான் ஏனென்று தெரியவில்லை...?

"நிஷிம்மா, எங்கே இருக்க...? பத்திரமா இருக்கியா...?" பவித்ரன் மாமன்மகளிடம் மானசீகமாகக் கேட்டான்...

அவளது கேவலமான இழிநிலையை அந்தக் கணம் அவன் அறிந்திருக்கவில்லை... அறியும் போது பவித்ரன் ருத்ரன் அவதாரம் எடுப்பானோ...?

பவித்ரன் எவ்வளவு நேரம் அப்படியே படுத்திருந்தானோ தெரியாது...? அலைப்பேசி ஒலியில் தன்னுணர்வு அடைந்தவன் அதை உயிர்ப்பித்துப் பேசிவிட்டு மீண்டும்

அணைத்தவன் இன்று நடக்கவிருக்கும் தனது நண்பனின் திருமணத்திற்குக் கிளம்புவதற்காகத் தயாராகினான்...

அதே சென்னையில் பணக்காரர்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் இருந்த ஒரு வீட்டினுள் துளசி தனது தோழியின் திருமணத்திற்காகத் தயாராகிக் கொண்டிருந்தாள்... கருப்பு நிறத்தில் தங்க நிற கரையிட்ட அந்தப் பட்டுப்புடவை அவளது வெண்ணிற மேனியை பாந்தமாய்த் தழுவியிருந்தது... மிதமான அலங்காரம் செய்து கொண்டு அவள் மீண்டும் கண்ணாடியில் தன்னை ஒரு முறை சரி பார்த்து கொண்டாள்... அவள் தேவதை போன்று பேரழகு உடையவள் தான்... அதில் மாற்று கருத்து இல்லை தான்... ஆனால் அவனது கண்ணுக்கு மட்டும் அவள் பெண்ணாகத் தெரிய மாட்டேங்கிறாளே...

'அவனுக்குத் தான் அவனது மாமன் மகள் இருக்கிறாளே... பிறகு எப்படி நீ அவனது கண்ணுக்கு தெரிவாய்...?' அவளது மனசாட்சி அவளைக் கேலி செய்து சிரித்தது...

அது உண்மை என்பதால் அதை அப்படியே ஏற்றுக் கொண்டாள்... உண்மை கசக்கும் என்பதற்கு ஏற்ப அந்த உண்மை அவளுக்குக் கசக்கத்தான் செய்தது... பவித்ரனுக்கேற்ற துளசி என்று பெயரில் கூடத் தங்களுக்குப் பொருத்தம் இருப்பதை எண்ணி மகிழ்ந்து கொண்டிருந்தவளுக்கு அவன் நிஷிலாவை மணக்க போகிறான் என்பதைக் கேள்விப்பட்டு அவள் மனம் வாடி போனாள்... அவன் அவளுக்கு இல்லை என்ற போதும் அவளால் அவனை மறக்க முடியவில்லை... அவள் கனத்த மனதுடன் அறையை விட்டு வெளியில் வந்தாள்...

துளசி இருபத்தைந்து வயது அழகிய பெண்... தந்தையின் தொழிலை பார்த்து கொள்கிறாள்... தந்தை இப்போது உயிருடன் இல்லை... ஒரே ஒரு சகோதரன்... அவன் வெளிநாட்டில் உள்ள அவர்களது தொழிலை அங்கிருந்தபடி கவனித்து வருகிறான்... அவனது குடும்பமும் அங்குத் தான் இருக்கிறது...

"துளசி, சாப்பிட்டு போம்மா..." அவளது அன்னை ரஞ்சனி அவளை அன்போடு அழைத்தார்...

"இல்லைம்மா... பிரெண்ட்டோட கல்யாணம்ன்னு சொன்னேனே..."

"உன் பிரெண்ட்ஸ் எல்லோருக்கும் கல்யாணம் முடிஞ்சிருச்சு... நீ மட்டும் தான் இன்னமும் தனிமரமா இருக்க..."

"நான் மனசு வச்சா போதாதேம்மா..."

"வேறு யார் மனசு வைக்கணும்...?" மகள் கூறுவது அந்தத் தாய்க்கு புரியவில்லை...

"கடவுள் மனசு வைக்கணும்ல... அதைச் சொன்னேன்..." என்று கூறி அவள் சமாளித்தாள்...

"எத்தனை நல்ல நல்ல வரன் எல்லாம் வந்தது... எல்லாத்தையும் வேண்டாம், வேண்டாம்ன்னு நீ தான் மறுத்துட்ட..." அன்னை மகளைக் குறைப்பட்டுக் கொண்டார்...

"எனக்கு யாரையும் பிடிக்கலையே... நான் என்ன பண்ண...?" என்றவள்,

"இப்படியே பேசிட்டு இருந்தேன்னா என் பிரெண்டோட வளைகாப்புக்கு தான் நான் போய்ச் சேருவேன்..." என்று கிண்டலடித்தவள் தனது காரிலேறி பறந்தாள்...

திருமண மண்டபத்திற்குள் நுழையும் போதே துளசியை ஏதோ ஒருவித படபடப்பு வந்து தொற்றிக் கொண்டது... இந்தத் திருமணத்திற்குப் பவித்ரன் நிச்சயம் வருவான் என்று அவளுக்கு நன்கு தெரியும்... அதனால் அவள் அங்கு முதல் வரிசையில் அமர்ந்து கொண்டு சிறு பதட்டத்துடன் திருமண நிகழ்வை கவனிக்க ஆரம்பித்தாள்... சிறிது நேரத்தில் அவள் தன்னை மறந்தவளாய் அதில் மூழ்கி போனாள்...

"ஹாய் மிஸ். துளசி, பார்த்து ரொம்ப நாளாகிவிட்டது... எப்படி இருக்கீங்க...?" என்று கேட்டபடி அவள் அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தான் பவித்ரன்...

அவனது குரலில் அகமும், புறமும் பரவசமுற அவள் திரும்பி பார்த்தாள்...

"ஹாய் தீரன்..." அவன் தன்னிடத்தில் பேசியதை இன்னமும் அவளால் நம்ப முடியவில்லை...

அவன் அவளை எங்கேயாவது பார்த்தால் கூட ஒரு பார்வை பார்த்தபடி அப்படியே அகன்று சென்றுவிடுவான்... இன்று அவன் வலிய வந்து பேசியதும் அவள் சந்தோசத்தில் திக்குமுக்காடி போனாள்...

"அப்புறம் உங்க பிசினஸ் எல்லாம் எப்படிப் போகுது...?"

"அஸ்யூசுவல் கோயிங்..." என்றாள் புன்சிரிப்புடன்...

"சூப்பர்..." என்றவன் அவளிடம் மேலே ஏதேதோ பேசி கொண்டிருந்தான்... அவளும் ஆனந்தமாய் அவன் கேட்ட கேள்விக்குப் பதிலளித்துக் கொண்டிருந்தாள்...

துளசி பவித்ரனுக்குக் காதலாகப் பதிலளித்துக் கொண்டிருக்க... அவனோ அவளை ஆராய்ச்சியாய் பார்த்துக் கொண்டிருந்தான்... அவளது மனதில் அவன் இருப்பது இப்போது கொஞ்ச நாட்களாகத் தான் அவனுக்குத் தெரியும்... அதனால் தான் நிஷிலா காணாமல் போனதற்கும் இவளுக்கும் ஏதும் சம்பந்தம் இருக்குமோ? என்று அவன் சந்தேகம் கொண்டான்...

நிஷிலாவின் புகைப்படத்தை ஊடங்களில் விளம்பரம் செய்து அவளைத் தேடலாம் தான்... ஆனால் அவர்களது குடும்பக் கௌரவம் அதற்கு அனுமதிக்கவில்லை... அதனால் தான் அவளை ரகசியமாகத் தேடுகின்றனர்... இங்கு அவளைப் பற்றிக் கேட்பவர்களுக்கு எல்லாம் ஒரே மாதிரியாக 'அவள் ஓய்வுக்காக வெளிநாடு சென்றிருக்கிறாள்' என்று கூறி விசயத்தை மூடி மறைத்து வருகின்றனர்...

'நிஷிம்மா எங்கே இருந்தாலும் வந்துவிடு... ' அவனது மனம் வேதனையுடன் அரற்றியது...

"தீரன், ஆர் யூ ஆல்ரைட்...?" துளசி கவலையாக அவனது தோளை தொட... அதில் தன்னுணர்வு அடைந்தவன்,

"எஸ், ஐயம் ஆல்ரைட்..." என்றான் சமாளிப்பாக...

"போன மன்த்தே உங்க மேரேஜ் நடக்கிறதா இருந்ததே...? எப்போ உங்க மேரேஜ்...?" என்று கேட்டவளை அவன் கூர்ந்து பார்த்தான்...

அவளது முகம் சதாராணமாக இருந்த போதும் அவளது விழிகளில் தெரிந்த வேதனை அவனது பார்வையில் இருந்து தப்பவில்லை... அவள் தவறு செய்திருக்க வாய்ப்பில்லை என்றே அவன் நினைத்தான்...

"எஸ், கொஞ்ச நாள் தள்ளி போட்டிருக்கு... நிஷி இப்போ ஃபாரின் போயிருக்கிறாள்... வந்ததும் மேரேஜ் தான்..." என்று சாதாரணமாகக் கூறியவனைக் கண்டு அவளது முகம் களையிழந்து போனது...

"வாழ்த்துக்கள் தீரன்..." என்று அவனிடம் கூறியவள்,

"கிப்ட் கொடுத்துட்டு நான் கிளம்பறேன்..." என்று அவனிடம் விடைப்பெற...

"நானும் தான்..." என்று கூறியபடி அவனும் உடன் எழுந்தான்...

இருவரும் சேர்ந்து சென்று மணமக்களை வாழ்த்தி பரிசு பொருளை கொடுத்துவிட்டு இருவரும் சேர்ந்தே மேடையை விட்டு கீழிறங்கினர்... அவன் அவளிடம் விடைப்பெற்று செல்ல... அவளோ அவனைப் பார்த்தபடி கண்ணீர் மல்க நின்றிருந்தாள்...

********************

நிஷிலாவிற்குக் காலையில் எழும் போதே தலைச்சுற்றிக் கொண்டு மயக்கம் வருவது போலிருந்தது... தனக்கு

என்னவானதோ என்று அவள் படுக்கையில் இருந்து எழ கூடப் பயந்தாள்... திடுமென இப்படி உடம்பு படுத்தவும் அவள் மிகவும் பயந்து போனாள்...

"பாப்பா..." என்றபடி மருதாணி அங்கு வந்தாள்...

"இன்னும் எழுந்துக்கலையா...? சீக்கிரம் குளிச்சிட்டு வந்து பலகாரம் சாப்பிடு பாப்பா..." என்று அவள் அன்பொழுக கூற...

"எனக்கு எதுவும் வேண்டாம்... எனக்கு என்னமோ ஒரு மாதிரியா இருக்கு..."

"என்ன பாப்பா உடம்புக்கு முடியலையா...?" என்று மருதாணி அவளது நெற்றியை தொட்டு பார்த்தாள்... அவளது உடல் வெப்பம் சாதாரணமாக இருந்தது...

"என்ன செய்யுதுன்னு சொன்னா தானே ஏதாவது செய்ய முடியும் பாப்பா...?"

"எனக்குத் தலை சுத்துது... வாமிட் வர்ற மாதிரியிருக்கு..." என்று பதிலளித்த நிஷிலா தனது தலையைப் பிடித்தாள்...

"அடியாத்தி, இதை அப்பவே சொல்ல வேண்டியது தானே..." என்ற மருதாணி அவளது கையைப் பிடித்து நாடி பார்த்தாள்... அதன் இரட்டை துடிப்பை உணர்ந்தவளின் முகம் பூவாய் மலர்ந்து போனது...

"எல்லாம் நல்ல விசயம் தான் பாப்பா... எங்க சின்னய்யாவுக்குச் சின்னய்யா வர போறாரு..." என்று மருதாணி மகிழ்வாய் கூற...

அதைக் கேட்டு நிஷிலாவின் முகம் மலர்ந்து போனது... ஏனெனில் அவளது விடுதலைக்கான நாள் இன்றிலிருந்து தொடங்குகிறதே...

"நான் அவர் கிட்ட பேசணும்... ஃபோன் போட்டு கொடு..." என்றாள் நிஷிலா மகிழ்ச்சியாக...

"ஃபோனா...? அந்தக் கர்மம் எல்லாம் என் கிட்ட கிடையாது பாப்பா... விசயத்தைச் சொன்னா அவரே கிளம்பி நேரே வர போறாரு..." என்று கூறிவிட்டு அவள் சென்றுவிட...

நிஷிலா சந்தோசத்துடன் போர்வைக்குள் புதைந்து கொண்டாள்... இங்கிருந்து கிளம்பி சீக்கிரம் தனது வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்பதே அவளது ஒரே எண்ணமாக இருந்தது...

அடுத்தச் சில மணி துளிகளில் சிம்மவிஷ்ணு காரிலிருந்து இறங்கிய அதே நொடி அந்தப் பெண் மருத்துவரும் அங்கு வந்து தனது காரிலிருந்து இறங்கினார்...

"வணக்கம் சார்..." என்று அவர் கூழைக்கும்பிடு போட...

"நான் கேள்விப்பட்ட விசயம் கன்ஃபார்ம் தானான்னு பார்த்து சொல்லுங்க..." என்றவனுள் ஒருவித படபடப்புத் தொற்றிக் கொண்டது...

"அதுக்குத் தானே நான் வந்திருக்கிறேன்..." என்றார் அவர் சந்தோசமாக...

சிம்மவிஷ்ணு வரவேற்பறையில் அமர்ந்து கொண்டான்... மருத்துவர் அறைக்குள் நுழைந்து நிஷிலாவை பரிசோதித்தார்... மருத்துவர் சொன்னதை அப்படியே கேட்டு நடந்தாள் அவள்... எந்தவித எதிர்ப்பும் காட்டவில்லை... பரிசோதனை முடிவு சிம்மவிஷ்ணுவுக்குச் சாதகமாக வந்திருந்தது... அதை மருத்துவர் அவனிடம் வந்து சொன்ன போது அவன் மகிழ்வோடு அவரது கையில் அதிகத் தொகை எழுதிய காசோலையைக் கொடுத்து,

"தேங்க்ஸ் டாக்டர்..." என்க...

"இது என்னோட கடமை..." என்றுவிட்டு கிளம்பி சென்றார் கடமை தவறிய அந்த மருத்துவர்...

அவர் சென்றதும் சிம்மவிஷ்ணு வரவேற்பறையில் இருந்த சோபாவில் கால் மேல் கால் போட்டு அமர்ந்தபடி,

"மருதாணி..." என்று கர்ஜித்தான்...

"சின்னய்யா..." என்றபடி அவள் வேகமாய் அங்கு ஓடிவந்தாள்...

"போய் அவளைக் கூட்டிட்டு வா..." என்றான் அதிகாரமாக...

"சரிங்கய்யா..." என்று பவ்யத்துடன் கூறிய மருதாணி நிஷிலா இருந்த அறையை நோக்கி ஏறக்குறைய ஓடினாள்...

"பாப்பா, உன்னைச் சின்னய்யா கூப்பிடுறாரு..." என்று கூற...

'வந்துட்டானா ராவணன்...?' என்று மனதிற்குள் முனங்கி கொண்டே அவள் அறையை விட்டு வெளியில் வந்தாள்...

வரவேற்பறையில் அமர்ந்திருந்த சிம்மவிஷ்ணுவை கண்டு அவள் மனதிற்குள் அதிர்ந்தாலும் வெளியில் அதைக் காட்டி கொள்ளாது அங்கு வந்து நின்றாள்...

"உட்காரு..." என்று அவன் தனக்கு எதிரே இருந்த சோபாவில் அவளை அமர சொன்னான்...

"பரவாயில்லை, நிக்கிறேன்..." என்று அவள் மறுத்தாள்...

"இந்த மரியாதை உனக்காக இல்லை... உன் வயித்தில் வளரும் குழந்தைக்காக..." என்று அவன் கோபத்தில் சிடுசிடுத்தான்...

'அதானே பார்த்தேன்... ராட்சசனிடம் இரக்க குணமா? என்று' அவள் மனதிற்குள் எரிச்சலுடன் முணுமுணுத்து கொண்டாள்...

அவளது முகத்தில் தெரிந்த மகிழ்வை அவன் யோசனையுடன் பார்த்தான்...

"ரொம்பச் சந்தோசமாயிருக்கப் போலிருக்கு..."

"ம், ம்... என்னோட விடுதலைக்கான நாளை நான் எண்ணி கொண்டிருக்கிறேன்... அதனால் வந்த சந்தோசம்..."

"அதை விட உனக்கு உன் பவன் அத்தானை பார்க்க போகும் சந்தோசம்... அப்படித் தானே...?" என்று அவன் கேலியாய் கேட்டான்...

"ஆமாம், அதுக்கென்ன...?" என்றாள் அவள் வெடுக்கென்று...

"எனக்கு ஒன்றுமில்லை... ரொம்பச் சந்தோசம்... என்னுடைய வேலை இத்துடன் முடிந்தது... இந்த நொடி உலகத்திலேயே சந்தோசமான மனிதன் யாரென்றால் அது நான் தான் என்பேன்..." என்றவனை அவள் தீயாய் உறுத்து விழித்தாள்...

"நீங்க ஆசைப்பட்டது நடந்துவிட்டது அல்லவா...? அந்தச் சந்தோசம் இருக்கத் தானே செய்யும்..."

"ச்சே, ச்சே... அதற்காக இந்தச் சந்தோசம் இல்லை... இந்த இரண்டரை மாதங்களாக உனக்காகச் சில விசயங்களில் நான் நிறைய மாறியிருந்தேன்... இனிமேல் நான் நானாக இருப்பேன்... அதனால் வந்த சந்தோசம் இது..." என்றவனைக் கண்டு அவள் புரியாது முகத்தைச் சுளித்தாள்...

"பெண் சகவாசம் இல்லாத நான் உனக்காக என்னை மாற்றிக் கொண்டேன்... அதை விடக் கொடுமை விருப்பம் இல்லாத உன்னைத் தொடுவது... உனக்கு ஒண்ணு தெரியுமா...? என்னை விரும்பும் பெண்கள் எத்தனையோ இருக்க... நான் வேறுவழியில்லாது என்னை வெறுக்கும் உன்னைப் போய்த் தொட்டிருக்கிறேனே... இது எனக்கு எவ்வளவு பெரிய அசிங்கம் தெரியுமா...? அந்த அசிங்கத்தை மறக்கத்தான் நான் குடிக்கப் பழகியது... அதே போல் உன்னால் ஏற்படும் டென்சனை குறைக்கத்தான் நான் சிகரெட் பிடித்தது... இப்போ இது எல்லாம் எனக்குத் தேவையில்லை... இப்போது நான் ஒரு சுதந்திர பறவை..." என்றான் அவன் மகிழ்வாய்...

"நானும் தான்..." என்று அவள் குறுக்கிட...

"அப்படியா...?" என்று அவன் அவளை நோக்கி ஒரு மர்ம பார்வையை வீசினான்... அவளுக்கு அதற்கான அர்த்தம் புரியவில்லை...

"சரியாக மூன்றரை மாதங்கள் கழித்து நான் இங்கு வருவேன்... அதாவது உனக்கு ஐந்தாவது மாசம் முடியும் போது... அப்போ நீ உன் வீட்டுக்கு போகலாம்..."

"உண்மையாகவா...?" அவள் கண்கள் மின்ன சந்தோசத்துடன் அவனைப் பார்த்தாள்...

"நான் பொய் சொல்வது இல்லை..." என்றான் அவன் வேறு எங்கோ பார்த்தபடி...

"உங்க தொல்லை இல்லாமல் மூன்றரை மாதங்கள்... அதுக்குப் பிறகு நான் என் வீட்டுக்கு போய்விடுவேன்..." என்று சந்தோசப்பட்டவளை கண்டு,

"இனி நானும் உன் தொல்லை இல்லாது நிம்மதியாக இருக்கப் போகிறேன்..." என்று கூறி அவனும் சந்தோசப்பட்டுக் கொண்டான்...

"ஆனால் இந்த இடைப்பட்ட காலத்தில் குழந்தைக்கு மட்டும் எதாவது ஒன்றானால் உன் தண்டனை காலம் இன்னமும் நீட்டிக்கப்படும்..." என்றான் அவன் கறார் குரலில்...

"அதைச் செய்ய நான் என்ன முட்டாளா...?" என்றாள் அவள் வெடுக்கென்று...

"புரிந்தால் சரி..." என்று அமர்த்தலாகக் கூறியவன் சோபாவில் இருந்து எழுந்து அவள் அருகில் வந்தான்...

அவள் விழி விரிய அவனைப் பயத்துடன் நிமிர்ந்து பார்த்தாள்... அவளது நெற்றி நோக்கி அவனது வலதுகை ஆள்காட்டி விரல் நீண்டது... அதில் அவள் தன்னிச்சையாகப் பின்னுக்குச் சாய்ந்தாள்... ஆனால் அவன் அவளைத் தொடவில்லை... தொடாது ஆள்காட்டி விரல் கொண்டு அவளது நெற்றி, நாசி என்று சுட்டிக்காட்டி கொண்டே

வந்தவன் இறுதியாக அவளது இதழ்கள் வந்ததும் அங்கேயே தேங்கி நின்றான்...

என்ன செய்யக் காத்திருக்கிறானா? என்று அவள் அச்சத்தில் இதயம் எகிறி துடிக்கப் பரிதாபமாய் அவனைப் பார்த்திருந்தாள்...

"இனி நீ எனக்குத் தேவையில்லை... குட்பை..." என்று கூறிவிட்டு அவன் நிம்மதியுடன் வாயிலை நோக்கி நகர்ந்தான்...

யாராலும் இதை விட அதிகமாய் ஒரு பெண்ணவளை கேவலப்படுத்தி விட முடியாது...! அவளுக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது...

எதற்கு என்றே தெரியாத அழுகை அவளது... ஏனென்று தெரியாத அழுகை அவளது... கள்ளம்கபடமில்லாத வெள்ளை மனதுடைய சின்னஞ்சிறு பெண்ணின் அநாதரவற்ற நிலை இது...!

"உன் உயிர் அவளது உயிரினில்
உன் வலி அவளது வலியினில்
உன் வேதனை அவளது வேதனையில்
உன் கண்ணீர் அவளது கண்ணீரில்
வஞ்சினம் கொண்டு வஞ்சியவள்
துயரை எள்ளி நகையாடும் வேடுவனே
உன் வலி, வேதனை, கண்ணீர்
இவற்றுக்கு விடையாய் உன் மகவு...
ஒருநாள் விடையே கேள்வியாய் மாறும் போது
உன் பதில் என்ன அற்ப மானிடனே...???"

கொல்லும்...!!!

## நிழல் : 5

'இனி நீ எனக்குத் தேவையில்லை'

சிம்மவிஷ்ணு கூறிய வார்த்தைகளின் தாக்கம் நிஷிலாவின் மனதில் எந்த மாதிரியான தாக்கத்தினை ஏற்படுத்தியது என்று அவளுக்கே தெரியவில்லை... தன்னிலை குறித்து உண்டான கழிவிரக்கத்தில் அவளது விழிகளில் இருந்து கண்ணீர் மழை போல் பொழிந்தது...

அவன் அவளைக் காதலிக்கவில்லை தான்... பழிவாங்க தான் அவளைப் பயன்படுத்திருக்கிறான்... இருந்தாலும் ஒரு பெண்ணாய் ஆணிடத்தில் தான் தோற்றுப் போனது போல் ஒரு தோற்றம் அவளுள்...

அந்தக் கணம் அவன் அவளைப் பார்த்து கூறிய 'விபச்சாரி', 'நீ பெண் தானா?' என்கிற உயிர் கொல்லும் வார்த்தைகள் அவளது காதுகளில் ஒலித்து அவளது அழுகையைக் கட்டுப்படுத்தித் தனக்குள் இறுக செய்தது...

அவனிடத்தில் அவளது நிலையைப் பற்றி அவன் தான் தெளிவாக உரைத்துவிட்டானே... இதற்கு மேல் இந்த இழிநிலைக்காகக் கண்ணீர் வடிப்பது கூடத் தவறு என்றே அவளுக்குத் தோன்றியது... அதே நேரம் அவன் மீது கோபமும் வந்தது...

'இந்த விபச்சாரியின் வயிற்றில் உன் குழந்தையை ஏன்டா கொடுத்த...? என்னைப் பெண் என்று கூட உணராத நீ ஏன் என்னை வன்கொடுமை செஞ்ச...?' அதை நினைத்து அவளுக்கு மீண்டும் மீண்டும் கோபமும், கண்ணீரும் ஒருங்கே வந்தது...

அப்போது மருதாணி அங்கு வந்தாள்... அவள் கண்ணீர் விட்டு அழுவதைக் கண்டு பதறி போனவளாய் அவளது காலடியில் அமர்ந்தவள்,

"பாப்பா, எதுக்கு அழுற...? எங்க சின்னய்யா குழந்தையைச் சுமக்கிறதுக்கு நீ கொடுத்து வச்சியிருக்கணும்... எத்தனை பொண்ணுங்க அவருக்காக ஏங்குது தெரியுமா...? ஏனோ

தெரியலை அவருக்கு உன்னைத் தான் பிடிச்சிருக்கு... எல்லாம் கொஞ்ச நாள் தான் கண்ணு... நீ இப்படி முரண்டு பிடிக்கிறதை குறைச்சிக்கிட்டேன்னா அவரே அவரோட வீட்டுக்கு உன்னைய கூட்டிட்டு போவாரு... நீ இப்படிக் கோபப்பட்டுக்கிட்டு, அழுதுக்கிட்டு இருந்தா எப்படி அவரோட வீட்டுக்கு உன்னைய கூட்டிட்டு போவாரு...? நீ இப்படி அழுறதை அம்மா பார்த்தா சின்னய்யாவை உண்டு இல்லைன்னு ஆக்கிருவாங்க... அதுக்குப் பயந்துட்டு தான் அவரு உன்னைய கூட்டிட்டு போகலையா என்னவோ...?"

"ஓ, உன் சின்னய்யா என் கூட வாழ ஆசைப்படுறாரு நீ சொல்றியா...?"

"ஆமாங்கண்ணு... அது தானே நெசம்..."

"அவன் என்னைக் கை கழுவி விட்டுப் போய்ப் பத்து நிமிசமாச்சு மருதாணி..." என்று விரக்தியுடன் கூறியவளை கண்டு அதிர்ந்து போனாள் மருதாணி...

"பாப்பா என்ன சொல்ற...?"

"நீயே என்னைப் பாப்பான்னு தான் கூப்பிடுற... அந்தளவுக்கு நான் சின்னப் பொண்ணு... புடவை கூட எனக்குச் சரியா கட்ட தெரியாது... இங்கே வந்து இவனுக்குப் பயந்து தான் புடவை கட்ட கத்துக்கிட்டேன்... அப்படிப்பட்ட என்னைக் கடத்திட்டு வந்து இரண்டரை மாதம் என் கூட வாழ்ந்து இதோ இப்போ 'நீ வேண்டாம்'ன்னு சொல்லி தூக்கி எறிஞ்சிட்டு போறதுக்கு என்ன அர்த்தம் மருதாணி...? இதுக்கு எதுக்கு என்னைக் கடத்திட்டு வரணும்...? இவன் பணத்தை விட்டெறிஞ்சா ஆயிரம் பொண்ணுங்க இவன் பின்னாடி வருவாங்களே... என்னை ஏன் இப்படிச் சீரழிக்கணும்...?" என்று முகத்தை மூடி கொண்டு அழுதவளை கண்டு செய்வதறியாது திகைத்து போனாள் மருதாணி...

"இல்லை தாயி... சின்னய்யா அப்படி எதுவும் தப்பா நினைச்சுச் சொல்லியிருக்க மாட்டார்... ஏதோ கோபத்தில் பேசிட்டு போயிருப்பார்... அவரால உன்னை விட்டிருக்க

முடியாது... இன்னைக்கு ராவு உன்னைத் தேடி வர்றாரா இல்லையான்னு பாரு...?"

"உடல்சுகம் வேணும்ன்னா விபச்சாரியை தேடி வரத்தானே செய்வான்..." என்று உணர்வற்று கூறியவளை கண்டு...

"பாப்பா..." என்று அலறினாள் மருதாணி...

"தாயி நீ எங்கய்யா வம்சத்தைத் தழைக்க வந்த குலவிளக்கு... உன்னைப் போய் நீயே இப்படிச் சொல்லலாமா...?"

"இதை நான் சொல்லலை உங்க சின்னய்யா சொன்னது தான்..." அவள் கூறியதை கேட்டு மின்னல் தாக்கியது போல் அதிர்ந்து போனாள் மருதாணி...

"பாப்பா நெசமாவா சொல்லுற...?"

"ம், ம்... இந்தக் குழந்தை மூலம் என் குடும்பத்தைப் பழிவாங்க என்னைப் பகடைக்காயாக்கி விட்டான் பாவி..." என்று குமுறியவளை கண்டு,

"சத்தியமா இது எதுவும் எனக்குத் தெரியாது... என்னைய மன்னிச்சிரு பாப்பா..." என்று கதறிக் கொண்டே மருதாணி அவளது காலில் விழுந்தாள்...

"மருதாணி முதலில் எழுந்திரு..." என்று பயந்து போனவளாய் அவள் தனது கால்களைத் தூக்கி சோபாவின் மீது வைத்து கொண்டாள்...

"நீ என்னை மன்னிச்சிட்டேன் சொல்லு பாப்பா..."

"எல்லாம் முடிந்த பிறகு மன்னிப்பு கேட்டு எந்தப் பிரயோஜனமும் இல்லை மருதாணி..." அவளது விழிகள் எங்கோ வெறித்தது...

"மருதாணி, உன் கிட்ட நான் ஒண்ணு கேட்பேன்... நீ உண்மையை மட்டும் சொல்லணும்..."

"கேளு பாப்பா..."

"இவன்... இவன்... இப்படிக் கேட்பதற்காக என்னை மன்னித்து விடு..." என்றவள்,

"இவன் உன் மகளை இப்படிப் பண்ணியிருந்தால் நீ என்ன பண்ணியிருப்ப...?"

இதற்கு மருதாணியிடம் பதில் உண்டு... ஆனால் ரணமாய் இருக்கும் இந்தச் சின்னப் பெண்ணிடம் அதைச் சொன்னால் தன்னை நம்புவாளா? என்று அவளுக்கு ஆயாசமாக இருந்தது...

"சொல்லு மருதாணி...?"

"எம் பொண்ணு சின்னய்யா வீட்டில் தான் வேலை செய்யுது..."

"ஓ, இவன் உன் பொண்ணை எப்படி விட்டு வச்சியிருக்கான்...?"

"பாப்பா..." சற்று அதட்டலோடு ஒலித்தது மருதாணியின் குரல்...

"சின்னய்யா உன் விசயத்தில் தான் ஏனோ சறுக்கியிருச்சு... ஆனா அதுக்கு ஏதாவது வலுவான காரணம் இருக்கணும்... எனக்கு நம்பிக்கை இருக்கு... அதுக்காகச் சின்னய்யாவை தப்பா பேசாதே... எம் பொண்ணுன்னு இல்லை வேறு எந்தப் பொண்ணையும் அவர் ஏறெடுத்துப் பார்த்தது இல்லை... கல்லையும், மண்ணையும் பார்க்கிற மாதிரி பார்த்துட்டு போயிருவாரு... அதுக்குச் சின்னய்யா சித்தப்பா மகனை சொல்லு அது அப்படிப்பட்ட பொறுக்கி தான்..."

'நானும் ராமன் தான்டி... உன்னைத் தவிர வேறு எவளையும் தொட்டதில்லை... இனியும் தொட போவதில்லை...' நேரங்கெட்ட நேரத்தில் சிம்மவிஷ்ணு கூறிய வார்த்தைகள் அவளது காதில் ஒலித்தது... சில்லென்று மனதினை ஊடுருவ வேண்டிய வார்த்தைகள் ஏனோ அருவருப்புடன் அவளுள் ஊடுருவியது...

"இருக்கட்டுமே மருதாணி... என் விசயத்தில் உன் சின்னய்யா பண்ணிக்கிட்டு இருக்கிறது தவறு தானே..."

"அது தானே பாப்பா எனக்கு ஒண்ணும் புரிய மாட்டேங்குது..." விசனத்துடன் கூறிய மருதாணி,

"பாப்பா, நீ கவலைப்படாதே... நான் உனக்குத் துணையா இருப்பேன்..."

"அப்போ நான் உங்க சின்னய்யாவுக்கு எதிரா சட்ட நடவடிக்கை எடுத்தா நீ வந்து சாட்சி சொல்வியா...?"

"என்ன சாட்சி பாப்பா...?"

"அதாவது உங்க சின்னய்யாவுக்கு எதிரா கோர்ட்டுல வந்து பேசுவியா...?"

"ஐயோ அது மட்டும் என்னால் முடியாது..." என்று திட்டவட்டமாக மறுத்து கூறினாள் அவனது விசுவாசி...

அதைக் கேட்டு நிஷிலா சோர்ந்து போனாள்... தன்னைப் பாடாய் படுத்தும் சிம்மவிஷ்ணுவை எதிர்த்து சுண்டு விரல் கூட அசைக்க முடியாதபடி தான் இருப்பதை உணர்ந்து அவள் மனம் கலங்கி போனாள்...

அடுத்து வந்த நாட்கள் மளமளவென்று கடந்து சென்றது... சிம்மவிஷ்ணு நிஷிலா என்கிற பெண்ணைத் தான் சந்திக்கவே இல்லை என்பது போல் அவளைச் சுத்தமாய் மறந்து போனான்... மனதில் இருந்தால் தானே கருத்தில் நிலைக்கும்... அவளைப் பொறுத்தவரை அவனது வேலை முடிந்துவிட்டது... அத்தோடு அவளையும் மறந்து போனான்...

காலையில் வேலைக்குக் கிளம்பி வந்தவனை அவனது தந்தை அழைத்தார்...

"விஷ்ணு..."

"என்னப்பா...?" என்றபடி அவரது அருகில் வந்தமர்ந்தான்...

"நம்ம மலர்விழி இருக்காள்ல..."

சித்தப்பா மகன் மாதவனின் மனைவியைப் பற்றிக் கூறுகிறார் என்பதைப் புரிந்தவனாய், "சொல்லுங்கப்பா..." என்க...

"அவங்க சிமெண்ட் பேக்டரியில் ஏதோ பிரச்சினையாம்... நீ போய் என்னன்னு பார்த்துட்டு வாயேன்..."

"மாதவனைப் போகச் சொல்லுங்கப்பா..." ஏனோ அங்குச் செல்வது அவனுக்குப் பிடிக்கவில்லை...

"அவனைப் பத்தி தான் உனக்குத் தெரியுமே... பாவம்டா ஹர்ஷி... சின்னப் பொண்ணு அவள் எத்தனை பிரச்சினை தான்டா சமாளிப்பாள்..."

'அவளா சின்னப் பொண்ணு...?' என்று நினைத்தவனின் மனதில் அவள் தனது கன்னத்தில் முத்தமிட்டு ஓடி போன காட்சி தோன்றி அவனைக் கோபப்படுத்தியது...

"நீங்க போய்ப் பாருங்கப்பா... எனக்கு வேறு வேலையிருக்கு..." என்று அவன் கூற...

அதைக் கேட்டபடி அங்கு வந்த மீனாட்சி கணவனிடம் 'போகாதீங்க' என்பது போல் ஜாடை காட்டினார்... அதைப் பார்த்த பின்பு சுந்தரபாண்டியன் வாயை திறப்பாரா என்ன...? அமைதியாகி விட்டார்...

"ஆமாம்டா, உங்கப்பாவுக்கு இளமை திரும்புது... இன்னமும் ஓடியாடி வேலை செய்றதுக்கு... நேத்து நம்ம கார் ஷோ ரூமில் ஏசியில் உட்கார்ந்துட்டு வந்ததுக்கே இடுப்பு பிடிச்சிருச்சுன்னு புலம்பிட்டு இருக்காரு... இந்த லட்சணத்தில் அவரு போய்ச் சிமெண்ட் பேக்டரியை பார்க்க போனா பேக்டரி விளங்கிரும்..." என்று நொடித்துக் கொண்டே அங்கு வந்தார் மீனாட்சி...

"சரி அவரை ரெஸ்ட் எடுத்துக்கச் சொல்லுங்கம்மா... இப்போ நான் என்ன பண்ணணும்...? அதை மட்டும் சொல்லுங்க..." அவன் அன்னையிடம் அமைதியாகி விட்டான்...

"இதை ஒரு உதவியா செய்... என்ன செய்யணும்ன்னு ஹர்ஷிக்கு சொல்லி கொடு... அவள் புரிஞ்சுக்குவாள்..." என்ற அன்னையை ஒரு பார்வை பார்த்தவன்,

"புரிஞ்சிக்கலைன்னா செவுட்டுல நாலு அறை விட்டு புரிய வைக்கிறேன்..." என்றவன் மேற்கொண்டு ஒன்றும் பேசாது கிளம்பி சென்றுவிட்டான்...

அவனுக்காக எத்தனையோ வேலைகள் காத்திருக்க... அவன் வேலை மெனக்கெட்டு அடுத்தவர் தொழிலை பார்க்க தாழையூத்து ஊருக்கு கிளம்பி சென்றான்... அங்கிருந்த சிமெண்ட் தொழிற்சாலைக்கு அவன் வரும் போது மதியம் பன்னிரெண்டாகி இருந்தது...

அவன் காரை விட்டு இறங்கும் போதே ஹர்ஷவர்த்தினி அங்கு வந்து அவனை உற்சாகமாய் வரவேற்றாள்...

"வாங்க அத்தான்..."

அவளது பலமான வரவேற்பில் அவனது விழிகள் இடுங்கியது... ஆனாலும் எதையும் வெளிக்காட்டி கொள்ளாது அவன் தொழிற்சாலையினுள் சென்றான்... அவனைத் தனது அறைக்கு அழைத்துச் சென்றவள் தனது இருக்கையைக் காட்டி,

"உட்காருங்க அத்தான்..." என்க...

அவன் அங்கு அமராது அதற்கு எதிர்புறம் இருந்த நாற்காலியில் அமர்ந்தவாறு, "என்ன பிரச்சினைன்னு சொன்னால் பார்த்துட்டு கிளம்ப வசதியாக இருக்கும்..." என்றவன் தனது அலைப்பேசியை எடுத்து பார்க்க ஆரம்பித்தான்...

அவளோ அவனை ரசனையுடன் பார்த்து கொண்டிருந்தாள்...

கருப்பு நிற பேண்ட், வெள்ளை நிற முழுக்கை சட்டையை முழங்கை வரை மடக்கிவிட்டுக் கொண்டு கம்பீரமாக இருந்தவனின் அழகு அவளைப் பித்தாக்கியது என்று தான்

சொல்ல வேண்டும்... ஒரு சிலரை என்ன காரணம் என்று தெரியாது வெறித்தனமாக மனதிற்குப் பிடிக்கும்... அது போன்றதொரு பிடித்தம் தான் அவன் மீதான அவளது பிடித்தம்... அக்காவின் திருமணத்தில் அவனைப் பார்த்ததில் இருந்து அவனது ஆளுமையான தோற்றத்தில் அவள் மனம் மயங்கி தான் போனாள்...

இரு நாட்களுக்கு முன் தன் வீட்டில் இது பற்றிப் பேசி சம்மதம் வாங்கியவள் அதே போல் தனது தந்தையை வைத்து சிம்மவிஷ்ணு பெற்றோரிடமும் பேசி சம்மதம் வாங்கி விட்டாள்... அவர்களும் அவளது காதலுக்குப் பச்சைக்கொடி காட்டிவிட்டனர்... இனி சம்பந்தப்பட்டவன் மட்டுமே சம்மதிக்க வேண்டும்... அது அவ்வளவு எளிதல்ல என்று தெரிந்த போதும் அவனைத் தன்பக்கம் ஈர்த்து விடலாம் என்கிற நம்பிக்கை அவளுக்கு அந்த வானளவு இருந்தது...

"உண்மையில் பிரச்சினை இருக்கா...? இல்லை என்னை இங்கே வரவழைக்கப் போட்ட திட்டமா...?" பொட்டில் அடித்தார் போன்று நெத்தியடியாய் கேள்வி கேட்டவனைக் கண்டு திகைத்து விழித்தவள் பின்பு சுதாரித்துக் கொண்டு,

"உண்மையில் ப்ராப்ளம் இருக்கு..." என்று கூறியவள் மேசை மீதிருந்த கோப்பை எடுத்து நிர்வாகத்தில் இருக்கும் கோளாறுகளை அவனுக்குச் சுட்டிக்காட்ட துவங்கினாள்... அதை வாங்கிப் பார்த்தவன்,

"முதலில் இப்படிச் சில்லறை வியாபாரமாய்க் கொடுப்பதைத் தடுத்து நிறுத்து... மொத்த வியாபாரத்தில் மட்டும் நீ கவனத்தைச் செலுத்து... அப்போது தான் திருடு போகாது தடுக்க முடியும்..."

"எல்லாம் பில் போட்டு க்ளியரா தான் இருக்கு..."

"இதே மாதிரி பில் புக் அடிச்சு திருட்டுத்தனமா வியாபாரம் செய்தால் உனக்குத் தெரியவா போகுது..."

"அது எப்படிக் கணக்கில் வந்து தானே ஆகணும்..."

"எப்படி வரும்...? உனக்குக் காட்டும் பில்லில் ஐந்து மூட்டை சிமெண்ட்ன்னு எழுதியிருக்கும்... ஆனால் உண்மையில் பத்து மூட்டை போயிருக்கும்... இதை நீ பார்த்துக்கிட்டா இருப்பே...?"

"ஹோல் சேல்ஸில் இந்தத் தவறு நடக்காதா...?"

"நடக்காது என்று சொல்வதற்கு இல்லை... நடக்கலாம்... ஆனால் நடக்காது தடுப்பது உன் கையில் இருக்கிறது... அதுக்கு நீயே நேரடியாக வாங்குபவர்களுடன் பேசி தொழில் தொடர்பு வைத்திருக்க வேண்டும்..."

"எத்தனை தான் நான் ஒருத்தியே பார்க்கிறது...?" என்று அவள் அலுத்துக் கொள்ள...

"இப்படி அலுத்துக்கிறவ காலாகாலத்தில் கல்யாணம் பண்ணிக்கிட்டு இதை எல்லாம் புருசன் கிட்ட கொடுத்துட்டு வீட்டில் நிம்மதியா இருக்கணும்..."

"அதைத் தானே செஞ்சிக்கிட்டு இருக்கேன்..."

அதுவரை கோப்பில் கவனத்தைச் செலுத்தி கொண்டிருந்தவன் அவளது வார்த்தையில் அவளை நிமிர்ந்து பார்த்தான்... அவனது விழிகள் அவளைத் துளைத்தெடுத்தது...

"என்ன சொல்ற நீ...?"

"உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு உங்க கிட்ட இந்தப் பொறுப்பை எல்லாம் கொடுத்துட்டு நான் நம்ம குழந்தைகளைப் பொறுப்பா வளர்த்துக்கிட்டு வீட்டில் இருக்கப் போறேன்னு சொல்றேன்..."

அவள் குழந்தை என்றதும் அவனது மனக்கண்ணில் நிஷிலாவின் முகம் மின்னி மறைந்தது... இத்தனை நாளாய் அவனது மனதில் எழாத முகம் இன்று இவளது பேச்சில் எழுந்தது... அதை நினைத்ததும் அவனது மனதில் முணுமுணுவென்று ஒரு வலி எழுந்தது... அந்த வலியின்

வேதனை தாங்காது சட்டென்று நாற்காலியில் இருந்து எழுந்தவன் அவளைப் பார்த்துக் கடுமையாக,

"நான் யாரை கல்யாணம் பண்ணணும், என் குழந்தை யார் மூலமா வரணும், இது எல்லாம் நான் தான் முடிவு செய்வேன்... நீயில்லை... என் வாழ்க்கையை முடிவு செய்ய நீ யார்...?" என்று ஆக்ரோசமாய்க் கேட்டவனைக் கண்டு அவள் பயந்து தான் போனாள்...

"நம்ம ரெண்டு பேர் வீட்டிலும்..."

"வாயை மூடு... இந்தப் பேச்சை இத்தோடு விடு... என் வாழ்க்கை எப்படி, யாரோடு என்பதை நான் தீர்மானிச்சிக்கிறேன்... நீ உன் வேலையைப் பார்..." என்றவன் அங்கிருந்து கிளம்ப ஆயத்தமானான்...

"உங்கம்மா நான் தான் உங்க மனைவின்னு சொன்னா உங்களால் மறுக்க முடியுமா...?" தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அவள் கேட்டுவிட்டாள்...

அதில் அவன் தயங்கி நின்றான்... பின் முறுக்கேறிய நாணாய் விறைப்பாய் தன் முழு உயரத்திற்கு நிமிர்ந்து நின்றவன், "நீ சொல்வது ஒரு போதும் நடக்காது..." என்று கூறிவிட்டு அவன் விறுவிறுவெனச் சென்றுவிட்டான்...

அவள் திக்பிரம்மை பிடித்து நின்றுவிட்டாள்...

சிம்மவிஷ்ணு காரை கிளப்பிக் கொண்டு சிறிது தூரம் வந்தவன் அதற்கு மேல் காரை ஓட்ட முடியாதபடி அவனது எண்ணங்கள் தாறுமாறாய்க் கட்டுக்கடங்காமல் ஓடியது... வேறுவழியின்றிக் காரை சாலையோரமாய் நிறுத்தியவன் இருக்கையைப் பின்னுக்குச் சாய்த்து அதில் சாய்ந்து கண்களை மூடி கொண்டான்...

அவன் அடைந்த துரோகத்திற்கு அவனது வாரிசு அந்த வீட்டு பெண்ணின் வயிற்றில் வளர்ந்தால் மட்டும் போதுமா...? இதை விடக் கடுமையான தண்டனைகள் அவர்களுக்குக் கொடுக்க வேண்டாமா? என்று அவனது மனம் கூக்குரலிட்டு அழுதது... தங்கள் வீட்டுப் பெண்

கற்பிழந்து வந்து நிற்பதே அவர்களுக்கான ஆயுள்காலத் தண்டனை தானே... ஆனால் அவர்களுக்கு அது மட்டும் போதாது என்றே அவனுக்குத் தோன்றியது... இன்னமும் அதிகமாய் அவர்களுக்கான தண்டனையைக் கொடுக்க வேண்டும் என்றே அவனது மனம் விரும்பியது...

எந்தப் பணச்செருக்கில் வெறிக் கொண்டு ஆடினார்களோ... அந்தப் பணச்செருக்கை இல்லாது செய்ய வேண்டும் என்கிற வெறி அவனுள் இமயமாய் எழுந்தது... அதற்கான முதல் முயற்சி தான் அன்று அந்தத் தொழில் ஒப்பந்தத்தை அவர்களிடம் இருந்து தட்டி பறித்தது... ஆனால் அது எல்லாம் போதாது என்றே அவனுக்குத் தோன்றியது...

இத்தனை நாளில் அவன் வேறு ஒரு முயற்சியைக் கையாண்டு கொண்டிருக்கின்றான்... அதற்கான பதில் இப்போது கிடைக்காது... நிஷிலாவை அவளது வீட்டில் கொண்டு போய் விடும் சமயம் நிச்சயம் அதுக்கான பலன் கை மேல் கிடைக்கும்... அப்போது என்ன செய்வார்கள்? என்று அவன் கையைக் கட்டி கொண்டு குதூகலமாய் வேடிக்கை பார்க்க வேண்டும்... அப்போது இந்தச் சிம்மவிஷ்ணுவின் சுண்டு விரலை கூட அவர்களால் அசைக்க முடியாது...

அந்தக் கணம் பவித்ரன் அவனது மனக்கண்ணில் வலம் வந்தான்...

'பொடிப்பயல் இவன் என்னை என்ன செய்துவிட முடியும்...?' என்று அவன் அகம்பாவமாய் நினைத்துக் கொண்டான்...

***************************

"பாப்பா, உனக்காகப் புளிக்கொழம்பு வச்சுக் கொண்டு வந்திருக்கேன்... ஒரு வாய் சாப்பிடு கண்ணு..." நிஷிலாவின் தலைமாட்டில் அமர்ந்து கொண்டு மருதாணி கெஞ்சி கொண்டிருந்தாள்...

"ஒண்ணும் வேண்டாம் போ... எதைப் பார்த்தாலும் உமட்டிக்கிட்டு வருது..."

சிறு பெண் அல்லவா... அவளால் மசக்கையைத் தாங்க முடியவில்லை... பசிக்கிறது, ஆனால் வயிறார உண்ண முடியவில்லை... உணவின் வாசனையை நுகர்ந்தாலே வயிற்று குடல் வாய் வழியே வெளிவருவது போல் அவள் வாந்தி எடுத்தாள்... உறக்கம் வருகிறது, ஆனால் நிம்மதியாக உறங்க முடியவில்லை... மயக்கமும், சோர்வும், தலைச்சுற்றலும் அவளை நிம்மதியாய் உறங்க விடுவது இல்லை...

"குழந்தை என்றால் இப்படிப் படுத்தும்ன்னு எனக்குத் தெரியாம போச்சு... ரொம்பக் கஷ்டமாயிருக்கு... எனக்கு என் அம்மாவை பார்க்கணும் போலிருக்கு மருதாணி... அவங்க மடி சாய்ஞ்சி தூங்கணும் போலிருக்கு..." என்று தேம்பி தேம்பி அழுதவளை மருதாணியால் சமாதானப்படுத்த முடியவில்லை...

"என்னை உன் அம்மாவா நினைச்சுக்கோ பாப்பா..."

"நான் இப்படிச் சீரழியறதை என் அம்மா பார்த்துக்கிட்டுச் சும்மாயிருக்க மாட்டாங்க... இந்நேரம் அந்தப் படுபாவியைக் கொன்னுட்டு என்னை அவங்களோடு கூட்டிட்டு போயிருப்பாங்க..." என்று அவள் புலம்பத் துவங்கினாள்...

மருதாணிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை... நிஷிலா இப்படிச் சாப்பிடாது அழுது கொண்டே இருந்தால் வயற்றில் இருக்கும் குழந்தைக்கு எதுவும் ஆகிவிடுமோ என்று அவள் பயந்து போனாள்...

"இங்கே பாரு பாப்பா... நீ இப்படியே இருந்தா வயித்துப் புள்ளை தான் பாவம்... பசியில் வாடி போயிரும்..."

"இது அவன் குழந்தை தானே... எப்படிப் போனால் எனக்கென்ன..." என்றாள் அவள் வெடுக்கென்று...

"குழந்தைக்கு ஏதாவது ஒண்ணுன்னா அந்தக் கொடுமையையும், வலியையும் பொண்ணா பொறந்த நீ

தான் அனுபவிக்கணும்... ஆண் சென்மத்துக்கு என்ன...? வலியா? வேதனையா? எல்லாத்தையும் மறந்துட்டு அடுத்த வாரிசுக்கு அடி போடுவாங்க... ஆனா பொம்பளை நம்ம மனசு தான் இதையே நினைச்சு வேதனைப்படும்..." என்று புலம்பிய மருதாணியைக் கண்டு சட்டென்று எழுந்தமர்ந்தவள்,

"நீ சொல்றதும் உண்மை தான்... இந்தக் குழந்தைக்கு ஏதாவது ஒண்ணு ஆச்சுன்னா அந்த ராட்சசன் என்னை என் வீட்டுக்கு அனுப்ப மாட்டான்..." என்றவள் மருதாணியிடம் இருந்து உணவு தட்டை பறித்து வேக வேகமாய் உண்ண ஆரம்பித்தாள்...

அத்தனை பசி அவளுக்கு... நாலைந்து கவளம் உணவு உள்ளே போனதும் அவளுக்கு உமட்டி கொண்டு வர அவள் வாயை பொத்தி கொண்டு குளியலறைக்குள் ஓடினாள்... வயிற்றில் இருந்தவற்றை எல்லாம் ஒன்று விடாது வாந்தி எடுத்தவள் நிற்க முடியாது தலைச்சுற்றிக் கொண்டு வர அப்படியே சுவற்றில் சாய்ந்து நின்று கொண்டாள்... தனது நிலையை எண்ணி அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது...

'ஆணின் பாவத்திற்கு
பெண்ணவள் சுமக்கும்
சிலுவை குழந்தை'

"பாப்பா..." அவளை ஆறுதலாகப் பிடித்துக் கொண்டாள் மருதாணி...

"இப்படி அணு அணுவாய் நான் சாவதற்கு என்னை ஒரேடியா சாகவிடு மருதாணி... நீயும் என்னைப் புரிஞ்சிக்க மாட்டேங்கிறியே..."

அவளின் நிலை கண்டு மருதாணிக்கு இரக்கமாக இருந்தது...

"நான் என்ன செய்யணும் பாப்பா...?"

"நான் இங்கேயிருந்து தப்பிச்சு என் வீட்டுக்கு போகணும்... இல்லை பவன் அத்தானுக்கு ஃபோன் பண்ணினால் போதும்... அவர் வந்து என்னைக் கூட்டிட்டு போயிருவாரு..."

"பாப்பா, அது யாரு பவன் அத்தான்...?" என்று மருதாணி ஆர்வமாகக் கேட்டாள்...

"என்னோட அத்தை மகன்... இவனை மாதிரி கெட்டவன் இல்லை... ரொம்ப நல்லவர்... என்னைக் கல்யாணம் பண்ணிக்க இருந்தவர்..."

அதுவரை சுவாரஸ்யமாகக் கேட்டுக் கொண்டிருந்த மருதாணி அவளது கடைசி வார்த்தையில் வெறுப்பாய் முகத்தைச் சுளித்தார்... அவளது 'சின்னய்யா'விற்கு வில்லன் அல்லவா அந்தப் 'பவன்'... அதனால் வந்த வெறுப்பு இது...

"பாப்பா, இப்படி அர்த்தம் இல்லாத பேச்சு பேசாதே..." என்றார் சிறிது அதட்டலாக...

"எது அர்த்தம் இல்லாதது... இப்போது நான் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த இழிவாழ்க்கை தான் அர்த்தம் இல்லாதது... என் பவன் அத்தான் என்னை நல்லா வச்சுக்குவார்..." என்றவள் தேம்பினாள்...

"உலகத்துக்கே ராசாவா இருந்தாலும் எங்கய்யா கால் தூசுக்கு வருவானா அவன்...? எங்கய்யா அழகு என்ன, படிப்பு என்ன, அந்தஸ்து என்ன...? இது எதுவுமே தெரியாம நீ பேச கூடாது பாப்பா..."

"எனக்கு எதுவும் தெரிய வேண்டாம்... ஆனா என் அத்தான் உங்கய்யாவுக்குக் கொஞ்சமும் குறைஞ்சவர் இல்லை... அது மட்டும் ஞாபகத்தில் வச்சுக்கோ... நான் என் வீட்டுக்குப் போனதும் என்னோட இந்த நிலைக்குக் காரணமான அந்த ராட்சசன், அவனுக்குத் துணை போகிற நீ எல்லாம் ஜெயிலுக்குப் போகத் தான் போறீங்க..." என்றாள் சின்னவள் கோபமாக...

"எங்க சின்னய்யாவுக்காக நான் ஜெயிலுக்குன்னாலும் சந்தோசமா போவேன் பாப்பா... அதுக்காக நீ அவரைத் தரக்குறைவா பேசுறதை நான் அனுமதிக்க மாட்டேன்..."

"தரங்கெட்ட செயலை செய்கிறவனை இப்படித்தான் பேசுவேன்..."

"இப்படியே பேசிக்கிட்டு இருந்தா நீ பொழுதன்னைக்கும் பேசுவ... ரூமுக்கு வா..." என்று அவளைக் கைத்தாங்கலாக அழைத்துக் கொண்டு உள்ளே போனாள் மருதாணி...

அவளைக் கட்டிலில் அமர வைத்து விட்டு வெளியே சென்றவள் சிறிது நேரத்தில் திரும்பி வந்து, "இந்தா... இந்த எலுமிச்சை பழத்தை மோந்து பாரு... வாந்தி நின்னுரும்..." என்க...

நிஷிலா அதை வாங்கி முகர்ந்து பார்த்தாள்... குமட்டல் சிறிது மட்டுப்பட்டது... பின்பு சோர்வாகக் கட்டிலில் சாய்ந்தமர்ந்து கொண்டாள்...

அடுத்தடுத்து வந்த நாட்களில் மசக்கை அவளைப் பாடாய்ப் படுத்தியது... இது எதுவுமே சிம்மவிஷ்ணு காதுக்குச் செல்லவில்லை... அவனும் அதைக் கேட்டுக் கொள்ள விரும்பவில்லை...

இடையில் மருத்துவர் மட்டும் அவனுக்கு அழைத்து நிஷிலாவை 'ஸ்கேன்' பார்க்க அழைத்து வருமாறு கூறினார்...

"எதுக்கு...?"

"குழந்தையின் வளர்ச்சி சரியாக இருக்கான்னு பார்க்கிறதுக்குத் தான்..."

"அது எப்படியிருந்தாலும் பரவாயில்லை... ஸ்கேன் எதுவும் வேண்டாம்..." என்று அலட்சிய பாவனையுடன் அவன் அழைப்பை துண்டித்துவிட்டான்... மறுமுனையில் மருத்துவர் விக்கித்துப் போனார்...

'ஏன் உடல் ஊனமாய் இருந்தால் அது அவர்களது வாரிசு என்பது இல்லாது போகுமோ...? அப்படியே உடல் ஊனத்துடன் பிறந்தால் எனக்கு இரட்டிப்புச் சந்தோசம் தான்... அவங்க பொண்ணைக் கண்டு வேதனையில் துடிப்பவர்கள் பேர குழந்தையைக் கண்டு இன்னமும் வேதனையில் துடிக்கட்டும்...' என்று அவன் குரூரமாக நினைத்தான்...

"தாய் ஈரைந்து மாதங்கள் சுமந்தாலும்,
தன் உதிரத்தை பாலாக்கி புகட்டினாலும்,
தன்னுயிராய் போற்றிப் பாதுகாத்தாலும்,
மகவு அவளுடையது அல்ல...
உன் உயிரில் உயிர்த்தது,
உன் உதிரத்தில் ஜனித்தது,
உன் வாரிசென உன்னை
நோக்கி விரல் நீட்டும்,
குற்றவாளி நீ தானெனச் சுட்டிக்காட்டி
உன்னை உயிரோடு கழுவிலேற்றும்,
மங்கையவள் மகவு என்று
மனம் வெறுப்பாயா? இல்லை
என் மகவு என்று
உள்ளம் பூரிப்பாயா???"

கொல்லும்...!!!

## நிழல் : 6

"என்னங்க நம்ம நிஷா கிடைச்சிருவாங்களா...?"

ஏக்கத்துடன் ஒலித்த மனைவியின் குரலை கண்டு பதில் பேச முடியாதவராய் செல்வரத்தினம் வேதனையுடன் தலைகுனிந்தார்...

"நாம யாருக்கும் எந்தப் பாவமும் பண்ணலையேங்க... நமக்குப் போய் இப்படி ஒரு கஷ்டத்தை அந்த ஆண்டவன் கொடுத்திருக்கிறானே..." என்று கண்ணீர் விட்டவரை கண்டு செல்வரத்தினத்தின் மனம் அதிர்ந்தது...

அன்று அவர் செய்த பாவம் தான் இன்று அவரைத் துரத்துகிறதோ...? மற்ற நேரமாக இருந்திருந்தால் அவர் இதை எல்லாம் அலட்சியமாகக் கடந்து வந்திருப்பார்... ஆனால் இன்று தனது செல்ல மகள் விசயத்தில் அப்படி அலட்சியம் காட்ட அவரால் முடியவில்லை... இதற்கு ஏதாவது பரிகாரம் செய்ய வேண்டுமே என்று அவரது மனம் பயத்தில் துடித்தது...

"என்னங்க...?" என்று அருந்ததி அழைத்ததும் தனது யோசனையைக் கைவிட்டவராய் அவர் மனைவியை ஆறுதலாய் அணைத்துக் கொண்டு,

"நாம நம்ம மனசறிஞ்சு எந்தத் தப்பும் பண்ணலை... அப்படியே தெரியாம தப்புப் பண்ணியிருந்தாலும் ஏதாவது பூஜை, பரிகாரம் செஞ்சு கழிக்கப் பார்க்கலாம்... நீ கவலைப்படாதே... இன்னைக்கே நம்ம தீரன் கிட்ட இது பத்தி பேசறேன்..." என்று சமாதானப்படுத்தினார்... அதில் அருந்ததி சற்று சமாதானமானார்...

முதலில் மருமகனிடம் பேசாது தங்கை மற்றும் தம்பியிடம் பேசினார்... ஏனெனில் எல்லா ரகசியமும் தெரிந்தவர்கள் இவ்விருவரே... செல்வரத்தினம் விசயத்தைச் சொன்னதும் மணிபாரதி மனம் பதறினார்...

"நான் அன்னைக்கே சொன்னேன்... நீங்க யாரும் கேட்கலை... அது தான் என் மனைவி, மகனை காவு

வாங்கியிருச்சு... காத்திருந்து நம்மளை எல்லாம் பழிவாங்குது..."

"ஆமாம், ஆமாம்... இன்சால்ட்மென்ட் பேஸிசில் வந்து நம்மளை பழிவாங்குது... அண்ணா நீ கொஞ்ச நேரம் வாயை மூடிட்டு சும்மாயிரு... அது பழிவாங்குவதாக இருந்தால் முதலில் என்னைத் தான் பழிவாங்கணும்... ஆனா நான் என் கணவன், மகனுடன் சந்தோசமாகத் தானே வாழ்றேன்... நீ பேசுறது எல்லாம் சுத்த ஹம்பக்... நம்புகிற மாதிரியில்லை..." இளவரசி தனது பிடித்தமின்மையை அப்பட்டமாய் வார்த்தையில் தெரிவித்தார்...

"ஆனா நம்ம நிஷா விசயத்தில் கொஞ்சம் யோசிச்சு பாரு அரசி..." செல்வரத்தினம் மன்றாடும் குரலில் கூறினார்...

"அண்ணா, நீ இப்படிப் பயப்பட வேண்டிய அவசியமே இல்லை..." என்று அலுப்பாய் கூறியவர்,

"மறந்திருக்கும் விசயங்களை நீ மீண்டும் ஞாபகப்படுத்துகிறாய்... இதன் விளைவுகள் எப்படியிருக்கும்ன்னு எனக்குத் தெரியலை..."

"அதனால் ஒன்றுமாகாது அரசி..."

"எனக்கு என் பத்ரி ரொம்ப முக்கியம்... அவரில்லாத வாழ்க்கையை என்னால் நினைச்சு கூடப் பார்க்க முடியாது... இதனால் பத்ரிக்கும் எனக்கும் சிறு விரிசல் உண்டானால் கூட உங்க ரெண்டு பேரையும் நான் சும்மாவிட மாட்டேன்..." என்று கோபமாகக் கூறிய தங்கையைக் கண்டு,

"அரசி..." என்று இருவரும் ஒருமித்த குரலில் பதறினர்...

"பத்ரி, உன் மேல் உயிரையே வைத்திருக்கிறான்... இத்தனை நாட்களாக வெறுக்காதவன் இப்போதா உன்னை வெறுத்துவிடப் போகிறான்...? லூசுத்தனமா உளறாதே..."

"அவர் மேல் எனக்கு நம்பிக்கை இருக்கு... இருந்தாலும் தேவையில்லாத விசயங்கள் எங்களுக்கு இடையில் பானக

துரும்பாய் உறுத்துவதை நான் விரும்பலை... இதற்கான ஏற்பாட்டை நானே பார்க்கிறேன்... பத்ரி, தீரா கிட்ட நீங்க எதுவும் பேச வேண்டாம்... நானே பேசிக்கிறேன்..." என்று கூறிவிட்டு அவர் எழுந்து சென்றுவிட்டார்...

"அரசி இப்படிப் பத்ரி மீது காதலாக இருப்பது ரொம்பச் சந்தோசமாக இருக்கிறது அண்ணா..." மணிபாரதி செல்லும் தங்கையைப் பார்த்துக் கொண்டு கூற...

"ஆமாம் பாரதி... அவளுக்குன்னு ஒரு வாழ்க்கை அமைந்தது குறித்து ரொம்பச் சந்தோசம் தான்... இதுக்கு உனக்குத் தான் நன்றி சொல்லணும் பாரதி... நீயில்லை என்றால் பத்ரி இந்த வீட்டு மாப்பிள்ளை ஆகியிருந்திருக்க மாட்டான்..."

"நம் தங்கை வாழ்க்கையில் எனக்கு அக்கறை இல்லையாண்ணா...?" என்ற மணிபாரதியை கண்டு புன்னகைத்தார் செல்வரத்தினம்...

இளவரசி சொன்னது போல் பூஜைக்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் செய்துவிட்டார்... பூஜைக்காக விசேசமாய்க் கேரளாவில் இருந்து நம்பூதிரிகளை அழைத்திருந்தார்...

"மாம், பூஜை செய்வதற்கு இவர்கள் எதற்கு...? நம்மூரில் இல்லாத அய்யர்களா...?" என்று பவித்ரன் கேட்டான்...

"அது வந்து தீரா..."

"இவர்களின் முன்னேற்பாடுகளைப் பார்க்கும் போது ஏதோ பேயோட்ட போவது போல் தோன்றுகிறது..." என்று ஆச்சிரியமாய் விழி விரித்தவனைக் கண்டு இளவரசி உள்ளுக்குள் அதிர்ந்து போனார்... அவனோ அதைக் கவனிக்காதவனாய்,

"இதில் எல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை மாம்... உங்க ஆசையை ஏன் கெடுப்பானேன்னு அமைதியா இருக்கேன்... பை சான்ஸ் இதனால் நிஷி திரும்ப வந்தால் எனக்கு

ரொம்பச் சந்தோசமே..." என்றான் அவன் சிறு எதிர்பார்ப்புடன்...

மகனை போன்று பத்ரிநாத் ஒன்றும் கூறவில்லை...

"வசி, நீ என்ன பண்ணினாலும் அது சரியாகத் தான் இருக்கும்..." என்றவர் சிறிது நேர மௌனத்திற்குப் பின்,

"ஆனால் பூஜையில் நான் கலந்து கொள்ள மாட்டேன்..."

"பத்ரி..."

"சில விசயங்களை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது வசி... அதில் இதுவும் ஒன்று... தயவுசெய்து என்னை மன்னித்துவிடு..."

"உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால் வேண்டாம்..." என்ற மனைவியை அணைத்துக் கொண்ட பத்ரிநாத்,

"எனக்காக நீ எதுவும் செய்வேன்னு எனக்குத் தெரியும்... இது உன் அண்ணன்களுக்காக, நிஷாவுக்காக நடத்துவது... அதனால் மறுக்க வேண்டாம்..."

"கண்டிப்பா பத்ரி... உங்களுக்காக நான் எதையும் செய்வேன்... எதையும்..." என்று கூறிய இளவரசியின் விழிகளில் வெறிப் பளபளத்தது...

பத்ரிநாத் மீதான இந்த வெறி தானே அவரைப் பல தவறுகளை அசால்ட்டாகச் செய்ய வைத்தது... இனியும் செய்ய வைக்கும்... இது காதலா? காமமா? இல்லை இரண்டும் கடந்த நிலையா? எதுவென்று தெரியாத ஒரு மனநிலையில் இருந்தார் இளவரசி...

சொன்னது போல் பத்ரிநாத் இந்தப் பூஜையில் கலந்து கொள்ளவில்லை... பவித்ரனும் வேலை விசயமாக வெளியில் சென்றுவிட்டான்...

மற்ற நால்வரும் பூஜையில் கலந்து கொண்டனர்... பூஜை முக்கால்வாசி முடியும் தறுவாயில் அதைச் செய்து

கொண்டிருந்த நம்பூதிரியின் விழிகள் ஒரு இடத்தில் நிலைக்குத்தி நின்றது...

"சுவாமிக்கு என்னாச்சு...?" செல்வரத்தினம் அவரது சிஷ்யர்கள் ஒருவனிடம் கேட்க...

"ஷ்..." என்று அவன் அவரை அடக்கினான்...

அப்போது அந்த நம்பூதிரியே பேச ஆரம்பித்தார்...

"அன்று நீங்க செய்த பாவம் இன்று உங்களை விடாது துரத்துகிறது... இனியும் துரத்தும்... விடாது கருப்பு... உங்களை விடவே விடாது... அந்தப் பாவத்தின் சுமையை உங்க வீட்டுப் பெண் சுமந்து கொண்டிருக்கிறாள்... வருவாள், அவளே உங்களைத் தேடி வருவாள்... உங்க துரோகத்திற்கான பரிசோடு..."

"சுவாமி, இதற்கு எந்தப் பரிகாரமும் இல்லையா...?" அவரின் வார்த்தையில் செல்வரத்தினம் பயந்து போனார்...

"புலி மானை வேட்டையாடுதுன்னா அதுக்கு ஒரு நியாயமான காரணம் இருக்கு... ஆனா மனுசன் மனுசனை வேட்டையாடுவதில் என்ன நியாயமான காரணம் இருக்கு...? நீங்க செஞ்சதும் அப்படிப்பட்ட ஒரு பாவச்செயல் தான்... அதற்குப் பரிகாரமும் இல்லை, பிராயச்சித்தமும் இல்லை... தண்டனையை அனுபவித்தே ஆகவேண்டும்..."

"நாங்க செஞ்ச தவறுக்கு எங்க வீட்டுப் பெண் ஏன் தண்டனை அனுபவிக்க வேண்டும்...?" செல்வரத்தினம் கண்கலங்கி போனார்...

"இதுக்கான பதில் நீ செஞ்ச துரோகத்தில் இருக்கிறது... எதை விதைத்தாயோ அதையே அறுப்பாய்... உன் ஊழ்வினை உன்னைச் சுடவில்லை... உன்வினை உன்னைச் சுடுகிறது... இனி தான் தீயாய் தகிக்கப் போகிறது..." என்றவரது விழிகள் தீயாய் ஜொலித்தது...

"என் மகள் சின்னப் பெண் சுவாமி..." என்று சிறு குழந்தை போன்று தேம்பி தேம்பி அழுதார் செல்வரத்தினம்...

"அன்று நீ ஏன் இதை உணரலை...?" நம்பூதிரியின் கேள்வியில் அவரது கண்ணீர் அதிர்ச்சியில் நின்றுவிட்டது...

"நீ செய்த பாவம் இப்போது வேறு ஒரு ரூபத்தில் உன்னைத் தாக்க வந்து கொண்டிருக்கிறது... தயாராக இரு..." என்று கூறியபடி நம்பூதிரி விழி மூடி அமைதியாகி போனார்...

மூவரும் தங்களுக்குள் திகிலான பார்வையைப் பரிமாறி கொண்டனர்... அருந்ததி ஒன்றும் புரியாது மகளை நினைத்து கண்ணீரோடு அமர்ந்திருந்தார்...

பூஜை முடிந்து எல்லோரும் செல்லும் வரை அங்கே கனத்த அமைதி நிலவியது...

"சுவாமி என்னென்னமோ சொல்றாரேங்க..." அருந்ததி கண்ணீரோடு கேட்க...

"நாம மனசறிஞ்சு யாருக்காவது பாவம் செஞ்சிருக்கோமோ நீயே சொல்லு... காசுக்காக இப்படித்தான் ஏதாவது சொல்வாங்க... நீ இதைக் கண்டுக்காதே அதி... போய் ரெஸ்ட் எடும்மா..." என்று மனைவியை அனுப்பி வைத்த செல்வரத்தினம் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்துவிட்டார்...

"எனக்கு நிஷாவை நினைச்சு பயமாயிருக்கு..." என்று அவர் புலம்ப ஆரம்பித்தார்...

"அண்ணா..." அதட்டலாய் ஒலித்தது இளவரசியின் குரல்...

"நாம செஞ்சது பாவ காரியம்ன்னே வச்சுக்குவோம்... ஆனா அந்த விசயம் நம்ம மூணு பேருக்கு மட்டும் தான் தெரியும்... வேறு யாருக்கும் தெரியாது... அப்படி இருக்கும் போது அன்று நாம செஞ்சதுக்கும், இன்று நிஷாவின் நிலைக்கும் என்ன சம்பந்தம்...? அந்தச் சாமியார் தான் லூசுத்தனமா பேசுறான்னா நீயும் லூசுத்தனமா புலம்பிக்கிட்டு இருக்கியே..."

"ஆமாம் அரசி, இதை நான் உணரவே இல்லை பாரு..." என்று முகம் மலர்ந்தார் செல்வரத்தினம்...

"ஒருவேளை ஆவி ஏதாவது இதைச் செஞ்சியிருக்குமோ..." மணிபாரதி பயத்தை உள்ளடக்கிய குரலில்...

"அப்படிப் பார்த்தா நம்மளை நிறைய ஆவிகள் துரத்தணும்... இது எல்லாம் நடக்கிற காரியமா...?" என்று இளவரசி கேலியாய் சிரித்தார்...

"அப்போ நிஷா காணாமல் போனதுக்கான காரணம் என்ன...?"

"தெரியலை... ஆனா நிச்சயம் இந்த மாதிரியான அல்பமான காரணம் ஏதுமிருக்க வாய்ப்பில்லை..." என்று உறுதியாய்க் கூறினார் இளவரசி...

அதில் மற்ற இருவரும் நிம்மதியடைந்தனர்...

அலுவலகத்தில் அமர்ந்திருந்த பவித்ரனின் அலைப்பேசி அழைத்தது... அதை எடுத்து பேசியவனின் முகம் பெருத்த யோசனையில் ஆழ்ந்தது... என்ன நடக்கிறது என்பது அவனுக்குப் புரியவில்லை... ஆனால் தன்னைச் சுற்றி ஏதோ ஒரு மாயவலை பின்னப்படுவதை அவன் உணர்ந்தான்... மீள முடியுமா...? என்று அவனுக்குப் பெருத்த யோசனையாக இருந்தது...

ஒரே ஒரு முடிவு தான் மிச்சம் இருந்தது... அதை வெளிப்படையாய்ச் செயல்படுத்த அவன் தயங்கினான்... ஏனெனில் கண்ணுக்கு தெரியாத அந்த எதிரியை கண்ணுக்குத் தெரியாது தான் அவன் வீழ்த்த நினைத்தான்... அவனைப் போல் இவனும் கீழ் வழியாக வேலை பார்க்க துவங்கினான்... தொழிலில் எதிரியை எப்படி வீழ்த்த வேண்டும்? என்று அவனுக்கு நன்றாகத் தெரியும்... தொழில் அரிச்சுவடி அறியாத பாலகன் என்று அவன் தன்னை நினைத்து கொண்டானோ...? பவித்ரனுக்குக் கோபமாக வந்தது...

அந்தக் கணம் அவனது மனதில் சிம்மவிஷ்ணு முகம் மின்னி மறைந்தது... அவனது பேச்சு, பாவனை எல்லாம் வித்தியாசமாக முன்னுக்குப் பின் முரணாக இருந்தது... அமைச்சரிடம் அவன் பணிவாக விட்டுக் கொடுப்பது போல் பேசியது, அதே அவன் வெளியில் வந்ததும் திமிராய், தெனாவெட்டாய் பேசியது எல்லாம் சேர்ந்து பவித்ரனின் மனதினை உறுத்தி ஏதோ ஒன்று சரியில்லை என்று இவனை எண்ண வைத்தது... ஏனெனில் இந்தத் தொழில் சம்பந்தமாக இவன் தான் அமைச்சரிடம் பேசி இது தனக்குக் கிடைக்க வேண்டும் என்று பெரும் தொகையை முன்பணமாகக் கொடுத்து வைத்திருந்தான்... இடையில் இந்தச் சிம்மவிஷ்ணு எப்படி வந்தான்? என்று இவனுக்கு விளங்கவில்லை... எதற்கும் அவனைத் தன்னுடைய கண்காணிப்பில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று பவித்ரன் நினைத்தான்...

சட்டென்று அவனது மனம் இப்போது நடந்து கொண்டிருக்கும் பிரச்சினைக்குத் தாவியது... எதிராளி தன்னை நெருங்கி வந்து கொண்டிருக்கிறான் என்பது அவனுக்கு நன்கு புரிந்தது... அவனும் தனது எதிரியை நேருக்கு நேர் சந்திக்க ஆயத்தமானான்...

ஆனால் மறந்தும் அந்த எதிரி சிம்மவிஷ்ணு என்றோ, சிம்மவிஷ்ணுவுக்கும் தனது மாமன்மகள் கடத்தலுக்கும் சம்பந்தம் இருக்கும் என்றோ அவன் நினைக்கவில்லை...

****************************

இரவின் அமைதியில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த சிம்மவிஷ்ணு திடீரென்று மூச்சுத்திணறல் ஏற்பட்டது போல் மூச்சுத்திணறி எழுந்தமர்ந்தான்... உடல் எல்லாம் வியர்த்து வழிய அவன் சுவாசிப்பதற்கு மிகவும் சிரமப்பட்டான்... சுற்றுப்புறம் அவனுக்கு நிகழ்காலத்தை உணர்த்திய போதும் அவனால் அதில் இருந்து அவ்வளவு எளிதில் வெளிவர முடியவில்லை... அந்தக் கணம் அவனது தலையில் சுளீரென்று வலி தாக்கியது... எப்போதும் போல் தாங்க முடியாத வலி அது...

"அம்மா..." என்று பெருத்த குரலில் அவன் அலறிவிட்டான்...

இரவின் நிசப்தத்தில் அவனது அலறல் அந்த வீடு முழுவதும் ஒலித்தது... ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த மீனாட்சி திடுக்கிட்டவராய் எழுந்தமர்ந்தார்... மகன் அழைத்த குரல் அவரது காதில் விழுந்தது பிரம்மை என்பது போல் அடுத்து எந்தவொரு சத்தமும் கேட்கவில்லை...

"என்னங்க...?" அவர் தன்னருகில் படுத்து உறங்கி கொண்டிருந்த கணவனை எழுப்பினார்...

"என்னம்மா...?" என்றபடி உறக்க கலக்கத்தில் எழுந்தமர்ந்தார் சுந்தரபாண்டியன்...

"விஷ்ணு கூப்பிட்ட மாதிரி இருந்துச்சு..."

"அவன் என்ன சின்னப் பையனா...? அப்படி எல்லாம் இருக்காதும்மா... காலையில் போய்ப் பார்த்துக்கலாம்... நீ படு..."

"நீங்க வரலைன்னா போங்க... நான் விஷ்ணுவை பார்க்க போறேன்..." என்று எழுந்து அறை கதவை நோக்கி சென்ற மனைவியைக் கண்டு வேறுவழியில்லாது அவரும் பின்தொடர்ந்து சென்றார்...

மீனாட்சி மகனது அறை கதவை திறந்து கொண்டு உள்ளே சென்ற போது அவன் தலைவலியில் துடித்துக் கொண்டிருப்பதைக் கண்டு அவர் உள்ளம் துடித்துப் போனார்...

"விஷ்ணு கண்ணா..." விழி கலங்க விரைந்து வந்து மகனை மடி தாங்கி கொண்டார் அந்த அன்பு தாய்...

"என்ன பண்ணுதுடா...?" பரிதவிப்புடன் கேட்டவரை கண்டு அவன் அந்த வலியிலும் புன்னகைத்தபடி,

"தலைவலிக்குதும்மா..." என்று கூறியபடி அவரது மடியில் முகம் புதைத்துக் கொண்டான்... வலியில் மகனது விழிகள் கலங்கியிருப்பதைக் கண்டு அவர் அரண்டு போனார்...

"விஷ்ணு, ரொம்ப வலிக்குதாப்பா..." சுந்தரபாண்டியன் அவனது அருகில் அமர்ந்து கொண்டு அவனது தலையை வருடி கொடுக்க...

"தொடாதீங்கப்பா வலிக்குது..." என்றான் வலி நிறைந்த குரலில்...

அவனது வலியில் பெற்றோர் இருவரது மனமும் கலங்கியது... அமைதியாக மகனை பார்த்தபடி அமர்ந்திருந்தனர்... பத்து நிமிடங்கள் கழித்துச் சிம்மவிஷ்ணுவே தானாக எழுந்தமர்ந்தான்...

"படுத்துக்கோப்பா..." மீனாட்சி கூறியதை மறுத்து,

"இப்போ ஓகேம்மா... வலி போயிருச்சு..."

"நாளைக்கு ஹாஸ்பிட்டலில் போய்ச் செக்கப் பண்ணிட்டு வந்திரலாம் விஷ்ணு..."

"ம்மா, அதெல்லாம் ஒண்ணும் இல்லை... நீங்க கவலைப்படாதீங்க..." என்று அவரைத் தேற்றியவன் மீண்டும் அவரது மடியில் படுத்துக் கொண்டான்...

"எத்தனை நாளா இந்த வலி இருக்கு விஷ்ணு...?" தந்தையின் கேள்விக்கு அவன் ஒன்றும் கூறாது புன்னகைத்தான்...

"பத்து மாசத்துக்கு முந்தி தலையில் அடிப்பட்டதே அப்போது இருந்தா...?" என்று கேட்ட தந்தையிடம் 'ஆம்' என்பது போல் தலையசைத்தான்...

"அப்போ எக்ஸ்ரே, ஸ்கேன் எல்லாம் எடுத்து பார்த்துட்டு ஒண்ணும் இல்லைன்னு சொன்னாங்களே விஷ்ணு..."

"அதான்ப்பா நானும் சொல்றேன்... அதுக்கும் இதுக்கும் எந்தச் சம்பந்தம் இல்லைன்னு..." என்று அவன் வெளியில் கூறினாலும் மனதினுள் 'நாளை மருத்துவமனை செல்ல வேண்டும்' என்று நினைத்துக் கொண்டான்...

"ம்மா, நான் பிறந்தப்போ எப்படி இருந்தேன்...? நீங்க என்ன மாதிரி ஃபீல் பண்ணினீங்க...?" தாயை பார்த்து அவன் ஆர்வத்துடன் கேட்க,

அவனை வாஞ்சையுடன் பார்த்த மீனாட்சி, "இப்போ எல்லாம் இந்தக் கேள்வியை அடிக்கடி கேட்கிற விஷ்ணு..." என்ற போதும் மகனது கேள்விக்குப் பதில் கூற தவறவில்லை...

"குட்டி கை, காலோடு புத்தம் புதிதாய் பூத்த ரோஜாப்பூ போல உன்னை என் கையில் கொடுத்தப்போ நான் அடைஞ்ச சந்தோசத்துக்கு அளவே இல்லை... அப்படியொரு சந்தோசம்..." என்று கூறி அவர் அவனது நெற்றியில் முத்தமிட்டார்...

"நான் உங்களுக்கு ரொம்பத் தொல்லை கொடுத்து பிறந்தேனாம்மா... ரொம்ப வலிச்சதோ..." ஏனோ அவனுக்கே வலியெடுத்தது போல் அவனது முகம் வாடி போனது...

"இல்லைடா ராஜா... பெண்ணாய் பிறந்த எல்லோரும் அடைய வேண்டிய மகத்தான உறவு தாய்மை... அதை வலியா நான் நினைக்கலை... இன்னும் கொஞ்ச நேரம் தான் என் குழந்தையைப் பார்க்க போகிறோம்ங்கிற சந்தோசம் மட்டும் தான் என் மனசில் இருந்தது... அதே மாதிரி நீயும் வந்து பிறந்த... அவ்வளவு அழகாயிருந்த நீ... நாங்க ரெண்டு பேரும் உன்னைத் தரையில் நடக்க விடவில்லை... மாத்தி மாத்தி உன்னைத் தாங்கினோம்... எங்களுக்குக் கிடைச்ச வரம் நீ விஷ்ணு..."

அன்னையின் பாசத்தில் அவனது விழிகள் கலங்கியது...

"ஐயம் ரியலி லக்கிம்மா... உங்களை மாதிரியான ஒரு அம்மா எனக்குக் கிடைச்சதுக்கு..."

"நானும் தான்டா... இப்படியொரு மகன் யாருக்கு கிடைப்பான்...? எனக்குக் கிடைச்சிருக்கானே..."

தாயும், மகனும் கொஞ்சி கொண்டதை சிரிப்புடன் பார்த்திருந்த சுந்தரபாண்டியன், "போதும் மீனா... போய்ப் படு... தூக்கம் இல்லைன்னா உன் உடம்பு கெட்டு போயிரும்..."

"விஷ்ணு..." என்று தயங்கிய மீனாட்சியைப் பார்த்து,

"நான் பார்த்துக்கிறேன்... நீ போம்மா..." என்க...

"இல்லை நானும் இங்கேயே படுத்துக்கிறேன்..." என்க...

சிம்மவிஷ்ணுவின் இருபக்கமும் பெற்றோர் இருவரும் படுத்துக் கொள்ள அவன் பாதுகாப்பாய் அவர்களுக்கு இடையில் படுத்துக் கொண்டான்... இத்தனை நாளாய் அவனது மனதில் இருந்த தவிப்பு எல்லாம் ஒட்டுமொத்தமாய் அடங்கிப் போனது... அவன் நிம்மதியாய் உறங்க ஆரம்பித்தான்...

மறுநாள் காலையில் சிம்மவிஷ்ணு மருத்துவரை சந்தித்துத் தலைவலிக்காகப் பரிசோதனை செய்து கொண்டான்... 'ஸ்கேன்' அறிக்கையை வாங்கிப் பார்த்த மருத்துவர்,

"மூளையில் சின்னதா கட்டி ஒண்ணு ஃபார்மாகியிருக்கு... பட் ப்ராப்ளம் ஒண்ணும் இல்லை... டேப்லெட்டில் கரைச்சிரலாம் மிஸ்டர். விஷ்ணு..." என்று மருத்துவர் ஆறுதலாகக் கூற...

"ஓகே டாக்டர்..." என்று புன்னகையுடன் அவன் அதைக் கேட்டுக் கொண்டான்...

ஆனால் அவனது மனதிற்குள் பெரும் புயலடித்துக் கொண்டிருந்தது... பகைவர்களைப் பகை கொண்டு அழிக்க அவனுக்கு அவனது உயிர் வேண்டும்... இந்த முறை அவர்களை வெற்றி பெற விடக் கூடாது... அவனது மனம் வன்மமாய் நினைத்தது...

"இந்த டேப்லெட்டை தினமும் சாப்பிடுங்க... அடுத்தச் செக்கப் த்ரீ மன்த் கழிச்சு வாங்க..."

சரியென்று தலையசைத்து விட்டு எழுந்தவனுக்கு அப்போது தெரியவில்லை... இனி அவன் பரிசோதனைக்கு வர போவதில்லை என்று... ஏனெனில் பிரச்சினைகள் அந்தளவிற்கு அவனைச் சூழ்ந்து கொள்ளப் போகிறது... வேறு எதைப் பற்றியும் அவனை யோசிக்க விடப் போவதில்லை என்று...

பலத்த யோசனையுடன் வீட்டிற்கு வந்த சிம்மவிஷ்ணுவின் கண்களில் வரவேற்பறையில் அமர்ந்திருந்த மாதவன் தென்பட்டான்... அவனைக் கண்டதும் இவனது விழிகள் எரிச்சலுடன் இடுங்கியது... இவன் வந்தது கூடத் தெரியாது அவன் ஏதோ ஒரு யோசனையில் இருப்பது போல் தெரிந்தது... சிம்மவிஷ்ணு மெல்ல அவன் அருகில் சென்றான்... அப்போது மாதவனின் விழிகள் சென்ற திசையை நோக்கி பார்த்தவன் திகைத்துப் போனான்...

அங்குச் சற்று தள்ளி மருதாணியின் மகள் பொன்னி தரையைத் துடைத்து கொண்டிருந்தாள்... கீழே குனிந்து துடைத்து கொண்டிருந்தவளை சிறிதும் லஜ்ஜையின்றி வெறித்துப் பார்த்து ஜொள்ளு விட்டுக் கொண்டிருந்தான் மாதவன்... அவ்வளவு தான் சிம்மவிஷ்ணுவுக்கு ஆத்திரம் தலைக்கேற மாதவனின் தலையில் ஓங்கி ஒரு தட்டுத் தட்டினான்... திடுமென விழுந்த அடியை சற்றும் எதிர்பார்க்காத மாதவன் நிலைத்தடுமாறி கீழே விழுந்தான்...

அவனது சட்டை காலரை கொத்தாய் பிடித்துத் தூக்கியவன், "பொறுக்கி... யார் வீட்டில் இருந்து கொண்டு என்ன காரியம் பண்ணிக்கிட்டு இருக்க...? முதலில் வெளியில் போடா நாயே..." என்று உறும...

சிம்மவிஷ்ணுவின் கர்ஜனையில் பொன்னி பயந்து போய் உள்ளே ஓடிவிட்டாள்...

"ஒரு வேலைக்காரிக்குச் சப்போர்ட் பண்ணிட்டு என்னை நீ அடிக்கிற விஷ்ணு... இது நல்லதுக்கு இல்லை..."

"அவள் வேலைக்காரி இல்லை... என் மக்கள்... அவளுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டியது என் கடமை..."

"என்னமோ இன்னமும் மன்னராட்சி நடப்பது போல் இவங்களுக்கு என்னமா சப்போர்ட் பண்ற... நீ மன்னர் பரம்பரைன்னா நானும் அந்தப் பரம்பரை தான்டா..." என்றான் மாதவன் தெனாவெட்டாய்...

"அதை நீ சொல்லாதே... அதைக் கேவலப்படுத்துவது நீ தான்... நானில்லை..." என்றான் சிம்மவிஷ்ணு கோபமாக...

"விஷ்ணு, மாதவன் சட்டையில் இருந்து கையை எடு..." என்று பதறியபடி அங்கு வந்தார் மீனாட்சி...

அன்னையைக் கண்டதும் தம்பியை முறைத்துக் கொண்டே சிம்மவிஷ்ணு தனது கையை எடுத்தான்...

"சட்டை காலரில் தூசி இருந்தது பெரியம்மா... அதை அண்ணே தட்டிவிட்டுச்சு... அப்படித்தானே விஷ்ணு...?" என்று ஒன்றும் அறியாத பாலகனாய் சிம்மவிஷ்ணுவை கலாய்த்தான் மாதவன்...

"ஆமாம், ஆமாம்... தூசி தான் இருந்தது... இந்தத் தூசி அடிச்சுத் துவைச்சா தான் போகும் போலிருக்கிறது..." என்ற சிம்மவிஷ்ணு தம்பியை முறைத்தபடி கூறியவன் அங்கிருந்து சென்றுவிட்டான்...

"நீ வா மாதவா... அம்மா, அப்பா எல்லாம் எப்படி இருக்காங்க...? மலர், குழந்தை எல்லாம் எப்படி இருக்காங்க...?"

சிம்மவிஷ்ணு பேச்சில் அரண்டு போயிருந்த மாதவன் பெரியம்மாவின் பேச்சில் முகம் மலர்ந்து பேச துவங்கினான்...

****************

குளித்துவிட்டு வந்த நிஷிலா புடவை கட்டி கொண்டிருந்தாள்... புடவை கொசுவத்தை ஒழுங்காக எடுத்து கொண்டிருந்தவள் மனதில் தன் வீட்டில் பாவாடை

சட்டையும், ஜீன்ஸும் போட்ட நினைவு வந்து அவளைக் கண் கலங்க செய்தது... சுடிதார் கூட அவள் போட்டதில்லை... அது கூட அவள் அன்னை அணியும் உடை என்று கிண்டலடித்து அணிய மாட்டாள்... ஆனால் இப்போது எல்லாமே தலைகீழ்... பாட்டிகள் அணியும் புடவையை அவள் அணிந்து கொண்டிருக்கிறாள்... அணியும் உடை கூடவா அவனின் விருப்பத்திற்கு இருக்க வேண்டும்... அவளுக்கு வெறுப்பாக இருந்தது...

புடவை கொசுவத்தைப் பாவாடைக்குள் விட்டு சொருகும் போது அவளது கை வித்தியாசமான ஒரு உணர்வினை உணர்ந்தது... வயிற்றுக்குள் ஏதோ ஒன்று நெளிவது போல்... அவள் புடவை கொசுவத்தைக் கீழே போட்டுவிட்டு வெறும் வயிற்றில் கை வைத்து பார்த்தாள்... மீண்டும் அதே போன்றதொரு உணர்வு... அதில் அவளுக்குக் கண்களை இருட்டி கொண்டு தலைச்சுற்றிக் கொண்டு வந்தது... நிற்க மாட்டாது அப்படியே கட்டிலில் அமர்ந்து விட்டாள்...

என்னவென்று தெரியாத ஒரு புதுமையான உணர்வு அவளது மனதினை தாக்கியது...

"பாப்பா..." என்றபடி அங்கு வந்தாள் மருதாணி... அவளைக் கண்டதும் இவளது விழிகள் மின்னியது...

"மருதாணி இங்கே வாயேன்..." என்றவள் அவளது கையைப் பற்றித் தனது வயிற்றின் மீது வைத்தாள்...

உள்ளே அசையும் சிசுவினை மருதாணி உணர்ந்து மகிழ்ந்து போனாள்...

"அடப்பாரேன் பாப்பா... சின்னய்யா குழந்தை சின்னய்யா மாதிரி சுறுசுறுப்பா இருக்குது..." என்று அவள் ஆச்சிரியப்பட்டாள்...

"இது... இது... குழந்தையின் அசைவு தானா...?" நிஷிலாவின் வார்த்தைகள் உணர்வு பெருக்கில் தடுமாறியது...

"ஆமாம் பாப்பா... ஐஞ்சு முடிஞ்சு ஆறாவது மாசம் பிறந்திருச்சில்ல..."

"ஓ..." என்றவள்,

"உன் சின்னய்யா என்னை என் வீட்டுக்கு கூட்டிட்டு போறேன்னு சொன்னாரே... ஏன் இன்னமும் வரலை...?"

"வந்திருவாரு தாயி... மனுசனுக்கு என்ன வேலையோ...?" என்றவள்,

"நீ சாப்பிட வா பாப்பா..." என்று கூறிவிட்டு அவள் சென்றுவிட...

நிஷிலா குனிந்து தனது வயிற்றைப் பார்த்தாள்... வயிறு பெரிதாக இல்லையென்றாலும் லேசாக மேடிட்டு இருந்தது... கரம் நடுங்க அதை அவள் தடவி கொடுத்தாள்... மனம் வெறுப்பவனின் வாரிசு தான்... அதனாலேயே அவள் அதை வேப்பங்காயாய் வெறுத்து வந்தது... ஆனால் இப்போது ஏனோ அதன் மீது உரிமை கலந்த ஒரு உறவு தோன்றியது...

'என் குழந்தை, என் இரத்தம்...' என்று...

'அவனது குழந்தை அவனைப் போன்று இருக்குமா...? இல்லை என்னைப் போன்று இருக்குமா...? வேண்டாம், அவனைப் போன்று வேண்டாம்... அவனைப் போலிருந்தால் என் வெறுப்பு எல்லாம் அதன் மீது விடியும்... என்னைப் போன்றே இருக்கட்டும்...' என்று நினைத்தவள் அடுத்த நொடி தனது இழிநிலையை நினைத்து அழ துவங்கினாள்...

'வேண்டாம், என்னைப் போலவும் வேண்டாம்... இப்படி ஒரு அரக்கனிடம் மாட்டி கொண்டு தவிக்கவா...? அவனைப் போன்றே இருக்கட்டும்... அப்போது தான் இதை வெறுத்து அவனது கையில் கொடுத்துவிட்டு நான் எனது படிப்பை படிக்க முடியும்... டாக்டராவது என் இலட்சியம்... இந்தக் குழந்தையால் நான் முடங்கிப் போக விரும்பவில்லை... இது

அவனது குழந்தை... அவனே வளர்த்து கொள்ளட்டும்...' என்று அவள் தீர்மானமாய் ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள்...

*********************

காரில் சென்று கொண்டிருந்த பவித்ரன் அலைப்பேசி அழைப்பு வந்ததை உணர்ந்து அதை உயிர்ப்பித்துக் காதில் வைத்தான்... மறுமுனையில் கேட்ட செய்தியில் அவன் அதிர்வுடன் காரை நடுவீதியில் நிறுத்திவிட்டான்... கேட்ட செய்தியை அவனால் நம்பவும் முடியவில்லை... நம்பாது இருக்கவும் முடியவில்லை... பின் சுதாரித்துக் கொண்டு ஓரமாகக் காரை நிறுத்திவிட்டுப் பேச்சினை தொடர்ந்தான்...

"சார் நீங்க சொன்ன மாதிரி சிம்மவிஷ்ணு சாரை பின்தொடர்ந்து கண்காணித்ததில் ஒரு விசயம் கண்டுபிடிச்சேன்... அது ஊருக்கு தள்ளி திண்டுக்கல் போகிற ரோட்டில் ஒரு வீடு இருக்கிறது... அங்கு யாருக்கும் தெரியாது அவரோட ஆட்கள் மாறி மாறி காவலுக்குப் போறாங்க... என்னவாக இருக்கும்ன்னு என்னால் ஊகிக்க முடியலை... மத்தபடி சந்தேகிக்கும்படியான நடத்தை எதுவும் அவரிடத்தில் இல்லை சார்..."

"இது எத்தனை நாட்களாக நடக்கின்றது...?"

"கடந்த ஆறு மாசமாக..."

மறுமுனையில் கூறிய பதிலில் அவன் திகைத்துப் போனான்... லட்சத்தில் ஒரு வாய்ப்பாக அவனது நினைவு உண்மையாக இருந்துவிட்டால்...? அவனது மனம் மாமன்மகளுக்காக அதிர்வுடன் துடிக்க ஆரம்பித்தது...

அதே நேரம் சிம்மவிஷ்ணுவுக்கும் தங்களுக்கும் இடையில் அப்படி என்ன பகை இருக்கக்கூடும்? என்று அவனது மனம் வேகமாகச் சிந்திக்கத் துவங்கியது...

"சில செயலுக்குப் பரிகாரம் இல்லை,
சில செயலுக்குப் பிராயச்சித்தம் இல்லை,
சில செயலுக்குப் பாவமன்னிப்பு இல்லை,

சில செயலுக்குக் கருணை இல்லை,
இவ்வளவு ஏன்...?
சில செயலுக்கு தண்டனையும் இல்லை...
கொன்று புதைக்கப்பட்டது மெய்...
விதைக்கப்பட்ட மெய் இன்று
விருட்சமாய்க் கண்முன் ஓங்கி நிற்கிறது...
வெட்ட வெட்ட முளைக்கும் விருட்சம்,
பட்டு போகாது, உன்னை
பழி கொண்டு காவு கொா(ல்லு)ள்ளும்!!!"

கொல்லும்...!!!

## நிழல் : 7

கொல்கத்தாவின் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சர்வதேச விமானநிலையத்தில் இருந்து வெளியில் வந்தான் சிம்மவிஷ்ணு... அவன் வருவதற்காகவே காத்திருந்தார் போன்று கார் ஒன்று அவன் அருகில் வந்து நின்றது... அதில் இருந்து நடுத்தர வயதுடைய ஒருவர் இறங்கி புன்சிரிப்புடன் அவனை நோக்கி வந்து,

"ஹலோ மிஸ்டர். சிம்மவிஷ்ணு... வெல்கம் டூ கொல்கத்தா..." என்று அவனிடம் கையை நீட்டி வரவேற்க...

"தேங்க்ஸ் ஃபானர்ஜி..." என்றபடி அவன் புன்னகையுடன் அவரது கையைப் பிடித்துக் குலுக்கினான்...

அவர் அவனுக்காகக் காரின் பின்பக்க கதவை திறந்துவிட்டார்... அவர் அவனது நிறுவனங்களின் மேற்குவங்க பிரதிநிதி... அதாவது அவனது நிறுவனத்தின் ஜிஎம்... அவரின் தலைமையின் கீழ் தான் இங்கு அனைத்தும் இயங்குகிறது... சிம்மவிஷ்ணு அவ்வப்போது வந்து பார்ப்பதோடு சரி... முழுப் பொறுப்பும் அவர் வசமே...

ஐந்து நட்சத்திர விடுதியில் அவனை இறக்கிவிட்டவர், "சார், மீட்டிங் எப்போன்னு சொன்னால் ஏற்பாடு பண்ண வசதியா இருக்கும்..." என்று அவனிடம் ஆங்கிலத்தில் வினவ...

"நோ ஃபானர்ஜி... இது அஃபிசில் ட்ரிப் இல்லை... பெர்சனல் ட்ரிப்... சோ எந்த மீட்டிங்கும் தேவையில்லை... டிரைவரோடு கார் மட்டும் இருக்கட்டும்..." என்றான்...

"சார், உங்க சைன் எதுவும் தேவைப்பட்டால்...?"

"எதுவாயிருந்தாலும் இப்போது இல்லை... புரிந்ததா...?" என்று ஆங்கிலத்தில் சற்று கடுமையுடன் ஒலித்த அவனது குரலில் அவர் பயந்து போய்ச் சென்றுவிட்டார்...

எப்போது வந்தாலும் வேலை வேலை என்று பறப்பவன் இன்று இப்படிப் பேசியது கண்டு அவர் மிகவும் குழம்பி போனார்...

அவர் சென்றதும் சிம்மவிஷ்ணு அங்கிருந்த சோபாவில் அமர்ந்தான்... மனம் முழுவதும் மகிழ்ச்சி அலை அடித்தது... இன்னும் சற்று நேரத்தில் அவனது நெருங்கிய உறவை அவன் சந்திக்கச் செல்கின்றான்... எத்தனை நாட்களின் ஓயாத, இடைவிடாத தேடல்களின் முடிவு இது... அவனது தேடல் நேர விரயமாகாமல் பலன் கொடுத்தது குறித்து அவனுக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது...

அந்நேரம் அவனது அலைப்பேசி அடித்தது... எடுத்து பேசியவனின் முகம் ஒரு மாதிரியாக மாறிப் போனது...

"சின்னய்யா, அந்தாளு நம்ம கண்காணிப்பில் தான் இருக்கிறான்... வேணும்ன்னா போட்டு தள்ளிரவா..." என்றவனைக் கண்டு,

"எங்கப்பன் குதிருக்குள்ள இல்லைன்னு நீயே காட்டி கொடுக்கப் போறியா...? அவனை அப்படியே விடு... நீ இடத்தைக் காலி பண்றதுக்கு வேண்டிய ஏற்பாடை மட்டும் பாரு... இன்னும் ஒரு மணி நேரத்தில் நீங்க எல்லோரும் சென்னை கிளம்ப வேண்டும்..." என்றான் கட்டளையாக...

"சின்னய்யா, மருதாணி நாங்க சொன்னா கேட்காது... நீங்களே சொல்லிருங்க..."

"ம், ஃபோனை அவள் கிட்ட கொடு..." என்றவன்,

"மாணிக்கம்..." என்று ஏதோ சொல்ல வரும் முன்,

"சின்னம்மா இருக்காங்களா? இல்லையான்னு பார்த்துட்டு ஃபோன் பேச சொல்லுறேன்..." என்று மறுமுனையில் இருந்தவன் கூற...

சிம்மவிஷ்ணுவின் உதடுகளில் தானாகப் புன்னகை அரும்பியது... மருதாணி பேசுவதற்காக அவன் காத்திருந்தான்... ஐந்து நிமிடங்களில் அவள் அழைப்பில் வந்தாள்...

"சின்னய்யா..." அவளது முதலாளி பயபக்தியை பல மைல்கள் அப்பால் இருந்த அவன் உணர்ந்தான்...

"மருதாணி, இன்னும் ஒரு மணி நேரத்தில் நீங்க எல்லோரும் சென்னை கிளம்பணும்... தயாராயிரு..."

"பாப்பாவுங்களா...?"

"அவள் தான் மிகவும் முக்கியம்..." என்றவனின் குரலில் சிறு எரிச்சல் எட்டிப்பார்த்தது...

"சரிங்கய்யா, சரிங்கய்யா..." என்று வேகமாய்த் தலையாட்டியவள்,

"சின்னய்யா, நம்ம பாப்பா..." என்று இழுக்க...

"அவள் எனக்குப் பாப்பா இல்லை..." என்றான் அவன் காட்டமாய்...

"மன்னிச்சுக்கோங்க சின்னய்யா..." என்று வேகமாய் மன்னிப்பு கேட்டவளின் குரலில் கண்களை மூடி திறந்து தன்னை நிலைப்படுத்திக் கொண்டவன்,

"சொல்லு, அவளுக்கு என்ன...?" என்று கேட்டான்...

"பாப்பா மசக்கையில் ரொம்ப உடம்புக்கு முடியாம இருக்கு..."

"அதுக்கு...? அதுக்கு நான் என்ன செய்யணுமாம்...?" என்று கூர்மையுடன் வந்து விழுந்தது அவனது வார்த்தைகள்...

"நீங்க ஒரு வார்த்தை ஆறுதலா பாப்பா கிட்ட பேசினால்..." என்றவளை இடை நிறுத்தியவன்,

"நான் பேசினால் மட்டும் அவளோட மசக்கை நின்றுவிடுமா...? இப்படி அபத்தமா யோசிக்காம கிளம்பும் வேலையைப் பார்..." என்று கூறிவிட்டு அவன் அழைப்பை துண்டித்து விட்டான்...

நிஷிலா கூறியது மெய் தானோ என்று சந்தேகம் தோன்றியது மருதாணிக்கு... பெரும் தவறு தானும் சேர்ந்து செய்கிறோமோ என்று அவள் மனதிற்குள் மிகவும் வருத்தம் கொண்டாள்... நேரே நிஷிலாவை தேடி அவளது அறைக்குச்

சென்றாள்... நிஷிலா இன்னமும் எழுந்திருக்கவில்லை... உடல் அயர்வில் அசந்து உறங்கி கொண்டிருந்தாள்... அவள் அருகில் சென்று அவளையே பார்த்து கொண்டிருந்தாள் மருதாணி...

'இங்கு வந்த போது எப்படியிருந்த பொண்ணு இன்று இப்படியாகி விட்டதே...?' என்று அவளுக்கு வேதனையாக இருந்தது...

தேவதை பெண்ணாய் இங்கு வந்த நிஷிலா இப்போது கண்ணுக்குக் கீழ் கருவளையம் விழுந்து, உடல் மெலிந்து பார்ப்பதற்கு யாரோ போலிருந்தாள்... கண்களில் துளிர்த்த விழிநீரை துடைத்துக் கொண்டே மருதாணி அவளை எழுப்பினாள்...

"பாப்பா எழுந்திரும்மா..."

"ம், ம்... இன்னும் கொஞ்ச நேரம் மருதாணி... நைட் எல்லாம் தூங்காம இப்போ தான் கண் அசந்தேன்..." மூடிய விழிகளைத் திறவாது நிஷிலா பதில் அளித்தாள்...

"பாப்பா, நாம சென்னைக்குக் கிளம்பணுமாம்..."

'சென்னை' என்ற சொல் அவளிடம் மாயாஜாலம் செய்தது... முகம் மலர புன்னகையுடன் எழுந்தமர்ந்தவள்,

"உண்மையாவா சொல்ற மருதாணி..." அவளது குரலில் தான் எத்தனை மகிழ்ச்சி...

"ஆமாங்கண்ணு..." என்ற மருதாணி அவளது தலையை வாஞ்சையுடன் தடவி கொடுத்தாள்...

"ராட்சசன் வந்துவிட்டானா...?" என்று ஆர்வமாய்க் கேட்டவளை செல்லமாய் முறைத்தாள் மருதாணி...

"எங்க சின்னய்யா உனக்கு ராட்சசனா...?"

"இல்லையா பின்னே...?" என்றபடி அவள் கட்டிலில் இருந்து எழுந்தாள்...

"நீ அவரை என்ன வேணா சொல்லிக்கோ பாப்பா... ஆனா எங்களுக்கு அவர் தெய்வம் தான்..." என்ற மருதாணியின் வார்த்தையில் உதட்டை சுளித்தாள் நிஷிலா....

"சின்னய்யா வரலை... நாம மட்டும் தான் போறோம்..." குளியலறை நோக்கி சென்றவள் மருதாணியின் வார்த்தையில் நின்று திரும்பி பார்த்தாள்...

"அவன் இல்லாமல் நான் எப்படி என் வீட்டுக்கு போக முடியும்...? இதுக்கு... இதுக்கு நான் என்ன காரணம் சொல்வேன்...?" மேடிட்டு இருந்த தனது வயிறை தடவியபடி அவள் கண்கலங்கி போனாள்...

சின்னவளுக்கு என்ன ஆறுதல் கூறுவது? என்று தெரியாது பெரியவளும் சேர்ந்து கண்கலங்கினாள்...

"தேவையில்லாம கண்டதையும் யோசிக்காதே பாப்பா... சின்னய்யா வந்திருவாரு..." என்று மருதாணி அவளைச் சமாதானம் செய்தாள்...

"வேண்டாம், அவன் ஒண்ணும் வர வேண்டாம்... இத்தனை நாளாய் அவனுடைய துணையோடு தான் நான் வாழ்ந்தேனா...? அவன் எனக்குத் தேவையில்லை..." மருதாணிக்கு சொல்வது போல் அவள் தனக்குத் தானே ஆணித்தரமாகச் சொல்லி கொண்டாள்...

"பாப்பா..."

"ஒன்றும் பேசாதே..." கடுப்புடன் கூறிவிட்டு குளியறைக்குள் புகுந்து கதவை சாத்தி கொண்டாள்...

அடுத்த அரைமணி நேரத்தில் நிஷிலா மருதாணியோடு சென்னைக்குக் கிளம்பினாள்... அதே நேரம் பவித்ரன் சென்னை விமானநிலையத்தில் மதுரை செல்லும் விமானத்தில் ஏறியமர்ந்திருந்தான்...

பவித்ரனிடம் சிம்மவிஷ்ணுவை பற்றிக் கண்காணித்துக் கூறியவன் மதுரையில் இருந்து கிளம்பி வந்து அந்தப் பங்களாவை விசாரித்து அதைச் சென்றடைந்த போது

அங்கு யாரும் இல்லை... உடனே அவன் பவித்ரனை தொடர்பு கொண்டான்... மறுமுனையில் விமானம் கிளம்பியதால் பவித்ரனின் அலைப்பேசி அணைத்து வைக்கப்பட்டிருந்தது... என்ன செய்வது என்று தெரியாது அவன் மீண்டும் மதுரைக்குக் கிளம்பினான்... நேரே விமானநிலையத்தில் பவித்ரனை சந்தித்து விசயத்தைக் கூறுவதற்காக...

கொல்கத்தாவில் சேரி போன்றிருந்த பகுதியில் சிம்மவிஷ்ணுவின் கார் நின்றது... அதிலிருந்து வேகமாய் இறங்கியவன் அந்த இடத்தைக் கண்டு சற்றும் அருவருப்பு அடையாது தன்னிடம் இருந்த முகவரியை தேடி விரைந்து நடந்தான்... சிறிய சந்தில் இருந்த அந்த வீட்டை அவன் வெகுசுலபமாகக் கண்டுபிடித்து விட்டான்... அவன் மிகுந்த எதிர்பார்ப்புடன் அந்த வீட்டின் முன் சென்று நின்று கதவை தட்டினான்... சில பல தட்டல்களுக்குப் பின் கதவு திறந்தது...

சுமார் அறுபத்தைந்து வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவர் வந்து கதவை திறந்தார்... சிம்மவிஷ்ணுவை கண்டு அவர் யோசனையாய் விழிகளைச் சுருக்கினார்... அவனது உயர்தரத் தோற்றம், ஆடை, தோரணை எல்லாம் அவருக்கு அந்நியமாகத் தோன்றியது போலும்... அவரை மாதிரியான குடிசைவாசியைத் தேடி அவன் எதற்காக வந்திருக்கிறான் என்பது போல் அவர் அவனை உற்று பார்த்து வைத்தார்...

ஆனால் அவனுக்கு அவரை நன்கு அடையாளம் தெரிந்தது... முடிகள் நரைத்து, தோல்கள் சுருங்கிய போதும் அவரை அவனால் மறக்க முடியுமா என்ன...?

"அப்பா..." என்றான் அவன் விழிகள் கலங்க, பாசமாக...

இந்த உலகத்தில் அவரை 'அப்பா' என்று பாசமாக அழைக்கும் ஒரே ஜீவன் அவன் ஒருவனே... ஆனால் அவன்...??? அவரது நினைவுகள் பழைய நிகழ்வில் சிக்கி தவித்து வேதனையாய் உழன்றது...

"நான் தான்ப்பா சுடலைமுத்து..."

அவர் அதிர்ந்து போய்ப் பின்னால் நகர்ந்தார்... இது எப்படிச் சாத்தியமாகும்...? தன் மகன் சுடலைமுத்துவா இவன்...? அவரால் தனது கண்களை நம்ப முடியவில்லை...

"ஏம்ப்பா இன்னமும் நீங்க என்னை நம்பலையா...?" என்று அவன் பரிதவிப்புடன் கேட்டான்...

அவர் இன்னமும் திகைப்பில் இருந்து மீளவில்லை... வாய் ஆவென விரிந்திருக்க, விழிகள் இரண்டும் பெரிதாய்த் திறந்திருக்க அவர் நின்ற கோலமே சொல்லாமல் சொல்லியது அவரது அதிர்வின் அளவை...

"உங்க பெயர் மாடசாமி... திருநெல்வேலி மாவட்டம் விஜயநாராயணம் உங்க சொந்த ஊர்..." அவன் அதற்கு மேலே கூறிய விசயங்களைக் கேட்க, கேட்க அவர் திகைப்பின் உச்சிக்கே சென்று விட்டார்...

"நீ என்னோட சுடலை தான்ப்பா..." என்றவர் அவனைக் கண்ணீர் மல்க அணைத்துக் கொண்டார்...

"அப்பா..." என்று கண்களில் இருந்து கண்ணீர் வடிய அவனும் அவரை அணைத்துக் கொண்டான்...

அவனை அழைத்து வந்து அங்கிருந்த கட்டிலில் அமர வைத்து தானும் உடன் அமர்ந்தார் மாடசாமி... அவனோ கட்டிலில் அமராது அவர் முன் மண்டியிட்டு அமர்ந்து அவரது மடியில் முகம் புதைத்துக் கொண்டான்... பெரும் அழுகையில் அவனது முதுகு குலுங்கியது... அவரோ அவனை எப்படித் தேற்றுவது? என்று தெரியாது விழித்தார்...

பெற்றோரிடம் கூடச் சொல்ல முடியாத துக்கம், வேதனை அவனது... இத்தனை நாளாய் தன்னை வருத்திய மனதின் வலியை இப்போது தனது அழுகையின் மூலம் அவன் தீர்த்துக் கொண்டான்... ஆண்பிள்ளை அழ கூடாது என்று யார் சொன்னது...? வலி என்பது இருபாலருக்கும் பொதுவான சொல்... நெஞ்சுரம் கொண்ட

ஆண்பிள்ளையான அவனாலும் தனது வலியை தாங்கி கொள்ள முடியவில்லை...

சிறிது நேரம் அழுகையில் கரைந்தவன் தானாக அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவரை நிமிர்ந்து பார்த்தான்... அவனால் அவரிடமும் விசயத்தை முழுதாகக் கூற முடியவில்லை... கூறினால் அவராலும் இப்படிச் சாதாரணமாக இருக்க முடியாது... அதனால் அவன் தனது துக்கத்தினைத் தனக்குள் போட்டு புதைத்துக் கொண்டான்...

"நீங்க ஏன்ப்பா இங்கே வந்து கஷ்டப்படணும்...? நம்ம ஊரிலேயே இருந்திருக்கலாமே...?"

"அங்கே யாருப்பா எனக்கு இருக்கா...? நீ பிறக்கிறதுக்கு முந்தி வடக்கே வந்து செட்டிலாயாச்சு... எல்லாம் போன பிறகு வாழ்க்கையே சூன்யமானது போலாகிருச்சு... அதுக்கு அப்புறம் ஊருக்கு போக மனசு வரலை..." என்றவரை கண்டு அவனுக்கு இரக்கம் சுரந்தது...

"கவலைப்படாதீங்கப்பா... உங்களுக்கு நானிருக்கேன்..." என்றபடி அவன் அவரை அணைத்துக் கொள்ள...

"இந்த வார்த்தை ஒண்ணு போதும்ப்பா... எனக்குப் போதும்..." என்று கூறிய பெரியவரின் விழிகள் பாசத்தில் கசிந்தது...

"இனியும் நீங்க இங்கே தனியே இருக்க வேண்டாம்... என்னோடு கிளம்பி வாங்க..."

"நான் எப்படி உன்னோடு...?" அவர் மிகவும் தயங்கினார்...

"நான் உங்க மகன் என்பது உண்மைன்னா நீங்க என் கூட வரணும்..."

"நான் அங்கே வந்தா உன் குடும்பத்தில்...?" அவர் கேள்வியாய் நிறுத்தினார்...

"என்னுடைய அப்பா, அம்மா ஒண்ணும் சொல்ல மாட்டாங்க... அவங்க ரொம்ப நல்ல மாதிரி..." என்றான்

அவன் பெருமிதத்தோடு...

"அப்போ சரி... நான் உன் கூட வர்றேன்... கடைசிக் காலத்தில் இப்படி ஒரு பேறு கிடைக்கும்ன்னு நான் நினைச்சு கூடப் பார்க்கலை..." என்று அவர் மனம் நெகிழ்ந்து கூறினார்...

அவரைப் பார்த்து நிறைவாய் புன்னகைத்தவன் கீழே தரையில் அமர்ந்து கொண்டு அவரது மடியில் தலை சாய்த்து, "என்னோட பெயரில் இருக்கும் சுடலை சாமியை பத்தி கதை சொல்வீங்களே ஞாபகம் இருக்கா...?" என்று கேட்க...

"ஏன் ஞாபகம் இல்லாம...? நல்லா ஞாபகம் இருக்கு..." என்றவர் அந்தக் கதையை மீண்டும் சொல்ல துவங்கினார்... அவரது கணீர் குரல் அவனது செவியில் நுழைந்து அவனது மனதினை சென்றடைந்து அவனை அமைதிப்படுத்தியது...

அன்று முழுவதும் அவன் அவருடனே இருந்தான்... அவர் சமைத்து ஊட்டிவிட அவன் விழிகள் கலங்க அதை உண்டான்... அதே போல் அவனும் அவருக்கு ஊட்டிவிட அவரது விழிகளும் கலங்கி போனது... மாலை பொழுதில் அங்கிருந்த பொருட்களை எல்லாம் அருகில் இருந்தவர்களிடம் கொடுத்துவிட்டு அவன் அவரைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு சென்றான்...

நேரே அவர் ஓட்டுநராக வேலை செய்யும் வீட்டிற்கு வந்து விசயத்தைக் கூறி அவரைத் தான் அழைத்துச் செல்வதாகக் கூறினான்... அவர்களும் சந்தோசத்துடன் மாடசாமியை அவனுடன் வழியனுப்பி வைத்தனர்...

அவரை அழைத்துக் கொண்டு அவன் விமானநிலையத்திற்கு வந்த போது அவர் அந்த இடத்தைப் பிரமிப்பாய் பார்த்தார்...

"சுடலை, நீ ரொம்ப வசதியாடே...?" என்று கேட்டவரின் விழிகள் ஆச்சிரியத்தில் சுற்றும் முற்றும் பார்த்தபடி

இருந்தது...

"ஆமாம்..." என்றான் அவன் புன்னகையுடன்...

"வசதி மட்டுமில்லைப்பா... மன்னர் பரம்பரை... குடும்பத்துக்கு ஒரே வாரிசு..." என்று பெருமையாகக் கூறியவன்,

"சில விசயங்களில் நம்மை அறியாமல் நன்மை நடக்கும் போது கடவுள் இருக்கிறான்னு தான் தோணுது..." என்று எதையோ நினைத்து அவன் பெருமூச்சு விட்டான்...

"உன் நல்ல மனசுக்கு எந்தக் குறையும் வராது..." என்று அவர் கூற... அவன் புன்னகையுடன் அதை ஆமோதித்தான்...

சென்னை செல்லும் விமானத்தில் ஏறியமர்ந்தவன் அங்கே தனக்காகக் காத்திருக்கும் பிரச்சினைகளைப் பற்றி யோசிக்கத் துவங்கினான்...

**********************

"நல்லா யோசிச்சு சொல்லுங்க... இது யாருடைய பங்களா...?"

அந்தப் பங்களா அருகில் இருந்த கிராமத்தில் உள்ளவர்களிடம் பவித்ரன் விசாரித்துக் கொண்டிருந்தான்... அவனது மனதிலோ பெரும் தவிப்புக் காணப்பட்டது...

"நல்லா யோசித்துத் தான் சொல்றோம் தம்பி... இந்தப் பங்களா ஓனரு பத்து வருசத்துக்கு முந்தி அமெரிக்கா போயிட்டாரு... மாசத்துக்கு ஒரு தடவை வேலைக்காரி வந்து இதைச் சுத்தப்படுத்திட்டு போவாள்..." என்று அனைவரும் ஒருமித்த குரலில் ஒன்று போல் கூறினர்...

அதைக் கேட்டு பவித்ரனும், அவனுடன் வந்தவனும் தலையைப் பிய்த்து கொண்டனர்... வேறுவழியின்றிப் பவித்ரன் தனது தாயை தொடர்பு கொண்டு கேட்ட போது அவர் அவனைச் சத்தம் போட்டார்...

"ஆதாரம் இல்லாது இப்படி வீணே அலையாதே தீரா... நீ சின்னப்பிள்ளை இல்லை... இங்கே நீ இல்லாது அத்தனை மீட்டிங்கும் கேன்சலாகி இருக்கு... ரெண்டு தொழில் பேச்சுவார்த்தை அப்படியே அந்தரத்தில் நிற்கிறது... இனியாவது கொஞ்சம் மெச்சூர்ட்டா பிஹேவ் பண்ணு..." என்று அவர் சத்தம் போட்டார்...

"மாம், இது நம் நிஷி சம்பந்தப்பட்டது..." அவனுக்குச் சற்றுக் கோபம் வந்தது...

"யாராக இருந்தாலும் கொஞ்சம் அறிவை யூஸ் பண்ணி யோசி தீரா... இப்படி முட்டாள்த்தனமான காரியத்தை இனி செய்யாதே... முதல் வேலையாய் நீ இங்கே கிளம்பி வரும் வழியைப் பார்..." என்று கண்டிப்புடன் கூறியவர் அழைப்பை துண்டித்துவிட்டார்...

பவித்ரன் மனதிற்கு வருத்தமாக இருந்த போதும் உடனே சென்னைக்குக் கிளம்பிவிட்டான்...

சென்னை வந்த சிம்மவிஷ்ணு அங்கிருந்த நட்சத்திர விடுதியில் மாடசாமியை தங்க வைத்தான்... சென்னையில் அவனுக்கு என்று தனியே பெரிய பங்களா இருந்தது... ஆனால் அங்குச் செல்ல அவனுக்கு விருப்பம் இல்லை... அதனால் அவனும் அவருடன் தங்கிவிட்டான்... ஏனெனில் அவன் மனதால் வெறுக்கும் நிஷிலா அங்குத் தானே தங்க வைக்கப்பட்டிருக்கிறாள்...

மறுநாள் காலையில் கிளம்பி தயாரானவன் மாடசாமிக்கு உணவை அறைக்கே வரவழைத்து அவரை உண்ண செய்தவன் தானும் உண்ண ஆரம்பித்தான்... உண்டு முடிந்ததும்,

"அப்பா, நான் வெளியில் போயிட்டு மதியம் வந்துவிடுவேன்... அதன் பிறகு உங்களை மதுரைக்கு அழைத்துச் செல்கிறேன்..."

"உன் அப்பா, அம்மா ஒண்ணும் சொல்ல மாட்டாங்களா...?" மீண்டும் அவர் அதையே கேட்க...

"ம்ஹூம், அவர்களது மகன் சொல் தான் அவர்களுக்கு வேதவாக்கு... நான் கூறுவதற்கு மறுபேச்சு பேச மாட்டாங்க...ரொம்ப நல்லவங்க..."

"நீ கொடுத்து வைத்தவன் சுடலை..."

"நிச்சயமாய்..." என்று முறுவலித்தவன் அவரது காலில் விழுந்து வணங்கினான்...

"நீ பதினாறு பெற்றுப் பெருவாழ்வு வாழ வேண்டும் சுடலை..."

"ஒன்றை பெற்றுக் கொண்டு நான் என்ன பாடுபடப் போகிறேனோ...?" என்று புதிராய் கூறியவன் அவர் மேலே கேள்வி கேட்கும் முன் அங்கிருந்து சென்றுவிட்டான்...

சிம்மவிஷ்ணு நேரே சென்ற இடம் நிஷிலா தங்க வைக்கப்பட்டிருந்த பங்களாவிற்கு... வீட்டினுள் வேகமாய் நுழைந்தவன் கண்ணில் முதலில் தென்பட்டது வரவேற்பறையில் அமர்ந்திருந்த நிஷிலாவின் மேடிட்டிருந்த வயிறு தான்... அவனைக் கண்டதும் அவள் பயத்துடன் எழுந்து நின்றாள்... அவளை நோக்கி விரைந்து வந்தவன் அவளது முகத்தைக் கூடப் பார்க்காது அவளது வயிற்றின் மீது கை வைத்து,

"குழந்தை நன்றாக வளர்ந்துவிட்டது இல்லையா...? இனி உன்னாலோ, உன் வீட்டாராலோ இதை ஒன்றும் செய்ய முடியாது... அப்படித் தானே...?" என்று கேட்டவனின் குரலில் தான் எத்தனை வன்மம்... அவள் திகைப்பாய் அவனைப் பார்த்தாள்... பின்பு கோபமாய் அவனது கையைத் தட்டிவிட்டவள்,

"இதற்காகத் தானா இத்தனை நாளாய் என்னைப் போக விடாது தடுத்தது..." என்றவளின் குரலில் அழுகை நிறைந்திருந்தது...

"இல்லையா பின்னே..." என்றவனது பார்வை இன்னமும் அவளது முகத்தினை நிமிர்ந்து பார்க்கவில்லை... அவளது வயிற்றின் மீதே நிலைத்திருந்தது...

இவனிடம் பேசி பிரயோஜனம் இல்லை என்பதை உணர்ந்தவளாய் அவள், "நான் என் வீட்டுக்கு போகணும்..." என்றாள் மெல்லமாய்...

"அதற்காகத் தானே நான் வந்திருக்கிறேன்... வா போகலாம்..." என்று கூறிக் கொண்டே அவன் முன்னே நடக்க...

"ஒரு நிமிசம்...." அவளது குரலில் நின்றவன் அவளைத் திரும்பி பார்த்தான்...

"இந்தாங்க..." அவன் முன் அவள் தனது வலக்கை உள்ளங்கையை விரித்தாள்...

அதில் அவன் போட்டுவிட்ட தங்க சங்கிலி இருந்தது... அதை உற்று நோக்கியவன் மறுநொடி அதை எடுத்து தனது சட்டை பையில் போட்டபடி அவளது முகத்தினைக் கூர்ந்து நோக்கினான்... அவனது பார்வைக்கான அர்த்தம் புரியாது பாவையவள் குழம்பி போனாள்...

"பாப்பா..." என்றபடி அங்கே வந்தாள் மருதாணி...

"என்ன மருதாணி...?" என்று கேட்டவளை கண்டு,

"என்னை மறந்துட்டு போறியே பாப்பா..."

"உன்னை எப்படி மறப்பேன் மருதாணி...?" என்று அவளை அணைத்துக் கொண்டு கண்ணீர் விட்டவள்,

"உன்னை ரொம்பப் பிடிக்கும் மருதாணி... ஆனா நீ இவன் கூடச் சேர்ந்துக்கிட்டு என்னைப் படுத்தியது தான் என்னால் தாங்கிக்க முடியலை... நீ நினைச்சிருந்தா நான் என்றோ தப்பிச்சியிருப்பேன்..." என்றவளை கண்டு மருதாணி செய்வதறியாது கைகளைப் பிசைந்தாள்...

சிம்மவிஷ்ணுவோ ஒன்றும் பேசாது இருவரையும் அழுத்தமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான்...

"பாப்பா, இந்த மாதிரி நேரத்தில் பார்த்து சூதானமா இருக்கணும்... உனக்குத் தெரியலைன்னா அம்மா கிட்ட

பக்குவம் கேட்டுக்கோ..."

"ஒரு மண்ணும் வேண்டாம்... இது இவனுடைய குழந்தை... பெத்து இவன் கையில் கொடுப்பதற்கு எதற்கு இத்தனை பக்குவம்...?" என்று கோபப்பட்டாள் நிஷிலா...

சிம்மவிஷ்ணு அதற்கும் பதில் பேசாது அழுத்தமாய் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்... இப்போதும் அவனது பார்வைக்கான அர்த்தம் அவளுக்குப் புரியவில்லை...

'நீ பார்க்கும் பார்வைக்கான அர்த்தம் என்றைக்குத் தான் எனக்குப் புரிஞ்சியிருக்கு...' என்று உதட்டை சுளித்துக் கொண்டவள் மருதாணியைப் பார்த்து,

"நீ நல்லவள் தான் மருதாணி... ஆனா இவனோடு சேர்ந்து நீயும் கெட்டவளாக்கிட்ட... அதனால் இவனோடு சேர்ந்து உனக்கும் தண்டனை உண்டு..." என்று மிரட்டலாய் கூறியவளின் கைகளைப் பிடித்துக் கொண்டு அழுதுவிட்டாள் மருதாணி...

"அப்படியாவது தண்டனை வாங்கிக் கொடு பாப்பா... இப்படி ஒரு வேதனை எனக்கு வேண்டாம்..." என்று அவள் கதற...

"மருதாணி..." என்று அவன் அதட்டியதில் அவள் தனது வாயை மூடி கொண்டாள்...

வெளியில் வந்த நிஷிலா தனது வீட்டின் ஞாபகத்தில் காரின் முன்பக்கமாய் ஏறியமர போனாள்... அதைத் தடுத்த சிம்மவிஷ்ணு, "எனக்குச் சரிசமமாய் உட்காரும் அருகதை உனக்கு மட்டுமல்ல, உன் குடும்பத்தாருக்கே கிடையாது... மதுரையை ஆண்ட மன்னர் பரம்பரை என்னுடையது... என் வீட்டில் வேலை செய்யக் கூடத் தகுதி இல்லாதவள் நீ... இப்போது உன் நிலை என்னன்னு உனக்குப் புரிந்திருக்குமே..." என்றவனது பார்வை இகழ்ச்சியாய் அவளது மேடிட்ட வயிறு மீது படிந்தது...

'தாசி' என்று சொல்லாமல் சொல்லும் அவனை வெறித்தபடி பார்த்தவளின் விழிகளில் கண்ணீர் கூட வற்றிப் போனது...

புதிதாய் கேட்டால் தானே அவள் இதற்காக வருத்தப்பட வேண்டும்... தினமும் அவளை அணுகும் போது அவன் கூறும் வார்த்தை இது... அதனால் இந்த வார்த்தையைக் கேட்டு கேட்டு அவளது மனமும், உடலும் மரத்துப் போயிருந்தது...

"மன்னர் பரம்பரையைச் சேர்ந்த உங்களைத் தேடி நான் வரவில்லை... இந்தத் தாசியைத் தேடி வந்தது நீங்க தான்... என்னோடு கூடி குலாவியதும் நீங்க தான்... என் வயிற்றில் பிள்ளையைக் கொடுத்ததும் நீங்க தான்..." என்று ஆத்திரத்துடன் கூறியவள் அவன் முகம் பார்க்காது காரிலேறி அமர்ந்தாள்...

சுற்றி வந்து காரை எடுத்தவனின் முகம் பாறை போல் இறுகி போயிருந்தது... அதை அவள் பார்த்தாலும் பெரிதாய் கண்டு கொள்ளவில்லை...

'இனி உன் ஆட்டம் என்னிடம் நடக்காது... போடா...' என்று மனதிற்குள் அவனிடம் அலட்சியமாகக் கூறி கொண்டாள்...

அடுத்த முக்கால் மணி நேரத்தில் அவளது வீட்டின் முன் சென்று கார் நின்றது... வில்லில் இருந்து புறப்படும் அம்பு போல் அவள் அத்தனை வேகமாகக் கார் கதவை திறந்து கொண்டு வீட்டினுள் ஓடினாள்... அவளது செய்கையை உணர்வில்லாது பார்த்தபடி இறங்கிய சிம்மவிஷ்ணு தானும் அவளைத் தொடர்ந்து வீட்டினுள் நுழைந்தான்...

அங்கிருந்த வரவேற்பறையில் எல்லோரும் கூடியிருந்தனர்... அலுவலகம் செல்லும் முன் அவர்கள் முக்கிய வேலைகளைப் பற்றி ஆலோசனை நடத்தி கொண்டிருந்தனர்... பத்ரிநாத் மட்டும் அங்கில்லை... அவர் தொழில் விசயமாகப் பெங்களூர் சென்றிருந்தார்...

எதிர்பாராது நிஷிலாவை அங்குக் கண்டதும் எல்லோரும் அதிர்ந்து போய் அமர்ந்திருந்த சோபாவில் இருந்து எழுந்து நின்றுவிட்டனர்... ஸ்தம்பித்த நிலை என்று சொல்வோமே... அப்படியொரு மனநிலையில் அவர்கள் அனைவரும்

இருந்தனர்... பவித்ரன் மட்டுமே சுதாரித்துக் கொண்டு அவளை நோக்கி விரைந்து வந்தான்...

"நிஷிம்மா..." என்றபடி இருகரம் கொண்டு அவளை அணைத்துக் கொண்டான்...

அவனைத் தொடர்ந்து மற்றவர்களும் தங்களைச் சுதாரித்துக் கொண்டு அவளைச் சூழ்ந்து கொண்டனர்... காணாமல் போனவள் திரும்பக் கிடைத்த மகிழ்ச்சியில் அவளை அணைத்துக் கண்ணீர் வடித்தவர்கள் அவளது நிலையைச் சரிவரக் கவனிக்கத் தவறி போயினர்...

"உங்க பாசமலர் கொஞ்சல்களைக் கொஞ்சம் நிறுத்தினால் நான் பேச வேண்டியதை பேசிவிட்டு போய்விடுவேன்..." என்றபடி அங்கே வந்து நின்றான் சிம்மவிஷ்ணு...

"டேய், நீ எதுக்குடா இங்கே வந்த...?" என்றபடி பவித்ரன் பாய்ந்து வந்து அவனது சட்டையைப் பிடித்தான்... ஏனோ அவனைக் கண்டாலே இவனுக்குப் பிடிக்கவில்லை....

"உன் மாமன்மகளின் வயிற்றில் வளரும் குழந்தைக்கு அப்பா என்கிற உறவு முறையில் நான் இங்கே வந்தேன்..."

கொஞ்சமும் அலட்டி கொள்ளாது கூறியவன் பவித்ரனின் பிடியில் இருந்து தனது சட்டையை நிதானமாக விடுவித்துக் கொண்டான்... பவித்ரனின் திகைத்த நிலை அதற்குச் சாதகமாகி போனது...

அப்போது தான் எல்லோரும் நிஷிலாவை கவனித்தனர்... மேடிட்டிருந்த அவளது வயிறு கண்டு எல்லோரும் அதிர்ந்து போயினர்...

"நிஷா", "நிஷிம்மா" என்று எல்லோரும் திகைப்புடன் கூவினர்...

"இது என்ன கோலம்டி...?" அருந்ததி தலையில் அடித்துக் கொண்டு அழுதார்...

அவரைப் பார்த்துப் போலியாய்ப் பரிதாபப்பட்ட சிம்மவிஷ்ணு, "நீங்க இவ்வளவு பதறும் அளவுக்கு

ஒண்ணும் நடந்துவிடவில்லை... நிலா ஒரு பார்ட்டியில் வைத்து என்னைப் பார்த்திருக்கிறாள்... என் அழகில் மனம் மயங்கி வலிய என்னிடம் வந்து வாழ்ந்தால் உங்களுடன் தான் வாழ்வேன் என்றாள்... நானும் போனால் போகிறது என்று அவளை என்னுடன் சேர்த்துக் கொண்டேன்... தாலி கட்டாது முறையற்ற வாழ்க்கைக்கு உங்களது மகள் தான் சம்மதித்தாள்... எங்கள் மன்னர் பரம்பரையில் இது எல்லாம் சகஜம்... ஊருக்கு ஒரு வைப்பாட்டி வைத்திருப்பார்கள்... அழகான பெண் ஒருத்தி வலிய வரும் போது விலகி செல்ல நான் என்ன புத்தனா...? அதன் விளைவு இந்தக் குழந்தை... எனக்கு இவளுடனான வாழ்க்கை போர் அடித்து விட்டது... இதற்கு மேல் எங்களுக்குள் ஒத்து போகும் என்று தோன்றவில்லை... அதான் அவளை இங்கே கொண்டு வந்து விட்டு விட்டேன்... நான் வந்த வேலை முடிஞ்சது..." என்று இருகரங்களைக் கூப்பியபடி விடைப்பெற்றவன் அருகில் வேகமாய் வந்த நிஷிலா அவனது சட்டையைக் கொத்தாகப் பற்றியபடி,

"பொய் சொல்லாதேடா... நானா உன்னிடம் வலிய வந்தேன்... பாவி படுபாவி..." என்று அவனைக் கண்டு வெறுப்பாய் வார்த்தைகளை உமிழ்ந்தவள் தனது வீட்டார் புறம் திரும்பி தனது கழுத்தில் கிடந்த தடிமனான தங்க சங்கிலியை எடுத்து காட்டி,

"இந்தத் தாலி இவன் கட்டியது தான்... இது முறையற்று வந்த குழந்தை இல்லை... முறையோடு வந்த குழந்தை தான்... இவன் பொய் சொல்கிறான்..." என்று கூறியபடி இரு கைகளால் முகத்தை மூடி கொண்டு அழுதவளை கண்டு சிம்மவிஷ்ணுவின் உதடுகளில் விசித்திரமான புன்னகை வந்தமர்ந்தது...

அந்நேரம் அவனது விழிகளை அவள் சந்தித்திருந்தால் அவனது இத்தனை நாள் பார்வைக்கான அர்த்தம் இன்று அவளுக்குப் புரிந்திருக்கும்... அவளோ அவனைப் பார்க்காது தனக்குள் கழிவிரக்கத்தில் கரைந்து கொண்டிருந்தாள்...

'இது, இது தான்டி எனக்கு வேண்டும்... உன் வாயால் நீ என்னை அடையாளம் காட்டணும்... நான் உன் கணவன்... நீ என் மனைவி... இது இந்த ஜென்மம் மட்டுமல்லாது இனிவரும் ஜென்மங்களிலும் தொடரும் பந்தம் நம்முடையது... எத்தனை ஜென்மம் எடுத்தாலும் நான் உன்னை விட மாட்டேன்டி... என் குழந்தைக்கு அம்மா நீ தான்... உன் குழந்தைக்கு அப்பா நான் தான்... இதை நீயே ஊருக்கு உரக்க சொல்லு... அத்தோடு உன் குடும்பத்தாருக்கும் சேர்த்து... நீயும், நானும் உடலால் பிரிந்திருந்தாலும், மனதால் விலகியிருந்தாலும் பிரியாத உறவு நம்மளுடையது... யாராலும் பிரிக்கவும் முடியாது... பிரிக்கவும் விட மாட்டேன்...'

"காதலில்லா உறவு,
காமமில்லா உறவு,
கடமையில்லா உறவு,
துரோகம் கொண்ட உறவு,
குரோதம் கொண்ட உறவு,
விரோதம் கொண்ட உறவு,
பழி வாங்கும் உறவு,
பகை முடிக்கும் உறவு,
பிணி தீர்க்கும் உறவு,
எத்தனை உறவு இருந்த போதும்
உனக்கும் அவளுக்குமான உறவு
உயிராய் அவளுள்... உன்
வன்ம தீயில் பொசுங்குவது
உன்னுயிரன்றோ...!!!"

கொல்லும்...!!!

## நிழல் : 8

"இது இவன் கட்டிய தாலி தான்... இது இவன் குழந்தை தான்... ஆனா இவன் எனக்குக் கணவன் இல்லை... என் விருப்பம் இல்லாமல் என் கழுத்தில் தாலி கட்டி, என் விருப்பம் இல்லாமல் என்னுடன் வாழ்ந்து என் வயிற்றில் குழந்தையைக் கொடுத்த இந்த ராட்சசன் என் கணவன் இல்லை... இவனுக்கும் எனக்கும் எந்த உறவும் இல்லை..."

நிஷிலா அழுது கொண்டே கூற... அதைக் கேட்டு அவளது பெற்றோர் அதிர்ந்து போயினர்... அவர்களது செல்ல மகளுக்கா இந்த நிலை என்று...? தேவதை போல் போற்றிப் பாதுகாக்கப்பட்டவளுக்கா இந்த நிலை என்று மனம் மறுகி போயினர்...

பவித்ரனின் நிலை சொல்லவும் வேண்டாம்... அவளுக்காக அவன் தன் உயிரையும் கொடுப்பவன்... அவள் அவனது உயிர்... அவனது உயிர் இப்படிக் கதறி துடிப்பதை கண்டு தாங்க மாட்டாது அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்...

"வேண்டாம் நிஷிம்மா... அழாதே... எல்லாத்தையும் கெட்ட கனவா நினைச்சு மறந்திரு..." என்று அவளது தலையை வருடி கொடுத்து அவன் ஆறுதல் கூறினான்...

சிம்மவிஷ்ணு இருவரையும் அழுத்தமான பார்வையோடு பார்த்திருந்தானே தவிர... இதற்காக அவன் அவர்கள் மீது சிறிதும் கோபப்படவில்லை... பொறாமைப்படவும் இல்லை... ஏனெனில் நிஷிலா மீது அவனுக்கு உரிமை, அன்பு, காதல் இதில் ஏதாவது ஒன்று இருந்தால் தானே அவன் கோபம் கொள்வதற்கும், பொறாமைப்படுவதற்கும் அர்த்தம் இருக்கிறது... மாறாக அவனது மனதில் வன்மம் தான் இருந்தது... அதன் விளைவு அவனது மகிழ்ச்சி அவனது விழி வழியே வழிந்தது...

"அத்தான், எல்லாத்தையும் கெட்ட கனவா நினைச்சு மறந்து விடுகிறேன்... நீங்க எனக்கு ஒண்ணே ஒண்ணு பண்ணுவீங்களா...?"

நிஷிலா பவித்ரனின் அணைப்பில் இருந்து விலகி அவனை அண்ணாந்து பார்த்து கேட்டாள்... அவளது விழிகளில் தெரிந்த பரிதவிப்பில் அவனது விழிகளில் கண்ணீர் துளிர்த்தது... அவனுக்கு வந்த ஆத்திரத்தில் சிம்மவிஷ்ணுவை அடித்துத் துவம்சம் செய்யும் வெறி எழுந்தது... ஆனால் அதை விட மனதளவில் காயமடைந்து நொந்து போயிருக்கும் மாமன்மகளின் வேதனையைப் போக்குவது ஒன்றே அவனுக்கு முக்கியமாகப் பட்டது...

அவளது முகத்தில் விழுந்திருந்த முடிக்கற்றைகளை ஒதுக்கி விட்டு, அவளது அழுத விழிகளைத் துடைத்து அவளது முகத்தைத் தனது கைகளில் தாங்கிய பவித்ரன்,

"உனக்காக நான் என் உயிரையும் கொடுப்பேன் குட்டிம்மா... என்ன செய்யணும் சொல்...?" என்று சிறு புன்னகையுடன் கேட்க...

"என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறீங்களா அத்தான்...?"

அத்தை மகன் முன் தன் இரு கைகளை ஏந்தி கொண்டிருந்த பெண்ணவளை காணும் யாவருக்கும் விழி கலங்கி போகும்... கழுத்தில் இருக்கும் தாலிக்கு அர்த்தம் இல்லை... வயிற்றில் இருக்கும் குழந்தைக்கும் அர்த்தம் இல்லை... ராட்சசனுடன் அவள் வாழ்ந்த வாழ்க்கைக்கும் அர்த்தம் இல்லை... மொத்தத்தில் நிஷிலா என்கிற பெண்ணின் வாழ்க்கையை அர்த்தம் இல்லாது செய்துவிட்டான் அந்த ராட்சசன்... அர்த்தம் இல்லாது போன தனது வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கி கொள்ள நினைத்தாள் அவள்...

"இது என்ன கேள்வி குட்டிம்மா...? நிச்சயம் நம் கல்யாணம் நடக்கும்... உன்னை உனக்காக மட்டுமே கல்யாணம் பண்ண நினைப்பவன் நான்... இடையில் வந்த இந்தத் துன்பத்தால் எதுவும் மாறிவிடப் போவதில்லை... நீ எப்படியிருந்தாலும் என் செல்ல நிஷிம்மா தான்... இதில் எந்த மாற்றமும் இல்லை..."

பவித்ரனின் பெயரை போன்று அவனது தூய்மையான அன்பில் மனம் நெகிழ்ந்து போயினர் நிஷிலாவின்

பெற்றோர்... இளவரசி யோசனையாக மகனை பார்த்திருந்தார்... சிம்மவிஷ்ணுவின் முகத்தில் இப்போது நமட்டுச் சிரிப்புத் தவழ்ந்தது... ஆனால் அவன் ஒன்றும் பேசவில்லை...

நிஷிலா பவித்ரனை நன்றியோடு பார்த்தவள், "தேங்க்ஸ் அத்தான்..." என்றாள்...

பின்பு சிம்மவிஷ்ணு புறம் திரும்பி அவனை நோக்கி சுட்டிக்காட்டி, "இவன் என்னையும், இந்தக் குழந்தையும் வைத்து உங்க எல்லாரையும் படுத்தி எடுக்க வேண்டும் என்று திட்டமிட்டு இருக்கிறான்... அது நடக்கக் கூடாது... இவனால் நான் மூலையில் முடங்கிப் போய்விடக் கூடாது... இவன் கண்ணெதிரில் நான் வாழ்ந்து காட்டணும்... என் சந்தோசத்தைப் பார்த்து இவன் வெந்து சாகணும்..."

இத்தனை நாள் அவளது மனதில் அடக்கி வைத்திருந்த ஆத்திரத்தை எல்லாம் அவள் வார்த்தைகளாய் வெளியே கொட்டினாள்...

"நிச்சயம் நிஷிம்மா... நீ டென்சனாகாதே... உன் உடம்புக்கு நல்லது இல்லை..." என்று பவித்ரன் அவளை ஆறுதல்படுத்த... அவளோ அவனது வார்த்தையைக் கேட்காது மனதில் உள்ளதை கொட்டி கொண்டிருந்தாள்...

"குழந்தை, குழந்தைன்னு உயிரை விட்டியே... இன்னும் நான்கு மாதங்கள் தான்... இந்தக் குழந்தை பிறந்ததும் உன்னிடமே கொடுத்து விடுகிறேன்... அத்தோடு உனக்கும், எனக்குமான சம்பந்தம் முடிந்தது..." என்று ஆக்ரோசமாய்க் கத்தியவளை நிதானமாய்ப் பார்த்த சிம்மவிஷ்ணு,

"இது என்னுடைய குழந்தைன்னு நான் எப்போ சொன்னேன்...?" என்று அழுத்தம் திருத்தமாய் அவளைப் பார்த்து அவன் கூற...

"டேய்..." என்று பவித்ரன் அவன் மீது ஆத்திரத்தோடு பாய்ந்துவிட்டான்...

பவித்ரன் அடிக்கும் முன் அவனது கையைப் பிடித்துத் தடுத்த சிம்மவிஷ்ணு அவனது கையை முறுக்கி பின்பக்கமாய் வளைத்து,

"பேசிக்கிட்டு இருக்கும் போது இது என்ன சின்னப்பிள்ளைத்தனமான வேலை...? உனக்கு மட்டும் தான் கை இருக்கிறதா...? எனக்கு இல்லையா...? நீ பலம் பொருந்தியவன் என்றால், நான் அதை விட அதிகப் பலம் பொருந்தியவன்... என்னை எதிர்த்து உன் சுண்டு விரலை கூட நீ அசைக்க முடியாது... என் கிட்டேயே உன் திமிரை காட்டுகிறாயா...? நீ எல்லாம் தற்காப்பு கலைகளை வகுப்பாகப் போய்த் தான் கற்று தேர்ந்திருப்பாய்... ஆனால் நான் பத்து வயசில் அருவாளை கையில் எடுத்து என்னைக் காத்துக் கொள்ள வேண்டி நேரடியாகக் களத்தில் குதித்தவன்... அப்படிப்பட்ட என்னிடமா உன் உடல் பலத்தைக் காட்டுகிறாய்... உடல் பலம் மட்டுமல்ல, பணம் பலம், ஆள்பலம், நீதி இவை எல்லாம் கொண்டும் கூட நீ என்னை ஒண்ணும் பண்ண முடியாது..." என்று கூறியபடி அவன் மேலும் மேலும் பவித்ரனது கையைப் பிடித்து முறுக்கினான்...

"யார் வீட்டில் வந்து என்ன செய்து கொண்டிருக்கிறாய்...?" இளவரசி கோபத்தில் கத்தியபடி அலைப்பேசியை எடுத்து காவல்துறைக்கு அழைக்கப் போக...

"இப்போ தானே சொன்னேன்... எங்குப் பேசினாலும் காரியமாகாது என்று..." சிம்மவிஷ்ணு கேலியாய் சிரித்தான்...

இளவரசி திகைத்து நிற்க... நிஷிலா வேகமாய் அவன் அருகில் வந்து, "முதலில் என் அத்தானை விடு..." என்று கத்த...

"உனக்கு உன் அத்தான் மீது அவ்வளவு காதலா...?" என்று அவளைப் பார்த்து நக்கலாய் கேட்டவன்,

"நான் அவனை விட வேண்டுமென்றால் இப்படிப் பேசி கொண்டிருக்கும் போது லூசுத்தனமாக இடையில் கை நீட்ட

சொல்லாதே..." என்று கோபமாய் இரைந்தான்...

"நீ அவரை விடு..."

"இந்தா உன் குட்டிச்சுவரை நீயே வைத்து கொள்..." என்றபடி சிம்மவிஷ்ணு பவித்ரனை அவள் புறமாய்த் தள்ளினான்...

நிஷிலா பவித்ரனை பிடிக்க வரும் முன் அவனே தன்னை நிலைப்படுத்தி நின்று கொண்டான்... அவனது விழிகள் சிம்மவிஷ்ணுவை முறைக்கத் தவறவில்லை...

"உன் குழந்தை உன்னிடம் தான் வளரணும்... அதை ஏன் நிஷிம்மா வளர்க்கணும்...?" பவித்ரன் அவனைப் பார்த்து எரிச்சலுடன் கூறினான்...

சிம்மவிஷ்ணு அவனுக்குப் பதில் கூற விரும்பாதவனாய் நிஷிலா பக்கம் திரும்பியவன், "இதை நான் என் குழந்தையாக ஏற்றுக் கொண்டால் தானே இது எல்லாம் சாத்தியம்... நான் தான் இதை என் குழந்தைன்னு ஏற்றுக் கொள்ளப் போவதில்லை... இதற்கும், எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை... இதைத் தான் நான் வெளியில் கூற போகிறேன்... மீண்டும், மீண்டும்... ஒரு பொய்யை திரும்பத் திரும்பச் சொல்லும் போது அது உண்மையாகி விடுமாம்... அது போல் இதுவும் உண்மையாகிவிடும்..." என்று ஆணவமாய்க் கூற...

நிஷிலா ஆவேசத்துடன் அவன் அருகில் வந்து, "உன் மனசாட்சி தொட்டு சொல்லு... இது உன்னுடைய குழந்தை இல்லையா...? நீ செய்த அத்தனை பாவ செயலையும் கடவுள் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறார்... இதற்கான தண்டனை உனக்குக் கிடைக்கத் தான் போகிறது..." என்று கோபத்துடன் குமுறியவளை கண்டு அவன் ஒன்றும் பெரிதாக அசந்து விடவில்லை...

"கடவுள் சாட்சியாய் என் மனசாட்சி தொட்டுச் சொல்கிறேன்... இது என் குழந்தை தான்... ஆனா இது உனக்கும் உன் குடும்பத்தாருக்கும் மட்டுமே உரக்க சொல்வேன்... ஊரறிய அல்ல... நீ உன் அத்தானை

கல்யாணம் பண்ணி கொள்... அவனோடு சந்தோசமாக வாழு... அவனுக்கும் நிறையக் குழந்தைகள் பெற்று கொடு... இதை எல்லாம் செய்ய வேண்டாம் என்று உன்னை யார் தடுத்தது...? இதைச் செய்யாதே என்று சொல்லும் உரிமை எனக்குக் கிடையாது... ஆனால்...?" என்று கேள்வியாய் நிறுத்தியவன் அவளைப் புரியாத புதிராய் ஒரு பார்வை பார்த்தான்...

எப்போதும் அவளைப் பார்க்கும் அதே புரியாத பார்வை... இப்போதும் அவளுக்கு அவனது பார்வையின் அர்த்தம் புரியவில்லை... என்றும் இல்லாத திருநாளாய் அவள் அவனது பார்வையைப் புரிந்து கொள்ள முயற்சித்தாள்...

"இந்தக் குழந்தை இந்த வீட்டில் தான் வளரும்... அதுவும் உன் வீட்டார் கண்பார்வையில்... அதைப் பார்க்கும் போது எல்லாம் இந்தச் சிம்மவிஷ்ணுவின் ஞாபகம் அவர்களுக்கு வர வேண்டும்.. அதைப் பார்த்து பார்த்து அவர்கள் எனக்குச் செய்த துரோகத்தை எண்ணி எண்ணி குற்றவுணர்வில் துடிதுடித்துப் போக வேண்டும்... இது அவர்களுக்கு மட்டுமான தண்டனையல்ல உனக்கும் சேர்த்து தான்... நீயும் என்னை மறக்க கூடாது இல்லையா...? நீ குழந்தையைக் கண்டு மனம் மறுகுவதைப் பார்த்து பார்த்து உன் குடும்பம் கண்ணீர் வடிக்க வேண்டும்... இது தான் எனக்கு வேண்டும்..."

இப்போது அவனது பார்வைக்கான அர்த்தம் அவளுக்குப் புரிந்தது... அந்த அர்த்தம் அவளது தலையில் சுரீரென்று ஏறியதில் அவளுக்குக் கண்களை இருட்டி கொண்டு வந்தது...

"பாவி, இது உன்னோட குழந்தையும் தானேடா..." என்று அவள் வேதனையுடன் முணுமுணுத்தாள்...

"இல்லை... இல்லவே இல்லை... துரோகத்திற்குப் பரிசாகக் கொடுத்த துரோகம் அவ்வளவே... இது என் குழந்தை இல்லை... நான் அப்படி வெளியில் சொல்லி கொள்ளப் போவதுமில்லை..." என்றவனைக் கண்டு,

"வெளியில் போடா நாயே... உன்னை என்ன செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரியும்..." என்று பவித்ரன் கத்தினான்...

சிம்மவிஷ்ணுவின் வார்த்தைகள் நிஷிலாவின் மனதினை மிகவும் பாதிக்க அவள் அப்படியே மயங்கி சரிந்தாள்...

"நிஷிம்மா..." என்று பதறியபடி பவித்ரன் அவளைத் தாங்கி பிடிக்க... அருந்ததி மற்றும் செல்வரத்தினம் மகளின் அருகில் ஓடி வந்தனர்...

"தீரா, அண்ணி நீங்க ரெண்டு பேரும் நிஷாவை உள்ளே தூக்கிட்டு போங்க... அண்ணா நீ இங்கே இரு..." என்று இளவரசி கட்டளையிடும் குரலில் கூற...

தாயை நிமிர்ந்து பார்த்த பவித்ரன் ஒன்றும் பேசாது மாமன்மகளைக் கைகளில் அள்ளி கொண்டு உள்ளே சென்றான்... அருந்ததி பதட்டத்துடன் அவன் பின்னேயே விரைந்தார்... அவர்கள் இருவரும் உள்ளே செல்வதை உறுதிப்படுத்திக் கொண்ட பின்னர் இளவரசி சிம்மவிஷ்ணுவை தீர்க்கமாகப் பார்த்தார்...

"யார் நீ...? உனக்கும் எங்களுக்கும் என்ன பகை...? ஏன் எங்க வீட்டு பெண்ணின் வாழ்க்கையைச் சீரழித்திருக்க...? நீ சொல்வது போல் அவ்வளவு சுலபத்தில் இந்தப் பிரச்சினையில் இருந்து நீ தப்ப முடியாது... எங்க பலம் தெரியாம மோதுகிறாய்... அடையாளம் தெரியாமல் சிதறி போய்விடுவாய்..." என்று கடுமையாகப் பேச...

"இவனிடம் என்னம்மா கதை பேசி கொண்டிருக்கிறாய்...? துப்பாக்கியை எடுத்து இவனைச் சுட்டு இவனது உயிரை எடுக்காது சமரசம் பேசிக்கிட்டு...?" செல்வரத்தினம் ஆத்திரத்தில் கொதித்தார்...

"அண்ணா சொல்றது தான் சரி..." மணிபாரதியும் அதை ஆமோதித்தார்...

"நான் யார் என்பதைப் பற்றிப் பிறகு சொல்கிறேன்... முதலில் நான் சொல்வதைக் கேளுங்கள்..." என்று

அசால்ட்டாய் கூறியவன்,

"எதிரியை தொழில்ரீதியாய், பொருளாதா ரீதியாய் அடிக்கும் வல்லமை படைத்த நான், இவ்வளவு ஏன் உங்க எல்லோரின் உயிரையும் ஒரே நேரத்தில் எடுக்கும் அளவுக்குச் செல்வாக்கு பெற்ற நான், கேவலம் ஒரு பெண்ணைக் கடத்தி கொண்டு போய் அவளுக்கு வலுக்கட்டாயமாகத் தாலி கட்டி, மனசுக்கு பிடிக்காது அவளுடன் குடும்பம் நடத்தி, அவள் வயிற்றில் குழந்தை கொடுத்து... ச்சூ, ச்சூ, எத்தனை வில்லன் வேலைகள் பார்த்திருக்கிறேன்... இதுக்கு எல்லாம் என்ன அர்த்தம்ன்னு இன்னுமா உங்களுக்குப் புரியலையா...?" என்று கேட்டவனைக் கண்டு மூவரின் மனமும் திகைத்து போனாலும் அவர்களது விழிகள் என்னவோ யோசனையாய் இடுங்கியது...

"அன்று இதே போல் ஒரு குழந்தைக்கு நீங்க செய்த துரோகம்... இன்று அதே குழந்தை வடிவில் உங்களுக்கே துரோகமாய்த் திரும்பி வந்திருக்கிறது..."

அவனது வார்த்தையில் மூவருக்கும் இதயம் ஒரு நொடி நின்று துடித்தது... எதற்கும் அச்சப்படாத இளவரசி கூட அச்சத்தில் உடலெல்லாம் வியர்வை வழிய நின்றிருந்தார்...

"எந்தச் சுடலைமுத்து வீட்டு வாரிசு உங்கள் வீட்டில் வளர கூடாது என்று நினைத்து அன்று அத்தனை பாவங்கள் செஞ்சீங்களோ... இன்று அந்தச் சுடலைமுத்து வீட்டோட வாரிசு உங்கள் வீட்டு பெண்ணின் வயிற்றில்... இப்போது என்ன செய்யப் போறீங்க...? உங்க வீட்டுப் பெண்ணைக் கொல்ல போறீங்களா...? இல்லை அவள் வயிற்றில் வளரும் குழந்தையைக் கொல்ல போறீங்களா...? இரண்டில் எதைச் செய்தாலும் அவளது உயிர் போகப் போவது உறுதி... அது தான் உங்களுக்கு வேண்டும் என்றால் தாராளமாகச் செய்ங்க... எனக்கும் என் பாவக்கணக்கில் ஒன்றை பழி தீர்த்த மகிழ்ச்சியாவது மிச்சம் இருக்கும்..."

யாருக்கும் தெரியாத விசயம் இது... இவனுக்குத் தெரிந்திருக்கிறது என்றால்...? யாரிவன்...? மூவரது

விழிகளும் அச்சத்துடன் அவனைப் பார்த்தது...

"யார் நீ...?" இளவரசி அவனைப் பார்த்து மீண்டும் கேட்டார்... ஆனால் இப்போது அவரது குரலில் பயமே அதிகயளவில் இருந்தது...

"இன்னுமா உங்களுக்கு என்னை அடையாளம் தெரியலை...?" அவரது விழிகளை உற்று பார்த்து கேட்டவனின் விழிகளில் அத்தனை நக்கல் இருந்தது...

"சுடலைமுத்து..." கம்பீரமாக அவன் தனது பெயரை உச்சரித்த கணம் இளவரசி நிற்க முடியாது தடுமாறியபடி பின்னால் நகர்ந்தவர் சோபா தடுக்கி அதன் மீது விழுந்தார்...

"அரசி..." என்று அலறியபடி இரு சகோதரர்களும் அவரை நோக்கி வந்தனர்...

அவர்களுக்குமே அவன் கூறியது பெருத்த அதிர்ச்சியாகத் தான் இருந்தது... இது எப்படிச் சாத்தியம்...? விடை தெரியாது விழி பிதுங்கி போயினர்... இருவரும் தங்கையின் தோள் பற்றி அவரை அமர வைக்க முயன்றனர்...

"வேண்டாம்..." என்று அண்ணன்களது கரங்களை விலக்கிய இளவரசி தானே எழுந்தமர்ந்தார்...

சிம்மவிஷ்ணு அவரையே கிண்டலாய் பார்த்துக் கொண்டிருந்தான்... பதிலுக்கு அவனை முறைத்து பார்த்த இளவரசி,

"நீ சொல்ற கட்டுக்கதைகளை நம்ப இங்கே யாரும் முட்டாளில்லை..." என்று கோபமாய் உரைக்க...

"உங்களை முட்டாள்ன்னு முட்டாள் கூட ஒத்துக்க மாட்டான்..." என்று கேலியாய் உரைத்தவன்,

"ஏன்னா அந்தளவுக்குக் கிரிமினல் நீங்க... இனி நீங்க எப்படி நிம்மதியா வாழ்றீங்கன்னு நானும் பார்க்கிறேன்..." என்றான் அவன் சவாலாக...

"உன்னால் என்னை ஒன்றும் பண்ண முடியாது..." என்றார் அவர் அசால்ட்டாக...

தவறு என்று தெரிந்தே அந்தத் தவறை அசால்ட்டாகச் செய்தவர் அவர்... அவரிடம் நியாய, அநியாயங்களை எதிர்பார்த்தது அவனது தவறு...

"அப்படியா...?" என்று கேட்டு யோசனையாய் தனது தாடையைத் தடவியவன்,

"இந்த வீட்டில் உங்க புருசன்னு சொல்லிட்டு ஒரு புண்ணியாத்மா இருக்குமே... அவர் எங்கே...? அவரை வர சொல்லுங்க... அவரைப் பார்த்து எல்லா விசயத்தையும் சொல்லிட்டு நான் போய்க்கிட்டே இருக்கேன்..." என்றான் நமட்டு சிரிப்புடன்...

"டேய், அவர் கிட்ட மட்டும் ஏதாவது உளறி வச்ச... உன்னை உயிரோடு குழி தோண்டி புதைச்சிருவேன்..." என்றவரை ஆக்ரோசமாய்ப் பார்த்தவன்,

"இது தான் நீங்க... நீங்க இன்னமும் மாறாததுக்கு இந்த வார்த்தைகள் ஒன்று போதும்... அவரிடம் நீதி கேட்டு போகணும்ன்னு நான் நினைச்சிருந்தா என்னை யாராலும் தடுத்திருக்க முடியாது... அப்படி நீதி கேட்டு போறதால நடந்த எதையும் மாற்ற முடியாது... எனக்கு வேண்டியது உங்களோட சந்தோசம், நிம்மதி... அதை இழந்து அணு அணுவா நீங்க மூணு பேரும் துடிதுடிச்சு சாகணும்... அது தான் எனக்கு வேணும்..." என்றவனது வார்த்தைகளில் தான் எத்தனை வன்மம்...!!!

"நான் வந்த வேலை முடிந்தது... நான் கிளம்பறேன்... மீண்டும் வேறொரு களத்தில் சந்திப்போம்..." என்று இருகரம் கூப்பி அவன் விடைப்பெற... அவனைத் தடுத்து நிறுத்தும் வழி தெரியாது மூவரும் சிலையாய் சமைந்து போயிருந்தனர்...

மயக்கமுற்று இருந்த நிஷிலா மெல்ல விழி திறந்தாள்... தனது இருபக்கமும் கவலையாய் அமர்ந்திருந்த தாயையும்,

அத்தானையும் கண்டு அவள் எழ போனாள்...

"நிஷிம்மா பார்த்துடா..." என்றபடி பவித்ரன் அவளைத் தொட வந்த போது அவள் முகத்தைச் சுளித்துக் கொண்டு தனது அன்னையின் தோளில் ஒடுங்கி கொண்டாள்...

"நிஷிம்மா, நான் உன் அத்தான்டா..." பவித்ரன் அவளது நடவடிக்கை கண்டு திகைத்துப் போனான்...

"நீங்க என் அத்தான் தான்... அத்தை மகன் தான்... அதற்கு மேல் வேறு எந்த உறவும் நமக்குள் வேண்டாம்..." என்று அன்னையில் மடியில் படுத்து கதறியவளை கண்டு அவன் செய்வதறியாது பார்த்திருந்தான்...

சற்று முன் அவள் அவனிடம் மணந்து கொள்ளக் கேட்டது என்ன...? இப்போது அவள் இப்படிப் பேசுவது என்ன...? எல்லாம் அந்தப் படுபாவியால் வந்தது... பவித்ரனுக்குச் சிம்மவிஷ்ணு மேல் ஆத்திரம் வந்தது... அவனை ஒரு கை பார்க்காது இவனுக்கு நிம்மதி கிடையாது...

"குட்டிம்மா, நீ இப்படி அழுது கரைவதால் எதுவும் மாறிவிடப் போவதில்லை... அவன் கூறியது அனைத்தும் உண்மை என்றாகி விடப் போகிறது... அதனால் அழாமல் இரு... உனக்காக அத்தான் இருக்கிறேன்... இந்த அத்தான் என்கிற உறவுக்கும் மேலான உறவு நமக்கிடையில் வர தான் போகிறது... நான் அவனைப் பார்த்து கொள்கிறேன்..." என்று கூறியவன் விருட்டென்று அறையை விட்டு வெளியில் வந்தான்...

"நிஷா, என் கண்ணே..." என்று மகளின் முதுகை வருடியபடி அருந்ததி அழுதார்...

அன்னையை நிமிர்ந்து பார்த்தவள், "உங்களை எல்லாம் எப்போ பார்ப்போம்ன்னு சந்தோசமா இருந்தேன்... ஆனா என்னோட எல்லாச் சந்தோசத்தையும் அந்த ராட்சசன் குழி தோண்டி புதைச்சிட்டான்... அவன் சொன்னது எல்லாம் உண்மை தானேம்மா... அவன் என்னைக் கல்யாணம் பண்ணியதை நான் எப்படி மறந்தேன்...? அவன் என்னோடு

வாழ்ந்ததை நான் எப்படி மறந்தேன்...? இதோ அதற்குச் சாட்சியாய் என் வயித்தில் வளரும் குழந்தையை நான் எப்படி மறந்தேன்...? இந்தக் குழந்தையைப் பார்க்கும் போது எல்லாம் அது அவனைத் தானே ஞாபகப்படுத்தும்... அத்தோடு அவனோடு வாழ்ந்த வாழ்க்கையையும்... அப்படி இருக்கும் போது நான் எப்படிம்மா அத்தான் கூட..." அருவருப்பில் அவள் முகத்தைச் சுளித்தாள்...

"இந்தக் கர்மத்தை பெத்து அநாதை ஆசிரமத்தில் தூக்கி எறி நிஷா... அவனுக்கு வேண்டாம்ன்னா உனக்கு மட்டும் எதுக்கு இந்தக் குழந்தை...?" என்று வெறுப்புடன் கூறிய அன்னையை நிமிர்ந்து பார்த்தவள் ஒன்றும் பேசாது அவரது மடியில் இருந்து விலகி தலையணையில் படுத்து கொண்டாள்...

அவளது மனம் சிக்கல் கோலம் போல் சிக்கி கிடந்தது... தெளிவாய் எந்த முடிவும் எடுக்க முடியாது அவள் திணறினாள்...

சிம்மவிஷ்ணு நல்ல கணவனாக அவளிடம் நடந்து கொள்ளவில்லை... அவர்களது குழந்தைக்கு நல்ல தகப்பனாகவும் நடந்து கொள்ளவில்லை... மொத்தத்தில் அவன் ஒரு மனிதனாக நடந்து கொள்ளவில்லை... அவன் இத்தனை தவறுகள் அவளுக்குச் செய்திருந்த போதும் ஒரு விசயத்தில் மட்டும் அவன் வெற்றிக் கொண்டு விட்டான்... ஆம், இனி அவனைத் தவிர வேறு எந்த ஆணையும் அவள் நினைத்து பார்க்க முடியாதபடி செய்துவிட்டான்... அந்தளவில் அவனே வெற்றி பெற்றவனாகி போனான்... அவள் தோற்று கோழையாகி போனாள்...

மனம் கனக்க அவளது கை தனது கழுத்தில் கிடந்த தாலி சங்கிலியை எடுத்துப் பார்த்தது... எல்லாம் பேசிய தான் ஏன் இதைக் கழட்டி அவனிடம் கொடுக்கவில்லை...? தாலிக்கு முக்கியத்துவம் கொடுத்து கழட்டாது இருந்தாளா...? இல்லையே... அவனே மனதிற்குப் பிடிக்காதவன்... அவன் கட்டிய தாலிக்கா அவள் மதிப்புக் கொடுக்கப் போகிறாள்...?

பிறகு ஏன்...? என்று யோசித்துக் கொண்டு வந்தவளுக்கு அந்த உண்மை அப்போது தான் புலப்பட்டது...

அதை உணர்ந்தவளாய் அவளது கை தாலியை இறுக பற்றிக் கொண்டது... அவளது விழிகளில் பழிவெறி தோன்றியது...

'உனக்கு மட்டும் தான் பழிவாங்க தெரியுமா...? எனக்கும் தெரியும்... எனக்கான காலம் வரும் போது நீ உனக்கான தண்டனையை அனுபவித்துக் கொண்டிருப்பாய்... என்னைச் சாதாரணப் பெண் என்று நினைத்துக் கொண்டு தானே அப்படித் துன்பப்படுத்தினாய்...? பெண் என்பவள் பெரும் சக்தி என்பதை நீ கூடிய விரைவில் உணரத்தான் போகிறாய்... அதுவும் அழிக்கும் சக்தி என்று...'

அவளுக்கு அவனை நினைத்து ஆத்திரமும் வந்தது... அதே சமயம் அழுகையும் வந்தது... அவளது விழிகளில் விழிநீர் பெருகி வழிந்து கொண்டிருந்தது...

அதே நேரம் காரை ஓட்டி கொண்டிருந்த சிம்மவிஷ்ணுவின் மனமும் அவளைத் தான் நினைத்துக் கொண்டிருந்தது...

'அவ்வளவு சுலபத்தில் இந்தப் பந்தத்தில் இருந்து உன்னைக் கழட்டி விட்டு விடுவேனா...? இனி தானே எல்லாம் இருக்கிறது... இனி தான் வாழ்க்கை என்றால் என்ன என்பதை நீ கற்றுக் கொள்ளப் போகிறாய்... அதற்குள் இப்படி அவசரப்பட்டால் எப்படி...? இன்னும் சின்னப்பிள்ளையாகவே யோசிக்கிறியே... இனியாவது இந்தச் சிம்மவிஷ்ணுவோட மனைவியா புத்திசாலித்தனமா நீ யோசி... அப்போது தான் என்னோடு சரிக்கு சமமா மோத முடியும்...'

என்ன முயன்றும் அவளை மனைவியாய் அவனது மனதில் எள்ளளவும் எண்ண முடியவில்லை... பிறகு ஏன் இந்தத் திருமணம்...? இந்தக் குழந்தை எல்லாம்...? அவனுக்கே அவனைக் குறித்து வெறுப்பாக இருந்தது... எல்லாம் ஒரு கணம் தான்... இத்தனை கேள்விகளுக்கும் விடையாய்

இளவரசியின் முகம் நினைவில் எழுந்தது... அத்தோடு நிஷிலாவின் முகமும் சேர்ந்து...

ஏனெனில் இருவரும் அச்சில் வார்த்தது போல் ஒரே மாதிரியான தோற்றம் உடையவர்கள்... அதனால் தான் அவனால் மிக எளிதாய் அவளிடம் வெறுப்பைக் காட்ட முடிந்தது... அவர் செய்த துரோகத்திற்கு இவளுக்குத் தண்டனை கொடுக்க முடிந்தது... இல்லையென்றால் பெண்ணவளை சுண்டு விரல் கொண்டு கூடத் தீண்ட அவனால் முடிந்திருக்காது...

இதோ இப்போதும் அவளை ஏமாற்றி விட்டோம் என்றோ, அவளது வாழ்க்கையை அழித்து விட்டோம் என்றோ அவனால் வருந்த முடியவில்லை... மாறாக ஏதோ பெரிய சாதனை நிகழ்த்திய மனோபாவம் தான் அவனிடத்தில் இருந்தது... சாதித்த மனநிலையில் அவனது மனதில் மகிழ்ச்சி நிரம்பி வழிந்தது...

அங்கே பெண்ணவள் கண்ணீர் வடிக்க... இங்கே ஆணவன் பூரிப்பில் ஆணவம் கொண்டான்... தனது பாவத்தின் சுமையை அவளிடத்தில் இறக்கி வைத்த ஆணவமோ? அவனது ஆணவம்...

******************

"மாம், அவனை எப்படிச் சும்மா விட்டீங்க...? அவனைக் கொன்னு போட்டிருக்கணும்... எவ்வளவு தைரியம் இருந்தால் நம்மை வீட்டுப் பொண்ணை இப்படியாக்கி விட்டு நம்ம வீட்டுக்கே வந்து நம்மைப் பார்த்துத் தெனாவெட்டா பேசிட்டு போயிருப்பான்..." ஆத்திரத்தில் படபடத்தான் பவித்ரன்...

"கொஞ்சம் பொறுமையா இரு தீரா..." இளவரசி மகனை அடக்கினார்...

"எப்படிப் பொறுமை இருக்கிறது...? நிஷிக்கு என்ன பதில் சொல்ல போறீங்க...? ஒண்ணு அவனை ஏதாவது பண்ணுங்க... இல்லை அவனோட அப்பா, அம்மாவை

பார்த்து பேசுங்க... உங்களால் இந்த ரெண்டும் பண்ண முடியலையா...? இந்த விசயத்தை என்னிடம் விடுங்க... நான் பார்த்துக்கிறேன்..." என்று படபடத்தவனை நிமிர்ந்து ஒரு பார்வை பார்த்த இளவரசி,

"இது எல்லாம் எங்களுக்குத் தெரியாதா தீரா...? எதிரியின் பலம், பலவீனம் எதுன்னு தெரிஞ்சு தான் நாம மோதணும்... அவனோட பலவீனம் மட்டும் நம்ம கிட்ட சிக்கட்டும்... அதுக்குப் பிறகு அவனுக்கு இருக்கு..." என்று அவர் ஆத்திரத்துடன் பல்லை கடித்தார்...

ஏனெனில் சிம்மவிஷ்ணு விசயத்தில் அவர் அவசரப்பட்டால் அவரது வாழ்க்கை கேள்விக்குறியாகிவிடும்... அண்ணன் மகளது வாழ்க்கைக்காகத் தனது வாழ்க்கையைப் பணயம் வைக்க அவர் தயாராக இல்லை... இளவரசி எதிலும் சுயநலம் பார்ப்பவர்... சொந்த வாழ்க்கையில் பார்க்க மாட்டாரா என்ன...? நல்லவேளை அவரது மகன் பவித்ரன் தனது தந்தையைக் கொண்டு பிறந்திருந்தான்...

"என்னமோ பண்ணுங்க..." என்றவன் நிஷிலாவை தேடி சென்றான்...

அங்கு அழுது கரைந்து கொண்டிருந்தவளை கண்டு பவித்ரனின் மனம் பாரமானது... அவள் அருகில் அமர்ந்து அவளது தலையை வருடி கொடுத்தான்... அவளோ அவனை விட்டு விலகி படுத்தாள்... அவளது விலகலை உணர்ந்தவனாய் அவன் அத்தையிடம்,

"நான் நிஷி கூடத் தனியா பேசணும்..." என்றான்... அருந்ததியும் புரிந்து கொண்டு வெளியே சென்றார்... மகளை நல்வழிப்படுத்த அவனால் மட்டுமே முடியும் என்று அவர் நம்பினார்...

"நிஷிம்மா..." என்று அவன் மீண்டும் அவள் புறம் கை நீட்டிய போது அவள் எழுந்தமர்ந்தாள்...

மேடிட்ட வயிற்றுடன், கலைந்த கோலமாக அவள் இருந்த நிலையைக் கண்டு அவனது இதயம் இரத்த கண்ணீர்

வடித்தது... யாருக்கு என்ன பாவம் செய்தாள்? என்று விதி அவளைப் போட்டு இப்படிப் படுத்துகிறது என்று அவன் மனம் குமைந்தான்... அந்தப் பாவத்தைச் செய்ததே அவனது அன்னை தான் என்பது அக்கணம் அவனுக்குத் தெரியவில்லை... தெரிந்தால்? அவன் என்னாவானோ...???

"நீயே சொல்... இப்போ நான் என்ன செய்யட்டும்...?" என்றவனை நிமிர்ந்து பார்த்தவளின் விழிகள் இரண்டும் கலங்கியது... அதரங்கள் எதையோ சொல்ல நினைத்துத் துடித்தது...

"உன் மனசில் இருப்பதைச் சொல் நிஷிம்மா..."

"நான் எடுக்கும் எந்த முடிவுக்கும் நீங்க என் கூடத் துணை இருப்பீங்களா அத்தான்...?"

"இது என்ன அபத்தமான கேள்வி...? நிச்சயம் நான் உனக்குத் துணை இருப்பேன்..." என்றவன்,

"அந்த அயோக்கியன் மீது போலீசில் கம்ப்ளையிண்ட் கொடுப்போமா...?"

அதைக் கேட்டு அவளது முகத்தில் விரக்தி எழுந்தது...

"என்னன்னு கம்ப்ளையிண்ட் கொடுப்பீங்க அத்தான்...?"

அதில் சற்று திகைத்து விழித்த பவித்ரன், "உன்னை இப்படி ஆக்கியதற்காகத் தான்..." என்றான் கோபத்தோடு...

"அதற்கு யாரும் சாட்சி சொல்ல வர மாட்டார்கள்... அவன் கட்டிய இந்தத் தாலி உட்பட..." என்று அவள் தனது கழுத்தில் இருந்த தாலியை தூக்கி காண்பித்தாள்...

"இன்னும் இதை ஏன் சுமந்துக்கிட்டு இருக்க... கழட்டி தூக்கி எறி..." என்று அவன் சினந்தான்...

"இல்லை வேண்டாம்... இது ஒன்று தான் அவனையும், என்னையும், இந்தக் குழந்தையையும் இணைக்கும் பாலம்... இதைக் கழட்ட முடியாது..." என்று அவள் உறுதியாக மறுத்தாள்...

"அப்போ அவனது உயிரை எடுத்தால் இது உன் கழுத்தில் இருந்து இறங்கும் இல்லையா...?"

அதைக் கேட்டு அவள் அதிர்வுடன் அவனைப் பார்த்தாள்... அதைக் கண்டு அவனது உதடுகளில் விரக்தி புன்னகை எழுந்தது...

"கல்லானாலும் கணவன்... புல்லானாலும் புருசன்... இந்தச் சென்ட்டிமென்ட் உன்னையும் தாக்கி விட்டதோ..."

"இல்லை அத்தான்... அப்படி நான் நினைத்திருந்தால் உங்க கிட்ட என்னை மணக்க கேட்டிருக்க மாட்டேன்... இது வேறு... அவனோடு போராடும் சக்தியை எனக்குக் கொடுக்கப் போவது இந்தத் தாலி தான்... அவனையும் அறியாது அவன் எனக்குச் செய்த நல்லது இது... இது எனக்கு வேண்டும்... கட்டாயம் வேண்டும்..." என்றாள் அவள் உறுதியான குரலில்...

"இதனால் நீ உன் வாழ்க்கையை வீணே கெடுத்து கொள்ளாதே..."

"இல்லை அத்தான்... இது தான் நான் வாழ வேண்டும் என்கிற உத்வேகத்தை எனக்குக் கொடுக்கிறது... நான் வாழ்வேன்... வாழ்ந்து அவனை வென்று காட்டுவேன்... அப்போது அவனுக்குப் புரியும்... பெண் என்பவள் சாதாரணமானவள் அல்ல என்று..." எதையோ நினைத்தபடி கூறியவளின் முகம் ஆத்திரத்தில் ஜொலித்தது...

"அதற்கு இந்த அத்தானின் சப்போர்ட் என்றும் உனக்கு உண்டு..." என்று கூறிய பவித்ரன் அங்கிருந்து எழுந்து சென்றான்...

அண்ணன்கள், தங்கை மூவரும் மணிபாரதியின் அறையில் ஒன்று கூடியினர்...

"இது எப்படிச் சாத்தியம் அண்ணா...?"

இளவரசியால் சிம்மவிஷ்ணு கூறிய விசயத்தை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை...

"இது எல்லாம் நம்பும்படியாகவா இருக்கு...? அவன் நம்மைப் பத்தி நன்றாகத் தெரிந்து வைத்துக் கொண்டு நம்மோடு விளையாடுகிறான்..." செல்வரத்தினத்தால் இதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை...

"ஆனால் அவன் கூறியது அனைத்தும் உண்மையே..." என்று பயந்தார் மணிபாரதி...

"சும்மா சும்மா பயந்து சாகாதே... அவன் சுடலைமுத்து என்று சொன்னால் நீ நம்பி விடுவாயா...? யார் எதைச் சொன்னாலும் நம்பு... ஆனா நாங்க சொல்றதை மட்டும் காதில் வாங்கிக்காதே..." தம்பியை பார்த்துக் கோபத்தில் பல்லை கடித்தார் செல்வரத்தினம்...

"நிஷா நிலைமை பார்த்துமா நீங்க இப்படிச் சொல்றீங்க அண்ணா...?"

மகள் நினைவில் சற்று அமைதியான செல்வரத்தினம், "நிச்சயம் இதற்கான பதிலை அவன் சொல்லித்தான் ஆகவேண்டும்..." என்று அவர் ஆத்திரமாய் உறுமினார்...

"அண்ணா, அவன் பத்ரி கிட்ட எல்லா உண்மைகளையும் சொல்லிவிடுவானோன்னு எனக்குப் பயமாயிருக்கு..." எதற்கும் கலங்காத இளவரசி கண் கலங்கினார்...

"சொன்னாலும் பத்ரி அதை நம்பணுமே... நீ கவலைப்படாதே அரசி..." செல்வரத்தினம் தங்கையைச் சமாதானம் செய்தார்...

********************

நட்சத்திர விடுதியில் சிம்மவிஷ்ணு தனது உடமைகளை எடுத்துப் பெட்டியில் வைத்துக் கொண்டிருந்தான்... அவனும், மாடசாமியும் மதுரைக்குக் கிளம்பி கொண்டிருந்தனர்... அப்போது அவனது கை தவறி அந்தக் கவர் கீழே விழுந்தது... அதிலிருந்து ஒரு புகைப்படம் நழுவி மாடசாமியின் காலின் அருகே விழுந்தது... அதை அவனிடம் கொடுக்க எண்ணி கீழே குனிந்து எடுத்த மாடசாமி அதைப்

பார்த்து அதிர்ந்து போனார்... அது சிம்மவிஷ்ணு, நிஷிலாவின் திருமணப் புகைப்படம்...

"இவள், இவள்..."

அதை அவர் பார்த்து விட்டதை அறிந்து அவனும் அதிர்ந்து போனான்... இருந்தாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"இவள் பெயர் நிஷிலா..."

"பார்க்க அப்படியே உன்..." என்று மேலே கூற போனவரை தடுத்தவன்,

"ம், அவளது அத்தை இளவரசி போல் இருக்கிறாள்..." என்றான் உணர்வில்லாத குரலில்...

"உங்க கல்யாணம் எப்போ நடந்தது...?"

"எட்டு, ஒன்பது மாதங்களுக்கு முன்..."

"கடைசியில் மாமன்மகளையே கல்யாணம் பண்ணிக்கிட்டியா... ரொம்பச் சந்தோசம் சுடலை..." என்றவரை பார்த்து,

"இவள் எனது பெரிய மாமனின் ஒரே செல்ல மகள்... அதனால் தான் இவளை வலை வீசி தேடி கண்டுபிடித்துக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்..." என்று அவன் அவரைப் பார்த்து குறும்பாய் சிரித்தபடி கண்சிமிட்டினான்...

'இல்லை என்றால் இவளை எல்லாம் ஒரு பொருட்டாகக் கூட மதித்திருக்க மாட்டேன்...' என்று நினைத்து கொண்டவன் மனதில் வன்மம் மட்டுமே நிறைந்திருந்தது...

"மனைவி என்பாய், மகவு என்பாய்
சொந்தம் என்பாய், பந்தம் என்பாய்
ஆனால் வேண்டாம் என்று
தள்ளி தூர நிறுத்துவாய்...
சொந்தத்திற்கான உரிமை,
பந்தத்திற்கான உறவு,
உன் கண்முன் நடமாடும் போது

உன் நிலை என்னவோ...???
பாசமிகு பெண்ணவளை அழித்து
அழிக்கும் சக்தியாய் மாற்றிவிட்டாய்...
சக்தி இல்லையேல் சிவமில்லை என்பதை
எக்கணம் உணர போகிறாய்...???
அழிக்கும் சக்தி உனை காக்கும்
சக்தியாய் மாறும் போதா...???
இல்லை காக்கும் சக்தியை காதலாய்
நீ அரவணைக்கும் போதா...???"

கொல்லும்...!!!

## நிழல் : 9

"பொண்ணு இளா மாதிரி ரொம்ப அழகாயிருக்கா இல்லையா...? அதான் தேடி பிடிச்சுக் கல்யாணம் பண்ணியிருக்க... உனக்கேத்த மாதிரி அம்சமான பொண்ணு தான் சுடலை... ஜோடி பொருத்தம் ரொம்ப நல்லாயிருக்கு..."

பெரியவர் புகைப்படத்தைப் பார்த்துவிட்டு இருவரது ஜோடி பொருத்தத்தைக் கண்டு சிலாகித்துப் பேச... சிம்மவிஷ்ணுவின் விழிகள் அவனையும் அறியாது அந்தப் புகைப்படத்தை உற்றுக் கவனித்துப் பார்த்தது... சிங்கம் போன்று கம்பீரமான அவன் அருகில் சிறு மான் குட்டி போன்று விழிகளில் மிரட்சியுடன் நின்றிருந்த நிஷிலாவின் அழகு அவனை எந்த விதத்திலும் கவரவில்லை... மாறாக அவனுக்குக் கோபம் தான் வந்தது...

"அப்படி எல்லாம் இல்லைப்பா... அவள் அழகாக இல்லை என்றாலும் நான் அவளைத் தான் கல்யாணம் பண்ணியிருப்பேன்... இது விதிப்பயன்..." என்றவனது விழிகளில் கோபமும், வேதனையும் ஒருங்கே எழுந்தது...

"உன் நிலைமை புரியுதுப்பா..." அவனது உணர்வுகளைப் புரிந்தார் போன்று மாடசாமி அவனது தோளில் ஆறுதலாய் கை வைத்தார்... அதில் அவன் திடுக்கிட்டு போய் அவரைப் பார்த்தான்...

"உன் நிலைமை யாருக்கும் வர கூடாது..." என்றவரது விழிகள் கண்ணீரில் பளபளத்தது...

அதில் அவனது மனம் உருகி போயிற்று... அவரைக் கட்டிலில் அமர்த்தித் தானும் உடன் அமர்ந்தவன் அவரது கைகளைப் பிடித்துக் கொண்டு அவரை யாசிப்பது போல் பார்த்தான்...

"என்னப்பா...? என் கிட்ட ஏதாவது சொல்லணுமா...?" அவனது மனதினை அப்படியே படித்தது போல் கேட்டவரை கண்டு அவன் நிறைவாய் புன்னகைத்தான்...

"ஆமாம்ப்பா... நான் சொல்றதை கேட்டு நீங்க வருத்தப்படக் கூடாது..." என்று நிறுத்தியவனைக் கண்டு,

"எதுவாயிருந்தாலும் சொல்லு சுடலை... என் கிட்ட என்ன தயக்கம்...?"

"இந்த விசயம் எதுவும் அப்பா, அம்மாவுக்குத் தெரிய வேண்டாம்... தெரிந்தால் அவங்களால தாங்கிக்க முடியாது... அவங்கன்னு இல்லை... யாராலும் இதைத் தாங்கிக்க முடியாது... அதனால் உங்களைப் பத்தியோ, நிலாவை பத்தியோ இப்போதைக்கு நான் அவங்க கிட்ட எதுவும் சொல்ல போவதில்லை... நேரம் காலம் வரும் போது மெதுவே சொல்லிக்கிறேன்..." என்றவனுக்கு அதற்கான நேரம் எப்போது என்று தான் தெரியவில்லை...

"நீ சொல்ல வர்றது புரியுதுப்பா... என்னைப் பத்தி சொல்லணும்ன்னு அவசியம் இல்லை... எனக்கு உன் கூட இருந்தா போதும்... ஆனா உன் மனைவி, அவள் பாவமில்லையா...? எத்தனை நாளைக்கு நீ அவளைப் பிரிஞ்சியிருக்கப் போகிற...?"

"ரொம்ப நாள் இருக்க முடியாது தான்... சீக்கிரம் இந்தப் பிரச்சினையைச் சரி பண்ண பார்க்கிறேன்..." என்றவனுக்கு மட்டுமே தெரியும், தான் இந்தப் பிரச்சினையை என்றுமே சரி செய்யப் போவதில்லை என்று... இப்போதைக்கு மாடசாமியை சமாளிப்பதற்காக அவன் அப்படிக் கூறினான்...

"இதை யார் கிட்டேயும் சொல்ல மாட்டேன்னு நீங்க எனக்குச் சத்தியம் பண்ணி கொடுங்கப்பா..." என்று கூறியபடி வலக்கையை நீட்டியவன் கை மீது தனது கையை வைத்தவர்,

"சத்தியமா சொல்ல மாட்டேன் சுடலை..." என்றவருக்குத் தெரியவில்லை தனது சத்தியத்தால் ஒரு சிறு பெண்ணின் வாழ்வு பாழாகப் போகிறது என்று...

"அதே மாதிரி நீங்க சுடலைன்னு என்னைக் கூப்பிட வேண்டாம்... அப்பா, அம்மா மாதிரி விஷ்ணுன்னு கூப்பிடுங்க... அது தான் எனது பெயர், சிம்மவிஷ்ணு..."

"ம், ம்... சரிப்பா..." என்று தலையசைத்தவரின் விழிகள் கலங்கி தான் போயிற்று...

அதைக் கண்டு அவனும் கலங்கி தான் போனான்... மனதால் ஒரு அடையாளம்... உடலால் வேறொரு அடையாளம்... ஒருவன் இருவனாய் வாழ்வது மிகவும் கொடுமை... தன்னியல்பு தொலைத்து, தன்னைத் தொலைத்து வாழ்வது என்பது மரணத்தைத் தழுவிய பிணத்திற்குச் சமம்... அத்தகைய ஒரு கொடிய நிலையைத் தான் அவன் அனுபவித்துக் கொண்டிருக்கிறான்...

இருவரும் விமானத்தில் பயணப்பட்டு மதுரை வந்தடைந்தனர்... சிம்மவிஷ்ணு மாடசாமியை தனக்குத் தெரிந்தவர், இனி இங்கே தான் தங்க போகிறார் என்று தனது பெற்றோரிடமும் அறிமுகப்படுத்திய போது அவர்கள் எந்தக் கேள்வியும் கேட்காது அவரை ஏற்றுக் கொண்டனர்...

ஆனால் மாடசாமி தான் அவ்வளவு பெரிய அரண்மனை போன்ற வீட்டின் ஆடம்பரத்துடன் மனம் ஒன்ற முடியாது தவித்துப் போனார்... தனிமையில் அவனிடம்,

"சுடலை, எனக்கு வெளியில் ஏதாவது வேலை போட்டு கொடு... நான் அங்கேயே தங்கிக்கிறேன்..." என்க...

"நீங்க கஷ்டப்பட்டு வேலை செய்யணும்ன்னு எந்த அவசியமும் இல்லை... உங்களுக்கு உங்க மகன் நானிருக்கிறேன்... நீங்க என் கூடத் தான் இருக்கணும்..." என்று அவன் பிடிவாதம் பிடித்தான்...

"புரிஞ்சுக்கோய்யா... இந்தப் பணக்காரத்தனத்தோடு என்னால் ஒட்ட முடியலை சுடலை... நான் நினைச்ச இடத்தில் படுத்து, நினைச்ச மாதிரி கீழே காலை நீட்டி உட்கார்ந்து பீடி பிடிக்கிறவன்... ஆனா இங்கே சோபாவில் தான் உட்காரணும்... மேசையில உட்கார்ந்து தான்

சாப்பிடணும்... யாரோ என்னைக் கட்டுப்படுத்துற மாதிரியிருக்கு... என்னால் என் விருப்பத்துக்கு இருக்க முடியலை..."

ஒரு வேளை பொழுதில் இந்த வீடு அவருக்குச் சலித்துப் போனது... அவர் கூறியதை கேட்டு அவனது முகத்தில் புன்னகை தோன்றியது...

"சரி உங்க இஷ்டம்... சாயந்திரம் ரைஸ் மில்லுக்குக் கூட்டிட்டு போறேன்... அந்தச் சூழ்நிலை உங்களுக்குப் பிடிக்கும்... சுத்தியிலும் வயல், தென்னந்தோப்புன்னு பார்க்க அவ்வளவு அழகாயிருக்கும்..."

"அது மாதிரியான இடம் தான் நமக்கு வசதி சுடலை..." என்றவரை கண்டு 'புரிந்தது' என்பது போல் அவன் தலையாட்டினான்...

சொன்னது போல் மாலையில் அவரை அரிசி ஆலைக்குக் கூட்டி சென்றவன் அதன் முழுப் பொறுப்பையும் அவர் வசம் ஒப்படைத்து விட்டு, அங்கு அவர் தங்குவதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் கவனித்துவிட்டு கிளம்பி வந்தான்... அந்தக் கணம் அவனது மனதிற்கு அத்தனை நிறைவாக இருந்தது...

மறுநாள் காலையில் சிம்மவிஷ்ணு ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் போது வளைகரம் ஒன்று அவனை எழுப்பியது... ஆழ்ந்த உறக்கத்திலும் பெண்ணவளின் ஸ்பரிசத்தை அவன் உணர்ந்தானோ...! அவனது உதடுகள் மெல்ல முணுமுணுத்தது...

"அம்மா..." என்று...

அவனை எழுப்புவதற்காக அங்கு வந்த ஹர்ஷவர்த்தினி அதைக் கேட்டு எரிச்சல் அடைந்தாள்...

"தத்தி, தத்தி... ஆளு வளர்ந்த அளவுக்கு அறிவு இன்னமும் வளரலை... இன்னமும் தூக்கத்தில் அம்மான்னு புலம்பிக்கிட்டு... ஹனி, டார்லிங், டாலி இப்படிப் புலம்பறதை விட்டுட்டு... இந்த அத்தானை கட்டிக்கிட்டு நான் என்ன தான்

பண்ண போறேனோ தெரியலை...?" என்று அவள் எரிச்சலுடன் தலையில் கை வைத்தாள்...

"அத்தான்... அத்தான்..."

அவளது குரலில் அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந்தமர்ந்தான் சிம்மவிஷ்ணு... தனது அறையில் அவளைச் சற்றும் எதிர்பாராததால் அவனுக்கு அப்படியொரு கோபம் வந்தது...

"ஏய், நீ எப்படி என் ரூமுக்குள்ள...? வெளியே போடி..." என்று அவளைப் பார்த்துக் கோபமாய்க் கத்தியவன் அடுத்த நொடி,

"அம்மா..." என்று அலறினான்...

"அத்தான், இப்போ எதுக்கு அத்தையைக் கூப்பிடுறீங்க...? நீங்க என்ன இன்னும் சின்னப்பிள்ளையா...? எதுவாயிருந்தாலும் நேருக்கு நேர் டீல் பண்ணணும்... இப்படி எல்கேஜி பாப்பா மாதிரி அம்மா பின்னாடி ஒளிஞ்சிக்கக் கூடாது..." என்று தன்னைக் கேலி செய்தவளை அவன் முறைத்துப் பார்த்தான்...

"அத்தான், எனக்கு ஒரு உண்மை தெரிஞ்சாகணும்... உங்க கனவில் நடிகைங்க அப்புறம் யங் கேர்ள்ஸ் எல்லாம் வர மாட்டாங்களா...? கனவுல கூட அம்மா தான் வருவாங்களா...? நீங்க சரியான அம்மா கோண்டு..." என்று அவள் அவனைக் கிண்டலடித்த போது மீனாட்சி அங்கு வந்தார்...

அவள் பேசியதை கேட்டு அவன் முகம் ஒரு மாதிரியாய் மாறி போனதை மற்ற இருவரும் கவனிக்கவில்லை...

"என்னடி, என் பையனை என்ன சொல்லி வம்பிழுத்துக்கிட்டு இருக்க...?"

"நான் அம்மா கோண்டுன்னு சொல்றா... இவளை எல்லாம் எப்படி வீட்டுக்குள் விட்டீங்க...? கொஞ்சம் விட்டா உங்களையே இந்த வீட்டை விட்டு துரத்திருவாள்..."

என்றவன் அன்னையை அருகில் அமர்த்திக் கொண்டு அவரது மடியில் படுத்து விழிகளை மூடியபடி,

"முதலில் அவளை இந்த ரூமை விட்டு வெளியில் போகச் சொல்லுங்கம்மா..." என்றான் சற்று அழுத்தமான குரலில்... அந்தக் குரல் அவனது பிடித்தமின்மையை அப்படியே பறைச்சாற்றியது... மீனாட்சி விழிகளால் ஹர்ஷவர்த்தினியிடம் கெஞ்சியவர்,

"ஹர்ஷி, நீ போய் டிபன் ரெடியாகிருச்சுன்னா டேபிளில் எடுத்து வைக்கச் சொல்லு... நான் இப்போ வந்திர்றேன்..." என்று சமாளிப்பாகச் சொல்ல...

அவளும் நிலைமையைப் புரிந்து கொண்டு அங்கிருந்து அமைதியாக வெளியேறினாள்... ஆனால் மனமோ கோபமாய்க் குமுறியது... என்ன செய்து சிம்மவிஷ்ணுவின் மனதில் இடம் பிடிப்பது என்று அவளுக்குத் தெரியவில்லை...

அவள் சென்றதும் மீனாட்சி மகனிடம், "இப்போ தலைவலி எப்படியிருக்கு விஷ்ணு...?" என்று கேட்க...

"இப்போ பரவாயில்லைம்மா..."

எதையாவது தீவிரமாக யோசிக்கும் போது தலைவலி வருகிறது தான்... அப்போது எல்லாம் மாத்திரை எடுத்துக் கொண்டால் சற்று வலி குறைகிறது... அதனால் அவன் அதைப் பற்றிப் பெரிதாய் கவலைப்படவில்லை...

"உனக்கு ஏன் ஹர்ஷியை பிடிக்கலை...?"

"அவள்ன்னு இல்லை எவளையும் எனக்குப் பிடிக்காது..." என்றான் அவன் வெறுப்பாய்...

யாரோ செய்த பாவம் அவனது கோபமாய்ப் பெண்கள் மீது விடிந்தது... அதில் எரிந்து சாம்பலானது நிஷிலாவின் வாழ்க்கை...

"அதுக்காகக் கல்யாணம் பண்ணாம இப்படியே இருக்கப் போறியா...? உனக்குக் காலாகாலத்தில் கல்யாணம்

பண்ணி வச்சி சீக்கிரமே எங்களுக்குப் பேர குழந்தைகளைப் பார்க்கும் பாக்கியத்தைக் கொடு விஷ்ணு..."

அன்னை கூறிய அந்தக் கணம் அவனது மனக்கண்ணில் மேடிட்ட வயிறுடன் இருந்த நிஷிலாவின் தோற்றம் தோன்றியது... அதைக் காண பிடிக்காதவனாய் அவன் தலையை ஆட்டி அந்த நினைப்பை விரட்டியடித்தான்....

"அந்தக் காலத்தில் உன் கொள்ளுதாத்தா, முப்பாட்டன் எல்லோருக்கும் பத்துக் குழந்தைகளுக்குக் குறையாது இருந்துச்சாம்... அதுக்கு அப்புறம் அப்படியே குறைஞ்சு போச்சு... உங்கப்பா கூடப்பிறந்தவர் உன் சித்தப்பா மட்டும் தான்... ஆனா உனக்கு அதுவும் இல்லை... நீயும் ஒத்தை பிள்ளை... அங்கே மாதவனும் ஒத்தை புள்ளை... அவனாவது பரவாயில்லை... கல்யாணம், குழந்தைன்னு செட்டிலாகிட்டான்... ஆனா நீ இன்னமும் இப்படியே இருக்கியேப்பா..."

"அதுக்குன்னு நேரம் வரும் போது பண்ணிக்குவேன்ம்மா... ஆனா இப்போ இல்லை..." என்று தனது மறுப்பை நாசுக்காய் கூறியவனைக் கவலையுடன் பார்த்தவர்,

"நீ யாரையாவது காதலிக்கிறியா கண்ணா...?"

"ச்சே, ச்சே... அப்படியெல்லாம் இல்லைம்மா..." என்று பதற்றத்துடன் கூறியபடி அவன் எழுந்தமர்ந்தான்...

"இல்லை, அன்னைக்குக் கேட்டியே... நீ கல்யாணம் பண்ணுகிற பெண் ஏழையாயிருந்தால்..." அவர் இழுக்க...

"ஓ, அதுவா...? அன்னைக்கு ஒரு படம் பார்த்தேன்... பையன் நம்மளை மாதிரி பணக்கார பையன்... பொண்ணு ரொம்ப ஏழை... ரெண்டு பேரும் காதலிக்கிறாங்க... கல்யாணம் பண்ணிக்கிறாங்க... இது அந்தப் பையனோட பெத்தவங்களுக்குப் பிடிக்காம கொலை பண்ணிர்றாங்க... அதைப் பார்த்துட்டு தான் நான் அப்படிக் கேட்டது..."

"மனசும், மனசும் சேர்ந்த பிறகு சாதியோ, மதமோ, பணமோ பார்க்க கூடாது விஷ்ணு... இது எல்லாம் காதலிக்கிறதுக்கு முன்னே யோசிச்சிருக்கணும்... அத்தோடு பெத்தவங்களையும் சேர்த்து... காதலிச்ச பிறகு காதலிச்சவங்களை மட்டும் தான் யோசிக்கணும்..." என்ற அன்னையைப் பெருமிதத்துடன் பார்த்தான் அவன்...

"நீ யாரையும் காதலிக்கலைன்னா ரொம்பச் சந்தோசம் விஷ்ணு... நீ ஏன் ஹர்ஷியை கல்யாணம் பண்ணிக்கக் கூடாது...? எனக்கு அவளை ரொம்பப் பிடிச்சியிருக்கு... ரொம்ப நல்ல பொண்ணு... நம்ம குடும்பத்துக்கு ஏத்த பொண்ணு..."

அன்னையின் வார்த்தையில் அவனது மனம் முரண்டியது... அன்னை கூறியது அனைத்தும் உண்மையாக இருக்கலாம்... அவள் நல்ல பெண்ணாக இருக்கலாம்... ஆனால் அவனுக்குத் தான் ஏற்கெனவே திருமணமாகி விட்டதே... யாருக்கும் தெரியாத திருமணம் தான்... அவன் வேறு பெண்ணைத் திருமணம் செய்தாலும் யார் என்ன? என்று அவனைக் கேள்வி கேட்க முடியாது... ஆனால் அவனால் இன்னொரு முறை திருமணம் செய்து கொள்ள முடியுமா...?

அதைப் பற்றி நினைக்கும் போதே அவனது மனம் அருவருத்துப் போனது... பிடிக்குதோ பிடிக்கலையோ ஒருத்தி கழுத்தில் தாலி கட்டியாகி விட்டது... அவளுடன் வாழ்ந்தும் முடித்தாகி விட்டது... இனி திருமணம், மனைவி, குழந்தை என்பது அவனது வாழ்வில் கிடையாது...

"ஆனா எனக்கு அந்த நினைப்பு சுத்தமா இல்லைம்மா... அவளைப் பிடிக்கலைன்னு சொல்லலை... அதே சமயம் நான் அவளை விரும்பவுமில்லை... இப்போதைக்கு இந்தப் பேச்சை விடுங்கம்மா..." என்றவன் குளியலறைக்குள் புகுந்து கொண்டான்...

இனி அவனிடம் பேச முடியாது என்பதை உணர்ந்தவராய் மீனாட்சி அறையை விட்டு வெளியில் வந்தார்...

வெளியில் செல்வதற்காகக் கிளம்பி தயாராக வந்த சிம்மவிஷ்ணு வாசல் பக்கம் வந்தான்... அவனுக்காகக் காத்திருந்தார் போன்று மருதாணி அவன் முன் வந்து நின்றாள்...

"சின்னய்யா..."

"என்ன விசயம் மருதாணி...?"

"பாப்பா நல்லாயிருக்குதுங்களா...?"

"பாப்பாவா...?" அவன் நெற்றி சுருங்க யோசித்தான்...

'அடியாத்தி, நெசமாவே பாப்பாவை கை கழுவிட்டாரா...? ஐயோ, பாப்பா இப்ப எப்படி இருக்கோ...?' அவள் மனதிற்குள் கவலையாய் ஒப்பாரி வைத்தாள்...

"நம்ம நிலா பாப்பா..." என்றதும் அவனது முகத்தில் புன்னகை அரும்பியது...

"உன் நிலா பாப்பான்னு சொல்லு... என்னை ஏன் உன் கூடக் கூட்டு சேர்க்கிற...?" என்றான் புன்சிரிப்புடன்...

"அது என்னோட நிலா பாப்பாவா இருக்கட்டும் சின்னய்யா... பாப்பா இப்போ எப்படியிருக்கு...?" அவள் விடாது தனது கேள்வியில் நிலையாய் இருந்தாள்...

"யாருக்கு தெரியும்...?" என்று அவன் அசால்ட்டாகத் தோள்களைக் குலுக்கினான்...

"சின்னய்யா...?" அவள் திகைப்புடன் அவனைப் பார்த்தாள்...

"எதுக்கு இவ்வளவு அதிர்ச்சி மருதாணி... அவள் அவளோட அம்மா வீட்டில் நல்ல திவ்யமா இருக்கிறாள்..." என்றான் அதே புன்னகையுடன்...

அவள் ஏதோ யோசனையுடன் அவனைப் பார்த்தாள்....

"என்ன மருதாணி...?"

"இல்ல, பாப்பாவை ரொம்ப நாள் அவங்க அம்மா வீட்டில் விட்டு வைக்காதீங்க சின்னய்யா..."

"பின்னே என்ன செய்யணுமாம்...?" அவள் கூறியதை கேட்டு ஏனோ அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"இங்கே நம்ம வீட்டுக்கு கூட்டிட்டு வந்திருங்க சின்னய்யா... அங்கே பாப்பாவோட அத்தான்னு ஒருத்தன் இருக்கானாம்... அவன் உங்களை விட அழகு, ரொம்ப நல்ல மாதிரின்னு பாப்பா அடிக்கடி புகழ்ந்து சொல்லிக்கிட்டே இருக்கும்... அதான் எனக்குப் பயமாயிருக்கு..."

"அவள் சொன்னது எதுவும் பொய் இல்லை... உண்மை தான்... அவளோட அத்தான் எல்லா விதத்திலும் என்னை விட உயர்ந்தவன் தான்... இதை நான் ஒத்துக்கிட்டே ஆகணும்..." என்றவனது புன்னகை அப்போதும் மாறவில்லை...

"அடியாத்தி, பொசுக்குன்னு இப்படிச் சொல்லிப்புட்டீகளே சின்னய்யா... பாப்பா நெசமாலுமே அவனைக் கல்யாணம் பண்ணிக்குமோ..." என்று கவலைப்பட்டாள் மருதாணி...

"என் பொண்டாட்டியை அடுத்தவன் கல்யாணம் பண்ணும் வரை சும்மா பார்த்துக் கொண்டு இருப்பேன்னு நினைச்சியா மருதாணி...? அதுக்கு அப்புறம் அவன் உடம்பில் உசிர் தங்காது..."

இதுவரை இருந்த புன்னகை மறைந்து போய்ப் பாறையாய் இறுகி போன முகத்துடன் ஆத்திரமாய்க் கூறியவனைப் பெருமையாகப் பார்த்தாள் மருதாணி...

"இப்போ தான் எங்க சின்னய்யாவை பார்க்கும் போது மதுரைவீரன் கணக்கா இருக்கு..."

"அந்த நம்பிக்கையோடு உன் பாப்பாவை பத்தின கவலையை விட்டுட்டு போய் வேலையைப் பாரு..."

"ரொம்பச் சந்தோசம் சின்னய்யா..." என்றவள் தனது வேலையைப் பார்க்க போனாள்...

"அத்தான்..."

தனக்குப் பின்னால் இருந்து கேட்ட குரலில் சிம்மவிஷ்ணு திரும்பி பார்த்தான்... ஹர்ஷவர்த்தினி உற்சாகப் பந்தாய் அங்கே நின்றிருந்தாள்...

"என்ன...?" என்றான் எரிச்சலுடன்...

"வாயை திறங்க..." என்றவள் அவன் வாயை திறக்கும் முன் கையிலிருந்த தட்டில் இருந்து ஒரு ஜிலேபியை எடுத்து அவனது வாயில் வைத்து விட்டாள்...

"உங்களுக்கு ஜிலேபின்னா ரொம்பப் பிடிக்குமாமே... அத்தை சொன்னாங்க..." என்றவளை முறைத்து பார்த்தவன் வாயில் இருந்த ஜிலேபியை 'தூ'வெனக் கீழே துப்பினான்...

"அத்தான்..." என்று அவள் அதிர்ந்து போய் அவனைப் பார்க்க...

"இந்த நொடியில் இருந்து எனக்கு ஜிலேபி பிடிக்காது..." என்று ஆத்திரமாய் உரைத்தவன் அங்கிருந்து கிளம்பப் போனான்...

"அத்தான்..." என்று அவள் அவனது கை பிடித்துத் தடுக்க... அடுத்த நொடி அவன் ஓங்கி ஒரு அறை விட்டான் அவளது கன்னத்தில்...

"என்னைத் தொட உனக்கு மட்டுமல்ல வேறு எந்தப் பெண்ணுக்கும் உரிமை இல்லை... என் மனைவிக்கு மட்டும் தான் அந்த உரிமை இருக்கிறது... அந்த உரிமை கூட நான் அனுமதித்தால் மட்டுமே..." ஆள்காட்டி விரல் நீட்டி அவளை எச்சரித்தவன் மனதில் நிஷிலாவின் பிம்பம் எழுந்ததை அவனால் தடுக்க முடியவில்லை...

பெண் தொடுகை என்று வரும் போது அவள் தான் அவனது நினைவுக்கு வருகிறாள்... பெண் சுகம் என்னும் போதும் அவள் தான் அவன் நினைவுக்கு வருகிறாள்... அவன்

அறிந்த முதல் பெண்ணும் அவள் தான்... அவன் அறிந்த இறுதி பெண்ணும் அவள் தான்...

ஹர்ஷவர்த்தினியின் பதிலை எதிர்பாராது அவன் சென்றுவிட... அவளோ அவனைப் பார்த்தவாறு இனிய கற்பனையில் மூழ்கியிருந்தாள்... அவன் கூறிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் தித்திப்பாய் அவளுள் இறங்கியது... இந்தக் கற்புக்கரசன் சீதாராமன் தனக்கு மட்டுமே சொந்தமாக வேண்டும் என்று அவள் ஏங்க துவங்கினாள்...

****************

காலையில் உண்ட உணவை எல்லாம் அப்படியே வாந்தி எடுத்தாள் நிஷிலா... ஐந்து மாதம் முடிந்த நிலையிலும் மசக்கை அவளை விட்டபாடில்லை... இன்னமும் அது அவளைப் படுத்தி எடுத்துக் கொண்டிருந்தது அவளது கணவனைப் போன்று...

"நிஷிம்மா, ஹாஸ்பிட்டல் போவோமா...?" என்று அக்கறையுடன் கேட்ட பவித்ரனின் குரலில் திரும்பி பார்த்தவளின் விழிகள் கலங்கியது...

கடந்த ஏழு மாதங்களாக இந்த அக்கறையான வார்த்தைகளுக்காக அவள் எப்படி எல்லாம் ஏங்கினாள் என்று அவளுக்குத் தானே தெரியும்...

"அத்தை, தள்ளி போங்க... நான் நிஷியை பார்த்துக்கிறேன்..." என்றவன் அருந்ததியை விலகி போகச் செய்துவிட்டு தான் நிஷிலா அருகில் வந்தான்...

"வேண்டாம் அத்தான்... நான் பார்த்துக்கிறேன்..." அவள் சோர்வுடன் பலகீனமாய் முனங்கினாள்...

"ஏன் வேண்டாம்ன்னு சொல்ற நிஷி...? நமக்குள் நடந்த கல்யாண பேச்சுவார்த்தையை மறந்துவிடு... சிறுவயதில் இந்த அத்தான் உன்னைப் பார்த்துக் கொண்டது இல்லையா...? அந்த அன்பு இப்போது இல்லை என்றாகி விடுமோ... சொல்...?" என்றவனது தோளில்,

"அத்தான்..." என்று தேம்பியவாறு அவள் தலை சாய்ந்து கொண்டாள்...

"இது நல்ல பிள்ளைக்கு அழகு..." என்றவன் அவளது வாயை சுத்தம் செய்து பின் அவளது முகத்தைக் கழுவி விட்டான்... பின்பு அவளை அறைக்குள் அழைத்து வந்து கட்டிலில் சாய்வாக அமர வைத்தவன் அத்தையிடம் திரும்பி,

"குடிக்க ஏதாவது கொண்டு வாங்க..." என்று கூற...

"ஒன்றும் வேண்டாம் அத்தான்... எதைக் குடித்தாலும் வாந்தி வந்துவிடும்..." என்று அவள் மறுக்க...

"கொஞ்சமா ஆரஞ்சு ஜூஸ் குடிக்கலாம் குட்டிம்மா..." என்றவன் அத்தையைப் பழச்சாறு கொண்டு வர பணித்தான்... அவர் சென்றதும் அவன் அவளைப் பார்த்து,

"டாக்டர் கிட்ட செக்கப் போனியா...?" என்று கேட்க...

"ம்ஹூம்..." என்று அவள் மறுப்பாய் தலையசைத்தாள்...

"ஓ மை காட்... ஃபைவ் மன்த் வரை பேபியை டாக்டர் கிட்ட காட்டாம...? ச்சே, இப்படியும் ஒரு மனுசன் இருப்பானா...? பேபிக்கு ஏதாவது ஒண்ணுன்னா... நினைச்சு பார்க்கவே பயமாயிருக்கு..." அவனது குரல் நடுங்கியது...

அதன் தந்தைக்கு இல்லாத அக்கறையைத் தனது அத்தான் யோசிப்பது கண்டு அவளது விழிகள் பனித்தது...

"இப்போ உடனே கிளம்பு... செக்கப் போயிட்டு வந்திரலாம்..."

அவளுக்குமே பயமாக இருந்தோ என்னவோ... அதனால் அதற்குச் சரியென்று சம்மதித்தாள்...

"அவனுக்கு உன் மேல் தான் அக்கறை இல்லை... ஆனால் இந்தச் சிசு என்ன பாவம் பண்ணியது...? அதன் மீது ஏன் இவ்வளவு அலட்சியம்...?" அவன் தாங்க மாட்டாது புலம்பிவிட்டான்...

மழலையைக் கண்டால் எல்லோருக்கும் இரக்கம் தானே சுரக்கும்... ஆனால் இந்தச் சிம்மவிஷ்ணு மட்டும் இதற்கு எல்லாம் முரண்பட்டு இருக்கிறானே...

"அவனைப் பொறுத்தவரை நான் ஒரு வேசி... இந்த வேசி வயிற்றில் வளரும் குழந்தையைப் பற்றி அவனுக்கு என்ன அக்கறை இருக்கப் போகிறது...?" வெறுமையான குரலில் கூறியவளை கண்டு,

"நிஷிம்மா..." என்று அவன் அலறிவிட்டான்...

அவனது மாமன்மகள் அந்தக் கொடியவனிடம் என்ன பாடு பட்டிருப்பாள்? என்பதை அவனால் ஊகிக்க முடிந்தது...

"வேண்டாம் நிஷிம்மா... எதுவும் சொல்லாதே... என்னால் தாங்க முடியவில்லை... அவன் இன்னும் உன்னை என்னவெல்லாம் கொடுமை படுத்தினானோ...?" என்று கூறியவனின் விழிகளில் இருந்து கண்ணீர் சொட்டியது...

"கொடுமை என்று சொல்ல முடியாது அத்தான்... ஆனால் வார்த்தைகளால் வதைத்தான்... மிகவும் மோசமாக..." என்று கூறியவள் இப்போதும் சிம்மவிஷ்ணுவின் வார்த்தைகளைத் தாங்கி கொள்ள முடியாது துயரத்துடன் விழிகளை மூடி கொண்டாள்...

'விபச்சாரி' என்று கூறிக் கொண்டே தன்னுள் மூழ்கியவனை நினைத்து பார்த்தவளுக்கு விழிநீர் எட்டிப்பார்த்தது...

ஒரு பெண்ணாய் கூட அவள் அவனைப் பாதிக்கவில்லை என்பது தான் பெரும்கொடுமை...!

"நிஷா..." அன்னையின் விளிப்பில் அவள் விழிகளைத் திறந்தாள்...

"இதைக் குடிம்மா..." அதற்கு அவள் மறுப்பாய் தலையசைக்க...

"குடித்துத் தானாக வேண்டும்..." என்று கூறிய பவித்ரன் தன்னைத் தேற்றிக் கொண்டு அவளுக்குப்

பழச்சாற்றினைப் புகட்ட துவங்கினான்...

பவித்ரன் சொன்னது போல் அப்போதே நிஷிலாவை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்குச் சென்றான்... துணைக்கு அருந்ததியை அழைத்துக் கொண்டான்... உடன் வருவதாகச் சொன்ன செல்வரத்தினத்தை வேண்டாம் என்று தடுத்து விட்டு அலுவலகத்திற்குப் போகச் சொன்னான்...

"உன் கணவர் பெயர் என்னம்மா...?" எடுத்ததும் இப்படிக் கேட்ட மருத்துவரை கண்டு மூவரும் திகைத்து போயினர்...

பவித்ரன் நிஷிலாவின் கையை ஆறுதலாகப் பற்றியபடி தனது பெயரை சொல்ல போனான்... அதற்குள் நிஷிலா முந்தி கொண்டு,

"சிம்மவிஷ்ணு..." என்றாள் அழுத்தம் திருத்தமாய்...

"நிஷிம்மா..." என்று பவித்ரன் அவளை அதிர்ச்சியாய் பார்த்தான்... அவளது தாயும் திகைத்து போய் மகளைப் பார்த்தார்...

"அவன் தானே இந்தக் குழந்தைக்கு அப்பா..." என்று சர்வசாதரணமாய்ச் சொன்னவளை கண்டு அவர்கள் இருவரும் முழித்தனர்...

நிஷிலாவின் உடல் பரிசோதனை முடிந்து அதன் அறிக்கையைப் பார்த்த மருத்துவர் புன்னகையுடன், "குழந்தை ஆரோக்கியமா இருக்கு... இவங்களும் ஓகே... நான் கொடுக்கிற டேப்லெட்ஸ், டானிக் மட்டும் தினமும் எடுத்துக்கோங்க... சத்தான உணவா சாப்பிடுங்க..." என்று அவர் அடுக்கி கொண்டே போக...

"எது சாப்பிட்டாலும் வாமிட் பண்றாளே..." என்று கவலையாகக் கேட்ட பவித்ரனை பார்த்து புன்னகைத்தவர்,

"வாமிட் வராம இருப்பதற்காக டேப்லெட் எழுதியிருக்கேன்... அடிக்கடி போட வேண்டாம்... தேவைப்படும் போது யூஸ் பண்ணிக்கோங்க..."

அவரிடம் மருந்துகள் எழுதி வாங்கி விட்டு விடைப்பெற்று வெளியில் வரும் வரை யாரும் எதுவும் பேசவில்லை... காரிலேறி வீடு வரும் வரை மௌனமே ஆட்சி செய்தது...

குழந்தை ஆரோக்கியமாக உள்ளது என்று மருத்துவர் கூறியதும் அவள் அடைந்த உவகைக்கு அளவே இல்லை... அந்தக் கணம் அவளுக்கு ஒன்று புரிந்தது... அது இந்தக் குழந்தைக்கும் அவளுக்குமான பந்தம்... அது அவளுக்கு எந்தளவிற்கு முக்கியம் என்று... அது அவளது உயிர் என்பதை இந்தக் கணம் அவள் உணர்ந்து கொண்டாள்...

எப்போதும் வயிற்றில் நெளிந்து தன் இருப்பை அவளுக்கு உணர்த்திக் கொண்டிருந்த சிசுவை இன்று கணினி திரையில் கண்ட போது அவளுக்கு அத்தனை ஆனந்தமாக இருந்தது... அதன் அசைவை இப்போதும் உணர்ந்தவளாய் அவளது கை வயிற்றைத் தொட்டுப் பார்த்தது...

'இது என் குழந்தை... அவன் குழந்தை இல்லை...' என்று அவளது இதழ்கள் சத்தமில்லாது முணுமுணுத்துக் கொண்டது...

வீட்டிற்கு அவர்கள் வந்திறங்கிய போது பத்ரிநாத் பெங்களூரில் இருந்து திரும்பி இருந்தார்... நிஷிலாவை கண்டு மகிழ்ந்தவர் அவளது தோற்றம் கண்டு திகைத்துப் போனார்... மனம் பதற அவள் அருகில் வந்தவர்,

"நிஷா, இது என்ன கோலம்டா...?" என்று கேட்டவரின் விழிகள் கலங்கியது...

அதற்கு அவள் பதில் சொல்லாது கண்ணீர் வடிக்க... அவர் கோபமாய் மனைவியைப் பார்த்தார்...

"நான் வந்ததும் நீ ஏன் இதை என் கிட்ட சொல்லலை...?"

"அது வந்து பத்ரி... இப்போ தான் நீங்க வீட்டுக்கு வந்திருக்கீங்க... பிறகு சொல்லலாம்ன்னு..."

தங்கைக்கு ஜால்ரா போடும் அவரது அண்ணன்கள் இருவரும் அவருடன் இல்லாது அலுவலகத்திற்குச்

சென்றிருந்தனர்...

"அதுக்கு என்ன...? இது எவ்வளவு முக்கியமான விசயம்..." என்று அவர் கோபமாய் உறும...

"டாட் கொஞ்சம் அமைதியா இருங்க..." என்ற பவித்ரன் அத்தையிடம்,

"நிஷியை உள்ளே கூட்டிட்டு போங்க..." என்க...

அவர்கள் இருவரும் சென்றதும் அவன் தந்தையிடம், "நிஷியோட நிலைமையைப் பார்த்ததும் நானும் இப்படித் தான் கோபம் கொண்டேன்... ஆனா யாரும் என் பேச்சை கேட்க மாட்டேங்கிறாங்க டாட்... ஒண்ணு அவனைத் தட்டி கேட்கணும்... இல்லையா அவனோட பேரண்ட்ஸ் கிட்ட போய்ப் பேசணும்... இதில் ஏதாவது ஒண்ணு நாம செஞ்சு தான் ஆகணும்..." என்றான் அவன் முடிவாக...

"ஏன் தீரனை தடுத்த வசி...?" பத்ரிநாத்திடம் இருந்து கேள்வி கூர்மையாக வந்தது...

மகனை சமாளித்த இளவரசியால் கணவனைச் சமாளிக்க முடியவில்லை...

"எது செஞ்சாலும் நல்லா யோசிச்சிட்டு செய்யணும் பத்ரி..."

"இதில் யோசிக்கிறது என்பதற்கே இடமில்லை... அநியாயத்தைத் தட்டி கேட்பது ஒன்று தான் ஒரே வழி... தவறு செய்தவன் தண்டனையை அனுபவித்தே ஆகவேண்டும்..." தீர்மானமாகக் கூறிய பத்ரிநாத்தை கண்டு இளவரசி அதிர்ந்து போனார்...

பத்ரிநாத் சிம்மவிஷ்ணுவை சந்தித்தால் நிலைமை விபரீதமாகப் போய்விடும் என்று அவர் பயந்தார்...

பத்ரிநாத் சிம்மவிஷ்ணுவை தேடி போக வேண்டிய அவசியமே இல்லாது மறுநாள் அவனே அவரை வந்து சந்தித்தான்... அதுவும் அவர்களது நிறுவனத்தின் பெரும்பான்மை பங்குகளை வாங்கி அவர்களால் ஒன்றும்

செய்ய முடியாத அளவிற்குப் பலம் பொருந்திய எதிரியாக அவர்கள் முன் வந்தமர்ந்தான் அவன்...

மகாபாரத யுத்தகளத்தில் பீஷ்மருக்கு எதிராக வில்லேந்தி நின்ற அர்ஜூனனை போன்று சிம்மவிஷ்ணு பத்ரிநாத்திற்கு எதிராகக் களத்தில் நின்றான்...!!!

"நெஞ்சில் பாசம் பணிவாய்,
மனதில் அன்பு அரணாய்,
இதயத்தில் நேசம் கசிவாய்,
உறவில்லா பந்தம் அது
கொடுத்த சொந்தம்,
மாறா இனிமையோடு...
என்றும் நன்றி மறவா
உள்ளத்தோடு சின்னவன்...
உறவில் பூக்கா மலரென்று
தெரிந்தும் அன்பு பாராட்டிய
உள்ளம் அறியுமோ?
அவன் இவனென்று...!!!"

கொல்லும்...!!!

## நிழல் : 10

அன்று காலையில் இருந்தே அலுவலகம் மிகுந்த பரபரப்பாக இருந்தது... எஸ்எம் குழுமத்தின் வருடாந்தரக் கூட்டத்தொடர் நடைப்பெற இருந்தது... அதன் பங்குதாரர்கள் அனைவரும் இந்த ஒரு நாளில் மட்டும் ஒரு இடத்தில் கூடுவர்... அது போன்றதொரு சிறப்புக் கூட்டத்தொடர் இது...

பவித்ரன், பத்ரிநாத், இளவரசி, செல்வரத்தினம், மணிபாரதி ஐவரும் சற்று பரபரப்புடன் காணப்பட்டனர்... ஏனெனில் அவர்கள் கேள்விப்பட்ட விசயங்கள் அந்த மாதிரி... அதனால் தான் இந்தப் பரபரப்பு... பரபரப்பையும் மீறி அவர்கள் மனதில் பெரும் கலக்கம் இருந்தது உண்மையே...

"இதை நீ இந்தளவுக்கு வளர விட்டிருக்கக் கூடாது தீரா..." பத்ரிநாத் மகனை கடிந்து கொண்டார்...

"டாட்... இது இன்னைக்கு நேத்து முடிவு எடுத்து செஞ்ச மாதிரி தெரியலை... நிதானமா, திட்டமிட்டு செஞ்ச மாதிரியிருக்கு..."

"அப்படி நிதானமா முடிவெடுக்கிற மாதிரி எதிராளிக்கு டைம் கொடுத்தது நம்ம தப்பு..." மகனை கடிந்தாலும் அவர் தன் மீதும் சேர்த்துக் குற்றம் சுமத்த தவறவில்லை...

பத்ரிநாத் தொழிலில் மச்சினர்களை நம்புவதை விடத் தானே நேரிடையாகக் களத்தில் இறங்கி பணிபுரிந்தார்... இப்போது மகன் வந்ததும் தன்னுடைய பொறுப்பை மகனிடம் கொடுத்திருந்தார்... அவருக்கு மனைவியிடம் எல்லையில்லா காதல் உண்டு... மனைவிக்கும் தனி அதிகாரம் கொடுத்திருக்கிறார் தான்... ஆனால் அது எல்லாம் அவர் அனுமதி வாங்கிய பின்பு நடக்கும்படியாக ஒரு கட்டமைப்பை உருவாக்கி வைத்திருந்தார்... தொழிலில் அவர் சற்று கறார் பேர்வழி...

கூட்டம் நடக்கவிருந்த அந்தப் பெரிய 'ஹாலில்' ஐவரும் நுழையும் வரை யாரும் அங்கு வரவில்லை... அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்த பத்ரிநாத் மகனை யோசனையுடன் பார்த்தார்...

"எல்லோருக்கும் மெயில் பண்ணின தானே..."

"எஸ் டாட்..." என்றவனும் சிந்தனையில் ஆழ்ந்தான்...

எல்லோர் முகத்திலும் பெருத்த யோசனை தெரிந்தது... எப்போதும் தெனாவெட்டாய் இருக்கும் இளவரசி கூட இன்று ஏனோ அமைதி இழந்து காணப்பட்டார்...

சரியாகப் பத்து மணிக்கு 'ஹாலின்' கதவு இரண்டும் விரிய திறக்கப்பட்டது... அதன் வழியே உள்ளே நுழைந்தவனைக் கண்டு நால்வரின் விழிகளும் வியப்பில் விரிந்தது என்றால், பத்ரிநாத் மட்டும் அவனை யோசனையுடன் பார்த்தார்...

ஜெல் போட்டு படிய வாரிய தலைமுடியும், முறுக்கிவிடப்பட்ட மீசை இப்போது நறுவிசாய் அழகாய் வெட்டப்பட்டு, கருப்பு நிற கோட், பேண்ட், அதே நிறத்தில் வெள்ளை கோடு போட்ட டை, வெள்ளை முழுக்கை சட்டை அணிந்து ரேமாண்ட்ஸ் விளம்பர மாடல் போன்று கம்பீரமாக, அழகாக நடந்து வந்து கொண்டிருந்தான் சிம்மவிஷ்ணு... சீரான நடையுடன் நிதானமாய் நடந்து வந்தவனின் பார்வை வேறு எங்கும் திரும்பாது பத்ரிநாத்தை மட்டும் அழுத்தமாய்ப் பார்த்தது...

அவனது பார்வையில் பத்ரிநாத் மிகவும் குழம்பி போனார்...

நீள்வட்ட வடிவ மேசையின் ஒரு புறம் அவர்கள் ஐவரும் அமர்ந்திருந்தனர்... அவர்களுக்கு எதிர்புறம் இருந்த இருக்கையில் அமர்த்தலாக அமர்ந்தவன் மேசையில் கைகளைக் கோர்த்தபடி ஊன்றி அதில் தாடையை ஊஞ்சலாடுது போல் பதித்தவன் தனது விழிகளைச் சுழற்றி பத்ரிநாத்தை தவிர மற்ற நால்வரையும் நக்கலாய் பார்த்தவன்,

"தென்...?" என்றான் கேலியாய்...

கணவன் முன் கோபத்தைக் காட்ட முடியாதபடி இளவரசி அவனைக் கண்டு பல்லை கடித்தார்... செல்வரத்தினம், மணிபாரதி இருவரும் தங்கையின் நிலைமையில் இருந்தனர்... அலுவலகத்தில் வைத்துத் தந்தையிடம் நிஷிலா விசயம் பற்றி உரைக்க முடியாதபடி பவித்ரன் தவித்தான்... நிஷிலாவின் இந்த நிலைமைக்குக் காரணம் சிம்மவிஷ்ணு என்று இன்னமும் பத்ரிநாத்திடம் யாரும் சொல்லவில்லை...

"தென் வாட்...?" என்று எதிர்கேள்வி கேட்டது பத்ரிநாத் மட்டுமே...

"அடுத்து என்ன...?" விரல்களால் மேசை மீது தாளம் போட்டபடி நாற்காலியில் சாய்ந்தமர்ந்த சிம்மவிஷ்ணு,

"சரி, நானே அதைச் சொல்கிறேன்... உங்க கம்பெனி ஷேர்ஸ் எல்லாம் இப்போ என் வசம்... அப்போ நான் இந்தக் கம்பெனிக்கு யாரு...?" அவன் கேட்ட எதிர்கேள்விக்கு யாராலும் பதில் கூற முடியவில்லை...

"அதுக்கு என்ன இப்போ...? தாராளமா நீங்க எங்களுடைய பார்ட்னரா இருக்கலாம் மிஸ்டர். சிம்மவிஷ்ணு..." என்ற பத்ரிநாத்தை இடைவெட்டிய சிம்மவிஷ்ணு,

"இந்த மிஸ்டர் எல்லாம் நமக்குள் வேண்டாம்... நீங்க என்னைச் சிம்மவிஷ்ணு என்றே கூப்பிடலாம்..."

யாரிடமும் இறங்கி போகாதவன், தன்மையாகப் பேசி அறியாதவன் இன்று அவரிடம் இறங்கி போனான், தன்மையாகப் பேசினான்... அதில் ஆச்சிரியமுற்ற பத்ரிநாத் அவனை உற்று பார்த்தார்... அந்தக் கணம் அவன் கண்ணில் இருந்த ஏதோ ஒரு செய்தியை அவரால் படிக்க முடியவில்லை... படித்திருந்தால் அவருக்கு வாழ்க்கையே வெறுத்துப் போயிருந்திருக்கும்...

"இந்த ஸ்பெசல் ஆஃபர் பத்..." ஏதோ சொல்ல வந்தவன் நிறுத்திவிட்டு,

"மிஸ்டர். பத்ரிநாத்துக்கு மட்டுமே... உங்க நான்கு பேருக்கும் இல்லை... உங்களுக்கு நான் மிஸ்டர். சிம்மவிஷ்ணு மட்டுமே..." என்றவனின் குரல் மிகவும் தீவிரமாய் ஒலித்தது...

"மீட்டிங்கை ஸ்டார்ட் பண்ணலாமா...?" சிம்மவிஷ்ணு கோட்டை சரி செய்தபடி தொழிலதிபனாய் நிமிர்ந்து அமர்ந்தான்...

அந்த வருட லாப, நஷ்ட கணக்குகள், நிறுவனத்தில் தயாரிக்கப்படும் பொருள்களின் சந்தை நிலவரம், பங்கு சந்தையில் அவர்களது நிறுவனத்தின் பங்குகளின் நிலை, நிறுவனத்தின் அந்நிய முதலீடு என்று அனைத்தும் அக்குவேறு ஆணிவேராக அலசி ஆராயப்பட்டது... பிறகு நிறுவனத்தின் தேவைக்காக இயந்திரங்கள் வாங்குவதற்கு என்று தனியே குறிப்பிட்ட நிதி ஒதுக்கப்பட்டது...

சிம்மவிஷ்ணு அனைத்தையும் அமைதியாகக் கேட்டுக் கொண்டான்... பவித்ரன் பேசும் போது அவன் அதிகப்பிரசிங்கித்தனமாக இடையில் தலையிடவில்லை...

இயந்திரம் வாங்குவதற்கான ஒப்பந்த படிவத்தில் அவர்கள் ஐவரும் கையெழுத்து போட்டு முடிந்ததும் கடைசியாகச் சிம்மவிஷ்ணுவிடம் அந்தக் கோப்பு வந்தது... அதைப் படித்துப் பார்த்தவனின் உதடுகளில் கேலி புன்னகை நெளிந்தோடியது...

"டாட்..." என்றபடி அவன் பேனாவால் அதிலிருந்த காகிதத்தில் பெரிய புள்ளி வரைந்தான்...

"மிஸ்டர்..." என்று குரலை உயர்த்திய பத்ரிநாத்தை நிமிர்ந்து பார்த்தவன்,

"என் பெயர் சிம்மவிஷ்ணு... நீங்க விஷ்ணுன்னு கூப்பிடலாம்..." என்றான் தன்மையாக...

"நீங்க விளையாடுவதற்கு எங்க கம்பெனி தான் கிடைத்ததா...?"

"நிச்சயம் இந்தப் புள்ளி விளையாட்டு இல்லை மிஸ்டர். பத்ரிநாத்... உங்களது சிறு பிள்ளைத்தனமான செயலுக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறேன்..." என்றான் அவன் அசல்ட்டாக...

"முதலில் நீ இப்படிச் சின்னப் பிள்ளை மாதிரி பேசுறதை நிறுத்து..." என்று பவித்ரன் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான்...

"தம்பி, நான் சொன்னதே உன்னைத் தான்... இது புரியாம நீ ஜோக் அடிச்சிக்கிட்டு..." என்று கேலியாய் நகைத்தான் சிம்மவிஷ்ணு...

கணவன் முன் எதுவும் பேச தோணாதவராய் இளவரசி அமர்ந்திருந்தார்... ஏனெனில் அவரது குடுமி இப்போது சிம்மவிஷ்ணுவின் கையில் அல்லவா...

"ஓ, இதற்கு நீ முற்றுப்புள்ளி வைத்தால் நாங்க இதைச் செயல்படுத்த முடியாதுங்கிற நினைப்பா உனக்கு... உன் அனுமதி எங்களுக்குத் தேவையில்லை..." என்றார் பத்ரிநாத் சற்று திமிராய்...

"எப்படி...?"

"நீ வாங்கிய ஷேர்களின் மதிப்பை விட எங்களுடைய ஷேர்களின் மதிப்பு அதிகம்..." என்றவரை கண்டு சிம்மவிஷ்ணுவின் விழிகள் கூர்மையடைந்தது...

"ஐந்து சதவீத ஷேர்ஸ் எப்போதும் எங்களுக்குள் தான் இருக்கும்... அதுவும் எங்களுக்கு நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவரிடம்... அதை வாங்க உன்னால் முடியாது... அது இப்போது எங்கள் வசம்..." என்று இறுமாப்பாய் பதில் வந்தது அவரிடம் இருந்து...

சிம்மவிஷ்ணு அவரை வருத்தத்துடன் பார்த்தான்... தான் அடுத்து பேச போகும் வார்த்தைகள் அந்த நல்ல மனிதரை கண்டிப்பாகக் காயப்படுத்தும் என்பதை அவன் நன்கு உணர்ந்தே இருந்தான்... ஆனால் யுத்தகளத்தில் அவனுக்கு வேறுவழியில்லை... வெற்றி பெற்றே ஆகவேண்டிய

கட்டாயம் அவனுக்கு... அதனால் தொண்டையைச் செருமி கொண்டு அவரைப் பார்த்து பேச ஆரம்பித்தான்...

"வெல் மிஸ்டர். பத்ரிநாத்... இப்போதும் அது உங்கள் வசம் தானா? என்று எதற்கும் அந்த நம்பிக்கைக்கு உரியவரிடம் ஃபோன் போட்டு பேசி பாருங்களேன்..."

சிம்மவிஷ்ணுவின் கேலி இல்லாத உறுதியான குரலை கேட்டுப் பத்ரிநாத் திகைத்து போனவராய் மகனை பார்க்க... பவித்ரன் அவசரமாக அந்த நம்பிக்கைக்குரிய நண்பருக்கு அலைப்பேசியில் அழைத்தான்... மறுமுனையில் சொன்ன விசயம் கேட்டு அவனுக்குத் தலைச்சுற்றிக் கொண்டு வந்தது...

"டாட்..." என்றான் அவன் கலவரமாக... அதிலேயே பத்ரிநாத்திற்கு விசயம் புரிந்துவிட்டது... அவரது முகம் பேயறைந்தார் போன்று மாறிப் போனது...

"உங்க நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் என்ன சொல்கிறார்...?" என்று கேலியாய் கேட்ட சிம்மவிஷ்ணுவை கண்டு ஐவரும் திகைத்து போயினர்...

"இப்போது அவர் என்னுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்... இப்போது இந்தக் கம்பெனியில் நீங்க ஐந்து பேரும், நான் ஒருவனும் ஈக்குவலான பார்ட்டனர்ஸ்..." என்றான் அவன் சற்றுக் கர்வமாக...

"இருக்கலாம்... ஆனால் நீ ஒருவன் அங்கீகரிப்பதை நாங்க ஐவரும் எதிர்க்கும் சாத்தியக்கூறுகள் அதிகம் இருப்பதை மறந்துவிடாதே... அதனால் உன்னுடைய ஒவ்வொரு அடியும் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்..." பத்ரிநாத் சிறிதும் சளைக்காது பதில் கூறினார்...

அவரது பேச்சு கேட்டு சிம்மவிஷ்ணு, "ஐ லவ் யூ பத்திப்பா..." என்று தனக்குள் முணுமுணுத்தான்...

அமைதியான ஏசி அறையில் அவன் முணுமுணுத்தது அவரது காதில் நன்கு விழுந்தது... பவித்ரன் காதில் அது விழுந்தாலும் அதைக் கேட்டு அவன் பெரிதாக அலட்டி

கொள்ளவில்லை... மற்ற மூவரும் தங்களுக்குள் உழன்றபடி அமர்ந்திருந்ததால் இதைக் கவனிக்கவில்லை...

"என்ன சொன்ன...? திரும்பச் சொல்லு..." பத்ரிநாத் பரபரப்புடன் அவனிடம் கேட்டார்...

அவரது பரபரப்பே சொல்லாமல் சொல்லியது அவரது அன்பின் ஆழத்தை... அதைக் கண்டு அவனது விழிகள் கலங்கியது... ஆழ மூச்செடுத்துத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவன்,

"ஐ லவ் யூன்னு சொன்னேன்... ஏன் சொல்ல கூடாதா...? என் அப்பா வயது உங்களுக்கு இருக்கும்... ஒரு மகனா உங்களைக் கண்டு நான் பிரமிக்கிறேன்..." என்றான் அவன்... அவனது குரலில் அவரது அன்பு கண்டு அவன் அடைந்த பிரமிப்பு தான் அதிகம் நிறைந்திருந்தது...

அவர் அவனைக் கூர்மையாகப் பார்த்திருந்தார்... அவன் கூறிய வார்த்தையின் தாக்கத்தில் இருந்து அவரால் அவ்வளவு எளிதில் வெளிவர முடியவில்லை... அவரது மனம் கடந்த கால நினைவுகளில் சிக்குண்டு தவித்தது... ஒரு நினைவை வலுக்கட்டாயமாக மறக்க நினைத்தவர், மற்றொரு நினைவை அப்படி மறக்க இயலாது தவிக்கிறார்... இப்போது அவனது இந்த வார்த்தையால் அவரது தவிப்பு இன்னமும் அதிகரித்துவிட்டது...

"நீங்க சொன்னது நூறு சதவீதம் இல்லையில்லை இருநூறு சதவீதம் சரி தான்... ஆனால் நீங்க ஒன்றை மறந்துட்டீங்க மிஸ்டர். பத்ரிநாத்... நீங்க ஐந்து பேரும் சேர்ந்து எடுக்கும் முடிவை எதிர்ப்பதற்கு நான் ஒருத்தன் போதும்..." என்றவனைக் கண்டு பத்ரிநாத் விழிகளில் வியப்புடன் கூடிய மெச்சுதல் வந்தது...

அதைக் கேட்டு பவித்ரன் பல்லை கடித்தான்...

"இப்போது புரிந்ததா என்னுடைய பவர் என்னன்னு...?" அவரைப் பார்த்துப் புருவம் உயர்த்திய சிம்மவிஷ்ணு அதை

நினைத்துப் பெருமை கொள்ளாது கையிலிருந்த காகிதத்தில் தனது கவனத்தைச் செலுத்தினான்...

"நீங்க இந்த மெசின்ஸ் வாங்க கோட் பண்ணியிருக்கும் அமௌண்ட் ரொம்ப அதிகம்..."

"எல்லாம் ஈரோப்பியன் கம்பெனீஸ்... அப்போ ரேட்டும் அப்படித்தான் அதிகம் இருக்கும்..." என்றான் பவித்ரன் பட்டென்று கோபமாக...

சிம்மவிஷ்ணு அவனைப் பார்க்காது பத்ரிநாத்தை நிமிர்ந்து பார்த்து, "இந்த மெசின்ஸை எல்லாம் எத்தனை வருசத்துக்கு யூஸ் பண்ணுவீங்க...?"

அவரோ பதில் பேசாது 'நீயே சொல்' என்பது போல் அவனை இமைக்காது பார்த்திருந்தார்... அதை உணர்ந்தவனாய் அவனும் மேலே தொடர்ந்தான்...

"ஐந்து வருடங்கள்... மிஞ்சி போனால் பத்து வருடங்கள்... அதற்குப் பின் அதை எல்லாம் பழைய இரும்புக்கு தான் போட வேண்டும்... அப்படி இருக்கும் போது இதில் எதற்கு இத்தனை பணத்தைக் கொட்ட வேண்டும்... இதே மெசின்களை நான் குறைந்த விலைக்கு வாங்கித் தர ஏற்பாடு பண்ணுகிறேன்..." என்றவனை இடைமறித்த பவித்ரன்,

"என்ன மேக்...?" என்று கேட்டான்...

"ஜப்பான் அல்லது சைனா..." என்றவனை நக்கலாய் பார்த்த பவித்ரன்,

"உன்னைப் போல்..." என்றான்... அவனது கேலியை புறம்தள்ளிய சிம்மவிஷ்ணு,

"தொழிலில் பெர்சனலை கொண்டு வராமல் பேசினால் நல்லது என்று நினைக்கிறேன்..."

"தீரா..." தன்னை அடக்கிய தந்தையின் குரலில் பவித்ரன் அமைதியாகி போனான்...

"எந்த நாட்டு தயாரிப்பாக இருந்தால் என்ன...? நமக்கு வேண்டியது உழைப்பு... அதே சமயம் நீங்க ஒரு மெசின் வாங்கும் பணத்தில் இதில் மூன்று மெசின்களை வாங்கி விடலாம்... இதனால் நம் உற்பத்தி தான் அதிகரிக்கும்... குறிப்பிட்ட கால அளவில் அதிகப் பொருள் உற்பத்தி, அதிக வருமானம், நேரம் மிச்சம்... அந்த வருமானத்தை வைத்து இதே போல் இன்னமும் அதிக மெசின்கள் வாங்கலாம்..." என்றவனை மெச்சுதலாகப் பார்த்த பத்ரிநாத்,

"உங்களுடைய ஐடியா மிகவும் நல்லாயிருக்கு..." என்று சிம்மவிஷ்ணுவை பாராட்டியவர் மகனிடம்,

"இதையே முடிவு பண்ணிரு தீரா..." என்றார் முடிவாக...

"டாட், மெசினில் ரிப்பேர் எதுவும் வந்தால்..." என்று யோசனையாக இழுத்த மகனை பார்த்தவர்,

"அப்படி வராது... அப்படியே வந்தாலும் க்யாரண்ட்டி இருக்கும் தானே... இவர் நம்ம கம்பெனிக்கு நல்லது தானே சொல்லியிருக்கிறார்... அதனால் அதை நாம் ஃபாலோ பண்றதில் தப்பில்லை..."

கூட்டம் முடிந்து எல்லோரும் கலைந்து சென்றனர்... சிம்மவிஷ்ணு வேண்டுமென்றே பின்தங்கினான்... அவனின் எதிர்பார்ப்பிற்கு ஏற்றார் போன்று பத்ரிநாத் அவன் அருகில் வந்தார்... அவனைப் பெருமை பொங்க பார்த்தவர்,

"எனது பெரிய மகன் இருந்திருந்தால் உன்னைப் போல் தான் இருந்திருப்பான்... தீரா வேகம் தான்... ஆனால் நீ அவனை விட அதிவேகம்... எனக்கு உன்னை மிகவும் பிடித்திருக்கிறது..."

அவனது இன்னொரு பக்கம் தெரியாது அவர் அப்படிக் கூறினார்...

"தேங்க்யூ..." என்றவன் மனம் நெகிழ அவரை அணைத்துக் கொண்டான்...

"என்னையும் உங்க மகனா நினைச்சுக்கோங்க..." என்றவனின் விழிகளில் விழிநீர் நிறைந்தது...

"இதை நீ சொல்லவும் வேணுமோ...!" என்றார் அவர்...

"வர்றேன்..." என்றபடி அவன் கிளம்பி செல்ல... பத்ரிநாத் தனது அறைக்குச் சென்றார்...

வெளியில் வந்த சிம்மவிஷ்ணு நேரே இளவரசி அறைக்கு வந்தான்... என்னே அதிசயம் அண்ணன்கள் இருவரும், தங்கையும் அங்கே தான் இருந்தனர்...

"ரொம்ப நல்லதா போயிற்று... நான் வந்த வேலை சுலபமாக முடிந்துவிடும்..." என்றவனை வெட்டவா? குத்தவா? என்பது போல் பார்த்து வைத்தார்கள் மூவரும்...

"எங்க கம்பெனியில் உனக்கு என்ன வேலை...?" இளவரசி பாம்பாய்ச் சீறினார்...

"அடேங்கப்பா என்ன ஒரு கோபம்...? உங்க புருசன் முன்னாடி மட்டும் அப்படியே பெட்டி பாம்பாய் அடங்கி இருந்தீங்களே... நீங்க கட்டிய புருசனுக்கு அடங்கிய பதிவிரதையோ...?" என்றவனின் குரலில் அத்தனை நக்கல் இருந்தது...

அவனது வார்த்தைகள் இளவரசியின் மனதினை கூர்மையாய் பதம் பார்த்தது...

"உங்களை எல்லாம் பத்தினி என்று சொன்னால் பத்தினி தெய்வம் என்னைக் கோபித்துக் கொள்ளும்..." என்றவனை நோக்கி,

"டேய்..." என்று விரல் நீட்டிய இளவரசியைப் பார்த்தவனின் முகத்தில் ரௌத்திரம் ஜொலித்தது...

"என்ன என் கிட்டேயே உங்க தெனாவெட்டை காண்பிக்கிறீங்களா...? நீங்க யாரு? என்னங்கிறது எனக்குத் தெரியும்... அதனால் என் கிட்ட கொஞ்சம் அடக்கி வாசிங்க..." என்றான் அவன் எச்சரிக்கும் குரலில்...

"இப்போ நீ எதுக்கு இங்கே வந்திருக்க...?" செல்வரத்தினம் கொதித்தார்...

"இது நல்ல கேள்வி..." என்றபடி மேசை மீது சாய்ந்து நின்று இருகைகளைக் கட்டி கொண்டு மூவரையும் ஒரு பார்வை பார்த்தவன்,

"முதலில் இந்தக் கம்பெனியில் இருந்து உங்களைத் துரத்தணும்... அதுக்கு அப்புறம் வீட்டில் இருந்து..."

"டேய்..." மூவரும் ஒருமித்த குரலில் கத்தினர்...

"என்ன சவுண்ட் விட்டாலும் இது நிச்சயம் நடக்கும்..."

"என் கணவர், மகன் அதற்கு விட மாட்டாங்க..." என்றார் இளவரசி இறுமாப்பாக...

"எல்லாம் உண்மை தெரியும் வரை... தெரியும் போது...?" என்று கேள்வியாய் நிறுத்தியவன்,

"அவங்களே உங்க மூணு பேர் கழுத்தை பிடிச்சு வெளியில் தள்ளுவாங்க..." என்று கேலியாய்க் கூறினான்...

அதைக் கேட்டு மூவரும் அதிர்ந்து போய்விட்டனர்... அவர்களது அதிர்ச்சி அவனுக்கு மிகுந்த சந்தோசத்தைக் கொடுத்தது...

"இதை இப்படியே கன்ட்னியூ பண்ணுங்க... அது தான் உங்களுக்கு நல்லது..." என்றவன்,

"எப்படியிருக்காங்க என் பொண்டாட்டியும், பிள்ளையும்...?" என்று கேட்டவனின் குரலில் அத்தனை நக்கல் நிரம்பி வழிந்தது...

"டேய்..." செல்வரத்தினம் கோபமாய் அவன் அருகில் வர... ஒரு கையால் அவரைத் தடுத்து நிறுத்தியவன்,

"அங்கே வீட்டில் என் மனைவி, பிள்ளையைப் பார்க்கும் போதும், இங்கே ஆபிசில் என்னைப் பார்க்கும் போதும் உங்க மூணு பேருக்கும் சுடலைமுத்து ஞாபகம் வரணும்...

அப்படியே நீங்க செஞ்ச துரோகமும்... இது தான் உங்களுக்கான தண்டனை..." என்றவன் அவர்களது பதிலை எதிர்பாராது அங்கிருந்து புயல் போல் வெளியேறிவிட்டான்...

மூவரும் விக்கித்துப் போய் நின்றிருந்தனர்...

"டாட் அவன் யாருன்னு தெரியுமா...?"

பவித்ரன் படபடப்போடு தந்தையின் எதிரில் அமர்ந்திருந்தான்...

"சிம்மவிஷ்ணுவையா கேட்கிற..." யோசனையாய் பார்த்தார் பத்ரிநாத்...

"அவனைத் தான் சொல்கிறேன்... நம் நிஷியின் இந்த நிலைக்குக் காரணம் அவன் தான் டாட்..." என்றவனின் முகம் வேதனையில் கசங்கியது...

"தீரா..." பத்ரிநாத் அதிர்ச்சியில் நாற்காலியில் இருந்து எழுந்துவிட்டார்...

"ஆமாம் டாட்... உங்க முன்னாடி நல்ல பிள்ளை மாதிரி நடந்துக்கிட்ட அவன் தான் நிஷியின் இந்த நிலைக்குக் காரணம்... அவன் மிகவும் கொடூரமானவன் டாட்... அவன் கெட்டவன்..."

"என்ன நடந்தது என்று ஒழுங்காகச் சொல் தீரா...?"

அன்னை அருகில் இல்லாததால் அவன் மடைதிறந்த வெள்ளமாய் எல்லாவற்றையும் அவரிடம் கூறிவிட்டான்... அதைக் கேட்க கேட்க அவரது இரத்தம் கொதித்தது... தங்கள் வீட்டுப் பெண்ணைச் சீரழித்த ஒருவன் தங்கள் வீடு தேடி வந்து மிரட்டிவிட்டுப் போனது கண்டு அவரது ஆத்திரம் அதிகரித்தது...

"அவன் கிளம்பிவிட்டானா...?"

"ம், அப்போதே..."

"அவன் எங்குத் தங்கியிருக்கிறான் என்று விசாரித்துச் சொல் தீரா... நான் அவனைச் சந்தித்துப் பேச வேண்டும்..."

"டாட்..." என்று திகைப்புடன் பார்த்தான் பவித்ரன்...

"செய்த தவறுக்குத் தண்டனை ஒன்று தான் பிரயாசித்தம்... ஆனால் இதில் பாதிக்கப்பட்டு இருப்பது நம் வீட்டுப் பெண்... அதனால் தான் நான் யோசிக்கிறேன்... அவன் செய்த தவறுக்கு இரண்டு விதத்தில் தண்டனை நிச்சயம்... ஒன்று அகிம்சை வழியில்... இல்லை தீவிரவாத வழியில்... எது என்பதை அவன் தான் முடிவு செய்ய வேண்டும்... செய்ய வைப்பேன்..." என்றார் அவர் உறுதியான குரலில்...

"நீங்க சொல்கிறதை பார்த்தால் அவனுக்கு நம் நிஷியை கல்யாணம் பண்ணி வைப்பீங்க போலிருக்கே... கெடுத்தவனுக்கே நம் வீட்டுப் பெண்ணைக் கட்டி கொடுப்பதா...? என்ன அநியாயம் டாட்...?" என்று கோபத்தில் குமுறினான் பவித்ரன்...

"அப்படின்னு நான் சொன்னேன்னா...?"

"நீங்க சொன்ன அகிம்சைக்கு என்ன அர்த்தம்...?"

அவர் மகனை புரியாத பார்வை பார்த்தவர் பின்பு,

"அது தெரிய வரும் போது உனக்குப் புரியும்..." என்றார் புரியாத புதிராக...

"என்னமோ பண்ணுங்க டாட்... ஆனா அவனுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்கணும்... அது மட்டும் நடந்தால் போதும்..."

"நிச்சயம் நடக்கும்... நீ கவலைப்படாதே..."

தந்தை சொல்லில் ஆறுதல் அடைந்த மகன் அங்கிருந்து சென்றுவிட்டான்... பத்ரிநாத் தனக்குள் யோசித்தபடி வெகுநேரம் அமர்ந்திருந்தார்...

*******************

ஞாயிறு காலையில் எப்போதும் போல் சோம்பலாக விடிந்தது... ஆனால் நிஷிலாவிற்கு மட்டும் உற்சாகமாக விடிந்தது... இது தான் வாழ்க்கை என்றான பின்பு அதை நினைத்து அவள் வருந்தி கொண்டு மூலையில் முடங்கி விடவில்லை... அதுவும் குழந்தை மீது அன்பு அதிகரித்ததும் அவள் எல்லாவற்றையும் மறந்துவிட எண்ணினாள்... அவளும், அவளது குழந்தையும் மட்டுமான தனி உலகில் இருந்திடவே அவள் விரும்பினாள்... அப்படித்தான் நினைத்து தான் அவள் பகல் பொழுதுகளை மகிழ்ச்சியாய் கழித்து விடுவாள்...

ஆனால் இரவின் தனிமையில் ஞாபகம் வரும் அவனது நினைவுகள் தந்த பயத்தில் அவளது தூக்கம் காணாது போய்விடும்... அவளது வீட்டில், அவளது அறையில் அவள் பாதுகாப்பாகத் தான் இருக்கிறாள்... ஆனாலும் காற்றைப் போன்று வேகமுடைய அவனை நினைத்து அவளுக்கு எப்போதும் பயமாகத் தான் இருக்கும்... எந்த நேரம் அவன் இங்கு வருவானோ என்று... அந்த நேரம் அவள் கண்ணீருக்கு தத்துப்பிள்ளையாகி போவாள்...

நேற்றைய இரவும் அவள் அப்படி அழத்தான் செய்தாள்... ஆனால் காலையில் அதை மறந்தவளாய் புன்னகையுடன் எழுந்தாள்... அவள் குளியலறை விட்டு வெளியில் வந்த போது பவித்ரன் அவளது அறையில் இருந்தான்... அவனைக் கண்டு பளிச்சென்று புன்னகைத்தவள்,

"குட்மார்னிங் அத்தான்..." என்று கூற...

"ஹேப்பி மார்னிங் குட்டிம்மா..." என்றான் அவன்... அவளது புன்னகை அவனையும் தொற்றிக் கொண்டது...

"உனக்காக ஒரு சர்ப்ரைஸ்..." என்றவனைக் கண்டு அவளது விழிகளில் ஆர்வம் வழிந்தது...

"என்னத்தான்...?"

"நீயே கெஸ் பண்ணு..."

"தெரியலை அத்தான்... நான் யோசிக்காததைச் செய்து அசத்துவது தான் உங்களது பாணி... நீங்களே சொல்லுங்க..." என்று கூறியவளின் முன் அவன் அந்தக் காகிதத்தை நீட்டினான்...

அதைப் பார்த்தவளின் விழிகள் முதலில் ஆச்சிரியத்தில் விரிந்தது... பின் அது மெல்ல கலங்கலானது... அது 'நீட்' தேர்வுக்கான விண்ணப்ப படிவம்...

"தேங்க்ஸ் அத்தான்... நான் மறந்தே போய்விட்டேன்..."

"ஞாபகப்படுத்த தான் நான் இருக்கிறேனே... பிறகு என்ன கவலை...?" என்றவன் மறந்தும் போன தடவை அவள் வாங்கிய மதிப்பெண் பற்றி வாய் திறக்கவில்லை... அவளும் அதைப் பற்றிக் கேட்கவில்லை...

ஒருவேளை அதைத் தான் அவளும் நினைத்துக் கொண்டு இருந்தாளோ என்னமோ... சற்று நேரம் அமைதியாக இருந்தாள்...

"அத்தான், என்னால் எக்சாம் எழுத முடியுமா...?"

"நிச்சயம் உன்னால் எழுத முடியும் நிஷிம்மா... டாக்டர் சொன்ன ட்யூ டேட் எக்சாமுக்கு ஒரு மாதத்திற்கு முன் வந்து விடுவதால் எந்தக் கவலையும் இல்லை..."

'அதற்குப் பிறகு தானே கவலையே ஆரம்பிக்கிறது...' என்று அவள் மனதிற்குள் முணுமுணுத்து கொண்டாள்...

"என்னடா யோசிக்கிற...?"

"ஒண்ணும் இல்லை அத்தான்..." என்றவள் முகத்தை மலர்ச்சியாக வைத்துக் கொண்டு,

"நாம பீச் போகலாமா...? கொஞ்ச நேரம் நடக்கணும் போலிருக்கு..." என்றவளை கண்டு,

"தாராளமாகப் போகலாம்... வா..." என்று அவளை அழைத்துக் கொண்டு அவன் உடனே கிளம்பிவிட்டான்...

வீடு பக்கத்திலேயே கடற்கரை இருந்தது... அது பெரும்பாலும் வீடுகள் நிறைந்த பகுதி என்பதால் பெரிதாக அங்குக் கூட்டம் இருக்காது... கிழக்கில் முளைத்திருந்த ஆரஞ்சு வண்ண ஆதவனைத் தரிசித்தபடி இருவரும் அமைதியாக நடந்தனர்... மேடிட்ட வயிறுடன் அவள் மெல்ல நடக்க... அவளது மெது நடைக்கு ஏற்றார் போன்று அவனும் மெல்ல நடந்தான்...

கடலில் கால் நனைத்தபடி, இரு கைகளைக் கட்டி கொண்டு பகலவனைப் பார்த்தபடி அப்படியே உறைந்திருந்த பெண்ணவளின் அமைதியை கலைக்க விரும்பாது பவித்ரனும் ஒன்றும் பேசாது நின்றிருந்தான்... அந்நேரம் அவனது அலைப்பேசி அழைத்தது...

"ஆடிட்டர் பேசுறார்... ஒரு நிமிசம் நிஷிம்மா..." என்றவன் அலைப்பேசியை உயிர்ப்பித்துப் பேசியபடி மணலை நோக்கி நடந்தான்...

"ஹாய் பொண்டாட்டி..."

தனது காதோரம் ஒலித்த அந்தப் பழக்கமான குரலில் திடுக்கிட்டுப் போய்த் திரும்பி பார்த்தாள் நிஷிலா... அவன் தான், அவளது கணவன் சிம்மவிஷ்ணு தான் புன்னகை மன்னனாய் நின்றிருந்தான்... முன்பு போல் பயம் கொள்ளாது அவள் அவனைத் தைரியமாக எதிர்கொண்டாள்... நிமிர்ந்து நேருக்கு நேர் அவனது விழிகளை அவள் சந்தித்தாள்... அதிலும் அவனது அழைப்பு கேட்டு அவளது இதழ்கள் இகழ்ச்சியாய்ச் சுளித்தது... அதைக் கண்டு அவன் ஆச்சிரியமாய் இரு புருவங்களை உயர்த்தினான்...

"எப்பவும் என்னை விபச்சாரின்னு தானே கூப்பிடுவ... இப்போ என்ன புதுசா பொண்டாட்டின்னு எல்லாம் கூப்பிடுற..."

அதைக் கேட்டு அவன் அயர்ந்து விடாது அவளை அழுத்தமாய்ப் பார்த்தான்...

"பொண்டாட்டியை பொண்டாட்டின்னு சொல்லாம அக்கா, தங்கைன்னா சொல்ல முடியும்..." என்று அவளைக் கேலி செய்தவன்,

"பொண்டாட்டியோட கடமையில் நீ சொல்லும் வார்த்தையும் அடங்கும்... ஒரு நல்ல மனைவி கணவனிடம் வேசியாகத் தான் நடந்து கொள்ள வேண்டுமாம்... அப்படின்னா நான் சொன்னதில் என்ன தப்பு இருக்கு...?"

"நீ அந்த அர்த்தத்தில் தானா சொன்ன...?" அவள் வெறுப்பாய் அவனைப் பார்த்தாள்...

"ஆனாலும் நீ இவ்வளவு பெரிய புத்திசாலியா இருக்கக் கூடாதுடி..." என்று ஏதோ ஹாஸ்யத்தைக் கேட்டது போல் அவன் பெருங்குரலெடுத்துச் சிரித்தான்...

அவனது சிரிப்புச் சத்தம் கேட்டு பவித்ரன் யாரது என்று திரும்பி பார்த்தான்... நிஷிலா அருகே சிம்மவிஷ்ணு நிற்பதை கண்டதும் அவன் ஆத்திரத்துடன் அங்கு வந்தான்...

"டேய் உனக்கு எவ்வளவு தைரியம் இருந்தா நிஷிம்மா கிட்ட வந்து பேசிக்கிட்டு இருப்ப...?" என்று பவித்ரன் அவனை அடிப்பதற்காகத் தனது கையை ஓங்கினான்... அவனைத் தடுத்த நிஷிலா,

"கண்ட கண்ட பொறுக்கியை அடிச்சு உங்க தரத்தை நீங்க ஏன் தாழ்த்திக்கிறீங்க அத்தான்... வாங்க போகலாம்..." என்றபடி அவள் பவித்ரனுடன் இணைந்து நடக்க முயன்றாள்...

'பொறுக்கி' என்கிற ஒற்றை வார்த்தையில் அவளது மனதில் சிம்மவிஷ்ணுவுக்கான நிலையை அழகாக, தெள்ளத்தெளிவாக அவனுக்கு அவள் எடுத்துரைத்து விட்டாள்... அதில் சினந்து விழி சிவந்த சிம்மவிஷ்ணு அவளது கையைப் பிடித்துத் தடுத்தான்...

அவள் தனது கையை உருவி கொள்ள எல்லாம் முயற்சிக்கவில்லை... அமைதியாக அவனை ஏறிட்டு

பார்த்தவள்,

"நீ தொடுவது சாக்கடையில் குளித்தது போல் அருவருப்பாக இருக்குது... மரியாதையா கையை எடு..." என்றாள் அழுத்தமான குரலில்... அதைக் கேட்டு அவனது ஆத்திரம் இன்னமும் அதிகரித்தது...

"சாக்கடையில் குளிச்ச மாதிரியிருக்கா...? இருக்கும்டி... அது தான் எனக்கும் வேண்டும்... நான் பொறுக்கியா...? ஆமாம்டி, உன்னைப் பார்த்த நாளில் இருந்து என் இயல்பு மாறி போயிருக்கேன்ல்ல... நான் பொறுக்கி தான்... ஆனா உனக்கு மட்டும் தான்... நீ சொன்ன இந்த ஒரு வார்த்தைக்காக நான் திரும்பவும் பொறுக்கியா மாறணும்ன்னு எனக்குள் ஒரு வெறி வருது ... ஆனா அதுக்கும் உன்னைத் தொடணும்ன்னு நினைக்கிறப்போ எனக்கு உன்னை விட அதிக அருவருப்பா இருக்கு... ச்சீ..." என்றபடி அவன் அவளது கையை உதறினான்...

அடுத்தக் கணம் சிம்மவிஷ்ணுவின் கன்னத்தில் இடியாய் அடி இறங்கியது... அவன் திகைத்து போனவனாய் திரும்பி பார்த்த போது அங்கு ரௌத்திரத்துடன் பத்ரிநாத் நின்றிருந்தார்... அவரைக் கண்டதும் அவனது முகம் அவமானத்தில் சிவந்து போனது... தான் பேசிய வார்த்தைகளின் அர்த்தம் உணர்ந்து அவன் வெட்கி தலைகுனிந்தான்...

எல்லோரையும் எதிர்க்கும் சிம்மவிஷ்ணு பத்ரிநாத் முன் அமைதியாகத் தலைகுனிந்து நின்றது பவித்ரனுக்கு ஆச்சிரியமாக இருந்தது... ஏனெனில் சிம்மவிஷ்ணுவின் உடல் பலத்தை அறிந்தவன் அவன் தானே... அன்று அவன் முறுக்கிய கை இவனுக்கு இன்னமும் லேசாக வலித்துக் கொண்டிருக்கிறதே...

சிம்மவிஷ்ணுவும் அதையே தான் நினைத்துக் கொண்டிருந்தான்... யுத்தகளமாக இருந்த போதும், அவன் வெற்றி பெறுவதே லட்சியமாகக் கொண்ட போதும் அவனால் பத்ரிநாத்தை எதிர்த்து ஒன்றும் செய்ய

முடியவில்லையே... ஏனெனில் அவனது நன்றிக்கடன் கண்முன் வந்து அவனைத் தடுத்தது...

இது தான் அர்ஜூனனின் மன நிலை, அழியும் உடலின் மீது பற்றுக் கொண்டு, அந்த உடல் தாங்கி நிற்கும் உறவுகளின், ஆச்சார்யர்களின் மீது பற்றுக் கொண்டு, அந்த நிமிடத்தில் போர் புரிய மாட்டேன் என்று தன் உண்மை நிலையினை மறக்கிறான், தன் கர்மத்தினை மறக்கிறான்... அவன் செய்ய வேண்டிய தொழிலினை மறக்கிறான்... தர்மம் நிலைநாட்ட வேண்டும் என்ற உண்மையினை மறந்து நிலைக்குலைந்து போகிறான்... அர்ஜூனன் போரிட மாட்டேன் என்று சொல்லி தேரில் அமர, கண்ணன் நியாயத்தினை அவனுக்கு எடுத்துரைக்க ஆரம்பிக்கிறான்...

மகாபாரதப் போரில் அர்ஜூனனுக்கு அறிவுரை கூறி போரிடும் உத்வேகத்தை அளித்த கண்ணனை போன்று இங்குச் சிம்மவிஷ்ணுவுக்கு அறிவுரை கூற யாரும் இல்லாது தேற்றுவார் யாருமின்றி அவன் அவர் முன் நிராயுதபாணியாய் நிற்கின்றான்... ஆனால் அவனுக்கு நன்கு தெரியும், பத்ரிநாத்திற்கு மட்டும் உண்மை தெரிந்தால் அவரே நரசிம்மராக அவதாரம் எடுத்து அனைவரையும் வதம் செய்துவிடுவார் என்று...

அத்தகைய அன்பை, பாசத்தை, நம்பிக்கையைப் பத்ரிநாத் சிம்மவிஷ்ணுவுக்கு அளித்திருந்தார்...!!!

"சக்கரவியூகத்தில் மாட்டி தவித்த
பாலகன் அபிமன்யு அல்ல நீ,
சக்கரவியூகத்தை உடைத்து,
வென்று வீரநடை போடும்
அர்ச்சுனன் நீ,
உறவில் தடுமாறினாலும்
கொள்கையில் தடுமாறாது
வென்று வா சிம்மா...!!!"

கொல்லும்...!!!

## நிழல் : 11

பத்ரிநாத் அடித்தது சிம்மவிஷ்ணுவிற்குக் கன்னம் வலிக்கவில்லை, மாறாக மனம் வலித்தது. அவனுடைய வாழ்க்கை மட்டும் நன்றாக இருந்திருந்தால் இந்நேரம் அவன் பத்ரிநாத் அரவணைப்பில் நன்றாக வளர்ந்திருப்பானே... பவித்ரனை விட இன்னும் அதிகமாக அவருக்குப் பெருமை சேர்த்து தந்திருப்பானே... இவ்வளவு ஏன் மாமன் மகள் நிஷிலாவை பவித்ரன் பார்த்து கொள்வதை விட இன்னும் அருமையாகப் பார்த்திருப்பானே... இப்படிப் பழிவாங்க என்று அவளுக்குத் துரோகம் இழைத்திருக்க மாட்டானே...

ஆம், அவன் அவளுக்குச் செய்தது தவறல்ல, துரோகம்... தெரியாமல் செய்தால் தானே அது தவறு... தெரிந்தே செய்வதற்குப் பெயர் துரோகம் தானே... அத்தகைய துரோகத்தைத் தானே அவன் பெண்ணவளுக்கு இழைத்திருக்கிறான்... அவன் செய்தது துரோகம் தான், பெரும் குற்றம் தான்... அதற்காக எல்லாம் அவன் சிறிதும் வருந்தவில்லை... இது அவர்களுக்கு வேண்டிய தண்டனை என்றே நினைத்தான்...

அந்தக் கணம் மூவரின் முகங்களும் அவனது நினைவில் எழுந்து அவனை இறுகி போகச் செய்தது... யுத்தகளத்தில் நியாய, அநியாயங்களுக்கு இடமில்லை... வெற்றி ஒன்றே இலக்காகக் கொண்டு செயல்பட வேண்டும்... அந்த அர்ச்சுனனை போல்... அப்படியொரு மனநிலையில் தான் அவன் இருந்தான்... அவனுக்கு வெற்றி மட்டும் தான் இலக்கு... அதில் பெண்ணவள் நியாயங்கள் அடிப்பட்டுப் போனது... அவளது மனதினை போன்று...

பீஷ்ம பிதாமகனை எதிர்த்து நிற்கும் அர்ச்சுனனை போன்று அவன் நிமிர்ந்து நின்றான்... அவன் பத்ரிநாத்தை தீர்க்கமான விழிகளுடன் நேருக்கு நேர் சந்தித்தான்... தவறு செய்பவனிடம் இத்தகையை நேர்கொண்ட பார்வையை எதிர்பார்க்க முடியாது... நேர்மை கொண்டவனிடத்திலேயே இத்தகைய நேர்கொண்ட பார்வையைக் காண முடியும்...

பத்ரிநாத் அவனது பார்வையில் சற்று தடுமாறி தான் போனார்... எல்லாம் சற்று நேரம் தான் தங்கள் வீட்டு பெண்ணவளுக்கு அவன் இழைத்த அநீதி கண்டு அவரது மனம் ஆத்திரத்தில் பொங்கியது... அதுவும் இப்போது நிஷிலாவை பார்த்து அவன் பேசிய வார்த்தைகள் எத்தகைய கொடிய வார்த்தைகள் அவை...

"நீ செய்த தவறுக்கு நீ தண்டனை அனுபவிக்கத் தான் போகிறாய்..." என்று அவர் கோபமாய்ச் சீறினார்...

"ம்ஹூம்... அப்புறம்..." என்றான் அவன் நகை குரலில்... அதில் அவரது சினம் தலைக்கேறியது...

"என்ன, என்னால் முடியாதுன்னு பார்க்கிறியா...? செஞ்சு காட்டுகிறேன்..." என்று அவர் அவனிடம் சவால்விட....

"தாராளமா செஞ்சு காட்டுங்க... எனக்கு எதிரா என்ன வேணும்ன்னாலும் செஞ்சுக்கோங்க... எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை... ஆனால் ஒண்ணு மட்டும் சொல்றேன், நல்லா கேட்டுக்கோங்க... எனக்கு எதிரா நீங்க எத்தனை வியூகம் அமைத்தாலும் அதை எப்படி உடைச்சிட்டு வெளிவரணும்ன்னு எனக்குத் தெரியும்..." என்றான் அவன் நிமிர்வாக... ஏனோ அவரிடத்தில் அவனால் திமிராகப் பேச முடியவில்லை...

"உன்னை ஆள் அடையாளம் தெரியாமல் அழித்தால்...? என்ன செய்வாய்...?" என்றார் அவரும் சளைக்காத குரலில்...

"யார் நீங்க என்னை அழிக்கப் போறீங்களா...? அந்த ஆண்டவனாக நினைத்தால் ஒழிய என் உயிரை யாராலும் எடுக்க முடியாது... உங்களைச் சுற்றிலும் கொஞ்சம் பாருங்க..."

அவன் சொன்னதும் பத்ரிநாத் சுற்றும் முற்றும் பார்த்தார்... அவரைப் போலவே பவித்ரனும், நிஷிலாவும் திரும்பி பார்த்தனர்... ஆங்காங்கே கொஞ்ச பேர் நின்று கொண்டிருந்தார்கள்... அவ்வளவே...

"பார்த்துட்டீங்களா...? அவங்க எல்லாம் என் ஆட்கள் தான்... எப்போதும் என் பாதுகாப்புக்காகக் கூடவே வர்றவங்க..." என்று அமர்த்தலான குரலில் கூறியவன்,

"இப்போ உங்க உயிர் தான் என் கையில் இருக்கு..." என்று தீவிரமான மனோபாவத்துடன் கூறியவனைக் கண்டு அவர்கள் மூவரும் அதிர்ந்து போய் விழித்தனர்...

கூப்பிடு தூரத்தில் வீடு இருந்தும் அவர்கள் மூவரால் ஒன்றும் செய்ய முடியாத நிலை... அதிலும் நிஷிலாவின் முகம் கறுத்து போயிற்று... அதைக் கண்டு அவனது உதடுகள் இகழ்ச்சியாய் வளைந்தது...

"ஆனா எனக்கு அந்த எண்ணம் இல்லை... என்னோட இலக்கும் நீங்க மூணு பேரும் இல்லை... அதனால் தப்பிச்சீங்க..." இலகு குரலில் கூறியவனைக் கண்டு பத்ரிநாத்தின் விழிகள் இடுங்கியது...

"ஒரு பெண்ணை அவள் விருப்பம் இல்லாமல் கடத்தி சென்று, தாலி கட்டி, குடும்பம் நடத்தி, குழந்தையும் கொடுத்திருக்க... நீ எவ்வளவு பெரிய தப்புப் பண்ணியிருக்கத் தெரியுமா...? இதுக்கு எல்லாம் தண்டனை அனுபவிக்காம நீ இப்படிச் சுகமாயிருக்க நாங்க விட்டிருவோம்ன்னு நினைச்சியா...? உன் பெற்றோருக்கு உன்னுடைய மறுபக்கம் தெரிந்தால் என்னவாகும்ன்னு கொஞ்சம் நினைச்சு பார்த்தியா...?"

இதைக் கேட்ட சிம்மவிஷ்ணுவின் முகம் ஒரு மாதிரியாக மாறிய போதும் அசராது நிமிர்ந்து நின்றான்...

"என்னுடைய அப்பா, அம்மா என் பேச்சை தான் நம்புவாங்க... நீங்க என்ன அந்தக் கடவுளே வந்து 'நான் தப்பானவன்' என்று சொன்னாலும் அவங்க நம்ப மாட்டாங்க... அந்தளவுக்கு அவங்க மகன் மீது அவங்களுக்கு நம்பிக்கை..." பெற்றோரை பற்றி நன்கு அறிந்தவனாய் அவன் அப்படிக் கூறினான்...

எந்த விதத்திலும் அவனை அசைக்க முடியாததைக் கண்டு பத்ரிநாத் சிறிது திகைத்துப் போனார்... தொழில்துறையில் அவர் எத்தனையோ பேரை ஆட்டி வைத்திருக்கிறார்... ஆனால் அவரையும் ஆட்டிப்படைத்தான் இவன்...

"என்னை இத்தனை கேள்வி கேட்கிறீங்களே... இவளை நீங்க ஒரு வார்த்தை கேள்வி கேட்டிருக்கலாமே... என்னைப் பிடிக்குமா? இல்லையா? என்று..." என்று கேட்டவனின் விழிகள் நிஷிலாவை நக்கலாய் பார்த்து வைத்தது...

"போயும் போயும் ராட்சசன் உன்னைப் போய் எனக்குப் பிடிக்குமா...? இந்த உலகத்தில் நான் வெறுக்கும் ஒரே நபர் நீ தான்... எனக்கு வரும் ஆத்திரத்தில் உன்னைக் கொல்ல தோன்றுகிறது..." அவள் முகம் எல்லாம் கோபத்தில் சிவக்க ஆக்ரோசமாய் அவனைப் பார்த்து கத்தினாள்...

"அப்படியா...? ஒரு பொழுது, ஒரு நொடி, ஒரு கணம் கூட நீ என்னை நல்லவிதமாக நினைக்கலையா...?" என்றவனது விழிகள் கூர்மையாக அவளைத் துளைத்தெடுத்தது...

அவனது பார்வையின் வீரியம் தாங்காது தனது பார்வையைத் திருப்பிக் கொண்டவளின் விழிகள் தொடுவானை வெறித்துப் பார்த்தது... அந்தக் கணம் அவளது மனதினை போல் அவளது விழிகளும் கலங்க துவங்கியது... தனது மனதினை துல்லியமாகக் கணித்துச் சொல்லும் ராட்சசனை அவள் மனதிற்குள் சபித்தாள்...

அவன் கூறியது உண்மை தான்... இல்லையென்று சொல்லிவிட முடியாது... அவன் கடத்தி வந்தது, தன் சம்மதம் இல்லாது தொட்டது எல்லாமே அவள் வெறுத்தது உண்மை தான்... ஆனால் பவித்ரன் தன்னைத் திருமணம் செய்துவிடக் கூடாது என்பதற்காகத் தான் தன்னைக் கடத்தினான் என்று அவன் அவளிடம் கூறியபோது அவளது மனதில் பரபரப்புடன் கூடிய ஒரு ஆர்வம் தொற்றிக் கொண்டது... ஒருவேளை அவன் தன்னைக் காதலிக்கிறானோ என்று...

அவனது அத்தனை தவறுகளையும் அவனது காதல் என்கிற ஒற்றை வார்த்தையில் மன்னிக்கத் தயாராக இருந்தாள் அவனது மனைவியான அவள்... அந்த நொடி அவன் அவளது கழுத்தில் கட்டிய மஞ்சள் கயிறு அவளிடம் சிறு மாயாஜாலத்தை நிகழ்த்தியது என்னவோ உண்மை தான்... அதனால் தான் அவள் அவனிடம் அப்படியொரு கேள்வியைக் கேட்டது... 'நீங்க என்னைக் காதலிக்கிறீங்களா?' என்று... அதையும் அவன் தனது அகங்கார பதிலால் அழித்துவிட்டான்... இப்போது அவன் மீது அவளுக்கு இருப்பது எல்லாம் வெறுப்பு மட்டுமே...

"பதில் சொல்லாது முகத்தைத் திருப்பிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்...? சொல்லு நிஷிலா..." அவன் கடைசியாய் அவளது பெயரை உச்சரிக்கும் போது அதில் அப்படியொரு நக்கலான அழுத்தத்தைக் கொடுத்தான்...

அதில் அவள் மேனி அதிர அவனைத் திரும்பி பார்த்தாள்... நடைப்பயிற்சிக்கு ஏற்றார் போன்று ட்ராக் சூட் அணிந்து, நெற்றியில் புரண்ட முடி காற்றில் அலைபாய ஆணழகனாய்க் கம்பீரமாக அவன் நின்றிருந்த தோற்றம் அவளது கருத்தில் பதியவில்லை... மாறாக அவன் அவளது பெயரை உச்சரித்த விதத்தில் அவளது மேனி கூசி போனது...

"ச்சீ..." என்று அருவருப்புடன் முகத்தைச் சுளித்தபடி அவள் திரும்பி நின்று கொண்டாள்...

அதைக் கேட்டு அவன் வாய்விட்டு நகைத்தான்... அவனது நகைப்பு மற்ற இருவரையும் சீண்டிவிட்டது போலிருந்தது போலும்... பவித்ரன் அவனைக் கோபமாய் முறைக்க ஆரம்பித்தான்... பத்ரிநாத்தோ உணர்வில்லாது அவனை வெற்றுப்பார்வை பார்த்து வைத்தார்...

மற்ற இருவரையும் புறம்தள்ளிய சிம்மவிஷ்ணுவால் பத்ரிநாத்தை அப்படிப் புறம்தள்ள முடியவில்லை... அவனது மனமும், முகமும் வேதனையில் கசங்கியது...

"என் மனைவி, என் குழந்தைன்னு கர்வமாக வெளியில் சொல்ல வேண்டிய நான், இப்போது அதை வெளியில் சொல்ல முடியாது தவிப்பது ஏன்னு உங்களுக்குப் புரியலையா...? ஏன்னா எனது மனைவியாகி போனவள் உங்க வீட்டுப் பெண்... எனது குழந்தை அவள் வயிற்றில்... அந்த ஒரு காரணத்தாலேயே என்னால் இந்த விசயத்தை வெளியில் சொல்ல முடியாது... இப்போது என்றில்லை... எப்போதுமே..."

"இதற்கு எதற்கடா எங்க வீட்டு பெண்ணின் வாழ்க்கையை நாசமாக்கின...? ஊர் உலகத்தில் உனக்குப் பெண்ணா இல்லை..."

பவித்ரன் ஆத்திரத்தில் பல்லை கடித்தான்... பத்ரிநாத் சிம்மவிஷ்ணுவை பார்த்துக் கொண்டிருந்தார்... வேறு எதுவும் பேசவில்லை...

"வினைப்பயனை அவள் அனுபவிக்கிறாள்... அவள் மட்டுமல்ல நானும்..." என்றவனை நிஷிலா குதறிவிடுவது போல் முறைத்து பார்த்தாள்...

"வினைப்பயன்..." என்று தனக்குள் சொல்லி பார்த்துக் கொண்ட பத்ரிநாத் சிம்மவிஷ்ணுவை நிமிர்ந்து பார்த்து,

"அதே வினைப்பயனை நீயும் அனுபவிக்க வேண்டாமா...?" என்றார் அழுத்தமான குரலில்...

"நான் அதை அனுபவித்துக் கொண்டு தானே இருக்கின்றேன்..." என்றான் அவன் உலகம் வெறுத்த குரலில்...

"இது எல்லாம் சாதாரணம் மிஸ்டர். சிம்மவிஷ்ணு... இனிமேல் அனுபவிக்கப் போவது தான் உண்மையான வினைப்பயன்... உங்களைக் கதற விடவில்லை என்றால் இத்தனை வருடங்களாய் நான் வெற்றிகரமான தொழிலதிபராக இருந்ததில் அர்த்தம் இல்லை..." என்று அவனிடம் கூறிய பத்ரிநாத் அவனின் பதிலை எதிர்பாராது,

"தீரா, நிஷா போகலாம்... வாங்க..." என்றபடி அவர்களை அழைத்துக் கொண்டு சென்றார்...

அவர்கள் மூவரும் செல்வதைப் பார்த்துக் கொண்டு அப்படியே நின்றிருந்தான் சிம்மவிஷ்ணு... அதிலும் அவனது விழிகள் தளர்நடையுடன் செல்லும் நிஷிலாவை தான் உற்று பார்த்துக் கொண்டிருந்தது... கர்ப்பிணி பெண்கள் அணியும் பருத்தி 'கவுன்'இல் அவள் மிகவும் சின்னப் பெண் போலிருந்தாள்... அதனால் தான் என்னமோ அவன் அவளைப் புடவையைத் தவிர வேறு உடைகளை அணியவிட்டது இல்லை...

அவன் மனம் கனக்க அப்படியே மணலில் அமர்ந்தான்... கால்களை முன்னுக்கு நீட்டி, கைகளைப் பின்னுக்கு நீட்டி அதைத் தாங்கியபடி வைத்தவன் அண்ணாந்து வானத்தைப் பார்த்தான்... மேகமற்ற தெளிந்த வானில் அவன் தனது கடந்த காலத்தைப் படம் போல் கண்டானோ என்னவோ... அவனது விழியோரம் விழிநீர் துளிர்த்தது... அந்தக் கணம் சற்று முன் நிஷிலா மீது தோன்றிய இரக்கம் கூட மறைந்து போனது... மனதில் வன்மம் வந்து குடி கொண்டது...

'நான் என்ன அவளது வாழ்க்கையை நாசம் செய்துவிட்டு வேறு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு சந்தோசமாகவா வாழ்கிறேன்... இப்படிக் குற்றவுணர்வில் தவிப்பதற்கு... நானுமே என் வாழ்க்கையை இழந்து தவிக்கிறேன் தானே... எத்தனை ஆண்கள் பல பெண்களை ஏமாற்றிவிட்டு எந்தக் குற்றவுணர்வும் இல்லாது வாழ்கின்றனர்... அப்படியா நானிருக்கிறேன்... அவள் தான் என் மனைவி, இந்தக் குழந்தை தான் எனது குழந்தை என்பதில் நான் உறுதியாக இருக்கிறேனே... இது ஒன்று போதாதா நான் நல்லவன் என்பதற்கு...? அப்படியே அவள் நல்லவள், ஒன்றும் தெரியாதவள் என்றாலும் அவளது அப்பா செய்த தவறுக்கு அவள் தான் தண்டனை அனுபவிக்க வேண்டும்... அதைத் தான் இப்போது அவள் அனுபவிக்கிறாள்...'

அவன் தன் நிலையில் நிலையாய் நின்றான்... அவளின் நிலை கண்டு அவனுக்கு இரக்கம் வர மறுத்தது... அவர்கள் மூவரும் செய்த துரோகத்திற்குத் தனது குழந்தை மூலமே பதிலடி கொடுக்க அவன் விரும்பினான்...

அதே நேரம் பத்ரிநாத் வீட்டில் இருந்தபடி சிம்மவிஷ்ணுவை பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தார்... ஒன்று அவன் உண்மையை ஒத்துக் கொண்டு அவனது குழந்தையை வாங்கிக் கொண்டு நிஷிலாவின் வாழ்க்கையில் இருந்து விலகி போய்விட வேண்டும்... அதே போல் சட்டப்படி அவன் தண்டனையும் அனுபவிக்க வேண்டும்... இரண்டு ஏதோ ஒரு வகையில் அவனது உயிரை எடுக்க வேண்டும்... அதை விபத்து மாதிரி மாற்றியமைக்க வேண்டும்... இந்த இரண்டை தான் அவனுக்காக அவர் செய்ய நினைத்தது...

ஆனால் அவன் இதற்கு எல்லாம் அடங்கும் ஆளாகத் தெரியவில்லையே... வேறு என்ன செய்து அவனை அடக்குவது என்று அவர் விடை தெரியாது யோசித்தபடி அமர்ந்திருந்தார்...

அந்நேரம் பூஜையறையில் இருந்து கணீரென்ற நிஷிலாவின் குரல் ஒலித்தது...

"குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்திக் கண்ணா
குறை ஒன்றும் இல்லை கண்ணா
குறை ஒன்றும் இல்லை கோவிந்தா
கண்ணுக்குத் தெரியாமல் நிற்கின்றாய் கண்ணா
கண்ணுக்குத் தெரியாமல் நின்றாலும் எனக்கு
குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்திக் கண்ணா"

குளித்து முடித்துத் தலைமுடியில் இருந்து ஈரம் சொட்ட, சொட்ட தரையில் அமர்ந்திருந்த நிஷிலா கண்மூடி பாடி கொண்டிருந்தாள்... ஒரே பெண் என்பதால் பாட்டு, நடனம் என்று எல்லாவற்றையும் சொல்லி கொடுத்திருந்தனர்... அவளும் நல்ல திறமையுடன் அனைத்தும் கற்று தேர்ந்திருந்தாள்... போன வருடம் தான் பரதநாட்டியத்தில் அரங்கேற்றம் செய்து முடித்திருந்தாள்...

அவளது மனம் நிறையக் குறையிருக்கிறது... ஆனால் அவளால் அதை வெளிக்காட்டி கொள்ள முடியவில்லை... அனைத்தையும் அவள் தனக்குள் போட்டு புதைத்துக் கொண்டு பாடலை பாடினாள்... அந்த ஆண்டவனே தனக்குத் துணை என்று அவன் பாதம் பணிந்தாள்... சற்று முன் சிம்மவிஷ்ணு பேசிய பேச்சு அவளுள் அச்சத்தினை விதைத்திருந்தது... தான் எடுக்கும் முயற்சியில் தான் தோற்று விடுவோமோ என்று அவளது மனம் கழிவிரக்கத்தில் துடித்தது... மனதின் துடிப்பு பாடலாக அவளிடம் இருந்து வெளிப்பட்டது...

"நல்லதோர் வீணை செய்தே - அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?
சொல்லடி சிவசக்தி - எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்.
வல்லமை தாராயோ, - இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே?
சொல்லடி, சிவசக்தி - நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ?
விசையுறு பந்தினைப்போல் - உள்ளம்
வேண்டிய படிசெலும் உடல்கேட்டேன்,
நசையறு மனங்கேட்டேன் - நித்தம்
நவமெனச் சுடர்தரும் உயிர்கேட்டேன்,
தசையினைத் தீசுடினும் - சிவ
சக்தியைப் பாடும்நல் அகங்கேட்டேன்,
அசைவறு மதிகேட்டேன் - இவை
அருள்வதில் உனக்கெதுந் தடையுளதோ?"

இந்தப் பாடலை பாடும் போது அவளையும் அறியாது அவளது விழிகள் விழிநீரை அருவி போல் உற்பத்தி செய்தது... அந்தக் கணம் அவளது மனம் நொறுங்கி போனது... எல்லாம் இருந்தும் அநாதரவான ஒரு நிலை... அடுத்த நொடி அவள்,

"அம்மா..." என்று அலறியபடி முகத்தை மூடி கொண்டு கதறியழ துவங்கினாள்...

இவள் இங்கே வெளிப்படையாய் கதறிக் கொண்டிருக்க... அங்கே சிம்மவிஷ்ணுவோ ஊமையாய் மனதிற்குள் கதறிக் கொண்டிருந்தான்... இருவரது வலியும் அவரவர் நிலையில் ஒன்றே...

அவளது பாடலில் குடும்பத்தினர் அனைவரும் சோகத்தில் ஆழ்ந்திருந்ததால் அவர்களால் சட்டென்று அவளை நோக்கி செல்ல முடியவில்லை... அப்போதும் பவித்ரன் தான் அவளை நோக்கி ஓடி வந்தான்...

"நிஷிம்மா... இங்கே பாருடா... அழாதே குட்டிம்மா..." என்று அவளை அணைத்து அவன் தேற்ற... அதில் கலங்கிய விழிகளுடன் அவனைத் திரும்பி பார்த்தவள்,

"அந்த ராட்சசனை நான் தண்டிக்கவே முடியாதா அத்தான்... தப்பு செஞ்சிட்டு அவன் மட்டும் சந்தோசமா இருக்கிறான்... ஆனா நான்...?" என்று கூறும் போதே அவளது விழிகள் மீண்டும் உடைப்பெடுத்தது...

என்ன சொல்லி அவளைத் தேற்றுவது என்று தெரியாது அவன் விழித்தான்... எதைச் சொல்லியும் தேற்ற முடியாதபடி அனைத்து வழிகளையும் அடைத்து விட்டானே அந்த ராட்சசன்... பவித்ரனுக்குச் சிம்மவிஷ்ணு மேல் கோபம் கோபமாய் வந்தது...

"அவனுக்குத் தண்டனை கொடுப்பதால் மட்டும் அவனைத் தண்டித்து விட முடியாது குட்டிம்மா... தண்டனை என்பது அவன் மனமுவந்து அனுபவிக்க வேண்டிய ஒன்று... அவன் கண் எதிரே நீ இப்படி அழாது தைரியமாக வாழ்ந்து காட்ட வேண்டும்... அது தான் நீ அவனுக்குக் கொடுக்கப் போகும் தண்டனை... அவனால் நீ பாதிக்கப்படவில்லை என்பதை அவனுக்கு உணர்த்தினாலே போதும்... அதுவே அவனுக்கான தண்டனை தான்..."

அத்தை மகனின் வார்த்தைகளில் அவளது கண்ணீர் அப்படியே நின்றது... அழுத்தமாய்த் தனது விழிகளைத் துடைத்து கொண்டவள்,

"இனி நான் அழ மாட்டேன்... அழ மாட்டேன்... அவனை அழ வைப்பேன்..." என்று அவள் உறுதியான குரலில் கூறி கொண்டாள்...

"தட்ஸ் குட்..." என்றவன்,

"என்னுடன் கிளம்பு... உன்னைக் கோச்சிங் க்ளாசில் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டு வருகிறேன்..."

"ஏற்கெனவே படித்தது தானே..." என்று அவள் தனது நிலையைக் கருத்தில் கொண்டு மறுத்தாள்...

"மீண்டும் ஒரு முறை படித்தால் என்ன...?" என்று அவன் கேட்டதும் அவள் வாயை மூடி கொண்டாள்...

************************

'சிம்' நிறுவனத்தின் உணவு நிறுவனம் காலவரையின்றி மூடப்பட்டது... அதற்குக் காரணம் அவர்களது பதப்படுத்தப்பட்ட உணவில் புழுக்கள் இருந்ததே... இந்தியா முழுவதும் எல்லா மாநிலங்களில் இருந்தும் புகார்கள் வர துவங்கியதால் அதிகாரிகள் நிறுவனத்தை இழுத்து மூடி சீல் வைத்துவிட்டனர்...

'சிம்' நிறுவனம் செல்வரத்தினம், இளவரசி, மணிபாரதி இவர்கள் மூன்று பெயருக்கு சொந்தமானது... இதில் பத்ரிநாத்தின் பங்கு எதுவும் கிடையாது... இது அவர்களது பரம்பரை நிறுவனம்...

"இது எப்படி நடந்தது...? அத்தனை தீவிரமாக நாம் தொழிலை கவனித்தும் இந்தச் சரிவு எப்படி நிகழ்ந்தது தீரா...?" இளவரசி மகனை போட்டு வறுத்தெடுத்து விட்டார்...

பவித்ரன் தன் வரையில் எல்லாம் சரியாகத் தான் பார்த்து வருகிறான்... அப்படியிருந்தும் இந்தச் சறுக்கல் எப்படி ஏற்பட்டது? என்று அவனுக்கே தெரியவில்லை...

"சும்மாவே நம்ம பிசினஸ் டல்... உங்கப்பா கிட்ட பண உதவி கேட்க முடியாது... இப்போது ஏற்பட்டிருக்கும் பணச்சிக்கலுக்கு நான் என்ன பண்ணுவேன்...?" என்று

தாயார் புலம்பியதை கேட்டு பவித்ரனுக்குப் பாவமாக இருந்தது...

தந்தை அன்னையின் தாய் வீட்டு வழியில் வந்த சொத்துக்களைத் தொட கூட மாட்டார்... அதே போல் அதற்கு உதவி செய்வதற்கும் மறுத்துவிடுவார்... அதற்கு அவன் காரணம் கேட்ட போது,

"அவர்களது கடன் கடல் போன்றது தீரா... சமுத்திரத்தில் எவ்வளவு போட்டாலும் காணாமல் போய்விடும்... அது போல் தான் அவர்களது தொழிலும், தொழில் செய்யும் முறையும்... அதில் நான் தலையிட விரும்பவில்லை... பாரதி என் நண்பன் தான்... அதற்காக எல்லாவற்றையும் அவனுக்காக இழக்க நான் விரும்பவில்லை... அது போல் தான் உன் அம்மாவும்... அவள் என் காதல் மனைவி தான்... அதற்காக அவள் சொல்வதற்கு எல்லாம் தாளம் போட என்னால் முடியாது... லாப, நஷ்டம் பார்க்காது தொழிலில் இறங்க முடியாது..." என்று அவர் நிர்தாட்சண்யமாய் மறுத்துவிடுவார்...

"நான் ஏதாவது பண்ண முடியுமான்னு பார்க்கிறேன் மாம்..." என்று அவன் அன்னைக்கு ஆறுதல் கூறினான்...

அந்த நேரத்தில் தான் செல்வரத்தினம் தனக்குத் தெரிந்தவர் மூலம் பணத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டார்... அதனால் இளவரசி சிறிது நிம்மதி பெருமூச்சு விட்டார்...

அடுத்துக் கொடவுனில் வைத்திருந்த பொருட்கள் தீயில் கருகி நாசமாகி போனது... இந்தச் சம்பவமும் எப்படி நடந்தது? என்று யாருக்கும் தெரியவில்லை... இதன் மூலம் அவர்களது நிறுவனத்திற்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது... அப்போதும் அந்த நண்பர் தான் பணம் கொடுத்து உதவினார்...

மூன்றாவது ஆள் மூலம் பணம் கொடுத்து அவர்களுக்கு உதவி செய்த சிம்மவிஷ்ணு அவர்களை நான்கு பக்கமும் இருந்து எழவிடாது அழுத்த போவதை அவர்கள் மூவரும் அந்நேரம் உணர்ந்திருக்கவில்லை...

'எஸ்எம்' நிறுவனத்தின் வளர்ச்சிக்கு வழிகோலிய அதே சிம்மவிஷ்ணு தான் 'சிம்' நிறுவனத்தின் வீழ்ச்சிக்கு முக்கியக் காரணகர்த்தாவாகி போனான்... மூவரையும் அடியோடு அழிக்காது அவன் விடப் போவதில்லை... அந்தளவிற்கு அவனது மனதில் வெறிக் குடியிருந்தது... சிம்மவிஷ்ணு நிஜமாகவே விஷ்ணுவின் அவதாரமான சிம்மனின் உருவில் கர்ஜித்துக் கொண்டிருந்தான்...

**************************

நிஷிலா பயிற்சி வகுப்பு முடிந்து அத்தானின் வருகைக்காகக் காத்திருந்தாள்... 'நீட்' பயிற்சிக்காக அங்கு வருபவர்கள் எல்லோருமே மாணவர்கள் தான்... இவள் மட்டுமே அன்னை வடிவில் வந்த மாணவி... அதனால் எல்லோரும் அவளைக் குறுகுறுவெனப் பார்த்தனர்... அதைக் கண்டு அவளுக்கு அழுகை முட்டி கொண்டு வந்தது... ஆனாலும் அழ கூடாது, சாதித்துக் காட்ட வேண்டும் என்கிற வைராக்கியத்தில் அவள் கண்ணீரை உள்ளிழுத்துக் கொண்டு பாடத்தில் கவனத்தைச் செலுத்தினாள்...

இதோ இப்போது மீண்டும் அனைவரும் அவளைப் பார்த்து பேசுவது போல் ஒரு தோற்றம் அவளுள்... அவளுக்கு மனமும், உடலும் கூனிக்குறுகி போனது... அவள் அங்கே சங்கடத்துடன் நிற்க முடியாது நின்று கொண்டிருந்தாள்...

அப்போது பவித்ரனின் கார் அங்கு வந்து நின்றது... கார் கதவை திறந்துவிட்டபடி,

"சாரி குட்டிம்மா... கொஞ்சம் லேட்டாகிருச்சு..." என்றபடி அவன் புன்னகைக்க...

பவித்ரனை கண்டதும் அங்கிருந்தோரின் பார்வைகள் மாற ஆரம்பித்தது... அவனை அவளது கணவன் என்று அவர்கள் நினைத்து கொண்டனர்...

"ஆளு செமையா இருக்கான்டி... இப்படிப்பட்டவனைக் கல்யாணம் பண்ணிக்கச் சொன்னா பண்ணாமல் இருக்க

முடியுமா...?" என்று ஒருத்தி கிண்டலடிக்க...

"அந்த மயக்கத்தில் வந்தது தான் இந்தப் பேபியோ...?" என்று மற்றொருத்தி கேலி செய்ய... அதைக் கேட்டு எல்லோரும் நகைத்தனர்...

அதைக் கேட்டு நிஷிலாவின் முகம் இறுகி போனது... அமைதியாகக் காரிலேறி அமர்ந்தாள்...

காரை கிளப்பிக் கொண்டே பவித்ரன், "எங்கேயாவது போகலாமா நிஷி...?" என்று கேட்க...

"கோவிலுக்குப் போகலாமா அத்தான்...?" மனசுக்கு ஒரு மாதிரியாக இருந்ததால் அவள் அப்படிக் கேட்டாள்...

"ஓ, எஸ்..." என்று புன்சிரிப்புடன் கூறியவன் காரை கோவிலை நோக்கி செலுத்தத் துவங்கினான்...

கோவிலில் சுவாமி சந்நதியில் நின்று தெய்வத்தை இமைக்க மறந்து பார்த்திருந்தவளின் மனதில் ஒரே ஒரு வேண்டுதல் தான்...

'அவனுக்கான தண்டனையை நான் வாங்கிக் கொடுக்கணும்ன்னு கடவுளே...' இதைத் தவிர அவளிடத்தில் வேறு ஒரு பிரார்த்தனை ஏதுமில்லை...

"உங்க மனைவி கழுத்தில் போட்டு விடுங்கோ..." என்றபடி அர்ச்சகர் சுவாமி மாலையைப் பவித்ரன் கையில் கொடுத்தார்...

அதில் தன்னுணர்வு பெற்றவள் திடுக்கிட்டு போய் அவனைத் திரும்பி பார்த்தாள்... அவனோ சிரித்தபடி அந்த மாலையை வாங்கிக் கையில் வைத்துக் கொண்டான்... அதில் நிம்மதி அடைந்தவள் மீண்டும் சுவாமியை நோக்கி கவனத்தைச் செலுத்தினாள்...

சாமி கும்பிட்டு விட்டு இருவரும் திரும்பும் நேரம் சிம்மவிஷ்ணு ஒரு பக்கம் இருந்தும், துளசி மறுபக்கம் இருந்தும் வந்து கொண்டிருந்தனர்... சிம்மவிஷ்ணு இவர்களைக் கவனிக்கவில்லை... ஆனால் துளசி

இவர்களைக் கவனித்துவிட்டாள்... அதிலும் மேடிட்டிருந்த நிஷிலாவின் வயிற்றைக் கண்டு அவளது விழிகள் கலங்க துவங்கியது... அவள் பவித்ரனை நோக்கி குற்றம்சாட்டும் பார்வை ஒன்றினை செலுத்தினாள்...

தனக்குள் உழன்று கொண்டிருந்த நிஷிலா அவளைக் கவனிக்கவில்லை... பவித்ரன் துளசியைக் கவனித்துவிட்டான்... அவளது குற்றம்சாட்டும் பார்வையையும் கவனித்துவிட்டான்... அவன் வேண்டுமென்றே நிஷிலாவின் தோளில் உரிமையோடு கை போட்டு அணைத்துக் கொண்டான்... அதைக் கண்ட துளசி பெரும் கேவலுடன் சாமியை கூடக் கும்பிடாது வேகமாய்க் கோவிலை விட்டு வெளியேறினாள்...

'இனியாவது முட்டாள்த்தனமான முடிவு எடுக்காது ஒழுங்கான முடிவு எடு...' என்று பவித்ரன் எரிச்சலுடன் மனதிற்குள் துளசியிடம் சொல்லி கொண்டான்...

"அடடே, காணும் யாவிலும் என் பொண்டாட்டி நீயே... உன்னைத் தான் நினைச்சிக்கிட்டு வந்தேன்... நீயே கண்முன் நிற்கிற... அந்த வள்ளுவன் வாசுகியை விட இந்த நிஷிலா அம்மையார் பத்தினி தெய்வமே தான்..." என்று கிண்டலாய் உரைத்தபடி அவர்கள் எதிரில் வந்து நின்றான் சிம்மவிஷ்ணு...

அவனது வார்த்தையில் தன்னினைவு கலைந்து நிமிர்ந்த நிஷிலா அப்போது தான் கவனித்தாள் பவித்ரன் தன்னை அணைத்திருப்பதை...

"அத்தான், கையை எடுங்க..." என்று அவள் சங்கடமாய் நெளிந்தாள்... அவளின் உணர்வு புரிந்து பவித்ரன் சட்டென்று கையை எடுத்துவிட்டான்... ஆனால் சிம்மவிஷ்ணுவை முறைக்கத் தவறவில்லை...

"பேபி, இதைப் பார்த்து எல்லாம் நான் உன்னைச் சந்தேகப்பட மாட்டேன்... இவ்வளவு ஏன் நீங்க ரெண்டு பேரும் தனியறையில் கட்டிப்பிடிச்சு நின்னா கூட நான்

சந்தேகப்பட மாட்டேன்..." என்றான் சிம்மவிஷ்ணு பெருந்தன்மையான குரலில்...

"நீ சந்தேகப்பட்டு எனக்கு என்னவாகப் போகிறது...?" என்று கோபத்துடன் முணுமுணுத்த மனைவியை உற்று பார்த்தவன்,

"நான் உன் கணவன்..." என்றான் அழுத்தம் திருத்தமாய்...

"ஓ..." என்றவள் பதிலுக்கு அவனை அழுத்தமாய்ப் பார்த்து வைத்தாள்...

"என்ன தம்பி மாமன் மகளைக் கோவிலுக்குக் கூட்டிட்டு வந்திருக்க... ஆனா பாரு அவளது நெத்தியில் குங்குமம் இல்லை... இதை எல்லாம் நீ கவனிக்கிறது இல்லையா...?" என்று அவன் பவித்ரனை பார்த்து கேட்டான்...

அப்போது தான் பவித்ரனும் அதைக் கவனித்தான்... தனது கையிலிருந்த பிரசாதத்தை அவளிடம் நீட்டியவன்,

"வச்சுக்கோ குட்டிம்மா..." என்க...

சாமி கும்பிடுவதில் தீவிரமாய் இருந்தவள் இதைக் கவனிக்கவில்லை... அவள் கை நீட்டி குங்குமத்தை எடுக்கும் முன் சிம்மவிஷ்ணு அதை எடுத்து அவளது நெற்றியில் வைத்துவிட்டான்... இருவரும் சேர்ந்து அவனை முறைத்தனர்...

திருமணத்தன்று அவன் வைத்துவிட்ட குங்குமம் அவளது ஞாபகத்தில் எழுந்து அவளை உயிரோடு கொன்றதில் அவள் இதை அழிக்கப் போனாள்... அவளது கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்திய சிம்மவிஷ்ணு,

"இப்போதாவது புரிந்ததா அத்தை மகன் அத்தானுக்கும், தாலி கட்டிய மாமனுக்கும் உள்ள வித்தியாசம்..." என்று பவித்ரனை பார்த்து இறுகிய குரலில் கூறியவன் தனது மனைவியைப் பார்த்து,

"நான் சாகிற அன்னைக்கு இதை அழிச்சுக்கோ... இப்போ இல்லை..." என்றான் கேலி குரலில்...

"நிச்சயம் அதுக்கான நாள் விரைவில் வரும்... காத்திரு..." என்றாள் அவள் வெறுப்புடன்...

"அப்படியா...? பொண்டாட்டி நீ சொன்னா நான் கேட்டு தானாக வேண்டும்..." என்று கேலியாய் ஒற்றைப் புருவத்தைத் தூக்கியவனைக் கண்டு அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்...

அவளது முகத்திருப்பலை சட்டை செய்யாது பவித்ரன் பக்கம் திரும்பியவன், "உன் மாமன் மகளை இரண்டாவது கல்யாணம் பண்ணணும்... அவளுக்கு வாழ்க்கை கொடுக்கணும்ன்னு நீ கனவில் கூட நினைக்காதே... ஏன்னா இரண்டாவது திருமணம் சட்டப்படி தப்பு... எங்க திருமணம் சட்டப்படி நடந்த ஒன்று... தேவையில்லாம எங்களுக்கு இடையில் வந்து உன் மாமன் மகளை ஜெயிலில் களி திங்க வச்சிராதே..." என்றவனைக் கொலைவெறியுடன் பவித்ரன் பார்த்தான் என்றால், நிஷிலாவோ உவகையுடன் பார்த்தபடி நின்றிருந்தாள்...

தனக்குச் சாதகமாகப் பேசும் கணவனை இமைக்க மறந்து பார்த்திருந்தாள்... தானே வலிய வந்து வலையில் சிக்கும் புலியை கண்டு மான் பரவசத்துடன் பார்த்துக் கொண்டிருந்தது... அந்த வலையை அறுத்துக் கொண்டு அது தப்பித்துப் போகாதிருக்க வேண்டிய வேலையை மட்டுமே இனி அவள் செய்ய வேண்டியது இருக்கிறது...

அதை அவனும் கண்டு கொண்டானோ...! சன்ன சிரிப்புடன் அவளது கன்னம் தட்டி,

"பேபி பேபி... இன்னும் பேபியாகவே யோசிக்கிறியே... இதை எல்லாம் வைத்து என்னை ஒண்ணும் பண்ண முடியாது..." என்றவனை அவள் உறுத்து விழித்துக் கொண்டிருக்க...

"என்ன, குழந்தை பிறந்ததும் டிஎன்ஏ டெஸ்ட் பண்ணி நான் தான் அதன் அப்பான்னு நிரூபிக்க ப்ளான் பண்றியா...? இதுக்கு எல்லாம் சிக்க மாட்டான் இந்தச் சிம்மவிஷ்ணு...

வேறு ஏதாவது யோசி பேபி..." என்றான் அவன் அசல்ட்டாக...

"யோசிக்கிறேன்... ஏதாவது ஒரு வழி கிடைக்காமலா போய்விடும்..." அதற்கு எல்லாம் அசராது அவள் பதிலளித்தாள்... அதில் அவளைக் கூர்ந்து பார்த்தவன்,

"அத்தான் அருகில் இருக்கும் தைரியம்..." என்றவன் தாடையைத் தடவி கொண்டே அவளை மேலும் கீழும் பார்த்தபடி,

"ஏற்கெனவே உன்னைக் கடத்தியவன் நான்... இன்னொரு தடவை கடத்த எனக்கு ரொம்ப நேரமாகிவிடாது..." என்று வில்லன் பார்வை பார்த்தவனைக் கண்டு,

"டேய்..." என்று சினந்த பவித்ரனை அடக்கிய நிஷிலா,

"அன்று என்னைக் கடத்தும் போதாவது என்னிடம் கற்பு இருந்தது... ஆனால் இப்போது ஒன்றும் இல்லை... இப்போது நான் வெறும் கூடு தான்..." என்றாள் அவள் விரக்தியாய்...

"அது உன்னைப் பொறுத்தவரை... ஆனால் உன் வீட்டை பொறுத்தவரை...?" என்று கேள்வியாய் அவளைப் பார்த்தவன்,

"இப்போது கடத்தியது யாரென்று தெரியும்... தங்கள் வீட்டுப் பெண்ணை என்னப்பாடு படுத்துகிறானோ என்று அவர்கள் ஒவ்வொரு நொடியும் கண்ணீர் விடுவாங்க இல்லையா...? அது தானே எனக்கு வேண்டும்..." என்று அலட்சியமாகக் கூறியவனைக் கண்டு,

"ராட்சசன்..." என்று அவளது இதழ்கள் ஆத்திரமாய் முணுமுணுத்தது...

"ராட்சசனா...? நானா...? நல்லா யோசிச்சுப் பதில் சொல்லு பேபி... நான் உன் கிட்ட அப்படியா நடந்துக்கிட்டேன்...?" என்று அவன் நமட்டு சிரிப்புடன் அவளைப் பார்த்துக் கண்சிமிட்டினான்...

"ச்சீ, நீயெல்லாம் மனுசனே இல்லை..." என்று வெறுப்புடன் அவனைப் பார்த்து கூறியவள் பவித்ரனிடம்,

"போகலாம் அத்தான்..." என்றபடி அவனது கையைப் பிடித்திழுத்துக் கொண்டு சென்றாள்...

சிம்மவிஷ்ணு இணைந்திருக்கும் அவர்கள் இருவரது கைகளைப் பார்த்தபடி நின்றிருந்தான்... அப்போதும் அவனுக்கு அவர்களைக் கண்டு பொறாமை வரவில்லை... அவள் அவனது மனைவி... பவித்ரன் என்ன அந்த ஆண்டவன் நினைத்தால் கூட அதை மாற்ற முடியாது... அந்த இறுமாப்பு ஒன்றே அவனிடத்தில் அதிகம் இருந்தது...

கொலையும் செய்வாள் பத்தினி என்பதைப் பற்றி அவன் அந்தக் கணம் அறிந்திருக்கவில்லையோ...? தனது பத்தினி தனக்காக என்ன தண்டனை வைத்து காத்திருக்கிறளோ என்று அறியா பாலகனாய் அவன் எக்களித்து அகந்தையுடன் நின்றான்!!

"பெண்ணவள் கதறல் உனக்குச் சங்கீதமாகி
போனதன் காரணம் என்ன?
ஆணாகிய உன் கதறல் எடுபடாததாலோ?
உனக்கு வலித்ததற்காக நீ
பெண்ணவளை வதைக்கிறாய்...
அவளுக்கு வலிப்பதால் அவள்
யாரை வதைப்பாள்...?
பூமராங் போன்று அவள் வலி
உனக்கே திருப்பி வர போகிறது...
காலம் முழுவதும் அது உன்னை
நின்று கொல்ல போகிறது...!!!"

கொல்லும்...!!!

## நிழல் : 12

"துளசி, என்னாச்சும்மா...?"

மகளின் அழுத விழிகளைப் பார்த்து அவளது அன்னை ரஞ்சனி பதட்டத்துடன் கேட்டார்... கோவிலுக்குச் சென்ற மகள் இப்படி அழுது கொண்டு வந்து நின்றால் அவர் என்ன தான் நினைப்பார்...?

"நத்திங்ம்மா..." என்றவள் அதற்கு மேல் அங்கு நிற்காது தனது அறைக்குச் சென்றுவிட்டாள்...

அறைக்குள் நுழைந்து கட்டிலில் அமர்ந்தவள் முழங்காலில் முகம் புதைத்து ஓவென்று கதறியழுதாள்... பவித்ரனையும், நிஷிலாவையும் சேர்ந்து பார்த்தது அவளுக்குத் திகைப்பு அளித்தது என்றால், நிஷிலாவின் தோற்றம் அதை விட அதிர்ச்சியை ஏற்படுத்தியது... அவளுக்குத் தெரியும் என்றாவது ஒரு நாள் இந்த மாதிரியான காட்சிகளைச் சகித்துக் கொள்ள வேண்டும் என்று... ஆனால் இப்படித் திடுமென இந்தக் காட்சியை அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை...

அந்நேரம் அவளது தலையை ஆறுதலாய் ஒரு கரம் வருடிவிட்டது... நிமிர்ந்து பார்த்தவள் அங்குத் தனது அன்னையைக் கண்டதும்,

"ம்மா..." என்று கதறிக் கொண்டே அவரது வயிற்றில் முகம் புதைத்தாள்...

தாயினைத் தேடும் கன்றினை போன்றிருந்தது அவளது தவிப்பு... ரஞ்சனி கட்டிலில் அமர்ந்து மகளை மடி தாங்கி கொண்டார்... அவளது தலையை வருடி கொடுத்துக் கொண்டே,

"துளசி, நீ யாரையாவது காதலிக்கிறியாம்மா...?" என்று மெல்ல கேட்டார்...

"ம்மா..." அன்னையின் வார்த்தை கொடுத்த அதிர்ச்சியில் அவளது கண்ணீர் நின்றுவிட, அவள் திகைப்புடன் அவரை

ஏறிட்டாள்...

"என் மகளைப் பத்தி எனக்கு நல்லா தெரியும்... எதுக்காகவும் அவள் அழுது நான் பார்த்தது இல்லை... இப்போது அழுகிறாள் என்றால்...?" என்று நிறுத்திவிட்டு அவர் அவளைக் கேள்வியாய் பார்த்தார்...

"ம்மா..." என்றவளின் குரல் மீண்டும் அழுகையில் தேம்பியது...

"அம்மா கிட்டா சொன்னால் உன் மனப்பாரம் குறையும்ன்னா சொல்லும்மா..." அவரது ஆறுதலான வார்த்தையில் அவள் முதன்முறையாகத் தனது மனதினை திறந்தாள்...

"ஒரு பிசினஸ் மீட்டிங்கில் தான் அவரை நான் முதன்முதலா பார்த்தேன்... ஏனோ பார்த்தவுடன் அவரைப் பிடிச்சு போச்சு... இப்போ வரைக்கும் அதுக்கான காரணம் எனக்குத் தெரியலை..."

"அவர் கிட்ட உன் காதலை சொல்ல வேண்டியது தானே..." என்ற ரஞ்சனி மகளைப் புரியாது பார்த்தார்... மகளின் தைரியம் பற்றி அவருக்கு நன்கு தெரியும்...

"அவருக்காக அவருடைய மாமன் மகள் காத்துக்கிட்டு இருக்கிறாள்ம்மா..." என்றவள் நிஷிலா பற்றிக் கூறினாள்...

"இன்னைக்குக் கோவிலில் இரண்டு பேரையும் சேர்ந்து பார்த்தேன்..." என்றவள் அந்தக் காட்சியை அன்னையிடம் கூறி அடக்க மாட்டாது அழுதாள்...

"அவங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் ஆகிருச்சா துளசி...?"

"தெரியலைம்மா... ரகசியமா கல்யாணம் பண்ணிக்கிட்டாங்களோ என்னமோ...?"

"கடவுளே..." என்றபடி அவர் மகளை ஆதரவாய் அணைத்துக் கொண்டார்...

ஒரே ஒரு செல்ல மகள்... சொத்துக்கள் ஏராளம்... அழகு, படிப்பு, திறமை என்று எல்லாம் கிடைக்கப் பெற்றவள்... அப்படிப்பட்டவள் இப்படி அழுது கரைவது கண்டு அவரது தாயுள்ளம் துயரத்தில் தவித்துப் போனது...

"அவர் ஒருத்தர் தான் ஆண்மகனா...? அவரை மறந்துட்டு உனக்கான வாழ்க்கையை வாழ பார் துளசி..." மகளின் வாழ்க்கை மீது அக்கறை கொண்ட தாயாய் அவர் மகளுக்கு அறிவுரை கூறினார்...

"அவரைக் காதலிக்கும் என்னால் வேறொருவரை எப்படிம்மா கல்யாணம் பண்ணிக்க முடியும்...?" பெண்ணவள் மனம் மறுகி அழ... ஒரு பெண்ணாய் மகளின் நிலையைப் புரிந்து கொண்ட அந்தத் தாயால் ஆறுதலை தவிர வேறு ஒன்றையும் கூற முடியவில்லை...

********************

இரவில் நிஷிலா தனது அறையில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தாள்... அப்போது கதவை தட்டி கொண்டு உள்ளே நுழைந்தான் பவித்ரன்...

"வாங்கத்தான்..." என்றபடி அவள் புத்தகத்தை மூடி வைத்தாள்...

"இன்னைக்குக் கோச்சிங் க்ளாஸ் எப்படி இருந்தது...? ஏதாவது புரியவில்லை என்றால் என்னிடம் கேள்..." என்றவன் அவளது புத்தகத்தை எடுத்துப் பார்த்தான்...

அழகாய் முத்து முத்தாய் இருந்த அவளது கையெழுத்து கண்டு அவனுக்குப் பெருமையாக இருந்தது...

"உன்னைப் போல் உன்னுடைய கையெழுத்தும் ரொம்ப அழகு நிஷிம்மா..."

முன்பு அவன் இது போன்று சொல்லும் போது எந்த ஒரு எண்ணமும் அவளுக்குத் தோன்றாது... மாறாக அவள் மகிழ்ச்சியில் விழி விரித்து ஆர்ப்பரிப்பாள்... ஆனால்

இன்று ஏனோ அத்தானின் பாராட்டோடு அவளால் ஒன்ற முடியவில்லை...

"அத்தான்..."

"சொல்லுடா..." அவன் புத்தகத்தை மூடி கீழே வைத்து விட்டு அவளை நிமிர்ந்து பார்த்தான்...

"இனி நீங்க என்னை க்ளாசுக்குக் கொண்டு விட, கூப்பிட வர வேண்டாம்..."

"ஏன்...?" அவனது விழிகள் யோசனையாய் இடுங்கியது...

"வேண்டாம்ன்னா வேண்டாம் அத்தான்..."

"நான் கேட்டதுக்குப் பதில் சொல் நிஷி..." அவனது வார்த்தைகள் அழுத்தமாய் வந்து விழுந்தது...

அதில் அவளது மேனி அதிர்ந்தது... இது போல் தானே அவனும் அவளிடம் அழுத்தமாய் வார்த்தைகளைக் கொட்டுவான்... அவள் சிம்மவிஷ்ணுவின் நினைவில் விழிகளில் அச்சம் படர தனது அத்தானை பார்த்தாள்... அவளது விழிகளில் தெரிந்த அச்சத்தில் பவித்ரன் சற்று நிதானித்தான்... கண்களில் கனிவு படர அவளை நோக்கியவன்,

"ஏன்டா...?" அவனது கனிவில் அச்சத்தைத் தள்ளி வைத்துவிட்டு அவள் தனது வாய் திறந்தாள்...

"அங்கே கூடப் படிக்கிறவங்க எல்லாம் ஒரு மாதிரியா பேசுறாங்க..."

"என்ன மாதிரி...?" என்று கோபமாய்க் கேட்டவனைக் கண்டு,

"நீங்க என்னோட ஹஸ்பெண்ட்... அந்த மாதிரி..." அதைக் கேட்டு அவனது உதடுகளில் புன்னகை வந்தமர்ந்தது...

"சொன்னால் என்னடா குட்டிம்மா...?" என்றான் மகிழ்ச்சியாக...

"இல்லை, வேண்டாம் அத்தான்... இது சரிவராது..."

"ஏன் சரிவராது...? அவர்கள் கூறுவதை உண்மையாக்கினால் என்னடா...? நாம கல்யாணம் பண்ணிக்கலாமா நிஷிம்மா...?" என்றவனை அவள் சிறு திடுக்கிடலோடு நிமிர்ந்து பார்த்தாள்...

பவித்ரனின் கண்ணில் காதலோ, காமமோ வழியவில்லை... மாறாக அதில் கனிவும், பாசமும் மட்டுமே போட்டி போட்டது... அந்தக் கணம் வன்மம், குரோதம், பகை உணர்வோடு தன்னை நோக்கும் சிம்மவிஷ்ணுவின் விழிகள் அவளையும் அறியாது அவளது நினைவில் எழுந்தது... அதை நினைத்து அவளது விழிகளில் விழிநீர் கரை கட்டியது...

அப்போது அவளுக்கு ஒன்று நன்றாகப் புரிந்தது... எந்த நிலையிலும் அவனது நினைவு அவளை விட்டு போகாது என்று... அவன் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை என்பதை இப்போது அவள் உணர்ந்து கொண்டாள்... அவன் செய்தது வன்கொடுமையே ஆனாலும் கூட அவனது தொடுகையை அவளால் மறக்க முடியவில்லை... அத்தோடு அவளது வயிற்றில் வளரும் சிசு அவனையும், அவனது பாதகச் செயலையும் அவளுக்கு ஞாபகப்படுத்துகிறதே... அவளது கை அவளது வயிற்றை இறுக பிடித்துக் கொண்டது...

"என் மேல் உனக்கு நம்பிக்கை இல்லையா குட்டிம்மா...? நான் உன்னைச் சந்தோசமா வச்சிக்க மாட்டேன்னு நினைக்கிறியா...?"

"அப்படி எல்லாம் இல்லை அத்தான்..." என்று அவசரமாக மறுத்தவளை கண்டு அவன் புன்னகைத்தான்...

"பிறகென்ன...? அவன் கோவிலில் வைத்து சொன்னதை நினைத்து பயப்படுகிறாயா...?" அதில் அவள் திடுக்கிட்டு போய் அவனைப் பார்த்தாள்...

"நாம கல்யாணம் பண்ணிக்கலாம்... அப்படியாவது அவன் உனக்குப் பண்ணிய துரோகத்தை வெளியில் சொல்கிறானா என்று பார்ப்போம்..." அதைக் கேட்டு அவள் விரக்தி புன்னகை சிந்தினாள்...

"அத்தான், அவனை அவ்வளவு லேசா எடை போடாதீங்க... அவன் காற்றைப் போல் வேகமானவன் மட்டுமல்ல... காற்றைப் போல் எங்கும் நுழைபவன்... கல்யாணத்துக்கு முன்னால் அவன் என்னைக் கடத்திட்டு போனா நீங்க என்ன செய்வீங்க...? கோவிலில் வைச்சு அவன் பேசியதை கேட்டீங்க தானே..."

அவளின் வார்த்தைகளில் பவித்ரன் திகைப்புடன் அவளைப் பார்த்திருந்தான்... அந்தக் கணம் நிஷிலா தனது இரு கரங்களைக் குவித்து அவனை நோக்கி இறைஞ்சுதலாய் பார்த்தவள்,

"நாமளே அவனுக்கு இன்னொரு சான்சை ஏற்படுத்தி விடக் கூடாது... இன்னுமொரு முறை அவனது கை ஓங்கிவிடக் கூடாது... இன்னொரு முறை அந்தக் கொடுமையை அனுபவிக்க என் உடலிலும் சரி, மனதிலும் சரி வலுவில்லை..." என்று கெஞ்சும் குரலில் கூறியவள் முகத்தை மூடி கொண்டு அழுதாள்...

"நிஷிம்மா..." பவித்ரனின் தவிப்பான அழைப்பில் நிமிர்ந்தவள் விழிகளைத் துடைத்துக் கொண்டு,

"நான் அவனை விட்டு விலகி போவதற்காகத் துடிச்சிட்டு இருக்கேன்... அவனை என் வாழ்க்கையை விட்டு விலக்கி வைக்கணும்... அதற்காகத் தான் நான் காத்துக் கொண்டிருக்கிறேன்... அதற்கு இந்தத் தனிமை தவம் எனக்கு அவசியம் அத்தான்... நான் இப்படி இருந்தால் மட்டுமே அவன் என்னைப் பத்தி அதிகம் யோசிக்க மாட்டான்... அப்போ தான் எதிர்பாரா நேரத்தில் நான் அவனைத் திருப்பி அடிக்க முடியும்... அதனால் என்னோடு சேர்ந்து நீங்களும் அமைதியா இருங்க... அவன் என்ன வேணும்ன்னாலும் பேசிட்டு போகட்டும்... என்னைக்காவது ஒரு நாள் நான் அடிக்கும் அடியில் அவன் வலிக்க வலிக்க

உயிரோடு சாக வேண்டும்... அவனது தொடுகையில் நான் உயிரோடு மரணித்தது போல்..." என்று கூறியவளின் குரலில் அத்தனை தீவிரம் இருந்தது...

பவித்ரன் அவளது தீவிரத்தை கண்டு வாயடைத்துப் போனான்... அவளது தைரியம் கண்டு அவனுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது...

"நீ இந்தளவுக்குப் பேசுவது கண்டு எனக்குச் சந்தோசமாக இருக்கு... இதுநாள் வரை நான் பார்த்த நிஷிம்மா நீ இல்லை..."

"அந்த நிஷிம்மா சின்னப் பெண்..."

"இப்போ மட்டும் குட்டிம்மா பெரிய பெண்ணாகி விட்டாளா...?" என்று நகை குரலில் கேட்டவனைக் கூர்ந்து பார்த்தவள் பின்பு தனது வயிறை தடவி கொண்டு,

"ம், பெரிய பெண்ணாகி விட்டாள்... இதுவரை மகளாக இருந்தவள் இப்போது அம்மாவாகப் போகிறேன் இல்லையா..." என்றவளின் விழிகளில் விழிநீர் துளிர்த்தது...

அந்தக் கணம் பவித்ரன் நிஷிலாவை பார்த்த போது பெங்களூரில் அவன் காப்பாற்றிய அந்தப் பதினாறு வயது சிறுமியை போன்று இருந்தது... அந்தச் சிறு பெண்ணின் துயரத்திற்குச் சற்றும் குறையாத துயரம் இவளுடையது என்பதை உணர்ந்தவனுக்கு மனதில் பாறாங்கல்லை வைத்தது போல் பாரமாய்க் கனத்தது... அங்கே விபச்சாரம் என்கிற பெயரில் தினம் தினம் நடந்த கற்பழிப்பு, இங்கே திருமணம் என்கிற பெயரில் தினம் தினம் நிகழ்ந்து இருக்கிறது...

அவனால் மனம் தாங்க முடியவில்லை... சட்டென்று எழுந்து பால்கனிக்கு சென்றுவிட்டான்... அவன் சென்றதை கூட உணராது அவள் தனக்குள் மூழ்கி போயிருந்தாள்...

பால்கனியில் வந்து நின்ற பவித்ரனின் விழிகளில் இருந்து கண்ணீர் விடாது சொட்டியது... என்ன முயன்றும் அவனால்

கண்ணீரை நிறுத்த முடியவில்லை... அவளது வேதனையை அவனே ஏற்றது போல் அவன் துடிதுடித்தான்... ஒரு பெண்ணால் தான் இன்னொரு பெண்ணைப் புரிந்து கொள்ள முடியும் என்று யார் சொன்னது...? இதோ பெண்ணவளின் வலி கண்டு ஆண் இவன் வலி கொள்கிறானே...!

அவன் முயன்று தனது மனதினை சமன் செய்து கொண்டு மீண்டும் அறைக்குள் நுழைந்தான்... அங்குத் தனது வயிற்றினைத் தடவியபடி தனக்குள் மூழ்கியிருந்தவளை கண்டு மீண்டும் அவனது விழிகள் உடைப்பெடுத்தது... அவளிடம் பேசினால் தான் இன்னமும் உடைந்து போய்விடுவோம் என்றெண்ணி அவன் அமைதியாக அறையை விட்டு வெளியேறினான்...

'உனது அப்பாவுக்கான தண்டனையை நான் பெற்று தர போகிறேன்... அதுக்காக நீ என்னை வெறுத்து விடுவாயா...?'

நிஷிலா தனது குழந்தையிடம் கேள்வி கேட்டு கொண்டிருந்தாள்... அப்போது குழந்தை அவளது வயிற்றில் உருண்டது... 'வெறுத்து விடுவேன்' என்றதா...? இல்லை 'உனக்கு ஆதரவாக இருப்பேன்' என்றதா...? அவள் குழப்பத்துடன் அப்படியே அமர்ந்திருந்தாள்...

**********************

சிம்மவிஷ்ணு அவனது அறையின் பால்கனியில் அமர்ந்திருந்தான்... அவனுக்கு இருந்த டென்சனில் புகைப்பிடிக்க வேண்டும் போலிருந்தது...

'கர்மம் பிடித்த அந்தப் பழக்கத்தை அவளோடு தூக்கி தூர எறிந்து நாளாகி விட்டதே... இன்னமும் ஏன் அதை நினைத்து கொண்டிருக்கிறாய்...?' என்று அவனது மனம் அவனைக் கண்டித்தது...

நிஷிலா தனது வாரிசை சுமக்கிறாள் என்பதை அறிந்து கொண்ட பிறகு அவன் அவள் பக்கம் தலை வைத்து கூடப்

படுக்கவில்லை... ஆனால் இப்போது அவள் பின்னால் சுற்றிக் கொண்டிருப்பது போல் அவளைக் காணும் போது எல்லாம் தான் ஏன் வம்பிழுத்துக் கொண்டு இருக்கிறோம்? என்று அவனுக்கே தன்னைக் குறித்து எரிச்சலாக இருந்தது...

அதற்கு விடையாக அன்று அவள் பவித்ரனிடம் அவளைக் கல்யாணம் பண்ணி கொள்ள வேண்டி கையேந்தி நின்ற காட்சி கண்ணில் தோன்றியது...

'எவ்வளவு தைரியம்...? அவ்வளவு சீக்கிரம் உனக்கு எல்லாவற்றையும் மறக்க விட்டிருவேனா...? நீ அவனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு என் முகத்தில் கரி பூச நினைச்சியா...? அது என் கிட்ட நடக்காதுடி... உன்னை வச்சு உன் அப்பன், சித்தப்பன், அத்தை மூணு பேர் முகத்திலும் கரி பூச நான் திட்டம் போட்டிருக்கேன்... அதை அவ்வளவு சுலபத்தில் விட்டு கொடுத்துவிடுவேனா...? இனிதானே உன் வீட்டார் சந்திக்க வேண்டியது நிறைய இருக்கிறது... பொறுத்திருந்து பார், இந்தச் சிம்மவிஷ்ணுவின் ஆட்டம் எப்படி இருக்கிறதென்று...?' அவன் மனதில் வன்மத்துடன் சொல்லி கொண்டான்...

இன்று அவன் கோவிலுக்குச் சென்றது வேறு ஒரு விசயமாக... அந்தக் கணம் பழைய நினைவுகளின் தாக்கத்தில் அவனது மனம் அவனையும் அறியாது நிஷிலாவை தான் நினைத்துக் கொண்டு வந்தது... அப்போது அவன் ஏதேச்சையாகத் தான் நிஷிலாவை பவித்ரனுடன் பார்த்தது... ஆனால் நிச்சயமாக நல்லவிதமாக அல்ல...

அவளது தோள் மீது கை போட்டு அணைத்துக் கொண்டு வந்த பவித்ரனை கண்டு அவனுக்கு ஆத்திரமாக வந்தது... அவனே கஷ்டப்பட்டு எதிரியை நோக்கி ஒவ்வொரு காயாக நகர்த்திக் கொண்டு போகும் போது இவன் அதை எல்லாம் கெடுப்பது போல் நிஷிலாவை நெருங்குவது கண்டு கோபம் கொண்டு தான் அவன் அவர்களிடம் சென்று பேசியது... அவள் மீதான தன்னுடைய உரிமையைப்

பவித்ரன் முன் நிலைநாட்டிய பின்பே அவனது மனம் சற்று நிம்மதி அடைந்தது...

தன்னிடம் பதிலுக்குப் பதில் வாயாடும் நிஷிலாவை கண்டு கோபம் வந்த அதே சமயம் அவனுக்கு வியப்பாகவும் இருந்தது... 'பிள்ளைப்பூச்சிக்கு எல்லாம் வாய்க் கூடிவிட்டது' என்று அவன் கடுப்பாய் நினைத்துக் கொண்டான்...

அந்நேரம் அவனது அலைப்பேசி அழைத்தது... அவனது அன்னை அழைத்திருந்தார்... புன்னகையுடன் அலைப்பேசியை உயிர்ப்பித்துக் காதில் வைத்தான்...

"ம்மா..."

"போனா போன இடம்... வந்தா வந்த இடம்... சென்னைக்குப் போய் எத்தனை நாளாச்சு... இங்கே வரும் ஐடியா இருக்கா இல்லையா...? அம்மா உன் ஞாபகத்தில் இருக்கிறேனா இல்லையா...?" எடுத்தவுடன் அவனைப் பேசவிடாது அவர் படபடவெனப் பொரிந்தார்...

"ம்மா, என்னைப் பேசவிட்டால் தானே நான் பதில் சொல்ல முடியும்... இங்கே வேலை முடிஞ்சதும் நான் அங்கே வந்து விடுகிறேன்..."

"ரொம்ப நாளாகும்ன்னா நான் அங்கே வரவா விஷ்ணு...?"

"இல்லை... வேண்டாம்மா..."

அவன் செய்து கொண்டிருக்கும் காரியத்திற்கு எந்தப் பந்தபாசமும் அருகில் இருந்து தன்னைக் கட்டுப்படுத்தக் கூடாது என்றே அவன் நினைத்தான்...

"சரிப்பா உன் விருப்பம்..." என்றவர்,

"ஹர்ஷிக்கு ஒரு நல்ல பதிலா சொல்லு விஷ்ணு..." என்றார் மெல்லமாய்...

"அவளுக்கு என்னுடைய ஒரே பதில் 'நோ' தான்ம்மா... அவளைத் தவிர வேறு பேச்சு பேசுங்க..."

அதற்கு மேல் அவர் மகனிடம் வாதாட விரும்பவில்லை... அடுத்துத் தந்தையிடம் சிறிது நேரம் பேசிவிட்டு அலைப்பேசியை அணைத்தவன் அடுத்த நொடி மாடசாமிக்கு அழைத்தான்...

"என்னப்பா பண்றீங்க...?"

"தூக்கம் வரலை... அதான் தோட்டத்தில் நடந்துக்கிட்டு இருக்கேன்... நீ ஏன்ப்பா இங்கே வரவே இல்லை..."

"கூடிய சீக்கிரம் வர்றேன்ப்பா..." என்றவனை அவரது குரல் இடைமறித்துத் தடுத்தது...

"சுடலை, இளாவை போய்ப் பார்த்து பேசினியாப்பா...?"

அதைக் கேட்டு அவன் துயரத்துடன் விழிகளை மூடி கொண்டான்... பின் ஆழ மூச்செடுத்துத் தன்னைச் சமன் செய்து கொண்டவன்,

"அவங்களுக்குன்னு ஒரு வாழ்க்கை இருக்கும் போது நான் போய்ப் பழசை கிண்ட விரும்பலை... மறந்தது மறந்ததாகவே இருக்கட்டும்..."

"அது எப்படிப்பா இளா உன்னை மறப்பாள்...? நீ அவளோட உயிர்..."

அவர் கூறியதை கேட்டு அவன் விரக்தி புன்னகை சிந்தினான்...

"வேண்டாம்ப்பா... இந்த ரகசியம் நம்மோடு போகட்டும்..." என்று அவன் முடித்துக் கொண்டான்...

அலைப்பேசியை அணைத்து விட்டு அவன் வானத்தை வெறித்தான்... 'நீ அவளோட உயிர்' மாடசாமி கூறிய வார்த்தைகள் அவனது காதில் திரும்பத் திரும்ப ஒலித்தது... 'உயிர் என்பதால் தான் உயிர் வாங்க தூண்டியதோ' அவன் தனக்குள் கசப்பாய் புன்னகைத்துக் கொண்டான்...

******************

அன்று பத்ரிநாத் அலுவலகத்திற்கு வந்த போது சிம்மவிஷ்ணு அவருக்காகக் காத்துக் கொண்டிருந்தான்... அவனைக் கண்டதும் ஒரு நொடிக்கும் குறைவாக அவரது விழிகள் சுருங்கி மீண்டது... தனது அறைக்குள் நுழைந்து நாற்காலியில் அமர்ந்தவர் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு அவனை உள்ளே அழைத்தார்...

"குட்மார்னிங் பத்திப்பா..." என்று உற்சாகமாய்க் கூறிக் கொண்டே அவன் அவர் முன் வந்தமர்ந்தான்...

அவனது 'பத்திப்பா' என்கிற வார்த்தையில் அவரது முகத்தில் பலவித வர்ணஜாலம் வந்து போனது... கனவுக்கும், நனவுக்கும் வித்தியாசம் தெரிந்த போதும் அவரால் மனம் நெகிழாமல் இருக்க முடியவில்லை... ஆனாலும் அவனது இன்னொரு பக்கம் அவருக்குக் கடுப்பை கிளப்பியதில் அவரது முகம் கடுமையாய் மாறியது...

"என்ன விசயம் சொல்லுங்க மிஸ்டர். சிம்மவிஷ்ணு...?"

"உங்களிடம் வேறென்ன விசயம் பேச போகிறேன்... எல்லாம் பிசினெஸ் விசயம் தான்..." என்றவன்,

"ஃப்ளைட்டுக்கு டயர் செய்யும் கம்பெனி ஒப்பந்தம் ஒன்று எடுத்திருக்கிறேன்... அதை நம்ம எஸ்எம் கம்பெனியோடு டை அப் பண்ணி செய்யலாம்ன்னு ஒரு ஐடியா இருக்கு... உங்களுக்கு ஓகேன்னா இதைப் பற்றி மேலே பேசலாம்..."

அவர்களிடம் இருந்து இந்தத் தொழில் ஒப்பந்தத்தை வேண்டுமென்றே தட்டி பறித்த சிம்மவிஷ்ணு இப்போது அவரிடம் நல்ல பிள்ளை மாதிரி அமர்ந்து பேசி கொண்டிருக்கிறான்...

"எங்க கிட்ட இருந்து தட்டி பறிச்சது நீங்க தானே மிஸ்டர்... இப்போ என்ன இந்தத் திடீர் கரிசனை...?" என்றவரது பார்வை அவனைக் குதறிவிடுவது போல் பார்த்தது...

"எங்க வீட்டு பொண்ணுக்கான விலையா...?" என்று அவர் வார்த்தைகளாலும் அவனைக் குதறி எடுத்தார்... அதைப்

புன்னகை மாறாது கேட்டு கொண்டவன்,

"அது தனி ப்ராஜெக்ட்... இது தனி ப்ராஜெக்ட்... நீங்க இரண்டையும் போட்டுக் குழப்பிக்கத் தேவையில்லை..." என்றான் புன்சிரிப்புடன்...

"அது எப்படி முடியும்...?" என்றார் அவர் கோபமாய்...

"தொழில் வேறு... குடும்பம் வேறு... இதை நான் உங்களுக்குச் சொல்ல தேவையில்லை..." என்றவன்,

"இதை எடுப்பது எஸ்எம் கம்பெனி என்று எனக்குத் தெரியாது... சிம் கம்பெனி என்று நினைச்சேன்... சாரி..." என்று கூறியவனின் தலை தானாகக் கவிழ்ந்தது... நொடி நேரம் தான் தன்னைச் சமாளித்துக் கொண்டு நிமிர்ந்தவன்,

"உங்களுக்கு விருப்பம்ன்னா இந்த முழு ப்ராஜெக்ட்டை உங்கள் வசமே ஒப்படைக்கிறேன்... எனக்கு இது தேவையில்லை... உங்களை விட எனக்கு எதுவும் பெரிதில்லை..." என்றவனை அவர் வியப்பாய் பார்த்தார்...

எத்தனை கோடி வருவாய்க் கொண்ட தொழில் இது... எத்தனை பேர் போட்டி போடும் தொழில் இது... அப்படியொரு வாய்ப்பை தனக்காக அவன் விட்டு கொடுக்கிறானா? அவருக்குப் பெருத்த ஆச்சிரியமாக இருந்தது...

"தொழிலில் எனக்காக விட்டு கொடுக்கும் நீ... குடும்பத்தில் எனக்காக விட்டு கொடுப்பாயா...?" அவரது மனம் நெகிழ்ந்ததில் வார்த்தையில் சொந்தம் வந்தது... அதன் விளைவு அவர் உரிமையோடு மரியாதை பன்மையைத் துறந்திருந்தார்...

அதைக் கேட்டு அவன் தனது இலகுத்தன்மையைக் கைவிட்டு நிமிர்ந்து அமர்ந்தான்...

"உங்களுடையது பந்தம்... அது பகை... ரெண்டையும் முடிச்சு போட வேண்டாம்..." என்றான் அவன் திட்டவட்டமாக...

அதன் பின் பத்ரிநாத் குடும்ப விசயத்தை மறந்தவராய் அவனுடன் தொழில் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தார்... நேரம் போவது தெரியாமல் இருவரும் அதில் மூழ்கி போயினர்...

"உங்களுடன் பேசியதில் நேரம் போனதே தெரியலை... இந்த ப்ராஜெக்ட் உங்களுடன் இணைந்து செய்வதில் எனக்கு ரொம்பச் சந்தோசம்..." என்றபடி எழுந்தவன் கை குலுக்குவதற்காகத் தனது கையை அவர் முன் நீட்டினான்...

அவரும் எழுந்து தனது கையைக் கொடுத்தவர், "இப்போது குடும்ப விசயம் பேசலாமா...?" என்று அமர்த்தலான குரலில் கேட்டார்... அதைக் கேட்டு அவனது விழிகள் இடுங்கிய போதும்,

"யா, ஷுயர்..." என்றான் அதே அமர்த்தலான குரலில்..."

"உனக்கான வினைப்பயன் உன்னைத் துரத்தி கொண்டு வருகிறது... அனுபவிப்பதற்குத் தயாராக இரு..." என்றவரை கூர்ந்து பார்த்தவன்,

"தயாராகக் காத்திருக்கிறேன் பத்திப்பா..." என்றபடி ஆங்கிலேய பாணியில் குனிந்து வணக்கம் செலுத்தியவன் முகம் கொள்ளா புன்னகையுடன் அந்த அறையை விட்டு வெளியேறினான்...

பத்ரிநாத் அவனைப் புரியாத புதிராகப் பார்த்து கொண்டிருந்தார்...!

********************

அன்று தை அமாவாசை... முன்னோர்களுக்குத் தர்ப்பணம் செய்ய உகந்த நாள் இன்று... தை மாதத்தில் (தமிழ் மாதம்) மகர ராசியில் சஞ்சரிக்கும் சூரியன், சந்திரன், பூமி ஆகிய மூன்றும் ஒரு நேர் கோட்டில் (0 பாகையில்) அமையும் தினமே தை அமாவாசை திதியாக அனுஷ்டிக்கப் பெறுகின்றது. இது சிறப்பு வாய்ந்த அமாவாசையாகும்...

இராமேஸ்வரத்தின் கடற்கரையோரம் சிம்மவிஷ்ணு இடுப்பில் ஈர வேட்டியும், தோள்களை மூடினார் போன்று துண்டையும் அணிந்து கொண்டு அமர்ந்திருந்தான்... அவனது விழிகள் வாழையிலையில் வைக்கப்பட்டிருந்த பிண்டங்களை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தது... அவனது விழிகள் பழைய நினைவுகளின் தாக்கத்தில் கலங்கி சிவந்திருந்தது...

அப்போது அவன் முன்னிருந்த அய்யர், "தோப்பனார் பெயர் என்ன...?" என்று கேட்க...

"இசக்கிமுத்து..." என்று கூறியவனின் உதடுகள் நடுங்கியது...

மானசீகமாகத் தனது தகப்பனை மனக்கண்ணில் கொண்டு வந்தவனின் விழிகளில் விழிநீர் துளிர்த்தது... அந்தக் கணம் அவன் ஒன்றை மறந்து போனான்... தனது தந்தை செய்த அதே தவறை தான் தானும் செய்திருக்கிறோம் என்று...

இசக்கிமுத்துவின் தவறுக்கு மரணம் பரிசென்றால்...? சிம்மவிஷ்ணுவின் தவறுக்கு பரிசு என்னவாக இருக்கக் கூடும்...???

"மஞ்சளழகியே மனம் மயங்காதே,
மாமன் மனம் மயங்காது
வீராப்பு காட்டினாலும்,
நித்தமும் அவன் நினைவில் நீயே,
வன்மமோ, தாபமோ அவனுக்கு நீதான்,
கோபமோ, ஏமாற்றமோ உனக்கு அவன் தான்,
வன்மம் கோபத்தீயில் பொசுங்கும்,
ஏமாற்றம் தாபத்தீயில் தடுமாறும்,
உன்னையும் பராசக்தியாய்
மன்னவன் பார்க்கும் நாள்
விரைவில் வந்து சேரும்...!!!"

கொல்லும்...!!!

## நிழல் : 13

இரவு உணவு முடிந்து எல்லோரும் வரவேற்பறையில் அமர்ந்தனர்... மேடிட்ட வயிறுடன் நிஷிலா மெல்ல தேர் போல் நடந்து வந்து சோபாவில் அமர்ந்த காட்சியைக் கண்ட பத்ரிநாத்திற்கு அத்தனை வேதனையாக இருந்தது... இப்போது ஆறாவது மாதம் முடிந்து ஏழாவது மாதம் ஆரம்பித்திருக்கிறது... அதனால் வயிறு மேடிட்டு இருந்தது நன்கு தெரிந்தது... இந்தச் சமயத்தில் தான் எடுத்த முடிவு சரிதானா? என்று அவருக்குக் கலக்கமாக இருந்தது... முடிவெடுத்த பின் பின்வாங்குவது என்பது அவருக்குப் பிடிக்காத ஒன்று... அதனால் இன்றே இதைப் பற்றி எல்லோரிடமும் பேச வேண்டும் என்று அவர் முடிவெடுத்து விட்டார்...

"நிஷா, செக்கப் எல்லாம் ரெகுலரா போறியாம்மா...?" என்று அவர் அவளிடம் அன்போடு கேட்க...

"இன்னும் ரெண்டு நாளில் அடுத்தச் செக்கப் போகணும் மாமா..." என்றாள் அவள் மெல்லிய குரலில்...

'ரொம்ப நல்லதாகப் போயிற்று...' என்று அவர் மனதில் நினைத்துக் கொண்டார்...

"படிப்பு எல்லாம் எப்படிப் போகுது...? ரொம்பக் கஷ்டமாயிருக்காம்மா...?"

"இல்லை மாமா... எனக்குப் பிடிச்சியிருக்கு..."

"உன் விருப்பப்படி நீ பெரிய டாக்டர் ஆகணும்... அது தான் எங்களுடைய விருப்பம்..."

"நிச்சயம் மாமா..." என்று பூவாய் சிரித்தவளை பார்த்தவரின் மனம் துக்கத்தில் வெம்பி போனது...

இந்தப் பூவை கசக்க அவனுக்கு எப்படி மனம் வந்தது...? என்று அவர் மனம் குமுறிப் போனார்... அதே நேரம் இந்த ஒரு விசயத்தைத் தவிர்த்து பார்த்தால் சிம்மவிஷ்ணுவையும் தவறாக நினைக்க முடியவில்லை...

யோசித்து யோசித்து அவருக்குத் தலைவலி வந்தது தான் மிச்சம்...

"எனக்கு டயர்டா இருக்கு... நான் தூங்க போகிறேன்..." என்றபடி நிஷிலா எழுந்தாள்...

"குட்நைட் நிஷா..." என்று அவர் பெருத்த நிம்மதியுடன் அவளைப் பார்த்தார்...

அவள் அறைக்குச் சென்றதும் அவர் வீட்டினர் அனைவரையும் ஒரு பார்வை பார்த்தார்...

"நிஷா விசயத்தில் என்ன முடிவு எடுத்திருக்கீங்க...?"

"அவனுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்கணும்... இல்லை நாம அவனைத் தண்டிக்கணும்..." என்றனர் எல்லோரும் ஒருமித்த குரலில்... அருந்ததி மட்டும் அமைதியாக நின்றிருந்தார்... மகளின் வாழ்க்கையைக் குறித்து அவருக்குக் கவலையிருந்த போதும் அவர் வாயை திறக்கவில்லை...

"சொல்லிக்கிட்டே இருந்தால் எப்படி...? அதைச் செயல்படுத்த வேண்டாமா...?"

"எங்கே பத்ரி, எல்லா விதத்திலும் அவனது கை ஓங்கி இருக்கிறது... அவன் கிட்டே நெருங்க கூட முடியலை..." என்று சலித்துக் கொண்டார் இளவரசி... இல்லையென்றால் எதிரி என்று ஒருவரை உயிரோடு விட்டு வைத்திருப்பாரா அவர்...?

"அவனது பலவீனம் எது என்று தெரிந்து அடித்திருக்கணும் வசி... இத்தனை வருடங்களாய் தொழில் செய்யும் உனக்கு இது தெரியாதா...?"

"ம்ப்ச், அவன் எதிலும் வீக் இல்லை... எல்லாவற்றிலும் டபுள் ஸ்ட்ராங்..." என்று எரிச்சலில் படபடத்தார் இளவரசி...

"எஸ் டாட்... மாம் சொன்ன மாதிரி அவனை என்ன பண்றதுன்னு தெரியலை..."

"செல்வம், பாரதி நீங்க ரெண்டு பேரும் ஒண்ணும் சொல்லலையே..."

"என்ன செய்றதுன்னு எங்களுக்கு ஒண்ணும் புரியலை பத்ரி... நீ என்ன சொல்லுறியோ அதையே செய்ய எங்களுக்குச் சம்மதம்..." என்றனர் இருவரும் ஒருமித்த குரலில்...

"அவனது பலவீனம் எதுன்னு நான் கண்டுபிடிச்சிட்டேன்..." என்றவரை எல்லோரும் வியப்பாய் பார்த்தனர்...

"என்ன அது..?" எல்லோரும் ஆர்வமாக ஒரே குரலில் கேட்டனர்...

"குழந்தை..."

அவர் கூறியதும் எல்லோரின் முகத்திலும் மலர்ச்சி வந்தது... சிம்மவிஷ்ணுவின் பெரிய பிடி அவர்களிடம் அல்லவா சிக்கியிருக்கிறது... அவனது குழந்தை அவர்களைப் பலவீனமாக்கும் என்று அவன் நினைத்தான்... ஆனால் அதுவே அவனது பலவீனம் என்பதை அவன் அறியாது போனானே...

"சூப்பர் டாட்..." என்று பவித்ரன் தந்தையைப் பாராட்டினான்...

"அதனால் நான் யோசிச்சு ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன்... இது அவனைப் பழிவாங்குவதற்காக அல்ல... நிஷாவின் எதிர்காலத்திற்காக யோசிச்சது... அவள் சின்னப் பெண்... அவள் சாதிக்க வேண்டியது நிறைய இருக்கு... இப்பவே அவள் இப்படிப் பாரத்தைத் தூக்கி சுமப்பது ரொம்பக் கஷ்டமாயிருக்கு... அதற்காகத் தான் இந்த முடிவு..." என்றவர் தனது முடிவை அவர்களிடம் கூறினார்...

அதைக் கேட்டு எல்லோரின் முகத்திலும் ஈயாடவில்லை...

"டாட் நிஷிக்கு ஏதாவது...?"

"ஒண்ணுமாகாது... இது போல் நிறைய நடந்திருக்கு... அதுவும் லீகலா... நம் வீட்டு பெண்ணின் மானம் காற்றில் பறக்க கூடாது என்பதற்காக இதை லீகலா கொண்டு போக நான் விரும்பலை... ஆனால் லீகலாகவும் இதைச் செய்வதற்குச் சாத்தியக்கூறு இருக்கிறது... என்னோட முடிவு இது தான்... இது முடிஞ்சதும் ஒரு மாதத்தில் தீரனுக்கும், நிஷாவுக்கும் கல்யாணம்..." என்றார் அவர் முடிவாக...

"அப்போ தப்பு செஞ்ச அவனுக்குத் தண்டனை கிடையாதா...?"

இளவரசிக்குக் கோபம் வந்தது... இதைச் சாக்கு வைத்து 'சுடலைமுத்து' பற்றிப் பேசும் சிம்மவிஷ்ணுவை அழிக்க அவர் திட்டம் போட்டார்... அதற்குக் கணவரின் உதவி தேவை என்பது அவருக்கு நன்கு தெரியும்...

"இப்போ நாம நம்ம பொண்ணோட எதிர்காலத்தை மட்டும் தான் பார்க்கணும்... வேறு எதைப் பத்தியும் யோசிக்கத் தேவையில்லை..." என்று அவர் முடிவாகக் கூறிவிட்டார்...

எல்லோரும் எழுந்து செல்ல பத்ரிநாத் மகனை தனியே அழைத்துக் கொண்டு தோட்டத்திற்கு வந்தார்...

"தீரா உனக்கு நிஷாவை கல்யாணம் பண்றதில் எந்தவித சங்கடமும் இல்லையே..." என்று கேட்க...

"டாட் நீங்க இப்படிக் கேட்பது தான் எனக்கு வருத்தமாக இருக்கிறது..." என்றான் அவன் உண்மையான வேதனையுடன்...

"கல்யாணத்துக்கு வெறும் பரிதாபம் மட்டும் போதாது தீரா... மனசு நிறையக் காதல் இருக்கணும்... உன்னுடைய அன்பு மட்டும் அவளை மாத்தாது... உன்னுடைய காதலும் சேர்ந்து தான் அவளை இந்த நிலையில் இருந்து மீட்டெடுக்கணும்... நான் சொல்ல வர்றது உனக்குப் புரியும்ன்னு நினைக்கிறேன்..."

"நல்லாவே புரியுது டாட்... நீங்க எதைப் பத்தியும் கவலைப்படாம கல்யாணத்துக்கு நாள் பாருங்க..." என்றான் மகன் புரிதலோடு...

"சரி நீ போய்த் தூங்கு..." என்று மகனை அனுப்பி வைத்த பத்ரிநாத் அவனைப் பார்த்தபடி அங்கிருந்த கல்மேடையில் அமர்ந்தார்... அப்போது அவர் அருகில் வந்தமர்ந்தார் இளவரசி...

"என்ன வசி, தூக்கம் வரலையா...?" என்றபடி மனைவி தோள் மீது கை போட்டு அணைத்துக் கொண்டார் பத்ரிநாத்... இளவரசியும் அவரது தோள் மீது சாய்ந்து கொண்டார்...

"என்ன விசயம் வசி...?" என்று கேட்ட கணவரை வியப்பாக ஏறிட்டார் இளவரசி...

"உன் முகத்தை வச்சு உன் உணர்வுகளை நான் கண்டுபிடிச்சிருவேன்..." என்ற கணவரை கண்டு முதன்முறையாக அவருக்குப் பயத்தில் வியர்த்தது...

"ஒண்ணும் இல்லை பத்ரி..."

"உன் மனசை போட்டு அரிச்சிக்கிட்டு இருக்கிற விசயம் என்ன...? தயங்காம என் கிட்ட சொல்லு..."

"சிம் கம்பெனி இப்போ நஷ்டத்தில் போகுது... திடீர் திடீர்ன்னு ப்ராப்ளம் வருது... எங்கேயிருந்து தான் வருதோ தெரியலை... இப்படியே போனால் விரைவில் இழுத்து மூடிவிட வேண்டியது தான்..." என்ற மனைவியைக் கூர்ந்து பார்த்தவர்,

"என்னைக் கேட்டால் அதைச் செய்றது நல்லது என்பேன்..."

"பத்ரி..."

"வசி, நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதே... உன் இரண்டு அண்ணன்களுக்கும் தொழில் திறமை போதாது... ஏதோ பரம்பரையாக வந்த சொத்துக்களை வைத்து இத்தனை காலம் ஓட்டியாகி விட்டது... இனி அது நடக்குமா?

என்பது சந்தேகம் தான்... அவர்கள் இங்கே தொழில் துவங்கி எத்தனை வருடங்களாயிற்று... ஆனால் அவர்களால் ஏன் அதில் வெற்றியடைய முடியலை...?" என்று நிறுத்தியவர்,

"ஏன்னா உன் அண்ணன்ங்க ரெண்டு பேரும் உல்லாச பேர்வழி... பாரதி மட்டும் மனைவி, குழந்தை இறந்ததும் கொஞ்சம் மாறியிருக்கிறான்... ஆனா இன்னமும் பொறுப்புக் கிடையாது... மூத்தவரை பற்றி நான் சொல்ல தேவையில்லை... வீண் ஜம்பம், வறட்டுக் கௌரவம் மட்டுமே... அவரைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட உன் அண்ணி பாவம்... அவங்களுக்கு அவரைப் பற்றிய உண்மையான விசயங்கள் தெரியாது... தெரிந்தால் அதோ கதி தான்..." என்ற கணவரை கண்டு இளவரசியின் இதயம் பயத்தில் எகிறிக் குதித்தது...

"அதனால் அவங்களைப் பத்தி கவலைப்படுறதை விட்டுட்டு என்னை, நம் மகனை பத்தி மட்டும் நீ யோசி... நாங்க உனக்காகக் கோடி, கோடியாய்ச் சம்பாதிக்கிறோம்... நீ நல்லா என்ஜாய் பண்ணி சந்தோசமா இரு... அவங்க வாழ்க்கையை அவங்க பார்த்துக்குவாங்க..."

கணவரது கூற்றுச் சரிதான்... என்னயிருந்தாலும் சகோதரர்களை அப்படியே விட்டு விட அவருக்கு மனமில்லை...

"பத்ரி, நீங்க சிம் கம்பெனியை எடுத்து நடத்த கூடாதா...?"

"இருக்கிற தொழிலை பார்க்கவே நேரமில்லை... தீரனும் ஒற்றை ஆளாய் எத்தனை வேலைகளைப் பார்ப்பான்... இப்போ அவன் அனுபவிக்க வேண்டிய வயசு... நாம அவன் தலையில் மேலும் மேலும் பாரத்தைத் தூக்கி வைக்கக் கூடாது... அதிலும் நஷ்டத்தில் போய்க் கொண்டிருக்கும் கம்பெனியை வாங்கி என்ன செய்ய...?"

"அதில் என் பெயரும் சேர்ந்து இருக்கு... எனக்காக நீங்க இதைச் செய்யக் கூடாதா...?" என்று இளவரசி கண்களைக் கசக்கினார்...

"உனக்காக நான் எதை வேண்டுமானாலும் செய்வேன்... ஆனா தொழிலில் என்னோட ஒரே பதில் 'நோ' தான்..." என்றார் பத்ரிநாத் முடிவாக... கணவரின் உறுதியில் இளவரசி அமைதியாகி போனார்...

"பத்ரி, நான் ஒண்ணு கேட்டா கோவிச்சுக்க மாட்டீங்களே..."

"நீ கேட்டு நான் கோவிச்சுக்குவேனா...? ஜோக் அடிக்காம கேளு..." என்றவர் தனது காதல் பார்வையால் மனைவியைக் குளிர்வித்தார்... அதில் நிம்மதியடைந்த இளவரசி,

"எஸ்எம்ன்னு ஏன் நம்ம கம்பெனிக்கு பெயர் வச்சிருக்கீங்க...?" என்று இளவரசி மெதுவே ஆரம்பித்தார்...

"என் அப்பா சதாசிவம், அம்மா முத்துலெக்ஷ்மி பெயர் தான் அது..." என்றார் அவர் மழுப்பலாய்...

"அப்போ ஏன் ஆரம்பத்தில் அந்தப் பெயர் இல்லாம நடுவில் இந்தப் பெயரை மாத்தினீங்க...?"

"நியூமராலஜியில் மாத்த சொன்னாங்க மாத்திட்டேன்..." என்று கூறியவர்,

"தூக்கம் வருது போகலாமா...?" என்று கேட்க...

அதற்கு மேல் கேள்வி கேட்க இயலாது இளவரசி அவருடன் நடந்தார்... அவரது மனதில் பல கேள்விகள் அரித்து எடுத்தது... அதை எல்லாம் வெளிப்படையாகக் கணவரிடம் கேட்க முடியாது அமைதி காக்க வேண்டிய கொடுமையான நிலை அவரது... நன்றாகச் செல்லும் வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்ள அவருக்கு விருப்பம் இல்லை...

********************

அந்த விசயம் கேள்விப்பட்டதில் இருந்து சிம்மவிஷ்ணு துடிதுடித்துப் போய்விட்டான்... எவ்வளவு தைரியம்? என்று அவனது விழிகள் கோபத்தில் சிவந்து போனது... அடுத்தக் கணம் தனது காரை எடுத்துக் கொண்டு அவன் நேரே நிஷிலாவின் வீட்டிற்குச் சென்றான்...

வீட்டில் நிஷிலாவும், அருந்ததியும் மட்டுமே இருந்தனர்... மற்றவர்கள் அலுவலகம் சென்றிருந்தனர்... அங்கிருந்த காவலாளி அவனைத் தடுத்து நிறுத்திய போது அவன் பார்த்த ஒற்றைத் தீப்பார்வையில் அவன் அப்படியே பின்வாங்கி விட்டான்...

"ஏய் நீ எதுக்கு இங்கே வந்த...?" என்று அலறிய அருந்ததியை பார்த்து,

"எங்கே உங்க மகள்...?" என்று அவன் ஆத்திரத்துடன் உறுமினான்...

"அவள் எதுக்கு உனக்கு...?" என்றவரது விழிகள் மகளது அறையைப் பயத்துடன் பார்த்தது...

அதை உணர்ந்து கொண்ட சிம்மவிஷ்ணு நேரே நிஷிலாவின் அறையை நோக்கி சென்றான்...

"பாவம், அவள் சின்னப் பெண்..." என்று கெஞ்சியவரின் கெஞ்சலை புறம்தள்ளியவன் அவளின் அறை கதவை திறந்து கொண்டு உள்ளே சென்றான்...

"அவளை ஒண்ணும் பண்ணிராதே..." என்று கதறிய அருந்தியின் முகத்துக்கு நேரே அறை கதவை அறைந்து சாற்றித் தாழிட்டான் அவன்...

ஜன்னல் வழியே தோட்டத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த நிஷிலா அந்தச் சத்தத்தில் திரும்பி பார்த்தாள்... தனது அறையில் சிம்மவிஷ்ணு நின்றிருப்பதைக் கண்டு அவளது இதயம் பயத்தில் வேகமாகத் துடித்தது... ஆனால் அவள் வெளியில் எதையும் காட்டி கொள்ளாது அவனை அமைதியாகப் பார்த்தாள்...

அதை எல்லாம் கவனிக்கும் மனநிலையில் அவன் இல்லை... வேகமாய் அவள் அருகே வந்தவன் தனது கை கொண்டு அவளது தலைமுடியை கொத்தாக அழுந்த பற்றினான்...

"ஷ்..." என்று வலியில் முகம் சுளித்தவளை கண்டு,

"இது மாதிரி தான்டி எனக்கும் வலிக்கிறது..." என்றவனை ஏறிட்டு பார்த்தவளின் விழிகள் மின்னியது...

தனக்கு வலிக்கச் செய்தவன் வலியை அனுபவிக்கிறான் என்றால் அது அவளுக்குச் சந்தோசம் தானே...

"ஏன்டி குழந்தையை அழிக்க முடிவு பண்ணின...?"

அவனது வார்த்தையில் திகைத்து போனவளின் கை அவளது வயிற்றினைப் பாதுகாப்பாய் பிடித்துக் கொண்டது... அவளுக்கே அவன் கூறியது கேட்டு அதிர்ச்சியாக இருந்தது... அதே சமயம் அவளுக்கு ஒன்றும் புரியவில்லை...

"எவ்வளவு தைரியம் இருந்தா இப்படியொரு முடிவு எடுத்திருப்ப...?" என்று உறுமியவனைக் கண்டு தன்னைச் சுதாரித்துக் கொண்டவள் அவனைத் தைரியமாய்ப் பார்த்தாள்...

"உன் குழந்தை எனக்கு எதுக்கு...? அதனால் அதை அழிக்கலாம்ன்னு முடிவு பண்ணிட்டேன்..." என்றாள் அவள் சாதாரணக் குரலில்...

அதில் அவனது கை ஒரு நொடி தளர்ந்தது... இதை ஏன் தான் யோசிக்கவில்லை? என்று அவன் உள்ளுக்குள் மறுகினான்... சரித்திரம் திரும்புகிறது என்றே அவனுக்குத் தோன்றியது... அதை நினைத்ததும் அவனது கை மீண்டும் இறுகியது...

"நீ இந்தக் குழந்தையை அழிக்கக் கூடாது..." என்றான் அவன் உறுதியான குரலில்...

"என்னைக் கட்டுப்படுத்த நீ யார்...?" என்றாள் அவள் இகழ்ச்சியான குரலில்...

"உன் கழுத்தில் இருக்கும் தாலியை கேட்டு பார்... அது கதை கதையாகச் சொல்லும்..." என்றான் அவனும் கேலி குரலில்...

"ஓ, இதன் மதிப்பு தெரிஞ்சு தான் நீ இதை என் கழுத்தில் கட்டினியா...?"

"நிச்சயமாய்..." என்றவனது குரலில் அத்தனை அகந்தை இருந்தது... அதைக் கண்டு அவள் அவனைக் கோபமாய் முறைத்து பார்த்தாள்...

"இப்போது இது பிரச்சினையில்லை... நீ இந்தக் குழந்தையை அழிக்கக் கூடாது அவ்வளவு தான்..." என்றவனைக் கேலியாய் பார்த்தவள்,

"குழந்தை கொடுத்ததோடு உன் வேலை முடிந்தது... அதைப் பெத்துகிறதும் பெத்துக்காம அழிக்கிறதும் என் விருப்பம்... நீ என்ன அந்த ஆண்டவனே நினைச்சாலும் அதைத் தடுக்க முடியாது... இனி எல்லாமே என் கையில் இருக்கிறது..." அவனது பலவீனம் அறிந்து அவள் குதூகலமாகி போனாள்...

"சொல்றதை கேளு நிலா..." என்றவனது குரல் இப்போது இறங்கி போய் ஒலித்தது...

"அட, என் பெயர் எல்லாம் உனக்கு ஞாபகம் இருக்கா...? மறந்துட்டியோன்னு நினைச்சேன்..." என்று கிண்டலடித்தவளை வேதனையுடன் பார்த்தவன்,

"மறக்கலை... மறக்கவும் மாட்டேன்..." என்றான் அவன் தீவிரமான குரலில்...

"அப்படியா...? நான் குழந்தை உண்டானது தெரிஞ்சதும் அப்படியே என்னை மறந்து காணாமல் போனவன் தானே நீ... நீ இப்படிச் சொல்றது தான் வேடிக்கையா இருக்கு..." என்றாள் அவள் வெறுப்புடன்...

"நீ என்னைத் தேடினியா பேபி...?" என்றவனது குரல் இப்போது குழைந்தே போனது...

"இல்லைன்னு எல்லாம் நான் பொய் சொல்ல மாட்டேன்... தேடினேன் தான்... நான் மசக்கையில் படும் அவஸ்தையைக் கண்டு நீயும் கொஞ்சமாவது

அவஸ்தையைப் படணும்ன்னு நான் உன்னைத் தேடினேன் தான்..." என்றவளை கண்டு அவனது விழிகள் மின்னியது...

அவளது தலைமுடியை பிடித்திருந்த அவனது கை தளர்ந்தது... அடுத்த நொடி அவளது கையை இறுக பற்றிக் கொண்டவன்,

"இங்கே பார்... நம்முடைய குழந்தையை அழிப்பது பாவம் இல்லையா...?" சின்னப் பிள்ளைக்கு எடுத்து சொல்வது போல் அவளுக்கு எடுத்துச் சொன்னான்...

"நம் குழந்தை இல்லை... இது உன் குழந்தை... இது எனக்கு வேண்டாம்..." என்றாள் அவள் உறுதியான குரலில்...

அவளது உறுதியில் அவனது மனதில் கலக்கம் பிறந்தது... மனம் பெரிதாய் கலங்கி தவித்ததில் அவனது தலையில் சுளீரென்று வலி எழுந்தது... கொஞ்ச நாட்களாக இது இல்லாது இருந்தது... மாத்திரை உண்பதால் தலைவலி வாராது இருந்தது... இப்போது தீவிரமாக யோசிக்கவும் திரும்பவும் வந்துவிட்டது போலும்...

அவள் முன் கத்த முடியாது வேதனையில் முகம் கசங்க அவன் தலையைத் தன் இரு கரங்களால் பிடித்துக் கொண்டான்... அவனையே பார்த்துக் கொண்டிருந்த நிஷிலா அவனது இந்த வேதனையான தோற்றத்தை கண்டு பயந்து போனாள்... அதுவும் மருத்துவராக வேண்டும் இலட்சியம் கொண்ட பெண் அவள்... அதனால் அவனது வலி கண்டு அவள் உள்ளம் துடித்துப் போனாள்... பெண்ணின் இயல்பான கருணை மனம் அவளிடம் இருந்து வெளிப்பட்டது...

"என்ன பண்ணுது...?" அவனைப் பார்த்து பயத்துடன் கேட்டாள் அவள்...

"தலைவலி..." என்றான் அவன் வலி நிறைந்த குரலில்...

"முதலில் நீ உட்கார்..." என்று அவனைக் கட்டிலில் அமர்த்தியவள் தன்னிடம் இருந்த வலி நிவாரணி மாத்திரையை எடுத்து அவனிடம் நீட்டினாள்...

அதை வாங்காது அவன் அவளை ஏறிட்டான்... தலைவலி அவனது உயிரை எடுத்தது என்றால், அவளது அன்பு அவனது மனதினை கொன்றது... அவன் அவளுக்கு எத்தனையோ தீங்கு செய்திருந்த போதும் அவளது இந்த அக்கறை அவனுக்கு நிம்மதியை அளித்தது... மறுக்காது அந்த மாத்திரையை எடுத்து போட்டு கொண்டவன் பத்து நிமிடத்தில் சரியாகி போனான்...

அவள் அவனையே கவலையாகப் பார்த்து கொண்டிருந்தாள்... வலி மறைந்து எழுந்தவன் அவளைப் பார்த்து நன்றியுடன் சிரித்தான்... இதுநாள் வரை அவனிடத்தில் வன்மம் கலந்த சிரிப்பினை தான் அவள் கண்டிருக்கிறாள்... முதன்முறையாக அவன் மனம் மலர்ந்து சிரிக்கும் புன்னகையை இன்று தான் அவனிடத்தில் காண்கிறாள்... அவள் பிரமிப்பாய் அவனைப் பார்த்திருந்தாள்...

"இப்போது எனக்கு நம்பிக்கை வந்துவிட்டது... நீ என் குழந்தையை அழிக்க மாட்டாய் என்று..." என்றவனது குரலில் அவள் சிலிர்த்துக் கொண்டு எழுந்தாள்...

"தேவையில்லாத நம்பிக்கையை வளர்த்து கொள்ளாதே... எனக்கு இந்தக் குழந்தை தேவையில்லை... அதுவும் உன்னைப் போல் ராட்சசனாய் பிறந்து எந்தப் பெண்ணின் வாழ்க்கையை அழிக்கப் போகிறதோ...?" என்று வெறுப்புடன் கூறியவளின் வாயை தன் கை கொண்டு மூடியவன்,

"இந்த இழிநிலை என்னோடு போகட்டும்... நம் குழந்தைக்கு வேண்டாம் நிலா..." என்று வேதனை குரலில் கூறியவன்,

"எனக்கு... எனக்கு இந்தக் குழந்தை வேண்டும் பேபி... அதுக்காக உனக்கு என்ன வேண்டுமானாலும் கொடுக்க நான் தயாராக இருக்கிறேன்... என்ன வேண்டுமானாலும் கேள்..." என்றவனை உறுத்து விழித்தபடி,

"எனக்கு உன் உயிர் வேண்டும்... என்னை இந்த நிலைக்கு ஆளாக்கிய நீ உன் உயிரை விட வேண்டும்..." என்று

ஆக்ரோசமாய்க் கத்தியவளை ஆழ்ந்து பார்த்தவன்,

"அவ்வளவு தானே... கட்டாயம் என் உயிரை உனக்குத் தருகிறேன்... ஆனால் அதற்கு முன் நான் செய்ய வேண்டிய வேலைகள் கொஞ்சம் இருக்கு... அது முடிந்ததும் நான் என் உயிரை உனக்குக் கொடுக்கிறேன்... நீ குழந்தையை மட்டும் அழித்து விடாதே பேபி..." என்று கெஞ்சியவனை அவள் திகைப்பாய் விழி விரிய பார்த்திருந்தாள்...

அவளது வலதுகையை எடுத்து அதன் மீது தனது வலதுகையைப் பதித்தவன், "உன் மீது சத்தியமாக..." என்றவனைக் கண்டு அவள் விரக்தியுடன் உதட்டை பிதுக்கினாள்...

"என்னமோ என் மீது அக்கறை கொண்டவன் மாதிரி என் மேல் சத்தியம் எல்லாம் பண்ற...?"

"இது உன் மீதான அக்கறை இல்லை... குழந்தை மீதான அக்கறை..." என்றான் அவன் தெள்ளத்தெளிவாக...

"அதானே பார்த்தேன்..." என்றாள் அவள் அலட்சியமாக...

அவளது அலட்சியத்தில் அவன் பழைய சிம்மவிஷ்ணுவாய் நிமிர்ந்து நின்றான்...

"முடிவா என்ன தான் சொல்ற...?"

"அழிப்பது ஒன்றே என்னுடைய ஒரே முடிவு..." என்றாள் அவள் உறுதியாய்...

"ஓஹோ, அப்படியா... நல்லா கேட்டுக்கோ... நீ இந்தக் குழந்தையை அழிச்ச அடுத்த நொடி உன்னையும், உன் குடும்பத்தாரையும் உயிரோடு கொளுத்திருவேன்... அதை ஞாபகத்தில் வச்சுக்கோ..." என்று அவன் சிம்மமாய்க் கர்ஜிக்க...

"இது தான் நீ... அதனால் ரொம்ப ஸ்மார்ட்டாக எல்லாம் நடிக்க வேண்டாம்..." என்றாள் அவள் வெறுப்பான குரலில்...

"உனக்கும் அதே தான்... நான் ராட்சசன் என்றால், நீயும் ராட்சசி தான்..." என்று உறுமியவன்,

"இதை நீ எப்படிச் செய்கிறாய் என்று நானும் பார்க்கிறேன்..." என்று அவளை மிரட்டியவன் அறை கதவை திறந்து கொண்டு வெளியில் சென்றான்...

அவன் சென்றதும் அருந்ததி பாய்ந்து கொண்டு உள்ளே வந்தார்...

"நிஷா அவன் உன்னை ஒண்ணும் பண்ணலையே..."

"இல்லைம்மா..." என்றவள் தனக்குள் மூழ்கி போனாள்...

'ஏன் இவன் இப்படிப் படபடத்து விட்டு போகிறான்...? நான் குழந்தையை அழிக்கப் போவதாக யார் இவனிடத்தில் கூறியிருப்பார்கள்...?' என்று அவள் யோசித்துக் கொண்டிருந்தாள்...

மறுநாள் மாதாந்திர பரிசோதனைக்காக நிஷிலா மருத்துவமனை வந்திருந்தாள்... உடன் அவளது குடும்பத்தினர் அனைவரும் வந்திருந்தனர்... அதுவே அவளுக்குப் பெருத்த யோசனையைத் தந்தது... மருத்துவருக்காக அவள் காத்திருந்த போது சிம்மவிஷ்ணு அவள் முன் வந்து நின்றான்...

"நான் சொல்வதைக் கேள் நிலா..." என்றான் அவன் மன்றாடும் குரலில்...

"உனக்கான வினைப்பயனை நீ அனுபவிக்கும் நேரம் வந்துவிட்டது மிஸ்டர். சிம்மவிஷ்ணு..." என்றார் பத்ரிநாத் கடினமான குரலில்...

அவரது வார்த்தையைக் கண்டு கொள்ளாது அவன் அவளிடம், "நிலா நான் பேசுவது உன் காதில் விழுகிறதா இல்லையா...?" என்றான் சற்று குரலை உயர்த்தி...

"நீ எதுவும் பேச வேண்டாம்... போடா..." என்று பவித்ரன் அவனைத் தள்ளிவிட்டான்...

அதில் சிம்மவிஷ்ணு சற்று தடுமாறினாலும் கால்களைத் தரையில் அழுந்த ஊன்றி தன்னை நிலைப்படுத்திக் கொண்டவனின் விழிகள் நிஷிலாவை தவிர வேறு எதையும் பார்க்கவில்லை... அதனால் என்னவோ அவள் எழுந்து பவித்ரனிடம்,

"நான் பேசிக்கிறேன் அத்தான்..." என்று கூறிவிட்டு சிம்மவிஷ்ணுவை அழுத்தமாய்ப் பார்த்தாள்...

அப்போது, "அத்தான்..." என்றபடி ஹர்ஷவர்த்தினி அங்கே வந்து நின்றாள்...

அவளைக் கண்டு திகைத்த சிம்மவிஷ்ணு, "நீ எங்கே இங்கே...?" என்று எரிச்சலுடன் கேட்டான்...

"அப்பாவுக்கு மாதாந்திர செக்கப்புக்காக வந்தேன்... நீங்க இங்கே என்ன பண்றீங்க...?" என்றவள் அப்போது தான் அங்கு நின்று கொண்டிருந்த நிஷிலாவை பார்த்தாள்... அவள் அருகில் அமர்ந்திருந்த பவித்ரனையும் கண்டாள்... அவர்கள் இருவரையும் கணவன், மனைவி என்று நினைத்து கொண்டாள் அவள்...

"எத்தனை மாசம்...?" என்று கேட்டாள் ஆர்வத்துடன்...

"ஏழாவது மாசம்..." என்றாள் நிஷிலா மெதுவே...

"ஓ, வாழ்த்துக்கள்..." என்று அவளை வாழ்த்தியவள் சிம்மவிஷ்ணுவை சுட்டிக்காட்டி,

"இவங்க என் அத்தான்... கூடிய சீக்கிரம் நாங்க கல்யாணம் பண்ணிக்கப் போகிறோம்..."

ஹர்ஷவர்த்தினி கூறியதும் நிஷிலா கணவனை ஏறிட்டு பார்த்தாள்... அவனோ மானசீகமாகத் தலையில் கை வைத்தான்... அவளது உணர்வற்ற பார்வையில் இருந்து அவனால் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை...

"வாழ்த்துக்கள்..." என்ற நிஷிலா விறுவிறுவென அந்த நீண்ட வராந்தாவின் மறுகோடிக்கு நடந்தாள்...

வயிற்றின் பாரம் கூட அவளுக்குப் பெரியதாய் தோன்றவில்லை... அவளது மனம் அப்படியொரு பாரமாய்க் கனத்து இருந்தது... அங்கிருந்த ஜன்னல் வழியே வெளியே வேடிக்கை பார்த்தவளின் இதழ்கள் உணர்ச்சிவசப்பட்டதில் துடித்தது, விழிகள் கலங்கியது, முகமோ சிவந்து போனது...

பவித்ரன் அவள் பின்னால் செல்வதற்கு முன் சிம்மவிஷ்ணு அவளை நோக்கி ஓடினான்... ஹர்ஷவர்த்தினி அவனை ஆச்சிரியமாகப் பார்த்தாள்... அப்போது கூட அவளால் சிம்மவிஷ்ணுவை தவறாக நினைக்க முடியவில்லை...

"நிலா..." அவன் அழைத்தது அவளது காதில் விழுந்த போதும் அவள் திரும்பி பார்க்கவில்லை... ஏனோ அவளுக்குத் திரும்பி பார்க்க தோன்றவில்லை...

"கடைசியாய் ஒரு முறை யோசிச்சு முடிவெடு..." என்றவனை வெட்டும் பார்வை ஒன்றை பார்த்தவள்,

"எல்லாமே பொய் இல்லையா...?" என்றாள் வெறுமையான குரலில்...

"என்ன பொய்...?" என்றவனது விழிகள் கூர்மை அடைந்தது...

"நான், இந்தக் குழந்தை, என் கழுத்தில் நீ கட்டிய தாலி எல்லாமே பொய் இல்லையா...?" சுளீரென்று தாக்கிய அவளது வார்த்தையில் அவன் பேச்சற்று நின்றான்...

"நிஷிம்மா டாக்டர் வந்துட்டாங்க..." என்று பவித்ரன் அவளை அழைக்க... அவள் இயந்திரம் போல் அவனுடன் நடந்தாள்...

சிம்மவிஷ்ணு செய்வதறியாது அப்படியே நின்றிருந்தான்... எந்தத் துரோகத்திற்காக அவன் துரோகம் புரிந்தானோ அந்தத் துரோகம் இப்படி அவனையே திரும்ப வந்து தாக்கும் என்று அவன் கனவிலும் நினைக்கவில்லை...

'இவள் இவளது அத்தையை மாதிரி தோற்றத்தில் மட்டுமல்ல... குணத்திலும் அப்படித் தான் போலும்... நான்

தான் தவறாகக் கணித்து விட்டேன்...' எதிலோ தோற்று போன உணர்வுடன் அவன் அப்படியே ஓய்ந்து போய் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தான்...

"அத்தான்..." என்றபடி அருகில் வந்த ஹர்ஷவர்த்தினியை அவன் நிமிர்ந்து கூடப் பார்க்காது,

"இங்கிருந்து போய் விடு... எனக்கு வரும் ஆத்திரத்தில்..." அவன் ஆக்ரோசமாய்ப் பல்லை கடிக்கும் சத்தத்தில் அவள் பயந்து போய் அங்கிருந்து ஓடி விட்டாள்...

"இதற்குத் தான் சொல்வது யோசிக்காது ஒரு செயலில் இறங்க கூடாது என்று..." என்றபடி பத்ரிநாத் அங்கே வந்தார்...

"பத்திப்பா தப்பு மேல தப்பு பண்றீங்க..." என்றான் அவன் வலி நிறைந்த குரலில்...

அந்தக் குரல் அவரது மனதினை பாதித்த போதும், "இப்போது தான் நான் சரியாகச் செய்கிறேன்... ஒரு சிறு பெண்ணின் வாழ்க்கையை நேர் செய்கிறேன்..." என்றவரை அவன் உணர்விலாது பார்த்தான்...

"என்ன பார்க்கிற...? நிஷாவுக்கும், தீரனுக்கும் திருமணம் நடக்கவிருக்கிறது... நிச்சயம் உனக்கு அழைப்பு உண்டு..." என்றார் கேலி குரலில்...

அதற்கு அவன் ஒன்றும் பேசவில்லை... அமைதியாகக் கண்களை மூடி கொண்டான்... வாழ்க்கையே வெறுத்து போன ஒரு உணர்வு அவனிடம்... அப்போது நிஷிலாவின் குரல் நிசப்தமான அந்த இடத்தில் உரத்து ஒலித்தது...

"யாரை கேட்டு இந்த முடிவு எடுத்தீங்க...? எனக்கு என் குழந்தை வேண்டும்... என் குழந்தை வேண்டும்..." என்று அவள் சத்தம் போட்டு கத்தி அழுதாள்...

அதைக் கேட்டதும் சிம்மவிஷ்ணுவிடம் அவனது திமிர் மறுபடியும் வந்து குடிகொண்டது... கம்பீரமாக நிமிர்ந்து அமர்ந்தவன் பத்ரிநாத்தை நேர்கொண்டு பார்த்து,

"இப்போது என்ன சொல்றீங்க மிஸ்டர். பத்ரிநாத்...?" என்றான் கர்வமாய்...

நிஷிலாவின் மறுப்பு குரல் கேட்டு பத்ரிநாத்தின் முகம் இருண்டு போனது... அந்நேரம் மருத்துவர் அறையில் இருந்து வேகமாய் வெளியில் வந்தாள் நிஷிலா... அழுத விழிகளைத் துடைத்துக் கொண்டு வந்தவளின் கலங்கிய கண்கள் பாதையை மறைத்ததில் அவள் கால் இடறி கீழே விழ போனாள்... சிம்மவிஷ்ணு ஓடி வந்து அவளைத் தாங்கி கொண்டான்... அந்தக் கணம் அவள் அவனை இமைக்காது பார்த்தாள்... அவனும் அவளைப் பார்த்திருந்தான்... அடுத்த நொடி அவள் அவனது இறுகிய அணைப்பில் இருந்தாள்...

"தேங்க்யூ பேபி, தேங்க்யூ பேபி..." என்று அவனது வாய் ஓயாது முணுமுணுத்தது... அவனது விழிகளின் ஓரம் விழிநீர் துளிர்த்தது...

அவள் அவனது மனைவி தான்... அவனது குழந்தையைச் சுமக்கும் பெண்ணவள் தான்... ஆனால் இதுநாள் வரை அவன் அவளை ஒரு பெண்ணாய் மதித்தது கூடக் கிடையாது... ஆனால் இன்று பெண்ணவள் மீது அவனுக்கு மிகுந்த மரியாதை எழுந்தது... அது அவனது இறுகிய அணைப்பில் தெரிந்தது...

ஆண் ஒருவன் தன் பெண்ணவளை காதல் இல்லாது, காமம் இல்லாது அணைத்திருக்கிறான்... அதில் பெண்ணவள் மீதான மதிப்பும், பிரமிப்பும் மட்டுமே இருந்தது...

மனைவியான அவனது பெண்ணவள் முதன்முறையாக அவனுள் நல்லிதயம் கொண்ட ஒரு மனுசியாய் தனது பாதச்சுவட்டினை அழுத்தமாய்ப் பதித்தாள், அவளையும் அறியாது...!!!

"அவளின் மனிதாபிமானம்
உன்னைக் கொல்கிறதோ...?
உன் மறுமணம்
அவளைக் கொல்கிறதோ...?

உன் காதல் அவளையும்,
அவள் காதல் உன்னையும்
கொல்லும் போது...?
காதல் பிரவாகம் பொங்கி
கரையுடையுமோ...?
காவிய காதலாகுமோ...???"

கொல்லும்...!!!

## நிழல் : 14

"தேங்க்ஸ் பேபி..." என்று கூறிய சிம்மவிஷ்ணு நெகிழ்வான மனநிலையில் அணைத்திருந்த தனது மனைவியின் உச்சந்தலையில் முத்தமிட்டான்... அப்போது அவனது கைகள் அவளை இன்னும் இறுக்கமாய் அணைத்துக் கொண்டது...

அவன் கொண்ட குறிக்கோளில் வெற்றி பெறுவதற்காகப் பாதையை அமைத்து தந்த மனைவியவளை அந்தக் கணம் அவனுக்கு மிகவும் பிடித்துப் போனது... அன்னையைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் அவன் தன்னிடத்தில் நெருங்க விட்டது இல்லை... முதன்முறையாக மனைவியவளை அவனாகவே நெருங்கியிருக்கிறான்... இதுநாள் வரை உடலால் தீண்டிய மனைவியை இன்று அவன் மனதால் தீண்டியிருக்கிறான்...

ஏற்கெனவே அழுகையில் கரைந்து கொண்டிருந்த நிஷிலா இப்போது கணவனின் அணைப்பில் முற்றிலும் உடைந்தாள்... கிட்டத்தட்ட ஒன்பது மாதங்கள் அவளை அரவணைக்க ஆளின்றித் தனது துக்கத்தினைத் தன்னுள் போட்டு புதைத்துக் கொண்டு மனம் குமுறி கொண்டிருக்கிறாள்... அவளது அத்தை மகன் அவளுக்கு ஆறுதலாக இருக்கிறான் தான்... அது வெறும் வார்த்தையால், செயலால் மட்டுமே... இது போன்றதொரு அணைப்பை அவளது அன்னை கூட அவளுக்குக் கொடுக்கவில்லை... இல்லை அவள் அவரிடம் இருந்து ஒதுங்கி கொண்டாளோ என்னமோ...!

கணவனான சிம்மவிஷ்ணுவும் இத்தனை நாளில் ஒரு நாள் கூட அவளுக்கு ஆறுதலாய் இருந்தது இல்லை... பழிவாங்க மட்டுமே எண்ணியவன் பாவையவளின் மனதினை படிக்கத் தவறிவிட்டான்... இதோ இப்போது அவனையும் அறியாது அவனின் மன நெகிழ்வை தனது அணைப்பின் மூலம் அவளுக்கு உணர்த்திவிட்டான் போலும்... அதில் பெண்ணவள் மனமுடைந்து கதறினாள்...

"எல்லாம் உன்னால் தான்... நான் படும் இந்த அவஸ்தை எல்லாம் உன்னால் தான்... இந்த இழிநிலை உன்னால் தான்... நீ மட்டும் என் வாழ்க்கையில் வராம இருந்திருந்தா நான் நிம்மதியா இருந்திருப்பேன்... ஏன்டா என் வாழ்க்கையை நாசமாக்கின...? ஏன்டா இப்படிப் பண்ணினே...?"

ஒவ்வொரு வார்த்தைக்கும் அவள் அழுது கொண்டே அவனது நெஞ்சில் தனது மலர் கரம் கொண்டு அடித்தாள்... அவனோ தனது அணைப்பை விடாது புன்னகையுடன் அவளது அத்தனை அடிகளையும் பெற்றுக் கொண்டான்...

"இப்போ எதுக்குடா சிரிக்கிற...? நான் அழுறது உனக்குச் சந்தோசமா இருக்கா...?" என்று அதற்கும் எகிறியவள் அவனை இன்னும் வேகமாக அடித்தாள்... அவன் தடுக்காது அவளைப் பார்த்து புன்னகையுடன்,

"ச்சேச்சே, அப்படி எல்லாம் இல்லை பேபி..." என்றவனைக் கண்டு அவள் அடிப்பதை நிறுத்திவிட்டு கூர்ந்து பார்த்தாள்...

"உண்மை தான் பேபி... உனக்காக உயிரையும் கொடுக்கிறேன்னு சொல்லியிருக்கேன்... அப்படிப்பட்டவன் இந்த அடியை தாங்கிக்க மாட்டேனா...?" என்றவனது புன்னகை பெரிதாய் விரிந்தது...

"எனக்காகன்னு பொய் சொல்லாதே... உன் குழந்தைக்காகன்னு சொல்லு..."

"ம், அதுவும் சரிதான்..." அவள் கூறியது முற்றிலும் உண்மை என்பதால் அவன் மறுக்காது அதை ஏற்றுக் கொண்டான்...

"உனக்கு உன் குழந்தை முக்கியம்... என் வீட்டாருக்கு என் வாழ்க்கை முக்கியம்... ஆனா யாருமே என் மனசை பத்தி கவலைப்படலை..." என்றவளை அப்போது தான் புதிதாய்ப் பார்ப்பது போல் உற்று நோக்கினான் அவன்...

அவள் எப்போதும் அணியும் 'ஃப்ராக்' தான் அணிந்திருந்தாள்... நீண்ட கூந்தலை அள்ளி கொண்டை

போட்டிருந்தாள்... மருத்துவமனைக்கு வருகிறோம் என்பதற்காகக் கூட அவள் தன்னை அழகுப்படுத்திக் கொண்டு வரவில்லை... வெகுசாதாரணமாக அவள் இருந்தாள்... அழுதழுது அவளது முகம் எல்லாம் சிவந்து காணப்பட்டது... நாசியின் நுனி மிளகாய் பழம் போல் சிவந்திருந்தது... சிறு பிள்ளை ஒன்று பள்ளிக்கு செல்ல அடம்பிடித்து அழுவது போன்ற பாவனையுடன் நின்றிருந்தவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு தான் வந்தது...

கள்வனின் புன்னகையைக் காரிகை கண்டு கொண்டாளோ...? அவளது முகம் வேதனையில் கசங்கியது...

"என் பிழைப்பு உனக்குச் சிரிப்பா இருக்கா...? எனக்கு என் குழந்தை வேணும்..." என்றவளின் விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்தது...

அவளது கண்ணீருக்காகவா? இல்லை அவளது வார்த்தைக்காகவா? ஏதோ ஒன்றின் தாக்கத்தில் அவன் மீண்டும் அவளை இறுக அணைத்துக் கொண்டான்... இது அவனது குழந்தை என்று சற்று நேரத்திற்கு முன்பு வரை வார்த்தைக்கு வார்த்தை கூறியவள் இப்போது தன் குழந்தை என்று கூறுவது கண்டு அவன் இன்னமும் மனம் நெகிழ்ந்து போனான்...

மனைவியவள் அவன் பக்கம் இருக்கும்வரை அவன் அனைத்திலும் வெற்றிப் பெறுவான்... அந்த நம்பிக்கை அவனுக்கு இருந்தது... முன்பு எல்லாம் அன்னையைத் தவிர வேறு பெண்கள் மீது பெரிதாக நம்பிக்கை இல்லாதவன் இப்போது இந்தச் சிறு பெண் மீது அதீத நம்பிக்கை கொண்டான்...

கணவனின் நெஞ்சில் முகம் புதைத்திருந்த நிஷிலாவுக்கு அப்போது தான் அவனுடன் தான் நெருக்கமாக இருந்த கணங்களின் நினைவுகள் எழுந்து அவளை அக்னியில் குளிக்கச் செய்தது... அடுத்த நொடி அவள் அவனை வேகமாய் உதறி தள்ளினாள்... அவன் நினைத்திருந்தால்

அவளை இறுக்கி பிடித்திருக்க முடியும்... ஆனால் பெண்ணவளின் உணர்வுக்கு மதிப்பு கொடுத்து அவன் தனது கைகளை விலக்கி கொண்டான்...

"போ, இங்கிருந்து போய்விடு... என் முகத்தில் நீ முழிக்காதே..." என்று பெருங்குரலெடுத்து கத்தியவளை கண்டு அவனது புன்னகை மறையவில்லை...

"நிச்சயம் நான் போகத் தான் போகிறேன்... இங்கே இருந்து நான் என்ன பண்ண...? நான் வந்த வேலை சுபமாய் முடிந்துவிட்டது..." என்றவனைக் கொலைவெறியுடன் பார்த்தாள் அவள்...

"அவ்வளவு சுலபத்தில் நீ தப்பித்து விடலாம்ன்னு கனவு காணாதே... இனிதான் உனக்கு இருக்கு... உன்னை உயிரோடு கொல்கிறேன் பார்..." என்று அவள் கோபத்தில் சீறினாள்...

அவளது கோபத்தைக் கண்டு கொள்ளாது மீண்டும் அவளை அணைத்தவன் அவளது காதருகில், "நான் சொன்னதை நீ கேட்டால் என் உயிரையும் தருகிறேன்னு நான் உன் கிட்ட சொன்னது உனக்கு ஞாபகம் இல்லையா...? இனி நான், எனது உயிர் எல்லாமே உனக்கு மட்டுமே சொந்தம்... உனக்காக உயிரையே கொடுப்பேன்னு சொல்லும் நான், நீ என்னை உயிரோடு கொல்வதை ஏற்றுக் கொள்ள மாட்டேனா என்ன...? மனதார ஏற்றுக் கொள்கிறேன்..." என்று கூறியபடி விலகியவன்,

"இனி இந்த அடிமை உன் வசம்..." என்று அவன் மனைவியைப் பார்த்து கண்சிமிட்டி விட்டு புன்னகையுடன் அங்கிருந்து நகர்ந்தான்...

முகம் கொள்ளா புன்னகையுடன் இரு கைகளையும் பேண்ட் பாக்கெட்டில் விட்டபடி துள்ளல் நடையுடன் சென்று கொண்டிருந்தவனைப் பார்த்தபடி அவள் அப்படியே நின்றிருந்தாள்... அவ்வளவு தான் அவனது காரியம் முடிந்ததும் அவன் அவளைக் கை கழுவிவிட்டு சென்றுவிட்டான்... அன்றும் அப்படித்தான் குழந்தை

உண்டானதும் அவளை மறந்து சென்றான்... இதோ இன்றும் குழந்தைக்கு ஆபத்து இல்லை என்றதும் மீண்டும் அவளை மறந்து செல்கிறான்... அவனுக்கு என்றுமே அவள் முக்கியம் இல்லை... குழந்தை மட்டுமே முக்கியம்...

எதை எதையோ நினைத்தவளுக்குக் கழிவிரக்கத்தில் கண்ணீர் வரும் போலிருந்தது... ஆனால் மனதில் மூண்ட கோபத்துடன் அவள் கண்ணீரை அடக்கி கொண்டாள்...

இதை எல்லாம் ஹர்ஷவர்த்தினி பார்த்து கொண்டிருந்தாள்... சிம்மவிஷ்ணு வாழ்க்கையில் நிஷிலா என்கிற ஒரு பெண் இருப்பது கண்டு அவளுக்கு அத்தனை உவப்பாக இல்லை... அவளது மனம் கோபத்திலும், தாபத்திலும் சிக்கி தவித்தது... அவளை எப்படி அவனது வாழ்க்கையில் இருந்து அப்புறப்படுத்துவது என்று அவள் யோசிக்க ஆரம்பித்தாள்... அவள் மறந்தும் மீனாட்சியிடம் இதைப் பற்றிக் கூற விரும்பவில்லை... கூறினால் அடுத்த நொடி நிஷிலா சிம்மவிஷ்ணுவின் மனைவியாய் அந்த வீட்டின் மருமகளாய் கோலோச்சி விடுவாளே... ம்ஹூம், அது நடக்கக் கூடாது என்றே அவள் நினைத்தாள்...

பத்ரிநாத் யோசனையுடன் நிஷிலாவை பார்த்துக் கொண்டிருந்தார்... சிம்மவிஷ்ணு, நிஷிலாவுக்கு இடையில் புகுந்து பேச முயன்ற மகனை அவர் தடுத்து நிறுத்தியிருந்தார்... நிஷிலாவை காணும் போது அவருக்கு எதுவோ புரிவது போலிருந்தது...

"தீரா, நிஷாவை கூப்பிடு... வீட்டுக்கு போகலாம்..." என்று அவர் கூற... பவித்ரன் நிஷிலாவை நோக்கி சென்றான்...

"நிஷிம்மா வா போகலாம்..." என்க...

அவள் அமைதியாக அவனுடன் நடந்தாள்... அவனுக்குமே மாமன் மகளின் இந்த அவதாரம் புதிதாக இருந்தது... அவள் தன் கணவனை வெறுக்கிறாள்... ஆனால் அவள் அவன் கட்டிய தாலியை கழற்ற மாட்டேன் என்கிறாள்... அவனது குழந்தையை அழிக்க முடியாது என்கிறாள்... அதே சமயம் அவனுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டும்

என்றும் துடிக்கின்றாள்... சத்தியமாக அவளது மனதில் என்ன இருக்கிறது என்று அவனுக்குப் புரியவில்லை...

எல்லோரும் அமைதியாக வீடு வந்து சேர்ந்தனர்... தனது அறைக்குச் செல்ல முயன்ற நிஷிலாவை பத்ரிநாத் தடுத்து நிறுத்தினார்...

"இந்தக் குழந்தையை ஏன் அழிக்க வேண்டாம்ன்னு சொன்ன...?" கடுமையுடன் வினவியது அவரது குரல்...

அவரை நேருக்கு நேர் நிமிர்ந்து பார்த்தவள், "பெத்துக்கப் போறேன்னு அர்த்தம்..." என்றாள் உறுதியான குரலில்...

"குழந்தை வந்தால் உன் வாழ்க்கை மட்டும் அல்லாது உன் கேரியரையும் அது பாதிக்கும்..."

"ஏன் பாதிக்கப் போகிறது...?"

"தகப்பனை அடையாளம் காட்டாது குழந்தையைத் தனியே வளர்க்க முடியாது நிஷா... சமுதாயத்தில் எழும் பேச்சுக்களை உன்னால் தாங்கி கொள்ள முடியாது... நீ பூ போன்ற மனமுடையவள்..."

"நாட்டில் எத்தனையோ சிங்கிள் மதர்ஸ் இல்லையா...? அதில் நானும் ஒருத்தியா இருந்துட்டுப் போகிறேன்... என் குழந்தைக்கு அம்மா நான் மட்டும் போதும்... அப்பா அவன் வேண்டாம்..." என்றாள் அவள் நிமிர்வாய், முடிவாய்...

"ஆனா எங்களால் உன்னை அப்படி விட முடியாது நிஷா... உனக்கு உன் குழந்தை முக்கியம்... எங்களுக்கு எங்க குழந்தையான உன் வாழ்க்கை முக்கியம்... உன் விருப்பப்படி நீ குழந்தை பெத்து வளர்த்துக்கோ... அது போல் எங்க விருப்பப்படி நீ கல்யாணம் பண்ணிக்கணும்..."

அதைக் கேட்டு அவளது மனமும், மேனியும் அதிர்ந்தது...

"திரும்பத் திரும்பக் கல்யாணத்தைப் பத்தி பேசாதீங்க... என் வாழ்க்கையில் கல்யாணம், கணவன் எல்லாம் கடந்து போன ஒன்று... அதை மீண்டும் நினைத்து பார்க்க கூட நான் விரும்பலை... எனக்கு இந்தக் குழந்தை மட்டும்

போதும்... உங்களுக்கு நான் பாரமாக இருக்கேன்னு நீங்க நினைச்சீங்கன்னா நான் வீட்டை விட்டு வெளியில் போகிறேன்..."

"நிஷிம்மா என்ன வார்த்தை பேசுற...? உனக்காக நான் இருக்கிறேன்... நீ ஏன் இப்படிக் கவலைப்படுற...?" பவித்ரன் ஆறுதலாய் அவளிடம் கூறியவன் தந்தையைக் கோபமாய்ப் பார்த்தான்...

"டாட், அவளுக்குப் பிடிக்கலைன்னா விடுங்களேன்... அவள் விருப்பப்படி இப்படியே இருந்துட்டு போகட்டும்... என் ஆயுசு இருக்கும் வரை நான் நிஷியை பத்திரமா பார்த்துக்கிறேன்... அது கணவனாகத் தான் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று எந்த அவசியமும் இல்லை... அத்தை மகனாக அவளைக் கடைசி வரை என்னால் பார்த்துக் கொள்ள முடியும்... இனி இந்த விசயத்தை இத்தோடு விடுங்க..."

பவித்ரன் ஒருநாளும் தந்தையை எதிர்த்து பேசாதவன் இன்று எதிர்த்துப் பேசினான்...

"நீங்க ரெண்டு பேரும் சின்ன வயசு அதான் இப்படித் துள்ளுறீங்க... நான் வாழ்க்கையை வாழ்ந்து பார்த்தவன் அதனால் சொல்கிறேன்... உங்க ரெண்டு பேருக்குமான கல்யாணம் என்பது முடிவு செய்யப்பட்ட ஒன்று... அது குழந்தை இருந்தாலும் சரி, இல்லை என்றாலும் சரி நடந்தே தீரும்... அடுத்த முகூர்த்தத்தில் உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம்... ரெண்டு பேரும் எதையும் யோசிக்காம அதற்குத் தயாரா இருங்க..." என்றார் பத்ரிநாத்...

அவ்வளவு தான் நிஷிலா கோபத்தில் பொங்கிவிட்டாள்...

"பிடிக்கலைன்னா விட வேண்டியது தானே... நீங்க எல்லோரும் செஞ்ச தப்புக்கு நான் தண்டனை அனுபவிக்கிறேன்... அப்படித்தான் அவன் சொன்னான்... இல்லைன்னா அவனுக்கும், எனக்கும் என்ன சம்பந்தம்...? அவன் குழந்தை எதுக்கு என் வயிற்றில் வளருது...? எல்லாம் உங்க எல்லோராலும் தான்... நீங்க என்ன பாவம்

பண்ணினீங்களோ...? அது என் தலையில் வந்து விடிஞ்சிருக்கு..." என்று கத்தியவள் அழுது கொண்டே அங்கிருந்து விரைந்து சென்றுவிட்டாள்...

பத்ரிநாத் யோசனையுடன் அவளைப் பார்த்தபடி நின்றிருந்தார்...

"பார்த்தீங்களா பத்ரி, நல்லதுக்குக் காலம் இல்லை... நாம என்ன பாவம் பண்ணினோம்ன்னு கேட்டுட்டு போகிறாள்...?" என்று இளவரசி பொருமினார்...

"அவள் என்னைக் கேட்கலை... உங்க மூணு பேரையும் தான் கேட்டுட்டு போகிறாள்... ஏனெனில் சிம்மவிஷ்ணுவுக்கு எங்க மூணு பேர் மீதும் எந்தக் கோபமும் கிடையாது... அது அவனே என்னிடம் சொன்னது... அப்படி என்றால் அவனது கோபம் எல்லாம் உங்க மூணு பேர் மீது தான்... சொல்லு வசி, உன் அண்ணன்களுடன் சேர்ந்து நீ எதுவும் தவறு செய்தாயா...? இல்லை என்றால் அவன் ஏன் இப்படிப் பண்ண வேண்டும்...?"

இன்று மருத்துவமனையில் சிம்மவிஷ்ணுவின் மற்றொரு பக்கத்தைப் பார்த்ததாலோ என்னமோ அவர் சிங்கமாய் மனைவியிடம் கர்ஜித்தார்...

"என்னைப் பத்தி உங்களுக்குத் தெரியாதா...? நான் அப்படித் தப்பு பண்ணும் ஆளா...?" நீலிக்கண்ணீர் விட்ட மனைவியின் கண்ணீரை உண்மை என்று நம்பிவிட்டார் அந்த நல்ல மனிதர்...

"அப்போ தவறு உன் அண்ணாக்கள் பக்கமா...?"

"பத்ரி, யாரோ ஒருத்தன் சொல்றதை கேட்டு நீ இப்படி எங்களைச் சந்தேகப்படுறது சரியில்லை..." என்று செல்வரத்தினம், மணிபாரதி இருவரும் கூற... அவர் யோசனையுடன் அவர்களைப் பார்த்தார்...

"அவனைப் பார்த்தால் எனக்கு யாரோ ஒருவன் போல் தோன்றவில்லை... அவனைப் பார்க்கும் போது எல்லாம் என் நெருங்கிய உறவு போல் எனக்குத் தோன்றுகிறது...

அவனது பேச்சு, பார்வை எல்லாம் அவன் எனக்குச் சொந்தம் என்பதைச் சொல்லி கொண்டே இருக்கிறது... ஆனா எந்த விதத்தில் என்று தான் எனக்குத் தெரியவில்லை...?"

அந்தக் கணம் அவரது காதில் 'பத்திப்பா' என்றழைக்கும் சிம்மவிஷ்ணுவின் குரல் ஒலித்தது... ஏனோ அவன் அப்படிக் கூப்பிடுவது அவருக்குமே பிடித்திருந்ததால் அவர் அதைப் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை... முன்பு ஒரு உறவு அவரை இப்படித்தான் 'பத்திப்பா' என்றழைக்கும்... ஆனால் அந்த உறவு ஆரம்பத்திலேயே கனவாகி போய்விட்டது... அதனால் தான் அவரால் கனவோடு நனவினை சம்பந்தப்படுத்த முடியாது தவித்தார்...

பத்ரிநாத் கூறியதை கேட்டு மூன்று பேரும் ஒருவருக்கொருவர் அச்சத்துடன் பார்த்து கொண்டனர்...

"நிஷா விசயம் தவிர்த்து அவன் நல்லவனே... அதனால் தான் எனது சந்தேகம் உங்களை நோக்கி திரும்பியிருக்கிறது..." என்றார் அவர் உறுதியான குரலில்...

சிம்மவிஷ்ணு மீதான தந்தையின் நம்பிக்கையைப் பவித்ரன் ஆவென ஆச்சிரியத்துடன் பார்த்தான்...

"சரி நாங்க தப்பானவர்களாகவே இருந்துட்டுப் போகிறோம்... அதற்காக அவன் நிஷாவுக்குச் செய்தது சரின்னு ஆகிவிடுமா...?" இளவரசி ஆத்திரத்தில் கொதித்தார்...

"நிச்சயம் சரியாகாது தான்..." என்று உண்மையை ஒத்துக் கொண்டார் பத்ரிநாத்...

"அதற்கு அவனுக்கு என்ன தண்டனை கொடுக்கப் போறீங்க...?" என்ற மனைவியைக் கண்டு மர்மமாய்ச் சிரித்தவர்,

"அது கொடுக்கும் போது நீயே தெரிந்து கொள்வாய் வசி..."

"என்னிடம் சொல்ல கூடாதா பத்ரி...?" இளவரசியின் குரல் குழைந்து வந்தது... எதிரியின் அழிவை எதிர்நோக்கும் மகிழ்ச்சி முளைத்தது அவருள்...

"அது சஸ்பென்ஸ்..." என்று அவர் சிரித்துக் கொண்டே நகர்ந்துவிட்டார்...

மறுநாள் எதுவுமே நடவாதது போல் சிம்மவிஷ்ணு பத்ரிநாத்தை அவரது அலுவலக அறையில் சந்தித்தான்...

"குட்மார்னிங் பத்திப்பா..." என்றான் அவன் புன்னகையுடன்...

"குட்மார்னிங் விஷ்ணு... உட்கார்..." என்றபடி அவர் எதிரில் இருந்த இருக்கையைக் கைக்காட்டினார்... அவர் 'விஷ்ணு' என்றழைத்ததில் அவன் விழிகள் மின்ன இருக்கையில் அமர்ந்தான்...

"என்ன விசயம் சொல்லு...?"

"நீங்க கேட்டிருந்த மெசின்ஸ் கொட்டேசன் கொண்டு வந்திருக்கிறேன்... உங்களுக்கு எது ஓகேயோ அதை நீங்க செலக்ட் பண்ணுங்க..." தனது கையிலிருந்த கோப்பை அவரிடம் கொடுத்துவிட்டு அவன் நாற்காலியில் சாய்ந்தமர்ந்தான்...

"இதில் எனக்கான நன்மை இருக்கும்ன்னு நான் எப்படி நம்புவது...?" என்றவரை கண்டு அவனது விழிகள் கூர்மையடைந்தது...

"நேற்று நான் உனக்குச் செய்த கெடுதலுக்கு நீ பதிலுக்கு எனக்குக் கெடுதல் செய்ய நினைத்தால்...?"

அவரது பேச்சு கேட்டு அவனது முகத்தில் புன்னகை விரிந்தது...

"நீங்க செய்ய நினைத்தது கெடுதல்ன்னு உங்க வாயால் ஒத்துக்கிட்டீங்களே... அதுவே எனக்குப் போதும்... தப்பை உணர்ந்த பின் அதில் தண்டிப்பதற்கு என்னயிருக்கிறது...?"

என்று அமர்த்தலாகக் கூறியவன் பின்பு முகம் மென்மையுற,

"இது தான் நீங்க... உங்களால் யாருக்கும் கெடுதல் நினைக்க முடியாது... அப்படியிருந்தும் நீங்க அந்த முடிவை எடுத்து இருக்கீங்கன்னா நிச்சயம் அது நிலாவோட வாழ்க்கைக்காகத் தான் இருக்கும்... என்னைப் பழிவாங்குவதற்காக அல்ல... அதில் நூறு இல்லை இருநூறு சதவீதம் எனக்கு உங்க மேல் நம்பிக்கை இருக்கு... உங்களை நானறிவேன்..." என்று பாசம் கலந்த குரலில் கூறியவனைக் கண்டு அவரது மனம் சிறிது அசைந்தது... ஆனாலும் அவன் செய்த காரியம் அவரது மனதினை இளக்குவதாய் இல்லை...

"அப்போ தவறை உணர்ந்தால் தண்டிக்கக் கூடாதுன்னு சொல்ற... அப்படித் தானே...?" அவரின் வார்த்தையில் அவனது முகம் மாறியது...

"அது தவறு செய்பவர்களைப் பொறுத்து இருக்கிறது... அவர்கள் நல்லவர்களா? இல்லை கெட்டவர்களா என்பது மிகவும் முக்கியம்..."

"விஷ்ணு, நீ நல்லவனா? கெட்டவனா?" அவரது வார்த்தையில் அவனது உதடுகளில் புன்னகை தொற்றிக் கொண்டது...

"உங்களுக்கு நான் நல்லவன்... நிலாவுக்கு நான் கெட்டவன்... இப்போது நான் யார்ன்னு நீங்க தான் சொல்லணும்...?"

தனது தவறை தைரியமாக ஒத்துக் கொண்டு கேள்வியை மீண்டும் தன்னிடம் திருப்பும் அவனைக் கண்டு அவர் வியப்படைந்தார்...

"கூடிய சீக்கிரம் இதுக்குப் பதில் சொல்கிறேன்..." என்றவர் கையிலிருந்த கோப்பை பார்க்க ஆரம்பித்தார்...

அவன் இமைக்காது அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்... அவருடன் அவன் இருந்த காலம்

பொற்காலம்... எத்தனை சந்தோசமாக அவன் அவருடன் வாழ்ந்து வந்தான்... அவரும், அவனும் மட்டுமான தனி உலகில் நிம்மதியாய்... யார் கண்பட்டதோ ஒரே நாளில் எல்லாம் மாயமாகி போனது... வேறு யார்...? மேற்கொண்டு சிந்திக்கப் போனவனின் சிந்தனையைப் பத்ரிநாத்தின் குரல் தடுத்தது...

"நான் நிலா இல்லை..." என்று அவர் நமட்டு சிரிப்புடன் கூறியபடி அவனைக் கேலியாய் பார்த்தார்...

அவரது வார்த்தைகளில் அவனது முகத்தில் வெட்கம் வந்து குடி கொண்டது... அவன் லேசாக முகம் சிவக்க,

"நீங்க பத்திப்பான்னு எனக்கு நல்லா தெரியும்..." என்று தலையைக் குனிந்து கொண்டு முணுமுணுத்தான்...

அதைக் கேட்டு வாய்விட்டு சிரித்தவர் பின்பு கோப்பில் இருந்து சிலவற்றைத் தேர்ந்தெடுத்து, "இதையே ஃபைனல் பண்ணிரு விஷ்ணு..." என்றார்...

"இப்போது என் மேல் நம்பிக்கை வந்துவிட்டதா...?"

"உன் மேல் நம்பிக்கை வைத்து தானே இனி நான் பல காரியம் பண்ண போகிறேன்..."

"என்ன சொல்றீங்க...?" அவன் புரியாது அவரைப் பார்த்தான்...

"இனி தொழிலில் உன்னை நம்பித்தானே பல காரியங்களில் இறங்க போகிறேன்... அதைச் சொன்னேன்..." என்றவரை கண்டு நிம்மதியுற்றவன் நாற்காலியில் இருந்து எழுந்தான்...

"விரைவில் சந்திப்போம் விஷ்ணு..."

அதைக் கேட்டு சிம்மவிஷ்ணு அப்படியே நின்றான்... பின் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "கட்டாயம் சந்திக்கலாம் பத்திப்பா... உங்களுக்கு இல்லாத உரிமையா...?" என்று புன்னகையுடன் கூறியவன் சிறு தலையசைவுடன் அவரிடம் இருந்து விடைப்பெற்று அங்கிருந்து வெளியேறினான்...

பத்ரிநாத் வழக்கம் போல் யோசனையில் ஆழ்ந்தார்... தான் எடுத்த காரியம் நல்லபடியாக முடியும் வரை அவரது இந்த யோசனை தொடர்ந்து கொண்டே இருக்கும்...

*******************

"நிஷா, இங்கே வாம்மா..."

மாலையில் பயிற்சி வகுப்பு முடிந்து வீட்டிற்குள் நுழைந்தவளை பத்ரிநாத் அழைத்தார்...

"என்ன மாமா...?"

"முதலில் உட்கார்..." என்று அவளைத் தன்னருகில் சோபாவில் அமர வைத்தவர் அவள் கையில் ஒரு கவரை கொடுத்து,

"பிரிச்சு பார்..." என்றார்...

அழகான அடர் பச்சை நிறத்தில் தங்க சரிகை இழையோட அருமையாக இருந்தது அந்தப் பட்டுப்புடவை... கூடவே புதிதாய் வைர நகைகளும் அதில் இருந்தது...

"இதெல்லாம் எதுக்கு மாமா...?" என்று அவள் புரியாது கேட்டாள்...

"உன் கல்யாணத்துக்கு..." என்றார் அவர் தீவிரமான குரலில்...

அதைக் கேட்டு அவள் திகைப்புடன் சட்டென்று எழுந்து நின்றுவிட்டாள்... அந்தக் கணம் சிம்மவிஷ்ணுவுடனான திருமணம் அவளது நினைவில் எழுந்தது... அதில் அவள் வியர்த்து விறுவிறுத்து போனாள்...

"வேண்டாம்..." என்று அவள் முடிவாய் மறுத்தாள்...

"இது எங்களோட முடிவு... அதனால் எதிர்த்துப் பேசாமல் நாங்க சொல்றதை கேளு..." என்று அதிகாரமாய்க் கூறியவர் அங்கிருந்து எழுந்து சென்றுவிட்டார்...

அங்கு நின்றிருந்த பவித்ரனை அவள் பாவமாகப் பார்த்தாள்... அவன் ஆறுதலாக அவள் தோளில் கை வைத்து,

"நம்மை மீறி எதுவும் நடந்துவிடாது... நான் தாலி கட்டாம இந்தக் கல்யாணம் நடக்காது... அது போல் நீ சம்மதிக்காமல் இந்தக் கல்யாணம் நடக்காது... அதனால் நீ நிம்மதியா ரெஸ்ட் எடு... போ நிஷிம்மா..." என்று அவளைச் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தவன் நேரே தந்தையைக் காண சென்றான்...

"என்ன பண்றீங்க டாட்...? அவளுக்கு விருப்பம் இல்லைன்னா விட்டு விட வேண்டியது தானே..."

"அவளுக்குச் சொன்னது தான் உனக்கும்... வேறு வேலையிருந்தால் போய்ப் பார் தீரா..." என்று அவர் தனது பேச்சை முடித்துக் கொண்டார்... அவன் கோபமாக அங்கிருந்து சென்றான்...

அறைக்கு வந்த நிஷிலா தனக்குள் தவித்துப் போனாள்... என்ன செய்து இந்தத் திருமணத்தை நிறுத்துவது என்று அவளுக்குத் தெரியவில்லை... அவள் தனக்குள் குழம்பி போய்த் தவித்தாள்...

அன்றிரவு தூக்கத்தில் அவளுக்கும், பவித்ரனுக்கும் திருமணம் நடப்பது போலவும், அதே போல் சிம்மவிஷ்ணுவுக்கும், அந்தப் பெயர் அறியா பெண்ணிற்கும் (ஹர்ஷவர்த்தினி) திருமணம் நடப்பது போலவும் அவள் கனவு கண்டு பயந்து அலறியபடி எழுந்தமர்ந்தாள்...

இரண்டுமே அவளது நினைவிற்கு எதிரானது... இந்த இரு திருமணங்களால் அவள் நினைப்பது நடப்பதற்கான சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவு... சிம்மவிஷ்ணுவுக்கும், அவளுக்குமான உறவை உறுதிப்படுத்துவது குழந்தை என்றால், அவன் மீதான அவளது உரிமையை நிலைப்படுத்துவது அவனுடனான திருமணம் அல்லவா... அது செல்லாது போனால் இந்தக் குழந்தை, அவள் போட்ட

திட்டம் எல்லாம் பாழாகி போய்விடுமே... என்ன செய்வது என்று தெரியாது அவள் மழலை போல் மலங்க மலங்க விழித்தாள்...

மறுநாள் பயிற்சி வகுப்பு முடிந்து அவள் வெளியில் வந்த போது சிம்மவிஷ்ணு அவளுக்காகக் காத்திருந்தான்... அவனைக் கண்டதும் அவளது விழிகள் திகைப்பாய் விரிந்தது... அன்று பவித்ரன் அழைக்க வந்த போது தன்னை யாரும் தவறாக நினைப்பார்களோ என்றெண்ணி அக்கம்பக்கம் பார்த்தவள் இன்று எந்தவித உறுத்தலுமின்றி அவனை நோக்கி வேகமாய் நடந்து வந்தாள்... அவளது வரவினை உணர்ந்து அவனும் அவளை நோக்கி விரைந்து வந்தான்...

"எதுக்கு இத்தனை வேகம்...? நீ கீழே விழுந்து குழந்தைக்கு ஏதாவது ஆகிவிட்டால்...?" அவன் கோபமாய் அவளை அதட்டினான்...

அதைக் கேட்டு அவளது கண்களில் முணுக்கென்று கண்ணீர் எட்டிப்பார்த்தது... அதே சமயம் குழந்தை மீதான அவனது அக்கறை மயிலிறகு போல் அவளது மனதினை வருடி சென்றது... இந்தக் குழந்தை மீதான அவனது அக்கறைக்கு என்ன காரணம் இருந்த போதும் இந்த நொடி நொந்திருந்த அவளது மனதிற்கு அவனது வார்த்தைகள் இதத்தை அளித்தது என்னவோ உண்மை...

"என்னைத் திட்டுறதுக்காகவே வேலை மெனக்கெட்டு கிளம்பி வருவியோ...?" என்று அவள் கோபமாய் முணுமுணுத்தபடி அவனை விட்டு விலகி நடந்தாள்...

"ஹா ஹா..." என்று வாய்விட்டு சிரித்தவன்,

"உன்னைத் திட்டுறதுக்கு வரலை... உன்னைப் பார்க்கத்தான் வந்தேன்..." என்றான் அவன் புன்னகையுடன்...

"இது நம்பும்படியாக இல்லையே..."

"சரி குழந்தையைப் பார்க்க வந்தேன் போதுமா...?" என்றான் அவன் சமாதானமாக...

"இது நம்பும்படியாக இருக்கிறது..." என்றாள் அவள் அமர்த்தலாக...

"எப்படியிருக்க...?" என்று கேட்டவனைத் திரும்பி பார்த்தவள்,

"எதுக்கு...? என் நிம்மதியை கெடுக்கவா...?" என்றாள் வெடுக்கென்று...

"ச்சூ, என் இலக்கு நீயில்லைன்னு நான் சொன்னதாய் எனக்கு ஞாபகம்..."

"யாரையோ தாக்க என்னை அம்பாகப் பயன்படுத்தி விட்டாய்... ஆனா தாக்கப்பட்டவர்களுக்கு வலித்ததை விடத் தாக்கிய எனக்குத் தான் அதிகம் வலிக்கிறது..." என்று கூறியவளின் விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்தது...

அவன் அமைதியாக அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்... அவனது செயல் அவனைப் பொறுத்தவரை சரி... ஆனால் அவளைப் பொறுத்தவரை தவறு... அவரவர் நியாயம் அவரவருக்கு...

"ஆண் உனக்கு எங்கே என் பிரச்சினை புரிய போகிறது... போ, இங்கிருந்து போ..." அவள் அடக்கப்பட்ட கோபத்தில் பல்லை கடித்துக் கொண்டு கூறினாள்...

"உனக்கு என்ன பிரச்சினை...? என்னிடம் சொல்..." என்றான் அவன் தன்மையாக...

"நீ தான் எனக்குப் பிரச்சினை..."

அவளது வார்த்தையில் கோபமுற்றவன், "நான் என்னடி பிரச்சினை பண்றேன்...? உன்னை விட எனக்கும் தான் அதிகப் பிரச்சினை இருக்கிறது... அதுக்காக உன்னை மாதிரியா நான் புலம்பிக்கிட்டு இருக்கேன்..." என்று எகிறினான்...

அவனது கோபத்தில் பயத்தில் விழிவிரித்தவள் மெல்ல அவனிடம், "என்னை உன்னுடன் கூட்டிக்கிட்டு போறியா...?" என்று பரிதாபமாகக் கேட்க...

அநீதி இழைத்தவனிடமே நீதி கேட்டு போவது போலிருந்தது அவளது வார்த்தைகள்... அதில் அவன் திகைத்து போய் அவளைப் பார்த்தான்... அவனது திகைப்பை அவள் வேறு மாதிரியாக எடுத்து கொண்டாள்...

"உன்னைப் பொறுத்தவரையில் நான் விபச்சாரி தானே... அப்போ இந்த விபச்சாரி வயிற்றில் வளரும் குழந்தை பற்றிய கவலை உனக்கு எதுக்கு...? நான் மடச்சி மாதிரி ஏதோ சொல்லி விட்டேன்... என்னை மன்னித்துவிடு..." என்றவள் அவனது முகம் பார்க்காது தங்களது வீட்டுக் கார் வருகிறதா? என்று சாலையில் தனது கவனத்தைப் பதித்தாள்...

அன்று அவன் கூறிய அதே வார்த்தை தான்... ஆனால் இன்று அந்த வார்த்தை அவனை உயிரோடு கொல்கிறதே... கத்தியின்றி, இரத்தமின்றி ஒருவரை கொல்ல முடியுமோ...? இதோ பெண்ணவள் தனது வார்த்தையால் அவனை உயிரோடு மரணிக்கச் செய்துவிட்டாளே...!!!

"யுத்தகளத்தில் ஆயுதமேந்தி நிற்பவனிடம்
நிராயுதபாணியாய் எதிரி அகப்பட்டால்?
உயிர் கொல்ல செய்யுமே தவிர,
உயிர் கொள்ளச் செய்யாது...
மன்னவன் மங்கையவள் மனம்
கொல்வானா? கொள்வானா?
கொண்டால் பெண்ணவள் வாழ்வாள்,
கொன்றால் பெண்ணவள் சாவாள்,
வாழ்வோ, சாவோ உன் கையில்...
ராட்சசனாய் உயிர் வதைப்பாயா?
ரட்சகனாய் உயிர் ரட்சிப்பாயா...???"

கொல்லும்...!!!

## நிழல் : 15

கழிவிரக்கமா? கோபமா? என்று பிரித்தறியா உணர்வுகளுக்கு இடையில் சிக்கி தவித்த நிஷிலா தனது கையிலிருந்த புத்தகத்தின் மீது போட்டிருந்த காகித அட்டையைப் பிடித்து விரல்களால் கிழித்துக் கொண்டிருந்தாள்... அவளது இதழ்களோ கோபமாக எதையோ முணுமுணுத்துக் கொண்டிருந்தது... அவளது விழிகளிலோ விழிநீர் கீழே விழவா? வேண்டாமா? என்று அவளது மனதினை போன்று இரண்டுங்கெட்டானாய் சிந்தித்துக் கொண்டிருந்தது...

அவள் பக்குவம் அடைந்த பெரிய பெண் அல்ல... இன்னமும் பக்குவம் அடையாத பருவ பெண்... அதுவும் பதின்பருவத்தைத் தாண்டாத சிறு பெண்... அதனால் தான் அவளால் எந்தவொரு முடிவையும் தெளிவாகச் சிந்தித்து எடுக்க முடியவில்லை...

தன்னைத் துன்புறுத்திய கணவன் மீது கோபம் கொண்ட அதே நிஷிலா தான் இப்போது அவனிடம் தன்னை அழைத்துச் செல்லுமாறு கேட்கிறாள்... அவனுக்குத் தண்டனை வாங்கித் தர வேண்டும் என்று துடிக்கும் அதே நிஷிலா தான் இப்போது அவன் மீது நம்பிக்கை கொண்டு அவனுடன் செல்லவிழைகிறாள்... ஏன் இந்த மாற்றம் அவளுக்கு அவள் மீதே எரிச்சல் வந்தது...? அவனைப் பற்றி முழுதாகத் தெரிந்திருந்தும் அவள் அப்படிக் கேட்டது தவறு என்று தோன்றியதால் தான் அவனை வார்த்தையால் கடித்துக் குதறிவிட்டாள்...

'இது என் குழந்தை... இதை எப்படிப் பாதுகாக்க வேண்டும் என்று எனக்குத் தெரியும்...' என்று விழி கலங்க யோசித்தவளுக்கு அப்போது தான் அது உறைத்தது...

அவள் எதற்காக அவனை நாடினாள் என்று... அவன் ஒருவனால் மட்டுமே தன் குழந்தையைக் காப்பாற்ற முடியும் என்று நினைத்து விட்டாள் போலும்... ஆனால் இந்தக் குழந்தையை வைத்து அவன் தன்னைக் குற்றுயிராக்க

முயல்வதை அவள் எப்படி மறந்து போனாள்...? மனதுக்கு மிகவும் பாரமாக இருந்தது...

இந்தக் காலக்கட்டத்தில் கர்ப்பிணி பெண்களுக்கு வரும் மனஅழுத்தம் அவளுக்கும் வந்தது...

நிஷிலாவின் வார்த்தைகளில் திகைத்து போய் நின்றிருந்த சிம்மவிஷ்ணு தன்னைச் சமாளித்துக் கொண்டு அவள் அருகே வந்தான்... அவளது செய்கை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது... அவளது கையைத் தட்டிவிட்டான்...

"இது என்ன கெட்ட பழக்கம்...?" என்றான் அதட்டலாய்...

"என் நோட்டு... என் கை... நான் கிழிப்பேன்... உனக்கு என்ன வந்தது...?" சூடாய் பதிலடி கொடுத்தவளின் கைவிரல் மீண்டும் அதே வேலையைச் செவ்வனே செய்தது...

"இதைத் தான் படிச்சு கிழிப்பதுன்னு சொல்றாங்களோ...?" அவனது குரலில் அத்தனை கேலி இருந்தது...

"நான் எப்படிப் படிப்பேன்னு உனக்கு என்ன தெரியும்...?"

"நீ என்ன அவ்வளவு பெரிய படிப்ஸ்சா...?"

"இல்லையா பின்னே... நான் டாக்டருக்குப் படிக்கப் போகிறேன்..." என்றவளை அவன் ஆச்சிரியமாகப் பார்த்தான்...

"அப்போ நீ பெரிய படிப்ஸ் தான்... ஒத்துக் கொள்ள வேண்டிய விசயம் தான்..." என்றவனைக் கரை கட்டிய விழிகளுடன் ஏறிட்டவள்,

"இப்போ நான் மெடிக்கல் ஃபர்ஸ்ட் இயர் படிக்க வேண்டியது... எல்லாமே உன்னால் பாழாகி போச்சு..." என்று அவனைக் குற்றம் சாட்டினாள்...

"நீ இப்படி... இதுன்னு எனக்குத் தெரியாதே பேபி..." என்றான் அவன் தடுமாற்றத்துடன்... சிறிது குற்றவுணர்வு அவனுள் எட்டிப்பார்த்ததோ...?

"உனக்கு என்ன தான் தெரியும்...? அடுத்தவங்களை நல்லா கஷ்டப்படுத்த தெரியும்... நீயெல்லாம் படிச்சிருந்தால் தானே படிப்பை பத்தி தெரிஞ்சிக்கிறதுக்கு... நீ மழைக்குக் கூட ஸ்கூல் பக்கம் ஒதுக்கியிருக்க மாட்ட... பட்டிக்காட்டான் உனக்குப் படிப்பை பத்தி என்ன தெரியும்...?" என்றவள் கோபத்துடன் அவனை உறுத்து விழித்தாள்...

"ஆமாம், ஆமாம்... நான் பட்டிக்காட்டான் தான்... மழைக்குக் கூட ஸ்கூல் பக்கம் ஒதுங்காதவன் தான்... எனக்கு ஒன்றும் தெரியாது தான்... நீ வேணும்ன்னா எனக்குச் சொல்லி கொடுக்கிறியா...?" என்றவனின் நக்கலில் அவள் அவனை உற்று கவனித்தாள்...

எப்போதும் அணியும் வெள்ளை முழுக்கை சட்டை, கருப்புப் பேண்ட் தான் அவன் அணிந்திருந்தான்... ஆனால் இப்போது அவனது தோற்றம் முற்றிலும் மாறுபட்டுக் காணப்பட்டது... இரண்டு மாதங்களுக்கு முன் பார்த்தவன் இவன் இல்லை... 'ஸ்டைலிஷ் லுக்' என்று சொல்வோமே அப்படியொரு அழகான தோற்றத்தில் அவன் இருந்தான்... இத்தனை நாள் இதை எப்படி அவள் கவனிக்காமல் விட்டாள்? என்று அவள் தன்னையே நொந்து கொண்டாள்...

"நீ கேட்கும் குருதட்சணை கொடுக்கிறேன்... பயப்படாதே..." என்று அவன் நமட்டு சிரிப்புடன் கூற...

"நீ பொய் தானே சொல்கிறாய்...?" என்றவளை ஆழ்ந்து பார்த்தவன் பின்பு அடக்க மாட்டாது வாய்விட்டு சிரித்துவிட்டான்...

"உனக்கு எப்படித் தோணுதோ அப்படி வச்சுக்கோ..." என்றவனை வெட்டும் பார்வை பார்த்தவள்,

"அப்போ நீ பட்டிக்காட்டான் தான்... ராட்சசன் தான்..." என்று அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்...

"அதை விடு... ஏன் அப்படிக் கேட்டாய் பேபி...?" என்றவனின் குரல் மிருதுவாய் ஒலித்தது... அவனது கை அவளது கையைப் பிடித்து மென்மையாக வருடிவிட்டது...

முதன்முறையாய் அவனது குழைந்த குரல், அவனது மென்மையான தொடுகை அவளது ஆழ்மனது வரை ஊடுருவி சென்று அவளை ஏதேதோ செய்தது... வெடுக்கென்று கையை உதறி கொண்டவளை அவன் ஆச்சிரியமாய்ப் பார்த்த போதும் மேற்கொண்டு அவளிடம் வம்பிழுக்காது அமைதியாக அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்...

"சொல்லு பேபி... உனக்கு என்ன பிரச்சினை...?"

அவள் பதில் சொல்லாது வாயை இறுக மூடி கொண்டு இருக்கவும் அவனே மேலே பேசினான்...

"உன்னைப் பொறுத்தவரை நான் ராட்சசன், காமூகன், கொடூரமானவன்... இப்படிப்பட்ட என்னிடம் அடைக்கலம் கேட்டு வருமளவுக்கு உனக்கு என்ன பிரச்சினை...?"

கணவனது வார்த்தையில் அவளது விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்தது... அவள் பதில் பேசாது தலையைக் குனிந்து கொண்டாள்... அழும் அவளைப் பார்த்தபடி நின்றிருந்தவனின் முகத்தில் யோசனை படர்ந்தது...

"உனக்கும், அந்த வீணா போனவனுக்கும் கல்யாணம் முடிவு பண்ணி இருக்காங்களா...?" என்றான் கோபத்துடன்...

"பவன் அத்தானை பத்தி இப்படித் தப்பா பேசாதே..." அந்த நிலையிலும் அவள் அத்தை மகனுக்குப் பரிந்து பேசியது கண்டு அவனது விழிகள் கோபமாய் இடுங்கியது...

"அப்போ விசயம் அது தான் இல்லையா...? ரொம்ப நல்லது... அந்த நல்லவரை, வல்லவரை நாலும் தெரிஞ்சவரை நீ கல்யாணம் பண்ணிக்கிறதில் என்ன தடை இருக்கு...? நானும் ஒண்ணும் சொல்ல போவதில்லை... போ, போய் அவனைத் தாராளமா கல்யாணம் பண்ணிக்கோ..." என்று அவன் எரிந்து விழுந்தான்...

"உன்னுடைய குழந்தைக்கு என் பவன் அத்தான் எதுக்கு அப்பாவாகணும்...? அவங்க நல்லவங்க... அதனால்

அவங்களுக்கு நல்ல வாழ்க்கை தான் அமையணும்..." என்றவளை ஆழ்ந்து பார்த்தவன்,

"அது சரி... உன் கிட்ட மாட்டிக்கிட்டு முழிக்கத் தான் இந்த அப்பாவி நான் கிடைச்சிருக்கேனே... பாவம், அவனுக்காவது நல்ல வாழ்க்கை அமையட்டும்..." என்றவனது குரலில் கோபமும், கேலியும் சரிவிகிதமாய்க் கலந்திருந்தது...

"நீ அப்பாவியா...?" என்று முறைத்தவளை கண்டு அவனது முகத்தில் புன்னகை மீண்டது...

"இல்லையா பின்னே...? எத்தனை விழுப்புண்களைத் தாங்கியிருக்கிறேன்..." என்றவன் தனது இடது புருவத்தை உயர்த்திக் காண்பித்தான்...

"இது ஒண்ணு தானே... நிறையன்னு பொய் சொல்லாதே..." என்று உதட்டை சுளித்தவளின் அருகில் வந்து,

"இன்னும் நிறைய இருக்கு... காட்டவா...?" என்றபடி தனது சட்டையின் பொத்தான் மீது கை வைத்தவனைக் கண்டு அவள் பதறியவளாய்,

"லூசா நீ...? தள்ளி போ..." என்றபடி பின்னால் நகர்ந்தாள்... அவன் எதைப் பற்றிச் சொல்கிறான் என்பதைப் புரிந்தவளாய் அவளது முகம் கோபத்திலும், வெட்கத்திலும் சிவந்து போனது...

"ஓகே, ஓகே... தள்ளி நிற்கிறேன்..." இருகைகளைத் தூக்கியபடி ஓரடி தள்ளி நின்றவன் பின் தீவிரமான குரலில்,

"அதையே தான் நானும் சொல்கிறேன் நிலா... என் மனைவிக்குக் கணவனாக, என் குழந்தைக்கு அப்பாவாக நான் இருக்கும் போது நமக்கு இடையில் யாரையும் வர விட மாட்டேன்... அப்படி ஒன்று நடக்குமாயின் அந்தக் கணம் என் உடம்பில் உயிர் இருக்காது என்பதே அர்த்தம்..."

"ஏன் இப்படி எல்லாம் பேசுற...? போ இங்கிருந்து... இனி என்னைப் பார்க்க வராதே..." என்று அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்...

அவளது மனமும், முகமும் வேதனையில் கசங்கியது... அவள் தான் அவனது உயிரை கேட்கிறாள்... ஆனால் ஏனோ அதை அவன் வாயால் கேட்கும் போது அவளால் தாங்கி கொள்ள முடியவில்லை... உயிர்வலி கொடுத்தவனின் வார்த்தைகளில் இருந்த உயிர்வலி அவளைப் பெரிதாகத் தாக்கியது...

அவளது கோபம் கண்டு அவனுக்குச் சிரிப்பு தான் வந்தது...

"தைரியமாகப் போ... என்னையும் மீறி எதுவும் நடந்து விடாது..." என்றவனைத் திரும்பி பார்த்தவள்,

"அதானே, கெடுதல் செய்ய நீ இருக்கும் போது... வேறு யாரு தேவை..." என்றாள் சினத்தோடு...

அந்நேரம் அவளது வீட்டுக் கார் அவளருகில் வந்து நின்றது... பத்ரிநாத் தான் காரை ஓட்டி கொண்டு வந்தார்... சிம்மவிஷ்ணுவை கண்டதும் காரை விட்டு இறங்கி அவனிடம் வந்தார்...

"ஹாய் விஷ்ணு, என்ன இந்தப் பக்கம்...?"

"நிலாவை பார்க்க வந்தேன்..." என்றான் அவன் கம்பீரமாக உண்மையை உரைத்தபடி...

"என்ன உறவுமுறையில்...?" அவர் வேண்டுமென்றே குத்தலாகக் கேட்டார்...

"என் மனைவி என்கிற முறையில்... இதை நான் உங்களுக்குச் சொல்லவும் வேணுமோ...?"

"ஊரறிய இவள் என் மனைவி, இது என் குழந்தைன்னு சொல்ல தைரியம் இல்லாதவன் எல்லாம் இப்படித் திருட்டுத்தனமாகத் தான் பார்க்க வேண்டும்... உனக்குத் திருட்டுத்தனம் பழகிய ஒன்றாக இருக்கலாம்... ஆனால் என் மருமகளுக்கு அது பழக்கமில்லை... உன் கூட அவள் நின்னு

பேசுறதை யாராவது பார்த்தால் அவளது பெயர் வீணே கெட்டு போகும்... அதனால் இனி நீ அவளைப் பார்க்க வராதே..."

அவரது வார்த்தைகள் அவனைச் சுரீரென்று தாக்கியது... அதில் நன்றாக நிமிர்ந்து நின்றவன்,

"இனிதான் இவள் பெயர் கெட்டு போக வேண்டுமா...? இந்த நிலையில் இவளை பார்த்துமா இன்னமும் இந்த உலகம் ஒன்றும் பேசாது இருக்கிறது... இதை நான் நம்பணுமா...? உங்க மருமகள் கெட்டு போய் ஒன்பது மாதங்களாகி விட்டது... அதனால் புதுசா வேறு ஏதாவது கண்டுபிடிங்க..."

இப்போதும் சிம்மவிஷ்ணு பத்ரிநாத்தை தாக்கி பேச நினைத்த வார்த்தைகள் அனைத்தும் குறி மாறி அவளைப் பெரிதாய்த் தாக்கியது...

"நான் கெட்டு போனவள்ன்னா... நீயும் கெட்டு போனவன் தான்டா... பொறுக்கி ராஸ்கல்... செய்றது எல்லாம் செஞ்சிட்டு பேசும் பேச்சை பார்..." என்று அவனிடம் கோபத்தில் எகிறியவள் பின்பு மாமாவிடம்,

"வாங்க போகலாம்..." என்றுவிட்டு காரிலேறி அமர்ந்தாள்...

சிம்மவிஷ்ணு அவளையே பார்த்துக் கொண்டிருக்க... கார் கிளம்பி சென்றுவிட்டது... அவளது கண்ணீரை விட அவளது இந்தக் கோபம் அவனுக்கு நிரம்பப் பிடித்திருந்தது... அவளது விழிநீர் அவனது மனதில் கொழுந்துவிட்டு எரியும் பழிவாங்கும் எரிமலையை அணைப்பது போல் அவனுள் ஒரு தோற்றம்... அதனால் அவளிடம் இருந்து முடிந்தவரை விலகி இருப்பதே நல்லது என்று அவன் நினைத்தான்...

காரில் சென்று கொண்டிருந்த நிஷிலா மனதில் கணவன் மீது கோபம் இருந்த போதும் அவன் தனது வார்த்தையை உதாசீனம் செய்தது மிகவும் கஷ்டமாக இருந்தது... கண்ணீரை அடக்க முடியாது வழிய விட்டாள்...

பத்ரிநாத் அவளது நிலையைக் கண்டு பரிதாபப்பட்டாலும் ஒன்றும் பேசாது அமைதியாக வந்தார்... தனது ஆறுதலை விடக் காலம் அவளை ஆறுதல்படுத்தும் என்று நினைத்தாரோ...?

**********************

'சிம்' நிறுவனத்தின் உணவு நிறுவனத்தை இன்று அரசாங்கம் ஏலம் விடுவதாக இருந்தது... ஏனெனில் அங்கே வேலை செய்யும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் நலனை முன்னிறுத்தி இந்த முடிவை எடுத்திருந்தது... அது போல் உணவு உற்பத்தியின் பாதுகாப்பையும் ஆய்வு மூலம் உறுதி செய்திருந்தது...

"பத்ரி, எனக்காக நீங்க இந்த ஏலத்தில் கலந்துக்கோங்கப்பா... ப்ளீஸ்..." என்று இளவரசி கணவரிடம் கெஞ்சினார்...

"இது சாதாரண விசயம் இல்லை வசி... இந்தக் கம்பெனியை நாம் எடுத்தாலும் அதன் ப்ராடெக்ட் எல்லாம் பழைய பெயரில் வெளியிட முடியாது... புதுப் பெயரில் தான் வெளியிட வேண்டும்... ப்ராண்ட் நேம் மாறும் போது மார்க்கெட்டில் போட்டி போடுறது ரொம்பக் கஷ்டம்... நம்ம கிட்ட ஃபுட் கம்பெனி இருந்தாலாவது அதோடு இதைச் சேர்த்து விடலாம்... நம்ம தொழில் எல்லாமே வேறு... புதுசா இதில் கொண்டு போய்ப் பணத்தை முடக்குவது அத்தனை நல்லதாக எனக்குத் தோணலை..."

"இதுநாள் வரை நான் உங்க கிட்ட எதுவும் கேட்டது இல்லை... இப்போ எனக்காக நீங்க இதைச் செய்ய மாட்டீங்களா...?" என்று இறைஞ்சிய மனைவியைத் தீர்க்கமாய்ப் பார்த்த பத்ரிநாத்,

"நீ கேட்கும் அளவுக்கு நான் உன்னை வைக்கலையே..." என்றார் கறார் குரலில்...

அதைக் கேட்டபடி அங்கு வந்தான் பவித்ரன்...

"டாட், கம்பெனியை நாம் எடுக்கலாம்... அதை நான் பார்த்துக்கிறேன்..." என்று தாய்க்காக அவன் தோள் கொடுக்க முன்வந்தான்...

"இல்லை தீரா..."

"என் மேல் நம்பிக்கை வைத்து அதை எடுத்து என் கையில் கொடுங்க டாட்..." என்று தன்னம்பிக்கையுடன் பேசிய மகனை கண்டு அவரால் மறுபேச்சு பேச முடியவில்லை...

மகனின் தொழில் திறமை அவர் அறிந்ததே... அவரை விட அவன் தொழிலை திறமையாகக் கொண்டு செல்கின்றான்... இருந்தாலும்...??? அவர் யோசிக்கும் போதே,

"டாட், ப்ளீஸ்..."

"நீ சொல்வதால் ஓகே சொல்கிறேன்... போகலாம் வா..." என்றவர் மனைவி, மகனை அழைத்துக் கொண்டு சென்றார்...

இந்த ஒப்பந்தத்தை அரசாங்கம் நேரிடையாக நடத்துகிறது... அதனால் இதில் யார் வேண்டுமானாலும் கலந்து கொள்ளலாம்... சிம்மவிஷ்ணு, துளசி இருவரும் இதற்கு வந்திருந்தனர்... ஏலம் ஆரம்பிக்கப்பட்டது...

துளசி பவித்ரனை கண்டதும் ஏலத்தில் கலந்து கொள்ளாது அமைதியாகி போனாள்... காதல் மனம் அவனோடு போட்டி போட விடாது தடுத்தது... அது போன்றதொரு மனநிலையில் தான் சிம்மவிஷ்ணு இருந்தான்... பத்ரிநாத்தை கண்டதும் அவனது மனம் சிறிது தடுமாறத் தான் செய்தது... அப்போது அவனது விழிகளில் அவர் அருகில் அமர்ந்திருந்த இளவரசி விழுந்ததும் அவனது மனதிலிருந்த தடுமாற்றம் போய் அதில் வன்மம் அமர்ந்து கொண்டது...

சிறிது நேரத்தில் மற்றவர்கள் ஒதுங்கி கொள்ள... சிம்மவிஷ்ணுவுக்கும், பவித்ரனுக்கும் இடையில் கடும்போட்டி நிலவியது... சிம்மவிஷ்ணு அடங்காது

சிம்மமாய்க் கர்ஜித்து நின்றான்... இறுதியில் பவித்ரம் தோற்றுப் போய்ச் சிம்மம் வெற்றிப் பெற்றது... அந்த நொடி சிம்மவிஷ்ணுவை விடப் பத்ரிநாத் அதிக நிம்மதி அடைந்தார்...

இளவரசி, பவித்ரன் முகம் கறுத்துப் போனது... பத்ரிநாத் மட்டும் சிம்மவிஷ்ணுவிடம் வந்து கை நீட்டியபடி,

"வாழ்த்துக்கள்..." என்றார்...

கலக்கத்துடன் அவரைப் பார்த்திருந்த சிம்மவிஷ்ணு அவரது வாழ்த்தில் முகம் மலர்ந்தவனாய் தனது கை கொண்டு அவரது கையைப் பிடித்துக் குலுக்கியபடி, "தேங்க்யூ பத்திப்பா... இதில் உங்களுக்கு ஒன்றும் வருத்தம் இல்லையே..." என்று தயக்கத்துடன் கேட்டான்...

"நான் இதைக் கேட்டால் எனக்கு விட்டு கொடுத்து விடுவாயா விஷ்ணு...?"

"வேறு எந்தத் தொழில் என்றாலும் நான் உங்களுக்கு விட்டுக் கொடுப்பேன்... ஆனா சிம் கம்பெனியை தவிர..." என்றான் அவன் தீவிரமான குரலில்... அவனை உற்று நோக்கியவர் பின்பு சிரித்துக் கொண்டே,

"நீ எனக்கு நல்லது தான் பண்ணியிருக்கிறாய்... வசி தொல்லை தாங்காது வந்தேன்... என்னை நீ காப்பாற்றிவிட்டாய்..." என்று கூற...

"அவங்க சொல்ற எல்லாவற்றையும் கண்மூடித்தனமா கேட்காதீங்க... எதையும் அலசி, ஆராய்ந்து பாருங்க... அப்போ தான் உண்மை உங்களுக்குப் புலப்படும்..." என்றவனைக் கண்டு அவரது நெற்றி யோசனையாய்ச் சுருங்கியது...

"நான் இந்தக் கம்பெனி விவகாரத்தைச் சொன்னேன்..." என்றான் அவன் சமாளிப்பாய்...

இருவரும் பேசுவதைக் கண்டு இளவரசி மகனிடம் பொருமினார்...

"உங்கப்பாவுக்கு அவன் கிட்ட என்ன பேச்சு வேண்டி கிடக்கு...? நம்ம கிட்ட போட்டி போடுவதை முழுநேர தொழிலா வச்சியிருக்கான்... திமிர் பிடிச்சவன்..." என்று அவர் சிம்மவிஷ்ணுவை வசைப்பாடினார்...

"தொழில் முறையில் இதை எல்லாம் நாம் தடுக்க முடியாது மாம்..." என்று பவித்ரன் அன்னையைச் சமாதானப்படுத்தினான்...

அங்கிருந்து கிளம்பும் போது சிம்மவிஷ்ணு இளவரசியைக் கண்டு நக்கல் பார்வையோடு கடந்து சென்றான்... அதைக் கண்டு அவருக்கு மிளகாயை அரைத்து பூசியது போல் உடல் எல்லாம் எரிந்தது...

பவித்ரன் பெற்றோருடன் வெளியில் வரும் போது தான் துளசியைப் பார்த்தான்... அவளது இமைக்காத பார்வையை அவன் கண்டும் காணாதது போல் கடந்து வந்துவிட்டான்... அவளது பைத்தியக்காரத்தனமான காதலை மதித்துப் பதில் சொல்லி கொண்டு நேரத்தை வீணடிக்க அவனுக்கு விருப்பம் இல்லை... அவளாகப் புரிந்து கொண்டு ஒதுங்கி செல்லட்டும் என்றே அவன் நினைத்தான்... பத்ரிநாத் இதைப் பார்த்துக் கொண்டே சென்றார்...

தந்தையும் மகனும் அலுவலகத்திற்குச் சென்றுவிட... இளவரசி ஆத்திரத்துடன் வீட்டிற்கு வந்தார்... அங்கே தன் முன்வந்த நிஷிலாவை கண்டதும் அவரது ஆத்திரம் இன்னமும் அதிகமாய்க் கொதித்தெழுந்தது... அதுவும் அவளது மேடிட்ட வயிறை பார்க்க பார்க்க அவருக்கு அப்படியொரு கோபம் வந்தது... அவரது எதிரியின் வாரிசை அல்லவா அவள் சுமந்து கொண்டிருக்கிறாள்... அவனைத் தொழிலில் அடிக்க முடியாது மனம் கொதித்தவருக்கு அருமருந்தாய் அவனது வாரிசு அவர் கண்முன்னே...

அவள் முன் விறுவிறுவென வந்தவர், "அவனோட வாரிசை சுமக்க உனக்கு வெட்கமாய் இல்லை... ரேப் பண்ணியவன் குழந்தையைப் பெத்தெடுக்க உடம்பும், மனசும் உனக்குக் கூசலை... ச்சீ, அருவருப்பாயிருக்கு..." என்று கூறியபடி அவளது கன்னத்தில் ஓங்கி ஒரு அறைவிட்டார்...

அதில் நிலைக்குலைந்து போன நிஷிலா தடுமாறி அங்கிருந்த சோபாவில் போய் விழுந்தாள்... வீட்டிலிருந்த மணிபாரதியும், அருந்ததியும் அவள் அருகே ஓடி வந்தனர்...

"நீங்க ரெண்டு பேரும் அவளுக்குச் சப்போர்ட்டா... தள்ளி போங்க..." என்று கோபத்தில் கத்தியவர்,

"இவள் தைரியமாயிருந்தா அவன் ஏன் கடத்திட்டுப் போகப் போறான்... அப்படியே அவன் கடத்திட்டு போனாலும் இவள் தப்பிச்சு வர்றதுக்கு என்ன...? ஒருவேளை இவள் அவனோட சுகத்துக்கு மயங்கி போய்க் கிடந்தாளோ என்னவோ...?"

குத்தீட்டியாய் வலிக்க வலிக்கக் குத்தி குதறிய அத்தையின் வார்த்தையில் நிஷிலா அதிர்ச்சியில் அப்படியே அவரைப் பார்த்திருந்தாள்... அத்தை இந்தளவிற்குப் பேசுவார் என்பதே அப்போது தான் அவளுக்குத் தெரியும்... அவளுக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது...

"இங்கே நடந்ததைத் தீரா, பத்ரி கிட்ட யாராவது சொன்னீங்க... கொன்னுருவேன் கொன்னு..." என்று ஆள்காட்டி விரல் நீட்டி அவர் எச்சரித்துவிட்டு தனது அறைக்குச் செல்ல...

அதுவரை அமைதியாக இருந்த அன்னையும் சித்தப்பனும், "நிஷா..." என்றபடி அவள் அருகில் வர...

அதில் சுரணை அடைந்தவள் சோபாவில் இருந்து எழுந்து விறுவிறுவென வெளியில் நடந்தாள்...

"நிஷா..." என்றபடி அவள் பின்னே வந்தவர்களைக் கண்டு வெறுமையாய் பார்த்தவள்,

"ப்ளீஸ், என் பின்னாடி வராதீங்க..." என்று விட்டு அவள் செல்ல...

"எங்கே போகிற நிஷா...?" என்று அருந்ததி கேட்க...

"நிச்சயம் சாவதற்கு இல்லை..." என்று பதிலளித்தவள் வீட்டை விட்டு வெளியேறி சாலையைக் கடந்து வீட்டின் முன்னிருந்த கடற்கரை மண்ணில் வந்தமர்ந்தாள்...

மதிய வெயிலில் மண் சுட்டது... மனதின் தகிப்பு அதை உணர விடவில்லை... எவ்வளவு நேரம் அப்படியே அமர்ந்திருந்தாளோ.. திடுமென நிழல் தனது தலை மேல் விழவும் அவள் நிமிர்ந்து பார்த்தாள்... அங்குக் குடையுடன் சிம்மவிஷ்ணு நின்றிருந்தான்...

"எழுந்து வா... வீட்டுக்கு போகலாம்..." என்றபடி அவள் முன் தனது வலதுகையை நீட்டினான்...

முகம் வேதனையில் கசங்க, இதழ்கள் துடிக்க அவனை ஏறிட்டவள் பின்பு அவனைப் பார்க்க பிடிக்காதவளாய் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்... அவன் அவளை வற்புறுத்தாது அவள் அருகே அமர்ந்தான்... இருவருக்கும் சேர்த்துக் குடை பிடித்தவனின் கையை அவள் கோபத்துடன் தட்டிவிட்டாள்...

"உன் அத்தையைப் பத்தி தான் உனக்குத் தெரியுமே...?" என்றவனைக் கண்டு அவள் ஆச்சிரியமாய்ப் பார்க்க...

அவளது கடல் போன்ற விழிகள் அவனை ஆழமாய் உள்ளே இழுத்து செல்வது போல் அவனுக்குத் தோன்றியதில் அவன் அவளைப் பார்க்காது கடலை வெறித்துப் பார்த்தான்...

"குழந்தையைக் கலைப்பது எனக்கு எப்படித் தெரிந்ததோ அது போல் தான் இதுவும்..." என்றவனை அவள் வியப்பாய் பார்த்தாள்...

"சிறுத்தை தன் புள்ளிகளை மாற்றிக் கொள்வதில்லை..." என்றான் அவன் வேதனையுடன்...

நிஷிலாவை வைத்து அவர்கள் கண்ணில் விரலை விட்டு ஆட்ட அவன் நினைத்தால், அவர்கள் அவளை வைத்து அவனை ஆட்டுவிப்பது போல் இருந்தது அவனுக்கு...

"அவங்க எப்படியும் இருந்துட்டு போகட்டும்... ஆனா உன்னால் தானே எனக்கு இந்தப் பேச்சு..." என்றாள் அவள் வேதனையுடன்...

தனது வேதனையை விட அவளது வேதனை அவனைப் பெரிதும் வாட்டியது... அவன் வேதனை பொங்க அவளைத் திரும்பி பார்த்தான்...

"நீ சொன்னது போல் நான் விபச்சாரி தானோ...?"

ஏற்கெனவே குத்துயிராய் இருப்பவனை அவள் மேலும் வார்த்தைகளால் கொன்றாள்...

"ம்ப்ச், அப்படி எல்லாம் இல்லை பேபி... அது ஏதோ கோபத்தில் சொன்னது..." என்றபடி அவன் அவளை அணைத்துக் கொண்டான்...

"இல்லை அது தான் உண்மை... அத்தை சொன்னது சரிதான்... உடம்பு சுகத்துக்கு மயங்கி தான் நான் தப்பிக்க நினைக்கலை போலும்... அப்போ எனக்கு அந்தச் சுகம் தேவைப்பட்டு இருக்குன்னு தானே அர்த்தம்..."

தனது நெஞ்சில் முகம் புதைத்து அழும் அவளைத் தேற்றும் வகையறியாது அவன் திகைத்தான்... அவனது அணைப்பு இறுகியது... அதை உணர்ந்தவளாய் அவள் திமிறிக் கொண்டு விலகினாள்...

"இதோ இப்போது கூட உன் அணைப்பில் தான் நான் இருக்கிறேன்... நீ எனக்கு இத்தனை கெடுதல் செய்தும் நான் உன் அணைப்பில் மயங்கி கிடக்கிறேன்னா இதற்கு அது தானே அர்த்தம்..." என்று தேம்பியவளை கண்டு,

"எந்த அர்த்தமும் இல்லை... நான் உன் கணவன் என்கிற அர்த்தம் மட்டுமே... லூசுத்தனமா உளறாதே..." என்று அவன் அவளைச் சத்தம் போட்டான்...

"நீ என்னைத் தொட்டது கணவன் என்கிற உரிமையால் தானா...? உண்மையைச் சொல்..." அவள் கேட்டதும் அவன் பதில் சொல்ல முடியாது உதட்டை கடித்தான்...

"நீ என்னைத் தொட்டதுக்குப் பெயர் ரேப், வன்கொடுமை..."

அவளது வார்த்தையில் அவனது முகம் அவமானத்தில் கறுத்துப் போனது... நொடியில் தன்னைச் சுதாரித்துக்

கொண்டு அவளைப் பார்த்தவன்,

"அப்போ நீ என் கிட்ட நடந்து கொள்ளும் முறைக்கு என்ன அர்த்தம் நிலா...?" அவன் அவளைக் காயப்படுத்தக் கூடாது என்று நினைத்து மென்மையான குரலில் வினவினான்...

"நீயும், என் அத்தையும் என்னைச் சொன்னதன் அர்த்தம்... நான் விபச்சாரி... அதான் உன்னிடத்தில் உடல் சுகம் தேடி வர்றேன்... போதுமா...?" என்றவள் தாங்க முடியாத வேதனையுடன் இதழ்களைக் கடித்து அழுகையை அடக்கி கொண்டு தொடுவானை வெறித்தாள்...

மீண்டும் மீண்டும் அவள் அவனை உயிரோடு கொன்றாள்...!

"அப்படி என்றால் நீ உன் அத்தானை கல்யாணம் பண்ணிக்க வேண்டியது தானே நிலா...?"

சாட்டையடியாய் வந்து விழுந்த அவனது வார்த்தைகள் அவளது மனதினை வலிக்கச் செய்தது... அவள் பதில் பேசாது தனது விழிநீரின் மூலம் அவனுக்குப் பதில் கூறினாள்...

"நீ என் கிட்ட நெருங்கி வர்றேன்னா அதுக்கு அர்த்தம் இது தான்..." என்றவன் அவளது கழுத்தில் தான் கட்டிய தாலியை எடுத்துக் காண்பித்தான்... அதை வெறுமையுடன் பார்த்தவள்,

"இதைக் கட்டிட்டா நீ பண்ணிய தப்பு எல்லாம் சரின்னு ஆகிருமா...?" என்றவளது கை அவளது வயிற்றினைத் தடவி பார்த்தது...

"சில தவறுகளைச் சரி செய்ய விதைக்கப்பட்ட தவறு இது... அதனால் என்னைப் பொறுத்தவரை இது சரியே..." என்றான் அவன் அவளது கை மீது தன் கையை வைத்து... அவள் சட்டென்று தனது கையை விலக்கி கொண்டாள்...

இப்போது அவனது கை அழுத்தமாய் அவளது வயிற்றில் பதிந்தது... அந்நேரம் குழந்தை அசைந்தது... தகப்பனது தொடுகையை அது உணர்ந்து கொண்டதோ...?

குழந்தையின் அசைவை உணர்ந்த சிம்மவிஷ்ணுவின் விழிகளில் விழிநீர் துளிர்த்தது… அவன் சாதாரண ஆசாபாசம், அன்பு கொண்ட மனிதன்… எல்லோரையும் போன்று மனைவி, குழந்தை என்று மகிழ்ச்சியோடு வாழ வேண்டும் என்கிற எண்ணம் கொண்டவன்… அத்தனையும் சிதைந்து போனது ஒருநாள்… அதன் விளைவு நிஷிலா கடத்தப்பட்டாள்… மனம் ஒப்பாது அவளுடன் வாழ்ந்து இதோ இப்போது ஒரு குழந்தைக்கும் தகப்பனாகப் போகிறான்…

'என் குழந்தை' என்று ஊரை கூப்பிட்டு கத்தி சந்தோசமாகச் சொல்ல வேண்டிய விசயத்தை யாரிடமும் சொல்ல முடியாது தவிப்பது அவனுக்குத் தான் தெரியும்… இப்போது குழந்தையின் அசைவு அவனை மிகவும் பலவீனப்படுத்தியது… எந்தப் பகையும் வேண்டாம் என்று எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டு நிஷிலாவின் கரம்பிடித்துத் தன்னுடன் அழைத்துச் செல்ல அவனுள் இருந்த நல்ல மனிதன் விஷ்ணு துடித்தான்…

ஆனால் அவனுக்கு இழைக்கப்பட்ட துரோகத்தை நினைத்து இதோ இப்போது இந்த நொடி கூட அவனுக்கு மூச்சு முட்டுகிறதே… அந்த நினைவு வந்ததும் அவன் சட்டென்று எழுந்துவிட்டான்… அந்தக் கணம் அவனுக்கு ஒன்று புரிந்தது… நிஷிலா என்னும் பெண்ணால் கூடக் கட்டுப்படுத்த முடியாத தன்னைத் தன் உதிரம் கட்டுப்படுத்துகிறது என்று… இது அவனுக்குச் சாதகமான விசயமல்லவே…

அவன் யாருக்கும் கட்டுப்படாது இருந்தால் தான் எளிதில் எதிரிகளை வெல்ல முடியும்… அதை விட்டு விட்டு இப்படி உணர்ச்சிவசப்படுவது அவனுக்கு நல்லதல்ல என்று நினைத்தவன் அவளிடம் விடைப்பெறாது அங்கிருந்து விறுவிறுவெனச் சென்றுவிட்டான்…

பெண்ணவளும், அவன் கொண்டு வந்த குடையும் அநாதையாக அவனைப் பார்த்திருந்தனர்… நிஷிலா செல்லும் அவனை இமைக்காது பார்த்து

கொண்டிருந்தாள்... கண்களில் கரை கட்டிய கண்ணீர் அவனது உருவத்தை மங்க செய்தது...

"ச்சூ..." என்றபடி வேகமாய்க் கண்ணீரை துடைத்துக் கொண்டு அவனைப் பார்த்தாள்...

'என்னவானது எனக்கு...? எதுக்கு இவன் கிட்ட நான் பலவீனமாகிறேன்... குழந்தை என்னைப் பலவீனமாக்குகிறதோ...?' என்று நினைத்தவளுக்கு 'ஆம்' என்பதே விடையாகக் கிடைத்தது...

'என்னை மனுசியாகக் கூட மதிக்காதவனைக் குழந்தையைக் காட்டி இறுக்கி பிடிப்பதா...? ம்ஹூம், அவன் எனக்கு வேண்டாம்... அவன் எனக்கு வில்லன் தான், எதிரி தான்...' என்று அவள் மனம் மறுக அமர்ந்திருந்தாள்...

இனிவரும் காலங்களில் இருவருமே குழந்தையை வைத்து மற்றவரிடம் பலவீனமாகக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தனர்...

*****************

அடுத்து வந்த நாட்களில் சிம்மவிஷ்ணு நிஷிலாவை மறந்தவனாய் 'சிம்' நிறுவனத்தைச் சுற்றி வளைப்பதில் தனது கவனத்தைச் செலுத்தினான்... துரோகம் கொண்டு வேட்டையாடுபவனுக்கு அன்பு, பந்தபாசம் எதுவும் இருக்கக் கூடாது... அதைத் தான் அவன் செய்தான்... அதில் பலியிடப்பட்டது தன் மனைவி, குழந்தை என்பதை அவன் மறந்து போனது தான் கொடுமை...

திடுமென ஒருநாள் பத்ரிநாத் அவனை அழைத்தார்... தொழில் நிமித்தமாகக் கூட அவன் இந்த இடைப்பட்ட நாட்களில் அவரைச் சந்திக்கவில்லை... அவரது அழைப்பை பார்த்ததும் அவன் நிஷிலாவின் நினைவில் சோர்ந்து போனான்... அந்தக் கணம் பவித்ரனும், நிஷிலாவும் மாலையும் கழுத்துமாக இருப்பது போன்றதொரு காட்சி அவனது மனக்கண்ணில் விரிந்தது... ஒருவேளை அவள் சொன்னது போல் திருமணம் நடந்து முடிந்திருக்குமோ?

என்று அவன் பெரும் கவலை கொண்டான்... ஆனால் அப்படியொரு செய்தி இதுவரை அவனது காதினை எட்டவில்லை... முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அலைப்பேசியை உயிர்ப்பித்தான்... மறுமுனையில் பத்ரிநாத் எதுவும் பேசாது மௌனம் காத்தார்...

"சொல்லுங்க பத்திப்பா..." அவனே மௌனத்தைக் கலைத்தான்...

"நிஷா உயிருக்கு போராடிக்கிட்டு இருக்கிறாள்..." என்றார் அவர் வேதனை குரலில்...

"பொய் சொல்லாதீங்க பத்திப்பா... சும்மா விளையாட்டுக்கு தானே சொல்றீங்க..." என்றவனது குரல் அவனையும் அறியாது நடுங்கியது...

"மனித உயிர் விளையாட்டு இல்லை விஷ்ணு... நீயே வந்து பார்..." என்றவர் மருத்துவமனையின் முகவரியை கூறிவிட்டு அழைப்பை துண்டித்தார்...

சிம்மவிஷ்ணு காற்றாக மாறி காரிலேறிப் பறந்தான்... அடுத்த அரைமணி நேரத்தில் அவன் மருத்துவமனை வந்து சேர்ந்தான்... நிஷிலா பற்றி அவன் விசாரித்துச் சென்ற போது அங்கே ஐசியூ வாசலில் இளவரசி, செல்வரத்தினம், மணிபாரதி மூவரும் தங்களுக்குள் ரகசியமாகப் பேசி கொண்டு இருந்தனர்...

“இப்போ அவன் என்ன பண்ண போகிறான்? என்று பார்க்கலாம்... வேறுவழியின்றி அவன் குழந்தைக்காக நிஷாவை தன்னோடு அழைத்துக் கொண்டு தான் போயாக வேண்டும்... இந்த முறை அவனா? நாமா? என்று ஒரு கை பார்த்து விடலாம்...” இளவரசி அண்ணன்களிடம் குரோதத்துடன் கூறிக் கொண்டிருந்தார்...

அதைக் கேட்டு அவன் மனதில் பழிவெறி ஜூவாலை விட்டு எரிந்தது... தான் வந்த சுவடு தெரியாது அவன் வந்த வழியே திரும்பிவிட்டான்...

'எல்லாவற்றையும் சீக்கிரம் முடிக்க வேண்டும்... என் விதியும் சீக்கிரம் முடிய வேண்டும்...'

அது மட்டுமே அவனது ஒரே குறிக்கோளாக இருந்தது... இதுவரை தன்னால் அவள் அடைந்த துன்பம் போதும் என்றே அவனது மனம் நினைத்தது... அவளது வாழ்க்கையை விட்டு தான் விலகி செல்வதே அவளுக்குத் தான் செய்யும் நல்லது என்று அவன் நினைத்தான்... அவள் மீது அக்கறை கொண்ட அவளது அத்தானே அவளுக்கு வாழ்க்கை துணையாக வர வேண்டி அவன் தனது உயிரை விடத் துணிந்தான்...

அந்தக் கணம் அவனது காதுகளில் அவளுக்குத் தான் கூறிய வார்த்தைகள் மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டிருந்தது...

'அதையே தான் நானும் சொல்கிறேன் நிலா... என் மனைவிக்குக் கணவனாக, என் குழந்தைக்கு அப்பாவாக நான் இருக்கும் போது நமக்கு இடையில் யாரையும் வர விட மாட்டேன்... அப்படி ஒன்று நடக்குமாயின் அந்தக் கணம் என் உடம்பில் உயிர் இருக்காது என்பதே அர்த்தம்...'

தீவரமாக யோசித்தபடி காரை ஓட்டி கொண்டு சென்றவனுக்குத் தலைவலியும் தீவரமாக எழுந்து அவனைக் கொல்லாமல் கொன்றது...!!!

"விஷ்ணுவாய் நிலவினில் நித்திலம்(முத்து)
பதிக்க ஆசையே...
விதிப்பயன் ஆட்டுவித்ததில்,
சிம்மம் சுடலையாய் மாறி
வேட்டைக்குப் புறப்பட்டதே...
உயிர் கொல்லும் வேட்டையில்
தன்னுயிர் கொல்லும் நேசம்
காதலோ? காமமோ?
அந்த நிலவே இறுதி
தீர்ப்பு எழுதிட வேண்டும்... நிலவு
குளிருமோ? தகிக்குமோ?
விடை காலத்தின் கைகளில்...!!!"

கொல்லும்...!!!

## நிழல் : 16

மருத்துவமனையில் இருந்த நிஷிலா முழுதாய் ஒரு நாள் கழித்தே விழி திறந்தாள்... குடும்பத்தினர் அத்தனை பேர் சுற்றியிருந்த போதும் அவளது விழிகள் பவித்ரனை தான் தேடியது... அவனைக் கண்டதும் விழிகளில் நீர் திரள,

"அத்தான்..." என்று மெல்ல அழைத்தபடி தனது கையை அவன் புறம் நீட்டினாள்...

"குட்டிம்மா..." என்றபடி அவன் அவளது கையைப் பிடித்துக் கொண்டு அவள் அருகில் வந்தமர்ந்தான்...

"என் கூடவே இருங்க அத்தான்... எனக்குப் பயமாயிருக்கு..." என்றவளிடம்,

"இருக்கேன் குட்டிம்மா... நீ எதை நினைத்தும் கவலைப்படாதே..."

அவனின் ஆறுதல் வார்த்தையில் அவளது விழிகள் சொருகியது... மீண்டும் ஆழ்ந்த மயக்கத்திற்கு அவள் சென்றாள்... அந்த நிலையிலும் பவித்ரனின் கையை இறுக பற்றியிருந்த அவளது கை கொஞ்சமும் தனது பிடியை தளர்த்தவில்லை...

"டாக்டர்..." அவளின் நிலை கண்டு பவித்ரன் அலறினான்...

பத்ரிநாத் மருத்துவரை அழைத்து வந்தார்... அவர் பரிசோதித்துப் பார்த்துவிட்டு,

"பிபி எல்லாம் நார்மலா இருக்கு... சாதாரண மயக்கம் தான்... கொஞ்ச நேரத்தில் அவங்களே முழிச்சுருவாங்க... அதுவரை வெய்ட் பண்ணுங்க..." என்றவர் அங்கிருந்து சென்றுவிட்டார்...

பவித்ரன் அவளது கையைப் பிடித்தபடி கண்ணீரோடு அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்... நேற்று நிஷிலா மாடிப்படியில் இருந்து கீழே விழுந்துவிட்டாள் என்று தெரிந்ததும் அவன் நேரே மருத்துவமனைக்கு ஓடி வந்து

பார்த்த போது அவள் இதே போல் ஆழ்ந்த மயக்கத்தில் இருந்தாள்... அவளுக்குப் பெரிதாக அடி எதுவும் பட்டதாய் தெரியவில்லை... அவள் கால்களைக் குறுக்கி கொண்டு குழந்தையைக் காப்பற்றியதால் குழந்தையும் தப்பிவிட்டது...

ஆனால் அவளது இரத்த அழுத்தம் மிகவும் குறைந்து உயிருக்கு ஆபத்தான கட்டத்தில் அவள் இருந்ததால் அவன் மிகவும் பயந்து கொண்டே இருந்தான்... அவள் எழும் வரை அவனது உயிர் அவனது கைகளில் இல்லை...

"நிஷியை பார்க்காம நீங்க வீட்டில் என்ன பண்ணிக்கிட்டு இருந்தீங்க...?" என்று அவன் தனது அத்தையைக் கண்டு சத்தம் போட்டான்...

எங்கே மகள் தான் தாயை அருகில் வர விட மாட்டேங்கிறாளே... அவள் திரும்ப வந்ததில் இருந்து அவளிடம் ஏதோ ஒரு விலகல் தன்மை இருப்பது போல் அருந்ததிக்குத் தெரிந்தது... அவளிடம் பேச முயற்சித்துத் தோல்வியைத் தழுவியவர் அதன் பின் அமைதியாகத் தனது பணிகளைச் செய்தார்... நிஷிலா கீழே விழும் முன் அப்போது தான் அவர் அவளுக்குப் பழச்சாறு கொடுத்துவிட்டு வந்தார்... அவர் அந்தக் குவளையைக் கழுவி வைக்கும் முன் அவள் அங்கே கீழே விழுந்திருக்கிறாள்... அவருக்குமே மிகவும் துன்பமாக இருந்தது...

அவர் கணவரை பார்த்தார்... அவரைப் பொறுத்தவரை நல்ல கணவர் தான்... ஆனால் தங்கை என்று வரும் போது செல்வரத்தினத்தின் தராசு தட்டுத் தங்கை பக்கமே சாயும்... அதனால் அருந்ததி இளவரசி பற்றிக் கணவரிடமும் எதுவும் சொல்ல மாட்டார்... அது போல் தான் இளவரசி மகளைக் கேவலமாகப் பேசியதையும் சொல்லவில்லை... அன்றிலிருந்து தனது மகள் நடைப்பிணமாக வாழ்ந்து வருவதைக் கண்டு அவர் உள்ளம் துடித்தார், தவித்தார்... அவரால் அது மட்டுமே முடியும்... வேறு எதுவும் செய்ய

முடியாது... இப்போதும் இயலாதவராய் மகளைப் பார்த்து மௌனமாகக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தார்...

இளவரசி வலதுகையில் கட்டுடன் நிஷிலாவை குரோதத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்... அவரது கையிலிருந்த கட்டு அவர் நிஷிலாவை கேவலமாகத் திட்டி அடித்தற்காகச் சிம்மவிஷ்ணு கொடுத்த பரிசு... அவர் அவளை அடித்த மறுநாள் சிம்மவிஷ்ணு 'சிம்' உணவு நிறுவனம் சம்பந்தப்பட்ட சில சட்ட சிக்கல்களைத் தீர்த்து கொள்வதற்காக அண்ணன்கள், தங்கையை நேரில் சந்திக்க வந்தான்...

அவன் அமைதியாக வந்த விசயத்தை மட்டும் பேசிவிட்டு நல்ல பிள்ளையாக எழுந்தவன் ஆண்கள் இருவரிடமும் கைக்குலுக்கிவிட்டு அடுத்து இளவரசியிடம் தனது கையை நீட்டினான்... அவர் வேண்டா வெறுப்பாய் தனது கையை அவன் புறம் நீட்டினார்... நீட்டியது மட்டும் தான் அவருக்கு ஞாபகத்தில் இருந்தது... அடுத்த நொடி அவரது கையில் அப்படியொரு வலி எழுந்தது... சத்தம் போட்டு கத்த முடியாதபடி முகத்தில் வேதனையைத் தேக்கியபடி அவனை உறுத்து விழித்தவரை கண்டு அவனது உதடுகளில் விசம சிரிப்பு எழுந்தது...

"உங்களுக்கு வர்மக்கலை தெரியுமா...? அது தான் இது..." என்றவன் சிரித்தபடி தனது கையை விலக்கினான்...

அப்போது தான் அண்ணன்கள் இருவரும் தங்கையைப் பார்த்தனர்... இளவரசியின் கை புசுபுசுவென்று வீங்கி போயிருந்தது... அதைக் கண்டு அவர்கள் கொதித்துப் போயினர்...

"டேய்..." என்று மிரட்டியபடி அவன் அருகே வர... அவனோ கொஞ்சமும் அலட்டி கொள்ளாது,

"உங்களுக்கும் இதே பரிசு வேணுமா...? நான் ரெடி..." என்றபடி தனது கையை அவர்கள் புறம் நீட்டினான்...

அதைக் கண்டு அவர்கள் பயத்துடன் பின்னுக்கு நகர்ந்தனர்... அவர்களை நக்கலாய் பார்த்தவன்,

"அவ்வளவு தானா உங்க தங்கச்சி பாசம்...?" என்று சீண்டலாய் கேட்டபடி அங்கிருந்து சென்றுவிட்டான்...

அன்றிலிருந்து இளவரசியின் மனதில் வன்மம் கொழுந்துவிட்டு எரிகிறது... இதோ இப்போதும் அது அணையாது எரிந்து கொண்டிருக்கிறது...

அதே நேரம் சிம்மவிஷ்ணுவுக்கு நிஷிலா கண்விழித்த விசயம் உடனே தெரிவிக்கப்பட்டது... அவன் அதற்கு என்று ஆள் வைத்திருந்தான்... அவனால் அவளை நேரிடையாகச் சென்று பார்க்க முடியவில்லை... அவளைப் பார்த்தால் அவன் பலகீனமாகி போவான்... இல்லை இல்லை பலகீனமாக்கப்படுவான்... அதனால் அவன் அவளை விட்டு விலகியிருந்தான்... விலக வேண்டும் என்று நினைத்து நினைத்து அவன் அவளைப் பற்றித் தான் அதிகம் நினைத்துக் கொண்டிருந்தான்... அப்போது அவளைக் கவனித்துக் கொள்ளும் செவிலிப்பெண் கூறியது அவனது காதுகளில் ஒலித்தது...

"மயக்கம் தெளிஞ்சு எழுந்தவங்க அவங்க அத்தானை தான் முதலில் தேடுனாங்க... பயமாயிருக்குன்னு அவரைப் பார்த்து சொன்னவங்க திரும்ப மயங்கிட்டாங்க..."

"பயப்பட ஒண்ணுமில்லையே..." பதட்டத்துடன் கேட்டது அவனது குரல்...

"இல்லை சார்..." அவள் அப்படிக் கூறியதும் தான் அவன் நிம்மதி அடைந்தான்...

இப்போதும் அவள் கண்விழித்தது அவனுக்கு நிம்மதியாகத் தான் இருக்கிறது... இல்லையென்று சொல்ல முடியாது... அந்த நிம்மதியை மீறி ஏதோ ஒன்று அவனுள் தவியாய்த் தவித்தது... அவன் தனது வலது கரத்தை விரித்துப் பார்த்தான்... அன்று அக்னிசாட்சியாய் அவளது கரத்தினை உரிமையோடு பற்றிய கரம் இன்று அவளுக்கு ஆறுதல்

அளிக்க முடியாது தள்ளி நிற்கிறது... அன்று அவளது விருப்பம் இல்லாது அவளைத் தொட்ட கரம் இன்று அவளது விருப்பம் அறிந்தும் விலகி இருக்கிறது... அந்த நொடி அவன் மனம் வெறுத்துப் போனான்... அவனுக்கு மட்டும் ஏன் இந்தச் சாபம்? என்று...

அவனது மனம் மிகவும் வலித்தது... தனது மனைவியின் கை வேறொருவனின் பிடியில்... அதைக் கேட்டும் தான் உயிரோடு இருக்கிறோமே என்று அவன் தனக்குள் வெறுப்பாய் கேட்டுக் கொண்டான்... எந்தவொரு ஆண்மகனாக இருந்தாலும் சரி அவன் நல்லவனோ, கெட்டவனோ அவனது மனைவி என்று வரும் போது ஒருவித உரிமை உணர்வு எழத்தான் செய்கிறது... உரிமை உணர்வு என்பதை விட ஒருவித வெறி என்று இதைச் சொல்லலாம்... அத்தகைய வெறி அவனை அவள் பக்கமாய்ச் செல்ல சொல்லி அவனைச் செலுத்துகிறது... ஆனால் அவன் கொண்ட பகை விலகி போகச் சொல்லி எச்சரிக்கிறது...

அவன் மேலே யோசிக்க முடியாது தலையைக் கோதி, முகத்தை அழுந்த துடைத்துக் கொண்டான்... இனி விதி விட்ட வழியில் செல்வது என்று அவன் முடிவு செய்துவிட்டான்...

**********************

நிஷிலா உடல்நலம் சரியாகி வீட்டிற்கு வந்துவிட்டாள்... வந்த அன்று முழுவதும் பவித்ரனை தனது அருகில் வைத்து கொண்டாள்... அவனும் அவளது மனவுணர்வு புரிந்து அவளுடனே இருந்தான்... மறுநாளும் அவள் அதே பிடிவாதம் பிடிக்கவும் அவன் யோசனையாக அவளைப் பார்த்தான்...

"என்னாச்சும்மா...?" அத்தானின் கேள்விக்குப் பதில் சொல்லாது அவள் அவனைப் பயத்துடன் பார்த்தாள்... அவளது பார்வையை உணர்ந்தவனாய் அவன் அவளது தலையை மென்மையாய் கோதி கொடுத்து,

"உன் உடம்பு சரியாகும் வரை நான் எங்கேயும் போகவில்லை... போதுமா...?" என்று ஆறுதல்படுத்தியவனை அவள் நன்றியுடன் பார்த்தாள்...

அவன் கூறியது போல் அவளுடனே அவன் இருந்தான்... கண்ணின் இமை போல் அவளைப் பத்திரமாகப் பாதுகாத்தான்... அவன் அத்தனை பாதுகாத்த போதும் அவளது ஆழ்மனம் தன்னை நிர்கதியாய் விட்டு விட்டு சென்ற கணவனை நினைக்காத நாளில்லை... தன்னை ஒரு பொருட்டாக நினைக்காத கணவன் மீது கோபம் எழுந்தது... அந்தக் கோபம் அவளது மனதில் பெரும் தீயாகப் பற்றியெரிந்து அவளை எரித்துக் கொன்றது...

தென்றல் போன்றவளை அவளது கணவன் பெரும் புயலாக மாற்றிக் கொண்டிருந்தான்... அவன் அவளுக்கு இழைத்த அநீதி, அவள் மீதான அவனது உதாசீனம், புறக்கணிப்பு எல்லாம் சேர்ந்து அவளை உயிரோடு மரணிக்கச் செய்தது...

ஒரு வாரம் கழித்துப் பவித்ரன் அலுவலகத்திற்குச் சென்ற போது நிஷிலாவும் அவனுடன் கிளம்பினாள்...

"நீ ரெஸ்ட் எடு நிஷி..." என்று அவன் சொல்ல...

"இல்லை... இங்கே எனக்குப் போர் அடிக்குது... நான் உங்க கூட வர்றேன்..." என்று அவள் அடம்பிடிக்க...

"நான் ரொம்ப நேரம் ஆபிசில் இருக்க மாட்டேன் குட்டிம்மா..." என்று அவன் அவளுக்கு எடுத்துச் சொன்னான்...

"நான் அங்கே தான் இருப்பேன் தீரா... நான் நிஷாவை பார்த்துக்கிறேன்..." என்று கூறியபடி பத்ரிநாத் அங்கே வந்தார்...

"தேங்க்ஸ் மாமா..." என்றவளை கண்டு,

"தேங்க்ஸ் சொல்லுமளவுக்கு நிஷா வளர்த்துட்டாளா என்ன...?" என்று அவர் கேலி செய்தார்...

மூவரும் அலுவலகம் கிளம்பி சென்றனர்... நல்லவேளையாக இளவரசி அவர்களுடைய வேறு நிறுவனத்திற்குச் சென்றிருந்தார்... அதனால் மூவரும் காரில் அரட்டையும், சிரிப்புமாக வந்தனர்... அலுவலகம் வந்த போதும் நிஷிலாவின் புன்னகை முகம் மாறவில்லை...

கொஞ்ச நேரம் அவர்கள் செய்யும் வேலையைப் பார்த்து கொண்டிருந்தவளின் உடல் ஓய்வுக்காக ஏங்கியது... அவளது நிலை கண்டு பத்ரிநாத் அவளிடம்,

"நீ வேணா ரெஸ்ட் எடுடா..." என்று அலுவலக அறையுடன் ஒட்டியிருந்த ஓய்வறையைச் சுட்டிக்காட்டினார்...

"சரி மாமா..." என்றவள் அங்கிருந்த ஓய்வறைக்குள் சென்று படுத்து கொண்டாள்... படுத்ததும் தான் தாமதம் அப்படியே தூங்கிவிட்டாள்...

வெகுநேரம் கழித்து எழுந்தவள் முகத்தைக் கழுவி கொண்டு வெளியில் வந்தாள்... அங்கு யாரையும் காணவில்லை... இருவரும் வேலை விசயமாக வெளியில் சென்றிருக்கலாம் என்றெண்ணியவள் அங்கிருந்த சோபாவில் அமர்ந்தாள்... அப்போது வயிற்றில் இருந்த குழந்தை காலால் எட்டி உதைத்தது... அதை உணர்ந்தவளின் முகத்தில் புன்னகை தோன்றியது... வயிற்றைத் தடவியபடி,

"பசிக்குதாடா செல்லக்குட்டி... அதான் உதைக்கிறியா...?" என்று அவள் குழந்தையிடம் கேட்டுக் கொண்டிருக்கும் போது சிம்மவிஷ்ணு அறை கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான்...

அதைக் கூட உணராது அவள் குழந்தையுடன் தனி உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள்... எதிர்பாராது அவளை அங்குக் கண்டதும் முதலில் திகைத்து போனவன் அவளது பேச்சில் தன்னைச் சுதாரித்துக் கொண்டு தான் வந்த சுவடு தெரியாது வெளியேறினான்... பத்து நிமிடங்கள் கழித்து மீண்டும் உள்ளே வந்தவனைக் கண்டு நிஷிலா நிமிர்ந்து

பார்த்தாள்... அவனைக் கண்டதும் அவளது விழிகளில் முதலில் கோபம் வந்தது... பிறகு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவள் அவனை வெறுமையாகப் பார்த்தாள்...

"இந்தா இதைச் சாப்பிட்டு, ஜூசை குடி..." என்று அவன் தன் கையிலிருந்த கவரை அவள் முன் நீட்டினான்...

அவனையும், அவனது கையையும் மாறி மாறி பார்த்தவள் ஆத்திரத்துடன் அதைத் தட்டி விட்டாள்... கவரில் இருந்த சாண்ட்விச் வெளியே சிதறியது... பழச்சாறு தரையில் கொட்டி கவிழ்ந்தது...

"அறிவு இருக்காடி..." என்று கோபத்தில் கையை ஓங்கியவன் அவளது நிலையைக் கருத்தில் கொண்டு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு கையைக் கீழே போட்டான்...

"வேண்டாம்ன்னா வேண்டாம்ன்னு சொல்ல வேண்டியது தானே... ஏன் இப்படிப் பண்ணினே...?" என்றான் கோபத்துடன்...

"எனக்கு வாங்கிக் கொடுக்க நீ யார்...?" என்றாள் அவள் முறைப்புடன்...

"ஏன் நான் யார்ன்னு உனக்குத் தெரியாதா...? என்றான் அவன் காட்டத்துடன்...

"ஏன் தெரியாது...? நல்லாவே தெரியும்... அதுக்கான முழு அர்த்தத்துடன் நடந்துக்கிறவங்களுக்குத் தான் அதற்கான மரியாதை கொடுக்க முடியும்... உன்னை மாதிரி ஒருவனுக்கு இந்த மரியாதையே அதிகம் தான்..."

கணவன் என்கிற உரிமை கொண்டு அவன் அவளை அரவணைக்கவில்லை... அது போல் தகப்பன் என்கிற உறவு கொண்டு தன் குழந்தையை அவன் பாதுகாக்கவும் இல்லை... அப்படிப்பட்டவனுக்கு அவள் எப்படி மரியாதை கொடுப்பாள்...?

"ஐயோ பாவம்ன்னு உனக்கு எல்லாம் வாங்கிட்டு வந்து கொடுத்தேன் பாரு... என்னை எல்லாம்..." என்றவனை இடைமறித்து,

"நல்ல பிய்ஞ்ச செருப்பால் அடிச்சுக்கோ..." என்றாள் அவள் ஆத்திரத்துடன்...

பெண்ணவள் ஆணின் அருகாமையை எதிர்பார்க்க... ஆணோ பெண்ணவளின் அனுசரணையை எதிர்பார்த்தான்... இரண்டுமே அங்கே கிடைக்கவில்லை என்றதும் அவர்களுக்கு இடையில் கோபம் மட்டுமே மிஞ்சியிருந்தது...

"ஏய்..." என்றபடி அவன் கோபத்தில் அவளது கையைப் பிடித்து முறுக்கிவிட்டான்...

"ஷ்..." வலியில் முகம் சுருக்கிய போதும் அவள் தனது கையை விடுவித்துக் கொள்ளப் போராடவில்லை... மாறாக அவள் அழுத்தத்துடன் நின்றிருந்தாள்...

அவன் தான் அவளது வலியை உணர்ந்து, "ச்சை..." என்று ஒற்றைச் சொல்லோடு அவளது கையை விடுவித்தான்...

அவளது முகத்தைப் பார்க்க விரும்பாது விறுவிறுவென அறை கதவு வரை சென்றவன் பின் ஏதோ நினைத்தவனாய் அப்படியே நின்றான்...

"இப்போ உடம்பு எப்படியிருக்கு...?" என்று கேட்டான் அவளது முகம் பார்க்காது...

அவன் அப்படிக் கேட்டதும் அவளுக்குத் தான் மருத்துவமனையில் இருந்த நினைவு எழுந்து அவளை வேதனையில் ஆழ்த்தியது... அந்தக் கணம் அவள் அவனுடன் போகவே விரும்பினாள், துடித்தாள்... ஆனால் தன்னைப் புறக்கணிக்கும் அவனுடன் செல்ல அவளது மனம் இடம் கொடுக்கவில்லை... சுயமரியாதை தலைத்தூக்க அவள் அவனது முதுகினை துளைத்திடுவது போல் பார்த்தாள்...

"நீ வந்து பார்க்காது இருந்த வரை எல்லாம் நல்லா தான் இருந்தது... இனி தான் என்னவாகப் போகிறதோ..." என்று அவள் கோபத்தில் சிடுசிடுத்தாள்...

அவளது வார்த்தையில் அவனது உடல் விறைத்தது...

"ரொம்ப நல்லது... உனக்குத் தான் உன் அத்தான் இருக்கிறாரே... ரொம்ப நல்லவர்..." என்று கடைசி வார்த்தைகளை அழுத்தி கூறியவன்,

"அவன் உன்னைப் பாதுகாப்பாய் பார்த்து கொள்வான்..." என்று நக்கலாய் முடித்தான்...

"நிச்சயமாய்... அதில் எந்தவித சந்தேகமும் வேண்டாம்..." என்றாள் அவள் உறுதியான குரலில்...

அவளது உறுதியில் அவன் அவளைத் திரும்பி பார்த்தான்...

"வாழ்த்துக்கள்..." என்றான் அவன் உணர்வில்லாது...

"எதுக்கு...?" அவளது விழிகள் யோசனையாய்ச் சுருங்கியது...

"உன் அத்தானுடனான உனது திருமணத்துக்கு..." என்றவன் அவளது பதிலை எதிர்பாராது சென்றுவிட்டான்...

அவனது வார்த்தையில் அவள் அதிர்ச்சியில் உறைந்து போனாள்... அவளது விழிகளில் கண்ணீர் நிரம்பியது... என்ன வார்த்தைகள் கூறிவிட்டுச் செல்கிறான் என்று...

"நிஷா..." பத்ரிநாத்தின் குரலில் அவள் சுயவுணர்வு பெற்று அவரைப் பார்த்தாள்...

"யார் வந்துவிட்டு போனது...?"

அவள் பதில் சொல்லாது தலைகுனிந்து கொண்டாள்...

"விஷ்ணுவா...?" என்றவரை கண்டு அவள் திகைப்புடன் நிமிர்ந்து பார்த்தாள்...

"அவன் வந்து, போனது எனக்குத் தெரியும்... நீங்க ரெண்டு பேரும் பேசி ஒரு முடிவுக்கு வாங்கன்னு தான் நான் வெளியில் காத்திருந்தது..." என்றவரை அவள் வியப்பாய் பார்த்தாள்...

"உட்கார்..." என்று அவளைச் சோபாவில் அமர்த்தியவர் தானும் உடனமர்ந்து,

"என்ன முடிவு எடுத்திருக்க...?" என்று கேட்க...

அவள் மனதில் உறுதி எடுத்தவளாய் அவரை நிமிர்ந்து பார்த்தாள்... தான் மனதில் எடுத்த முடிவை அவள் அப்படியே அவரிடத்தில் கூற...

அவர் யோசனையாய் அவளைப் பார்த்தார்... ஏனெனில் அவள் மருத்துவமனையில் இருக்கிறாள் என்று அவர் கூறியும் சிம்மவிஷ்ணு அவளை வந்து பார்க்காதது அவருக்குச் சிறு உறுத்தலாக இருந்தது... அவன் வந்து பார்த்த வேளையில் தந்தையும், மகனும் மருத்துவரிடம் அல்லவா பேசி கொண்டிருந்தனர்...

"மாமா..." என்று அழைத்தவளை புன்னகையுடன் பார்த்தவர்,

"நானும் அதையே தான் நினைச்சேன்..." என்றவரை துயரத்துடன் அவள் பார்த்தாள்...

'நீங்க நான் வாழ்றதுக்காக யோசிக்கிறீங்க மாமா... ஆனா நான் அவனை அழிப்பதை மட்டுமே யோசிக்கிறேன்...' என்று அவள் விரக்தியுடன் நினைத்து கொண்டாள்...

"உனக்கு வாங்கிய பட்டுப்புடவை, நகைகள் எல்லாம் எதற்குன்னு நீ நினைச்ச... அதுக்காகத் தான் வாங்கியது..." என்றவரை கண்டு அவள் ஆச்சிரியத்தில் விழி விரித்தாள்...

"நீ இப்படிக் கேட்பது தான் எனக்கு ஆச்சிரியமாக இருக்குது... விஷ்ணு நல்லவன் தான்... ஆனா இது சரிவருமா...?" என்று கேட்க...

"எல்லாம் சரிவரும் மாமா..." என்று உறுதியாய் கூறியவளை கண்டு அவர் யோசனையுடன் பார்த்துக் கொண்டிருந்தார்...

அதே நேரம் காரில் சென்று கொண்டிருந்த சிம்மவிஷ்ணுவும் அவளைத் தான் நினைத்துக் கொண்டிருந்தான்... இனியாவது அவளது வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும்...

அவள் வன்மத்துடன் அவனை நெருங்கி வர... அவனோ அவள் மீது அக்கறை கொண்டு விலகி செல்வதில் முனைப்பாய் இருந்தான்...

***********************

"விஷ்ணு..."

அதிகாலையில் அலைப்பேசியில் ஒலித்த சுந்தரபாண்டியனின் குரலில் அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந்தமர்ந்தான் சிம்மவிஷ்ணு...

"என்னப்பா...? என்ன விசயம்...? யாருக்கும் ஒண்ணும் இல்லையே..." என்றவனது குரல் படபடப்பாய் ஒலித்தது...

"அதெல்லாம் ஒண்ணும் இல்லை..." அவர் சொன்னதும் தான் அவன் நிம்மதி அடைந்தான்...

"விஷ்ணு நாங்க சென்னையில் தான் இருக்கிறோம்..." அதைக் கேட்டு திகைத்து போனவன்,

"வீட்டுக்கு வராம எங்கே தங்கியிருக்கீங்க...?"

"ஹோட்டலில்..." என்றவர்,

"முக்கியமான ஒருத்தங்க கல்யாணத்துக்கு வந்தோம்... நீயும் அந்தக் கல்யாணத்துக்கு அவசியம் வரணும்... உடனே கிளம்பி வா..." என்று அவர் கட்டளையிடும் குரலில் கூறிவிட்டு அலைப்பேசியை அணைத்து விட்டார்...

அவன் புரியாது குழப்பத்துடன் அலைப்பேசியை உற்றுப் பார்த்தான்... பின்பு தலையைக் குலுக்கி கொண்டு எழுந்தவன் தந்தையைக் காண்பதற்காகக் கிளம்பி தயாராகினான்... அவன் பொதுவாகத் திருமண வீடுகளுக்கு வேட்டி அணிந்து தான் செல்வான்... கரும் பச்சை நிறத்தில் பட்டுச் சட்டை, வேட்டி அணிந்து கண்ணாடி முன் நின்றவன் தனது தோற்றத்தை கண்டு திருப்தி அடைந்தவனாய் புன்னகைத்தவன் வழக்கம் போல் தனது கை கொண்டு மீசையை முறுக்கி கொள்ளப் போனான்... பின் பத்ரிநாத்தின் நினைவில் அதைக் கைவிட்டு விட்டு அவன் தனக்குள் சிரித்துக் கொண்டான்...

ஏனோ அவர் முன் சிம்மம் போன்று மீசையை முறுக்கி கொண்டு கர்ஜிக்க அவனுக்கு விருப்பம் இல்லை... மாறாக அவரிடத்தில் குழந்தையாக இருக்கவே அவன் விரும்பினான்...

சிம்மவிஷ்ணு பெற்றோர் தங்கியிருந்த நட்சத்திர விடுதிக்குச் சென்ற போது அவர்கள் அங்கில்லை... தந்தைக்கு அழைத்துக் கேட்ட போது,

"நேரே கல்யாண மண்டபத்துக்கு வா..." என்று அதன் பெயரை கூறிவிட்டு அவர் வைத்து விட்டார்...

அவன் நேரே அவர் சொன்ன திருமண மண்டபத்திற்கு வந்து சேர்ந்தான்... மண்டபத்திற்குள் நுழையும் வரை அவன் எதைப் பற்றியும் சிந்திக்கவில்லை... ஆனால் அங்கு மேடையில் அமர வைக்கப்பட்டிருந்த நிஷிலாவை கண்டதும் நெருப்பை மிதித்தவன் போல் அப்படியே அதிர்ந்து போய் நின்றுவிட்டான்...

"விஷ்ணு..." தந்தையின் அழைப்பில் அவன் அவரைத் திரும்பி பார்த்தான்...

"அப்பா... நான்..." அவனுக்கு வார்த்தைகள் வெளிவராது தொண்டைக்குழியில் சதிராடி தவித்தது...

"ஒன்றும் பேசாதே..." என்று கடுமையுடன் கூறிவிட்டு அவர் முன்னே நடக்க... அவனோ பரிதவிப்புடன் அவர் பின்னே பலியாடு போல் நடந்தான்...

மேடைக்கு வந்தவனின் கண்களில் நிஷிலாவுக்கு நலங்கு செய்து கொண்டிருந்த அவனது அன்னை தென்பட்டார்... அவரைக் கண்டதும் அவனது மனதில் கலக்கம் சூழ்ந்து கொண்டது... அவரிடம் நிஷிலா பற்றி என்ன சொல்லி சமாளிப்பது என்று அவனுக்குத் தெரியவில்லை... அவன் மனம் பாரமாய்க் கனக்க சிலையாய் நின்றிருந்தான்...

"உன் அம்மாவுக்கு ஒன்றும் தெரியாது... நான் சொல்லவில்லை... காதல் திருமணம் என்பதோடு முடித்துக் கொண்டேன்... ஆனா உன்னிடம் இருந்து இப்படி ஒரு பாதகச் செயலை நான் சற்றும் எதிர்பார்க்கலை விஷ்ணு... உன்னை என் மகன்னு சொல்லிக்கவே எனக்கு வெட்கமா இருக்கு... உன்னோடு ஒப்பிடும் போது எதிலும் வெளிப்படையாக இருக்கும் மாதவன் பரவாயில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது..." என்று கூறிய தந்தையின் ஒவ்வொரு வார்த்தையிலும் அவரது அளவில்லாத வெறுப்புத் தெறித்தது...

அவன் செய்த காரியத்திற்கு எந்தச் சப்பைக்கட்டும் கட்ட முடியாது... எந்த விளக்கமும் கூற முடியாது... அதைக் கூற முடியாத சூழ்நிலை அவனது... அதனால் அவன் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு அமைதியாக நின்றிருந்தான்... அவனது மனமோ உலைக்களமாய்க் கொதித்தது...

"விஷ்ணு, வா வா... உன் கிட்ட விசயத்தைச் சொல்லி உன்னையும் அழைச்சிட்டு வரணும்ன்னு உங்கப்பா கிட்ட சொன்னேன்... சர்ப்ரைஸ் அது இதுன்னு சொல்லி மறுத்துட்டார்... என் மருமகள் ரொம்ப அழகாயிருக்கா விஷ்ணு... இவளுக்காகத் தான் அடிக்கடி அப்படிக் கேட்டுட்டு இருந்தியோ...?" என்ற அன்னையைக் கண்டு 'எப்படி?' என்று அவன் தெரியாது விழித்தான்...

"அதான்டா, வசதியில்லாத வீட்டு பெண்ணா இருந்தா ஏத்துக்குவீங்களான்னு கேட்டியே..."

அதைக் கேட்டு அவன் முகம் வெளிறிப் போனான்... அவன் கேட்டதோ வேறு அர்த்தத்தில்... அவர் புரிந்து கொண்டதோ வேறொரு அர்த்தத்தில்...

"முதலில் அவள் வீட்டில் ஒத்துக்கலையாமே... அதான் நீ அப்படிக் கேட்டதா உங்கப்பா சொன்னாருடா... பொண்ணு வீடும் நம்மளை மாதிரி நல்ல வசதி தான் போலிருக்கு... ஆனா எனக்கு அது எதுவும் வேண்டாம்... என் மருமகள், பேர குழந்தை மட்டும் போதும்... இத்தனை நாள் நான் உயிரோடு இருந்ததுக்கு இன்னைக்குத் தான் அர்த்தம் கிடைச்சிருக்கு..." என்றவரின் பூ மனதினை நோகடிக்க முடியாது வலிய வரவழைத்த சிரிப்புடன் அவன் அவரைப் பார்த்திருந்தான்...

"இருந்தாலும் உன் மேல் கோபம் தான் விஷ்ணு..." என்றவரை கண்டு,

"ம்மா..." என்றழைத்தான் பரிதாபமாய்... தாய் பசுவினை தேடும் சேய் கன்று போலிருந்தது அவனது குரல்...

"பின்னே என்னடா...? நான் என்ன காதல் கல்யாணத்துக்கு எதிரியா...? நீ இப்படி உன் கல்யாணத்தை என் கிட்ட சொல்லாம மறைச்சிட்டியே..." என்று மனத்தாங்கல் கொண்டவரை அவன் விழி கலங்க அணைத்துக் கொண்டான்...

சேயின் அத்தனை தவறுகளையும் மன்னிக்கத் தாயுள்ளத்தால் மட்டுமே முடியும்... அத்தகைய தாயை தனக்குக் கொடுத்த கடவுளுக்கு அவன் மனதார நன்றி கூறிக் கொண்டான்... அந்தக் கணம் அவனது பார்வையில் இளவரசி தென்பட்டார்...

"அவள் தாயல்ல... பேய்..." என்று அவனது உதடுகள் குரோதமாய் முணுமுணுத்தது...

"சம்பந்தி, உங்களைக் கூப்பிடுறாங்க பாருங்க..." என்றபடி அங்கு வந்த பத்ரிநாத் மீனாட்சியை அனுப்பி வைத்து விட்டு சிம்மவிஷ்ணு பக்கம் திரும்பினார்...

"அப்புறம் விஷ்ணு... என்ன இந்தப் பக்கம் காத்து வீசுது..." என்று கேட்டார் கிண்டலாய்...

அவன் பல்லை கடித்துக் கொண்டு அமைதியாக நின்றான்...

"இப்பவாவது நிஷாவை உங்க மனைவின்னு ஊரறிய சொல்வீங்களா...? மாட்டீங்களா...?" என்றவரது கேலியில் அவரை உறுத்து விழித்தவன்,

"என் அப்பா, அம்மாவை வைத்து என்னை லாக் பண்ணுறீங்களா பத்திப்பா..."

அவனது 'பத்திப்பா'வில் மனம் நெகிழ்ந்தவர், "அப்படின்னு நீ ஏன் நினைக்கிற விஷ்ணு...? உன் வாழ்க்கை மீது கொண்ட அக்கறையாகக் கூட இது இருக்கலாம் இல்லையா...?"

"வேடிக்கையா இருக்கே... உங்க வீட்டுப் பொண்ணைக் கடத்திட்டுப் போய்க் கற்பழிச்சவன் கையில் அவளைப் பிடித்துக் கொடுப்பது உங்களுக்கே அசிங்கமா இல்லை..." என்றான் அவன் சற்று கோபமாய்...

அவனை உற்று பார்த்தவர் பின் சிரித்தபடி, "கற்பழிச்சவன் எவனும் தன்னோட குழந்தைக்காக இப்படித் துடிக்க மாட்டான்... நீ குழந்தைக்காகத் துடிச்சது போல் நிஷாவுக்காகவும் துடிச்ச... இதுக்குப் பெயர் என்ன விஷ்ணு...?"

"வெறும் பழியுணர்ச்சி மட்டுமே..." என்றான் அவன் உணர்வில்லாத குரலில்...

"எப்படி...? உன்னுடைய லாஜிக் எனக்குப் புரியலை..." என்றவரிடம்,

"அவளும் குழந்தையும் நன்றாக இருந்தால் தான் என் எண்ணம் நிறைவேறும்..."

"இப்போதும் உன் எண்ணம் நிறைவேற எந்தத் தடையும் இல்லை... அதுக்காக நிஷாவையும், குழந்தையையும் தண்டித்து விடாதே... பாவம் அவர்கள்... இரண்டு பேருமே குழந்தைகள் தான்... ஒன்று வளர்ந்த குழந்தை, ஒன்று வளராத குழந்தை அவ்வளவே..." என்றவரது குரல் தழுதழுத்துப் போனது...

கலங்கிய கண்களைத் துடைத்து கொண்டவரின் கைகளை அவன் இறுக பிடித்துக் கொண்டான்... வார்த்தையால் அவன் பதில் கூறாவிட்டாலும் அவனது இறுகிய பிடி அவருக்கான பதிலை கூறுவது போலிருந்தது...

"விஷ்ணு, வந்து நலுங்கு வைப்பா..." என்று மீனாட்சி அவனை அழைக்க... அவன் மரத்த மனநிலையுடன் அங்குச் சென்றான்...

அடர் பச்சை நிற பட்டுப்புடவை உடுத்தி அம்சமாய், அழகாய் இருந்த நிஷிலாவின் அழகு அவனது கருத்தில் பதியவில்லை... அவன் முடுக்கி விட்ட பொம்மை போன்று அங்கிருந்த சந்தனத்தை எடுத்து அவளது கன்னங்களில் தடவி விட்டான்... அவனது தொடுகை அவளுக்கு நெருப்பாகக் காந்தியது... அவள் மனதின் கோபத்தினை வெளிப்படுத்த முடியாது தவித்திருந்தாள்...

“விஷ்ணு இதைப் போட்டுவிடப்பா...” என்றபடி மீனாட்சி அவனிடம் வைர வளையல்களை நீட்டினார்...

அவன் மறுக்க இயலாது அதை வாங்கி அவளது மலர் கரத்தில் அணிவித்து விட்டான்... அவளது கரத்தின் மென்மை கூட அவனது மனகடினத்தை இளக்கவில்லை...

“இப்போ என்ன பண்ண போகிற? உங்க அம்மா கிட்ட உண்மையைச் சொல்லி என்னை விட்டுட்டுப் போகப் போறீயா...? இல்லை அவங்களுக்காகப் பொய்யை

ஒத்துகிட்டு என்னை உன் கூடக் கூட்டிட்டுப் போகப் போறீயா...?”

அவள் மனதின் தகிப்பு தாங்காது அவனைக் குதறி எடுத்து விடும் நோக்கில் நக்கலாய் கேட்க... அவன் அவளை வெட்டவா? குத்தவா? என்பது போல் கொலைவெறியோடு பார்த்து வைத்தான்...

எப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் அவனைக் கொண்டு வந்து நிறுத்தி இருக்கிறாள் ராட்சசி...!

"எல்லாம் நல்லபடியாக முடிந்தது... இனி எங்க நிஷா பத்தின கவலை தீர்ந்தது... இனி நீங்க உங்க வீட்டுக்கு அவளைக் கூட்டிட்டு போயிருவீங்க தானே..." என்று கூறிய இளவரசியைச் சிம்மவிஷ்ணு தீப்பார்வை பார்த்தான்...

அவரது திட்டம் அவனுக்குத் தெரிந்தது தானே... நிஷிலாவை வைத்து அவர் தன்னை அடக்க முயல்வது கண்டு அவன் பெரும் கோபம் கொண்டான்... யாருக்கும் அடங்காது நிற்கும் களிறு போன்று அவன் தன் முழு உயரத்திற்கும் நிமிர்ந்து நின்று அவரை உறுத்து விழித்தான்... அவனது கூர்பார்வையில் இளவரசி தான் தனது பார்வையைத் திருப்பிக் கொள்ள வேண்டியதாய் போயிற்று...

இப்போது அவனது கோபம் எல்லாம் நிஷிலாவின் மீது திரும்பியது... அவன் அவளைக் கோபத்தோடு பார்த்தான்...

"தங்கம், எங்க கூட நம்ம வீட்டுக்கு வருகிறாயா...? நான் உன்னை என் மகள் போல் பார்த்துக்கிறேன்..." என்று மீனாட்சி அவளிடம் பாசத்துடன் கேட்டார்... அவளோ அதற்கு,

"வருகிறேன் அத்தை... ஆனா என்னைப் புடவை கட்ட சொல்லி வற்புறுத்த கூடாது..." என்றாள் பாவம் போல்...

"சரிம்மா... நீ உன் இஷ்டத்துக்கு இருக்கலாம்... உன்னை யாரும் ஒண்ணும் சொல்ல மாட்டாங்க..." என்று அவளது கன்னம் பற்றிக் கொஞ்சியவரிடம்,

"நீங்க முதல்ல மாமா கிட்ட கேட்டு சொல்லுங்க... அவங்களுக்கு நான் புடவை கட்டினால் தான் பிடிக்கும்ன்னு அதையே கட்ட சொல்வாங்க... ஆனா எனக்குப் புடவை பிடிக்காது..." என்று சிணுங்கியவளை அவன் முறைத்துப் பார்த்தான்...

அந்தக் கணம் அவளும் அவனைத் தான் பார்த்து கொண்டிருந்தாள்... அவளது கொஞ்சல் வாய் மொழிகளுக்கு எதிர்ப்பதமாய் அவளது விழிகள் இரண்டும் கனலை கக்கி கொண்டிருந்தது...

ஆணுக்கு மட்டும் தான் வன்மமும், கோபமும், பகையும், பழிவாங்கும் குணமும் சொந்தமா...? பெண்ணவளுக்கு அது இல்லையா...? அவளும் ஆணை போன்று அழும் போது அழுது, சிரிக்கும் போது சிரிப்பவள் தான்... அவளும் ஆயிரம் உணர்வுகள் கொண்டவள் தான்... பெண்ணவளின் ஆக்கும் சக்தியை விட அழிக்கும் சக்தி மிகவும் சக்தி வாய்ந்தது...

சிம்மவிஷ்ணுவிற்கு இழைக்கப்பட்ட துரோகம் அவனை இந்தளவிற்குக் கெட்டவனாக மாற்றியிருக்கிறது என்றால், அவன் பெண்ணவளுக்குச் செய்த துரோகம் அவளை எந்தளவிற்கு மாற்ற போகிறதோ...???

"அவனின் எதிர்பார்ப்பு
அவளது அனுசரணை,
அவளின் எதிர்பார்ப்பு
அவனது அருகாமை,
இரண்டும் சந்திக்கும் வேளையில்
அவனது குரோதம் தீருமோ?
அவளது வன்மம் மாறுமோ?
காதல் மலருமோ? இல்லை
காட்சிகள் வேறுபடுமோ?"

கொல்லும்...!!!

## நிழல் : 17

'என்னமோ உயிருக்கு உயிரா, அந்நியோன்யமா வாழ்ந்த மாதிரி எப்படி எல்லாம் பில்டப் கொடுக்கிறாள்...? இவளை எல்லாம்...?' சிம்மவிஷ்ணுவால் மனைவியை நினைத்துக் கோபத்தில் பல்லை மட்டுமே கடிக்க முடிந்தது...

சில நாட்களுக்கு முன்பு வரை அவனுக்கு நிஷிலா மீதிருந்த கோபம் என்ன...? இப்போது தான் ஏன் இப்படிப் பரிதவிக்கிறோம்? என்று அவனுக்குச் சுத்தமாய்ப் புரியவில்லை... இதோ இந்தக் கணம் கூட அவன் தனது பெற்றோரிடம் நிஷிலா தனது மனைவி இல்லை என்று மறுத்திருக்க முடியும்... ஆனால் அதைச் செய்யாது தந்தை சொன்னது கேட்டு அமைதியாக இருக்கிறானே... அதிலும் தாயின் முகத்திலிருந்த மகிழ்ச்சியைப் பார்க்கும் போது அவனால் எதையுமே மறுத்து கூற முடியவில்லை... அதே சமயம் இந்த இக்கட்டில் தன்னை நிறுத்தியிருக்கும் மனைவி மீது ஆத்திரமும் வந்தது...

அவனது அத்தனை பழியுணர்ச்சியும் எங்கே போனது...? தனது அன்னையிடத்திலா? அல்லது தனது மகவை சுமந்திருக்கும் அதன் அன்னையிடத்திலா? அந்தக் கணம் அவனுக்கு ஒன்று மட்டும் புரிந்தது... ஒரு பெண்ணாய் அவனது மனதினை வெல்ல முடியாத நிஷிலா ஒரு தாயாய் அவனது மனதில் நிலை கொண்டு விட்டாள் என்று... அவன் அவளைத் தன் மனைவியாய் மதிக்கவில்லை... ஆனால் தனது மகவின் அன்னையாய் அவளுக்கு மரியாதை கொடுத்தான்... அந்த மரியாதையையும் அவள் தனது செயலால் இல்லாதாக்கி விட்டாள்...

'ராட்சசி பின்னே எப்படியிருப்பாள்...? அவளது அத்தையைப் போல் தானே இருப்பாள்...' என்று மனதிற்குள் முணுமுணுத்து கொண்டவன் வெளியில் அவளை முறைக்கத் தவறவில்லை...

"பாருங்க அத்தை... நான் சொன்னதுக்கு மாமா என்னை முறைச்சு பார்க்கிறாங்க...?" அவனை நோக்கி கை நீட்டியவள் வேண்டுமென்றே கண்களைக் கசக்கினாள்...

அதைக் கேட்டு அவன் திகைத்து போனவனாய் 'ஙே' என்று விழித்தான்...

"விஷ்ணு, அவள் சின்னப் பொண்ணுடா... உன் கட்டுப்பெட்டித்தனத்தை எல்லாம் அவள் கிட்ட காட்டாதே..." என்று கண்டிப்புடன் கூறிய அன்னையைப் பாவமாய்ப் பார்த்தவன் பின்பு மனைவியைக் கண்டு 'அடிப்பாவி' என்பது போல் கோபமாய்ப் பார்த்தான்...

இந்தக் கூத்தை எல்லாம் பார்க்க சகிக்க முடியாதபடி பவித்ரன் பல்லை கடித்துக் கொண்டு நின்றிருந்தான்... தனது தந்தையும், நிஷிலாவும் செய்த இந்த ஏற்பாட்டில் அவனுக்குக் கொஞ்சமும் விருப்பமில்லை... சின்னப் பெண் என்று பாராது அவளைக் கசக்கி முகர்ந்து தூக்கி எறிந்த ஒருவன் கையில் மீண்டும் அவளைக் கொடுக்க அவனுக்குச் சிறிதும் விருப்பம் இல்லை...

"டாட், நீங்க அவன் மேல் ரொம்ப நம்பிக்கை வைக்கிறீங்க... இது நல்லதுக்கு இல்லை... அவன் நம்ம நிஷிம்மாவை கஷ்டப்படுத்தினா என்ன பண்ணுவீங்க...?"

"தீரா, அவனும் நல்லவன் தான்..." என்று மகனை ஆறுதல்படுத்த முயன்றார் பத்ரிநாத்...

"யாரு...? அவன் நல்லவனா....? ஒரு சின்னப் பெண்ணைக் கடத்தி, அவளைக் கெடுத்து, குழந்தையைக் கொடுத்து, அவளை நிர்கதியாய் நம்ம கிட்ட விட்டுட்டு போன அவனா நல்லவன்...? அவனுக்கும் பொண்ணுங்களை விற்கும் புரோக்கர்களுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது...?"

இதற்குப் பத்ரிநாத்திடம் பதில் இல்லை... சிம்மவிஷ்ணு செய்தது எல்லாமே தவறு தான்... சரியென்று யாரும் கூறிவிட முடியாது... அதையும் மீறி அவன் நல்லவன்... நிஷிலா, குழந்தை மீது அக்கறை உள்ளவன்... அதை அப்படியே மகனிடம் கூறிய போது,

"இவ்வளவு நேரம் நான் என்ன கதாகாலட்சேபமா நடத்திட்டு இருக்கேன்... அக்கறை உள்ளவன் ஏன் அப்படிச்

செய்யணும்...? முறைப்படி அவளைப் பெண் கேட்டு வந்து கல்யாணம் பண்ணியிருக்க வேண்டியது தானே...?"

மகனது கேள்வி நியாயமான கேள்வி தான்... சிம்மவிஷ்ணு ஏன் இப்படிச் செய்தான்...? இதற்கு மட்டும் அவரிடம் பதிலில்லை... அவரும் எவ்வளவோ அவனின் குடும்பப் பின்னணி முதல் அவனது ஜாதகம் வரை அலசி ஆராய்ந்து விட்டார்... அவனுக்கும் தங்கள் குடும்பத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று விசாரித்த தகவல்கள் கூறியது... ஒருவேளை தனது மச்சினர்கள் தொழில் ரீதியாய் அவனை ஏதும் செய்துவிட்டனரா? என்று எண்ணி அதையும் தீவிரமாகத் தேடி பார்த்துவிட்டார்... இவர்கள் யாரும் அவனிடம் வாலாட்ட முடியாதபடி அவன் மிகுந்த உயரத்தில் சிம்மசொப்பனமாய்த் திகழ்ந்தான்... அப்படி இருந்தும் இந்தத் தவறு எதனால் நிகழ்ந்தது...? இந்தக் கணம் வரை அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை...

அதே சமயம் அவனை வில்லன் போல் பார்க்கவும் முடியவில்லை... அவனின் 'பத்திப்பா' என்கிற ஒற்றை அழைப்பு அவரிடத்தில் அவனை நாயகனாகவே காட்டியது... அவன் ஏன் அப்படி அழைக்கிறான்? என்று இதுவரை அவருக்குப் புரியவில்லை... ஆனால் அந்த அழைப்பு அவருக்கு மிகவும் பிடித்திருந்தது...

இதோ இந்தக் காரணங்களை மீறி சாட்டையடியாய் கேள்வி கேட்கும் மகனிடம் அவரால் பதில் கூற முடியவில்லை...

"நிஷாவின் எதிர்காலத்தைப் பார்க்க வேண்டாமா தீரா...?"

"அதுக்காக இப்படியா...?"

"ஹாஸ்பிட்டலில் நடந்ததைக் கொஞ்சம் யோசிச்சு பார் தீரா... அவன் குழந்தைக்காகத் தவித்ததைப் பார்த்த பிறகுமா நீ இப்படிப் பேசுகிறாய்...?"

"அது அவன் குழந்தை... அதான் தவித்திருக்கிறான்..."

"குழந்தையை விடு... அவன் நிஷாவிடம் நடந்து கொண்டதை பார்த்த தானே... அந்த அன்பை நீயோ,

நானோ அவளுக்குக் கொடுக்க முடியாது..."

இதைக் கேட்டதும் பவித்ரனால் எதுவும் பேச முடியவில்லை... அன்று நிஷிலா சிம்மவிஷ்ணு நெஞ்சில் முகம் புதைத்து அழுதது, அவனுடன் உரிமையாகச் சண்டை போட்டது, அதை அவனும் புன்னகையுடன் ஏற்றுக் கொண்டது எல்லாமே அவனுக்கு அதிசயமாக இருந்தது... அவர்களைக் காணும் போது ஏதோ காலக் காலமாய் அந்நியோன்யமாய் வாழும் தம்பதிகளைப் போன்று இருந்தது...

"அவனால் நிச்சயம் நிஷாவை கஷ்டப்படுத்தியிருக்க முடியாது... இல்லைன்னா நிஷா இந்த முடிவை எடுத்திருக்க மாட்டாள்..."

அவன் அதிர்ச்சியாகத் தந்தையை நோக்கினான்...

"இது நிஷா எடுத்த முடிவு... நான் அவளுக்குத் துணை நிற்கிறேன்... அவ்வளவு தான்..."

பவித்ரன் நேரே நிஷிலாவிடம் போய் நியாயம் கேட்டான்...

"ஆமாம் அத்தான், நான் தான் இந்த முடிவு எடுத்தது..." என்றாள் அவள் உறுதியான குரலில்...

"ஏற்கெனவே நீ அவனிடம் கஷ்டப்பட்டது போதாதா...? இனியும் போய்..." அவன் தயக்கத்துடன் அவளைப் பார்த்தான்... அவனது வார்த்தையில் மனம் நெகிழ்ந்தவள்,

"நான் அவன் கூடத் தனியா போகலையே... அவனோட அப்பா, அம்மா கூடத் தான் போகிறேன்... அதனால் பயமில்லை..."

"எல்லாம் சரி தான்... எந்நேரமும் அவனுடைய அப்பா, அம்மா உன் கூடயிருக்க முடியாது நிஷிம்மா..." அவன் கூறியதன் அர்த்தம் புரிந்து அவளது முகம் கறுத்துப் போனது...

"அப்படி எல்லாம் எதுவும் நடந்துவிடாது அத்தான்..." என்று தைரியமாக நிமிர்ந்து நின்றவளை அவனும் அதற்கு மேல்

வற்புறுத்தவில்லை...

பவித்ரனுக்குச் சிம்மவிஷ்ணுவின் பெற்றோரை பார்த்ததும் சற்று நிம்மதியாக இருந்தது... அவர்கள் மிகவும் நல்ல மாதிரியாகத் தெரிந்தனர்... அதனால் அவன் சற்று அமைதி அடைந்தான்... ஆனால் முழுவதுமாக இல்லை...

கணவன், மனைவியைப் புகைப்படம் எடுக்க எண்ணிய புகைப்படக்காரர் இருவரையும் அருகருகே நிற்க சொன்னார்... அதற்குச் சிம்மவிஷ்ணு அவரை முறைத்த முறைப்பில் அவர் பயந்து பின்வாங்கினார்...

"விஷ்ணு, மருமகளின் கைப்பிடித்து எழுவதற்கு உதவி செய்ப்பா..." மீனாட்சியின் குரலில் அவன் நிஷிலாவை திரும்பி பார்த்தான்...

பட்டுப்புடவையைக் கட்டி கொண்டு மேடிட்ட வயிற்றுடன் அவள் நாற்காலியில் இருந்து எழ கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு அவனது கை தானாக அவள் புறம் நீண்டது... அவனது செய்கையில் அவனை ஏறிட்டு பார்த்தவள் அவனது கையைப் பற்றாது முறைத்து பார்த்தாள்...

"ம்மா, உங்க மருமகளுக்கு என் கையைப் பிடிக்க இஷ்டம் இல்லையாம்..." என்று கூறி தன்னைப் பார்த்து கேலியாய் கண்சிமிட்டியவனைக் கண்டு அவளுக்கு உள்ளூர கோபம் வந்தது...

"ஏன்டாம்மா...? வேணும்ன்னா என் கையைப் பிடிச்சிட்டு எழுந்துக்கோ..." என்று அவர் தனது கையை நீட்ட...

"வேண்டாம்மா... நான் பார்த்துக்கிறேன்..." என்றவன் வலுக்கட்டாயமாக மனைவியின் கையைப் பிடித்து எழுப்பி நிற்க வைத்தான்...

மகனது செய்கையைச் சுந்தரபாண்டியன் வெறுமையாய் பார்த்துக் கொண்டிருந்தார்... நான்கு நாட்களுக்கு முன் பத்ரிநாத் அவரிடம் வந்து விசயத்தைச் சொன்ன போது அவர் நம்பாது ஆத்திரத்தில் குதித்தார்...

"என் மகன் அப்படிப் பண்ணியிருக்க மாட்டான்... நாங்க அவனை அப்படி வளர்க்கவும் இல்லை... சின்ன வயசில் இருந்து அவனை நாங்க பார்க்கிறோம்... எந்தப் பெண்ணிடமும் அநாவசியமா ஒரு வார்த்தை பேசி பார்த்தது இல்லை... உங்க வீட்டுப் பெண்ணை அப்படிச் செய்தது என் மகனா இருக்காது... வேறு யாராவது இருக்கக் கூடும்..." என்று அவர் ஒரேடியாக மறுத்து பேசினார்...

"எந்த மகனும் இந்த இழிவான காரியத்தைத் தாய், தகப்பனுக்குச் சொல்லிட்டு செய்றதில்லை... நான் சொல்வதை நம்பலைன்னா நீங்க உங்க வீட்டில் வேலை செய்யும் மருதாணி என்னும் லேடியை விசாரிச்சி பாருங்க... அப்படி ஒருத்தங்க உங்க கிட்ட வேலை செய்றாங்க தானே...?" என்று கேட்ட பத்ரிநாத்தை திகைப்பாய் பார்த்தார் சுந்தரபாண்டியன்...

இவர்கள் நம்ப மாட்டார்கள் என்று தெரிந்து தான் பத்ரிநாத் நிஷிலாவிடம் தகுந்த ஆதாரத்தைக் கேட்டது... ஆதாரம் இல்லை, ஆனால் ஆள் இருக்கிறது என்று அவள் தான் மருதாணியைப் பற்றிக் கூறியிருந்தாள்...

மருதாணி குடும்பம் பரம்பரையாக அவர்களது குடும்பத்திற்கு விசுவாசமாக வேலை செய்பவர்கள்... அப்படிப்பட்ட மருதாணியை விசாரிக்கச் சொல்வதாகச் சொன்னால்...? அவருமே குழம்பி போனார்... உடனே மருதாணியை அழைத்து விசாரித்தார்...

"இவங்க சொல்றது உண்மையா...?" என்று அதட்டிய தங்களது 'ஐயா'வை கண்டு மிரண்டு போனாள் மருதாணி...

"இல்லைங்கய்யா... இவங்க பொய் சொல்றாங்க... நம்ம சின்னய்யா அப்படிப்பட்டவர் கிடையாதுங்களே..." என்று அவள் எஜமான விசுவாசத்தில் ஒரேடியாக மறுத்தாள்...

"பொய் சொல்லாதே... ஒரு சின்னப் பெண்ணின் வாழ்க்கை பாழாய் போனதுக்கு நீயும் உடந்தை... நீயும் ஒரு பெண்

என்பதை மறந்து பேசாதே..." என்று கோபமாய்ச் சீறினார் பத்ரிநாத்...

அவளோ அதற்கு எல்லாம் இளகாது நின்றிருந்தாள்...

"நீ சொல்ல போகும் உண்மையால் ஒரு சின்னப் பெண்ணின் வாழ்க்கை நல்லபடியாக அமைய போகிறது..."

அதைக் கேட்டு அவளது விழிகள் பளிச்சிட்டது... அதைக் கண்டு கொண்ட பத்ரிநாத் மேலே பேசினார்...

"நிஷா உன்னைப் பத்தி நிறையச் சொல்லியிருக்கிறாள்... அம்மா மாதிரி அவளைப் பார்த்துக்கிட்டேன்னு... அவளோட அம்மாவா அவளுடைய வாழ்க்கைக்கு ஒரு நல்ல பதிலை சொல்லு... இப்போ அவள் உங்க சின்னய்யா கூட வாழ விரும்புகிறாள்..."

"நிசம் தானுங்களா...? பாப்பா சின்னய்யா கூட வாழ விரும்புதா...? ரொம்பச் சந்தோசம்ங்க..." என்று உணர்ச்சி பெருக்கில் உண்மையைப் போட்டுடைத்த மருதாணியைக் கண்டு பத்ரிநாத் நிம்மதி அடைந்தார்... சுந்தரபாண்டியன் அவளை முறைத்துக் கொண்டிருந்தார்... அவளது 'பாப்பா' என்கிற அழைப்பே சொல்லாமல் சொல்லியது அவளுக்கு நிஷிலாவை நன்கு தெரியும் என்று...

"மருதாணி என் கிட்டேயே பொய் சொல்லும் அளவுக்கு உனக்குத் தைரியம் வந்திருச்சா...?" என்று அவர் கர்ஜிக்க...

"ஐயா, அப்படி எல்லாம் இல்லை... நம்ம சின்னய்யா தான் சொல்ல வேண்டாம்ன்னு..." என்று கண்கள் கலங்க இழுத்தவளை கோபத்துடன் பார்த்தவர்,

"நான் அவனுக்கு அப்பா... நீ என் கிட்ட தானே உண்மையா இருந்திருக்கணும்... அவன் அப்படிச் செஞ்சப்பவே நீ என் கிட்ட வந்து சொல்லியிருக்கணுமா வேண்டாமா?"

"ஐயா என்னை மன்னிச்சிருங்க..." என்றவள் நடந்தது அனைத்தையும் ஒன்றுவிடாது கூறினாள்...

அதைக் கேட்டு சுந்தரபாண்டியன் இரத்தம் கொதித்தது... எந்தப் புள்ளியில் மகன் இப்படிப் பாதை தவறிப் போனான் என்று அவரது மனம் மறுகி போய்த் துடித்தது...

மருதாணி மூலம் அங்குக் காவலுக்குச் சென்ற மற்ற வேலைக்காரர்களையும் விசாரித்து உண்மையை அறிந்து கொண்ட சுந்தரபாண்டியன் ஒரு மன்னராய் அப்பாவி பெண்ணுக்கான நியாயத்தை வழங்கிட எண்ணினார்... அதன் விளைவே இந்த வளைகாப்பு... இப்போதும் அவரது மனம் மகனை மன்னிக்கவில்லை... அவரது மனம் ஆற்றாமையில் குமுறிக் கொண்டிருந்தது...

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நியாயம் வழங்கிய அவர் இன்னமும் தவறு செய்த தன் மகனுக்குத் தண்டனை வழங்கவில்லையே... அது ஒன்று தான் அவரது நெஞ்சில் நெருஞ்சி முள்ளாய் உறுத்தி கொண்டிருந்தது... மகனும் எதிர்கேள்வி கேட்காது தனது தவறை ஒத்துக் கொண்டது ஒரு தகப்பனாய் அவரால் ஜீரணிக்க முடியவில்லை...

வளைகாப்பு மூலம் சிம்மவிஷ்ணுவின் மனைவியாய் நிஷிலா எல்லோருக்கும் அறிமுகப்படுத்தப்பட்டாள்... அதில் இருவருமே சந்தோசம் கொள்ளவில்லை... வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்ட ஒரு நிகழ்வாக அதைக் கருதினர்... அவன் மனதிற்குள் அவள் தனது மனைவி என்று தெரிந்த போதும் வெளிப்படையாய் அவளை அங்கீகரிக்க அவனுக்கு விருப்பம் இல்லை... அது போல் தான் அவளும்... அவனது செயலால் அவனை வேம்பாய் நினைத்து கசந்தவள் இன்று வேறுவழியின்றி அவனைக் கணவனாக ஊருக்கு உரக்க சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு போனதை நினைத்து மனம் வெம்பி போனாள்...

கணவன், மனைவியாய் மனம் வெறுத்தவர்கள் நண்பர்களாய் தோள் சாய்ந்ததை ஏனோ அந்த நொடி மறந்து போனார்கள்...!!!

"நினைச்சதை நடத்திட்டோம்ன்னு ரொம்பச் சந்தோசமாயிருக்கப் போலிருக்கு.?" கணவனது சீற்றமான

குரலில் தனது முகத்தை மலர்ச்சியாக வைத்து கொண்டவள்,

"இல்லையா பின்னே...? இமாலய சாதனை இல்லையா இது...?" என்றாள் கேலி குரலில்...

"என்ன நக்கலா...? இனி தான்டி உனக்கு இருக்கு கச்சேரி..." அவன் பல்லை கடிக்க...

"அதே தான் உனக்கும்..." என்று அடக்கப்பட்ட சினத்துடன் கூறியவளை கண்டு அவனது உதடுகள் கேலியாய் வளைந்தது...

"இன்னும் சின்னப்புள்ளத்தனமா யோசிக்கிறியே பேபி..." என்றவனைக் கண்டு அவள் உறுத்து விழிக்க...

"இவ்வளவு நாள் யாருக்கும் தெரியாது நடந்த விசயம்... இப்போ எல்லாருக்கும் தெரிய நடக்கப் போகுது... அவ்வளவு தான்... இதில் எனக்கு லாபம் தான்... உனக்குத் தான் சேதாரம் அதிகம் இருக்கப் போகுது..." என்றான் அவன் கிண்டல் குரலில்...

முதலில் புரியாது விழித்தவள் பின்பு புரிந்தவளாய் முகம் சிவக்க, "ஏய்... குழந்தை உண்டாகி இருக்கும் போது அதெல்லாம் தப்பு..." என்று படபடத்தவளை ஒரு மாதிரியாய் பார்த்தவன்,

"அப்படின்னு யார் சொன்னது...?" கேலியாய் புருவத்தை உயர்த்தியவன்,

"பேபி, இன்னும் பேபி மாதிரியா யோசிப்ப... ஒருவேளை நீ காட்டுற டாக்டரும் பேபியோ...? முதலில் அந்த டாக்டரை மாத்தணும்..." என்றவனது குரலில் அத்தனை நக்கல் இருந்தது...

அதைக் கேட்டு அவள் உறைந்து போனாள்... திகைத்து போய் விழித்தவளின் காதருகில் குனிந்தவன்,

"என்னைக் கட்டுப்படுத்த யாராலும் முடியாது... அப்படியிருக்கும் போது உன்னால் மட்டும் அது எப்படி

முடியும் பேபி...?" என்று கேட்டவனைக் கண்டு அவளது கருந்திராட்சை விழிகள் ரெண்டும் கண்ணீரில் மிதந்தது...

அதை அவனுக்குக் காட்டாது அவள் தனது முகத்தைத் திருப்பிக் கொண்டாள்... என்ன செய்வது என்று திக்குத் தெரியாது அவள் தவித்தாள்... அவளின் நிலை யாருக்கும் வர கூடாது... புடவை முந்தானையைத் திருகி கொண்டு திருதிருத்தவளை கண்டு பவித்ரன் அங்கே விரைந்து வந்தான்...

"என்னடா, எதுவும் வேணுமா...?" அவன் சிம்மவிஷ்ணுவை முறைத்தபடி அவளிடம் கேட்டான்...

"அத்தான், எனக்கு ரெஸ்ட் எடுக்கணும் போலிருக்கு..."

"நீ வா குட்டிம்மா..." என்றபடி அவன் அவள் தோள் மீது கை போட்டு அழைத்துச் சென்றான்...

அன்று கோவிலில் அவனது கையை விலக்கி விட்ட நிஷிலா இன்று அப்படி எதுவும் செய்யாது அவனது தோளில் ஆறுதலாகச் சாய்ந்து கொண்டாள்... அவனும் அவளை ஆதரவாக அணைத்துக் கொண்டான்...

சிம்மவிஷ்ணு என்றுமே அவர்கள் இருவரையும் கண்டு சந்தேகப்பட்டது இல்லை... அவர்களைச் சேர்ந்து பார்க்கும் போது கோபம் வரும்... அதுவும் தன் மீதே, தனது கையாலாகாத நிலையை நினைத்து... இதோ இப்போதும் அவனுக்கு அவர்களைக் கண்டு சந்தேகம் தோன்றவில்லை... என்றும் தோன்றும் கோபம் கூட இன்று அவனுக்குத் தோன்றவில்லை...

மண்டபத்தில் இருந்து நிஷிலாவை வீட்டிற்கு அழைத்துச் செல்ல வேண்டிய நேரம் வந்தது... சிம்மவிஷ்ணு குடும்பத்தினர் மட்டும் அந்த அறையில் தனித்து இருந்தனர்...

"மருமகளை நம்ம வீட்டுக்கு கூட்டிட்டு போகலாமா விஷ்ணு...?" என்று மீனாட்சி அவனிடம் கேட்டார்...

"ம், சரிம்மா..." என்று வெளியில் ஆமோதிப்பாய் தலையசைத்தவன் உள்ளுக்குள் இதை எப்படித் தடுத்து நிறுத்துவது என்று பலமாக யோசித்துக் கொண்டிருந்தான்...

"அதெல்லாம் வேண்டாம் மீனா... மருமக பொண்ணு அவள் அம்மா வீட்டில் நிம்மதியா இருக்கட்டும்..."

தந்தை சொன்னது கேட்டு அவன் மனமும், முகமும் மலர அவரைப் பார்த்தான்... பின்பு முகத்தைச் சாதாரணமாக வைத்துக் கொண்டான்... அவர் அவனுக்கு அப்பாவாயிற்றே... அவனது முகமாறுதலில் அவனின் எண்ணவோட்டத்தைக் கண்டுபிடித்து விடுவாரே...

"நம்ம வீட்டில் அந்த நிம்மதி கிடைக்காதா...?" மனத்தாங்கலுடன் கேட்டார் மீனாட்சி...

"நான் அந்த அர்த்தத்தில் சொல்லலை மீனா... நீ விஷ்ணுவை உண்டாகி இருக்கும் போது பிரசவத்துக்கு உங்க அம்மா வீட்டுக்கு தானே போன... நான் எவ்வளவோ தடுத்தும் நீ கேட்கலையே..."

"அது..." என்று அவர் திணறினார்... அன்னை வீட்டுப் பாசம் இன்றும் அவர் மனதில் இருக்கிறதே...

"அது மாதிரி தானே அந்தப் பொண்ணுக்கும் இருக்கும்... இத்தனை நாள் அந்தப் பொண்ணை ஏத்துக்காதவங்க இப்பத்தான் ஏத்துக்கிட்டு இருக்காங்க... அதனால அவள் அவங்க அம்மா, அப்பா கிட்ட சீராடிட்டு வரட்டும்... அவளுக்கும் அவங்க அப்பா, அம்மா கூட இருக்கணும்ன்னு ஆசையிருக்காதா...? பேர குழந்தை பிறந்ததுக்கு அப்புறம் அவங்க ரெண்டு பேரையும் நம்ம வீட்டுக்கு கூட்டிட்டு போகலாம்..." என்று அவர் திட்டவட்டமாக உரைத்தார்...

அவருக்குத் தெரியாதே நிஷிலா பிறந்தவீட்டில் படும் பாடு...???

வேறுவழியின்றி மீனாட்சி அரை மனதாய் அதற்குச் சம்மதித்தார்... சிம்மவிஷ்ணு சந்தோசமான மனதுடன்,

நிர்மலமான முகத்துடன் நின்றிருந்தான்...

"மீனா, இப்போ நீ போய் உன் மருமகளைச் சீராட்டிட்டு வா... நாம ஊருக்கு கிளம்பணுமே..." என்றதும் அவர் மகிழ்ச்சியோடு வெளியில் செல்ல... தாய் பின்னேயே செல்ல முயன்ற சிம்மவிஷ்ணுவை,

"விஷ்ணு, நீ இரு..." என்று தந்தையின் குரல் தடுத்து நிறுத்தியது...

வேறுவழியின்றி அவரது கட்டளையில் அப்படியே தேங்கி நின்றவன் அவரது முகத்தைப் பார்க்க முடியாது வெட்கி தலைகுனிந்தான்...

"இனி என்ன பண்ணலாம்ன்னு முடிவு எடுத்திருக்க...?" என்றார் அவர் சற்று கடுமையுடன்...

அதற்கு அவன் பதில் பேசாது நின்றிருந்தான்...

"உன் மேல் ரொம்ப நம்பிக்கை வைத்திருந்தேன் விஷ்ணு... நீ எல்லாத்தையும் ஒரு நொடியில் அழித்து விட்டாய்... நீயா இப்படின்னு என்னால் இன்னமும் நம்ப முடியலை... ஆனா கண்ணுக்கு முன் சாட்சி இருக்கும் போது என்னால் நம்பாமல் இருக்கவும் முடியவில்லை... இது எல்லாமே கனவுன்னு யாராவது சொல்ல மாட்டாங்களான்னு என் மனசு கிடந்து அடிச்சிக்குது... ஆனா எல்லாமே நனவாய் இருக்கே விஷ்ணு..." என்று நா தழுதழுக்க, கண்ணீர் மல்க கூறியவரை கண்டு மனம் தாங்காது அவன்,

"அப்பா..." என்றழைத்தபடி அருகில் வர...

"வேண்டாம் விஷ்ணு... நீ அங்கேயே நில்... உன் பாவத்தின் நிழல் கூட என் மீது படக் கூடாது..." என்று கறார் குரலில் கூறியவரை கண்டு அவன் அதிர்ந்து போனான்...

தனது பாவம் தீர்க்க அவன் செய்த காரியம் அவனையே பாவியாக்கி விட்டதே... அவனது மனம் வெதும்பி போனது... அவனது செயலுக்கான விளக்கத்தை அவனால் யாரிடமும்

கூற முடியாது... இனிமேலும் அவன் யாரிடமும் கூற போவதில்லை...

"இனி நீ எனக்கு மகனும் இல்லை... நான் உனக்கு அப்பாவும் இல்லை..." என்றவரை கண்டு அவன் கதறியபடி அவரின் காலில் விழுந்தான்...

"அப்பா, அப்படி எல்லாம் சொல்லாதீங்க..." என்றபடி கண்ணீர் விட்டவனை உணர்வில்லாது பார்த்தவர்,

"இப்படித் தானே அந்தப் பெண்ணும் உன் காலில் விழுந்து கதறியிருக்கும்... நீ அவளுக்காக இரக்கப்பட்டாயா...?"

"அப்பா..." என்று திகைத்து அவரை ஏறிட்டு பார்த்தவனின் கண்ணீர் அதிர்ச்சியில் நின்று போனது...

"சில பாவங்களுக்கு மன்னிப்புக் கிடையாது... தண்டனை மட்டுமே... நம் உறவை வெட்டி கொள்வது தான் உனக்கான தண்டனை... அது போல் என் மருமகள் முடிவு என்னவோ அதுக்கு நான் துணையாக இருப்பேன்... அவள் உன்னை ஜெயிலில் போட தயாராக இருந்தால் அதுக்கும் நான் தயார்... இனி நீ எனக்கு மகன் கிடையாது... என் மகன் செத்து போய்விட்டான்... எனக்கு மருமகள், பேர குழந்தை மட்டுமே... இனிமேல் நீ மதுரை பக்கம் வரவே கூடாது... என் கண்ணில் படவும் கூடாது... உன் அம்மா மட்டும் உன்னை வந்து பார்த்துட்டு போவாள்..."

அவர் கூறிய அனைத்தையும் புறம்தள்ளியவன் இறுதியாய் கூறியதை மட்டும் கருத்தில் கொண்டு, "அம்மா உங்களைத் தனியே விட்டுட்டு என்னைப் பார்க்க வர மாட்டாங்களே..." என்று வேதனையுடன் கூறியவனைக் கர்வமாய்ப் பார்த்தவர்,

"அந்தளவுக்குக் காதலை நான் அவளுக்குக் கொடுத்து இருக்கிறேன்... நீ உன் மனைவிக்கு என்ன கொடுத்த விஷ்ணு...? வெறும் பயத்தை மட்டுமே கொடுத்திருக்க... தாலி கட்டி விட்டதால் மட்டும் நீ செய்தது எதுவும் சரின்னு

ஆகிவிடாது..." என்று உறுமியவரை கண்டு அமைதியாக எழுந்து நின்றவன்,

"உங்க விருப்பப்படியே நடக்கட்டும்... இந்தத் தண்டனையை நான் ஏத்துக்கிறேன்..." என்றவன் நடை தளர அங்கிருந்து வெளியேறினான்...

மகனது தளர்ந்த நடையைப் பார்த்தவர் அப்படியே தளர்ந்து போய் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தார்... இன்னமும் அவரால் நம்ப முடியவில்லை... மகன் மீதுள்ள பாசத்தில் அவரது மனம் கதறியது... அவர் விழிகள் கலங்க அப்படியே அமர்ந்திருந்தார்...

சுந்தரபாண்டியன் தனது முடிவினை நிஷிலா குடும்பத்தினரிடம் தெரிவித்தார்... அதைக் கேட்டு நிஷிலாவின் முகம் இருண்டு போனது... பத்ரிநாத் மிகவும் சந்தோசப்பட்டார்... அவரைப் பொறுத்தவரை நிஷிலாவின் வாழ்க்கைக்கு அர்த்தம் கிடைத்தால் போதுமென்றே அவர் நினைத்தார்... பெண்ணுக்குப் பிரசவம் பார்ப்பது தாய் வீட்டுக் கடமை என்பதால் அவர் அதை மனமுவந்து ஏற்றுக் கொண்டார்...

இளவரசியின் முகம் பயங்கரமாய் மாறிப் போனது... எதிரியின் வாரிசு அவரது வீட்டில் இருக்கக் கூடாது என்றெண்ணி துரத்த நினைத்தால் அது மீண்டும் அவரது வீட்டிற்கே வருகிறதே... என்ன செய்வது என்று தெரியாது அவர் விழித்துக் கொண்டிருந்தார்... அதே நேரம் சிம்மவிஷ்ணு அவரையே பார்த்திருந்தான்... அவரது இயலாத நிலையைக் கண்டு அவனது முகத்தில் வெற்றி புன்னகை தோன்றியது...

அப்போது அவனது விழியில் கண்கலங்க நின்று கொண்டிருந்த நிஷிலா தென்பட்டாள்... அவளது கலங்கிய நிலையைக் கண்டு அவனது விழிகள் ஒரு நொடி சுருங்கி மீண்டது அவ்வளவே... அதன் பிறகு அவன் கம்பீரமாக நிமிர்ந்து நின்றான்...

யுத்தகளத்தில் நியாய, அநியாயம் பார்க்க கூடாது... அப்படியொரு மனநிலையில் அவன் இருந்தான்...

"உடம்பை பத்திரமா பார்த்துக்கோம்மா... நான் அடிக்கடி ஃபோன் பண்றேன்..." பெற்ற தாயை போல் கனிவுடன் கூறிய மாமியாரிடம் கண்கள் கலங்க நிஷிலா தலையசைத்தாள்...

சுந்தரபாண்டியன் அவளிடம் எதுவும் பேசவில்லை... ஆசிர்வாதம் செய்வது போல் தனது வலக்கையை அவளின் உச்சந்தலை மீது அழுத்திவிட்டு மனம் கனக்க அங்கிருந்து நகர்ந்து விட்டார்...

இறுதியாகச் சிம்மவிஷ்ணு அவள் அருகில் வந்தான்... எல்லோரும் அவர்களுக்குத் தனிமை கொடுத்து சற்று விலகி நின்றனர்... அவனது முகத்தில் இருந்த கேலியில் அவளது முகம் அவமானத்தில் சிவந்து போனது...

"என்ன பேபி, ப்ளான் எல்லாம் பக்காவா போட்ட... ஆனா இப்படிச் சொதப்பிருச்சே..." என்று அவன் அவளைப் பார்த்து கிண்டலடித்தான்...

அவள் கண்ணீருடன் அவனைப் பார்த்திருந்தாள்...

"இப்ப மட்டுமல்ல... இனி எப்போதுமே நீ உன் வீட்டில் தான் இருக்கப் போகிற... அதனால் வீண் கற்பனைக்கு இடம் கொடுக்காம உன் படிப்பில் கவனத்தைச் செலுத்து, அப்படியே குழந்தை பிறக்கிறதிலும்..."

"இதுக்கு எல்லாம் நீ நல்லா அனுபவிக்கப் போகிற..." கோபமும், கண்ணீருமாய்க் கூறியவளை கண்டு அவன் அசந்துவிடவில்லை... மாறாக அழுத்தத்துடன் அவளைப் பார்த்தான்...

"நானா நினைச்சா மட்டும் தான் எனது தலைவிதியை மாத்த முடியும்... நீ இல்லை உன் அப்பன் நினைச்சா கூட அது முடியாது... சர்தான் போடி... பிள்ளைப்பூச்சி மாதிரி இருந்துட்டு நீ என்னை ஆட்டுவிக்கப் போறியா...?" என்று

அவன் அகந்தையுடன் மொழிந்துவிட்டு அவளை விட்டு அகன்றான்...

மீண்டும் மீண்டும் தான் அவனிடம் தோற்று போவதை நினைத்து அவள் வேதனை கொண்டாள்...

ஒரு சிறு பெண் தாயுள்ளம் கொண்டு தனது குழந்தையைக் காப்பாற்ற வேண்டி தனது வீட்டாரிடம் மட்டுமல்லாது குழந்தையின் தகப்பனிடமும் போராடி கொண்டிருக்கிறாள்... அவளது வீட்டாரோ குழந்தையைக் கொல்ல துடித்தனர்... அதன் தகப்பனோ அதற்கு மறைமுகமாக வழி வகுக்கின்றான்...

அதை உணரும் போது அவன் என்ன மாதிரியாக உணர போகின்றானோ...?

அன்று நடந்த அதே தவறு திரும்ப நடக்கக்கூடும் என்று இவன் ஏன் எண்ணவில்லை...? அன்று துரோகம் நடந்ததற்கான காரணம் இன்று இல்லை என்பதையும் இவன் ஏன் உணரவில்லை...? ஏனெனில் இவன் அவனாக அல்லவா மாறியிருக்கிறான்... சிம்மவிஷ்ணுவின் பரிதவிப்பு சுடலைமுத்துவிற்குக் கிடையாது... அவனின் ஒரே நோக்கம் அன்று தான் அனுபவித்த வலியை இன்று தனது எதிரிகளை அனுபவிக்க வைக்க வேண்டும் என்பது மட்டுமே...

அதில் பலியாகப் போவது அவனது அப்பாவி மனைவியும், குழந்தையும் என்பதை அந்தக் கணம் அவன் மறந்து போனான்... அவன் தன்னைப் போன்று எதிரிகளின் உணர்வுகளைக் கணித்தது தான் பெரும் தவறாகி போனதோ... அவர்கள் மனிதாபிமானமற்ற மனித உயிர்களைக் காவு வாங்கும் அரக்கர் கூட்டம் என்பதை அவன் வசதியாய் மறந்து போனது தான் விதி செய்த சதியோ...???

"எனக்காக நீ அழுதால் இயற்கையில் நடக்கும்
நீ எனக்காக உணவு உண்ண எப்படி நடக்கும்
நமக்கென்று பூமியிலே கடமைகள் உண்டு

அதை நமக்காக நம் கையால் செய்வது நன்று
ஆரம்பத்தில் பிறப்பும் உன் கையில் இல்லை
என்றும் அடுத்தடுத்த நடப்பும் உன் கையில் இல்லை
பாதை வகுத்த பின்பு பயந்தென்ன லாபம்
அதில் பயணம் நடத்திவிடு மறைந்திடும் பாவம்"
(கவியரசு கண்ணதாசனின் பாடல் வரிகளில் இருந்து சில துளிகள்)

கொல்லும்...!!!

## நிழல் : 18

காலையில் இருந்து வெளியில் அலைந்து சுற்றிவிட்டு மதிய பொழுது தான் அலுவலகம் வந்து சேர்ந்தான் சிம்மவிஷ்ணு... இன்னமும் அவன் உணவு உண்ணவில்லை... அவன் உணவை மறந்தவனாய் மலை போல் குவிந்திருந்த வேலையில் மூழ்கி போனான்... அலைப்புறும் மனதினை வேலையில் தொலைக்க எண்ணிவிட்டான் போலும்...

அந்நேரம் அவனது அலைப்பேசி அழைத்தது... எடுத்து பேசியவன்,

"வாட்...?" என்று திகைத்து போனவனாய் பேச்சற்றுப் போனான்... ஏனெனில் எதிர்முனை கூறிய விசயம் அப்படி...

நிஷிலா தற்கொலைக்கு முயன்று காப்பாற்றப்பட்டு மருத்துவமனையில் இருக்கிறாளாம்...

"இதை ஏன் நீ முன்னமே என் கிட்ட சொல்லலை...?" என்று அவன் அந்தச் செவிலிப்பெண்ணிடம் எரிந்து விழுந்தான்...

அந்த மருத்துவமனை நிஷிலாவின் குடும்ப மருத்துவருடையது என்பதால் அந்தச் செவிலிப்பெண்ணிடம் நிஷிலா அங்கு வந்தால் அவள் சம்பந்தப்பட்ட தகவல்களை உடனே தனக்குத் தெரிவிக்க வேண்டும் என்று ஏற்கெனவே அவன் கட்டளையிட்டு இருந்தான்...

"சார் நேத்து நைட் அட்மிட் ஆகியிருக்காங்க... எனக்கு மார்னிங் ட்யூட்டி இல்லை... இப்போ தான் வந்தேன்... வந்ததும் தகவல் கிடைச்சதும் உங்களுக்கு ஃபோன் பண்ணிட்டேன்..." என்று அவள் பயத்துடன் கூற...

"ம், ம்..." என்று அவன் கோபத்தில் உறுமியபடி அலைப்பேசியை அணைத்துவிட்டான்...

அவன் மீண்டும் நிஷிலா வீட்டில் சமையல் வேலை செய்யும் அம்மாவிற்கு அழைத்தான்...

"நான் சொந்த ஊரில் இருக்கேன் சார்..." என்றவரை கண்டு கடுப்புடன்,

"சொல்லிட்டு போக மாட்டீங்களா...?" என்று வார்த்தையைக் கடித்துத் துப்பிவிட்டு அழைப்பை துண்டித்தான்...

அலைப்பேசியைக் கோபமாய் மேசை மீது விட்டெறிந்தவன் இருக்கையில் சாய்ந்தமர்ந்து கண்களை மூடி கொண்டான்... நிஷிலா பற்றிய விவரங்களை அந்தச் சமையல்க்கார அம்மா தான் அவனுக்குச் சொல்வது... அன்று இளவரசி அவளைத் தகாத வார்த்தை பேசி அடித்ததை அவனிடம் சொன்னது அவர் தான்... அதனால் தான் அன்று அவன் அவளைத் தேற்ற ஓடி வந்தான்...

அன்று போல் இன்றும் போக வேண்டுமா? என்று அவனது மனம் கேள்வி கேட்டது... அங்குச் சென்றால் அவள் பால் இளகும் மனதினை கட்டுப்படுத்த அவனால் முடியாதே... எல்லாம் ஒரு நொடி தான் தன்னைக் கட்டுப்படுத்த முடியாதவனாய் அலைப்பேசியை எடுத்துச் சட்டைப்பையில் போட்டுக் கொண்டு கார் சாவியை எடுத்துக் கொண்டு கிளம்பிவிட்டான்...

வளைகாப்பு முடிந்து அவளை விட்டு விட்டு வந்து ஒரு வாரமாகிறது... இந்த ஒரு வார காலத்தில் அவள் வீட்டில் இருந்ததை விட மருத்துவமனையில் இருந்தது தான் அதிகம்... ஒரு நாள் காய்ச்சல் என்று அவளைக் கொண்டு வந்து மருத்துவமனையில் சேர்த்தார்கள்... நான்கு நாள் முழுதாக அங்கே இருந்துவிட்டு மீண்டும் வீடு சென்றவளை பிறகு காலில் வெந்நீர் ஊற்றி கொண்டதாய்க் கொண்டு வந்து மருத்துவமனையில் சேர்ந்தார்கள்... அதன் காயம் ஆறும் முன்பே இந்தத் தற்கொலை முயற்சி...

'என்னவானது இவளுக்கு...? ஏன் இப்படி மனுசனை போட்டு படுத்துகிறாள்...?' அவன் எரிச்சலுடன் நெற்றியை நீவி விட்டபடி யோசித்தான்...

அவளது தற்கொலை முயற்சி கேட்டு அவன் உள்ளுக்குள் சற்று ஆடித்தான் போய்விட்டான்... அவன் அவளைக்

கடத்திய போது எடுக்காத தற்கொலை முயற்சி, அவன் அவளுக்குத் தாலி கட்டி அவளுடன் வாழ்ந்த போது எடுக்காத தற்கொலை முயற்சி, குழந்தை உண்டாகி அவளை அவளது வீட்டில் விட்ட போது எடுக்காத தற்கொலை முயற்சியை இப்போது ஏன் முயற்சிக்கிறாள்...?

அந்தக் கணம் அவனது மனக்கண்ணில் பவித்ரனிடம் வாழ்க்கை கேட்டு கையேந்திய நிஷிலா வலம் வந்தாள்... அவன் வேதனையுடன் அதை நினைத்துப் பார்த்தான்... அன்று அதை அலட்சியமாய்ப் பார்த்தவனுக்கு இன்று அப்படி அலட்சியமாய் எண்ண முடியவில்லை...

அப்போதும் அவள் வாழத்தானே ஆசைப்பட்டாள்... இப்போது என்ன புதிதாய் இந்த முடிவு...? அவன் யோசித்துக் கொண்டே மருத்துவமனை வந்து சேர்ந்தவன் காரிலிருந்து இறங்கி அவள் இருந்த அறையை நோக்கி வேகமாக நடந்தான்...

அவன் அறை கதவை திறந்துவிட்டு உள்ளே போன போது நிஷிலா எதையோ மறைத்தபடி போர்வைக்குள் முடங்குவது தெரிந்தது... உள்ளே வந்த இவனைக் கண்டதும் அவளது விழிகளில் அலட்சியம் வந்தது... அவள் எழுந்து கட்டிலில் சாய்ந்தமர்ந்து கொண்டு போர்வைக்குள் ஒளித்து வைத்திருந்த ஆப்பிளை எடுத்து கடித்தபடி அவனை யாரோவென அறிமுகமற்ற பார்வை ஒன்றை பார்த்து வைத்தாள்...

அவளது செயலில் அவனது இரத்த அழுத்தம் தான் அதிகரித்தது... அவன் கதவை தாழ் போட்டுவிட்டு அவளை நோக்கி வந்தான்... அவள் பயப்படாது அவனைப் பார்த்திருந்தாள்... அவள் அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்தவன் அவளை நிதானமாக ஏறிட்டுப் பார்த்தான்...

"எதுக்கு இந்த மாதிரி லூசுத்தனமான வேலை எல்லாம் பார்க்கிற...?" என்று கோபத்துடன் எரிந்து விழுந்தவனை நோக்கி 'லூசாப்பா நீ' என்பது போல் கூலாக ஒரு பார்வையை வீசினாள் அவள்... அதில் அவன் தான் டென்சனாகி போனான்...

"மனுசனை சும்மாயிருக்க விடாம டென்சனாக்கிட்டு நீ இப்படி ஜாலியா இருந்தா என்ன அர்த்தம்...? எனக்கு இருந்த அத்தனை வேலையையும் விட்டுட்டு வந்திருக்கேன்... மதியம் சாப்பிட கூட இல்லை... நீ என்னடா ஆப்பிளை கடிச்சிட்டு அண்டார்ட்டிக்கால இருக்கிற மாதிரி கூலா இருக்க..." என்றவன் கை நீட்டி அவளின் கையிலிருந்து ஆப்பிளை தட்டி பறித்துத் தனது வாயில் வைத்துக் கடித்தான்...

"டேய், அது என்னோட ஆப்பிள்..."

"அதுக்கென்ன இப்போ...?" என்று மீண்டும் ஆப்பிளை கடித்தபடி அவன் கேட்க...

"ச்சீ, எச்சில்..." என்று முகத்தைச் சுளித்தவளை ஒரு மாதிரியாய் பார்த்தவன்,

"உன் எச்சில் எனக்கு என்ன புதுசா...?" என்று அந்தரங்கமாய்க் கேட்டவனைக் கண்டு வெட்கத்தில் முகம் சிவக்காது கோபத்தில் முகம் சிவந்தாள்...

"இப்படி எல்லாம் பேசுறதா இருந்தால் முதலில் நீ வெளியில் போ..." என்று அவள் முகத்தைத் திருப்பிக் கொள்ள...

"ஓகே, பேசலை... போதுமா...?" என்று இருகைகள் தூக்கி சரணடைந்தவன்,

"நீ செஞ்ச முட்டாள்த்தனத்துக்கான காரணத்தை முதலில் சொல்லு... உயிரை விடுற அளவுக்கு உனக்கு என்ன பிரச்சனை...?"

"நீ ஏன் என்னை விட்டுட்டு போன...?" என்றவளின் குரலில் அவளை உற்று பார்த்தவன் அன்று அவள் அவனிடம் 'என்னை உன்னுடன் கூட்டிக்கிட்டு போறியா...?' என்று கேட்டது போலிருந்தது இன்று அவள் கேட்டது... அவளது குரலில் இளக துவங்கிய மனதினை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டவன்,

"அதுக்கும் நீ பண்ணிய முட்டாள்த்தனத்துக்கும் என்ன சம்பந்தம்...?" என்று அவன் சற்று கடுமையுடன் கேட்டான்...

"நான் முட்டாளாவே இருந்துட்டுப் போகிறேன்... அதில் உனக்கு என்ன வந்தது...? நீ என்னை வேண்டாம்ன்னு சொல்லிட்டு போயிட்டேல்ல... அப்படியே காணாம போயிரு... இப்போ எதுக்கு வந்து கேள்வி கேட்டு என் உயிரை எடுக்கிற...?" அவளுக்கும் கோபம் வந்தது...

"நீ யார் இதை எல்லாம் கேள்வி கேட்க மடையான்னு என்னைப் பார்த்து கேட்கிற... அப்படித்தானே..." என்று ஆழ்ந்து பார்த்தவனின் பார்வையைக் கண்டு பயப்படாது,

"அப்படியே தான்... கை கழுவி விட்டு போனவனுக்கு இப்போது என்ன புதிதாய் அக்கறை...?" என்றாள் அவள் கேலி குரலில்... அதைக் கேட்டு அவனது முகம் சிறுத்துப் போனது...

"நீ எக்கேடு கெட்டால் எனக்கென்ன...? இது என் குழந்தை மீதுள்ள அக்கறை... போதுமா...?" என்று அவன் சிடுசிடுத்தான்...

"அப்படியா...? குழந்தை மேல் அக்கறை உள்ளவன் அதைத் தூக்கி சுமக்கும் அதன் அம்மா மீதும் கொஞ்சமாவது அக்கறை காட்டணும்... அம்மாவே இல்லை என்னும் போது குழந்தை எங்கே இருந்து வந்துச்சு..."

அவளது வார்த்தைகள் சிம்மவிஷ்ணுவின் மனதில் சுருக்கென்று தைத்தது... அதற்கு அவன் பதில் சொல்ல முயன்ற போது அறை கதவு தட்டப்பட்டது... அவன் எழுந்து சென்ற போது அவனது கையைப் பிடித்துத் தடுத்தவள்,

"கதவை திறக்காதே... நான் தூங்குறேன்னு நினைச்சிட்டு போயிருவாங்க..."

"யாரு...? டாக்டரா...?" என்று கேட்டவனுக்கு 'இல்லை' என்பது போல் தலையசைத்தவள்,

"என் அம்மா..." என்றாள் சோகமாக...

அவளை ஒரு பார்வை பார்த்தவன் அவளது கையை விலக்கி விட்டு கதவை நோக்கி சென்றான்...

"என் பேச்சு கேட்க கூடாதுன்னு முடிவு பண்ணியிருக்கியா...?" என்று கத்தியவளை கண்டு வாயில் விரல் வைத்து 'பேசாதே' என்று எச்சரித்தவன் கதவை திறந்தான்...

அருந்ததி அவனை எதிர்பாராது அங்குக் கண்டதும் திகைத்து முழித்தார்... அவன் அவரது முகம் பார்க்காது,

"என் மனைவி கிட்ட நான் பெர்சனலா பேசணும்... நீங்க கொஞ்ச நேரம் தொந்திரவு செய்யாதீங்க..." என்றவன் அவரது பதிலை எதிர்பாராது கதவை சாத்தினான்...

மீண்டும் நாற்காலியில் வந்தமர்ந்தவன் நிஷிலாவை நன்கு அலசி ஆராய்ந்தான்... அவளது முகமலர்ச்சியைப் பார்த்தால் தற்கொலைக்கு முயற்சி செய்தவளை போல் இல்லை... மாறாக வீட்டில் இருப்பது போல் வெகு சாதாரணமாக இருந்தாள்...

"நீ உன் உயிரோடு விளையாடிட்டு இருக்க நிலா..." என்றான் கோபமாக...

"முன்னே பின்னே யாருன்னே தெரியாத நீ எல்லாம் என் வாழ்க்கையோடு விளையாடும் போது நான் என் உயிரோடு விளையாட கூடாதா...?"

"முட்டாள் மாதிரி பேசாதே..." என்று கடுகடுத்தவனைக் கண்டு,

"நீ முட்டாள் மாதிரி அட்வைஸ் பண்றதை முதலில் நிறுத்து... சாகப் போகிறவள் இப்படித்தான் லேசாகக் கையை அறுத்து கொள்வாளா...? எனக்கு உயிரை விட விருப்பம் இருந்தால் எல்லா நரம்புகளையும் இன்னும் ஆழமாக வெட்டியிருப்பேன்... இது போல் மேலோட்டமாக இல்லை... எனக்கு என் உயிர் முக்கியம்... அதை விட எனக்கு என் குழந்தை மிகவும் முக்கியம்..."

அவள் குழந்தை முக்கியம் என்றதும் அவனது முகம் மென்மையானது... எழுந்து அவள் அருகில் வந்தமர்ந்தவன் அவளது கையைப் பிடித்துக் கொண்டு,

"எதுக்கு இந்த நாடகம் நிலா...? விளையாட்டு விபரீதமாகி போனால்...? கொஞ்சமும் யோசித்துப் பார்ப்பது இல்லையா...?" அவன் அதை யோசித்துப் பார்த்தானோ... அவளைப் பிடித்திருந்த அவனது கை தனது பிடியை இறுக்கியது...

"ஷ், வலிக்கிறது... விடு..." என்று கையை விலக்க முயன்றவளின் கையை விடுவித்தவன்,

"ஏன்னு கேட்கிறேன் இல்லையா...? பதில் சொல்லு..." சற்று தழைந்து ஒலித்தது அவனது குரல்...

"ஏன் சொன்னால் என்ன செய்வதாய் உத்தேசம்...?" என்று அவள் வெட்டும் பார்வை ஒன்றை அவன் புறம் செலுத்தினாள்...

"நான் உனக்கு வலிக்கச் செய்தவன் தான்... அதற்காக நீ உயிரை விடணும்ன்னு நினைக்கும் அளவுக்கு மோசமானவன் இல்லை..."

அவனது வார்த்தையில் அவளுக்கு ஆத்திரம் வந்தது...

"நீ மோசமானவன் இல்லையா...? நீ மோசமானவன், கெட்டவன், ராட்சசன்... என் சம்மதம் இல்லாமல் என்னைக் கற்பழித்தவன்... என் உயிரை விட மேலான என் கற்பை என்னிடம் இருந்து களவாடியவன்... கற்பே போன பிறகு உயிர் இருந்தால் என்ன...? போனால் என்ன...? என் முகத்தில் விழிக்காதே... போ, போ இங்கிருந்து..." என்று ஆத்திரத்துடன் கத்தியவளை கண்டு அவன் அசைந்தான் இல்லை...

அவன் தனது இரு கைகளையும் நெஞ்சுக்கு குறுக்காகக் கட்டி கொண்டு சிலை போல் அவளை இமைக்காது பார்த்திருந்தான்... அவனது பார்வை அவளது மனதில் சில்லென்று பயத்துடன் ஊடுருவியது... ஆனாலும் அதை

வெளிக்காட்டி கொள்ளாது அவனை எதிர்பார்வை பார்த்தவள்,

"என்னைப் பொறுத்தவரை நீ கெட்டவன் தான்... இருந்தாலும் ரெண்டு தடவை என் குழந்தையைக் காத்துக் கொள்ள வேண்டி நானா உன்னைத் தேடி வந்தேன்... ஏன்னா இது உன்னோட குழந்தையும் கூட... அந்த நம்பிக்கையில் தான் உன்னிடம் சொன்னேன்... ஆனா நீ அதுக்கு என்ன கைம்மாறு செஞ்ச...?" விழிகளில் நீர் திரள கேட்டவளை கண்டு அவன் பேச்சற்றுப் போனான்...

"இனி மூணாவது தடவை உன்னைத் தேடி வரும் ஐடியா எனக்கு இல்லை... என் கையே எனக்கு உதவி... நீ உன் வேலையைப் பார்..." என்றாள் கோபத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டு...

அவளது முகத்தைத் தன் பக்கம் திருப்பியவன் அவளது விழிகளுக்குள் ஊடுருவியபடி, "அன்னைக்கு நீ மாடிப்படியில் இருந்து கீழே விழுந்தது தற்செயலாகவா...? இல்லை திட்டமிடப்பட்டதா...?" என்று கேட்டவனின் குரலில் அடக்கப்பட்ட கோபம் இருந்தது...

"இல்லை... நானா தான் கால் வழுக்கி கீழே விழுந்துட்டேன்..." என்று அவசரமாக மறுத்தவளை ஆழ்ந்து பார்த்தவன் ஒரு பெருமூச்சு விட்டபடி எழுந்தான்...

"உடம்பை பார்த்து கொள்... இனி இது மாதிரி முட்டாள்த்தனமான வேலை எல்லாம் செய்யாதே..." என்றவனைக் கடுப்புடன் ஏறிட்டவள்,

"பெருசா அட்வைஸ் பண்ண வந்துட்ட போடா..." என்று கோபமாய்க் கூறியவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்...

அடுத்த நொடி அவன் அந்த அறையை விட்டு வெளியேறி விட்டான்... அவன் செல்வதைப் பார்த்தவள் விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்தது... குனிந்து தனது வயிற்றைப் பார்த்தாள்... பெரிய பானையைக் கவிழ்த்து வைத்தது

போலிருந்தது அவளது பெரிய வயிறு... அதைத் தடவி விட்டபடி,

"அவன் ராட்சசன்... அதனால் தான் நம்முடைய வலியை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை... நீ வெளியில் வர இன்னும் ரெண்டு மாசம் இருக்கு... எப்படி உன்னைக் காப்பாற்ற போகிறேனோ...? எனக்குப் பயமாயிருக்கு... ரெண்டு மாசமும் ஹாஸ்பிட்டலில் இருக்க முடியுமா...? வீட்டுக்குப் போய்த் தானே ஆகணும்... அங்கே...?"

முகம் இருள நிமிர்ந்தவளின் விழிகளில் அங்குக் கையைக் கட்டி கொண்டு புன்சிரிப்புடன் தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த கணவனைக் கண்டாள்... காண்பது கனவா? என்றெண்ணி அவள் கண்களைக் கசக்கினாள்...

"நானே தான்... கனவு எல்லாம் இல்லை..." என்றவன் அவளருகில் வந்தான்...

விழிகளில் விழிநீர் கரை கட்டி நிற்க அவனை அண்ணாந்து பார்த்தவளிடம் அவன், "என்னோடு வருகிறாயா...?" என்று கேட்டபடி தனது வலக்கையை அவள் புறமாய் நீட்டினான்...

அவன் அப்படிக் கேட்டது கண்டு முதலில் முகம் மலர்ந்தவள் பின் கோபத்தோடு அவனது கையைத் தட்டி விட்டாள்...

"வேண்டாம்... போ..." என்று அவள் கோபித்துக் கொள்ள...

"இப்போ நீ வரலைன்னா நான் பாட்டுக்கு கிளம்பி போயிக்கிட்டே இருப்பேன்..." என்றவனைக் கண்டு,

"போ, எனக்கென்ன..." என்று அவள் அசால்ட்டாய் கூற...

"உண்மையில் போயிருவேன்..." என்று கூறியபடி அவன் பின்னால் ஓரடி எடுத்து வைத்தான்...

அவ்வளவு தான் அவள் பாய்ந்து வந்து அவனது சட்டையைப் பிடித்துத் தன்னருகே இழுத்தாள்... போகாதே என்பது போலிருந்தது அவளது செய்கை... சிறுபிள்ளை போன்று இருந்த அவளது செய்கையில் அவன் மனம் கனக்க அவளை இழுத்து தனது வயிற்றோடு அணைத்துக்

கொண்டான்... அவனது அணைப்பில் அவள் சிறு குழந்தை போன்று தேம்பி தேம்பி அழ ஆரம்பித்தாள்...

அவளது அழுகை கண்டு அவன் வேதனையுடன் விழிகளை மூடி கொண்டான்... அவளது விசயத்தில் மட்டும் அவனால் ஒரு நிலையான முடிவுக்கு வர முடியவில்லை... இப்போதும் பகை கொண்ட அவனது மனம் அவளைத் தள்ளி நிறுத்திவிட்டு செல் என்கிறது... ஆனால் மற்றொரு மனம் பெண்ணவள் மீது இரக்கம் கொண்டு துடிக்கிறதே...

அவள் உயிரை விட்ட பின் அவனுக்கு என்று ஒரு வாழ்க்கை இருக்கிறதா...? இல்லை என்றே அவனுக்குத் தோன்றியது... அவளையும், குழந்தையும் இழந்த பிறகு அவன் யாரை பகை முடித்து என்ன பயன்...? பகை முடிப்பதால் அவனது வஞ்சம் கொண்ட நெஞ்சம் நிம்மதியாகி விடும்... ஆனால் யுத்தகளத்தில் பழியிடப்பட்ட மனைவி, குழந்தையை நினைத்துக் காலம் முழுவதும் அவன் வேதனை அல்லவா பட வேண்டும்... அதே நேரம் யுத்தம் என்று வரும் போது மனைவி, குழைந்தை என்று பந்தபாசம் பார்க்க கூடாது என்று அவனது வன்மம் கொண்ட மனம் அவனை எச்சரித்தது... என்ன செய்வது என்று தெரியாது அவனது கை அவளுக்கு ஆறுதல் அளித்துக் கொண்டிருந்தது...

மிருகத்திற்கும், மனிதத்திற்கும் இடையில் கிடந்து அவன் அல்லாடினான்... இறுதியில் மனிதமே வெற்றிப் பெற்றது... அவனாக மாறினானா...? இல்லை அவள் தனது வெள்ளை மனதால் அவனை மாற்றிவிட்டாளா...?

"ஷ், அழாதே பேபி... நான் உன்னை என்னோடு கூட்டிட்டு போகிறேன்..." என்றபடி அவன் அவள் அருகில் அமர... அவனை நிமிர்ந்து பார்த்தவள்,

"அன்னைக்கு அப்படிப் பேசிட்டு போன... இன்னைக்கு என்னாச்சு உனக்கு...? யாருக்காகவும் மாறாத நீயா இப்படி எல்லாம் பேசுவது...?" அவள் ஆச்சிரியத்துடன் அவனிடம் கேட்டாள்...

"இப்பவும் அதையே தான் சொல்கிறேன்... நானா மாறாது என்னை யாரும் மாற்ற முடியாது..." என்றான் அவன் அழுத்தமான குரலில்...

"இப்போ என்ன இந்தத் திடீர் மாற்றம்...? என் மேல இரக்கப்பட்டா...?"

"உன் மேல் இல்லை... என் குழந்தை மேல்..." என்றான் அவன் சன்ன சிரிப்புடன்...

"இது ஒத்துக் கொள்ள வேண்டிய விசயம் தான்..." என்றாள் அவள்... அவன் தனக்காக இப்படி எல்லாம் செய்துவிடும் ஆளில்லை என்பது அவளுக்குத் திட்டவட்டமாகத் தெரியும்...

"நான் உன் கூட வருகிறேன்... ஆனா ஒரு கண்டிசன்..." என்றவளை கை நீட்டி தடுத்தவன்,

"ஹலோ, கண்டிசன் போட வேண்டியது நான்... உனக்குத் தான் நான் தேவை... எனக்கு நீ தேவையில்லை..." என்றான் அவன் சற்று திமிராய்...

அதைக் கேட்டு அவளது முகம் வாடி போனது... ஆனாலும் மனம் தளராது அவனை நிமிர்ந்து பார்த்தவள்,

"சரி கண்டிசன் வேண்டாம்... ஒண்ணே ஒண்ணு சொல்லிக்க ஆசைப்படறேன்... நான் பாம்பு... பூனைன்னு நினைச்சு பால் வார்க்க நினைக்காதே... சமயம் சந்தர்ப்பம் கிடைக்கும் போது நான் உன்னைக் கொத்தாமல் விட மாட்டேன்... உன்னைப் பழிவாங்கியே தீருவேன்..."

"அது தெரிந்தே தான் கூட்டிட்டு போகிறேன்..." என்று புன்னகைத்தவன்,

"உன் கண்டிசனை சொல்லு..." என்றான் மென்மையான குரலில்...

"குழந்தை பிறக்கும் வரை தான் நான் உன் வீட்டில் இருப்பேன்... அதுக்குப் பிறகு நான் வெளியில் வந்து விடுவேன்..."

"வெளியில் வந்து...?" அவனது பார்வை அவளைக் கூர்மையாய்த் துளைத்தெடுத்தது...

"அது அப்போது தெரிந்து கொள்..." என்றவளை கண்டு அவன் வாய்விட்டுச் சிரித்தான்...

"அது இப்போதே பிரகாசமாக என் மனக்கண்ணில் தெரிகிறது..." என்றவனை அவள் பயத்துடன் பார்த்தாள்... தனது மனதினை அவன் கண்டு கொண்டானோ என்று...

"இப்பவும் சொல்கிறேன், நல்லா கேட்டுக்கோ... நானா நினைச்சா மட்டும் தான் எனது தலைவிதியை மாத்த முடியும்... நீ இல்லை உன் அப்பன் நினைச்சா கூட அதைச் செய்ய முடியாது..."

அவன் அழுத்தம் திருத்தமாய்க் கூறிய வார்த்தைகள் அவளுள் பனிக்கட்டியாய் சில்லென்று ஊடுருவி சென்றது... அவள் பயத்தில் விழிவிரிய அவனைப் பார்த்திருந்தாள்... அவளது விழி வீச்சில் தான் கொஞ்சம் கொஞ்சமாய்த் தொலைந்து கொண்டிருப்பது போல் ஒரு தோற்றம் எழ அதைத் தவிர்க்க எண்ணியவனாய் அவன் சட்டென்று எழுந்து ஜன்னல் பக்கம் சென்றான்... தொலைவினில் எதையோ வெறித்தபடி அசையாது சிலை போல் நின்றிருந்தவனை எவ்வளவு நேரம் தான் பார்த்து கொண்டிருப்பது...? அவளுக்கு உடல் அசதியில் தூக்கம் விழிகளைச் சுழற்றியதில் அப்படியே உறங்கி போனாள்...

தனக்குள் யோசித்தபடி சிறிது நேரம் நின்றிருந்தவன் பின் திரும்பி அவளைப் பார்த்தான்... அமர்ந்த நிலையில் தூங்கி வழிந்தவளை கண்டு அவனது உதடுகளில் புன்னகை வந்தது... அவளை நேராகப் படுக்க வைக்க நினைத்தவன் பின் தலையைக் குலுக்கி கொண்டு கதவை நோக்கி சென்றான்...

அவன் கதவை திறந்ததும் அருந்ததி வேகமாய் உள்ளே நுழைந்தார்... மகளை முழுதாகப் பார்த்ததும் தான் அவருக்குச் சற்று நிம்மதியாக இருந்தது...

"அவள் தான் சின்னப்பிள்ளை மாதிரி யோசிக்கிறாள் என்றால் நீங்க எதுவும் அவளைக் கண்டு கொள்வது இல்லையா...? ஏன் இப்படி ஒரு முயற்சி அவள் எடுத்தாள்...?"

பவித்ரன் கேட்ட அதே கேள்வியைத் தான் இவனும் கேட்டான்... ஆனால் அவனை விட இவனிடத்தில் இருந்த அக்கறை, உரிமை உணர்வு வேறு... அதைக் கண்டு அந்தத் தாயுள்ளம் சிறிது நிம்மதி அடைந்தது...

"ஏன்னு தெரியலை...? அன்னைக்கு அரசி திட்டினதில் இருந்து அவள் மனசு சரியில்லாம இருந்தாள்... அப்போ தான் அவள் மாடிப்படியில் இருந்து கீழே விழுந்தது..."

"அவளாக விழுந்தாளா...? இல்லை யாராவது தள்ளி விட்டுட்டாங்களா...?" அவரை இடைமறித்து அவன் கேட்டான்...

"அப்போ வீட்டில் யாரும் இல்லையே..." என்றார் அவர் அப்பாவியாய்...

"ஓ..." என்றபடி அவன் சிந்திக்கத் துவங்கினான்...

"இப்போ இந்த ஒரு வாரமா இவள் ஏன் அடிக்கடி ஹாஸ்பிட்டல் வருகிறாள்... என்ன பிரச்சினை இவளுக்கு...?" என்று கேட்டவனிடம்,

"நீங்க தான் பிரச்சினை..." என்றார் அவர் பட்டென்று...

"நானா...?" அவன் வியப்பாய் அவரைப் பார்த்தான்...

"உங்க கூடப் போகணும்ன்னு தான் வளைகாப்பு ஏற்பாடு எல்லாம் பண்ணியது... ஆனா நீங்க அவளை உங்க கூடக் கூட்டிட்டு போகலை... அந்த விரக்தியில் அவள் என்னென்னமோ செய்கிறாள்..." என்றவர் திடீரென்று அழ ஆரம்பித்தார்...

அன்னை வயதுடையவர் அழ ஆரம்பித்ததும் அவன் மனம் சங்கடமுற்றான்...

"ப்ளீஸ் அழாதீங்க..." என்று அவன் அவரைத் தேற்றினான்...

"அவள் தன்னோட உடலில் சூடு வைத்திருக்கிறாள்... குழந்தை உண்டாகி இருக்கும் பச்சை உடம்பு... அந்தத் தீச்சூட்டை அவள் உடம்பு தாங்குமா...? இப்படியே போனால் நிச்சயம் ஒரு நாள் அவளுக்குப் பைத்தியம் பிடிச்சிரும்... உங்க மேல எனக்குக் கோபம் இருக்கத்தான் செய்கிறது... ஆனா நிஷாவே உங்களை மன்னிச்ச பிறகு நானும் உங்களை மன்னிக்கத் தயாராகிட்டேன்... தயவுசெஞ்சு அவளை உங்க கூடக் கூட்டிட்டு போயிருங்க..." என்று அழுதவரை அவன் அதிர்ந்து போய்ப் பார்த்திருந்தான்...

"நான் வெளியில் இருக்கேன்..." தனது மனதில் இருந்ததை அவனிடம் கொட்டிவிட்டு அவர் சென்றுவிட்டார்...

கதவை அடைத்துவிட்டு வந்தவன் நெஞ்சடைக்கத் துயரத்துடன் அவளைப் பார்த்தான்... பின் வேகமாய் அவள் அருகில் வந்தான்... அவள் எப்போதும் அணியும் 'ப்ராக்' தான் அணிந்திருந்தாள்... எப்படி அவள் சூட்டுப் புண்களைப் பார்ப்பது என்று தெரியாது அவன் திகைத்தான்...

'என் மனைவி... நான் பார்ப்பதற்கு என்ன...?' என்று நினைத்தவன் முதலில் அவளது கால்களை ஆராய்ந்துவிட்டு அதில் சூடுபட்ட தழும்பு இல்லை என்றதும் அவளது இடை வரை போர்வையைப் போர்த்திவிட்டு அவளது 'ப்ராக்கை' மேலே சுருட்டினான்...

அடுத்தக் கணம் அவனது விழிகள் அதிர்வுடன் அவளது வயிற்றில் நிலைக்குத்தி நின்றது... அவளது வயிற்றில் அங்காங்கே சூடு வைக்கப்பட்டு இருந்தது... அந்தப் புண்களின் ரணம் இன்னமும் ஆறவில்லை... அதைக் கண்டு அவனது விழிகள் கண்ணீரை சொட்டியது... அது நேரே அந்தப் புண்களின் மீது விழுந்தது... அதன் உப்புத்தன்மை எரிச்சலை உண்டாக்க,

"ஷ்... வலிக்குது... வேண்டாம் அத்தை..." என்று பதறியபடி கண் விழித்தவள் தன்னெதிரே கணவனைக் கண்டதும் திகைப்புடன் விழியகல அவனைப் பார்த்தாள்... விழிகளில் நீர் திரள தன்னைப் பார்த்தவனைக் கண்டு அவளது விழிகளிலும் கண்ணீர் நிரம்பத் துவங்கியது...

"பேபி, இது எப்படி...?" என்று அவளது வயிற்றின் சூடுகளைச் சுட்டிக்காட்டியவனைக் கண்டு அப்போது தான் அவளுக்குத் தன்னிலை உறைத்தது...

"தள்ளி போ..." என்று கண்டிப்புடன் கூறியபடி அவள் தனது உடையைக் கீழிறக்கி விட்டு கொண்டாள்...

"நான் என்ன அடுத்தவனா...? உன் கணவன் தானே...?" என்று மனத்தாங்கலுடன் கேட்டவனின் நெஞ்சில் சராமாரியாகக் குத்தியவள்,

"நீ என்ன முறைப்படி கணவன் ஆனவனா...? என்னுடைய இந்தத் துன்பம் எல்லாம் உன்னால் தான்... நீ என் வாழ்க்கையில் வந்த பிறகு தான் நான் என் குடும்பத்தில் இருந்து அந்நியப்பட்டுப் போய் விட்டேன்..." என்று அழுதவளை அவன் தன்னோடு அணைத்துக் கொண்டான்...

"இப்படி எல்லாம் நடக்கும்ன்னு நான் எதிர்பார்க்கலை... உன் வீட்டார் உன் மேல் அதிக அன்பு வைச்சிருக்காங்கன்னு நினைச்சேன்... ஆனா எல்லாமே தலைகீழாய் மாறும்ன்னு நான் நினைக்கலை பேபி..."

அவனுக்குமே அவளது நிலை குறித்து அத்தனை வேதனையாக இருந்தது...

"அன்பாகத் தான் இருந்தாங்க... நீ வரும் வரை... அதுக்கு அப்புறம் தான் எல்லாம் மாறிவிட்டது..."

"ஐயம் சாரி..." அவன் வாயிலிருந்து மன்னிப்பு வார்த்தை வந்தது...

"மன்னிப்பு கேட்டால் மட்டும் எல்லாம் சரியாகி விடுமா...?" என்று கதறியவளை கண்டு அவன் செய்வதறியாது பார்த்திருந்தான்...

"சரி, இப்போ நான் என்ன செய்யணும்...?" என்றவனை அழுத விழிகளோடு நிமிர்ந்து பார்த்தவள்,

"உன் உயிரை எடுக்கணும்..." என்றாள் கோபமாக...

"கொடுக்கிறேன்னு சொல்லி நாளாச்சு..."

"இன்னும் கொடுக்கலையே..." என்றவளை குனிந்து பார்த்தவன் உள்ளம் மறுகி போனான்...

"என் குழந்தையைக் காப்பாற்ற போராடுகிற உனக்காக நிச்சயம் நான் என் உயிரை கொடுப்பேன்... ஐ ப்ராமிஸ் யூ..."

"சொல்லிக்கிட்டே இருக்காதே... முதலில் அதைச் செய்..." என்றவள் அவனை விட்டு விலகி அமர்ந்தாள்...

"வலிக்குதா பேபி..." என்றவனின் பார்வை அவளது வயிற்றின் மீது நிலைத்திருந்தது...

"இல்லை... ரொம்பக் குளுகுளுன்னு இருக்குது..." என்று பட்டென்று எரிச்சலுடன் கூறியவள்,

"என்னைக்கு நீ என்னைத் தொட்டியோ அன்னைக்கே என் உடல் உணர்வுகள் இல்லாது மரத்து போயிற்று... வலி, வேதனை எதுவும் எனக்கு உறைக்காது... அதனால் நீ பயப்படத் தேவையில்லை..." என்றவளை அவன் புரியாது பார்த்தான்...

"குழந்தைக்கு வலித்திருக்குமோன்னு நீ பயப்படாதே... நான் வலியை உணர்ந்தால் தானே அது வலி உணரும்..."

அவளது வார்த்தையில் அவன் நெஞ்சில் இரத்தம் கசிய தலைகுனிந்து அமைதியாகி போனான்... ஒரு வாரத்திற்கு முன்பு தான் ஆத்திரம் கொள்ளாது அவளது மனவுணர்வுகளை மதித்துத் தன்னுடன் அழைத்துச் சென்றிருக்க வேண்டுமோ என்று அவன் மனம் வெதும்பி போய் அமர்ந்திருந்தான்...

இளவரசியைப் பற்றி நன்கு தெரிந்திருந்தும் அவன் நிஷிலாவை அங்கே விட்டு வைத்தது அவனது தவறு தான்... அந்தக் கணம் அவன் எதையோ நினைத்து வேதனையுடன் விழி மூடி கொண்டான்... அந்த நொடி அவன் உயிர் வலியை அனுபவித்தான்... அவனது விழிகளில் இருந்து கண்ணீர் கரகரவென வழிந்தது...

அவனையே பார்த்துக் கொண்டிருந்த நிஷிலா அவனது கண்ணீரை கண்டு திகைத்தாள்... அவளைப் பொறுத்தவரை அவன் கெட்டவன் தான்... ஆனாலும் அவனது துன்பம் அவளது மனதினை வருத்தியது... அவனது கை மீது தனது கையை ஆறுதலாக வைத்தாள்... அவளது தொடுகையில் கண் திறந்தவன் அவளைக் கண்டு தனது விழிகளைத் துடைத்துக் கொண்டான்...

"எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது... முடிச்சிட்டு வந்து உன்னைக் கூட்டிட்டு போகிறேன்..." என்றபடி அவன் எழ... அவனது கையைப் பிடித்துத் தடுத்தபடி,

"வேண்டாம்... நீ இங்கேயே இரு..." என்றாள் அவள் பிடிவாத குரலில்...

அவளது வார்த்தையைத் தட்ட முடியாது நாற்காலியில் அமர்ந்தவன், "நீ தூங்கு..." என்க...

"அப்படியே நீ எஸ்கேப் ஆகுறதுக்கா...?"

அவள் கேட்ட பாவனையில் அவனுக்குச் சிரிப்பு வந்தது... அடக்க மாட்டாது வாய்விட்டு சிரித்தவன்,

"இல்லை, நான் எங்கேயும் போக மாட்டேன்... இப்போ ஒரு ஃகால் பண்ணிட்டு வந்திர்றேன்..." என்றபடி அவன் எழுந்து செல்ல...

"சரியா ஐஞ்சு நிமிசம் தான் உனக்கு டைம்..." என்றவளின் பார்வை அங்கிருந்த கடிகாரத்தில் நிலைத்தது...

"ஐந்து நிமிசமே அதிகம் தான்..." என்று அவன் சிரித்தபடி வெளியில் சென்றான்...

அவள் சோர்வுடன் விழி மூடி கொண்டாள்... இரண்டே நிமிடத்தில் அவன் மீண்டும் உள்ளே நுழைந்தான்... கண்மூடி அமர்ந்தவள் அருகில் அமர்ந்தவன் அவளது கையைப் பிடித்துக் கொண்டு மௌனமாக அமர்ந்திருந்தான்...

"இப்போது வேதனைப்பட்டு எந்தப் பிரயோஜனமும் இல்லை... அன்னைக்கு என்னை உன்னுடன் கூட்டிட்டுப் போயிருந்தால் இது நடந்திருக்காது..."

அதை நினைத்து தான் அவனும் நொந்து கொண்டிருந்தான்... அவள் விழி திறந்து அவனைப் பார்த்து,

"எப்போ நாம கிளம்பறோம்...?" என்று கேட்க...

"இன்னும் ஒரு மணி நேரத்தில்..." என்றான் அவன் எதையோ சாதித்துவிட்ட திருப்தியுடன்...

அவனது முகத்தைக் கூர்ந்து பார்த்தவளை கண்டு புன்னகைத்தவன்,

"வெயிட் பண்ணு பேபி... எல்லாம் உனக்குப் புரியும்..." என்றவனை அவள் புரியாது பார்த்தாள்... அவன் பதில் கூறாது அலைப்பேசியில் ஆழ்ந்து போனான்...

சொன்னது போல் ஒரு மணி நேரத்தில் அதற்கான விடை தெரிந்தது... இளவரசி எமெர்ஜென்சி வார்டில் அனுமதிக்கப்பட்டிருந்தார்...

"அத்தைக்கு என்னவானது...?" என்று பயத்தில் விழிவிரித்தவளின் விழியில் இப்போது விரும்பியே தொலைந்து போனவனாய்,

"உன் சொத்தை நிஷிலா என்கிற சின்னப் பெண்ணுக்கு சூடு வைத்த பாவத்தைப் போக்க கொதிக்கிற வெயிலில் கொதிக்கிற தாரில் அங்கபிரதட்சணம் செஞ்சாங்களாம்..."

அவனது நக்கலான குரலில் அவள் அதிர்ச்சியில் குருவி போன்று ஆவென்று வாய் பிளந்தாள்... அவன் அவள் அருகில் வரும் போது அவள் இப்படித்தான் அதிர்ச்சியில் திகைத்து போய் வாய் பிளப்பாள்... அப்போது அவளது பயத்தைக் காணும் போது எல்லாம் அவன் சந்தோசம் கொண்டு அவளது இதழில் கவி பாடிய ஞாபகம் இப்போது அவனது நினைவில் எழுந்தது...

இப்போதும் அதே போல் அவளது இதழ்களில் கவி பாடிட துடித்தது அவனது உள்ளம்... ஆனால் ஏனோ அதைச் செய்யத் தோன்றாது வலக்கை ஆள்காட்டி, கட்டை விரல் கொண்டு அவளது இதழ்களை மென்மையாய் மூடியவன் அவளது முகம் நோக்கி குனிந்து,

"அவரவர் செய்யும் பாவத்திற்கு ஏற்ப தண்டனை அனுபவிச்சு தான் ஆகவேண்டும் பேபி..." என்றான் உறுதியான குரலில்...

"ஆனா நீ எந்தப் பாவமும் செய்யாம தண்டனை அனுபவிச்சிட்ட..." என்றவனது குரல் குற்றவுணர்வில் கரகரத்து ஒலித்தது...

அவளது மனதின் வலியை அவளது விழிகள் அப்படியே பிரதிபலித்தது... அந்த வலியை உணர்ந்தவனாய் அவன் மனம் வலிக்க அவளையே பார்த்திருந்தான்...!!!

“உயிரானவள் உயிர்ப்பலி முன்,
வஞ்சியவள் விழிநீர் முன்,
பிள்ளையவள் கிள்ளை மொழி முன்,
பேதையவள் வேதனை முன்,
உன் வஞ்சினம் மறைந்ததேனோ?
உறுமிய சிம்மம் சாந்தமாய்
விஷ்ணுவாய் மாறியதேனோ?
காக்கும் தொழில் புரியும் கடவுளே,
அழிக்கும் வித்தை புரிவது
அறியாயோ மன்னவனே?
சிம்மமாய்க் கர்ஜித்தாலும்,
சுடலையாய் வேட்டையாடினாலும்,
உன்னவளுக்கு நீ என்றும்
உயிர் கொள்ளும் நித்திலமே!
மார் தாங்கும் விஷ்ணுவே!!!”

கொல்லும்...!!!

## நிழல் : 19

"நீ சொல்வது சரியாக இருக்கலாம்... ஆனா அவங்க பாவம் இல்லையா...? சூட்டுப்புண்ணே இப்படி வலிக்கும் போது கொதிக்கும் தார் எவ்வளவு வலி கொடுக்கும்...?"

விழிகளில் வலி தேக்கி தன்னைப் பார்த்த நிஷிலாவை கண்டு சிம்மவிஷ்ணு என்ன மாதிரியாக உணர்ந்தான் என்று அவனுக்கே தெரியவில்லை... வெள்ளை மனம் கொண்ட குழந்தையவளை தானும் சேர்ந்து படுத்தியெடுத்து விட்டோமே என்று அவன் உள்ளம் மறுகி போனான்...

"அவங்களும் வலின்னா என்னன்னு உணரணும் இல்லையா...? அதுக்கான தண்டனை தான் இது...?" என்றவனை உற்று பார்த்தவள்,

"ஏய், இதைச் செய்தது நீ தானா...?" என்று சந்தேகத்துடன் கேட்டாள்...

"இல்லையே பேபி..." என்று அப்பாவியாய் இருகைகளை விரித்தவன்,

"நான் உன்னுடன் இங்கே இருக்கும் போது நான் எப்படி இதைச் செய்ய முடியும்...? நான் தண்டனை கொடுப்பதாக இருந்தால் இது போல் அரைகுறையாகக் கொடுக்க மாட்டேன்... உயிரை எடுத்துவிட்டு தான் மறுவேலை பார்ப்பேன்..." என்றான் அவன் உறுதியான குரலில்...

"அது என்னவோ உண்மை தான்... நீ உயிரை குடிக்கும் ராட்சசன்... என் உயிரை கொஞ்சம் கொஞ்சமாகக் குடித்து என் உணர்வுகளைக் கொன்ற ராட்சசன் நீ..." என்று கோபமும், அழுகையுமாக வெடித்தவளை கண்டு,

"இதையே பேசிக்கிட்டு இருப்பதால் நடந்தது எதுவும் மாறிவிடாது..." என்று அவன் அவளை ஆறுதல்படுத்த...

"அத்தை செய்த தப்புக்குத் தண்டனை கிடைச்ச மாதிரி... நீ செஞ்ச தப்புக்கு உனக்கு என்ன தண்டனை

கொடுக்கலாம்...?"

"வேணும்ன்னா உன் கையில் கத்தியை கொடுத்து என் உயிரை எடுக்கச் செய்வோமா...?" அசால்ட்டாகக் கொலை செய்வதைப் பற்றிக் கூறியவனைக் கண்டு அவள்,

"ஆங்..." என்று திகைத்து விழித்தாள்...

"ஏன் இப்படி முழிக்கிற...? இது உனக்குப் பிடித்தமான விசயம் தானே..." என்று நமட்டு சிரிப்புடன் கூறியவனைக் கண்டு அவள் கண் கலங்க வலியுடன் ஏறிட்டாள்...

அவளது கலங்கிய கண்களைப் பார்த்து கொண்டிருந்தவனுக்கு ஒன்று மட்டும் புரிந்தது... தனக்குத் தண்டனை தர துடிக்கும் இவள், தான் தண்டனை அனுபவிக்கும் போது தன்னை விட அதிகமாய் வலியில் துடிக்கப் போகிறாள் என்று...

மலரினும் மென்மையான மனம் படைத்தவளை கண்டு அவன் மனம் நொறுங்கி போனான்... மென்மையான பூவையவளை கசக்கி முகர்ந்தவன் அல்லவா அவன்... அன்று வன்மம் நிறைந்த அவன் கண்ணுக்கு புலப்படாத அவளது உணர்வுகள் இன்று அவனுக்குப் புலப்பட்டதில் அவன் தனக்குள் இறுகி போனான்...

நிஷிலா அவனது கையைத் தொட்டாள்... அதில் தன்னுணர்வு பெற்றவன் அவளை ஏறிட்டான்...

"நான் அத்தையைப் பார்க்க போகிறேன்..."

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்..." என்று அவன் அவசரமாக மறுத்தான்...

"நீ என்ன மறுக்கிறது...? நான் என்ன கேட்கிறது...?" என்றபடி அவள் கீழே இறங்க எத்தனித்தாள்...

"சொல்கிறேன் இல்லையா...? சொல் பேச்சு கேட்டு ஒழுங்காக உட்கார்..." என்று இறுகிய குரலில் அதட்டியவனைக் கண்டு அவள் அசையாது அப்படியே அமர்ந்தாள்...

"நீ மனுசனே இல்லை..." என்று சீறியவளை கண்டு,

"நீ என்னை ராட்சசன்னு சொன்னதாய் எனக்கு ஞாபகம்..." என்றான் அவன் நகை குரலில்...

"அதையே தான் இப்போதும் நான் சொன்னேன்..." என்றாள் அவள் முறுக்கி கொண்டே...

"இப்போது போய் உன் சொத்தையைப் பார்த்தேன்னா பயந்து போயிருவ... சும்மாவே உன் சொத்தையைக் காண சகிக்காது..." என்று அவன் முகத்தை அருவருப்பாய் சுளித்துக் கொண்டு கூற...

"அப்போ நானும் காண சகிக்காதவளா...?" அவள் பட்டென்று கேட்டாள்... ஏனெனில் அவளும், அத்தையும் தோற்றத்தில் ஒரே மாதிரியல்லவா இருக்கிறார்கள்...

அவளது வார்த்தையில் அவன் அவளைக் கூர்ந்து பார்த்தான்... இதற்கு முன் வேம்பாய் கசந்த அவளது தோற்றம் இன்று கரும்பாய் இனிப்பது ஏனோ... குமரியின் குழந்தை மனதை கண்டு கொண்டதாலோ...!!!

"இருக்கும், இருக்கும்... உனக்கு என் முகம் காண சகிக்காததாகத் தான் இருக்கும்... ஏன்னா உன்னைப் பொறுத்தவரை நான் பெண்ணே இல்லையே... அதனால் தானே அன்னைக்கு உன்னால் அவ்வளவு ஈசியா என்னை வேண்டாம்ன்னு சொல்லிட்டு போக முடிஞ்சது..."

அவன் கூறிய அதே வார்த்தைகள் தான்... இப்போது அவள் கூறுவது கேட்டு அவன் வெட்கி தலைகுனிந்தான்... மனம் பாரமாய்க் கனத்தது... முயன்று தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"அப்படின்னு நான் சொன்னேனா இல்லையே... நீ பெண் என்பதால் தான் நான் உன்னுடன் வாழ்ந்து என் குழந்தை உன் வயிற்றில் வந்திருக்கிறது..."

"அந்தக் கர்மத்தை திரும்பத் திரும்ப ஞாபகப்படுத்தாதே..."

எரிச்சலுடன் மொழிந்தவள் அவனைப் பார்க்க இயலாது தலையைக் குனிந்து கொண்டாள்... அவனுடன் பதிலுக்குப் பதில் வாயாடும் அவளால் அவன் கணவனாய் உரிமை கொண்டு பேசுவதை மட்டும் சகித்துக் கொள்ள முடியவில்லை... அந்தப் பேச்சை மட்டும் அவள் வெறுத்தாள்...

அவளது நாடியில் விரல் பதித்து அவளது முகத்தை நிமிர்த்தியவன் அவளது விழிகளுக்குள் உற்று பார்த்தபடி, "உன் பெயருக்கு ஏற்றார் போன்று உன் முகம் நிலவு மாதிரி அழகாயிருக்கு..." என்றவனை முகம் கசங்க பார்த்தவள்,

"என் பெயருக்கு நீ கொடுத்த விளக்கம் வேறு, அர்த்தம் வேறு..." அவன் கூறியதை நினைத்து பார்த்தவளுக்கு இப்போதும் அத்தனை அவமானமாக இருந்தது...

"இதுக்கு நான் விளக்கம் கொடுத்துவிடுவேன்... ஆனா உனக்கு அது பிடிக்காது என்பதால் பேசவில்லை..."

அவனது விளக்கம் எப்படிப்பட்டதாக இருக்கும் என்று தானாகக் கணித்தவள் அவனை முறைத்து பார்த்தாள்... அவளது சிறுபிள்ளை போன்ற செயலில் அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"நான் சொன்னது எல்லாத்தையும் மறக்காம ஞாபகம் வச்சியிருக்கியா...?"

"அது எப்படி மறக்க முடியும்...?"

"என்னையும் சேர்த்து தானே..." கேலி குரலில் கேட்டவனைக் கண்டு முறைத்தவள்,

"உன்னையும் சேர்த்து தான்... ஏன்னா அதை எல்லாம் சொன்னவன் நீ தானே... அப்புறம் எப்படி மறக்க முடியும்...?" என்று எகிறியவளை கண்டு,

"கூல் பேபி..." என்று அவன் கூலாகக் கூற... அவள் வெடுக்கென்று அவனது விரலை தட்டிவிட்டாள்...

"அப்போ நீ எதையும் மறக்கவில்லை... அப்படித் தானே... ரொம்ப நல்லது... நான் உன் கணவன் என்பதும் உன் ஞாபகத்தில் இருக்கிறது தானே..." என்றவனை முறைத்து பார்த்தபடி இருந்தவளின் முன் அவளது கழுத்தில் கிடந்த தாலியை தூக்கி காட்டி,

"இதுக்குக் கொடுக்கும் மரியாதை எனக்கு இல்லையா...?" என்று அவன் நக்கலாய் கேட்க...

சங்கிலியை அவனிடம் இருந்து வெடுக்கென்று பறித்தவள், "உனக்கு இந்த மரியாதை போதும்..." என்று கோபத்துடன் கூற...

"அது சரி இருபது பவுன் தங்க சங்கிலியும், ஐஞ்சு காசு பிரயோஜனம் இல்லாத நானும் ஒண்ணா... இப்போ புரியுதுடி... இந்தப் பொம்பளைங்க எல்லாம் ஏன் தாலியை இப்படி மதிக்கிறாங்கன்னு... தாலியை சாக்கா வச்சு இருபது பவுன் தங்கத்தைப் புருசன் கிட்ட இருந்து ஆட்டைய போட தானே..."

அவன் கூறிய பாவனையில் அவளுக்குமே சிரிப்பு வந்தது... முல்லை பூவாய் மலர்ந்து சிரித்தவளை கண்டு அவனுக்கு நிம்மதியாக இருந்தது... அவளது சிரிப்பில் மனம் மயங்கியவனின் வலதுகை ஆட்காட்டி விரல் அவளது நெற்றியில் இருந்து தொடாது பயணித்தது அன்று போல்... அவள் சிரிப்பை தொலைத்தவளாய் மூச்சை அடக்கி கொண்டு அவனைப் பரிதவிப்புடன் பார்த்தாள்... அன்று போல் ஏதேனும் கூறிவிடுவானோ என்கிற அச்சம் அவளுள் எழுந்து அவளது இதயத் துடிப்பை எகிற வைத்தது...

அவனது விரல் இறுதியாக அவளது இதழ்கள் முன் தொடாது நின்று, "எப்போதும் இப்படிச் சிரித்துக் கொண்டு இருப்பதற்கு என்ன...? இப்போது பார்ப்பதற்கு நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய் தெரியுமா...?"

அதைக் கேட்டு அவள் விழி விரித்து அவனை இமைக்காது பார்த்தாள்... அவளை வார்த்தைகளால் குதறி எடுக்காது நல்ல மாதிரியாகப் பேசுகிறானே... உலக அதிசயம் தான்...!

"உண்மையைத் தான் சொல்கிறேன் பேபி..." என்று புன்னகைத்தவனைக் கண்டு அவள் தனது விழிகளைத் தாழ்த்தி கொண்டாள்...

"என் சிரிப்பை நான் தொலைத்து ஒன்பது மாதங்களாகிறது... இனி சிரிப்பேனா என்றும் எனக்குத் தெரியலை..."

"இப்போ எப்படி உன் சிரிப்பை நான் மீட்டெடுத்தேனோ அதே போல் மீண்டும் மீட்டெடுக்க முடியும்ன்னு எனக்கு நம்பிக்கை இருக்கு..."

"அது உன்னால் தான் முடியும்... ஏன்னா நீ தண்டனை அனுபவிக்கும் போது நிச்சயம் நான் சந்தோசப்படுவேன்... அன்னைக்கு இந்த உலகத்துக்கே கேட்கிற மாதிரி நான் சத்தம் போட்டு சிரிப்பேன்..." என்றவளை நோக்கி அவன் புரியாத பார்வை ஒன்றை வீசினான்...

அதைப் புரிந்து கொள்ள வேண்டி அவள் அவனை உற்று நோக்கினாள்... அந்தோ பரிதாபம் அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை...

"நீ எதுக்கு இப்போ இப்படிப் பார்க்கிற...?" என்று அவனிடமே கேள்வி கேட்டு அவள் சிடுசிடுத்தாள்...

"இதுக்கான அர்த்தத்தை நான் சொன்னால் உன்னால் தாங்கிக்க முடியாது..." என்றவன் மெல்ல பேச்சை மாற்றிவிட்டான்...

அவன் மீது என்ன கோபம் இருந்த போதும் அவன் அருகாமையில் அவள் பாதுகாப்பாக உணர்ந்ததாலோ என்னமோ அவள் அவனிடம் ஓயாது வளவளத்து கொண்டிருந்தாள்... சிறிது நேரம் பொறுத்து பார்த்தவன்,

"அம்மா, தாயே! என்னை விட்டுரு... நாளையில் இருந்து நீ பேசுறதை கேட்கிறதுக்குன்னு தனியா ஒரு ஆளை வேலைக்குப் போட்டுர்றேன்..." என்று அவன் கையெடுத்து கும்பிட்டான்...

"ஓ, நான் பேசினா உனக்கு எரிச்சலா இருக்கா...? அப்போ சரி... எனக்கு வேற ஆள் எல்லாம் வேண்டாம்... நீ தான் வேண்டும்... உன் காது ரெண்டும் பங்கசர் ஆகும் அளவுக்குப் பேசியே அறுக்கிறேன்... இந்தத் தண்டனையே சூப்பரா தான் இருக்கு..." என்று குதூகலித்தவளை இமைக்காது பார்த்தான் அவன்...

"என்ன பார்க்கிற...?" என்று அவனது முகத்திற்கு நேரே கையாட்டியவளை கண்டு,

"இனி என் நிலை என்னாகுமோன்னு யோசிச்சு பார்த்தேன்..." என்று பரிதாபமாகக் கூறியவனைக் கண்டு அவளுக்குச் சந்தோசமாய் இருந்தது...

அப்போது கதவு மீண்டும் தட்டப்பட... அவன் எழுந்தான்...

"திறக்க வேண்டாம் விடு..." என்று அவள் கூற...

"டாக்டர், நர்ஸ் யாராவது இருக்கப் போறாங்க..." என்றபடி அவன் கதவை திறந்தான்...

அங்கு நின்றிருந்த பவித்ரனை கண்டு சிம்மவிஷ்ணு புன்னகையுடன், "வா தீரா..." என்று புன்னகையுடன் வரவேற்க...

அவன் யோசனையுடன் இவனைப் பார்த்தபடி உள்ளே வந்தான்...

"அத்தான்..." என்று முகமலர்ச்சியோடு கூவிய நிஷிலா அவனுக்குப் புதிதாகத் தெரிந்தாள்...

இன்று காலை வரை அவளது இந்த மகிழ்ச்சி எங்கே போயிருந்தது...? உண்மையில் கணவன், மனைவி இணைந்து விட்டனரோ என்று அவனுக்குப் பெருத்த யோசனையாக இருந்தது...

"உடம்பு இப்போ எப்படியிருக்கு குட்டிம்மா...?" தனது யோசனையைக் கைவிட்டவனாய் பவித்ரன் அவளது நலத்தைக் கேட்டபடி அவள் அருகில் சென்று அமர்ந்தான்...

சிம்மவிஷ்ணு பேண்ட் பாக்கெட்டில் கை விட்டுக் கொண்டு இருவரையும் பார்த்தபடி ஜன்னல் மீது சாய்ந்து நின்றிருந்தான்...

பவித்ரனின் கை அவளது மணிக்கட்டின் மீதிருந்த கட்டினை மென்மையாய் வருடியது...

"நாங்க எல்லோரும் இருக்கும் போது நீ இப்படி ஒரு முடிவு எடுக்கலாமா...?" என்று வேதனையுடன் கேட்டவனிடம்,

"எல்லாம் அவனால் தான் அத்தான்..." என்று அவள் தனது கணவனை நோக்கி கை காட்டினாள்...

'அடிப்பாவி' என்பது போல் மனைவியைப் பார்த்த சிம்மவிஷ்ணுவின் உதடுகளில் புன்னகை நெளிந்தது...

"ஷ், நிஷிம்மா இன்னும் நீ சின்னப் பெண் இல்லை... உன் கணவனை இப்படித்தான் அவன், இவன்னு அழைப்பாயா...?" என்று பவித்ரன் அவளைக் கடிந்தான்...

"அவனுக்கு இந்த மரியாதை போதும்..." வெடுக்கென்று கூறியவளை கண்டு,

"குட்டிம்மா..." என்று பவித்ரன் அதட்டினான்...

"விடு தீரா... அவளுக்கு எப்படித் தோணுதோ அப்படிக் கூப்பிடட்டும்..." பவித்ரனிடம் கூறியவன் மனைவியைப் பார்த்து,

"மரியாதை மனசில் இருந்தால் போதும்... அப்படித் தானே பேபி..." என்று குறும்பாய் கண்சிமிட்ட... அதில் திணறி போனவள்,

"ஆமாம், ஆமாம்..." என்று பெரிதாகத் தலையாட்டி வைத்தாள்...

"போதும் நிலா... இதுக்கு மேல் நீ தலையாட்டினால் நான் உன்னை ஆட்டுவிப்பதாய் தீரன் நினைத்துக் கொள்ளப் போகிறான்..."

உண்மையில் பவித்ரன் அப்படித் தான் நினைத்துக் கொண்டிருந்தான்... சிம்மவிஷ்ணு நிஷிலாவை இந்தளவிற்கு மாற்றிவிட்டானா? என்று...

கணவன் கூறியதை கேட்டு மனைவி அவனை முறைத்து பார்த்தாள்... பின் ஞாபகம் வந்தவளாய் அத்தை மகனிடம்,

"அத்தைக்கு எப்படியிருக்கிறது...?" என்று கேட்க...

"ட்ரீட்மெண்ட் நடந்துக்கிட்டு இருக்கு... டாட் அங்கே தான் இருக்காங்க..." என்று தன்னிச்சையாய் பதில் கூறியவன்,

"ஆமாம் உனக்கு எப்படி இந்த விசயம் தெரியும்...? யார் சொன்னாங்க...?" என்று கேட்க...

அவள் திகைப்புடன் கணவனைப் பார்த்தாள்... ஏனெனில் அவனும் அவளுடன் தானே இருந்தான்... 'அப்போ நீ தான் இந்தக் காரியத்தைச் செய்ததா?' என்று அவள் குற்றம் சாட்டும் பார்வையை அவனை நோக்கி வீச... அதைக் கண்டு அவனது புன்னகை இன்னமும் விரிந்தது...

"அது, ஆங்... அம்மா சொன்னாங்க..." என்று கணவனை முறைத்துக் கொண்டே அத்தானுக்குப் பதில் கூறினாள்...

"சரி, நான் மாம்மை பார்க்க போகிறேன்..." என்றபடி எழுந்த பவித்ரனிடம்,

"நானும் வருகிறேன்..." என்று அவள் அடம்பிடிக்க...

"நீ ரெஸ்ட் எடுடா குட்டிம்மா..." என்று அவன் மறுக்க...

"ம்ஹூம் முடியாது..." என்று மறுத்தவளை வேறுவழியின்றி அவன் அழைத்துப் போக எத்தனித்தான்...

கையில் ஏறிக் கொண்டிருந்த ட்ரிப்சை தானே கழட்டி விட்டு எழுந்தவளை சிம்மவிஷ்ணு ஆச்சிரியத்துடன் பார்க்க... அவனை மிதப்பாய் பார்த்த நிஷிலா,

"நான் வருங்கால டாக்டராக்கும்..." என்று பெருமையுடன் கூறி கொண்டாள்...

அதைக் கேட்டு அவன் வாய்விட்டு சிரித்துவிட்டான்... அதற்கும் அவனை முறைத்தவள் கட்டிலில் இருந்து எழுந்து நின்றாள்... ஏற்கெனவே காலில் கொட்டியிருந்த வெந்நீர் ஏற்படுத்திய புண் அவளுக்கு வலி கொடுக்க,

"ஷ்..." என்று வலியில் முனங்கினாள்...

"நீ இரு நிஷிம்மா... நீ இருக்கும் நிலையில் எங்கும் போக வேண்டாம்..." என்று பவித்ரன் கூற...

"அத்தை பாவம் இல்லையா...? நான் அவங்களைப் பார்க்க போகணும்..." என்று குரல் தணிய கூறியவளின் கெஞ்சலை காண சகிக்காது அவள் அருகே வந்த சிம்மவிஷ்ணு அவளைத் தனது கைகளில் தூக்கி கொண்டான்...

இந்தக் காட்சியைக் கண்டு முதலில் திகைத்த பவித்ரன் பின் சிரித்தபடி முன்னே செல்ல... நிஷிலாவோ கணவனது கைகளில் இருந்து திமிறினாள்...

"ஏய், கீழே இறக்கிவிடு..." என்று அவனது நெஞ்சில் சராமாரியாகக் குத்தினாள்...

"ஏன் நான் உன்னைத் தூக்கினதே இல்லையா...?" என்று அவன் ஒரு மாதிரி குரலில் கேட்க...

அவன் எத்தனையோ முறை அவளைத் தூக்கியிருக்கிறான் தான்... அதை நினைத்து பார்த்தவளுக்கு அதன் பின் நடக்கும் சம்பவங்கள் நினைவில் எழுந்து முகத்தை இறுக செய்தது...

"அந்த ஞாபகம் வருவதால் தான் உன்னை விடச் சொல்கிறேன்..." என்று அவள் கோபத்துடன் கத்தினாள்...

"நான் உன் கணவன் எனும் போது அந்த ஞாபகம் வருவதில் என்ன தவறு இருக்கிறது...?"

"நீ கணவனா...?" என்று முறைத்தவளை கண்டு,

"நான் அப்படிச் சொல்லலை... நீ தான் ஊரை கூட்டி அப்படிச் சொல்லியிருக்க... இப்போ அதே ஊரை கூட்டி இந்த நியாயத்தை நான் கேட்கவா...?" என்றவன் வாய் மீது கை வைத்து அவனைப் பேச விடாது தடுத்தவள்,

"லூசாடா நீ...?" என்று அவனை அதட்ட... அதைக் கண்டு அவனுக்குச் சிரிப்பு தான் வந்தது...

"முதலில் நீ என்னைக் கீழே இறக்கி விடு..." மீண்டும் அவள் அப்படிக் கூறியதும் அவன் நல்ல பிள்ளையாய் அவளைக் கீழே இறக்கி விட்டான்...

அப்போது தான் அவளுக்குச் சுற்றுப்புறம் உறைத்தது... அவன் பேசி கொண்டே அவளை எமர்ஜென்சி வார்டிற்குத் தூக்கி கொண்டு வந்திருந்தான்... குடும்பத்தினர் அனைவரது பார்வையில் அவள் வெட்கம் கொண்டு அவன் பின்னே சென்று மறைந்து கொண்டாள்... தனது கையைப் பின்னுக்குச் செலுத்தி அவளை முன்னுக்கு இழுத்தவன்,

"உன் சொத்தையைப் பார்க்க துடிச்சிட்டு இப்போ என் பின்னால் நின்றால் எப்படி...? போ போய்ப் பார்..." என்று கூற...

அவள் தடுமாறியபடி நடந்தாள்... விரைந்து அவள் அருகில் வந்து அவளது தோளை பற்றி அழைத்துச் சென்றவன் அவளிடம் ரகசியமாக, "முடியலைன்னா சொல்லு, தூக்கறேன்..." என்று கூற...

"ஐயோ வேண்டாம்..." என்று அவசரமாய் மறுத்து பதறியவளை கண்டு அவன் புன்னகை விரிய உடன் நடந்தான்...

அவள் கர்ப்பவதி என்பதால் நோய் தொற்று வர கூடாது என்று மூக்கின் மீது 'மாஸ்க்' அணிவித்த பிறகே உள்ளே அனுமதித்தார்கள்... இளவரசியின் உடலின் ஒரு பாகம் முழுவதும் தோல் உறிந்து பார்ப்பதற்கு மிகவும் பாவமாக இருந்தார்... சூடான தார் அவரது தோலை பொசுக்கியிருந்தது...

அதைக் கண்டு நிஷிலாவின் விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்தது...

"இப்போ நீ எதுக்கு அழுற...?" என்று அவன் கோபமாய் அவளை அதட்டினான்...

"இப்படிப் பண்ணிட்டியேடா பாவி..." என்று அவள் கண்ணீரோடு அவனை முறைத்து பார்த்தாள்...

"அவங்க உன்னைப் பாவம் பார்த்தாங்களா...? இல்லையே... அப்போ நான் எப்படிப் பாவம் பார்ப்பேன்...?" என்றான் அவன் கடுமையுடன்...

இத்தனை நேரம் அவளிடம் இளக்கம் காட்டின சிம்மவிஷ்ணு இவன் இல்லை... இவன் வேறு... அவள் பயத்துடன் அவனது கைப்பிடியை உதற முயன்றாள்... அவளது முயற்சியை உணர்ந்தவன் அவளைக் கேள்வியாய் ஏறிட்டுப் பார்த்தான்...

"உன்னைப் பார்த்தா எனக்குப் பயமாயிருக்கு..." அவளின் பயம் அறிந்து கண்களில் கனிவு கொண்டு வந்தவன்,

"நீ இப்படிப் பேசாம இருந்தால் அதுவே போதும்..." என்றவன் இளவரசியைப் பார்த்தான்...

வலியை மறப்பதற்காக அவருக்கு மயக்க மருந்து கொடுத்திருந்தனர் போலும்... ஆழ்ந்த மயக்கத்தில் இருந்தார் அவர்... அவரது நிலையைக் கண்டு அவன் சிறிதும் இரக்கம் கொள்ளவில்லை... தன்னவளுக்கு நியாயம் செய்துவிட்ட திருப்தியே அவனுள் நிறைந்திருந்தது...

"இங்கே ரொம்ப நேரம் இருக்காதீங்க மேடம்... கிளம்புங்க..." செவிலிப்பெண் கூறியதும் இருவரும் அங்கிருந்து வெளியில் வந்தனர்...

அங்கிருந்த நாற்காலியில் ஓய்ந்து போய் அமர்ந்திருந்த பத்ரிநாத்தை கண்டதும் அவனது மனம் மிகவும் வருந்தியது... தகுதியில்லாதவரை காதலித்த பாவம்

அவரையும் துரத்துகிறது... அவர் அருகில் அமர்ந்தவன் தன்னருகில் நிஷிலாவை அமர சொன்னான்... அவள் அவனை முறைத்தபடி அங்கே அமர்ந்தாள்...

"பத்திப்பா, அவங்களுக்குச் சரியாகிரும்..." என்று அவன் ஆறுதல் கூற...

"பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுறதை பார்..." என்று அவள் கோபமாய் முணுமுணுத்தாள்...

"கொல்லாது கிள்ளிவிட்டதோடு நிறுத்தினேனே என்று சந்தோசப்படு..." அவளை விட ஆத்திரமாய் அவன் முணுமுணுத்தான்...

'அடேய் கிராதகா...' என்பது போல் அவள் அவனைப் பார்த்து வைத்தாள்... அவன் அவளைக் கண்டு கொள்ளாது,

"பத்திப்பா, இப்போ காஸ்மெடிக் சர்ஜரி எல்லாம் நல்லா டெவலப் ஆகியிருக்கு... அம்மாவை சரி பண்ணிரலாம்..." என்று கூற...

"எல்லாம் சரி பண்ணிரலாம் விஷ்ணு... ஆனா அவளோட வலியை நினைச்சா மனசு பதறுது..." பத்ரிநாத் அவனிடம் கூறும் போதே நிஷிலா அவனது கையைச் சுரண்டினாள்...

'என்ன?' என்று திரும்பி பார்த்தவனைக் கண்டு அவள் அவனது தொடையில் கை வைத்து எக்கி அவனது காதருகில் ரகசியம் போல்,

"மாமா கிட்ட எதையும் சொல்லிராதே... அவருக்கு அத்தையை ரொம்பப் பிடிக்கும்... அத்தைக்கும் தான்... என்னால் அவங்க வாழ்க்கையில் பிரச்சினை எதுவும் வர வேண்டாம்..." என்றவளை அவன் ஏறிட்டுப் பார்த்தான்...

அவன் முகத்தருகே இருந்த அவளது நிலவு முகம் எப்போதும் விட இப்போது மிக அதிகப் பிரகாசத்துடன் இருப்பது போல் அவனுக்குத் தோன்றியது... அவன் நினைத்ததை அப்படியே அவளும் கூறியது கண்டு அவனது மனம் நெகிழ்ந்து போனது... அந்த ஒரு

காரணத்திற்காகத் தானே அவனும் அமைதியாக இருக்கின்றான்... என்றாவது ஒரு நாள் பத்ரிநாத் தனது மனைவியைப் பற்றி உணர்ந்து அவரே தனது மனைவிக்குத் தண்டனை தர வேண்டும் என்று தான் அவன் இத்தனை நாளாய் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்ப்பது... அதற்கான வேலைகளில் தான் அவன் இறங்கியிருக்கிறான்.... என்றாவது ஒரு நாள் அது நிச்சயம் நடக்கும் என்று அவன் உறுதியாக நம்பினான்...

"சொல்ல மாட்டேன்... கவலைப்படாதே..." என்றவனை அதிசயமாகப் பார்த்தாள் அவள்...

எக்கி நின்று கொண்டிருந்தவளின் தோள்களைப் பற்றி நாற்காலியில் அமர வைத்தவன், "எனக்கும் அந்த அக்கறை இருக்கிறது..." என்றான் மென்மையாக...

"பொய் சொல்லாதே..."

"உன் அத்தைக்காக அல்ல... பத்திப்பாவுக்காக..."

"என்னது... பத்திப்பாவா...? நீ என்ன சின்னக் குழந்தையா...? இப்படிக் கூப்பிடற...?" என்று கேலி செய்து சிரித்தவளை அவன் தீப்பார்வை பார்த்தான்...

"எனக்கும், என் பத்திப்பாக்கும் இடையில் வர முயற்சிக்காதே... உன் எல்லை தெரிந்து நடந்து கொள்..." என்று சீறியவனின் வார்த்தையில் அவள் கப்பென்று வாயை மூடி கொண்டாள்...

இந்த முறை அவனது கோபம் அவளைப் பாதிக்கவில்லை... ஏனோ மனதிற்கு நிறைவாக உணர்ந்தாள்... தனது உறவினரை அவன் தன் உறவாக எண்ணியதாலோ என்னமோ...

பத்ரிநாத்திடம் பேசிய சிம்மவிஷ்ணு மறந்தும் செல்வரத்தினம், மணிபாரதி பக்கம் திரும்பியும் பார்க்கவில்லை... மீண்டும் அறைக்குச் செல்ல எண்ணியவளை தூக்க முயன்றவனை வெட்கம் மேலிட தடுத்தவள்,

"அந்த வீல்சேரை எடுத்துட்டு வா..." அங்கே ஓரமாய் வைக்கப்பட்டிருந்த சக்கர நாற்காலியை அவள் சுட்டிக்காட்ட... அவன் சிரித்தபடி அதை உருட்டி கொண்டு வந்து அவள் முன் வந்து நின்றான்...

அவள் அமர்ந்ததும் அவன் அதை உருட்ட துவங்கினான்...

"திடீர்ன்னு உனக்கு என்னாச்சு...? ரொம்ப நல்ல பையனா மாறிட்டு வர்ற..."

"நான் எப்போதும் நல்ல பையன் தான்... இப்போ கொஞ்ச நாளாகத் தான் கெட்டவன்... அதுவும் உனக்கு மட்டும்..." என்று அவன் நல்ல பிள்ளையாக உண்மையை ஒத்துக் கொண்டான்...

"ஏன்...?" என்று கேட்டவளின் குரல் கமறியது...

"விதிப்பயன்..." என்றதோடு அவன் முடித்துக் கொண்டான்...

அவளும் அந்த நினைவுகளின் தாக்கத்தில் அமைதியாகி போனாள்...

அன்றே தனது தந்தையை அழைத்துப் பேசினான்... அவராக எதுவும் பேசவில்லை... அதனால் அவனே அவரிடம் விசயத்தைக் கூறினான்...

"நிலா நம்ம வீட்டுக்கு வரணும்ன்னு ப்ரியப்படுகிறாள்... அவளை மதுரைக்கு அழைத்து வரலாம்ன்னு இருக்கேன்..."

"சரி அவளை மட்டும் அனுப்பு... ஆனா நீ இங்கு வர கூடாது..." என்று கறார் குரலில் கூறியவரை கண்டு அவன் வேதனை அடைந்தான்...

"நான் அங்கே தங்கியிருக்க வரலை... அவளை அழைச்சுட்டு வந்து விட்டுட்டு கிளம்பிருவேன்..." என்க...

"ரொம்பச் சந்தோசம்..." என்றபடி அவர் அழைப்பை துண்டித்துவிட்டார்...

அவர் மனைவியிடம் விசயத்தைக் கூறியதும் மீனாட்சி மகிழ்ச்சியில் திக்குமுக்காடி போனார்...

"ரொம்பச் சந்தோசம்ங்க... நாளைக்கு நம்ம உறவுக்காரங்களை எல்லாம் விருந்துக்கு அழைக்கணும்..." என்று உற்சாகமாய்க் கூறியவரை வருத்தமாய்ப் பார்த்திருந்தார் சுந்தரபாண்டியன்...

"என்ன பார்க்கிறீங்க...? மசமசன்னு நிக்காம வேலையைப் பாருங்க..." என்று அதிகாரமாய்க் கணவனை வேலை ஏவி விட்டு மீனாட்சி செல்ல... அதைக் கண்டு சுந்தரபாண்டியனின் முகத்தில் புன்னகை மலர்ந்தது...

ஊரையே ஆட்சி செய்யும் அவரை ஆட்சி செய்தார் அவர் வீட்டு பெண்ணரசி...!!!

அடுத்து சிம்மவிஷ்ணு நிஷிலாவின் தந்தையிடம் பேசினான்... அவரும் அவனுக்கு விரோதி தான்... ஆனால் நிஷிலாவுக்காகப் பேசினான்...

"பொண்ணைப் பெத்தா மட்டும் போதாது... அவள் எப்படி இருக்கிறாள்ன்னு பார்க்கணும்...?"

"என் மகள் மேல் எனக்கு அக்கறை இருக்கு... நீ ஒண்ணும் சொல்ல வேண்டாம்..." என்று அவர் அவனிடம் எகிறினார்...

"இவனைப் பேச விட்டு நீ வேடிக்கை பார்க்கிறியா..?" என்று அவர் மகளிடத்திலும் எகிற மறக்கவில்லை...

நிஷிலா இருந்த அறையில் சிம்மவிஷ்ணு, அவள், அவளது பெற்றோர் மட்டுமே இருந்தனர்...

"அப்பா நான் ஒண்ணும் சொல்லலை..." அவள் பதறி போய் மறுத்தாள்...

"எதுக்கு உண்மையை மறைக்கிற நிலா... உன் உடம்பில் உள்ள சூடுகள் வந்த கதையை உன் அப்பாவிடம் சொல்லு..."

"ச்சு... நீ சும்மாயிருக்க மாட்டியா...?"

அத்தையைப் பற்றிக் குறை கூறினால் தந்தை நம்ப மாட்டார் என்று அறிந்தே அவள் அவரிடம் எதையும் கூறவில்லை...

"உண்மையைச் சொல் நிலா..." அவன் அவளை அதட்டினான்...

"உண்மையாக இருந்தால் உன் சூடுகளைக் காட்டு நிஷா..." செல்வரத்தினம் மகளிடம் சொன்னார்...

"அது அப்பாவிடம் காட்ட கூடாத இடம்... கணவன் மட்டுமே பார்க்க கூடிய இடம்..." கோபமும், கர்வமும் கலந்து வந்தது அவனது வார்த்தைகள்...

"நிஷா..." என்று அவர் அதிர்ந்து போய் மகளைப் பார்த்தார்...

"உண்மை தான்ங்க..." என்று அருந்ததி அதை ஒத்துக் கொண்டார்...

மனைவி கூறியதும் அவரால் அதை நம்பாது இருக்க முடியவில்லை... ஏனெனில் அருந்ததி ஒரு அப்பாவி... பொய் சொல்ல தெரியாதவர்...

"சூடு போட்டது உங்க தங்கை தான் என்றால் என்ன செய்வதாக உத்தேசம்...?" என்று கேட்டவனின் சட்டையைக் கோபத்துடன் பிடித்தவர்,

"பொய் சொல்லாதே..." என்றார் அவர் கடுமையுடன்...

"உங்க அருமை மகள் கிட்டேயே கேளுங்க..." என்றவன் மனைவியைப் பார்த்து,

"உன் அப்பா கிட்ட உன் சொத்தையைப் பத்தி சொல்லு..." என்க...

அவளோ பயத்துடன் வாயை இறுக மூடி கொண்டாள்... அதைக் கண்டு அவளை ஆயாசத்துடன் பார்த்தவன் பின் செல்வரத்தினத்திடம்,

"அவள் உடம்பில் சூடுகள் இருப்பது உண்மைன்னா நான் சொல்லும் விசயமும் உண்மை... நீங்களே உங்க தங்கச்சி கிட்ட போய்க் கேட்டு பாருங்க..." என்க...

"நீயும் கூட வா... அப்போ தான் உனக்கும் உண்மை தெரியும்..." என்று அவர் முன்னால் செல்ல...

"பாசமலர் மூவி பார்த்துட்டு வர்றேன்..." என்று மனைவியிடம் கண்சிமிட்டி விட்டு அவன் செல்ல... அவளோ செய்வதறியாது அமர்ந்திருந்தாள்...

அப்போது தான் இளவரசி லேசாக மயக்கம் தெளிந்திருந்தார்... செல்வரத்தினம் தங்கையைப் பார்க்க வேண்டும் என்றதும் அதுவரை உடனிருந்த பத்ரிநாத்தும், பவித்ரனும் வெளியில் வந்தனர்... ஏனெனில் கூட்டம் போட கூடாது என்று மருத்துவமனையில் கண்டிப்பாகக் கூறியிருந்தனர்...

"அரசி நீ தான் இதைச் செய்ததா...?"

எதிரியை அருகில் வைத்துக் கொண்டு அண்ணன் இப்படிக் கேட்டது இளவரசிக்கு உடல் எரிச்சலை விட அதிக எரிச்சலாக இருந்தது...

"நான் என்ன செய்தேன்...?" என்று அவர் வலியோடு முனங்கினார்...

"நிஷாவுக்கு ஏன் சூடு வச்ச...?"

அதைக் கேட்டு இளவரசி ஒன்றும் திடுக்கிட்டு போகவில்லை... மாறாகக் கூலாகச் சகோதரனை பார்த்தார்...

"இவனோட குழந்தையை அவள் சுமக்கிறாளே... அதுக்காக வச்சது... அவள் தூங்கிட்டு இருக்கும் போது பழுக்கக் காய்ச்சிய கரண்டியை கொண்டு அவளது வயிற்றில் வைத்து நன்றாக இழுத்து விட்டேன்... எதிரியின் குழந்தை நம்ம வீட்டில் இருக்கக் கூடாது..." என்று விழிகளில் கொடூரம் பட்ர கூறினார் அவர்...

கொஞ்சமும் குற்றவுணர்வு இல்லாது கூறியவரை கண்டு நெஞ்சு பதற பார்த்திருந்தான் சிம்மவிஷ்ணு... வெளியில் எந்த உணர்வையும் அவன் காட்டி கொள்ளவில்லை... ஆனால் அவனது கலங்கி சிவந்த விழிகள் அவனது மனவலியை சொல்லாது சொல்லியது...

"அதுக்கு நிஷா என்ன பாவம் செய்தாள் அரசி... நீ சூடு போட்டது அவளுக்குத் தானே வலிச்சிருக்கும்..." செல்வரத்தினம் மகளை நினைத்துக் கண் கலங்கினார்...

"ஓ, உன் மகள்ன்னதும் பதறுகிறாயோ... இதே இது அன்னைக்கு எங்கே போச்சு உன் புத்தி...?"

அதைக் கேட்டு பெருத்த சலனமடைந்த மனதுடன், சலனமில்லா பார்வையுடன் நின்றிருந்தான் சிம்மவிஷ்ணு... அன்றைய நாளின் நினைவு அவனது மனதிலும் படமாக ஓடியதோ...

"அதுக்கு நீயும் ஒரு காரணம் அரசி... அதை மறந்துட்டு பேசாதே... இனி நீ என் மகள் மேல் கை வச்சா நான் உன் வாழ்க்கையில் கை வைக்க வேண்டி வரும்... ஜாக்கிரதை..." பெண்ணின் தகப்பனாய் அவர் தங்கையை எச்சரித்து விட்டு வெளியில் சென்றார்...

தன்னையே பார்த்துக் கொண்டிருந்த சிம்மவிஷ்ணுவை கண்டு இளவரசி எரிச்சலுடன் முகத்தைச் சுளித்தார்... உடல் உபாதை வேறு சேர்ந்து கொண்டது...

"இப்போ உனக்குச் சந்தோசமா...? போ போய்ப் பட்டாசு வெடிச்சு உன் சந்தோசத்தைக் கொண்டாடு... நீ இதைத் தானே எதிர்பார்த்த...?" என்று அந்த வலியிலும் படபடத்தவரை கண்டு,

"ம்மா..." என்றான் அவன் தனது மனதின் வலியை குரலில் தேக்கியபடி...

சிம்மவிஷ்ணுவின் குரல் இளவரசியின் உள்ளத்தை ஊடுருவி சென்று அவரைப் பெரிதும் அதிர செய்தது...!!!

"வன்மம் கொண்டு கூத்தாடும் போதும்
வஞ்சம் கொள்ள முடியவில்லை என்னால்...
'தாய்' எனும் ஒற்றைச் சொல்லில்
தயங்குகிறது என்னாவி...
பெத்த மனம் பித்துப் பிள்ளை மனம் கல்லு...
பழமொழியை நீ ஏன்
மாற்றியமைத்தாய் தாயே???
மூச்சு முட்டுகிறது எனக்கு, நான்
மூச்சடைத்த நாளை நினைத்து...!!!"

கொல்லும்...!!!

## நிழல் : 20

கடந்த கால நினைவுகள் இருவரின் மனதிலும் படமாக ஓடியதோ...! சிம்மவிஷ்ணு இளவரசியைத் தவிப்புடன் பார்த்திருக்க... அவரோ அவனை அச்சத்துடன் பார்த்திருந்தார்... அவன் சட்டென்று தனது இயல்பை மாற்றிக் கொண்டு இரும்பாய் இறுகி நிமிர்ந்து நின்றான்...

"அம்மா என்கிற வார்த்தைக்கு உங்களுக்கு அர்த்தம் தெரியுமா...?" கூர் ஈட்டியாய் அவரை நோக்கி பாய்ந்து வந்து தாக்கியது அவனது வார்த்தைகள்... ஆனாலும் அதற்கு எல்லாம் அசராது அவர்,

"என் தீராவிடம் போய்க் கேளு... என்னைப் பற்றி அவன் சொல்வான்..." என்றார் பெருமையாக...

"அவனுக்கு உங்களுடைய இன்னொரு முகம் தெரியாது... தெரிந்தால்...?" என்று நிறுத்திவிட்டு அவரது முகத்தைப் பார்த்தவனைக் கண்டு அவரது முகம் விகாரமாய் மாறிப் போனது... அதைக் கண்டு அவனது முகத்தில் கேலி புன்னகை வந்தது...

"இப்போது காட்டுறீங்க பாருங்க இது தான் உங்களுடைய உண்மையான முகம்... நிச்சயம் இது ஒரு நாள் வெளிப்படத்தான் போகுது... அன்று உங்களுக்கு இருக்கிறது..."

"என் காதல் கணவர் இருக்கும் வரை எனக்கு எந்தப் பயமும் இல்லை... நான் அவருடைய ராணி... என்னை யாராலும் அசைக்க முடியாது..." என்று அகம்பாவத்துடன் கூறியவரை கண்டு அவனது புன்னகை வாடவில்லை... மாறாக இன்னமும் அதிகமாய் விரிந்தது...

"காதல்... ம்..." என்றவனது பார்வையில், வார்த்தையில் இருந்த நையாண்டியில் மற்றொரு பெண்ணாக இருந்தால் அவமானம் தாங்காது நாக்கை பிடுங்கி கொண்டு செத்திருப்பாள்... ஆனால் இளவரசிக்கு தான் இது எதுவுமே

கிடையாதே... அதனால் அவர் அவனை உறுத்து விழித்தார்...

"கொஞ்சமும் அடங்குவதாய் இல்லை... கொதிக்கும் தாரில் தள்ளிவிடச் சொன்னதுக்குப் பதிலா கொதிக்கும் தாரில் குளிப்பாட்ட சொல்லியிருக்கணும் போலையே..."

"டேய் இதைச் செய்ய சொன்னது நீ தானாடா...?" அந்த வலியிலும் கத்த முயன்றவரை கண்டு 'ஷ்' என்று வாயில் விரல் வைத்துப் பேசாதிருக்கச் சொன்னவன்,

"எஸ், நானே தான்..." என்றான் அவன் அலட்சியமாக...

அவர்களது தொழிற்பேட்டையினுள் சாலை போட்டு கொண்டிருந்தனர்... இளவரசி அந்த வழியாக நடந்து சென்று கொண்டிருந்த பொழுது தான் அந்த விபரீதம் நடந்தது... கண்ணிமைக்கும் நேரத்தில் கால் தடுக்கி அவர் தார் சாலையில் விழுந்து கிடந்தார்... அப்போது தான் ஊற்றப்பட்டிருந்த கொதிக்கும் தார் அவரது பொன்மேனியை நன்றாகப் பதம் பார்த்து விட்டது...

"உங்க பிஏ ரொம்பப் புத்திசாலி... அவன் கிட்ட சொன்னதும் சொன்ன வேலையைக் கச்சிதமா செஞ்சு முடிச்சிட்டான்..."

அப்படி என்றால் அவர் கால் தடுக்கி கீழே விழவில்லை... மாறாக விழ வைக்கப்பட்டு இருக்கிறார்... கோபத்தில் அவர் பல்லை கடித்தார்...

"அவனுக்கு இருக்கு..." என்றவரை நக்கலாய் பார்த்த சிம்மவிஷ்ணு,

"இன்னும் உங்க கிட்ட வேலை பார்க்க அவன் என்ன பைத்தியக்காரனா...? அவனுக்கு இதை விட நல்ல வேலை சிங்கப்பூரில் காத்துக்கிட்டு இருக்கு... நாளைக்குக் கிளம்பறான்..."

"எல்லாமே உன் வேலை தானா...?"

"எஸ், மை டியர் மாம்..."

"என்னை அப்படிக் கூப்பிடாதே..."

"ஏன் அப்படிக் கூப்பிட கூடாது...? நான் உங்க அண்ணன் மகளைக் கட்டிக்கிட்டவன்... அந்த உறவு முறையில் பார்த்தால் பவித்ரனை போன்று நானும் உங்களுக்கு மகன் தானே..."

"என் மகனோடு உன்னை நீ கம்பேர் பண்ணாதே..."

"ஓ... அழகா இருந்தால் தான் மகனையும் மகன்னு ஒத்துக்குவீங்களோ...? அந்தளவுக்கு ஸ்டேட்டஸ் உங்களைப் பிடிச்சு ஆட்டுது..."

அதைக் கேட்டு அவரது முகம் கறுத்துப் போனது...

"நீங்க செய்த பாவத்துக்கு நீங்க அனுபவிக்கும் வலி குறைவு தான்... இனி தான் உண்மையான வலின்னா என்னன்னு அனுபவிக்கப் போறீங்க... அதுக்கு இப்போதிருந்தே தயாரா இருங்க..." என்றவன் அவரது முகத்தைத் திரும்பி கூடப் பார்க்காது வெளியில் வந்துவிட்டான்...

நிஷிலா இருந்த அறைக்கு வந்த பின்னும் அவனது மனம் சமன்பட மறுத்தது... அவனைக் கண்டதும் அருந்ததி வெளியில் செல்ல... அவனும், அவளும் மட்டும் தனித்திருந்தனர்... அவன் அவளது முகத்தைப் பார்க்காது,

"காலையில் தயாராயிரு... நான் வந்து கூட்டிட்டு போகிறேன்..." என்க...

"உன் கூட நான் வரலை..." பட்டென்று மறுத்தவளை அவன் புரியாது திரும்பி பார்த்தான்... ஒற்றைப் புருவத்தைத் தூக்கி 'ஏன்?' என்பது போல் அவன் அவளைப் பார்க்க...

"நீ என்னை எங்கே கூட்டிட்டு போகிற...?" பயத்துடன் கேட்டவளை கண்டு,

"என் வீட்டுக்கு..."

"என்னை அடைச்சு வச்சியிருந்தியே அந்த வீட்டுக்கா...?"

அவள் அப்படிக் கேட்டதும் அவனது தேகம் இறுகி போனது...

"இல்லை... என் அப்பா, அம்மா இருக்கும் வீட்டுக்கு..."

"உண்மையாவா...?" தலையைச் சரித்துச் சின்னப் பிள்ளை போல் தன்னைப் பார்த்தவளை கண்டு அவனது உதடுகளில் புன்னகை வந்தமர்ந்தது...

"வேறு எங்கும் உன்னைக் கூட்டிட்டு போகும் ஐடியா எனக்கு இல்லை... அதை விட உன்னைச் சமாளிக்க என்னால் முடியாது... அப்பப்பா என்ன ஒரு வாய்...?"

'என்னுடன் இருந்த இரண்டு மாதமும் இந்த வாயை எங்கே ஒளித்து வைத்திருந்தாய்...?' என்று கேட்க நினைத்தவன் அந்த வார்த்தைகளை அப்படியே தொண்டைக்குள் விழுங்கி கொண்டான்... அதைக் கேட்டு அவளைக் கஷ்டப்படுத்த அவன் விரும்பவில்லை...

அவன் சாதாரணமாகப் பேசவும் அவளுக்கு நிம்மதி வந்தது...

"அப்போ சரி... உன் கூட வர்றேன்..."

"முதலில் ஏன் அப்படிச் சொன்ன...?" என்று கேட்டவனைச் சிறிது பயத்துடன் ஏறிட்டாள் அவள்...

"நான் உன்னை ஒண்ணும் சொல்ல மாட்டேன்... காரணத்தைச் சொல்..." என்று அவன் அவளை ஊக்குவிக்க...

"கொஞ்ச நேரம் முன்னே உன்னைப் பார்க்கும் போது..."

"பார்க்கும் போது...?"

"முதலில் பார்த்தது போல் இருந்த..."

"புரியலை..." உண்மையில் அவனுக்கு அவள் கூறுவது புரியவில்லை தான்...

"ராட்சசன் போல்..." என்றவளின் விழிகளில் கண்ணீர் கரை கட்டியது...

அவன் ராட்சசனாய் தன்னை ஆக்கிரமித்த நினைவுகள் எழுந்து அவளது தேகத்தைத் தூக்கிவாரி போட செய்தது...

அவள் காரணம் கூறியதும் புரிந்தவனாய் அவன் உதடு கடித்து அமைதியாக இருந்தான்... தான் ஒன்றை நினைத்து ஒரு காரியத்தைச் செய்யப் போக... தெய்வம் வேறு ஒன்றை அல்லவா நினைக்கிறது... அவனது அந்த வலி இன்னமும் முழுமையாக மறையவில்லை... முணுமுணுவென்று வலித்து அவனது உயிரை எடுக்கிறதே...

"இப்போது எப்படித் தோன்றுகிறது...?" முயன்று வரவழைத்துக் கொண்ட மென்மையுடன் அவன் கேட்க...

"இப்போ கொஞ்சம் பரவாயில்லை..."

"இப்போதும் பரவாயில்லை தானா...?"

"அதுவே உனக்கு அதிகம் தான்..." என்றாள் அவள் முறுக்கி கொண்டு... அவளது பாவனையில் வாய்விட்டு சிரித்தவன்,

"நான் கிளம்பறேன்... காலையில் ஏழு மணிக்கு வருகிறேன்... தயாராக இரு..."

"சரி..." என்றவளின் சம்மதத்தை மீறி அவளது விழிகளில் தெரிந்த அலைப்புறுதலை அவன் கண்டு கொண்டான்... அவளை அணைத்து சமாதானப்படுத்தும் அளவிற்கு அவன் நல்லவன் இல்லையே... அதனால் அவளை வேதனையுடன் பார்த்தபடி அறையை விட்டு வெளியேறினான்...

சிம்மவிஷ்ணு சென்றதும் நிஷிலா தனக்குள் யோசித்தபடி ஆழ்ந்து போனாள்... தான் எடுத்த முடிவு சரி தானா...? என்று அவளுள் பெருத்த யோசனை ஓடியது... குழந்தையைக் காப்பாற்றுவதற்காகப் பெண்மையைச் சீரழித்தவனிடமே அடைக்கலம் புகும் துர்பாக்கிய நிலை வேறு யாருக்கும் வர கூடாது... அவளது கண்கள் கலங்கியது தனது நிலையை நினைத்து...

அவள் பவித்ரனிடம் உதவி கேட்கலாம் தான்... அப்படிக் கேட்டால் ஏன்? எதற்கு? என்று கேள்வி வரும்... பிறகு அவள்

தனது பாதுகாப்பற்ற நிலையைப் பற்றி, அத்தையைப் பற்றிச் சொல்ல வேண்டி வரும்... அது வீணே அத்தையின் குடும்பத்தில் பிரச்சினையைக் கிளப்பும்... நன்றாகச் சென்று கொண்டிருக்கும் அவர்களது குடும்பத்தில் பிரச்சினை உண்டாக்க அவள் விரும்பவில்லை...

அப்போதும் அவள் தனது அத்தையைத் தவறாக நினைக்கவில்லை... சிம்மவிஷ்ணு மேல் கொண்ட கோபத்தில் தான் அவர் அப்படி நடந்து கொண்டதாக அவள் எண்ணினாள்... அவருக்குத் தன் மீது தனிப்பட்ட வெறுப்பு இருக்காது என்றே அவள் நம்பினாள்...

ராட்சசனோடு போவது சரி தானா...? என்று அவள் வெகுநேரம் யோசித்தபடி அமர்ந்திருந்தாள்...

அந்தக் கணம் அவள் அறியவில்லை... அவனால் மட்டுமே அவளுக்குப் பாதுகாப்பு கொடுக்க முடியும் என்று... ஏனெனில் அன்று குழந்தைக்காக அவளது காலில் விழாத குறையாக அவன் கெஞ்சிய போதே அவளை அவளது தாய்மையைக் கர்வமாக உணர செய்து அவன் அவளது மனதில் இடம் பிடித்து விட்டான் என்று... எந்தத் தாய்மைக்காக அவளைக் கேவலப்படுத்தினானோ அதே தாய்மைக்காக அவன் அவளின் தாள் பணிந்து அவளைக் கௌரவப்படுத்தியதை அவள் உணரவே இல்லை...

உணர்ந்த போதோ காலங்கள் கடந்திருந்தது... காட்சிகள் மாறிப் போயிருந்தது...

மறுநாள் காலையில் சிம்மவிஷ்ணு சொன்னது போல் அவளை அழைத்துச் செல்ல வந்துவிட்டான்... பத்ரிநாத் இதற்கு முழுமனதாகச் சம்மதித்ததால் செல்வரத்தினம் வேறுவழியில்லாது இதற்குச் சம்மதித்தார்... பவித்ரனுக்கு மட்டும் மனம் கேட்கவில்லை...

"குட்டிம்மா, எந்தப் பிரச்சினை என்றாலும் எனக்கு உடனே ஃபோன் பண்ணு... நான் வந்து உன்னைக் கூட்டிட்டு போகிறேன்..." என்று ஆறுதலாய் கூறியவனை ஏறிட்டு பார்த்தவள் கண்கள் கலங்க,

"கட்டாயம் ஒரு நாள் ஃபோன் பண்ணுவேன் அத்தான்..." என்க...

அதைக் கேட்டு சிம்மவிஷ்ணுவின் விழிகள் யோசனையாய்ச் சுருங்கியது...

"ஏடிஎம் கார்டு, செல்ஃபோன் எல்லாம் எடுத்துக்கிட்டியா...?" என்று கேட்ட அத்தை மகனிடம்,

"ம்..." என்று அவள் தலையாட்ட...

இளவரசியின் உடல்நிலை மோசமாக இருப்பதால் யாரும் அவளுடன் செல்ல முடியாத நிலை... அவள் கணவனுடன் கிளம்ப... மகளை ஏக்கத்துடன் பார்த்திருந்த அருந்ததியை சிம்மவிஷ்ணு கண்டு கொண்டான்...

"உன் அம்மா கிட்ட சொல்லிக்கிட்டு வா... போ..." என்று அவளிடம் கூற...

"ஒண்ணும் வேண்டாம்..." என்று அவள் கோபத்துடன் முறுக்கி கொள்ள...

"பாசமான அம்மா அமைவது வரம் நிலா... அது உனக்குக் கிடைச்சியிருக்கு... அவங்க கிட்ட போய்ப் பேசு..." என்றான் தன்மையான குரலில்...

"அவங்க என் குழந்தையை அநாதை ஆசிரமத்தில் விடச் சொன்னாங்க... அதனால் தான் எனக்கு அவங்க மேல் கோபம்..." அதைக் கேட்டு அவன் திகைத்தான்...

"நிஷா..." மகளின் வார்த்தையைக் கேட்டு அருந்ததி விரைந்து வந்து அவளை அணைத்துக் கொண்டார்...

"உனக்கு உன் குழந்தை முக்கியம் மாதிரி எனக்கு என் குழந்தை முக்கியம் இல்லையா...? உன் வாழ்க்கை நல்லாயிருக்கணும்ன்னு தான் நான் அப்படிச் சொன்னேன்..." என்று அழுதவரை கண்டு அவள் செய்வதறியாது விழிக்க...

"உனக்காகத் தானே அப்படிப் பேசியிருக்காங்க... பாவம் மன்னித்து விடு..." என்று அவன் அவளிடம் கிசுகிசுக்க...

அவளது கைகள் அன்னையை ஆதரவாய் அணைத்துக் கொண்டது... அதில் இன்னமும் உடைந்து போனார் அருந்ததி...

இருவரையும் பார்த்துக் கொண்டிருந்த சிம்மவிஷ்ணு அருகில் பத்ரிநாத் வந்தார்...

"நிஷாவை சந்தோசமா பார்த்துக்கோ விஷ்ணு..."

"நிச்சயமா பத்திப்பா..." என்றான் அவன் மனதார...

"என் நம்பிக்கையைக் காப்பற்றுவாய் என்று நம்புகிறேன்..."

"கண்டிப்பா..." என்றவன் முகத்தில் புன்னகை நிறைந்திருந்தது...

"இப்போது நேரம் சரியில்லை... இல்லை என்றால் சீருடன் நிஷாவை உன் வீட்டில் கொண்டு வந்து விட்டிருப்போம்..."

"புரிகிறது பத்திப்பா... இது எதையும் நான் எதிர்பார்க்கலை..." என்று அவன் ஆறுதலாய் அவரது கையைப் பற்றிக் கொண்டான்...

இறுதியாக இளவரசியைப் பார்க்க சென்றனர் இருவரும்... சிம்மவிஷ்ணு நிஷிலாவை தன்னுடன் அழைத்துச் செல்வதை உணர்ந்து அவரது வலியை மீறிய ஒரு சந்தோசம் அவரது விழிகளில் எட்டிப்பார்த்தது... அதைக் கண்டு அவனது முகம் கடுகடுத்தது... நிஷிலா அவரிடம் விடைப்பெற்றதும் மற்றவர்களுடன் அவளை அனுப்பி வைத்து விட்டு தான் மட்டும் அவரைத் தனியே சந்தித்தான்...

"ரொம்பவும் சந்தோசப்பட வேண்டாம்... என் குழந்தை உங்க வீட்டுப் பெண் வயிற்றில்... அதுவும் உங்களை மாதிரி இருக்கும் பெண் வயிற்றில்... நினைப்பதற்கே நன்றாக இருக்கிறது இல்லையா...?" அதைக் கேட்டு அவரது முகம் கறுத்துப் போனது...

"இப்பவும் நான் தான் ஜெயித்தேன்... நான் நினைச்சதை நடத்தி காட்டிட்டேன்... எந்த வாரிசை வேண்டாம்ன்னு சொன்னீங்களோ அந்த வாரிசு உங்க வீட்டு வாரிசு வயிற்றில்... அது போதும் எனக்கு..." என்றவன்,

"நிச்சயம் நிலா உங்களைப் போன்று மோசமான பெண் இல்லை... அவள் உயிரை கொடுத்தாவது என் குழந்தையைக் காப்பற்றுவாள்... அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது... அதுவே எனக்கான வெற்றி தான்... இது ஆரம்பம் மட்டுமே... இன்னும் நீங்க பார்க்க வேண்டியது நிறைய இருக்கிறது... சீக்கிரம் ப்ளாஸ்டிக் சர்ஜெரி பண்ணிக்கிட்டு வாங்க..." என்று கிண்டலாய் கூறியபடி அவன் சென்றுவிட்டான்...

அந்தக் கணம் இளவரசியின் கண்முன் அவர் செய்த மாபாதகச் செயல் வந்து போனது... தவறு என்று தெரிந்தே செய்த தவறு... அதனால் அவருக்கு அதில் எந்தவித உறுத்தலும் இல்லை... அவரைப் போன்றவர்கள் உயிர் நீத்தாலும் தங்களது குண இயல்புகளில் இருந்து இம்மியளவும் மாற மாட்டார்கள்...

ஒருவழியாய் எல்லோரிடமும் விடைப்பெற்றுக் காரில் வரும் போது சிம்மவிஷ்ணு மனைவியைத் திரும்பி திரும்பி பார்த்துக் கொண்டு வந்தான்...

"எதுக்கு என்னைப் பார்க்கிற...?" என்று அவள் எரிச்சலுடன் கேட்டாள்...

"இப்பவும் இந்த டிரெசில் தான் வரணுமா...? புடவை கட்டி கொள்ளக் கூடாதா...?" அவனது விழிகள் அவளது 'ப்ராக்'கை மேலும் கீழும் பார்த்து வைத்தது...

"சூட்டுப்புண் இருப்பதால் புடவை கட்ட முடியாது..." அவனைப் பார்க்காது வெளியில் வேடிக்கை பார்த்தபடி அவள் கூறினாள்... அதைக் கேட்டு அவன் அமைதியாகி போனான்...

"எதுக்கு ஏடிஎம் கார்டு...?"

"என் செலவுக்குப் பணம் வேண்டாமா...?" என்றாள் அவள் வெடுக்கென்று...

"என்ன செலவு வந்துவிடப் போகிறது...? அப்படியே செலவு வந்தாலும் நான் பார்த்துக் கொள்ள மாட்டேனா...?" என்றவனது குரல் கனிந்து ஒலித்தது...

"இல்லை வேண்டாம்... உன் வீட்டில் இருக்கும் ரெண்டு மாச செலவுக்கான பணத்தை நான் உன் கிட்ட கொடுத்துருவேன்... நீ எனக்காக எதுவும் செய்ய வேண்டாம்..."

அதைக் கேட்டு அவனது முகம் இறுகி போனது...

"ஓ... அப்போ உனக்கு என் வீடு ஹாஸ்டல் மாதிரின்னு சொல்ற..."

"ஆமாம், பாதுகாப்பான ஹாஸ்டல் அவ்வளவே..." என்றாள் அவளும் விடாது...

அவன் மேலே பேச்சை வளர்க்காது அமைதியாக வந்தான்... விமானம் மூலம் மதுரை வந்த போதும் அவனது அமைதி தொடர்ந்தது... அவள் அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தவள் பின் தோளை குலுக்கி கொண்டு தானும் அமைதியாகி போனாள்...

வீட்டிற்கு வந்து இருவரும் இறங்கியதும் மீனாட்சி புன்னகையுடன் ஆரத்தி சுற்றி வரவேற்றவர் மருமகளிடம்,

"நிஷாம்மா எப்படியிருக்கடா...?" என்று அன்போடு கேட்க... அவரது அன்பில் அவள் மனம் நெகிழ அவரை அணைத்து கொண்டாள்...

"நல்லாயிருக்கேன்..." என்றவளை அவர் உள்ளே அழைத்துச் செல்ல... அவள் காலை விந்தியபடி அவருடன் நடந்து சென்றாள்...

"நில்லு நிலா..." என்றபடி அவன் அவள் அருகில் வர... அவன் தன்னைத் தூக்கத்தான் வருகிறான் என்று நினைத்து,

"நான் அத்தையுடன் போய்க்கிறேன்..." என்று அவள் பதறி போய் மறுக்க...

"அத்தையைப் பிடிக்கும் கை என்னைப் பிடித்துக் கொள்ளட்டும்..." என்று அவன் கூற...

"உன் புருசனுக்கு அவன் பொண்டாட்டியை விட மனசில்லை... அதுவும் சரி தான்... ரெண்டு பேரும் ஜோடியா உள்ளே வாங்க..." என்று சிரித்துக் கொண்டே அவர் உள்ளே சென்றுவிட்டார்...

அவளது தோளில் அணைவாகக் கை போட்டு வீட்டினுள் அழைத்துச் சென்றவன் அவளிடம் ரகசியமாக, "எப்போதும் அதே நினைவு தானா...?" என்று அவளது காதில் கிசுகிசுக்க... அதைக் கேட்டு அவள் அவனை முறைத்தாள்...

"நீ முறைக்கிறதை பத்தி நான் சொன்னேன்... ஆமாம் நீ என்ன நினைச்ச...?" என்று நமட்டு சிரிப்புடன் கேட்டவனைக் கண்டு அவள் இன்னமும் நன்றாக முறைத்தாள்...

வரவேற்பறையில் இவர்களுக்காகக் காத்திருந்தார் சுந்தரபாண்டியன்...

"அப்பா காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கு..." என்று அவன் அவளின் காதை கடிக்க...

"அதெல்லாம் வேண்டாம்மா... இங்கே வா..." என்று அவர் அவளைத் தனக்குப் பக்கத்தில் அமர சொன்னார்...

அவளும் நல்ல பிள்ளையாக அவர் அருகில் சென்று அமர்ந்தாள்... அவர் அவளிடம் கேள்வி கேட்க... அவள் பவ்யமாகப் பதில் சொல்லி கொண்டிருந்தாள்... இருவரையும் நிம்மதியாகப் பார்த்தவன் அன்னையைத் தேடி உள்ளே சென்றான்... மகன் அகன்றதும் சுந்தரபாண்டியன் சின்னவளை பார்த்துக் கண் கலங்கினார்...

"ரொம்பக் கஷ்டப்பட்டியாம்மா...?" அவர் கேட்டதன் அர்த்தம் புரிந்து,

"ம்..." என்று அவள் கண்ணீர் மல்க தலையசைத்தாள்...

"என் மகன் என்பதற்காக அவன் செஞ்சது எல்லாம் சரின்னு நான் சொல்ல மாட்டேன்... அவன் உனக்குச் செஞ்ச பாவத்துக்குத் தண்டனையா அவனை இங்கே வர கூடாதுன்னு சொல்லிட்டேன்... அவனை நான் தலை முழுகிட்டேன்... எனக்கு அவ்வளவு கோபம் அவன் மீது... இப்போது கூட உனக்காகத் தான் அவனை உள்ளே விட்டிருக்கேன்..." என்றவரை அவள் ஆச்சிரியமாகப் பார்த்தாள்...

"உனக்கு யாரும் இல்லைன்னு நினைக்காதே... உறவு முறையில் நீ எனக்கு மருமகள்ன்னாலும் நீ எனக்கு மகள் தான், நான் உனக்கு அப்பா தான்... நான் எப்போதும் உனக்குச் சப்போர்ட்டா இருப்பேன்..."

அவரது வார்த்தைகள் அவளுக்கு யானை பலத்தைக் கொடுத்தது... தனித்துப் போராடுவதால் மனம் சோர்ந்திருந்தவளுக்கு அவரது வார்த்தைகள் போராடும் தன்னம்பிக்கையை ஏற்படுத்தியது...

"ம்மா, காபி..." என்று உணவு மேசையில் அமர்ந்து கொண்டு சிம்மவிஷ்ணு கத்தினான்...

"வர்றேன்டா..." என்றவர் அவனுக்குக் காபி கொடுத்துவிட்டு மருமகளிடம் சென்றார்...

அவளது கையில் பாலை கொடுத்துக் குடிக்கச் சொல்லிவிட்டு மீண்டும் மகனிடம் வந்தவர், "இன்னும் கொஞ்ச நேரத்தில் சொந்தக்காரங்க எல்லாம் வந்திருவாங்க... நீ இங்கே தானே இருப்ப விஷ்ணு...?" என்று கேட்க...

"வெளியில் கொஞ்சம் வேலையிருக்கும்மா..." என்றபடி அவன் எழ...

"சீக்கிரம் வந்திரு கண்ணா..." என்றவரிடம் சரியென்று தலையசைத்து விட்டு அவன் சென்றான்...

நேரே மனைவியிடம் வந்தவன், "நான் வெளியில் போயிட்டு வர்றேன்... உனக்கு வேறு எதுவும் வேணுமா...?" என்று அக்கறையுடன் கேட்க...

அதைக் கேட்டு சுந்தரபாண்டியன் முகத்தைக் கடுகடுவென்று வைத்துக் கொண்டார்...

"இல்லை, வேண்டாம்..." என்று வெகுளியாய் பதில் கூறிய மருமகளைக் கண்டு அவர் இன்னமும் அதிகமாய் மகனை முறைத்தார்...

தகப்பனை காணும் சக்தி இல்லாது அவன் வெளியில் விரைந்து விட்டான்...

மீண்டும் சிம்மவிஷ்ணு வீட்டிற்குள் வந்த போது அவனது உறவினர்கள் கூட்டத்தின் நடுவில் நிஷிலா மாட்டி கொண்டு பேந்த பேந்தவென்று முழித்துக் கொண்டிருந்தாள்... அதைக் கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது... சிரித்தபடி அங்கிருந்த சோபாவில் அமர்ந்தான்...

"நீ பலே கில்லாடிடா விஷ்ணு... வெளியில் நல்லவன் மாதிரி வேசம் போட்டுக்கிட்டு இப்படியொரு காரியத்தைப் பண்ணியிருக்கியே..."

மாதவனின் கேலி குரலில் அவன் முகம் இறுக தம்பியை திரும்பி பார்த்தான்... மாதவன் அவன் அருகில் அமர்ந்து கொண்டு கிண்டலாய் கேட்டுக் கொண்டிருந்தான்...

"பொண்ணு நல்லா இளசா அழகா தான் இருக்கா... அதான் மயங்கி அவசரமா மேட்டரை முடிச்சிட்டியோ..." என்றவனது கேலியில் இவன் கோபத்தில் பல்லை கடித்தான்... அனைவர் முன்னிலையில் சகோதரனை கடிய முடியாது,

"அவள் இளையவளா இருந்தாலும் உன் அண்ணி... அன்னைக்குச் சமம்... அதனால் அதற்குரிய மரியாதையைக் கொடுத்து பேசு... இல்லைன்னா கொடுக்க வைப்பேன்..." என்றவனது கை முஷ்டி கோபமாய் இறுகியது... அதைக் கண்டு மாதவன் கப்சிபென்று வாயை மூடி கொண்டான்...

மீண்டும் சிம்மவிஷ்ணுவின் விழிகள் நிஷிலா பக்கம் திரும்பியது... மாதவன் கூறியது உண்மை தானா? என்று அவளை உற்று பார்த்தவன் இனிமையாக அதிர்ந்தான்...

நிஷிலா அழகாகப் புடவை உடுத்தி, நீண்ட கூந்தலை சடை பின்னி பூ வைத்து நெற்றியில் வட்டமாய் அரக்கு நிற ஒட்டு பொட்டும், உச்சி வகிட்டில் குங்குமமுமாய்ப் பார்ப்பதற்கு அத்தனை அழகாக இருந்தாள்... சற்று நேரத்திற்கு முன் முக்கால் கால் வரை 'ப்ராக்' அணிந்து, ஏனோ தானோவென்று கூந்தலை பின்னி சடை போட்டிருந்த பெண்ணா இவள் என்று வியப்பாய் எண்ணும்படி அவளது தோற்றம் முற்றிலும் அழகாய் மாறியிருந்தது...

அடர் பச்சை நிற சரிகை கரையிட்ட மாம்பழ வண்ண சுங்கடி புடவையும், அடர் பச்சை நிற இரவிக்கையும் அவளது நிறத்தை எடுப்பாகக் காட்டியது...

நிச்சயம் இது அவனது அன்னையின் கைங்கரியமாகத் தான் இருக்க வேண்டும்... அவன் அன்னையைத் தேடி சென்றான்... உள்ளே வேலையாக இருந்த அன்னையைத் தேடி கண்டுபிடித்தவன்,

"தேங்க்ஸ்ம்மா..." என்று அவன் அவரது கன்னத்தில் முத்தமிட்டு நன்றி கூற...

"எதுக்குடா...?" என்று சிரித்தபடி கேட்டவரை கண்டு,

"நிலாவை நிலா மாதிரி மாத்தினதுக்கு..."

"நான் ஒண்ணும் பண்ணலை... ஏற்கெனவே அவள் அழகு தான்டா..." என்று மருமகளைப் பாராட்டியவர்,

"அவள் எப்படி டிரெஸ் பண்ணினாலும் எனக்கு ஒண்ணும் இல்லை... ஆனா வர்றவங்க அப்படி நினைக்க மாட்டாங்களே... அதனால் தான் புடவை கட்ட சொன்னேன்... பாவம் அவளுக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கும்... எல்லாம் கொஞ்ச நேரம் தான்..." என்று கூறிவிட்டு அவர் சென்றுவிட...

அப்போது தான் அவனுக்கு அவளது வயிற்றுப் புண்கள் நினைவிற்கு வந்தது... மனம் கலங்க அவளிடம் விரைந்தான்... அவனைக் கண்டதும் உறவினர் கூட்டத்தில் இருந்த ஒருத்தர்,

"நம்ம சாதி பொண்ணுங்க கிட்ட இல்லாதது அப்படி என்ன இந்தப் பொண்ணு கிட்ட இருக்குன்னு நீ இவளை காதலிச்சுக் கல்யாணம் பண்ணியிருக்க...? உன்னோடு ஒப்பிடும் போது பொண்ணு ரொம்பவே சுமார் விஷ்ணு... சிங்கம் போன்ற உன் கம்பீரமான அழகுக்கு முன்னால் இந்தப் பெண் சுண்டெலி போல் தெரிகிறாள்..." என்று விசமமாய்க் கொளுத்தி போட... எல்லோரும் அதை ஆமோதித்தனர்...

இதற்கு அவன் பதில் கூறினால் பிரச்சினை பெரிதாகும் என்றெண்ணி சுற்றியிருந்த உறவினர்களிடம், "எல்லோரும் சாப்பிட போங்க... பந்தி தயாராயிருக்கு..." என்க...

"நாங்க என்னமோ சாப்பாட்டுக்கு ஆளா பறக்கிற மாதிரியிருக்கு உன் பேச்சு... முதலில் என் கேள்விக்குப் பதில் சொல்லு விஷ்ணு..."

"சாப்பாடு சூடு ஆறுவதுக்கு முன் சாப்பிட்டுட்டு வாங்க... அதுக்கு அப்புறம் நாம சாவகாசமா உட்கார்ந்து பேசலாம்..." அவன் தன்மையுடன் கூற...

எல்லோரும் எழுந்து சென்றுவிட்டனர்... கணவன், மனைவிக்குத் தனிமை கொடுத்துவிட்டு சுந்தரபாண்டியனும் அங்கிருந்து அகன்றார்...

கீழே ஜமுக்காளத்தில் தலைகுனிந்து அமர்ந்திருந்த நிஷிலா முன் வந்து நின்ற சிம்மவிஷ்ணு, "எழுந்திரு நிலா..." என்று கூறியபடி தனது கையை நீட்ட...

அவளோ அவனது கையைப் பிடிக்காது அவனை நிமிர்ந்து பார்த்தாள்... அவளது கலங்கிய விழிகளைக் கண்டவன்,

"அவங்க ஏதோ தெரியாம பேசுறாங்க... அதை எல்லாம் மனசில் வச்சிக்காதே..." என்று அவன் அவசரமாய்க் கூற...

அதற்கு அவனை முறைத்து பார்த்தவள்,

"உன் மூஞ்சியை நீ கண்ணாடியில் பார்த்திருக்கிறியா...? நீ என்னை விட அழகா...? இதை விடக் கொடுமை உலகத்தில் வேறு எதுவும் இருக்க முடியாது..." என்று கோபத்தில் எகிறியவளை கண்டு நிம்மதி அடைந்தவனாய் அவன் அவளைப் பார்த்துச் சிரித்தான்...

"அதையே தான் நானும் சொல்கிறேன்... நீ தான் அழகு நிலா என்று..."

"நீ சொல்லைன்னாலும் நான் அழகு தான்... நீ அசிங்கம் தான்... என் அத்தானின் அழகுக்கு முன்னால் நீ நிற்க கூட முடியாது..."

"ஒரு நாள் உன் அத்தானை கூட்டிட்டு வந்து இவங்களுக்குக் காட்டிவிடலாம்... அதுவும் உனக்காகக் காத்திருப்பவன் என்று... ஓகேவா...?" என்று கூறியவனைக் கண்டு அவள் இன்னமும் அதிகமாய் முறைத்தாள்...

"அவங்க சொன்னதுக்கு நான் என்ன பண்ணுவேன்...?" என்றவன் வலுக்கட்டாயமாக அவளது கைப்பிடித்து எழுப்பிவிட்டான்...

"நானே எழுந்துக்குவேன்... நீ ஒண்ணும் உதவி பண்ண வேண்டாம்..." என்று சிடுசிடுத்தவளின் வயிற்றின் மீது கை வைத்து,

"வலிக்கிறதா...?" என்று கேட்டவனின் விழிகளில் வலியின் சாயல் எட்டிப்பார்த்ததோ...!

அவனது வலியை உணர்ந்து ஏனோ அவள் அதிசயமாய் இல்லையென்று தலையசைத்தாள்... தந்தை மீதான தாயின் அனுசரணையை அவர்களது மகவு உணர்ந்து கொண்டதோ...? அது தாயின் வயிற்றினுள் கொண்டாட்டமாய் ஒரு குத்தாட்டம் போட்டது... அதைத் தாயும் உணர்ந்தாள்... தந்தையும் உணர்ந்தான்...

அன்று பந்தபாசம் வேண்டாம் என்று விட்டு விட்டு ஓடிய அந்தத் தகப்பன் இன்று 'என் குழந்தை' என்று கர்வமாகத் தலை நிமிர்ந்து நின்றான்...

அப்போது, "பாப்பா..." என்கிற குரல் மெல்லமாய் ஒலித்தது... அதில் நிஷிலா குதூகலமாய்,

"ஐய், மருதாணி..." என்று கத்தி கொண்டே திரும்ப...

"ஐயோ பாப்பா, சத்தம் போடாதே... அம்மா காதுல விழுந்துச்சு நான் தொலைஞ்சேன்... ஏற்கெனவே ஐயா கிட்ட வசமா மாட்டிக்கிட்டு முழிச்சது போதாதா...?" என்று அவள் சுற்றுமுற்றும் பார்த்தபடி பயத்துடன் கூறினாள்...

"என்ன நடந்தது மருதாணி...?" அவன் அவளை மிரட்டினான்...

'சின்னய்யா' கேட்டுச் சொல்லாதிருக்க முடியுமா...? அவள் கடகடவென அனைத்தையும் ஒப்புவித்தாள்... அவன் முகம் இறுக கேட்டுக் கொண்டிருந்தான்...

"இப்போ இந்த விளக்கம் ரொம்ப அவசியமா மருதாணி...? நீ எப்படியிருக்க...? முதலில் அதைச் சொல்லு...?" என்று மருதாணியை இடைமறித்துக் கேட்ட நிஷிலாவை கண்டு மருதாணியின் விழிகள் கலங்கி போனது...

"உனக்குக் கெடுதல் பண்ணின என்னைப் போய் நல்லா இருக்கியான்னு விசாரிக்கிறியே பாப்பா... உன் நல்ல மனசு யாருக்கும் வராது..." என்று மனம் மறுகியவள்,

"எனக்கு என்ன பாப்பா ஐயாங்க ரெண்டு பேரும் இருக்கிற வரைக்கும் ஒரு குறையும் வராது... நீ எப்படியிருக்க...?" என்று கேட்க...

"இங்கேயும் அதே கதை தான்... உங்க சின்னய்யா புண்ணியத்தில் பிழைச்சு வந்திருக்கேன்..." என்று வெகுளியாய் கூறி சிரித்தவளை கண்டு அவனது இறுக்கம் மெல்ல தளரலானது...

அப்போது ஹர்ஷவர்த்தினி புயல் போல் வீட்டினுள் நுழைந்து கொண்டிருந்தாள்... அவளை உற்று நோக்கிய நிஷிலா அவளைச் சரியாக அடையாளம் கண்டு கொண்டாள்... நொடியில் முகம் மாற,

"மருதாணி வா... நாம் உள்ளே போவோம்..." என்றபடி அவள் அங்கிருந்து செல்ல முயன்றாள்... அவளது கையைப் பிடித்துத் தடுத்த சிம்மவிஷ்ணு மருதாணியிடம்,

"நீ போ மருதாணி..." என்று அவளை அனுப்பி வைத்துவிட்டு மனைவியை முறைத்துப் பார்த்தான்...

"எங்கே ஓட பார்க்கிற...? அன்னைக்கு நம் கல்யாணம், நீ, நம் குழந்தை எல்லாம் பொய்யான்னு கேட்டியே... இப்போ அது எல்லாம் மெய்ன்னு நிரூபிச்சிட்டு போ..." என்று அடக்கப்பட்ட கோபத்தில் ஒலித்தது அவனது குரல்...

அவனை உற்று பார்த்தவள் பின்பு நமட்டு சிரிப்புடன், "உனக்கு அவளைப் பிடிக்காதா...?" என்று கேட்க...

"கட்டிய மனைவி உன்னையே எனக்குப் பிடிக்காது... இதில் அவள் வேறா...?" எரிச்சலுடன் மொழிந்தவனைக் கண்டு அவளது முகம் பூவாய் மலர்ந்து போனது...

"அப்போ சரி... அவளைத் தான் உன் தலையில் கட்ட வேண்டும்..." என்றதற்கு அவன் அவளை முறைத்தான்...

"நான் உன்னை விட்டு போன பிறகு நீ தனியா என்ன பண்ணுவ...? உனக்குன்னு ஒரு வாழ்க்கை வேண்டாமா...? மனைவி, குழந்தைன்னு..."

கெடுதல் செய்தவனுக்கும் நல்லது நினைக்க அவளால் மட்டுமே முடியும்... பெண்ணவள் தனது வெள்ளை மனதால் மேலும் மேலும் அவனது மனதினை அழகாய் கொய்தாள்...

"என்னே ஒரு நல்ல எண்ணம்...?"

இறுக்கமாய் ஒலித்த அவனது குரலில் அவள் பயத்துடன் அவனைப் பார்க்க... அவனோ விழிகளில் குறும்பையும், உதடுகளில் புன்னகையையும் தேக்கி அவளை

மலர்ச்சியாய் பார்த்தான்... அதைக் கண்டு அவளது முகமும் மலர்ந்தது...

"என்னை அவளிடம் மாட்ட வைப்பதில் அவ்வளவு பிடித்தமா...?" அவன் பாவமாகக் கேட்க...

"இல்லையா பின்னே..." என்று மகிழ்ச்சியாய் கூறியவள் வாய்விட்டு சிரித்தாள்... அவளது சிரிப்பு அவனையும் தொற்றிக் கொள்ள அவனும் வாய்விட்டுச் சிரித்தான்...

ஒரு பெண்ணால் இறுக்கமுற்றவன் இன்னொரு பெண்ணால் இளக்கமுற்றான்...!!!

"இராமனுக்கு மட்டும் கற்பு சொந்தமல்ல
இராவணனுக்கும் கற்பு சொந்தம்...
உன்னைக் கண்ட பின்பு தான் இராமன்
நான் இராவணனாகி போனேன்...
இராவணனுக்கும் கற்பு உண்டு என்று
அறிந்து கொண்டேன்,
உன்னைத் தொட்ட பின்பே...
உன்னை விடுத்து வேறொரு பெண்ணா?
நினைவே கசக்கிறது...
இராமனின் சீதையாய் நீ வேண்டாம்,
இராவணனின் மண்டோதரியாய் நீ
எனக்கு வேண்டும் என்றென்றும்!!!"

கொல்லும்...!!!

## நிழல் : 21

"அடடே, ஹர்ஷி எப்படிம்மா இருக்க...?"

மீனாட்சி தன்னை வரவேற்றதை கூட உணராது ஹர்ஷவர்த்தினியின் விழிகள் சிம்மவிஷ்ணு மற்றும் நிஷிலா மீது நிலைத்திருந்தது... அதிலும் இருவரது சிரிப்புச் சத்தம் அவளது மனதினை ஆத்திரத்தில் பற்றியெரிய செய்தது...

"அத்தை, நீங்க இப்படிப் பண்ணுவீங்கன்னு நான் கொஞ்சமும் நினைச்சு பார்க்கலை..." அடக்கப்பட்ட கோபத்துடன் ஒலித்த ஹர்ஷவர்த்தினியின் குரலில் மீனாட்சி திடுக்கிட்டுப் போனார்...

"ஹர்ஷிம்மா..."

"அத்தான் எனக்குத் தான்னு ஆசை காட்டி இப்படி மோசம் பண்ணிட்டீங்களே... என்னால் இதைத் தாங்கிக்க முடியலை..."

சிம்மவிஷ்ணு அருகில் நிறைமாத கர்ப்பிணியாய் நின்றிருந்த நிஷிலாவை கண்டு ஆற்றாமையுடன் வெடித்தாள் அவள்... மீனாட்சியோ செய்வதறியாது விழித்தார்...

"விஷ்ணு விரும்பிட்டானே... என்ன பண்றது ஹர்ஷி...? அவனுக்கு நிஷா தான்னு கடவுள் முடிச்சுப் போட்டிருக்கிறார்... நாம என்ன பண்ண முடியும்...?" என்று கேட்டவரிடம் கோபத்தைக் காட்ட இயலாது,

"அத்தானின் விருப்பம் அவள் தான் என்னும் போது நீங்க என்ன பண்ண முடியும்...?" என்று அவள் அவரிடம் சமாதானமாகப் பேசினாள்...

"அத்தான் கிட்ட பேசிட்டு வர்றேன்..." என்றவள் அவர்கள் இருவரையும் நோக்கி நடந்தாள்...

"நான் போகணும் விடு..." என்று கைகளைச் சிம்மவிஷ்ணுவிடம் இருந்து உருவி கொள்ள முயற்சித்தாள் நிஷிலா...

ஹர்ஷவர்த்தினி தங்களை நோக்கி வந்தது அவளுக்குப் பிடிக்கவில்லை... அந்த இடத்தை விட்டு அகன்றிட அவள் துடித்தாள்...

"உன்னை என்னுடன் இருக்கச் சொன்னேன்..." என்று அவன் கடுமையுடன் கூறியபடி பற்றியிருந்த அவளது கையை விடவில்லை...

"உன் முறைப்பொண்ணு நீ தான் பேசணும்... நான் எதுக்கு விளக்கம் கொடுக்கணும்..." என்று நிஷிலா கூறும் போதே ஹர்ஷவர்த்தினி அருகில் வந்துவிட்டாள்...

"நீங்க என்னை மறந்துட்டீங்க அத்தான்... உங்களுக்கும், எனக்கும் பேசி வச்சிருந்ததை மறந்துட்டு நீங்க இப்படி ஒரு காரியத்தைப் பண்ணியிருக்கீங்களே... உங்க கிட்ட இருந்து இதை நான் சத்தியமா எதிர்பார்க்கலை..." என்று அவள் நேரிடையாக அவனைக் குற்றம் சாட்டினாள்...

அவள் பேசியது கேட்டு சிம்மவிஷ்ணுவுக்கு எரிச்சல் வந்தது என்றால், நிஷிலாவுக்குப் பாவமாக இருந்தது... அதே சமயம் மனதிற்குள் முணுக்கென்று ஏதோ ஒன்று வலித்தது...

அன்று மருத்துவமனையில் ஹர்ஷவர்த்தினி சிம்மவிஷ்ணு கையைக் கோர்த்தபடி கண்களில் கனவோடு பேசியது அவளது மனக்கண்ணில் வலம் வந்தது... எத்தனை ஆசை கொண்டு காத்திருந்தாளோ...? ஹர்ஷவர்த்தினியின் ஆசை மட்டுமா நிராசையானது... அவளது ஆசையும் தானே... விழிகள் கலங்கி போனது தனது நிலையை எண்ணி...

அவள் மெல்ல விழி திருப்பி அவனைப் பார்த்தாள்... ஆசை கொண்டு அவர்கள் இருவரும் மணக்கவில்லை... காதல் கொண்டு இருவரும் கூடி தங்களது மகவை அவள்

சுமக்கவில்லை... அவனது பழிவாங்கலுக்கு அவள் பகடைக்காயாகி போனாள்... அவ்வளவே... இருந்தாலும் அவன் என்ன பதில் கூறுவான்? என்று அவளது பேதை மனம் எதிர்பார்ப்புடன் காத்திருந்தது...

"ப்ச், இதையே எத்தனை நாளைக்குச் சொல்லுவ...? நான் உன்னை விரும்பலை... உன்னை எனக்குப் பிடிக்கவே பிடிக்காது... இதில் நீயும், நானும் எப்படிக் கல்யாணம் பண்ணிக்க முடியும்...? கல்யாண வயசில் ஆணும், பெண்ணும் இருந்தால் இது மாதிரி பேசுவது இயல்பு தான்... அதுக்காக எல்லாம் கல்யாணம் பண்ணிக்கணும்ன்னு எந்த அவசியமும் இல்லை... அப்படிப் பார்த்தால் ஊரில் இருக்கும் பாதிப் பேரை நான் கல்யாணம் பண்ண வேண்டி வரும்..." எரிச்சலுடன் ஆரம்பித்த சிம்மவிஷ்ணு முடிக்கும் போது நக்கலாக முடித்தான்...

அதைக் கேட்ட பின்பே நிஷிலா மனதில் சிறு நிம்மதி ஏற்பட்டது... தன்னால் ஹர்ஷவர்த்தினி வாழ்க்கை பாதிக்கப்படவில்லை என்பதை உணர்ந்து அவளுள் மகிழ்ச்சி எழுந்தது... இந்த மகிழ்ச்சி சிம்மவிஷ்ணு மனதில் வேறு எந்தப் பெண்ணும் இல்லை என்பதினால் வந்த மகிழ்ச்சி என்பதை அவள் உணரவே இல்லை... அவள் தன் மனதினை, கணவனை உணர்ந்த போது எல்லாமே கை மீறிப் போயிருந்தது...

அவன் கூறியதை கேட்டு ஹர்ஷவர்த்தினி கோபத்தில் முகம் சிவக்க நின்றிருந்தாள்... தன்னைக் காயப்படுத்திய சிம்மவிஷ்ணுவை காயப்படுத்த அவளது மனம் துடித்தது... அதற்கு அவள் தேர்ந்தெடுத்த வழி நிஷிலா... இவளை கதறயடித்தால் அவன் கதறுவான் இல்லையா...? அதனால் நிஷிலாவை பார்த்துப் புன்னகை முகமாய்,

"மேரேஜ் லைஃப் எப்படிப் போகுது...? நீ சந்தோசமா இருக்கியா...?" என்று கேட்டவள் அருகில் நின்றிருந்த சிம்மவிஷ்ணுவை கண்டு,

"லேடிஸ் பெர்சனலா பேசும் இடத்தில் ஜென்ட்ஸ் உங்களுக்கு என்ன வேலை...?" என்று ஸ்டைலாகப்

புருவத்தை உயர்த்திய ஹர்ஷவர்த்தியினின் கன்னத்தில் நாலு அப்பு அப்பினால் என்ன என்று தோன்றியது சிம்மவிஷ்ணுவிற்கு... ஆனால் வீடு நிறையக் குவிந்திருக்கும் உறவினர்களைக் கருத்தில் கொண்டு அவன் அமைதியாக விலகி சென்றான்...

ஆனாலும் அவனது விழிகள் நிஷிலாவை திரும்பி திரும்பி பார்த்தபடி செல்ல தவறவில்லை... ஹர்ஷவர்த்தினி போல் நிஷிலாவிற்குப் பக்குவம் கிடையாது...ஏனெனில் தொழிலை திறமையாக நடத்தும் அளவிற்குத் திறன் பெற்றவள் ஹர்ஷவர்த்தினி... அவள் எதிராளியை பார்வையால் எடை போடும் வல்லமை கொண்டவள்... அதே மாதிரி அவளைப் போல் நிஷிலா வயதிலும் பெரியவள் இல்லை... எல்லாம் சேர்ந்து அவனை யோசனையில் ஆழ்த்தியது... அவர்களை விட்டு சற்று தள்ளி வந்து அவர்களைப் பார்த்தபடி சோபாவில் அமர்ந்து கொண்டான்... அவர்கள் பேசுவது கேட்காவிட்டாலும் அவர்களது முகபாவனை அவனுக்குப் புரியுமே...

ஹர்ஷவர்த்தினி கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்க முடியாது நிஷிலா தலைகுனிந்தாள்...

அதைக் கண்ட ஹர்ஷவர்த்தினி நிஷிலாவை எடை போடுவது போல் பார்த்தவள், "அன்னைக்கு ஹாஸ்பிட்டலில் வச்சு அப்படிச் சீன் போட்ட... இப்போ என்னடான்னா அத்தான் கூடத் தொத்திக்கிட்டு வந்திருக்க...? ஏன், உங்க வீட்டில் உன்னை அடிச்சு துரத்திட்டாங்களா...?" என்று எள்ளலுடன் கேட்டாள்...

அதைக் கண்டு நிஷிலாவின் முகம் ஒரு மாதிரியாய் மாறிப் போனது... ஆனாலும் நொடியில் சமாளித்துக் கொண்டு,

"நீங்க அவரை அத்தான்னு தான் கூப்பிடுவீங்களோ...?" என்றாள் முகம் மலர...

'அவரா...? இது எப்போதிருந்து...? சொல்லவே இல்லை...' அவளது மனசாட்சி அவளைக் கேலியாய் கேட்டது...

'எனக்கு அவன் தான்... அதுக்காக அவனைப் பத்தி அடுத்தவங்க கிட்ட பேசும் போது அவன்னு பேச முடியுமா...?' என்று பதில் கூறி மனசாட்சியின் வாயை அடைத்தாள்...

"ஆமாம்... அதுக்கென்ன...?" என்றாள் ஹர்ஷவர்த்தினி அதிகாரமாய்...

"உங்கத்தான் உங்களுக்கு மட்டும் தான்னு நான் சொன்னால்...?"

"ஹேய்... நீ என்ன சொல்ற...?" ஹர்ஷவர்த்தினி இனிமையாகப் பரபரத்தாள்...

அவளது காதுகளை அவளால் நம்ப முடியவில்லை... அவள் விரும்பும் அத்தானின் காதல் மனைவி வாயிலிருந்து வந்த முத்துக்களை ஆசையுடன் கோர்த்து வைத்து கொண்டாள்...

"உண்மை அது தானே... நீங்க தான் அவருக்குப் பொருத்தமானவங்க... அவருக்குச் சொந்தமானவங்க..."

'வில்லனுக்கும் வில்லிக்கும் தான் செட்டாகும்...' என்று கோபத்துடன் மனதிற்குள் முணுமுணுத்துக் கொண்ட நிஷிலா வெளியில் அவளைப் பார்த்து சிரித்து வைத்தாள்...

அடுத்த நொடி ஹர்ஷவர்த்தினி நிஷிலாவை சந்தோசத்துடன் அணைத்து கொண்டாள்... அவளது தோள்வளைவில் இருந்து எட்டிப்பார்த்த நிஷிலா சோபாவில் அமர்ந்திருந்த சிம்மவிஷ்ணுவை பார்த்து குறும்பாய் கண்சிமிட்டினாள்...

அதைக் கண்டு அவன் திகைத்து விழித்தான்... அவனது திகைப்பு அவளுக்குச் சிரிப்பை வரவழைத்தது... அதன் விளைவு அவளது இதழ்கள் புன்னகையில் இன்னமும் விரிந்தது...

'இவள் உனக்குத் தான்...' என்று அவள் கை சாடையில் ஹர்ஷவர்த்தினியை அவனுக்குச் சுட்டிக்காட்ட...

அதை உணர்ந்தவனாய் அவன் எரிச்சலுடன் தலையில் கை வைத்தான்...

'லூசு, நான் என்ன சொல்ல சொன்னேன்...? இவள் என்ன செஞ்சிக்கிட்டு இருக்கிறாள்...?' மானசீகமாக மனைவியை வைதவன் அவளை முறைத்துப் பார்த்தான்...

அவனைக் கோபப்படுத்திப் பார்ப்பதில் அவளுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது...

"அக்கா, போய் உங்க அத்தான் கூடப் பேசிக்கிட்டு இருங்க... எனக்கு டயர்டா இருக்கு... நான் ரெஸ்ட் எடுக்கப் போகிறேன்..." என்ற நிஷிலா சிம்மவிஷ்ணுவை நோக்கி கை காண்பிக்க...

மனைவி ஏதோ வில்லங்கம் வரவழைக்க நினைக்கிறாள் என்றெண்ணியவனாய் அவன் சட்டென்று சோபாவில் இருந்து எழுந்து வேகமாய் இருவரையும் நோக்கி வந்தான்...

அதைக் கண்டு நிஷிலாவின் புன்னகை பன்மடங்காய் விரிந்தது... சிம்மவிஷ்ணு ஹர்ஷவர்த்தினியை விரும்பி இருப்பானோ என்று மனம் கலங்கியவள் இப்போது அவன் ஹர்ஷவர்த்தினியை விரும்பவில்லை என்று தெரிந்ததும் தானே அவனை அவளுக்குத் தாரைவார்த்து கொடுத்தாள்... நிஷிலா மனதில் கணவனைப் பற்றிய நினைவு அவ்வளவு தான்...

இன்னும் சிறுபிள்ளைத்தனமாகவே அவள் அவர்களது உறவை எண்ணினாள்... அதற்கு அவனும் ஒரு காரணம் என்றால் மிகையில்லை... கணவன், மனைவி, தாலி இதற்கான முக்கியத்துவத்தை அவளிடம் ஆழப்பதிய செய்த பின்னரே அவன் வாழ்க்கையை ஆரம்பித்திருக்க வேண்டும்... அவளது உடலை தீண்டிய அவனது வேட்கை அவளது உள்ளத்தைச் சிறிதும் தீண்டவில்லை... அதன் விளைவே இது...

அருகில் வந்த சிம்மவிஷ்ணு, "நிலா..." என்று சற்று கடுமையுடன் அழைத்தான்...

ஹர்ஷவரத்தினி அணைப்பில் இருந்து விலகிய நிஷிலா ஒன்றும் தெரியாதவள் போல் இமை படபடத்தபடி, "என்ன

மாமா...?" என்று நமட்டு சிரிப்புடன் கேட்க...

அவனோ அதைக் கண்டு பல்லை கடித்தான்... ஹர்ஷவர்த்தினி சந்தோசமாய் அவனைப் பார்த்தவள்,

"அத்தான், இவளே சொல்லிட்டாள் நீங்க எனக்குத் தான்னு..." என்று குதூகலமாகக் கூற...

"அவளுக்குத் தான் அறிவில்லை... உனக்கு எங்கே போச்சு...?" என்று பல்லை கடித்த சிம்மவிஷ்ணு நிஷிலா தோள் மீது கைப்போட்டு அணைத்துக் கொண்டு,

"உனக்கு மட்டுமல்ல இதோ இவளுக்கும் சேர்த்து தான் சொல்கிறேன்... இந்த ஜென்மத்தில் இவள் தான் என் மனைவி... அதில் எந்தவித மாற்று கருத்தும் எனக்கு இல்லை... நீ என்னை விட்டு விலகி இருக்கிறது நல்லது... தேவையில்லாம எங்க ரெண்டு பேருக்கு இடையில் வராதே... வந்தால் அதன் விளைவுகள் வேறு மாதிரியாக இருக்கும்... என்னைப் பத்தி உனக்கு நல்லாவே தெரியும் தானே..."

பெண்கள் இருவருமே அவனது கர்ஜனை குரலில் நடுநடுங்கி போயினர்... எதிரியான சிம்மவிஷ்ணுவை பற்றி ஹர்ஷவர்த்தினி கேள்விப்பட்டு இருக்கிறாளே... அவனைப் பகைத்துக் கொள்ள அவளது தந்தை விரும்ப மாட்டார்... அதனால் அவள் அமைதி காத்தாள்... நிஷிலாவிற்கு அவனது இன்னொரு முகம் தெரியுமாதலால் பயத்தில் முகம் வெளுக்க அவனிடம் இருந்து விலக முற்பட்டாள்...

"எங்கே போகிற...?" என்று அதட்டியவனைக் கண்டு அவளுக்குக் கண்கள் இருட்டி கொண்டு வந்தது...

"எனக்கு... எனக்கு..." என்று தடுமாறியவளை அப்போது தான் உற்று நோக்கியவன் அவளது நிலையை அறிந்து தனது கைகளில் அவளைத் தாங்கி கொண்டான்... அவளும் உடலும் மனமும் சோர்வுற எதிர்ப்பு காட்டாது அமைதியாக இருந்தாள்...

அங்கு வந்த அன்னையிடம், "நிலா டயர்டா ஃபீல் பண்றாம்மா..." என்க...

"கீழே கெஸ்ட் ரூமில் ரெஸ்ட் எடுக்க வை..."

அவர் கூறியதும் அவன் யாரையும் பொருட்படுத்தாது நிஷிலாவை தூக்கி கொண்டு கீழே இருந்த அறைக்குச் சென்றான்... அவன் செல்வதைப் பார்த்திருந்த மீனாட்சி ஹர்ஷவர்த்தினியிடம்,

"பார்த்தேல்ல ஹர்ஷி... விஷ்ணு எந்தளவுக்கு நிஷா மேல் காதல் வச்சியிருக்கான்னு... அவன் இப்படியொரு வாழ்க்கை வாழத்தான் நான் ஆசைப்பட்டேன்... அது நிறைவேறியிருச்சு... நீயும் உன் மனசை மாத்திக்கோம்மா..." என்றவரிடம் சரியென்று தலையாட்டியவள் மனதிற்குள் பெரும் குழப்பம் வந்து சூழ்ந்து கொண்டது...

ஒருவேளை சிம்மவிஷ்ணு நிஷிலாவை விரும்பி மணந்திருக்க வேண்டும்... ஆனால் நிஷிலா அவனைக் காதலிக்கவில்லை போலும்... அவளின் பேச்சு அதைத் தான் உணர்த்துகிறது... அன்று மருத்துவமனையில் சிம்மவிஷ்ணு தான் அவளிடம் தழைந்து போனான்... அவள் அவனை அடித்துத் திட்ட தானே செய்தாள்... இதை எல்லாம் நினைத்து பார்த்த ஹர்ஷவர்த்தினி தனக்கு இன்னமும் வாய்ப்பு இருப்பதாக நம்பினாள்... நிஷிலா அவனது வாழ்க்கையை விட்டு விலகி செல்லும் நாளுக்காக அவள் காத்திருக்க முடிவு செய்தாள்...

அறையில் நிஷிலாவை படுக்கச் செய்த சிம்மவிஷ்ணு, "என்ன பண்ணுது பேபி...?" என்று பரிவுடன் கேட்க...

யாருமில்லா தனியறை, அவனது அருகாமை, படுக்கை எல்லாம் அவளுக்குப் பயத்தைக் கொடுத்தது... பயத்தில் விழிகளை இறுக மூடி கொண்டவளை அவன் புரியாது பார்த்தான்... ஒருவேளை உடல் சோர்வாக இருக்குமோ என்றெண்ணியவன்,

"கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடு... பிறகு நாம வெளியில் போகணும்..." என்று கூறிவிட்டு அவன் அறையை விட்டு செல்ல... அதன் பிறகே அவளுக்குச் சுவாசம் சீரானது...

சொன்னது போல் ஒரு மணி நேரம் கழித்து வந்த சிம்மவிஷ்ணு உறங்காமல் விழித்துக் கொண்டிருந்த நிஷிலாவிடம்,

"ஆர் யூ ஓகே பேபி...? இப்போ உன்னால் ட்ராவல் பண்ண முடியுமா?" என்று கேட்க...

"முடியாதுன்னு சொன்னா என்ன பண்ணுவ...?" வழக்கம் போல் அவனை எதிர்த்து வார்த்தை வந்தது அவளது வாயிலிருந்து...

அதைக் கேட்டு புன்னகைத்தவன், "கையை, காலை கட்டியாவது கூட்டிட்டு போவேன்..." என்றவனைக் கண்டு பதட்டத்துடன் எழுந்தவள்,

"எங்கே...?" அவளது பதட்டத்தை மீறி விழிகளில் சிறு பயம் எட்டிப்பார்த்தது...

"நீ நினைக்கிற இடத்துக்கு இல்லை... இது வேறு..." என்றவன்,

"உன் கற்புக்கு நான் உத்திரவாதம் தருகிறேன்..." என்றான் சிறு சிரிப்போடு...

மேடிட்டிருந்த வயிற்றின் மீது இடதுகையை வைத்தபடி வலதுகையை அவனை நோக்கி வீசியபடி, "கற்பு... அப்படின்னு ஒண்ணு எனக்கு இருக்கா...? பாவி படுபாவி..." என்று கண்கலங்கியவளை அணைத்து ஆறுதல்படுத்த துடித்த தனது கரங்களை அடக்கி கொண்டு,

"பெருசா சீன் போட்டா அப்படித்தான் சொல்வேன்... பதில் பேசாம கிளம்பி வா..." என்று சற்று அதட்டலாகக் கூறியவனைக் கண்டு அவளது மனம் சுணங்கியது...

"நான் மாமா கிட்ட சொல்வேன்..." என்று சிறுபிள்ளையாக அவள் முறுக்கி கொள்ள...

"உன் மாமா என்ன, அந்த ஆண்டவனே வந்தாலும் என்னை மாத்த முடியாது... பதிலுக்குப் பதில் பேசாம கிளம்பு..." என்றவனிடம் மேலே பேசாது கிளம்பினாள்...

அவனது பெற்றோரிடம் என்ன கூறியிருந்தானோ அவர்களும் அவளை அவனுடன் இன்முகமாய் அனுப்பி வைத்தனர்... மீனாட்சி மட்டும்,

"மதிய சாப்பாட்டுக்கு நிஷாவை கூட்டிட்டு வந்திரு விஷ்ணு..." என்று கூற...

"இல்லைம்மா... நாங்க வெளியில் சாப்பிட்டுக்கிறோம்... நீங்க இவங்களை எல்லாம் அனுப்பிட்டு தகவல் சொல்லுங்க... அதன் பிறகு கிளம்பி வர்றோம்..." என்றவன் மனைவியை அழைத்துக் கொண்டு கிளம்பிவிட்டான்...

சிம்மவிஷ்ணு உற்சாகமாகக் காரை ஓட்டி கொண்டு வந்தான்... பச்சைப்பசேல் என்றிருந்த வயல்வெளிகளைப் பார்த்த நிஷிலாவும் சந்தோசமாக வெளியில் வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்தாள்...

"நிலா..."

அவன் அழைத்ததும் அவள் கேள்வியாக அவனைத் திரும்பி பார்த்தாள்...

"இன்னைக்கு ராத்திரி நான் சென்னை கிளம்பறேன்..." என்று கூறியவனைக் கண்டு ஒரு நொடி முகம் வாடியவள் பின் சமாளித்துக் கொண்டு,

"நான் மட்டும் இங்கே தனியே இருக்கணுமா...?" என்று கேட்டவளின் கேள்வியை அவன் வேறு மாதிரி எடுத்துக் கொள்ள அவர்கள் ஒன்றும் காதலித்து மணம் புரியவில்லையே... அதனால் அவளது கேள்வியைச் சரியான கோணத்தில் புரிந்து கொண்டவன்,

"இங்கே உனக்கு எந்தப் பயமும் வேண்டாம்... என் அப்பா, அம்மாவை மீறி உன்னை எந்தத் துன்பமும் அணுகாது..."

என்றவனைக் கண்டு அவளது முகத்தில் மகிழ்ச்சி எட்டிப்பார்த்தது...

"அப்போ சரி..." என்று மகிழ்வோடு தலையாட்டியவள் கைவிரல்களை நீட்டி கணக்கு போட ஆரம்பித்தாள்...

"என்ன...?"

"இன்னும் ரெண்டு மாசம் தான்... குழந்தை பிறந்துவிடும்..." என்று சந்தோசமாகக் கூறியவளை கண்டு அவனது முகத்தில் கனிவு வந்தது...

"ஆமாம்..." என்றான் அவனும் சந்தோசமாக...

அவனது சந்தோசத்தைக் கண்டு கொள்ளாதவளாக, "இங்கே ஏதாவது ஏடிஎம் இருந்தா நிப்பாட்டு... பணம் எடுக்கணும்..." என்று கூற... அதைக் கேட்டு அவனது உடல் விறைத்தது...

"வாயை மூடு..." என்று சீறினான்...

"எதுக்கு வாயை மூடணும்...? எதுக்குன்னு கேட்கிறேன்...?" என்று பதிலுக்குக் கத்தியவளை கண்டு காரை ஓரமாக நிறுத்தியவன் அவளைப் பார்த்து,

"ஒழுங்கு மரியாதையா வாயை மூடலை... மூட வைப்பேன்..." என்று அவன் கோபத்தில் உறும...

"முடியாது போடா..." என்று அவள் சிலிர்த்துக் கொள்ள...

அடுத்த நொடி அவன் அவளது முகத்தைப் பற்றியிழுத்து அவளை நோக்கி குனிய ஆரம்பித்த போது அவள் பயத்தில் வாயடைத்து போனாள்... அச்சத்தில் இமைகள் படபடக்கத் தன்னைப் பார்த்தவளை கண்டு ஒன்றும் செய்யாது விலகியவன்,

"இனி பணத்தைப் பத்தி பேசு... இப்படித் தான் பனிஷ்மெண்ட் கொடுக்கப் போகிறேன்..." என்றவனிடம் மேலே பேச தைரியமற்று அவள் அமைதியாகி போனாள்...

பின்பு எதையோ யோசித்தவளாய் அவனைத் திரும்பி பார்த்தவள் பின் 'வேண்டாம்' என்பது போல் தலையசைத்து விட்டு ஜன்னல் பக்கம் திரும்பி கொண்டாள்... அவளது செய்கையைப் பார்த்தபடி வந்தவன்,

"எதுவாக இருந்தாலும் கேளு..." என்று மென்குரலில் கூற...

"வேண்டாம், வேண்டாம்..." என்றவள் தனது இதழ்களை இரு கைகளால் மூடி கொண்டாள்...

அவளது செயலில் அவனுக்குச் சிரிப்புப் பொங்கியது... வாய்விட்டு சிரித்தபடி அவளது கையைக் கீழிறக்கியவன்,

"ஒண்ணும் செய்ய மாட்டேன் சொல்லு..." என்று ஊக்குவிக்க...

"நான் கோச்சிங் கிளாஸ் போகணும்... அதுக்கு மட்டுமாவது ஏற்பாடு செய்து கொடு..." என்றவளை கனிவு பொங்க பார்த்தவன்,

"நிச்சயமாய்... வீட்டுக்கே வந்து சொல்லி கொடுக்கும்படி ஏற்பாடு செய்கிறேன்... வேறென்ன...?"

"குழந்தை பிறந்த பிறகு நான் இங்கிருந்து போயிருவேன்..."

அவள் கூறியதற்கு அவனாலும் பதில் கூற முடியவில்லை... அவளைப் பாதுகாக்க மட்டுமே அவளை இங்கே அழைத்து வந்திருக்கிறான்... மற்றபடி அவளுடன் காதல் வாழ்க்கை வாழ அல்ல...

"சரி..." என்றான் சம்மதமாக...

"இது என் குழந்தை... நீ உரிமை கேட்டு வர கூடாது..." என்றவளை ஆழ்ந்து பார்த்தவன்,

"என் குழந்தைக்கு எந்த ஆபத்தும் இல்லாம நீ வளர்த்தால் நான் உரிமை கோரி வர மாட்டேன்..." என்றான் அவன் உறுதியான குரலில்...

"அதுக்காகத் தானே இவ்வளவு போராட்டமும்... பிடிக்காத உன் வீட்டுக்கு வந்திருக்கிறேன்..." என்றவள்,

"அதன் பிறகு என் முகத்தில் கூட நீ விழிக்கக் கூடாது... என் குழந்தையையும் பார்க்க வர கூடாது... நான் செத்தாலும் உன்னைப் பார்க்க விரும்பவில்லை..." என்று வெறுப்புடன் கூறியவளை சிறு புன்னகையுடன் பார்த்தவன்,

"கண்டிப்பாக உன்னுடைய இந்த ஆசையை நிறைவேற்றுகிறேன்... கவலை வேண்டாம்..."

இருவருமே திருமண வாழ்க்கை, அதன் பந்தத்தைப் பற்றி யோசிக்காது பேசினர்...

"ரொம்பச் சந்தோசம்..." என்று வெடுக்கென்று கூறியவள் அமைதியாக வெளியில் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்...

அவள் பேசியதற்கு நியாயத்திற்கு அவனுக்குக் கோபம் வந்திருக்க வேண்டும்... ஏனோ வரவில்லை... மாறாக மௌனமாக வந்தான்... அவனது மனம் பல யோசனைகளில் சிக்கி தவித்தது...

சிறிது தூரம் சென்றதும் கார் நின்றது... சுற்றிலும் வயல் நிறைந்திருக்க நடுவே ஓட்டு வீடு ஒன்றிருந்தது... அந்த இடமே சொர்க்கம் போல் காட்சியளித்தது... அவளது கைப்பிடித்து வரப்பு மீது நடத்தி சென்றவனிடம்,

"இங்கே யார் இருக்கா...?" அவள் கேட்க...

"வந்து பார்த்தால் தெரிந்துவிடப் போகிறது..." என்றவன் அதிக உற்சாகமாய்க் காணப்பட்டான்...

வீட்டின் முன் நின்றவன் உள்ளே தலையை நீட்டி, "அப்பா..." என்றழைக்க...

"அடடே, வாப்பா வா..." உள்ளிருந்து குரல் கொடுத்தபடி மாடசாமி வெளியில் வந்தார்...

அவரது தோற்றம் கண்டு நிஷிலாவின் புருவங்கள் யோசனையாய்ச் சுருங்கியது... அவரை எங்கேயோ

பார்த்தது போலிருந்தது... ஆனால் எங்கே என்று தான் அவளுக்கு ஞாபகத்தில் வரவில்லை...

"என்ன யோசனை நிலா...?"

"இவரை எங்கேயோ பார்த்த மாதிரியிருக்கு..." என்று யோசனையுடன் கூறியவளை கண்டு,

"இவரை நீ பார்த்திருக்கச் சான்ஸ் இல்லை... வடநாட்டில் இருந்தவர் இப்போது தான் இங்கே வந்திருக்கிறார்..." என்று அவளிடம் கூறியவன் மாடசாமியிடம்,

"அப்பா, இவள் தான் நிலா..." என்று மனைவியை அறிமுகப்படுத்த...

'அப்படியே இளா போல் இருக்கிறாய்' என்று கூற வந்தவர் அதை அப்படியே முழுங்கி கொண்டார்... நிம்மதியாய் வாழ்ந்து கொண்டிருக்கும் இளவரசியின் வாழ்க்கையில் தன்னால் இடைஞ்சல் வந்துவிடக் கூடாது என்று அமைதி காத்தார்...

"அப்படியாப்பா...? ரொம்பச் சந்தோசம்..." என்றவரின் பாதம் பணிய வேண்டிய சிம்மவிஷ்ணுவின் பேச்சை தட்டாது கேட்டாள் அவள்...

சிறிது நேரம் அவரிடம் பேசி கொண்டிருந்தவளுக்கு உடல் சோர்வை கொடுத்தது... வீட்டின் முன்னிருந்த வேப்பமர காற்று அவளது விழிகளைச் சொக்கியது... அவளது சோர்வினை உணர்ந்தவனாய் சிம்மவிஷ்ணு,

"நீ ரெஸ்ட் எடு நிலா..." என்றவன் அவள் படுப்பதற்காகக் கயிற்று கட்டிலை ஏற்பாடு செய்து அவளைப் படுக்க வைத்துவிட்டு அவன் மட்டும் மாடசாமியுடன் உள்ளே சென்றுவிட்டான்...

அவள் மேலே எதுவும் யோசிக்க முடியாது ஆழ்ந்து உறங்கி போனாள்...

"இளா மாதிரியே இருக்கிறாள் இல்லையா...?" அடுப்பில் கொதித்த உலையில் அரிசியைப் போட்டவாறு கூறிய

மாடசாமியை கண்டு அவன் புன்னகைத்தான்...

"ஆனால் ரொம்ப நல்லவள்..."

"இளாவுக்கு என்ன...? அவளும் நல்லவள் தான்..."

"ம், ம்..." என்று அவன் மழுப்பிவிட்டான்...

"இப்போ உங்கப்பன் இருந்திருந்தா ரொம்பச் சந்தோசப்பட்டு இருந்திருப்பான்..." தம்பியின் நினைவில் அவர் கண் கலங்கினார்...

அதைக் கண்டு அவனது விழிகளும் கலங்கி சிவந்து போனது... அன்றைய நாளின் தாக்கத்தில் அவனது மனம் சிக்குண்டு தவித்தது... அவனது மனநிலையை உணர்ந்து அவர் பேச்சை மாற்றினார்...

"அப்பா, அம்மா உன் கல்யாணத்தை ஏத்துக்கிட்டாங்களா...?"

"ஆமாம்ப்பா... அதான் இவளை இங்கே கூட்டிட்டு வந்துட்டேன்..."

"ரொம்பச் சந்தோசம்ய்யா..." என்றவர் சமையலில் ஈடுபட்டார்...

நன்கு உறங்கி எழுந்த நிஷிலா சிம்மவிஷ்ணுவை தேடி வீட்டினுள் வந்தாள்... அங்கு அவன் மாடசாமி மடியில் தலை வைத்து படுத்து உறங்கி கொண்டிருந்தான்... அவர் வாஞ்சையுடன் அவனது கேசத்தை வருடி கொடுத்துக் கொண்டிருந்தார்... அவனது இந்தச் செயலை ஆச்சிரியமாகப் பார்த்தபடி அவள் அப்படியே நின்றிருந்தாள்... அவனது உண்மை முகம் தான் என்ன? என்று தெரியாது அவள் தடுமாறினாள்...

மாடசாமி கையால் சமைத்த உணவை உண்டுவிட்டு மீண்டும் காரில் பயணம் செய்த போது அவள் தான் அமைதியை கலைத்து அவனிடம் கேட்டாள்...

"யார் அவர்...?"

"உன் மாமனார்..." என்றான் அவன் சன்னச்சிரிப்புடன்...

"உனக்கு எத்தனை அப்பா...?" என்று கிண்டலாகக் கேட்டவளை கண்டு,

"நான்கு..." என்றான் அவனும் சளைக்காது...

"ஆங்... அவ்வளவா...?" என்று திகைத்தவளை கண்டு,

"பெற்றால் தான் தந்தையாக வேண்டும் என்கிற எந்த அவசியமும் இல்லை..." என்றான் அவன் சற்றுத் தீவிரமான குரலில்...

"அதுவும் சரி தான்..." என்று முணுமுணுத்து கொண்டவள் மேலே ஒன்றும் பேசவில்லை...

வீட்டிற்கு வந்த பின்பு அவள் மீனாட்சியுடன் ஒட்டி கொண்டு சென்றுவிட... அவனது தொழில் விசயமாக வெளியில் சென்றுவிட்டான்...

இரவில் வீட்டிற்கு வந்தவன் உணவு உண்டுவிட்டுச் சென்னை கிளம்ப ஆயத்தமானான்... அதை அறிந்த மீனாட்சி அவனிடம் சண்டைக்கு வந்தார்...

"வந்தவுடனே காலில் வெந்நீ கொட்டின மாதிரி ஊருக்கு கிளம்பலைன்னா என்ன...? கூட ரெண்டு நாள் இருந்துட்டு போ விஷ்ணு..." என்க...

அவன் சங்கடத்துடன் தனது தந்தையைப் பார்த்தான்... அவரோ அவனைப் பார்க்காது உம்மென்று இருந்தார்... அவனது பார்வையை உணர்ந்த மீனாட்சி,

"அப்பா ஒண்ணும் சொல்ல மாட்டார்... நீ இரு..." என்று அதட்டலாக உரைக்க...

அவன் வேறுவழியின்றி அங்கே தங்க வேண்டியதாய் போயிற்று... மனைவியை அழைத்துக் கொண்டு தனது அறைக்கு அவன் சென்றான்... அவளோ அதை அறியாது எப்போதும் போல் அவனிடம் வளவளத்துக் கொண்டு சென்றாள்...

"நாளையில் இருந்து சார் வந்து கோச்சிங் கொடுப்பார்... நல்லா படி... வேறு எது வேணும்ன்னாலும் ஃபோன் பண்ணு..." என்று அக்கறையோடு அவன் சொல்ல...

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்... என் பவன் அத்தான் பார்த்து கொள்வார்..." என்று கூறியவளை கண்டு அவனுக்குக் கோபம் வந்தது...

"அப்போ குழந்தையைப் பாதுகாக்க சொல்லி உன் பவன் அத்தானிடம் போக வேண்டியது தானே..." என்று கோபமாய்க் கத்தியவனைக் கண்டு அவள் பேந்த பேந்தவென்று விழித்தாள்...

"இப்போ நீ என் பாதுகாப்பில் இருக்க... அதை ஞாபகத்தில் வச்சிக்கிட்டு பேசு..." என்றவனிடம் அவள் தான் சமாதானமாகப் போக வேண்டியிருந்தது...

"சரி சரி..." என்று சமாதானமாகக் கூறியவள்,

"எல்லாம் என் தலையெழுத்து..." என்று தனக்குள் முணுமுணுத்து கொண்டாள்... அதைக் கேட்டு அவனது புன்னகை விரிந்தது...

இருவரும் பேசி கொண்டே அவனது அறைக்குள் நுழைந்தனர்... அவன் வழக்கம் போல் அறை கதவை தாழ் போட்டுக் கொண்டு திரும்பினான்... அதுவரை அவனிடம் சகஜமாகப் பேசி கொண்டு வந்த நிஷிலா கதவு தாழிடும் ஓசையில் உடலெல்லாம் பதற திரும்பி பார்த்தாள்... அங்கு நின்றிருந்த சிம்மவிஷ்ணுவை கண்டதும் அவளது விழிகளில் அச்சம் படர்ந்தது... அதுவும் அவனது அறையில் அவள் தனியே மாட்டி கொண்டாளே...

இரு கைகளையும் வேகமாய் அசைத்தபடி பயத்துடன் பின்னால் நகர்ந்தபடி, "போயிரு... கிட்டே வராதே... எனக்குப் பயமாயிருக்கு..." என்று மேனி உதற, இதழ்கள் நடுங்க கூறிக் கொண்டே சென்றவள் சுவர் இடிக்க அப்படியே மடங்கிச் சரிந்து கீழே அமர்ந்தாள்...

அவளது அச்சத்தில் அவன் அப்படியே செயலிழந்து போய் நின்றுவிட்டான்... அவளது பாதுகாப்புக்காக அவளது வீட்டினரிடம் இருந்து அவளைக் காப்பாற்றி அழைத்துக் கொண்டு வந்து விட்டதை மிகப் பெரிய சாதனையாக எண்ணி கொண்டிருந்தவனின் எண்ணத்திற்குச் சவுக்கடியாய் விழுந்தது அவளது இந்தப் பயம்...

தன்னவளை தன்னிடம் இருந்து எப்படிக் காப்பது? என்று தெரியாது அவன் திகைத்து விழித்தான்...

"நாட்டிற்குத் துரோகம் இழைத்தால் நாடு அழிந்து போகும்,
இனத்திற்குத் துரோகம் இழைத்தால் இனம் அழிந்து போகும்,
மொழிக்குத் துரோகம் இழைத்தால் மொழி அழிந்து போகும்,
பெண்ணுக்குத் துரோகம் இழைத்தால்...?
அவளது அச்சத்தில் நீ மரித்துப் போவாய்,
அவளது கண்ணீரில் நீ மூழ்கி மூச்சடைத்து போவாய்,
அவளது வலியில் நீ வேதனையில் துடிப்பாய்,
கத்தியின்றி இரத்தமின்றி விழிவீச்சில்
உன்னுயிர் எடுத்திடுவாள்... மொத்தத்தில்
நீ வீழ்ந்து அழிந்து போவாய் அவளது அன்பில்...!!!"

கொல்லும்...!!!

## நிழல் : 22

நிஷிலாவின் பயத்தில் சிம்மவிஷ்ணு சர்வாங்கமும் ஒடுங்கி போய் அப்படியே நின்றுவிட்டான்... அவள் அவனுடன் இருந்த இரண்டு மாதங்களாக அவளின் அச்சத்தினைச் சிறிதும் கண்டு கொள்ளாது அவளை ஆட்கொண்டவன் தான் அவன்... அன்று அவன் மனதில் இருந்த பழிவாங்கல் அவளது பயத்தினைக் கண்டு கொள்ளச் செய்யவில்லை... அவனது மனதின் ஓலம் முன் அவளின் கதறல் சிறிதும் எடுபடவில்லை... ஆனால் இன்று அவனால் அப்படியிருக்க முடியவில்லை... அவளது அச்சம் அவனது மனதினை பிழிகிறது... அவளது கதறலில் அவனது இதயம் சுக்குநூறாகி உடைந்து போனது...

இன்றும் அவனது மனதின் ஓலம் அப்படியே தான் இருக்கிறது... பழிவாங்க துடிக்கும் மனதும் அப்படியே தான் இருக்கிறது... அதே சமயம் நிஷிலாவை பற்றிய புரிந்துணர்வும் அவனிடத்தில் வந்திருக்கிறது... எதிரியின் உருவம் கொண்டிருந்தவளின் மனம் கொன்றவன் அவளது குணம் கண்டு தன் மனதினை உயிரோடு கொன்றான்... பழிவாங்கலை மறந்து அவளை நன்கு புரிந்து கொண்டான்... குழந்தையை மட்டுமல்லாது அவளையும் பாதுகாக்க நினைத்தான்...

அன்று அவளது பெண்மையைக் கேவலப்படுத்தியவன் இன்று அவளின் தாய்மை மனதின் உன்னதத்தை உணர்ந்து அவளோடு சேர்ந்து தனது குழந்தைக்காகப் போராடுகிறான்... இப்போது அவன் மனதில் அவள் மனைவியாக, காதலியாக இடம் பிடிக்கவில்லை என்றாலும் அன்னையாக அதுவும் தனது குழந்தையின் அன்னையாக அவள் தனியிடம் பிடித்திருக்கிறாள் தான்... அதை இல்லையென்று சொல்ல முடியாது...

அவளது கதறல் அவனது இதயத்தைப் பிழிய வேகமாக அவள் அருகே சென்று மண்டியிட்டு அமர்ந்து, "பேபி..." என்று மென்மையாக அழைத்தான்...

நிறைமாத வயிறு முட்டுவதால் முழுங்காலில் முகம் புதைத்து அழ முடியாது கைகளில் முகம் புதைத்துக் கொண்டு அழுதவள் அவனது குரலில் விழிகளில் அச்சத்தைத் தேக்கியபடி அவனை நிமிர்ந்து பார்த்தாள்...

"நான் உன் விருப்பம் இல்லாம தொட்டவன் தான்... ஆனா குழந்தை வந்த பிறகு நான் உன்னைத் தொட்டேனா? இல்லையே... அதுவும் இந்த மாதிரி நேரத்தில் யாராவது அந்த மாதிரி நெருங்குவாங்களா...? கொஞ்சம் யோசி பேபி..."

"நீ பொய் சொல்ற... அன்னைக்கு நீ அப்படிச் சொன்னியே..." வளைகாப்பு அன்று அவன் பேசியதை அப்படியே கூறியவளை கண்டு அவன் உள்ளம் வருந்தினான்...

அவளது கைகளைப் பிடித்துத் தனது கைகளுக்குள் அடக்கி கொண்டவன், "தப்பு தான்... அன்னைக்கு நான் அப்படிப் பேசியது தப்பு தான்... தெரியாம பேசிட்டேன் போதுமா...? சாரி..." என்று அவன் தாழ்ந்த குரலில் அவளிடம் மன்னிப்பு கேட்டான்...

அவள் இன்னமும் நம்பாது அவனைப் பார்த்தாள்... அவளது நம்பிக்கையின்மையைக் கண்டு அவன் செய்வதறியாது உதடு கடித்தான்... என்ன சொல்லி அவளுக்குத் தன்னைப் புரிய வைப்பது என்று அவனுக்குத் தெரியவில்லை... அடுத்தக் கணம் விழிகள் பளிச்சிட அவளைப் பார்த்தவன்,

"என் குழந்தையின் பாதுகாப்பு எனக்கு முக்கியம்... என் குழந்தைக்காக நான் உன் பக்கத்தில் வர மாட்டேன்..." என்று நம்பிக்கையூட்டும் விதமாகக் கூறியவன் அவளைக் கண்டு புன்னகைக்க...

குழந்தை என்றதும் அவளது அச்சம் அகன்றது... தனது வலக்கையை அவன் முன் நீட்டி, "ப்ராமிஸ்...?" என்று கேட்க...

"ப்ராமிசா..." என்றவன் எழுந்து அவள் எழுவதற்காகத் தனது கையை நீட்டினான்... அவள் புன்னகை முகத்தோடு

அவனது கையைப் பற்றிக் கொண்டு எழுந்தாள்...

"தூங்கு..." என்றவனை அவள் யோசனையாய் பார்த்தாள்...

"நிம்மதியா தூங்கு... நான் வெளியில் போகிறேன்..." என்றவன் கதவை சாத்திவிட்டு வெளியில் சென்றான்...

அவன் சென்றதும் சிறிது நம்பிக்கை வர பெற்றவளாய் அவள் படுக்கையில் படுத்தாள்... அறையைச் சுற்றிலும் கண்களை ஓட்டியபடி அவள் படுத்திருந்தாள்... அவனது அறை அவனைப் போலவே அவளை மிரட்டியது...

நேரே பெற்றோரின் அறைக்கு வந்த சிம்மவிஷ்ணு அதன் கதவை தட்டினான்... மீனாட்சி வந்து கதவை திறந்தார்... மகனை கண்டதும் பதற்றத்துடன்,

"நிஷாவுக்கு எதுவும் பிரச்சினையா...?" என்று கேட்க...

"இல்லைம்மா... அப்பா கிட்ட கொஞ்சம் பேசணும்..."

"ஆபிஸ் ரூமில் இருக்காரு விஷ்ணு... நேரத்தோடு பேசிட்டு தூங்க போ... வேலை வேலைன்னு தூங்காம இருந்து உடம்பை கெடுத்துக்காதே..." என்று அவர் அறிவுரை கூற... அவன் சரியென்று தலையசைத்து விட்டு தந்தையைத் தேடி சென்றான்...

அங்கு அலுவலக அறையில் சுந்தரபாண்டியன் எந்த வேலையும் பார்க்காது கண்களை மூடி நாற்காலியில் சாய்ந்திருந்தார்... அவரது முகபாவமே அவரது மனதின் வேதனையை நன்கு காட்டி கொடுத்தது... சிம்மவிஷ்ணு நேரே சென்று அவரது கால்களில் விழுந்தவன் அவரது பாதங்களில் கண்ணீர் விட்டான்... அதை உணர்ந்து கண் திறந்தவர் தனது கால்களை அகற்றி கொண்டாரே தவிர அவனிடம் எதுவும் பேச முயற்சிக்கவில்லை... அவர் அமைதியாக அவனது கண்ணீரை பார்த்தபடி அமர்ந்திருந்தார்... ஆனால் அவரது மனம் அடைந்த துயரம் அவருக்கு மட்டுமே தெரியும்...

"அப்பா என்னை மன்னிச்சிருங்க... இப்போ நிலாவோட கண்ணீரில், பயத்தில் என் குற்றவுணர்வு என்னைக் கொல்லுது... ஆனா, ஆனா...?" என்று மேலே சொல்ல முடியாது தடுமாறியபடி நிறுத்தியவன்,

"என் பக்க நியாயத்தை மட்டுமே யோசித்த நான் அவளைப் பற்றிக் கொஞ்சமும் யோசிக்காது போயிட்டேன்... இப்போ நான் அதை உணர்றேன்... உங்களோட கோபமும் எனக்குப் புரியுது... அதுக்காக நான் செய்ததைத் தவறுன்னு சொல்ல மாட்டேன்... ஒரு தவறை இன்னொரு தவறு மூலம் நேர் செய்திருக்கிறேன்... அவ்வளவே..." என்று நெஞ்சை நிமிர்த்தியவனைக் கண்டு அவரது விழிகள் இடுங்கியது...

"இப்போ இந்த நொடி வரை நான் செஞ்சது சரி தான்... ஆனா இதில் பாதிக்கப்பட்ட நிலா தான் பாவம்... அவள் என்ன செய்தாலும் நீங்க அவளுக்குப் பக்கபலமாக இருக்கணும்... இருப்பீங்களா...?"

"என் மருமகளுக்கு நான் துணையாக இருப்பேன்... அதுக்கு நீ வக்காலத்து வாங்கணும்ன்னு எந்த அவசியமும் இல்லை..." என்றார் அவர் வெறுப்புடன்...

தவறு செய்துவிட்டு அதைத் தைரியமாகச் சொல்லும் மகனை கண்டு அவருக்கு ஆத்திரம் வந்தது...

"அவள் எனக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்கத் துடித்தாலும் நீங்க அவளுக்குத் துணையா இருப்பீங்களா...?"

சிம்மவிஷ்ணு கேட்டதில் அவரது இதயம் ஒரு முறை நின்று துடித்தது... தான் பெற்ற பிள்ளைக்குத் தானே தண்டனை வாங்கிக் கொடுப்பதா...? கொலையே செய்தாலும் பெற்ற மகவை காப்பாற்ற வேண்டியது தந்தையின் கடமை அல்லவா...? அதே சமயம் பாதிக்கப்பட்ட அந்தச் சிறுபெண்ணின் கள்ளம்கபடமற்ற முகம் அவரது நினைவில் எழுந்து அவரை இறுக செய்தது...

"நிச்சயமாய்..." என்றார் அவர் தெளிவாக, உறுதியாக...

"ரொம்பத் தேங்க்ஸ்ப்பா..." மகிழ்வுடன் தனது கையைப் பற்றி நன்றி கூறிய மகனின் முகத்திலிருந்த மகிழ்ச்சி அவருக்குப் புரியாத புதிராக இருந்தது...

"இது போதும்ப்பா..." என்றவன் எழுந்து அறையை விட்டுச் சென்றான்...

அவர் அவன் செல்வதைப் பார்த்தபடி அமர்ந்திருந்தார்... மகனை நினைத்து அவரது கண்கள் கலங்கியது...

'கடவுளே, என் விஷ்ணுவை மன்னிக்கும் மனதை எனக்குக் கொடு...' என்று அவர் கடவுளிடம் மனமுருக மன்றாடினார்...

சிம்மவிஷ்ணு யோசனையுடன் வரவேற்பறை சோபாவில் அமர்ந்தான்... குழந்தை பிறப்பதற்கு இன்னும் இரண்டு மாதங்களே இருக்கிறது... அதற்குள் அவன் தான் செய்ய நினைத்ததைச் செய்து முடிக்க வேண்டும்... எதிரிகளைத் தொழிலில் அடித்து வீழ்த்த வேண்டும்... குழந்தை பிறந்த பிறகு நிஷிலா கொடுக்கும் தண்டனையை அவன் ஏற்கும் போது அவனது பழிவாங்கல் முடிவுக்கு வந்திருக்க வேண்டும்... அப்போது தான் அவனால் சந்தோசமாகத் தண்டனையை ஏற்றுக் கொள்ள முடியும்...

அவனது பலத்த யோசனையின் விளைவு அவனது தலையில் சம்மட்டியை கொண்டு ஓங்கி அடிப்பது போல் வலிக்க ஆரம்பித்தது... தாங்க முடியாத வலியில் அவன் மாத்திரையைத் தேடி தனது அறைக்கு ஓடினான்...

கதவு திறக்கும் ஒலியில் அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந்த நிஷிலாவை சிறிதும் கண்டு கொள்ளாது அவன் மேசை மீது வைத்திருந்த தனது மாத்திரையைத் தேடினான்... அதை எடுத்து போட்டு கொண்டவனுக்கு அப்போதும் வலி மட்டுப்படாது இருக்கக் கட்டிலின் மறுபுறம் வந்தமர்ந்தான்...

அவனது செய்கையை விசித்திரமாகப் பார்த்துக் கொண்டிருந்த நிஷிலாவிற்குக் கைகளால் தலையைத் தாங்கியபடி முகத்தில் வேதனையை வெளிப்படுத்தியபடி

இருந்த சிம்மவிஷ்ணு அன்றொரு நாள் அவளது அறையில் அவன் இருந்த கோலத்தை நினைவுப்படுத்தினான்... பெண்ணவள் மனம் தாங்காது எழுந்து அவன் புறம் வந்து அவன் முன் நின்றவள்,

"என்ன செய்யுது...?" என்று கலக்கமான குரலில் கேட்க...

"தலைவலி..." என்று அவளை நிமிர்ந்து பாராது கூறியவனைக் கண்டு சிறிது நேரம் செய்வதறியாது பார்த்தவள் பின்பு மெல்ல அவனது தலையைப் பிடித்துவிட்டாள்...

அடுத்தக் கணம் அவன் அவளை அணைத்துக் கொண்டு அவளது நெஞ்சில் முகம் புதைத்துக் கொண்டான்... முதலில் அவனது செயலில் திகைத்தவள் பின்பு அவனை ஆறுதலாக அணைத்து கொண்டாள்... அவள் கொடுத்த ஆதரவில் அவனது வலி சிறிது குறைவது போல் தோன்றியது...

பெண்ணவளை பிடிக்கவில்லை என்று கூறியவன் அவளது அணைப்பில் பெருத்த ஆறுதலை தேட... ஆணவனின் தொடுகையை வெறுத்தவள் இப்போது அவனைத் தொட்டு ஆறுதல் அளித்துக் கொண்டிருந்தாள்...

இருவரது செயலிலும் சிறிதும் காதல் இல்லை, காமம் இல்லை... மாறாக அவனது வலியை கண்டு துடித்த சக மனிதனின் இரக்க உணர்வே அவளிடம் இருந்தது... அது போல் தான் அவனும்... சிறு குழந்தை ஒன்று வலியில் தாயிடம் ஆறுதல் தேடும் தாயன்பினை மட்டும் தான் அவன் அவளிடம் எதிர்பார்த்தான்... அதைத் தாண்டி அவனுக்கு அவளிடம் வேறு உணர்வு வரவில்லை...

சிறிது நேரத்தில் தலைவலி சரியாகி போய்விடச் சிம்மவிஷ்ணு அவளை விட்டு விலகினான்... அவனைப் பார்த்தவள்,

"இப்போ வலி எப்படியிருக்கு...?" என்று கவலை குரலில் கேட்க...

அவளது கவலையில் அவனது முகத்தில் கவலை படர்ந்தது... தனது சாதாரணத் தலைவலியையே அவளால் தாங்கி கொள்ள முடியாத போது அவள் எப்படித் தனக்குத் தண்டனை வாங்கிக் கொடுப்பதைத் தாங்கி கொள்ளப் போகிறாள்...? அவளது இறுதி மூச்சு வரை அது அவளை வாட்டி வதைக்காதோ...? இப்போது அவள் மீது கோபம் வரவில்லை... மாறாக அவளை நினைத்து இரக்கம் சுரந்தது...

கட்டிலில் இருந்து எழுந்தவன் அவளது கன்னம் தட்டி புன்னகைத்தபடி, "இப்போது இல்லை..." என்றான்...

"ஏன் உங்களுக்கு அடிக்கடி தலைவலி வருது...?"

"தலையில் அடிப்பட்டதால் இருக்கலாம்..." என்று கூறி சமாளித்தான்... தனது உடல்நிலையைப் பற்றிக் கூறி அவளைப் பயமுறுத்த அவனுக்கு விருப்பம் இல்லை...

"ஓ... டாக்டர் கிட்ட காட்டினீங்களா...?"

"ம்..." என்றவன்,

"நீ தூங்கு..." என்றபடி அறையை விட்டு செல்ல எத்தனிக்க...

"பராவாயில்லை... நீங்க இங்கேயே படுங்க..." என்க...

அவளைக் கூர்ந்து பார்த்தவன், "வேண்டாம்... நீ நிம்மதியா தூங்கு... இனி என்னால் உனக்கு எந்தத் தொல்லையும் இருக்காது..." என்று கூறியவன் விறுவிறுவென அறையை விட்டு வெளியேறி விட்டான்...

அது தான் அவள் அவனைக் கடைசியாகப் பார்த்தது... அவன் கூறியது போல் நிம்மதியாக உறங்கி காலையில் எழுந்தவளின் நிம்மதியை அவன் பறித்திருந்தான்... ஆம், அவன் இரவோடு இரவாகச் சென்னை கிளம்பி சென்றுவிட்டான்...

'என் கிட்ட ஒரு வார்த்தை சொல்லிட்டு போகணும்னு தோணலையா...?' என்று மனதிற்குள் கோபத்தோடு முணுமுணுத்து கொண்டிருந்தாள் நிஷிலா...

"இங்கே என்னடாம்மா பண்ற...?" என்றபடி அங்கு வந்த மீனாட்சி பால் அடங்கிய தம்பளரை அவள் புறம் நீட்டினார்...

"நானே வந்திருப்பேனே..." என்று சிறு சங்கடத்துடன் அதை வாங்கிக் கொண்டவளை வாஞ்சையுடன் பார்த்தவர்,

"இதில் என்னயிருக்கு...? எங்களுக்காக உன் குடும்பத்தை விட்டுட்டு வந்திருக்க... உன்னைப் பார்த்துக்கிறது என் பொறுப்பு..."

'ஓ, இப்படி வேறு கதை சொல்லிட்டு போயிருக்கானா...?' அவளது மனம் மீண்டும் கணவனைச் சுற்றி வந்தது...

"விஷ்ணு அவசர வேலையா சென்னைக்குக் கிளம்பி போயிட்டான்... இப்படித்தான்ம்மா வேலை வேலைன்னு உடம்பை கூடக் கவனிக்காம இருப்பான்... இப்போ தான் நீ வந்துட்டியே... அவனைக் கொஞ்சம் கண்டிச்சு உடம்பை பார்த்துக்கச் சொல்லு நிஷாம்மா..."

அவரது வார்த்தையில் அவள் குற்றவுணர்வில் தலைகவிழ்ந்தாள்... அவன் தனது தலைவலியை கூடப் பொருட்படுத்தாது சென்றிருப்பதற்குக் காரணம் தான் தான் என்பது புரிய அவளது குற்றவுணர்வு இன்னமும் அதிகரித்தது...

"உனக்கு என்ன டிபன் பிடிக்கும்...? அதையே காலையில் செய்யச் சொல்லிர்றேன்..." என்று கேட்டவரின் வார்த்தையில் அவள் தனது மனதினை மறைத்துக் கொண்டு அவருக்குப் பதிலளிக்க ஆரம்பித்தாள்...

அடுத்து வந்த நாட்களில் அவள் மெல்ல மெல்ல சிம்மவிஷ்ணுவை மறந்து அந்த வீட்டினருடன் இணக்கமாகி போனாள்... சிரிக்கச் சிரிக்கப் பேசி தன்னை மகிழ்ச்சியாக வைத்திருக்கும் மாமனாரின் அன்பு, அவளைத் தாயன்போடு கவனித்துக் கொள்ளும் மாமியார், அவள் காலால் இட்ட பணியைச் சிரம் மேற்கொண்டு செய்யும் மருதாணி, மீதமிருக்கும் நேரத்தில் 'நீட்' பரீட்சைக்குப் படிப்பது என்று அவளது வாழ்க்கை சந்தோசமாகக்

கழிந்தது... இடையிடையில் தனது வீட்டினருடன் அலைப்பேசியில் பேசி கொள்வாள்...

அங்கே சிம்மவிஷ்ணு தொழில்ரீதியாகச் செல்வரத்தினம் மற்றும் மணிபாரதியை வீழ்த்துவதற்குத் தேவையான வியூகம் அமைக்க ஆரம்பித்தான்... இளவரசி மருத்துவமனையில் இருந்தது அவனுக்குச் சாதகமாகிப் போனது... அதனால் அவன் மகிழ்ச்சியோடு தனது வேலையைச் செவ்வனே கவனித்தான்... ஓய்வு நேரத்தில் அன்னைக்கு அழைத்துப் பேசுபவன் அவரிடமே மனைவியின் உடல்நிலையைக் கேட்டு கொள்வான்... அவளிடம் பேசுவதை அவன் முற்றிலும் தவிர்த்தான்... தனது வார்த்தையின் நிழல் கூட அவள் மீது படுவதை அவன் விரும்பவில்லை போலும்...

ஒரு மாதம் கழிந்த நிலையில் மீனாட்சி உறவினர்களை அழைத்துக் கலவை சாதம் படைத்து நிஷிலாவுக்கு நலுங்கு வைக்க வேண்டும் என்று அவனிடம் கூறினார்... அவர்களது இனத்தில் அது ஒரு சம்பிரதாய நிகழ்வு...

"அதுக்கு என்னம்மா தாராளமா பண்ணுங்க..." என்றவனைக் கண்டு,

"அதுக்கு நீ இங்கே வரணும் விஷ்ணு..." என்றார் அவர் கடுமையுடன்...

"ம்மா, இங்கே வேலை தலைக்கு மேல் கிடக்கிறது..." என்று அவன் தயங்கினான்...

"நாங்க இத்தனை பேர் சுற்றி இருந்தாலும் உன் மனைவி உன்னைத் தான்டா தேடுவாள்..."

'அதெல்லாம் அவள் தேட மாட்டாள்...' என்று தனக்குள் கூறி கொண்டவன்,

"சரிம்மா, உங்களுக்காக வருகிறேன்..." என்றுவிட்டு அலைப்பேசியை அணைத்தான்...

அந்த விழாவிற்கு நிஷிலா வீட்டில் இருந்து அனைவரும் வருகை தந்திருந்தனர்... பத்ரிநாத், இளவரசி மட்டும் சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றிருந்தனர்... இளவரசி மீண்டும் பழைய தோற்றத்தினைப் பெற அவர் அழகியியல் அறுவை சிகிச்சை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகி போனது... அதனால் அவளது பெற்றோருடன் பவித்ரன் மட்டும் வந்திருந்தான்...

அத்தானுடன் பேசி கொண்டிருந்த போதும் அவள் தனது கணவனை விழிகளால் தேடினாள்... ஏன் அவன் மட்டும் இன்னமும் வரவில்லை? என்று அவள் உள்ளுக்குள் தவித்துப் போனாள்... அவளுக்கு இருந்த கவலையில் அவனுக்கான தனது தவிப்பினை அவள் உணரவே இல்லை...

'கொண்டு வந்து தள்ளிவிட்டதோடு அவனது கடமை முடிந்துவிட்டது என்று எண்ணி ஓடிவிட்டான்...' என்று அவள் கோபமும், அழுகையுமாய் நினைத்தாள்...

"ஹாய் தீரன், எப்படியிருக்கீங்க...?"

சிம்மவிஷ்ணுவின் குரலில் அவள் சட்டென்று திரும்பி பார்த்தாள்... அங்குப் பட்டு வேட்டி, சட்டையில் கம்பீரமாக நின்றிருந்தவனைக் கண்டு அவளது விழிகள் மகிழ்ச்சியில் விரிந்தது... அவனும் அவளைப் பார்த்தபடி வந்தான்... ஆனால் அவளைப் போல் அவன் தனது மகிழ்ச்சியை அப்பட்டமாய் வெளிக்காட்டி கொள்ளவில்லை... அடர் பச்சை நிற பட்டுப்புடவையில் அழகுற இருந்தவளின் அழகு அவனைச் சிறிதும் பாதிக்கவில்லை...

நேரே வந்து பவித்ரனிடம் பேசி கொண்டிருந்த சிம்மவிஷ்ணு அதன் பின் அவள் புறம் திரும்பவில்லை... அவளை அழைத்து மனையில் அமர வைத்து நலுங்கு செய்த போது தான் அவன் அவள் புறம் திரும்பினான்... இறுதியாக மீனாட்சி அவனை அழைத்த போது அவன் முதலில் மறுத்தான்...

"நான் எதுக்கும்மா...?"

"நீ தான் கட்டாயம் செய்யணும்..." அவனை வலுக்கட்டாயமாக இழுத்துக் கொண்டு போனார் மீனாட்சி...

அங்கிருந்த சந்தனத்தை எடுத்து அவளது கன்னங்களில் பூசியவன் மெல்லிய குரலில், "எப்படியிருக்க...?" என்று கேட்க...

"நீ எப்போ வந்த...? ஏன் என்னைப் பார்க்க வரலை...?" என்று ஆதங்கத்துடன் அடுத்தடுத்துக் கேள்வி கேட்டவளை அவன் திகைப்புடன் நிமிர்ந்து பார்த்தான்...

"என்னை எதிர்பார்த்தியா...?" ஏனோ தெரியவில்லை அவனது குரல் குழைந்து வந்தது...

"எதிர்பார்க்க எல்லாம் இல்லை... இங்கே வந்திருக்க... என்னைப் பார்க்க வந்திருக்கலாமேன்னு கேட்டேன்..." என்று முகத்தை வெட்டி கொண்டவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"ஏர்லி மார்னிங் வந்தேன்... தூக்கத்தில் இருக்கும் உன்னைத் தொந்திரவு செய்ய வேண்டாமேன்னு பார்க்க வரலை..."

அவனது வார்த்தைகளில் அவளது விழிகளில் விழிநீர் கோர்த்தது...

"இப்போ இவ்வளவு நல்லவனாகப் பேசும் நீ அப்போ மட்டும் ஏன்டா கெட்டவனாகி போன...?" என்று கேட்டவளை கண்டு அவனிடம் பதில் இல்லை...

"என் வீடு, என் அறை, நீ என் அடிமை... நான் எப்போது வேண்டுமானாலும் வந்து அனுபவிக்க எனக்கு ரைட்ஸ் இருக்கு..." என்று கூறியபடி அவளைத் தான் ஆக்கிரமித்த நினைவு எழுந்து அவனைக் கொல்லாது கொன்றது...

இதற்காகத் தான் அவன் இங்கு வருவது இல்லை... அவனுடன் அவள் இருக்கும் தனிமை பொழுதுகள் அவனால் அவள் அடைந்த ரணத்தை வலிக்க வலிக்கக் கீறி

மேலும் காயப்படுத்தும்... அதனாலேயே அவன் அவளை விட்டு விலகி இருந்தான்...

அவளுக்குப் பதில் கூற இயலாது கசந்த முறுவலுடன் அவளது கன்னத்தைத் தட்டியபடி அவன் விலகி சென்றுவிட்டான்... அவள் தான் மனதினை கட்டுப்படுத்த முடியாது அவனை வெறித்துப் பார்த்திருந்தாள்...

அந்த விழா முடிந்ததும் அருந்ததி மகளைத் தன்னுடன் அழைத்துச் செல்ல விருப்பப்பட்டார்... இளவரசி அங்கு இல்லாததால் சிம்மவிஷ்ணு அதற்குச் சம்மதித்தான்...

"நான் அங்கே போகலை..." என்று அடம்பிடித்தவளை கண்டு,

"இப்போ உன் அத்தை அங்கே இல்லை... அதனால் தைரியமாகப் போ..." என்று அவன் கூற... அவள் அவனை இமைக்காது பார்த்திருந்தாள்...

"உன் நல்லதுக்குத் தான் சொல்றேன் பேபி... நீ இங்கே இருந்தா உன்னால் எதையும் யோசிக்க முடியாது... நம்ம குழந்தை பிறந்த பிறகு நீ நிறைய யோசிக்க வேண்டியிருக்கிறதே..."

"ம், ம்... நீ சொல்றது சரி தான்..." என்று தலையை ஆட்டியவள் தனது வீட்டிற்குக் கிளம்ப ஆயத்தமானாள்...

செல்ல மகள் போன்று வீட்டில் வளைய வந்த பெண் செல்வது கண்டு மீனாட்சி சற்று கவலையானார்... சுந்தரபாண்டியன் மட்டும் அவளிடம்,

"உனக்கு நான் துணைக்கு இருக்கேன்... அந்த நம்பிக்கையோடு இரும்மா..." என்க...

அவரது கைகளைப் பற்றிக் கண்ணில் ஒற்றி கொண்டவள் விழி கலங்க, "உங்க பேர குழந்தை பிறந்ததும் நான் உதவி கேட்டு உங்க கிட்ட தான் வருவேன்... நீங்க தான் எனக்கு ஒரு நல்ல வழி காட்டணும் மாமா..." என்க...

அவர் திடுக்கிட்டு போய் மகனை திரும்பி பார்த்தார்... அவனோ உணர்ச்சிகளைத் துடைத்த முகத்துடன் இறுகி போய் நின்றிருந்தான்... அவனை இரக்கத்துடன் பார்த்தவர் உறுதியான குரலில் அவளிடம்,

"கட்டாயம்மா..." என்றார்...

அனைவரிடமும் விடைபெற்று சென்றவளை பார்த்தபடி சிம்மவிஷ்ணு அப்படியே நின்றிருந்தான்... அவனது எதிர்காலம் அவன் கண்முன் படமாக விரிந்தது... ஆனாலும் அதிலிருந்து தப்பிக்க அவன் விரும்பவில்லை... மாறாக விருப்பத்துடன் சிக்கி கொள்ளவே அவன் விரும்பினான்...

அதன் பின்பு சிம்மவிஷ்ணு தனது வேலையில் ஆழ்ந்து போனான்... அதாவது எதிரிகளை நெருங்குவதில் மூழ்கி போனான்... அடி மேல் அடி வைத்து அவர்களை நெருங்கி கொண்டிருந்தான்... அவனது செயலை தடுக்கும் வகையறியாது செல்வரத்தினம், மணிபாரதி இருவரும் இளவரசியிடம் ஆலோசனை கேட்கலாம் என்றால் பத்ரிநாத் அவளிடம் பேச அவர்களை அனுமதிக்கவில்லை... அதனால் அவர்களது தொழில் அதளபாதாளத்திற்குச் சென்று கொண்டிருந்தது...

சரியாக ஒரு மாதம் கழித்து நிஷிலாவிற்குப் பிரசவ வலி வந்து மருத்துவமனையில் சேர்ந்திருக்கிறாள் என்கிற தகவல் கிடைத்தது... சுந்தரபாண்டியன், மீனாட்சி இருவரும் அடுத்த விமானம் ஏறி சென்னை கிளம்பி வந்தனர்...

அதற்குள் அவளைக் காண சென்ற சிம்மவிஷ்ணு அவள் பிரசவ வலியில் துடிப்பதை கண்டு அரண்டு போனவனாய் அவள் அருகே கூடச் செல்லாது தள்ளியே நின்றான்... ஆனால் அவனது விழிகள் அவளையே பார்த்துக் கொண்டிருந்தது... அவளோ வலியில் அவன் வரவை கூட அறியாது கத்தி கதறி கொண்டிருந்தாள்... செவிலிப்பெண் அருகில் நின்று கொண்டு அவளை அடக்கி கொண்டிருந்தாள்...

மனைவி படும் பாட்டைக் காண சகிக்காது அவன் வராந்தாவில் வந்தமர்ந்தான்... தாய்மை என்பது எத்தகைய போற்றலுக்கு உரியது என்பது அந்தக் கணம் அவனுக்குப் புரிந்தது...

இப்படி வலி பொறுத்து பெற்றுக் கொண்ட மகவு மீது பாசம் இல்லாது போன தாயவளை நினைத்து அவனது மனம் இறுகி போனது... தாய்மையை விடத் தன்னலம் பெரிதாக எண்ணிய பேயவள்... அவனது கோபம் கட்டுக்கடங்காது பெருகியது...

அந்நேரம் அவனது பெற்றோர் வந்துவிட்டனர்... அவனது கலங்கிய விழிகள் கண்டு சுந்தரபாண்டியன் ஒரு கணம் அவன் மீது இரக்கம் கொண்டார்... மறுகணம் அவனது செயலில் கோபம் கொண்டு தனது முகத்தைத் திருப்பிக் கொண்டார்...

பெற்றோர் இருவரையும் கலங்க செய்துவிட்டு அவர்களது பெண்ணரசி பெரும் அழுகையுடன் மண்ணுலகில் அவதரித்தாள்...

"மகள் பிறந்திருக்கிறாள்..." என்று அருந்ததி அவனது மகவை அவனது கைகளில் வைத்தார்...

அப்படியே மனைவியின் சாடை கொண்டு பிறந்திருந்த தங்களது மகளைக் கண்டு அவனது விழிகளில் கண்ணீர் துளிர்த்தது... இப்போது மகள் எதிரியின் உருவமாய் அவனது விழிகளுக்குத் தென்படவில்லை... மாறாகத் தூய மனம் படைத்த அவளின் அன்னையைப் போன்று தோன்றி அவனைப் பெருமிதம் கொள்ள வைத்தது...

நல்ல ஆரோக்கியத்துடன் இருந்த மகளைக் கண்டு அவன் அன்று நினைத்தது அப்படியே அவனது காதுகளில் ஒலித்தது... தனது குழந்தை ஊனத்துடன் பிறந்தால் அது தனக்குத் தான் அதிக வலியை தரும் என்பதை இப்போது அந்தத் தகப்பன் உள்ளம் உணர்ந்து கொண்டது...

பழிவாங்க தான் என்றாலும் மகள் அவனது உதிரம் அல்லவா...? தான் ஆடாவிட்டாலும் தனது சதை ஆடும் என்பதற்கேற்ப அவன் மகள் மீது பாசத்தில் உருகி நின்றான்... அந்தக் கணம் மகளைப் பெற்றெடுத்த தனது மனைவியைக் கூட அவன் மறந்து போனான்...

அறைக்கு வந்த நிஷிலாவை காண சிம்மவிஷ்ணு தனது பெற்றோருடன் சென்றான்... அவன் அவள் அருகில் செல்ல கூட இல்லை... அமைதியாகத் தள்ளி நின்று அவளைப் பார்த்திருந்தான்... அவளது முகத்தில் தெரிந்த அமைதியில், தெளிவில் தனக்கான நேரம் நெருங்கி வந்துவிட்டதை அவன் உணர்ந்தே இருந்தான்...

அதே போல் நிஷிலா கணீரென்ற குரலில் பேச துவங்கினாள்...

"மாமா, நீங்க எனக்கு ஒரு உதவி பண்ணணும்..."

"என்ன செய்யணும் சொல்லும்மா...?" சுந்தரபாண்டியன் பாசத்தோடு கேட்டார்... பேத்தியை கண்ட ஆனந்தம் அவரது வார்த்தையில் தெரிந்தது...

"உங்க மகன் கிட்ட டிஎன்ஏ டெஸ்ட் பண்ணிக்கச் சம்மதம் வாங்கணும்..."

கணவனை இமைக்காது பார்த்தபடி அவள் கூற... அவனோ முகத்தில் எந்தவொரு மாறுதலையும் காட்டாது அப்படியே மரம் போல் நின்றிருந்தான்...

எதிர்பாராத ஒன்று நடந்தால் தானே ஏமாற்றம் வருவதற்கு... எதிர்பார்த்த ஒன்று என்பதால் அவன் மௌனமாய் அவளது வார்த்தைகளைக் கிரகித்துக் கொண்டு அமைதி காத்தான்...

"அவனது புறவலியில் உள்ளம் துடிப்பவளே
அவனது அகவலியில் உள்ளம் துடிப்பாயோ?
அவனைத் தேடி தவிக்கும் உன் மனதின்
தவிப்பை உணர்வாயோ?
உன் மகிழ்வும் அவன் தான்...

உன் துயரமும் அவன் தான்...
அவனில்லாது நீயில்லை...
நீ உணரும் போது, அவன்
உன்னை விட்டு தூரமாய்...!!!"

கொல்லும்...!!!

## நிழல் : 23

"நிஷி... என்ன பேசுறோம்ன்னு யோசிச்சு தான் பேசுறியா...?" அருந்ததி தனது மகளை அதட்டினார்...

"தங்கச்சி, நீ சும்மாயிரும்மா... மருமக சொல்ல வர்றதை சொல்லட்டும்..." சுந்தரபாண்டியன் அருந்ததியிடம் கூறியவர் மருமகளிடம்,

"சொல்லும்மா..." என்று அவளை ஊக்குவித்தார்...

அவரைக் கண்டு தலைகுனிந்து கொண்டவள், "இது உங்க மகனோட குழந்தை தான்னு நிரூபிக்க எனக்கு வேறுவழி தெரியலை..." மெல்லிய குரலில் என்றாலும் அவள் தெளிவாக உரைத்தாள்...

அன்று தான் பேசிய வார்த்தைக்கு இன்று அவள் பதிலடி கொடுக்கிறாள் என்பதை உணர்ந்த சிம்மவிஷ்ணு தனது வாயை திறக்கவில்லை... அவன் அவளைப் பார்த்தபடி கைகளைக் கட்டி கொண்டு அமைதியாக நின்றிருந்தான்...

"நிஷாம்மா, இது விஷ்ணு குழந்தை இல்லாம வேறு யாருது...? அவன் தானே உன் கணவன்... இப்படி அபத்தமான கேள்வியை உன் கிட்ட கேட்டது யார்...?" மனம் பொறுக்காது மீனாட்சி படபடத்தார்... அவள் கூறிய விசயம் அவருக்கு அத்தனை அருவருப்பு அளித்தது...

மாமியாரின் வார்த்தைகளில் அவளுக்குக் கண்களைக் கரித்துக் கொண்டு வந்தது... கலங்கிய விழிகளுடன் நிமிர்ந்தவள் தனது வலக்கையை நீட்டி கணவனைச் சுட்டி காண்பித்தாள்...

அதைக் கண்ட மீனாட்சி அதிர்ந்து போய் மகனை பார்த்தார்...

"என்னடா இது...? நிஷா இப்படிச் சொல்கிறாள்... நீ என்ன பண்ணின...? ஒருவேளை கோபத்தில் அவளை ஏதும் திட்டினியா...?" என்று மகனிடம் கேட்டவர் மருமகள் அருகில் வந்தமர்ந்து கொண்டு அவளது முகவாயை பற்றியபடி,

"அவன் ஏதாவது கோபத்தில் அப்படிப் பேசியிருப்பான்... அதை எல்லாம் மனசில் வச்சிக்காதே... நீ அவனோட மனைவி... இது அவனோட மகள்... இதை டிஎன்ஏ டெஸ்ட் பண்ணி தான் நிரூபிக்கணுமா...? அவனைப் பெத்த அம்மா நான் சொல்றேன்... என்னை நீ நம்பும்மா..." என்று ஆற்றாமையுடன் பேசியவரை கண்டு அவளது இதழ்கள் அழுகையில் பிதுங்கியது...

இதற்கு எதற்கும் அசைந்து கொடுக்காது சிம்மவிஷ்ணு கல்லென நின்றிருந்தான்...

"உங்களை நம்பாமலா அத்தை...?" தனது தோள் சாய்ந்து கண்ணீர் உகுத்தவளை அவரது கரம் ஆறுதலாய் அணைத்துக் கொண்டது...

"ஆனா உங்க மகன் செஞ்சது..." என்று நிறுத்தியவள் கண்ணீரோடு கணவனை ஏறிட்டு பார்த்தாள்...

அடுத்து அவள் பேச போவதை உணர்ந்து அவனது இதயம் நின்று துடித்தது... அன்னையின் பார்வையில் அவன் குற்றவாளியாகப் போகிறான்... யாரையும் நினையாது தனது குறிக்கோள் ஒன்றே மதி என்று அவன் செய்த ஒரு காரியம் இப்போது அவனை அவனது அன்னையின் பார்வையில் இருந்து மிகவும் கீழிறங்க செய்யப் போகிறது... இதுவே பெரும் தண்டனை தான்... இது தனக்குத் தேவை தான் என்பது போல் அவன் வலியுடன் மனைவியைப் பார்த்திருந்தான்...

"உங்க மகன் என்னை எதுக்குத் தெரியுமா கல்யாணம் பண்ணிக்கிட்டார்...? பழிவாங்குவதற்காக..."

அவள் கூறியதை கேட்டு உள்ளம் பதைபதைக்க மீனாட்சி தனது மகனை பார்த்தார்... அவனோ தலைகுனிந்து நின்றிருந்தான்... பின்பு அவர் தனது கணவரை பார்க்க... சுந்தரபாண்டியன் 'ஆம்' என்பது போல் தலையாட்டினார்...

"நீங்க ஏன் என்னிடம் சொல்லலை...?" என்று ஆதங்கத்தோடு கேட்டவரை சிம்மவிஷ்ணு சரேலென்று நிமிர்ந்து பார்த்தான்...

"அதுக்குப் பிறகு தினம் தினம் எனக்கு நரக வேதனை தான்... கேட்டா, என்னை விபச்சாரின்னு சொன்னார்..."

"சிவசிவா..." அவளது வேதனையை நினைத்து அவர் மனம் கலங்கி போனார்... பெண்ணான அவருக்கு அவளது வேதனை புரிந்தது...

"என்னைப் பெண்ணே இல்லைன்னு சொன்னார்... நல்லவேளை இவள் என் வயிற்றில் உதித்து என் மானத்தைக் காப்பாத்தினாள்..." என்றவளது கை உறங்கி கொண்டிருந்த மகளை வருடி கொடுத்தது...

"குழந்தை உண்டானதும் நான் வேண்டாம்ன்னு போனவர் தான்... பிறகு ஐஞ்சு மாசம் கழிச்சு வந்து என்னை என் வீட்டில் விட்டுட்டு போயிட்டார்... என்னை ஏன் கடத்தணும்...? என்னை ஏன் கல்யாணம் பண்ணணும்...? ஒவ்வொரு நாளும் என்னை ஏன் கற்பழிக்கணும்...? ஏன் இப்படிச் செஞ்சார்...? நீங்களாவது அவர் கிட்ட கேட்டு சொல்லுங்க... நான் உண்டு, என் படிப்பு உண்டுன்னு சந்தோசமா இருந்தேனே... என் வாழ்க்கையை ஏன் உங்க மகன் சீரழிச்சார்...? படிக்கிற வயசில் இதோ இப்படிக் குழந்தையைத் தூக்கி சுமக்க வச்சியிருக்கிறாரே... ஏன் அத்தை...? அவருக்கு நான் என்ன கெடுதல் செஞ்சேன்...? ஏன் என் வாழ்க்கையை அழிக்கணும்...? இப்போ நான் என்ன பண்றது...? என்னைப் பாதுகாக்கிறதா...? இல்லை என் குழந்தையைப் பாதுகாக்கிறதா...? என்ன செய்யறதுன்னு எனக்குத் தெரியலை...?" என்று கண்ணீர் விட்டவளை கண்டு அனைவரும் வேதனை அடைந்தனர்...

மீனாட்சி ஆவேசத்துடன் மகன் அருகில் வந்து, "பதில் சொல்லுடா... அவள் கேட்கிற கேள்விகளுக்கு எல்லாம் பதில் சொல்லுடா...? நீ செஞ்ச பாவத்துக்கு எல்லாம் என்ன சப்பைக்கட்டு கட்ட போற...? வாயை திறந்து பேசுடா..." என்று சராமாரியாக அவனது கன்னத்தில் அறைந்தார்...

அவருக்கும் அவன் மௌனத்தையே பதிலாகக் கொடுத்தான்... ஆனால் அவனது முகத்தில் தெரிந்த வேதனையில் அந்த அன்னையின் கரம் அப்படியே இறங்கியது... அவரும் மகனை எண்ணி வேதனை கொண்டார்...

"இதுக்கு நீ என் வயித்தில் பிறக்காம இருந்திருக்கலாம்..." என்று அவர் மனம் குமுறினார்... அவன் விழிகளில் வலியுடன் அவரைப் பார்த்தான்...

பவித்ரன் கூட எதுவும் பேச முடியாது அமைதியாகி போனான்... அருந்ததியோ மகளை நினைத்துக் கண்ணீர் வடித்தார்... செல்வரத்தினம் மட்டும்,

"இவனை என்ன பண்ணணும்ன்னு சொல்லு நிஷா...? நான் அதைச் செய்யறேன்..." என்று கோபத்தோடு மீசையை முறுக்கினார்... தொழிலில் வேறு அவனது தொல்லை தாங்க முடியவில்லை அல்லவா... அதனால் இது தான் சந்தர்ப்பம் என்று அவர் களத்தில் இறங்கினார்...

"அதெல்லாம் வேண்டாம் அண்ணா..." என்று அவரைத் தடுத்த மீனாட்சி மருமகளிடம்,

"இங்கே பாரு நிஷாம்மா... நடந்தது எல்லாம் கெட்ட கனவா நினைச்சு மறந்திரு... இப்போ தான் விஷ்ணு உன்னை நல்லா பார்த்துக்கிறான் இல்லையா...? அவனை மன்னிச்சு ஏத்துக்கம்மா... உங்களுக்காக இல்லைன்னாலும் உங்க மகளுக்காகவாவது நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து வாழணும்..." என்று கண்ணீருடன் கெஞ்சலாய்க் கூறினார்...

தவறு முழுக்க முழுக்க மகனிடம் இருந்த போதும் அவரால் அவனைத் தண்டிக்க முடியவில்லை...

"உங்க மகன் ஊருக்கு நல்லவர் தான்... நான் இல்லைங்கல்ல..." ஏனெனில் அவள் மதுரையில் இருந்த நாட்களில் சிம்மவிஷ்ணுவை பற்றி நன்கு அறிந்திருந்தாள்...

"ஆனா எனக்கு...? என்னைக் கற்பழிச்சவனோட என்னைச் சேர்ந்து வாழ சொல்றீங்களா...? தினம் தினம் இந்த நரக வேதனையை அனுபவிக்கச் சொல்றீங்களா...? ம்ஹூம் என்னால் முடியாது..." என்று முடிவாக மறுத்தவளை கண்டு மீனாட்சி உள்ளம் உடைந்து போனார்...

"உன் முடிவு என்னம்மா...?" சுந்தர்பாண்டியனின் குரல் இடையிட்டுக் கம்பீரமாக ஒலித்தது...

"தெரியலை... இவள் உங்க மகனோட குழந்தை தான்னு சட்டப்படி நிரூபிக்கணும்... அப்புறம்...?" என்றவள் மேலே பேசாது தலைகுனிந்து கொண்டாள்...

"அப்புறம் என்னம்மா...? சொல்லு..."

"அவங்க எனக்கு இழைச்ச அநீதிக்குத் தண்டனை அனுபவிக்கணும்..." என்றாள் உறுதியான குரலில்...

"நிச்சயம் நீ சொன்னது எல்லாம் நடக்கும்... உனக்கு நான் துணையா இருப்பேன்..." என்ற சுந்தரபாண்டியனின் பார்வை மகனை உறுத்துப் பார்த்தது... அவளின் மனதை உணர்ந்து தான் அன்று அவன் அப்படிக் கேட்டதோ என்று அவருக்கு யோசனையாய் இருந்தது...

"அவ்வளவு தானா இன்னும் இருக்கிறதா...?" என்று கேட்டபடி நிமிர்ந்த சிம்மவிஷ்ணுவை எல்லோரும் கடுப்புடன் பார்த்தனர்...

பழையது எல்லாம் ஞாபகப்படுத்தியதில் பவித்ரன் கூட அவனை முறைத்தான்...

சிம்மவிஷ்ணு யாரையும் கண்டு கொள்ளாது மனைவி அருகில் வந்தவன் குழந்தையைக் கொஞ்சும் சாக்கில் குனிந்து,

"நானா நினைச்சா மட்டும் தான் என் தலைவிதியை மாத்த முடியும்... நீயில்லை, என் அப்பன் நினைச்சா கூட என் தலைவிதியை மாத்த முடியாது..." என்று உறுதியாகக் கூற...

அவள் அச்சத்துடன் அவனைப் பார்க்க... அதைக் கண்டு அவனது இதழ்கள் தானாகப் புன்னகையில் விரிந்தது...

"பெர்மிசன் கிராண்ட்டட்... அதாவது என் தலைவிதியை மாத்தி எழுத உனக்கு அனுமதி கொடுத்தாச்சு... இப்பவும் நான் நினைப்பதால் மட்டுமே உன்னால் இது சாத்தியமாகிறது... இது எல்லாம் உனக்காக... உனக்காக மட்டுமே..." என்றவன் பின் தலை நிமிர்ந்து நெஞ்சை நிமிர்த்தியபடி நின்றவன் எல்லோரையும் பார்த்தபடி,

"நிலா என்ன செய்ய நினைத்தாலும் நான் கட்டுப்படுகிறேன்... அது எதுவாக இருந்தாலும்..." என்றவன் அதற்கு மேல் அங்கு நிற்கவில்லை... விறுவிறுவென அந்த அறையை விட்டு வெளியேறி விட்டான்...

இரு வீட்டாரும் கதிகலங்கி போயிருந்தனர்... மீனாட்சி பேத்தியை ஒரு முறை உச்சிமுகர்ந்தவர் மருமகளை இறுக அணைத்து விட்டு ஒன்றும் பேசாது வெளியேறினார்... ஆயிரம் வார்த்தை பேசாத அன்பை அவரது ஒற்றை அணைப்பு அவளுக்கு உணர்த்தியது... அவரது அன்பில் அவளது விழிகள் கலங்கியது...

"உனக்குத் தேவையானதை நான் செஞ்சு தந்திட்டு தான் சென்னையை விட்டு போவேன்... நீ எதுக்கும் கவலைப்படாதே..." என்று அவளுக்கு ஆறுதல் கூறிய சுந்தரபாண்டியன் தானும் கிளம்பி சென்றார்...

எல்லோரும் சென்றதும் பவித்ரன் நிஷிலா அருகே வந்தான்...

"உன் வாழ்க்கையைப் பத்தி யோசிச்சு பார்த்தியா நிஷிம்மா...?"

அவள் அமைதியாகக் குழந்தையைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்...

"நீ அவன் கூடப் போனதும் உங்களுக்குள் எல்லாம் சரியாகிருச்சுன்னு நான் நினைச்சேன்... மனசில் இவ்வளவு கஷ்டத்தை வச்சிட்டு நீ ஏன் அவன் கூடப் போன...? அப்பவே நீ என் கிட்ட சொல்லியிருந்தா நான் ஏதாவது செய்திருப்பேனே..." என்றவனை நிமிர்ந்து பார்த்தவள் அவன் கடைசியாகக் கேட்டதுக்கு மட்டும் பதில் கூறினாள்...

"அவனா உண்மையைச் சொல்லாது நாம உண்மையை வரவழைக்க முடியாது அத்தான்... அவன் கட்டுப்படுவது அவனுடைய பெற்றோரிடம் மட்டும் தான்... அதான் மாமா கிட்ட சொன்னேன்..." என்றவள்,

"நீங்களும், நானும் அவனை எதிர்த்து ஒண்ணும் பண்ண முடியாது அத்தான்... எல்லாவற்றையும் மாற்றி அமைக்கும் வல்லமை படைத்தவன் அவன்..."

"ஏன் நம்மால் முடியாதா...?" என்று கோபத்தோடு கேட்ட பவித்ரனிடம்,

"கிட்டத்தட்ட ஏழு மாசமா இதே தமிழ்நாட்டில் சென்னையில் இருந்து சில மணி தூர பிரயாணத்தில் இருக்கும் மதுரையில் தான் அவன் என்னைக் கடத்தி வச்சிருந்தான்... அப்படி இருந்தும் உங்களால் என்னைக் கண்டுபிடிக்க முடிந்ததா...? இல்லையே... அவனை லேசில் எடை போட வேண்டாம் அத்தான்... அவனை எதிர்த்துக் கேஸ் போட்டாலும் எல்லாத்தையும் உடைச்சிட்டு அவன் வெளிவருவான்... இவ்வளவு ஏன் இது அவனோட குழந்தை இல்லைன்னு கூடச் சொல்லுவான்..."

அவள் கூறுவது உண்மை தானே... முன்பு அவளை வீட்டில் விட்டு விட்டுச் சென்ற போது அவன் அப்படித் தானே கூறினான்... அதனால் பவித்ரன் மௌனம் காத்தான்...

"முதலில் அவன் இந்தக் குழந்தையை ஊரறிய அவன் மகள்ன்னு ஒத்துக்கிடட்டும்... அதுக்குப் பிறகு தான் நான் மேற்கொண்டு முடிவு எடுக்க முடியும்..."

"என்ன செய்யப் போற நிஷிம்மா...?"

"அத்தான், நாம செக்கை பேங்க்கில் போட்டுப் பணம் எடுத்தால் அது நமது பேலன்ஸ் ஷீட்டில் வரும் தானே..."

"ஆமாடா, செக் நம்பரோட வரும்... ஏன் கேட்கிற...?" என்று கேட்டவனிடம் அவள் ஒன்றும் கூறவில்லை...

வெகுநாட்களாக மனதில் உருபோட்டுக் கொண்டிருந்த திட்டங்களுக்கு அவள் வடிவம் கொடுக்க ஆரம்பித்தாள்...

நிஷிலாவை சொல்லி குற்றம் இல்லை... அவள் இன்னமும் மனதளவில் சிறுபெண் தான்... அவளது மனதினை தொடாது உடலை மட்டும் தொட்ட சிம்மவிஷ்ணுவால் அவளுள் ஆழ இறங்க முடியவில்லை... அதனால் விளைந்ததே இந்த நடவடிக்கை... அதுவும் குழந்தையைப் பார்க்க பார்க்க அவளுக்கு விருப்பம் இல்லாது அவன் தன்னை ஆட்கொண்ட நரகக் கணங்களே நினைவில் எழுந்து அவளைக் கொல்லாமல் கொன்றது... அந்த நினைவே அவளை அவனுக்கு எதிராகத் தூண்டிவிட்டது...

அவன் அவளுக்குத் தனது வீட்டில் அடைக்கலம் கொடுத்தவன் தான்... ஆனாலும் அவளால் அவனுக்குத் தனது மனதில் அடைக்கலம் கொடுக்க முடியவில்லை...

வீட்டிற்கு வந்த மீனாட்சி மகனை பார்க்க கூடச் செய்யாது கணவனிடம், "இனி ஒரு நொடி கூட இந்த வீட்டில் என்னால் இருக்க முடியாது... இவன் என் பையனே இல்லை..." என்று கோபத்தில் கத்தினார்...

அதற்கு எல்லாம் அசராது சிம்மவிஷ்ணு தனது அலைப்பேசியைப் பார்த்துக் கொண்டிருந்தான்... அவனை ஒரு பார்வை பார்த்த சுந்தரபாண்டியன்,

"நாம தங்குவதற்கு வேறு வீடு ஏற்பாடு பண்ணிட்டேன்... மருமகளுக்குத் தேவையான உதவி செய்து கொடுத்துட்டு தான் நாம ஊருக்கு கிளம்பறோம்..." என்று உறுதியான குரலில் கூற...

அதைக் கேட்டு தனக்குள் விரக்தியாய் சிரித்துக் கொண்டவன் வெளியில் எதையும் காட்டி கொள்ளவில்லை... மீனாட்சி தான் மனம் தாங்காது அவன் முன் வந்து நின்று,

"நான் தான் உன்னைப் பெத்தேனான்னு எனக்குச் சந்தேகமா இருக்கு...? உன் புத்தி ஏன்டா இப்படிக் கேடுகெட்டு போச்சு...? ஒரு பொண்ணோட வாழ்க்கையை அழிச்சிருக்கியே... இந்தப் பாவத்தை எத்தனை தலைமுறையிலும் தீர்க்க முடியாதே... கங்கையில் எத்தனை தடவை மூழ்கி எழுந்தாலும் போக்க முடியாதே..." என்று கோபமாய்ப் புலம்ப...

அவனோ இறுகி போய் அமர்ந்திருந்தான்... ஒரு வார்த்தை பதில் கூறவில்லை...

"ஷ், மீனா... அமைதியா இரு... நீ கேள்வி கேட்டுப் பதில் சொல்லும் நிலையை உன் மகன் தாண்டிவிட்டான்... நாம கிளம்பலாம், வா..."

இருவரும் மகனிடம் விடைபெறாது கிளம்பி சென்றனர்... அவர்கள் சென்றதும் தான் சிம்மவிஷ்ணு நிமிர்ந்தான்... தாய் கூறிய வார்த்தைகள் அவனது இதயத்தைப் பதம் பார்த்ததில் அவனது விழிகள் வலியில் கசிந்தது... இனி அவனுக்கு இது தான் நிரந்தரம்... இன்று அவனது பெற்றோர், நாளை இந்த ஊர், உலகம்... இது எல்லாவற்றையும் அவன் கடந்து வர வேண்டும்... வெற்றி பெற வேண்டும்...

குறுகிய காலத்தில் தனது குறிக்கோளை எப்படி அணுகுவது? என்று அவன் திட்டமிட ஆரம்பித்தான்... அவன் நிஷிலாவின் தண்டனையைப் பற்றிப் பெரிதாக அலட்டி கொள்ளவில்லை... அது முடிவு செய்யப்பட்ட ஒன்று...

அதனால் அவன் அதைப் பற்றிக் கவலை கொள்ளாது அடுத்தடுத்த காரியங்களில் தனது கவனத்தைச் செலுத்தினான்...

நிஷிலா விருப்பப்பட்டது போல் 'டிஎன்ஏ' பரிசோதனை மூலம் அவளது மகள் சிம்மவிஷ்ணுவின் வாரிசு தான் என்று அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டது... அதற்கு அடுத்து அவள் நீதிமன்றத்தை அணுகினாள்... தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கிடைக்க வேண்டி...

விசாரணைக்கு அழைத்து வரப்பட்ட இடத்தில் சிம்மவிஷ்ணு கைது செய்யப்பட்டான்... அவனுக்கு எதிராக, அவளுக்கு ஆதரவாக மருதாணி மற்றும் பெண் மருத்துவர் அங்கு வந்து ஆஜரானார்கள்... மருதாணி சுந்தரபாண்டியனின் ஒரு பார்வைக்குப் பயந்து அனைத்து உண்மையையும் கூறிவிட்டாள்...

மருத்துவர் மட்டும் முதலில் முரண்டு பிடித்தார்... சிம்மவிஷ்ணுவை தெரியவே தெரியாது என்று சாதித்தார்... அவரது வங்கி கணக்கை காட்டி அதில் சிம்மவிஷ்ணு கொடுத்த காசோலையில் இருந்து பணம் பெற்றிருப்பதை நிரூபித்ததும் தான் அவர் அடங்கினார்... அவர் இரு முறை நிஷிலாவை பரிசோதித்ததை ஒத்துக் கொண்டார்... அவளுடன் சிம்மவிஷ்ணுவும் உடன் இருந்ததை அவர் அங்கே கூறினார்... எல்லாமே அவனுக்கு எதிராக வலுவான சாட்சியாக அமைந்தது...

அவன் எதிர்பார்த்த ஒன்று தான் என்றாலும் இவ்வளவு விரைவில் எதிர்பார்க்கவில்லை... அவனது குறிக்கோள் பாதித் தானே நிறைவேறியிருக்கிறது... வெண்ணெய் திரண்டு வரும் வேளையில் தாழி உடைந்த கதையாகி போனது அவனது நிலை... அதை நினைத்து அவனது மனதில் வருத்தமும், கோபமும் ஒருசேர எழுந்தது... தனது இயலாத நிலையை எண்ணி அவன் மனம் குமைந்து போனான்...

என்ன வருத்தம் மனதினை வாட்டிய போதும் அவன் எதையும் மறுத்து பேசவில்லை... மௌனமாகத் தனது

தவறினை ஒத்துக் கொண்டான்... அவனாக மனமுவந்து ஏற்றுக் கொண்டது தானே... அதனால் அவன் மௌனத்தின் பின் தனது மனக்குமுறல்களை மறைத்துக் கொண்டான்...

நீதிமன்றம் தனது தீர்ப்பினை அடுத்த மாதம் ஒத்தி வைத்தது...

சிம்மவிஷ்ணுவை கைது செய்து கூட்டி கொண்டு போகும் போது சுந்தரபாண்டியன் கூடச் சிறிது கண்கலங்கி விட்டார்... அவனைச் சீரும் சிறப்புமாய், அருமை பெருமையாய் பெற்று வளர்த்தது இதற்குத் தானா? என்று வேதனையில் முகம் கசங்க அவர் நின்றிருந்தார்... மீனாட்சி நிலையோ சொல்லவும் வேண்டாம்... தனது மனஸ்தாபத்தினை மறந்து அவனை அணைத்துக் கொண்டு அழுதார்... அவன் அவரது ஒரே மகன், செல்ல மகன் இல்லையா...?

"ஏன்டா உன் புத்தி இப்படிப் போச்சு...? அப்படி என்னடா அந்தச் சின்னப் பொண்ணு மேல உனக்குக் கோபம்...?" ஆதங்கத்துடன் கத்தியவருக்குப் பதில் கூற முடியாது அவன் தலைகுனிந்தான்...

அவனது ஆழ்மனதின் ரணத்தை யாரிடமும் கூற அவன் விரும்பவில்லை... அப்படியே அவன் கூறினாலும் யாரும் அதை நம்புவார்களா? என்று அவனுக்குத் தெரியவில்லை... அதனால் அனைவருக்கும் அவன் மௌனத்தையே பதிலாகக் கொடுத்தான்...

அவனது சித்தப்பா மகன் மாதவன் வேறு அங்கு வந்து நின்று கொண்டு அவனை வெறுப்பேற்றினான்...

"என்னமோ நல்லவன் மாதிரி நடிச்ச...? கடைசியில் நீ என்னை விடப் பொறுக்கியா இருந்திருக்க... என்னை மாதிரி வெளிப்படையா உள்ளவனைக் கூட நம்பலாம்... ஆனா உன்னை மாதிரி அமுக்குணிகளைத் தான் நம்ப முடியாது..." என்று கேலி பேசியவனைச் சிம்மவிஷ்ணு ஒரு பார்வை பார்த்ததில் அவன் தனது பெரியப்பாவின் பின் மறைந்து கொண்டான்...

ஜீப்பில் ஏறும் முன் சிம்மவிஷ்ணு மனைவியைத் திரும்பி பார்த்தான்... அந்நேரம் அவளும் அவனைத் தான் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள்... அவனுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்கத் துடித்தவள் இப்போது அவன் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்வதைக் கண்டு கண்கலங்கி நின்றாள்... என்ன செய்வது என்று தெரியாது அவள் அலைபாயும் மனதோடு அவனைப் பார்த்திருந்தாள்... அவளது உணர்வினை அவளது விழி வழியே அவன் படித்தானோ என்னமோ...! மெல்லிய கீற்றாய் அவனது இதழ்களில் புன்னகை மின்னி மறைந்தது...

இதை நினைத்து தானே அவன் மறுகியது... தன்னை விட அவள் தான் அதிகம் பாதிக்கப்படப் போகிறாள் என்று...

'உனக்குத் தண்டனை கொடுக்கக் கூடத் தெரியலை பேபி...' என்று அவன் அவளுக்காகப் பரிதாபப்பட்டான்...

"நிஷிம்மா போகலாம்..." பவித்ரன் அழைத்ததும் தான் அவள் சுயவுணர்வு அடைந்து சுற்றுப்புறத்தை பார்த்தாள்... சிம்மவிஷ்ணுவை காணாது அவள் விழிகளால் அவனைத் தேடினாள்...

"அவன் போய் ஐஞ்சு நிமிசமாகுது..." என்ற பவித்ரன் அவளை அழைத்துக் கொண்டு காரை நோக்கி நடந்தான்...

காரில் வரும் போதும் அவள் அதிகம் பேசவில்லை... தனக்குள் யோசித்தபடி வந்தாள்... வீட்டிற்கு வந்ததும் மகளைக் கண்டதும் மழலையின் புன்சிரிப்பில் அவள் தன்னை மறந்து போனாள்...

அதன் பிறகு கடந்த நாட்களில் அவள் தனது மகள் உண்டு, தனது படிப்பு உண்டு என்று குறுகிய வட்டத்தில் வாழ பழகி கொண்டாள்... கேட்ட கேள்விக்கு மட்டும் பதில்... அநாவசிய பேச்சு என்பது அவளிடம் இருந்து மறைந்து போனது... அவளது மனதில் என்ன இருக்கிறது? என்று யாருக்கும் தெரியவில்லை... பட்டாம்பூச்சியாய் துள்ளி திரிந்த அந்த நிஷிலாவை எல்லோரும் எதிர்பார்த்தனர்... ஆனால் அவள் தனது கூட்டினை விட்டு வெளியில் வரவில்லை...

சிம்மவிஷ்ணு சிறையில் யாருடனும் அதிகப் பேச்சுக் கிடையாது... தான் உண்டு தன் வேலை உண்டு என்றிருந்தான்... சில சமயம் மிகவும் யோசிக்கும் தருணங்களில் அவனுக்குத் தலைவலி வரும்... தாங்கொண்ணா தலைவலியில் அவன் துடிக்கும் போது அவனுடன் இருந்தவன் அவனுக்குப் போதை பொருளை உபயோகப்படுத்த கற்றுக் கொடுத்தான்... மாத்திரை இல்லாததால் அவனும் வேறுவழியின்றி வலி தாங்காது அதை உட்கொண்டான்... சிறிது நேரத்தில் அவன் வலி மறந்து, தன்னை மறந்து காற்றில் உல்லாசமாக மிதக்க ஆரம்பித்தான்...

அன்று ஆரம்பித்தது அவனது போதை பழக்கம்... அவனது தலைவலிக்கு மட்டுமல்லாது அவனது மனவலிக்கும் அது அருமருந்தாகி போனது... அதன் தாக்கத்தில் அவன் இளவரசியை மறந்தான், நிஷிலாவை மறந்தான்... இவ்வளவு ஏன் தனது குட்டி மகளைக் கூட மறந்தான்... அவனுக்கு மட்டுமான தனி உலகில் அவன் மட்டுமே தனித்திருந்தான் மகிழ்வோடு...

ஒருநாள் பவித்ரன் நிஷிலாவிடம் வந்து குழந்தைக்குப் பெயர் வைக்க வேண்டும் என்று கூற... அவள் சிறிதும் யோசிக்காது,

"ஆதிரை..." என்றாள்...

"முடிவே பண்ணிட்டியா...?"

"ம்..." என்றவள் வேறு ஒன்றும் பேசவில்லை...

அவன் சென்றதும் மகளை மடியில் கிடத்தியபடி அவளைப் பார்த்து கொண்டிருந்தாள்... இந்தப் பெயரை தேர்ந்தெடுத்தற்கான காரணம் அவள் மட்டுமே அறிவாள்...

ஆதிரை என்பவள் ஒரு வியாபாரியின் மனைவியாவாள்... ஒரு நாள் வியாபார விசயமாக அவன் கப்பலில் சென்ற போது கடல் சீற்றம் காரணமாக அவன் இறந்துவிட்டதாக அனைவரும் கூற... அதை உண்மை என்று நம்பி கணவன்

இல்லாத உலகில் வாழ விருப்பம் இல்லாது அவள் தன் உயிரை மாய்த்துக் கொள்ள எண்ணி தீயில் இறங்கினாள்... ஆனால் அவளின் தூய்மை கண்டு தீ அணைந்து விட்டதாம்... இதை மணிமேகலை காவியத்தில் படித்ததில் இருந்து அவளுக்குத் தனது மகளுக்கு இந்தப் பெயரை சூட்ட வேண்டும் என்கிற ஆசை வந்துவிட்டது...

தன்னைப் போல் அல்லாது கற்பு நெறியில் களங்கம் இல்லாது அவள் வாழ வேண்டும் என்று அவள் மகளுக்கு இந்தப் பெயரை ஆசையாகச் சூட்டினாள்...

*************************

'நீட்' பரீட்சை எழுதி முடித்துக் கொண்டு வந்த நிஷிலாவை அழைத்துச் செல்ல வந்திருந்த பவித்ரன் அவளிடம்,

"எக்சாம் எப்படிப் பண்ணின...?" என்று கேட்க...

"நல்லா பண்ணியிருக்கேன் அத்தான்..."

"ரொம்பச் சந்தோசம் நிஷிம்மா..." என்றவனிடம்,

"அத்தான், நான் மெடிக்கல் நார்த் சைட் போய்ப் படிக்க விரும்பறேன்..." என்க...

"ஏன்...?" என்று அவன் திகைப்பாய் வினவினான்...

"எனக்கு ஒரு மாற்றம் வேணும் அத்தான்..."

அதைக் கேட்டு அமைதியாக இருந்தவன், "பேபியை என்ன பண்ண போகிற...?" என்று கேட்க...

அவனது 'பேபி' என்றழைப்பில் அவளுக்குச் சிம்மவிஷ்ணு ஞாபகம் வந்தது... கண்களைக் கரித்துக் கொண்டு வர அவள் வெளிப்பக்கம் திரும்பி வேடிக்கை பார்க்கலானாள்... அவள் விரும்பிய தண்டனையை அவனுக்கு வாங்கிக் கொடுத்த பின்பும் அவளால் நிம்மதியாக இருக்க முடியவில்லை... ஒவ்வொரு நொடியும் மனம் நிம்மதியில்லாது தவிக்கிறதே...

"பேபியை என்ன பண்ணலாம் நிஷிம்மா...?" பவித்ரனின் அழுத்தமான குரலில் திடுக்கிட்டு திரும்பியவள்,

"என் கூடக் கூட்டிட்டு போறேன்..."

"எப்படித் தனியா பார்ப்ப...?"

"க்ரஷ்ல விட்டு பார்த்துக்குவேன்..."

"அப்போ நாங்க எல்லாம் எதுக்கு இருக்கோம்...?" அவன் கோபத்தோடு கேட்க...

"எனக்கு இங்கே இருந்து போகணும் போலிருக்கு... அம்மா எப்போதும் என் வாழ்க்கையை நினைச்சு அழுதுக்கிட்டே இருக்காங்க... அப்பா, சித்தப்பா எப்போதும் அவனைப் பத்தி திட்டி பேசிக்கிட்டே இருக்காங்க... எனக்குப் பழைய வாழ்க்கையை மறந்து நிம்மதியா வாழணும்..." என்றவள் அவனது அன்னையைப் பற்றிய பயத்தை அவனிடம் கூறவில்லை...

"நான் உன் கூடத் துணைக்கு வர்றேன்..."

"வேண்டாம்... உங்களைப் பார்க்க வர்றேன்னு எல்லோரும் என்னை வந்து தொந்திரவு பண்ணுவாங்க..." என்று அவசரமாக மறுத்தவளை கண்டு அவன் புரியாது பார்த்தான்...

"நான் எங்கே இருக்கேன்னு யாருக்கும் சொல்ல வேண்டாம்..."

"யாருக்கும் சொல்லாம உன்னைக் கடத்திட்டுப் போகச் சொல்லுறியா...?" என்று கேலி செய்து சிரித்தவனைக் கண்டு அவளது உடல் நடுங்கியது... அவளையும் அறியாது சிம்மவிஷ்ணு தன்னைக் கடத்தியது அவளது ஞாபகத்தில் எழுந்தது...

"நாளைக்கு ஃபைனல் ஜட்ஜ்மென்ட் இருக்கு..."

"ம், தெரியும் அத்தான்..." கைவிரல்களை ஆராய்வது போல் குனிந்து கொண்டவளின் விழிகளில் கண்ணீர்

நிரம்பியது...

அவளுக்கு நிரம்பப் பயமாக இருந்தது... அவனுக்கு என்ன மாதிரியான தண்டனை கிடைக்கும் என்று... அவனை விட அவள் தான் அதிகம் பயந்தாள்... வீட்டிற்கு வந்ததும் மகளை அணைத்துக் கொண்டு அமைதியாக வலம் வந்தாள்...

அவள் அவன் செய்த கொடிய தவறுக்கு தான் தண்டனை வழங்கிட நினைத்தாளே ஒழிய அவனுக்கு அல்ல... அவனை நினைத்து அவளது மனம் மறுகி போனது...

மறுநாள் நீதிமன்றத்தில் சிம்மவிஷ்ணுவை கண்ட போது நிஷிலா அதிர்ந்து போனாள்... அவள் மட்டுமல்ல அவனது பெற்றோரும் தான்... சவரம் செய்யாத முகத்துடன், கண்களில் கருவளையம் விழுந்து, உடல் மெலிந்து அவனது உருவம் எப்படியோ மாறிப் போயிருந்தது... சிம்மம் போன்று கம்பீரமாக வலம் வந்தவன் இவன் இல்லை...

நிஷிலா, மீனாட்சி வெளிப்படையாகக் கண்ணீர் வடித்தனர் என்றால், சுந்தரபாண்டியன் மனதிற்குள் இரத்த கண்ணீர் வடித்தார்...

"இப்போ உனக்குச் சந்தோசமா நிஷா...? இதுக்குத் தான் காத்திருந்தியா...?" மீனாட்சி அவளை அணைத்துக் கொண்டு அழுதார்...

"அத்தை, அவர் பண்ணியது தப்பு தானே... அவரது தப்புக்கு தான் தண்டனை கொடுக்க நினைச்சேன்... ஆனா அவரை இந்தளவுக்குப் பாதிக்கும்ன்னு நான் நினைக்கலை..." என்று அவளும் கண்ணீர் வடித்தாள்...

சிம்மவிஷ்ணுவின் குற்றம் நிரூபிக்கப்பட்டது... சாட்சிகளை விட அவனே அனைத்தையும் ஒத்துக் கொண்டான்... இரு மாதங்களாகச் சிறு பெண்ணை உடல்ரீதியாகத் துன்புறுத்தியதற்காக அவனுக்கு அதிகப்பட்ச தண்டனையாகப் பத்து ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது... பொதுவாகக் கற்பழிப்பு வழக்கில் ஏழு ஆண்டுகள் தான் சிறை தண்டனை வழங்கப்படும்... இந்த

வழக்கில் ஆள் கடத்தல், வலுக்கட்டாயமாக மிரட்டி திருமணம் புரிந்தது என்று பல்வேறு வழக்குகள் அவன் மீது பாய்ந்து தண்டனை காலத்தை மேலும் நீட்டித்திருந்தது...

தண்டனையை எதிர்க்காது அமைதியாக ஏற்றுக் கொண்டு வெளியில் வந்த சிம்மவிஷ்ணுவை சுந்தரபாண்டியன்,

"விஷ்ணு..." என்று நா தழுதழுக்க அழைத்தார்...

அவனுக்கும் கண்கள் கலங்கியது... உதடுகள் ஏதோ சொல்ல துடித்தது... ஆனால் வார்த்தை வரவில்லை...

"மேல்முறையீடு பண்ணவாப்பா...?" என்று கேட்டவரை கண்டு அவன் ஆச்சிரியமாகப் பார்த்தான்...

'வேண்டாம்' என்பது போல் அவன் தலையசைக்க... அவனது மௌனம் அவரது மனதினை வாள் கொண்டு அறுக்க, அவனை அணைத்துக் கொண்டு அவர் கதறிவிட்டார்...

"நீ செஞ்ச தப்புக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தாச்சு... போதும்டா... இத்தோடு எல்லாம் போதும்... மேல்முறையீடு செஞ்சு எப்படியாவது உன்னை வெளியில் கொண்டு வர்றேன்..." என்று சபதம் போட்டவரை கண்டு,

"எங்கே முறையீடு பண்ணினாலும் நான் என் தவறை ஒத்து கொள்வேன்..." என்றவன் அவரைப் பாராது செல்ல... அவர் திகைத்து போய் நின்றிருந்தார்...

பவித்ரனுடன் நின்றிருந்த நிஷிலாவை சைகையால் அருகில் வருமாறு அழைத்தான் சிம்மவிஷ்ணு... அவள் பவித்ரனின் கையைப் பிடித்துக் கொண்டு நகர மறுத்தாள்... மறுகையில் குழந்தை இருந்தது...

"நான் தான் கூட இருக்கேனே..." என்று பவித்ரன் அவளைத் தைரியமூட்டியபடி அவன் அருகில் அழைத்து வந்தான்...

செய்த தவறை ஒத்துக் கொண்ட சிம்மவிஷ்ணு அவனது மனதில் சற்று உயர்ந்து தான் போனான்... முன்பிருந்த துவேசம் இப்போது பவித்ரன் மனதில் இல்லை...

அருகில் வந்த மனைவியைக் கண்ணெடுக்காது பார்த்த சிம்மவிஷ்ணு, "இப்போ உனக்குச் சந்தோசமா...?" என்று கேட்டான்...

அவள் பதில் பேச தெரியாது விக்கித்துப் போய் நின்றாள்... அவளது கண்ணீர் நிரம்பிய விழிகள் அவளது மனதினை அவனுக்குப் படம் பிடித்துக் காட்டியது...

"சந்தோசமா இருக்கணும்... என்ன சரியா...?" என்று சிறுபிள்ளைக்கு எடுத்து சொல்வது போல் அவளிடம் கூறியவன் சட்டென்று யாரும் எதிர்பாராத அந்தக் காரியத்தைச் செய்தான்...

பவித்ரன் மற்றும் நிஷிலாவின் கைகளைப் பிடித்து இணைத்து வைத்தவன், "நான் இடையில் வந்தவன் இடையில் போகிறேன்... இனியாவது இவள் சந்தோசமாக இருக்கணும்... அது உன்னால் மட்டும் தான் முடியும் தீரா..." என்று பவித்ரனிடம் கூறியவன்,

"நான் ஒண்ணு சொன்னா எனக்காகச் செய்வியா...?" என்று நிஷிலாவிடம் கேட்டான்...

அவள் 'என்ன?' என்பது போல் அவனைப் பார்த்தாள்...

"என்னை இழந்து தவிக்கும் என் அப்பா, அம்மா கிட்ட குழந்தையைக் கொடுத்திரு... நிச்சயம் அவங்க நல்லா வளர்ப்பாங்க..." என்று கெஞ்சியவனைக் கண்டு அவள் திகைத்துப் போய்ப் பின்னால் நகர்ந்தாள்...

"அவங்க வாழ்றதுக்கு ஒரு அர்த்தம் வேண்டாமா...? இல்லைன்னா நான் திரும்பி வர்றதுக்குள்ள அவங்க மனமுடைஞ்சு செத்து போயிருவாங்க..." என்றவனைக் கண்டு அவள் இன்னமும் அதிர்ந்து போனாள்...

"ப்ளீஸ், எனக்காக இதை மட்டும் செய்..." என்று இருகரம் கூப்பி மன்றாடியவனின் மன்றாடலை கேட்கவா? இல்லை கையில் இருக்கும் தனது மகளைப் பார்ப்பதா? என்று அவள் உள்ளம் மறுக நின்றிருந்தாள்...

"அவங்க எப்போன்னாலும் ஆதியை வந்து பார்த்துட்டு போகட்டும் விஷ்ணு... யாரும் தடை சொல்ல போறது இல்லை..." என்று பவித்ரன் கூற...

"பேபியோட பெயர் ஆதியா...?" விழிகள் மின்ன கேட்டவனைக் கண்டு அவளுக்குக் கண்கள் கரித்தது...

"ஆதிரை..." என்று அவள் மெதுவே முணுமுணுத்தாள்...

"ஆதிரை... பெயர் நல்லாயிருக்கு..." என்றவன் திடுமென அவளது கழுத்தில் தொங்கி கொண்டிருந்த தான் கட்டிய தாலியை வேகமாகக் கழட்டினான்...

"என்ன பண்றீங்க...?" என்று அவள் அதிர்ந்து போய்க் கூவ... பவித்ரனும் அதிர்ந்து போய் அவனைப் பார்த்தான்...

"நான் சாகும் போது தான் இது உன் கழுத்தில் இருந்து இறங்கணும்ன்னு நினைச்சேன்... ஆனா நான் இன்னும் கொஞ்ச நாள் உயிர் வாழ வேண்டிய கட்டாயம் எனக்கு இருக்கு... அதுக்கு அப்புறம் இது உனக்குத் தேவைப்படாது... அதனால் இதை இப்பவே கழட்டுவது தான் முறை... தீரன் தான் உனக்குச் சரியான சாய்ஸ்... நீ சொன்னது போல் உன் பவன் அத்தான் உனக்கே தான்..." என்று புன்னகையுடன் கூறியவன்,

"என் நினைவின் மிச்ச சொச்சம் எல்லாத்தையும் நீக்கிட்டேன்... இப்போ நீ புது மனுசி... உனக்கான புது வாழ்க்கை உனக்குக் காத்திருக்கிறது... இனியாவது நீ சந்தோசமாக இருக்கணும் பேபி..."

அவனையும் அறியாது வந்த பேபி என்கிற வார்த்தையில் அவளது நெஞ்சம் கசிந்தது... அவனது தண்டனை தனக்குச் சந்தோசத்தைக் கொடுக்கும் என்று நினைத்தால் ஏன் இவ்வளவு துன்பத்தைக் கொடுக்கிறது? என்று அவள் மனம் நோக நின்றிருந்தாள்...

பின்பு ஏதோ நினைத்தவனாய், "நீ சந்தோசமா இருந்தாகணும்..." என்று திடீரென்று கர்ஜித்தவன்,

"பத்து வருசம் கழிச்சு நான் திரும்ப வருவேன்... அப்போ என் கையைக் கட்டி போட நீ என் சொந்தமா இருக்கக் கூடாது... குழந்தையைக் காட்டி நீ எனக்குத் தடை போட கூடாது... உனக்காக மட்டுமே நான் இந்தத் தண்டனையை ஏற்றுக் கொள்கிறேன்... நான் உனக்கு இழைத்த அநீதிக்கு நானே விரும்பி தண்டனை ஏற்றுக் கொள்கிறேன்... ஆனா உன் வீட்டாளுங்க எனக்கு இழைத்த அநீதிக்கு...?" என்று கேள்வியாக நிறுத்தியவனின் விழிகள் தீயாய் ஜொலித்தது...

"நான் செஞ்ச தவறும், நீ கொடுத்த தண்டனையும் சரியாகி போச்சு... இனி நமக்குள் எந்த உறவும் இல்லை... தண்டனை காலம் முடிஞ்சு நான் திரும்ப வருவேன்... அப்போ நீயென்ன அந்த ஆண்டவனால கூட உன் குடும்பத்தை என் கிட்ட இருந்து காப்பாத்த முடியாது..." என்று உறுமியவனைக் காவலர்கள் அழைத்துச் செல்ல வந்தனர்...

அவன் தனது பெற்றோரை அருகில் அழைத்துத் தாலி சங்கிலியை அவர்களது கையில் கொடுத்து, "இதைக் கோவில் உண்டியலில் போட்டிருங்க... இந்தத் திருமணம் அர்த்தம் இல்லாதது... அதனால் விவாகரத்து தேவையில்லை... அவளை உங்க மகளாகத் தானே நினைக்கிறீங்க... அப்படின்னா ஆதியை நீங்க வளருங்க... அவளுக்குத் தீரனை கல்யாணம் பண்ணி வச்சு புது வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுங்க... எனது நினைவின் நிழல் கூட அவள் மீது படக் கூடாதுப்பா..." என்று கூறிய மகனை கண்டு சுந்தரபாண்டியன் கண்கலங்கி போனார்...

எல்லோரும் இருக்கும் போதே காவலர்கள் அவனுக்குக் கைவிலங்கு பூட்டி அழைத்துச் சென்றனர்... அதைத் துக்கத்துடன் பார்த்தபடி நின்றிருந்தனர் அவனது பெற்றோர்...

ஜீப்பில் ஏறிச் செல்லும் கணவனைப் பார்த்தபடி நிஷிலா அப்படியே உணர்வின்றி நின்றிருந்தாள்... ஆனால் அவனோ யாரையும் கண்டு கொள்ளாது தனக்குள் மூழ்கியிருந்தான்... ஏனெனில் அவனுக்குத் தலையில்

அப்படியொரு வலி எழுந்தது... எப்போதடா சிறைக்குச் செல்வோம், போதை பொருள் உட்கொள்வோம் என்று அவன் பரபரப்பாகக் காத்திருந்தான்...

இனி அவன் வழி தனிவழி... அவளது வழியும் தனிவழி... இருவரும் எப்படி இணையப் போகின்றனர்...?

"Take me there
I know this journey ends
Oh wake me up
I need to breathe again
I need ahaaaaa
சீதா கல்யாண வைபோகமே
ராமா கல்யாண வைபோகமே
வாழ்க்கையே... இதும்
கடந்து வாழ வேண்டும்
மறையாதே என் கனவே
காற்றாக நீயிருப்பாய்
நீ எந்தன் அருகினில் வா"

கொல்லும்...!!!

முதல் பாகம் முற்றும்...!!!